# A COMPLETE COURSE OF CATHOLIC DOCTRINE

# சத்தியவேத தர்ப்பணம்

Adapted from the French of
L. P. MAROTTE,
BY
THE REVD. J. HIPPOLYTE, O. M. I.

AMALA UTPAVAM
O. M. I.
COLUMBUTHURAI

SECOND EDITION

930
HIP

*Revised by*
Rev. Fr. S. Gnana Prakasar, O. M. I.

NALLUR SWAMI GNANAPRAGASAR LIBRARY
'Thodarbaham'
657/1, Hospital Rd
Jaffna
No.
O. M. I.

JAFFNA
ST. JOSEPH'S CATHOLIC PRESS.
1944

005746

# LETTER
## OF HIS LORDSHIP
## THE BISHOP OF JAFFNA

L. J. C.
et
M. I.

Bishop's House,
Jaffna, October 17th, 1905.

AMALA UTPAVAM O. M. I. COLUMBUTHURAI

Very Dear Father Hippolyte,

I am truly proud of the beautiful volume which was put into my hands yesterday evening, and which is due to your fertile and able pen. I thank you most warmly for this work which reflects so much credit on our dear Diocese of Jaffna.

This book appears at the right time, after the recommendations of our Holy Father Pope Pious X concerning Christian Doctrine. But this first part makes us impatiently look for the other three parts which are promised in the preface. Therefore do I ask you to continue and finish the work you have so happily begun.

Thanking you once more, I bestow on you and on your work my most affectionate blessing.



Yours very devotedly in Xt.

H. JOULAIN, O. M. I.

*Bishop of Jaffna.*

*Re-Imprimatur*:

J. EMILIANUS PILLAI, O. M. I.
Vicar General

Jaffna 30-6-1944.

AMALA UTPAVAM O. M. COLUMBUTHURAI

# பொருள் அடக்கம்


| பொருள் | பக்கம் |
|---|---|
| முகவுரை | vi |
| ஆயத்த சிந்தனைகள் | 1 |
| 1-ம் அதிகாரம்-வேதமொன்றிருத்தல் அவசியம் | 4 |
| 1. சருவேசுரன் ஒருவர் உண்டு. 2. சருவேசுரனுடைய இலக்ஷணங்கள். 3. சருவேசுரனுக்கு அகத்தாராதனையும் புறத்தாராதனையுஞ் செய்யவேண்டுமென்னுங் கடமை. | |
| 2-ம் அதிகாரம்-வெளிப்படுத்திய வேதத்தைப்பற்றிப் பொது வாய்ச் சொல்லியது | 22 |
| 1. தேவவெளிப்படுத்தலின் அவசியம். 2. தேவவெளிப் படுத்தலின் அறிகுறிகளாகிய அற்புதங்களும் தீர்க்கதரி சனங்களும் | |
| 3-ம் அதிகாரம்-வெளிப்படுத்திய வேதத்தைப்பற்றி விசேஷ மாய்ச் சொல்லியது | 32 |
| 1. யூதவேதம். 2. கிறீஸ்துவேதம். | |
| 4-ம் அதிகாரம்-யேசுநாதருடைய மெய்யான திருச்சபை | 65 |
| 1. மெய்யான திருச்சபையின் அறிகுறிகள். 2. திருச் சபையின் அதிகாரம். 3. திருச்சபைத் தலைவர். 4. திருச் சபையின் அவயவங்கள். | |
| 5-ம் அதிகாரம்-விசுவாசம் | 103 |
| 1. விசுவாசத்தின் தன்மை. 2. விசுவாசத்தின் விஷ யம். 3. விசுவாசத்தின் முகாந்திரம். 4. விசுவாசத் திற்கு அதிகாரியாய் உள்ளவர்கள். | |
| 6-ம் அதிகாரம்-அர்ச்.தம திரித்துவ பரம இரகசியம் | 117 |
| 7-ம் அதிகாரம் சிருட்டிப்பு | 125 |
| 1. உலகத்துக்கு ஓர் ஆரம்பம் உண்டா? 2. உலகத் தைச் சிருட்டித்தவர் யார்? 3. சருவேசுரன் அதை எப்படிச் சிருட்டித்தார்? 4. எவ்வளவு காலத்துக்குள் சிருட்டித்தார்? 5. எப்போது சிருட்டித்தார்? 6. ஏதுக் காக சிருட்டித்தார்? | |
| 8-ம் அதிகாரம்-தேவதூதரும் மனிதரும் | 132 |





| பொருள் | பக்கம் |
|---|---|
| 9-ம் அதிகாரம்-மனிதனுடைய கேடும், சென்மபாவமும் இர க்ஷகரைப்பற்றிய வாக்குத்தத்தமும் | 146 |
| 1. அக்கேட்டின் வரலாறு. 2. அக்கேட்டினால் விளை ந்த பயன்கள். | |
| 10-ம் அதிகாரம்-மனுஷாவதாரப் பரம இரகசியம் | 167 |
| 1. மனுஷாவதாரம் உண்டென்பது. 2. மனுஷாவதா ரப் பரம இரகசியத்தின் இயல்பு. 3. யேசுக்கிறீஸ்துவின் மாதாவாகிய அர்ச். கன்னிமரியம்மாள். | |
| 11-ம் அதிகாரம்-யேசுக்கிறீஸ்துநாதரின் பேரில் | 181 |
| 1. யேசுக்கிறீஸ்துநாதரின் பிறப்பும் சீவியமும். 2. அவரது மரணம். 3. இரக்ஷணியப் பரம இரகசியம். 4. உத் தானமும் ஆரோகணமும். | |
| 12-ம் அதிகாரம்-இஸ்பிரீத்துசாந்துவின் ஆகமனமும் திருச் சபையின் ஸ்தாபகமும் | 209 |
| 13-ம் அதிகாரம்-அர்ச்சியசிஷ்டர்களுடைய ஐக்கியப் பிரயோ சனம் | 213 |
| 1. ஐக்கியப் பிரயோசனமாவது என்ன? 2. அதற்கு விஷயமாயுள்ள நன்மைகள் எவை? 3. அதற்குப் பங்கா ளிகளாய் இருப்பவர்கள் யார்? 4. பங்காளிகளாய் இருப் பதற்குச் செய்யவேண்டியவைகள் எவை? | |
| 14-ம் அதிகாரம்-வரப்பிரசாதம் | 217 |
| 1. வரப்பிரசாதத்தின் அவசியம். 2. பலவித வரப்பிர சாதங்களின் பேரில். 3. வரப்பிரசாதத்தால் விளையும் பயன். | |
| 15-ம் அதிகாரம்-மனிதனுடைய கடைசி முடிவுகளின் பேரில் | 238 |
| 16-ம் அதிகாரம்-பொது உத்தானமும் பொதுத்தீர்வையும் | 255 |
| 17-ம் அதிகாரம்-கிறீஸ்தவனின் அடையாளங்களின் பேரில் | 261 |

# முகவுரை

எல்லா மனிதருக்கும் முதன்மையான கடமை யாதெனில் தங்களை உண்டாக்கினவர் யார், தாங்கள் உண்டாக்கப்பட்ட முகாந்திரம் யாது, தங்கள் சிருஷ்டிகர் மட்டில் தங்களுக்குள்ள கடமைகள் யாவை, மோக்ஷ கதிபெற்று உய்யுமாறு செய்ய வேண்டியதுயாது, தவிர்க்கவேண்டியது யாது என்னும் இவைகளைப் பூரணமாய்த் தெளிந்துகொள்வதேயாம். இவ்விஷயங்களையெல்லாம் சத்தியவேதமே மனிதருக்கு நிச்சயமானவிதமாய் உணர்த்த வல்லதாகையால், அது ஒன்றே மனிதரைச் சிருட்டித்தவர் எல்லாத்திற்கும் ஆதிகாரணராகிய கடவுளே என்றும், மனிதர் தம்மை அறிந்து சிநேகித்துச் சேவித்து பேரின்ப வீடாகிய மோக்ஷத்தைச் சுதந்தரித்து நீடூழிகாலம் வாழும்படியாகவே அவர் அவர்களை உண்டாக்கி இவ்வுலகத்தில் வைத்தருளினாரென்றும் தெளிவாய் விளக்குகின்றது.

வேதம் என்னும் சொல்லானது, மனிதர் சருவேசுரனுக்குச் செய்யும் வழிபாட்டையாவது, இம்மையிற் கடவுளைச் சேவித்து மறுமையிற் கதிபெற்று உய்யும்பொருட்டு விசுவசிக்க வேண்டிய சத்தியங்களும் அனுசரிக்கவேண்டிய கற்பனைகளுமாகியவைகளின் சேர்க்கையையாவது குறித்துக் காண்பிக்கும். யேசுக்கிறீஸ்துநாதரால் போதிக்கப்பட்ட சத்தியங்களும், அவரால் கற்பிக்கப்பட்ட பிரமாணங்களும் அடங்கிய வேதத்திற்குக் கிறீஸ்துவேதம் என்றும், இதை அனுசரிப்பவர்களுக்குக் கிறீஸ்தவர்கள் என்றும் பெயர். கிறீஸ்துவேத சத்தியங்களையும் கற்பனைகளையும் நன்றாய்க் கற்று அறிந்துகொள்ள எல்லா மனிதருக்குங் குன்றாத கடமையுண்டு. வேத அறிவின்றிக் கடவுளுக்குத் தக்க வணக்கமும் துதியுஞ் செலுத்துதலுங் கூடாது: ஆத்தும ஈடேற்றத்துக்கு அவசியமான காரியங்களை நிறைவேற்றி மோக்ஷத்தை அடைந்துகொள்ளுதலுங் கூடாது. ஆதலால், இந்த உச்சித அறிவைப் பயப்பதாகிய வேதகல்வியைக் கற்றுக்கொள்வதைக்காட்டிலும் அவசியமும் முக்கியமுமான வேறோர் கடமை மனிதருக்கு இருத்தல் கூடாது. நித்திய சீவியத்துக்கு ஏக வழியாய் உள்ளது வேதகல்வியே என்று காண்பிக்கும்பொருட்டு நம்முடைய இரக்ஷகராகிய யேசுநாதரும் திருவாய்மலர்ந்து: சருவேசுரனாகிய பிதாவானவரையும்



(மனிதரை இரக்ஷிக்க) அவரால் அனுப்பப்பட்ட அவருடைய குமாரனாகிய யேசுக்கிறீஸ்துவையும் அறிந்துகொள்வதே நித்திய சீவியம் என்று அருளிச் செய்தார்.

ஆதலால், வேதத்தைப் படியாத அசட்டைத்தனத்தால் விளையும் அறியாமை என்னுங் குற்றமானது, 1-வது, அக்கிரமங்களுள் அக்கிரமமெனப்படும். ஏனெனில், அது தேவகற்பனைக்கும் மனிதருடைய ஆத்தும ஈடேற்றத்துக்கும் விரோதமானதாகின்றது. 2-வது, மகா இடிலத்தனம் என்னப்படும். ஏனெனில், புத்தியுள்ள வஸ்துவாகிய மனிதன் தான் வந்தவழிஎன்ன, போகுங்கதி என்னவென்று அறியாமலிருப்பதும், சருவேசுரனுமில்லை வேதமுமில்லை மறுமையிற் சம்பாவனையுமில்லை ஆக்கினையுமில்லை என்றாற்போலச் சீவிப்பதும் மிஞ்சின துணிகரமேயன்றி வேறொன்றல்ல. 3-வது, பரிதாபத்துக்குரிய அநேகாநேக கேடுகளுக்கு ஓர் ஊற்றென்னப்படும். ஏனெனில், வேத அறியாமையால் கோடாகோடி அக்கிரமங்கள் பிறப்பதும் இறுதியில் நித்திய ஆத்துமகேடு பலிப்பதும் நிச்சயமேயாம்.

வேத அறியாமையாற் பிறக்குங் கேடுகள் எண்ணிறந்தவைகள் எனில் வேத அறிவாற் பிறக்கும் நன்மைகளும் எண்ணிறந்தவைகளேயாம். வேத அறிவானது மனிதரிடத்திற் சற்குணங்களை உண்டாக்கும். அவர்களுடைய ஒழுக்கத்தைக் கிரமப்படுத்துகின்ற நல்லெண்ணங்களைப் பிறப்பிக்கும். சருவேசுரன் மட்டில் பத்தியையும் சிநேகத்தையும் புறத்தியார்மட்டில் அன்பையும் தயையையும் உதிப்பிக்கும். துர்க்குணங்களையும் துராசைகளையும் நிர்மூலமாக்கும். நீதி பரிசுத்தம் சமாதானம் மனப்பாக்கியம் ஆகியவைகளோடுகூடிய சீவியமானது வேத அறிவால் மாத்திரமே பெறப்படும்.

ஆதலால், மனிதர் எப்படிப்பட்ட நிலையில் உள்ளவர்களாயிருந்தாலும் எந்தெந்த வயது உடையவர்களாயிருந்தாலும், அவர்கள் எல்லாருக்கும் சத்தியவேதத்தையும் அதின் திவ்விய போதனைகளையும் இயன்றமட்டும் நன்றாய்க் கற்றுக்கொள்ளக் கடமை உண்டென்பது தானாய் விளங்குகின்றது. பரும்படியான வேத அறிவும் வெளியாசார அனுட்டிப்பும் போதாதோவெனிற் போதாது. வேதத்திலுள்ள சத்தியங்களையும் பரம இரகசியங்களையும் பிரமாணங்களையும் பற்பல அனுசரிப்புக்களையும் இயன்றமட்டும் அறிந்திருக்கவும்வேண்டும். கிறீஸ்த சீவியத்துக்கு மூலகாரணமும் சீவனுமாய் விளங்கும் விசுவாசத்தை

விளக்கவும் உறுதிப்படுத்தவும் தாங்கவுங்கூடிய நிச்சயமான ஆழ்ந்த எண்ணங்களை, சாக்கிரதையோடு பொருந்திய இடையறாத படிப்பினால் பெற்றுக்கொள்ள முயலவும் வேண்டும்.

எல்லாருக்கும் மிகவும் அவசியமான வேதசாஸ்திரத்தை வாலிபர் விசேஷமாய்க்கற்றுக்கொள்ளவேண்டும் என்னும் கருத்தாற் தூண்டப்பட்டே நாம் இந்த மொழிபெயர்ப்பு நூலைச் செய்யப் புகுந்தோம். நாம் இதில் விசுவாசசத்தியங்களையும், நல்லொழுக்கத்துக்கடுத்த விதிகளையும் பிரமாணங்களையும், தேவதிரவிய அனுமானங்களையும் இவைகளோடு சேர்ந்தவைகளையும் இயன்றமட்டும் தெளிவாகவும் திட்டமாகவும் எளிய பாஷை நடையில் விளக்கிக்காண்பித்தோம். கிறீஸ்தவர்களில் ஒவ்வொருவரும் நித்திய சீவியத்தைப்பெற்று உய்யும்பொருட்டு விசுவசிக்கவேண்டியது என்ன அனுசரிக்கவேண்டியது என்ன என்பவைகளைத் தெளிவாய், சுருக்கமாய் உணர்த்துவதே நமக்குள்ள கருத்தாம். இக்கருத்து நன்கு முடியுமாறு வேதத்தின் உற்பத்தி, அதின்விருத்தி, அதில் அடங்கிய சத்தியங்கள் முதலியவைகளின் விருத்தாந்தத்தை சங்க்ஷேபமாய்ச் சொல்லிக் காண்பித்தும், கிறீஸ்த போதனைக்கடுத்த விஷயங்களைக் கிரமமாய் விளக்கியும், இப்போதனையின் உண்மையானது எல்லாருக்கும் எளிதிற் புலப்படும்பொருட்டு சில உறுதியான அத்தாட்சிகளால் உருசுப்படுத்தியுந் தந்திருக்கிறோம்.

கிறீஸ்துவேதமானது ஒருவன் விசுவசிக்கவேண்டிய சத்தியங்களும், அனுசரிக்கவேண்டிய ஒழுக்கப் பிரமாணங்களும், ஆத்துமத்தைப் பரிசுத்தப்படுத்தும் வரப்பிரசாதங்களைக் கொடுக்கும் தேவதிரவிய அனுமானங்களும், சருவேசுரனுக்குச் செய்யத்தகும் தேவ வழிபாடும் என நாலுபகுதிகளை அடக்கி இருப்பதால், இந்நூலும் நாலு காண்டங்களாக முடியும். முதலாங் காண்டத்தில் போதகமும் இரண்டாங்காண்டத்தில் ஒழுக்கமும் மூன்றாங்காண்டத்தில் தேவதிரவிய அனுமானங்களும் நாலாங்காண்டத்தில் தேவாராதனையும் விளக்கப்படும் என்றறிக.

---

# சத்தியவேத தர்ப்பணம்

## I

## போதக காண்டம்

---

### ஆயத்த சிந்தனைகள்

1. போதகமாவது (Dogma), நாம் விசுவசித்து ஈடேறும் பொருட்டு நம்முடைய திருவேதமானது படிப்பிக்கின்ற சத்தியங்களின் தொகுதியாம்.

சத்தியம் என்றாலும் உண்மை என்றாலும் பொருந்தும். வேதசத்தியங்களுட் சில, நமது புத்தியாற் கண்டுபிடிக்கக் கூடியவைகளாய் இருக்கின்றன. உதாரணம்: சருவேசுரன் உண்டு, ஆத்துமம் அழியாது எனும் சத்தியங்கள். வேறுசில, நமது புத்திக்கு எட்டாதனவாயும், சருவேசுரனால் நமக்கு வெளிப்படுத்தப்படவேண்டியனவாயும் இருக்கின்றன. உதாரணம்: சருவேசுரன் ஏகராயும் திரீத்துவராயும் இருக்கிறார், சருவேசுரன் மனிதனாய் அவதாரஞ்செய்தருளினார் எனும் உண்மைகள்.

ஆதலால், வேதத்தோடு பொருந்திய சத்தியங்களை எல்லாம் நாம் அறிந்துகொள்ளக்கூடிய வழிகள் இரண்டு. அவை:—யுத்தியும் (Reason) தேவவெளிப்படுத்தலும் (Revelation) எனப்படும்.

தேவ வெளிப்படுத்தலின் உதவி இன்றி நாம் கண்டுபிடிக்கக் கூடிய சத்தியங்களும் உண்டு என்றோம். இச்சத்தியங்கள் சுபாவமுறைச் சத்தியங்கள் எனப் பெயர்பெறும். தேவ வெளிப்படுத்தலாவது: சருவேசுரன் சுபாவமுறையில் உள்ளவைகளும் சுபாவத்திற்கு மேலானவைகளுமான சத்தியங்களைத் தமது திருவுளத்தின்படி நமக்குத் தெரிவித்து, நாம் தமது தவறாத திருவாக்கையே

நம்பி அவைகளை விசுவசித்துக் கைக்கொள்ள வேண்டும் என்று கற்பிப்பதேயாம்.

2. சுபாவமுறை ஆவது (Order of Nature) என்னவெனில், சருவேசுரன் மனிதனை ஒரு புத்தியுள்ள சிருட்டியாக உண்டாக்கத் திருவுளங்கொண்டபோதே, அந்தப் புத்தியுள்ள சிருட்டிக்கு அவசியமாய் வேண்டப்பட்ட அந்தஸ்தும் நியமமுமாம்.

சுபாவத்திற்குமேலானமுறை ஆவது (Order of Grace) என்னவெனில், சருவேசுரன் ஆதியிற்றானே மனிதனைத் தமது திருக்கருணையால் மோக்ஷ பேரின்ப பாக்கியத்துக்கு உரியவனாய் இருக்கும்படி அமைத்த அந்தஸ்தாம். ஆதலால், சுபாவத்திற்கு மேலான அந்தஸ்தானது சருவேசுரன் தமது சுயாதீனமான திருச்சித்தத்தினால் மனிதனுடைய சுபாவமுறையோடு சேர்த்தருளிய மேலான அந்தஸ்தாம் என்று அறிந்துகொள்ளவேண்டும். இத்தேவதிருச்சித்தத்தினால் மனிதன், ஓர் சுத்த சிருட்டியாகிய அளவில், அடைதற்கு உரிமையில்லாதவனாயிருந்த மேலான அந்தஸ்துக்கு உயர்த்தப்பெற்றான். அன்றியும், புத்தியுள்ள சிருட்டியாகிய அளவில் தனக்கு அகத்தியமாய்க் கிடைக்கவேண்டிய கொடைகளிலும் மேலான கொடைகளையும் அடைகிறவனானான்.

சுபாவமுறையும் சுபாவத்திற்குமேலான முறையும் ஆகிய இரண்டையும் நோக்கி, வேதத்தையும், இயல்வேதம் என்றும் அருள்வேதம் என்றும் இரண்டாய் வகுக்கலாம். இயல்வேதமாவது, மனிதன் உள்ளபடியே தேவ வெளிப்படுதல்காரணமாக அறிந்துகொண்டவைகளாயினும், தன் சொந்தப் புத்தியாலும் அறிந்துகொள்ளக்கூடியவைகளாகிய சத்தியங்களையும் கடமைகளையும் அடக்கிய வேதமாம். அருள்வேதமோவெனில், சருவேசுரன் மனிதனை ஞானகதிக்குச் செலுத்தும் உபாயங்களாக அவனுக்கு வெளிப்படுத்திப் போதித்தருளிய சத்தியங்களும் கற்பனைகளும் அடங்கிய வேதமாம்.

3. வேதமானது முற்றும் இயல்வேதமாய் ஒருபோதும் இருக்கவே இல்லை. ஏனெனில், சருவேசுரன் ஆதியிற்றானே தம்மை மனிதனுக்கு வெளிப்படுத்தி, அவன் தம்மை எவ்வாறு வழிபட வேண்டும் என்று போதித்தருளினார். அவர், ஆதாமுக்கும் அவருடைய சந்ததியாருக்கும், அவர்கள் அனுசரிக்கவேண்டிய ஒரு வேதத்தைக் கற்பித்தருளினார். இவ் இயல்வேதமானது (Primitive Religion) சுபாவமுறையான சத்தியங்களையுங் கற்பனைகளையும் அடக்கியதாயினும், உள்ளபடியே தேவவெளிப்படுத்தலான



வேதமேயாம். மனிதருக்குள்ளே பெரும்பாலார் நெடுங்காலமாக இயல்வேதத்தைச் சுத்தமாய் அநுசரித்துவந்தார்கள். பின்போவெனில், அதனோடு அநேக தப்பறைகளையும் வீண் அநுசாரங்களையுங் கூட்டிக்கொண்டதினால், ஆதாமுக்குப் பின் பல ஆயிரம் வருஷங்கள் சென்றளவில், இயல்வேதமானது உலகத்தில் முழுதும் அற்றுப்போனதுபோலிருந்தது. அப்போது சருவேசுரன் ஒரு புதிதான வெளிப்படுத்தலைச் செய்து, தாம் தெரிந்துகொண்ட இசிறவேல் சாதியாருக்கு, மோசேசு என்பவர் மூலமாக, ஒரு புதிதான பிரமாணத்தைத் தந்தருளினார். இப்பிரமாணத்துக்கு மோசேசின் பிரமாணம் (The Mosaic Law) அல்லது வரிவேதம் என்று பெயர்.

ஆயினும், உலகத்திலுள்ள மற்றச்சாதியார் எல்லாரும் தங்கள் சிருட்டிகர்த்தாவையும் அவருக்குச் செய்யவேண்டிய வழிபாடுகளையும் முழுதும் மறந்துவிட்டதினால், கானான்தேசமொன்றுமே நீங்க, உலகம்முழுதும் அஞ்ஞான அந்தகாரத்தில் அமிழ்ந்திப்போயிற்று. அப்போது, சருவேசுரன் தம்முடைய திருக்குமாரனும் மெய்யான நரதேவனுமாகிய யேசுக்கிறீஸ்துவை உலக இரக்ஷகராகவும் தேவபோதகராகவும் அனுப்பியருளினார். யேசுக்கிறீஸ்துவானவர், சகல சாதியாருக்கும் மெய்யான கடவுளையும் அவருக்குச்செய்யவேண்டிய வழிபாடுகளையும் தெரிவிக்கும்பொருட்டு, மிகப்பரிசுத்தமும் மிகப்பூரணமுமான ஒருவேதத்தைப் பிரசித்தப்படுத்தி, அது உலகம் அடங்கலும் தம்முடைய அப்போஸ்தலர்களாற் போதிக்கப்படச் செய்தருளினார். இந்தவேதம் கிறீஸ்துவினின்று உண்டானதானபடியால் கிறீஸ்துவேதமென்று அழைக்கப்படும். இக் கிறீஸ்துவேதமானது, மனிதர் விசுவசிக்கவேண்டிய சத்தியங்களையும் அநுசரிக்கவேண்டிய ஒழுக்கங்களையும் படிப்பித்து, உலகாந்த மட்டும் நிலைநிற்கும். கிறீஸ்துவேதம் வரிவேதத்திற்கு விரோதமானதல்ல. இயல்வேதமானது விரிவும் நிறைவும்பெற்று வரிவேதமானதுபோல, வரிவேதம் விரிவும் நிறைவும் பெற்றுக் கிறீஸ்துவேதமாயிற்று.

ஒரு வித்தானது முன்பு முளையாகி, பின்பு கன்றாகி, ஈற்றில் மரமாகிச் செழித்தோங்குவதுபோல, வேதமும் முன்பு இயல்வேதமாகவும், பின்பு வரிவேதமாகவும், ஈற்றில் கிறீஸ்துவேதமாகவும் விளங்கும்படி கடவுளே திருவுளங்கொண்டார்.

இனி வேதசத்தியங்களைப் பற்றிக் கூறுவோம்.

# 1-ம் அதிகாரம்

## வேதமொன்று இருத்தல் அவசியம்

1-வது. சருவேசுரன் ஒருவர் உண்டு. 2-வது. சருவேசுரனுடைய இலக்ஷணங்கள். 3-வது. சருவேசுரனுக்கு அகத்தாராதனையும் புறத்தாராதனையும் செய்யவேண்டும் என்னுங்கடமை.

## 1-ம் பிரிவு

### சருவேசுரன் ஒருவர் உண்டென்பதின்பேரில்

4. வேதபோதகம் அனைத்துக்கும் மூலமாக உள்ள சத்தியமாவது சருவேசுரன் ஒருவர் உண்டென்பதேயாம். சருவேசுரன் என்பவர் யார் எனில், எல்லாவற்றையும் படைத்துக் காப்பாற்றுகின்ற எல்லா நல் இலட்சணங்களும் பொருந்திய சுத்த அரூபியேயாம்.

சருவேசுரன் இல்லையென்று மறுக்கிறவர்கள் **நாஸ்திகர்** அல்லது **நிரீச்சுரவாதிகள்** (Atheists) எனப்படுவர். அவர்களுடைய துர்ப்போதகத்துக்கு **நாஸ்திகம்** அல்லது **நிரீச்சுரவாதம்** என்றுபெயர். நாஸ்திகர் நியாயத்திற்கு முழுதும் விரோதமான தப்பிதங்களைக் கைக்கொண்டு, தங்களையும் அனுப்பிப் பிறரையும் அனுப்பிக் கெடுக்கும் ஞானக்குருடராயிருக்கிறார்கள். சகலத்திற்கும் ஆதிகாரணமாகிய கடவுள்ஒருவர் உண்டு எனுஞ் சத்தியத்தை நாஸ்திகர் தெளிந்துகொள்ளாமல் இல்லை. தெளிந்துகொண்டாலும், தேவபயமின்றித் தங்கள் ஆசாபாசங்களைப் பின்சென்று, உலகசுகபோகங்களைத் தடையின்றி அநுபவிக்கும்பொருட்டே சருவேசுரன் இல்லை என்று சாதிக்கப் பிரயாசப்படுவார்கள். சருவேசுரன் இல்லையென்று உண்மையாய் நம்பும் மதிகேடர் உண்டோ என்பது சந்தேகமான காரியமாயினும், தங்கள் தப்பெண்ணங்களாலுந் துர்ஒழுக்கங்களாலுமே நாஸ்திகராயிருப்பவர்கள் சிலர் உண்டென்பது நிச்சயம்.

சருவேசுரன் உண்டு என்பதற்கு அநேக பலத்த அத்தாட்சிகள் இருக்கின்றன. முக்கியமானவைகள் எவையெனில், உள்ள எல்லாவற்றிற்கும் ஓர் ஆதிகாரணம் வேண்டும் என்பதும், உலகங்களும் காணப்படும் ஆச்சரியமான கிரமமும், மனிதரிடத்தில் விளங்கும் உள்ளுணர்ச்சியும், எல்லாச் சாதிசனங்களும் ஒருவாய்ப்படக் கூறும் சாட்சியுமாம்.



### க-வது, எல்லாவற்றிற்கும் ஓர் ஆதிகாரணம்வேண்டும்

5. 1-வது, உலகத்திலே ஏதோ ஒரு பொருளாவது இல்லை எனச் சொல்ல முடியாது. இது பட்டப் பகலினுந் தெளிவான சத்தியம். ஆதலால் இதை ஒப்பிக்க அத்தாட்சி வேண்டுவதில்லை. இதை எவனாவது புத்திக் குருட்டாட்டத்தால் மறுக்கத் துணிவானேயானால், அவனே இச்சத்தியத்திற்குப் போதிய அத்தாட்சி ஆவான். எவ்வாறெனில், ஒரு பொருளும் இல்லை என்று சொல்லத் துணிபவன், தன்னிடத்தில் ஒரு நினைவு உண்டாகிறதென்றாவது அறிந்துகொள்ளுகிறான். ஆகவே, தான் உண்டென்று தெளிந்துகொள்ளுகிறான். தான் இல்லையென்றும் தன்னிடம் நினைவு இல்லை என்றுஞ் சொல்ல அவனால் எவ்வாற்றாலுங் கூடாது. 2-வது. யாதேனும் ஒருபொருள் உண்டென்று ஒத்துக்கொள்ளுகிறவன், தானாயும் தன்னியல்பாயும் அவசியமாயும், ஆகவே, அநாதியாயுள்ள ஒரு வஸ்து இருப்பதையும் ஒத்துக்கொள்ள வேண்டும். தானாயிருத்தலையுடைய அவசியமான ஒரு வஸ்து இல்லை என்று சொன்னால், எல்லாப் பொருட்களும் துவக்கமுடையனவென்று சொல்லவேண்டும். அவ்வாறு சொல்லுதல் நியாயத்திற்கு முழுதும் விரோதமாம். எவ்வாறெனில், எல்லாப்பொருட்களும், அவற்றுள் ஒன்றாவது நீங்காமல், துவக்கமுடையனவென்றால் அவைகளுக்கு இருத்தலுடைமை வந்த வழி என்ன? தங்கள் இருத்தலுடைமையைச் சூனியத்திலிருந்து பெற்றுக்கொண்டனவா? சூனியமாவது இன்மையாகையால், இன்மை உண்மையைப் பிறப்பித்தல் கூடாது. தங்களிலிருந்து தானே பெற்றுக்கொண்டனவா? தாங்கள் உண்டாகுமுன் இல்லாப்பொருட்களாகையால், தாங்களே தங்களுக்கு இருத்தலைக் கொடுத்தல் கூடாது. இனி, மற்றப்பொருட்களைப்போலத் தானுந் துவக்கமுடையதாகிய ஒரு மூலவஸ்துவிலிருந்து அவையெல்லாம் இருத்தலைப்பெற்றுக்கொண்டனவென்றால், அதுவும் பொருந்தாது. ஏனெனில், அந்த மூலவஸ்துவும் துவக்கமுடையதென்னுமிடத்து, அதன் இருத்தலுடைமை சூனியத்தில் இருந்தாவது தன்னிடத்தில் இருந்தாவது உண்டாயிருத்தல் வேண்டும். ஆயினும், மேலேகண்டவாறு எந்த வஸ்துவும் சூனியத்திலிருந்து தன் இருத்தலைப் பெற்றுக்கொள்ளுதலாவது, தானே தனக்கு அதைக்கொடுத்தலாவது கூடாது. ஆதலால், தானாய் அநாதியாய் எப்பொருட்கும் மூலகாரணமாயுள்ள அவசியமான ஒரு வஸ்து உண்டென்றே தீர்மானித்துக்கொள்ள வேண்டும். 3-வது. இத்தன்மையான அவசிய வஸ்து யாது? பிரபஞ்சமா? அல்ல. ஏனெனில், அவசிய வஸ்துவானது ஏகமாயுள்

ளது. அது ஒன்றே ஏகமாயிருப்பதால் அது இல்லாமற்போவதை மனதினாலே உத்தேசித்துக்கொள்ளுதல் தானும் பொருந்தாது. பிரபஞ்சமோ வெவ்வேறான அநேக பொருட்களால் ஆக்கப்பட்டு உள்ளது. அன்றியும், அதன் உறுப்புகளாகிய இன்னின்ன வஸ்து இல்லை என்று, நியாயவிரோதந் தோன்றாமல், உத்தேசித்துக் கொள்ளுதல் கூடும். ஆதலால், பிரபஞ்சமானது அதன் ஒவ்வொருபங்கின் மட்டிலும் அநாவசியகமாய் உள்ளது. அதன் உறுப்புகளாகிய வஸ்துக்களில் ஒவ்வொன்றும் இல்லாமற் போகலாம் என்று, நியாயவிரோதந் தோன்றாமல், உத்தேசிக்கப்படத்தக்கதாயிருக்கின்றது. ஆகவே, பிரபஞ்சத்திலும் அதன் அநாவசியக வஸ்துக்களிலும் நின்று வேறானதும், அவசியமானதும், எப்பொருள்களுக்கும் மேலானதும், எல்லாவற்றுக்கும் ஆதிகாரணமானதுமாயுள்ள ஒரு வஸ்துவுண்டென்றும், அந்த வஸ்துவே சருவத்துக்கும் சிருட்டி கர்த்தாவாயிருக்கின்றது என்றும் தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

## உ-வது, உலகமுழுதிலுங்காணப்படும் ஆச்சரியமானகிரமம்

6. உலகத்திலுள்ள எல்லாச் சராசரங்களுள்ளும் ஆச்சரியத்துக்குரிய ஒற்றுமை உண்டு என்பதும், அவ்வொற்றுமையானது ஒவ்வொரு பொருளும் மற்றவைகளுக்காக உண்டாக்கப்பட்டு உள்ளதென்பதைத் தெரிவிக்கின்றது என்பதும் பிரத்தியக்ஷம். வானம் பூமி கடல் காற்று காலபருவங்கள் ஆதியவெல்லாம் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டு, மற்றவஸ்துக்கள் எல்லாம் தம்முள் இணங்கி நடக்கும்படிசெய்கின்றன. வானத்தைநோக்கினால், அங்கே சூரியனும் சந்திரனும் நட்சத்திரங்களும் தங்கள் தங்கள் நிலையிலே நின்று தங்களுக்கு உரிய கிரமமான கதியில் ஒருகாலும் பிசகாமல் நடைபெற்றுவருவதைக்காணலாம். உலகஆரம்பமுதல் கடந்துபோன இலட்சாதி லட்சம் வருஷங்களாக, இரவும் பகலுஞ் சற்றேனும் தவறாமலும் மாறுபடாமலும் ஒன்றையொன்று தொடர்ந்துகொண்டே வருகின்றன. பூமியைநோக்கினால், இங்கே எத்தனையோ நூதனங்களைக்காணலாம். யானை முதல் எறும்பு ஈறாக எத்தனையோ கோடாகோடி உயிர்கள் அவ்வவற்றின் கதிக்கேற்ற இந்திரியங்களைப்பெற்று நடமாடக்காண்கிறோம். இந்த மிருகசீவன்கள் எல்லாம் உண்டும் இயங்கியும் தங்கள் தங்கள் இனத்துக்கேற்ப வேறு உயிர்களைக் கிரமமாய்ப் பிறப்பித்துக்கொண்டும் வருகின்றன. உலகத்திலுள்ள விருக்ஷசாதிகள் எத்தனை! பலவர்ணப் பூச்செடிகள் எத்தனை! புல்பூண்டுகள் எத்தனை! இவைகளையெல்லாம் உண்டுபண்ண எவ்வளவு ஞானம் வேண்டும்! எவ்வளவு வல்லமை வேண்



டும் ! மானிடதேகத்திலுள்ள கட்டுமுறையையும் இந்திரியப் பகுப்பையும் பார்த்தால், அது சருவஞானமும் எல்லையில்லா வல்லமையும் சேர்ந்து செய்த அரியதொழிலுக்கு ஓர் அத்தாட்சியல்லவா ? தேகத்திலுள்ள ஒவ்வொரு அவயவமும், ஒவ்வொரு இந்திரியமும், ஒவ்வொரு தசைநரம்பும் திறமையாய் அமைத்த சித்திரவேலைப்பாடு அல்லவா ? மனிதனுக்குக் கண் பார்க்கவும், காது கேட்கவும், வாய் பேசவும், கால் நடக்கவுங் கொடுக்கப்பட்டது என்பது பிரத்தியக்ஷம். இந்தச் சாங்கோபாங்கமான கிரமத்தைப்பார்த்தால், இதை அமைத்த அரிய தொழிலாளியின் அனந்த ஞானமும் அளவற்ற வல்லமையும் தோன்றுமே. அந்த அரிய தொழிலாளி கடவுளன்றி வேறல்ல. அப்படியல்ல என்று ஆக்ஷேபித்து, அவை எல்லாந் தாமாயுண்டாயின என்றாவது, தற்செயலின் காரியம் என்றாவது கூறுதல் நியாயத்துக்கு ஒவ்வாத மதியீனமாம். ஒழுங்கும் இசைவும் ஒருசிறிதேனும் பிசகாமல் சூத்திரமமைத்த ஒரு கடிகாரத்தையாவது, குறைபடாமல் முடிந்த ஒரு சித்திரத்தையாவது, சிற்பஅலங்காரம்பெறச் சமைத்த ஒரு மாளிகையையாவது கண்டவன், இவை தாமாய் அமைந்தன என்பானா ? அன்றித் தற்செயலின் காரியம் என்பானா ? விவேகமுந் திறமையும்பொருந்திய ஒரு தொழிலாளியாலே இவை உண்டாக்கப்பட்டன என்று நிச்சயித்துக் கொள்ளுவான் அல்லவா ? காணப்பட்ட பிரபஞ்சமாகிய பிரமாண்டத்தின் எல்லாக் கூறுகளையும் நன்றாய்க் கிரகித்துக் கிரமமாய் அமைத்து, ஒவ்வொருபொருளுக்கும் அதனதன் உருவத்தையும் இடத்தையும் இயக்கத்தையும் நிருபித்து, வெவ்வேறாயுள்ள எல்லாப் பொருட்களும் வேறுபாடு இன்றித் தம்முளொத்து நடக்கும்படி அமைத்த ஞானம் எவ்வளவு வியப்புக்குரியது! இவ்வாறிருக்க, அகிலலோக சிருட்டிப்பு தற்செயலால் அமைந்ததென்று சாதிப்பது பேதமையிற்பேதமைதானே. அன்றியும், தற்செயல் என்பது ஒருபொருளா ? அல்ல. ஆகவே, அதிலிருந்து யாதொன்றும் பிறத்தல் கூடாது. யாதொரு சம்பவத்தின் காரணம் புலப்படாதவிடத்து, அச்சம்பவத்துக்குக் காரணம் சொல்லும்படி மனிதர் பிரயோகிக்கும் ஓர் கருத்தில்லாத சொல்லே தற்செயல் என்பதாம். அகிலலோகமும் அதிலுள்ள சராசரங்களின் ஒற்றுமை நயமும் தற்செயலின் காரியம் எனில், இப்போதும், சுண்ணாம்பு கல்லு மரம் இரும்பு இவை முதலியன தாமாய் இயங்கி, ஒன்றாய்க் கூடி, வீடுகளாகாவோ ? பட்டினங்களாகாவோ ? இதைக்கண்டவருண்டோ ? கேட்டவருண்டோ ?

### ௩-வது, ஒவ்வொருவரிலும் விளங்கும் உள்ளுணர்ச்சி

7. ஒருவன் தனக்கு யாதேனுங் கஸ்தியாவது வருத்தமாவது சடுதியான ஆபத்தாவது நேரிட்டிருக்கையில், அதிலே பிறரால் எவ்வித சகாயமுமில்லை என்று கண்டவுடனே, தான் அதுவரையும் விசுவாசமும் வேதஒழுக்கமுமின்றிச் சீவித்திருந்தாலும், அந்நேரத்தில் ஒரு பரம உபகாரி உண்டென்று சிந்தித்து அவரிடத்தில் அடைக்கலம்புகத் தேடி: கடவுளே, நீயே துணையென்று அழைப்பானல்லவா? இன்னுமொருவன், பிறர் காணாமல் அந்தரங்கத்தில் யாதொரு துர்ச்செயலைச் செய்து முடித்தவுடனே, மனிதரால் தனக்குயாதோர் தண்டனையும் வராதென்று தெளிந்துகொண்டாலும், தனக்கு வரவேண்டிய தேவ ஆக்கினையை நினைத்துநினைத்து மனச்சாட்சிக் கண்டனமும் விதனமும் அனுபவிப்பானல்லவா? இந்தச் சுதாவான உணர்ச்சிகள் எங்கேயிருந்து உண்டாகின்றன? சருவலோக சிருட்டிகராகிய கடவுளிடத்தில் நின்றல்லவா? ஆம். இவ்வுணர்ச்சிகள், அனைத்தையும் ஆண்டு நடத்தும் கடவுளானவர், தாம் உண்டென்பதையும் தமக்கு மறைந்ததொன்றும் இல்லை என்பதையும் எல்லா மனிதருடைய இருதயங்களிலும் அழியாத அக்ஷரங்களால் வரைந்திருக்கிறார் என்பதைத் தெளிவாய்க் காண்பிக்கின்றன.

### ௪-வது, எல்லாச்சாதிசனங்களும் ஒருவாய்ப்படச் சொல்லுஞ் சாட்சி

8. உலகத்தில், கல்வி நாகரிகங்களால் விளங்கும் சனங்களன்றி, மிக்க கொடுமையுங் காட்டுத்தனமுமுள்ள சாதிசனங்களுமே சிருட்டி கர்த்தாவாகிய கடவுள் ஒருவர் உண்டென்றும், எல்லா மனிதரும் அவருக்குக் கீழ்ப்படிந்து அவரை ஆராதிக்கவேண்டும் என்றும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சகல சாதிசனங்களுக்குள்ளும் இவ் விசுவாசம் உண்டென்பதற்கு, உலகசரித்திரங்களும் எல்லாக் காலங்களிலும் எல்லாத் தேசங்களிலுமுள்ள ஞாபக சின்னங்களும் அத்தாட்சி பகருகின்றன. அட்ட திக்கிலும் காணப்படும் சாதியாரெல்லாம், ஒழுக்கங்களாலும் பிரமாணங்களாலும் வழக்கங்களாலும் கோட்பாடுகளாலும் தம்முள் எவ்வளவு வேற்றுமைப்பட்டவர்களாயிருப்பினும், சருவேசுரன் ஒருவர் உண்டென்பதைப்பற்றியோ எல்லாரும் பேதமின்றி ஒத்து ஒருமொழியாய்க் கூறுகின்றார்கள். பலவாற்றாலும் தம்முள் மிகுதியும் வேறுபட்ட சனம் எல்லாம் இச்சத்தியமொன்றில் பேதமின்றி ஒத்திருப்பதற்குக் காரணமென்ன? உலக ஆரம்பத்திற்றானே தம்மை மனித



ருக்கு வெளிப்படுத்தி, தமது இருத்தல் வல்லமை ஞானம் ஆதிய உண்மைகளை அவர்கள் இருதயங்களில் ஆழமாய்ப் பதித்தருளிய சருவேசுரனே காரணமாம். இந்த விசுவாசமும் உணர்ச்சியும் எவ்வித தப்பெண்ணங்களாலும் அபத்தங்களாலும் துர்ஆசாபாசங்களாலும் துர்மார்க்கங்களாலும் ஒருபோதுங் கெட்டழிந்துபோகாமல் எப்போதும் நிலைத்தே வருகின்றது.

ஆதலால், உலகமும் அதில் விளங்குஞ் சராசரங்கள் அனைத்தும் சருவேசுரன் ஒருவர் உண்டென்பதற்கு திறம்பாத அத்தாட்சியாயிருக்கின்றனவென்றும், கடவுள் உண்டென்பது எல்லா மனிதருடைய இருதயங்களிலும் பதிந்திருக்கும் சத்தியமாம் என்றும், இச்சத்தியத்தைப் பூமி அடங்கலுமுள்ள சகலசனங்களும் எப்போதும் ஒப்புக்கொண்டிருந்தார்களென்றும், ஆகவே, சருவேசுரன் இருப்பது மெய்யேயென்றும் தீர்மானித்துக்கொள்ளக்கடவோம்.

---

## 2-ம் பிரிவு

### தேவ இலக்ஷணங்களின்பேரில்

9. சருவேசுரன் தாமாயிருக்கின்றவராகையால், அளவில்லாத சகல இலக்ஷண சுரூபியாய் விளங்குகிறார். அளவில்லாச் சம்பூரணமுள்ளதாகிய தேவசுபாவமே அவருக்கு உள்ள ஒரே இலக்ஷணம் என்றாலும் பொருந்தும். சருவேசுரனிடத்தில் அருள் நீதி பரிசுத்தம் முதலான சகல இலக்ஷணங்களும் உண்டு என்று நாம் சொல்லும்போது, தேவ இலக்ஷணங்கள் உள்ளபடியே தம்முள் வெவ்வேறானவைகள் என்று கருதவேண்டாம். ஏனெனில், தேவ இலக்ஷணங்கள் எல்லாம் தம்முள் வேற்றுமைப்படாத ஒரே இலக்ஷணமாகவே இருக்கின்றன. அருளுடைமை என்னுந் தேவ இலக்ஷணம் சருவேசுரனிடத்தில் உண்டென்று சொல்லும்போது, கிருபையைச்செய்கின்ற கடவுள் அல்லது கிருபையைச் செய்கின்ற தெய்வீகம் என்பதே அர்த்தமாம். தேவஇலக்ஷணங்கள் எல்லாம் தம்முள் வேற்றுமையின்றி ஒன்றாய், ஒரு ரூபமாய், தேவசுபாவமாய், சருவேசுரனாய் விளங்கினாலும், மிகவும் சுருங்கிய மானிடபுத்தியானது அவ்விலக்ஷணங்களை ஒருங்கு கிரகித்துக் கொள்ள வலிமையற்றதாயிருப்பதால், அவைகள் உள்ளபடியே வெவ்வேறாய் இருந்தாற்போல பிரிவுபடுத்தித் தெளிந்துகொள்ளுவது வழக்கம்.

சருவேசுரன் சுத்த அரூபியாயும், நித்தியராயும், ஏகராயும், தம்வயத்தராயும், நிர்விகாரியாயும், எல்லாம் வல்லவராயும், சருவ ஞானியாயும், எங்கும் வியாபியாயும், தமது தேவாதீனத்தால் யாவற்றையும் ஆண்டு நடத்துபவராயுமிருக்கிறார்.

**10. சருவேசுரன் சுத்த அரூபியாயிருக்கிறார் (Pure Spirit)**—அரூபியாவது அறிவுள்ள, அதாவது, நினைக்கவும் யூகிக்கவும் நிதானிக்கவும் நியாயம் விசாரிக்கவும் விரும்பவும் கூடிய வல்லமை உள்ள ஒரு வஸ்துவாம். அரூபிக்கு உடலுமில்லை, உருவமுமில்லை, நிறமுமில்லை; அரூபியைக் கண்ணாற் காணுதலும் காதாற் கேட்டலும் ஸ்பரிசத்தால் உணருதலும் கூடாது. ஆதலால், அது பஞ்ச புலன்களுக்கும் எட்டாத வஸ்து எனப்படும். சகல வஸ்துக்களும் ஒன்றில் அரூப வஸ்துக்கள், அல்லது உரூப வஸ்துக்கள். அனைத்துக்கும் காரணரான சருவேசுரனே அரூப வஸ்து. அவருக்கு அளவில்லாத ஞானமுண்டு. பஞ்சேந்திரியங்களுக்கு எட்டியதும் கண்டிப்புள்ளதுமான யாதொன்றும் அவரிடத்தில் காணப்படாது. அவர் பஞ்சேந்திரியங்களுக்கும் எட்டாதவரெனவே, அவரைக் கண்ணாற் காணவும் காதாற் கேட்கவும் சரீரத்தால் உணரவும் ஸ்பரிசிக்கவும் கூடாது. அரூபியாயிருத்தலாகிய குணமானது சருவேசுரனுடைய அநந்த சம்பூரண இலக்ஷணத்தோடு இன்றியமையாத விதமாய்ச் சேர்ந்திருக்கிறது என்று தெளிந்துகொள்ளவேண்டும். ஏனெனில், அவர் சரீரவஸ்துவாயிருந்தால் மற்றைய உடலுள்ள வஸ்துக்களைப்போல் ஓரேயிடத்தில் மாத்திரம் இருப்பாரன்றி எங்கும் வியாபகராகமாட்டார். அவரிடத்தில் ஞானமில்லாவிடில், தமது சிருட்டிகளாகிய சம்மனசுகளிலும் மனிதர்களிலும் குறைந்த இலக்ஷணராயிருப்பாரன்றி அநந்த சம்பூரணராகமாட்டார்.

சருவேசுரனுக்கு கண்கள் காதுகள் கால்கைகள் இருப்பது போல வேத புஸ்தகங்களிற் சொல்லியிருக்கக் காண்கின்றோம். அவைகளில் அவ்வாறு சொல்லப்பட்டிருப்பது எதன் பொருட்டோவெனில், மனிதருடைய சுபாவமுறைக்கும் பேச்சுமுறைக்கும் இணங்கிய பாஷையாலும் உவமையாலும் சருவேசுரனுடைய செய்கைகளையும் இலக்ஷணங்களையும் மனிதருக்குத் தெரிவிக்கும் பொருட்டேயாம். சருவேசுரனுடைய கண்கள் காதுகள் கைகள் என்றும், எல்லாப் படைப்புகளும் அவருடைய பாதங்களின்கீழ் இருக்கின்றன என்றும் வேதவாக்கியம் கூறும்போது, அவர் எல்லாவற்றையுங் காண்கிறார் என்றும், கேட்கிறார் என்றும், எல்லாவற்றையும் செய்கிறார் என்றும், எல்லா வஸ்துக்களுக்கும் அவரே அதிபதியாயிருக்கிறார் என்றும் அது நமக்குப் போதிக்கின்



றது. அல்லாமல், சருவேசுரன் முழுதும் அசரீரியாயிருப்பதால், அவருக்கு உள்ளபடியே அவயவங்களாவது பொறிகளாவது இருப்பதாய் வேதம் கூறமாட்டாது.

**11. சருவேசுரன் நித்தியராயிருக்கிறார் (Eternal)**—அவருக்கு ஒருகால் துவக்கம் இருந்ததுமில்லை. இனி ஒருபோது முடிவு இருப்பதுமில்லை. அவர் ஆதியும் அந்தமும் அற்றவர். அவர் தானாயிருக்கின்றதும், இல்லாதிருக்கக்கூடாததும், தன்னாலன்றி யாதொன்றும் உண்டாகக்கூடாதபடி உள்ளதுமான ஒரு அவசிய வஸ்துவாகின்றமையால், அவர் யாதோ ஒரு காலத்தில் உண்டாகவும் இல்லை; இனி எப்போதாவது இல்லாமல் போவதுமில்லை. சருவேசுரனுக்கு எப்போதாவது துவக்கமிருந்தால் வேறொருவராலேயே அவருக்கு இருத்தலுடைமை வந்திருக்கவேண்டும். அப்படியாயின், அந்த வேறொருவரே அவசியமும் நித்தியமுமான வஸ்துவாகி, அவரே சருவேசுரன் எனப்படுவார். அவருக்கு முடிவு இருத்தலுங் கூடாது. ஏனெனில், இருத்தலை உடைமையாய்க்கொண்டிருக்கிறதே சருவேசுரனுடைய இயல்பு. அவர், வேறொன்றின் வல்லமையால் தமது இருத்தலைப் பெற்றுக்கொள்ளாமல், எப்போதும் முழுதும் தம் வயமாயிருந்து, மற்றெல்லாப்பொருட்களுக்குந் தாம் ஒருவரே இருத்தலைக் கொடுத்துக் காப்பாற்றிக்கொண்டு வருகின்றார்.

**12. சருவேசுரன் ஏகராய் இருக்கிறார் (One)**—சருவேசுரன் ஓரே ஒருவர். பல சருவேசுரர் இருத்தல் கூடாது. மற்றச் சகல வஸ்துக்களும் உண்டாயிருப்பதற்குக் காரணம் பெறப்படும் பொருட்டு, ஓரே சருவேசுரன் மாத்திரம் அவசியமாம். ஆகவே, ஒருவர் அன்றி பலர் அநாவசியகம் என்றும், சருவேசுரனாய் இருப்பவர் ஒருவரே என்றுந் தெளிந்துகொள்ளத்தகும். அன்றியும், சருவேசுரனே எல்லாவற்றிற்கும் ஆதி கர்த்தர். இருவர் சருவாதி கர்த்தர்களாய் இருத்தல் கூடாது. ஏனெனில், இருவர் சருவாதிகர்த்தர்களாயிருந்தால், ஒன்றில், இருவரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படியாமல் தம்வயத்தராய் இருக்கவேண்டும்; அவ்வாறு இருவரும் தம்வயத்தராய் இருந்தால் இருவரில் ஒருவருஞ் சருவாதி கர்த்தர் ஆகார். அல்லது, ஒருவர் மற்றவருக்குக் கீழ்ப்படிந்து இருத்தல்வேண்டும். அப்படியாயின், எவருக்கு மற்றவர் கீழ்ப்பட்டவரோ அவரே சருவாதி கர்த்தர். ஆகவே, ஒருவரே சருவேசுரன் அன்றி அநேக சருவேசுரர் இல்லையென்பது நிச்சயம்.

**13. சருவேசுரன் தம் வயத்தராயிருக்கிறார் (Independent)**—அதாவது அவர் தாமாய் இருக்கிறார். இருத்தல் உடை

மையே அவருடைய சுபாவம். அவரது இருத்தலின் இன்மையை மனதில் உரூபிகரித்துக்கொள்ளுதலுங்கூடாது. தமது இருத்தலுக்கும் தமக்குச் சுபாவமாய் அமைந்த மற்றெல்லாவற்றிற்கும் பிறிதொன்றுகாரணமாயிராமல், தாம் ஒருவரே காரணமாய் இருக்கின்றார். ஆதலால், ஒருபோதுங் கெடுதல் இல்லாத முழுச் சுயாதீனம் அவருக்கு உண்டு. அவருடைய திருவுளத்துக்கு எதிரும் தடையும் செய்யக்கூடிய எப்பொருளுமில்லை. எல்லா வஸ்துக்களும் அவர் வசமாய் இருக்கின்றன. அவரே அவைகளை உண்டுபண்ணி அவைகள்மேல் சருவ கர்த்தத்துவம் செலுத்திவருகின்றார். சருவேசுரன் எல்லா நன்மைக்கும் ஊற்றும் எல்லா நன்மையின் நிறைவுமாயுள்ளவர். எக்குறைவும் நீங்கி, எல்லா நன்மையும் நிறைந்தவராயிருக்கிறவர் அவர் ஒருவரே.

14. **சருவேசுரன் நிர்விகாரியாயிருக்கிறார் (Unchangeable)**—அவர் எவ்வித மாற்றமும் இன்றி எப்போதும் ஒரே தன்மையாய் இருக்கிறார். அவர் தமது இருத்தலிலும், தமது இலக்ஷணங்களிலும், தமது ஞானத்திலும், தமது சித்தத்திலும் வேறுபடாதவர். சருவேசுரன் இருத்தலில் வேறுபடாதவர்; ஏனெனில் அவர் சுபாவமாகவே அவசியமான ஒரு வஸ்து. சருவேசுரன் தமது இலக்ஷணங்களில் வேறுபடாதவர்; ஏனெனில், அவருடைய இலக்ஷணங்கள் எல்லாம் தேவசுபாவத்தோடு ஒன்றாய்க் கூடியவைகளாய் உள்ளவைகள். ஆகவே, அவற்றுள் ஒன்றாவது நீங்குதலும் பிறிதொன்றுவந்து சேருதலுங்கூடாது. சருவேசுரன் தமது ஞானத்தில் வேறுபடாதவர்; ஏனெனில், அவர் யாதேனும் ஒன்றை அறியாதிருத்தலும் புதிதாய் ஒன்றை அறிந்துகொள்ளுதலும் அறிந்தவைகளை மறத்தலுங்கூடாது. சருவேசுரன் தமது சித்தத்தில் வேறுபடாதவர்; ஏனெனில், தாம் விரும்புகிறதையும் செய்கிறதையும் செய்யப்போவதையும் அநாதி நித்திய காலமாகவே விரும்புகிறார். அவர் புதிதான அறிவைப் பெற்றுக்கொள்ளக் கூடாதவராய் இருப்பதால், அவருடைய கருத்துகளும் ஒருகாலமும் மாறுபடா. ஆதலால், சருவேசுரன் சினக்கிறார், துக்கிக்கிறார், மன்னிக்கிறார் என்று இவைமுதலான சித்தவேறுபாடுகள் அவரிடத்தில் உள்ளன போலத் தேவவாக்கியங்கள் கூறினாலும், அக்கூற்றுகள் உவமையானவைகளே என்றும், நம்மிடத்தில் மனமாற்றங்கள் உண்டாகும்போது நாம் ஒன்றைச் செய்கிறதுபோல் அல்ல, அவர் தமது சித்தத்தில் சிறிதேனும் மாற்றம் இல்லாமலே, மாறினவைகளாகக் காண்பிக்குங் காரியங்களைச் சிருட்டிகள்மட்டில் நடத்துகிறார் என்றும் உணர்ந்துகொள்ளவேண்டும். கோபம் துக்கம் முதலான ஆசாபாசங்கள் சருவேசுரனிடத்தில் இல்லையென்பது நிச்சயம். அவர் அநாதிநித்திய காலந்தொடுத்து முன்னறிந்து நிரூபித்ததையே காலகதியில் நிறைவேற்றிக்கொண்டு வருகிறார். இன்னான் இன்ன நாளில் தமக்குக் கீழ்ப்படிவான், இன்னான் இன்ன நாளில் தமக்குத் துரோகஞ்செய்வான் என்று அநாதிநித்திய கால முதல் அவருக்குத் தெரியும். தெரியவே, தமக்குக் கீழ்ப்படியும் இன்னானுக்குச் சம்பாவனையும் தமக்குத் துரோகம் செய்யும் இன்னானுக்கு ஆக்கினையுங்கொடுக்க அநாதிநித்தியகாலந்தொட்டே தீர்மானித்திருக்கின்றார் என்று அறிக.



15. **சருவேசுரன் எல்லாம்வல்லவராயிருக்கிறார் (Omnipotent)**—சருவேசுரன் அளவில்லாத சம்பூரணரும் அத்தியந்த தம்வயத்தருமாய் இருப்பதால், அவர், ஆகத்தக்க யாவையும் தமது திருவுளப்படி செய்துமுடிக்கக்கூடியவர். அவருடைய வல்லமையை வரைவுபடுத்தவோ தடைப்படுத்தவோ கூடியது ஒன்றுமில்லை. பிரபஞ்ச சிருட்டிப்பே அவருடைய சருவவல்லமைக்கு ஒரு பிரத்தியக்ஷ அத்தாட்சியாம். அவர் வானத்தையும் பூமியையும், அவைகளில் அடங்கிய சரீர அசரீர வஸ்துக்கள் அனைத்தையும் ஒன்றுமில்லாமையில் நின்று உண்டாக்கியருளினார். அதாவது, ஒன்றுமில்லாத காலத்தில், அவர், தமது சித்தத்தால், எல்லாம் உண்டாயிருக்கும்படி செய்தருளினார். அசம்பாவிதமான காரியங்களைச் செய்யச் சருவேசுரனாலும் கூடாது. ஏனெனில், அசம்பாவிதம் என்றது ஒன்றுமல்ல; அது இயற்கைக்குமாறானது. உதாரணமாய், ஒருபொருள் ஒரேநேரத்தில் உண்டாயிருத்தலும் இல்லாதிருத்தலும் அசம்பாவிதமாம். ஒன்று ஒரே தடவையில் வட்டமும் சதுரமுமாயிருத்தல் கூடாது. சடப்பொருளுக்கு நினைக்குந்தத்துவம் இருத்தல் பொருந்தாது. ஆகையால், இவைகளையும் இவைபோலும் பிறவற்றையுஞ் செய்யாதிருத்தல் எல்லாம் வல்லமைக்குக் குறைவல்ல.

16. **சருவேசுரன் சருவஞானியாய் இருக்கிறார் (Omniscient)**—அவருடைய ஞானத்திற்கு மறைந்தது ஒன்றுமில்லை. அவர் எல்லாவற்றையுங் காண்கிறார்; எல்லாவற்றையும் அறிகிறார். நமது எல்லா எண்ணங்களும் எல்லா ஆசைகளும் எல்லா கருத்துகளும் அவருக்குத் தெரிந்தவைகளேயாம். அவருக்கு இறந்த காலமுமில்லை, எதிர்காலமுமில்லை. எல்லாக்காலமும் அவருக்கு நிகழ்காலமாய் இருக்கின்றது. சகல வஸ்துக்களின் இயல்பையும் சகல மனிதரின் கிரியைகளையும் அவர் நன்றாய் அறிகிறார். மயக்கமும் சந்தேகமும் வருத்தமும் இன்றி, அனைத்தையும் பட்டப்பகலி

அகத்தியமாய்ப் பிறக்கின்றது எனப்படும். தேவாதீனமானது தேவஞானத்தினாற் பிறக்கும்; ஏனெனில், சருவேசுரன் தாம் உண்டாக்கின வஸ்துக்கள் எல்லாம் தாம் குறித்த கதியை அடைந்துகொள்ளுவதற்கு அவசியமான வழிவகைகளைச் சேகரித்துக் கொடுக்கவேண்டியவராயிருக்கிறார். தேவாதீனமானது தேவதயையினின்று பிறக்கும்; ஏனெனில், தாம் சிநேகிக்கிறவைகளாகிய படைப்புக்களை அவர் பாரகண்டிதம் பண்ணுதலாவது கைவிடுதலாவது கூடாது. தேவாதீனமானது தேவநீதி தேவபரிசுத்தமாகியவைகளினின்று பிறக்கும்; ஏனெனில், அவர் பாவபுண்ணியங்களைப்பற்றிச் சமபுத்தி பண்ணுதல் கூடாது அவர் பாவத்தைப் பகைத்து விலக்குகிறார். புண்ணியத்தையோ விரும்பிக் கற்பிக்கிறார்; இம்மையிலாவது மறுமையிலாவது தருமத்துக்குச் சம்பாவனையும் அதருமத்துக்கு ஆக்கினையும் விதிக்கிறார். சருவேசுரனைப் பற்றி நம்மிடத்திலுள்ள அறிவு ஒன்றுமே, அவர், உலகம் முழுதையும் அதிலடங்கிய சகல வஸ்துக்களையும் அவற்றுட் பிரதான வஸ்துவாகிய மனிதனையும் இடைவிடாது பராமரித்துக்கொண்டு வருகிறாரென்று ஒப்பிக்கப் போதியதாயிருக்கின்றது.

சருவேசுரன் தமது தேவசந்நிதானத்தில் அற்பமும் நீசமுமான அத்தனை வஸ்துக்களின்மேல் கவனஞ் செலுத்துவது அவருக்கு அயோக்கியமல்லவோ எனில், அல்ல. ஏனெனில், வஸ்துக்களைப் படைக்கத் திருவுளங்கொண்டது அவருக்கு அயோக்கியமல்ல எனில், அவைகளை ஆண்டுநடத்துவதும் அயோக்கியமல்ல. ஆயினும், உலோக சம்ரக்ஷணையில் சருவேசுரனுக்குக் கவலையாவது கஸ்தியாவது உண்டென்று நினைக்கத்தகாது.

19. மனிதரை வருத்தும் அநேக வித கேடுகள் உலகத்தில் உண்டாயிருத்தல் தேவாதீனக் கோட்பாட்டுக்கு ஒரு சிறிதேனும் விரோதமானதல்ல. கேடுகளுட் சில, புத்தியைச் சார்ந்தவைகள். அவையாவன :—அறியாமையுஞ் சகலவிதத் தவறுகளுமாம். சில, சித்தத்தையும் இருதயத்தையுஞ் சார்ந்தவைகள். அவையாவன: துர்க்குணங்களும் பாவங்களுமாம். இவை ஒழுக்கமுறைக்கடுத்த கேடுகள் எனப்படும். மற்றக்கேடுகளோவெனில், சரீரத்தைச் சார்ந்தவைகளாம். அவையாவன :—வியாதிகளும் நோவுகளும் மரணமும் இன்னுஞ் சரீரத்துக்கடுத்த பலவித உபத்திரவங்களுமாம். இப் பலவகைக் கேடுகளுள் எவையாயினுந் தேவாதீனத்திற்குரிய ஞானத்துக்கும் தயைக்கும் விரோதமானவைகளல்ல. மனிதன் ஒரு படைப்பாய் இருப்பதால், அவன் இயல்பாகவே ஓர் அபூரணமான வஸ்துவாயிருத்தல் அகத்தியம். ஆதலால், அவன் அறியா



மைக்கும் தவறுதல்களுக்கும் ஏதுவாயிருக்கிறான். வரம்பில்லாததும் தவறாததுமான ஞானம் சருவேசுரன் ஒருவருக்கே உரியது. எவ்வித சிருட்டியாவது அநந்த சம்பூரணமுள்ளதாய் இருத்தல் அமையாது.

ஒழுக்கமுறையைச் சார்ந்த கேடாகிய பாவமோவெனில், சிருட்டிகர் மனிதனுக்கு அளித்த சுயாதீனத்தினாலும், மனிதன் அதைக் குற்றமானவிதமாய்ப் பிரயோகஞ் செய்துகொள்ளுவதினாலுமே விளைகின்றது. ஆதலால், பாவத்திற்குக் காரணம் சருவேசுரனல்லர். அவர் சகல துர்க்குணங்களையும் பாவங்களையும் முனிந்து விலக்குகிறார். மனிதன் அவைகளைக் கட்டிக்கொள்ளாதபடிக்கு வேண்டிய ஞானத்தெளிவையும் அருளுகிறார். பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறவர்களையும் அகோரமாய்த் தண்டிக்கிறார். அவர் மனிதனுக்குச் சுயாதீன சித்தத்தைக் கொடாமல் விடவும் அதனால் எவ்வித பாவமும் விளையாதிருக்கச் செய்யவுங்கூடும் என்பது மெய்யே. அப்படிவிட்டிருப்பின் மனிதன் எவ்வித புண்ணியங்களையுஞ் செய்ய இயலாதவனாயும் இருப்பான். தன் சிருட்டிகர்த்தாவைப் பூரணமாய் மகிமைப்படுத்தவும் மோக்ஷத்தைச் சம்பாவனையாகச் சுதந்தரித்துக்கொள்ளவும் கூடாதவனாய் இருப்பான். பேரின்பத்தை அடைந்து கொள்வதற்கானவைகளைத் தான் ஒரு சிறிதேனும் செய்யாதவனாயிருந்தால், பேரின்ப பாக்கியமும் அவனுக்கு மிகச் சிறிதாகவே இருக்கும். ஆயினும், சருவேசுரன் ஏன் இவ்வாறு செய்யாது அவ்வாறு செய்கிறாரென்று தேவ ஞானத்தின் கருத்துக்களை ஆராய்தல் நமக்குத் தகாது. அவருடைய வழிகள் புத்திக்கெட்டாதவைகள். நமக்கு எட்டாத தேவகருத்துக்களை வணங்கி, அவைகளுக்கு முழுதுங் கீழ்ப்படிந்திருத்தலே அற்ப சிருட்டிகளாகிய நமது கடமையாம். சருவேசுரன் எவ்வாற்றாலும் அளவில்லாதவர் ஆதலால், அவர் தமது சிருட்டித் தொழிலில் வைத்த முறைதான் அவருடைய அநந்த ஞானத்திற்கு முழுதும் பொருந்திய முறையென அறிதல் ஒன்றுமே நமக்குப்போதும்.

உடலைச்சேர்ந்த கேடுகளுட் பெரும்பான்மையானவைகள் சருவேசுரன் உலகபரிபாலனத்துக்கென்று ஏற்படுத்திய சாதாரண இயற்கைவிதிகள் காரணமாகவே பிறக்கின்றன. இவ்விதிகளை இடைவிடாமற் தடுத்து, அற்புதங்களைச் செய்துகொண்டிருக்க அவர் கடமை பூண்டவரா? அல்ல. மட்டின்றி அன்னபானஞ் செய்கிறவன் தன் தேகசுகத்தையும், கடுமையாய்ப் பிரயாசப்பட்டு உழைக்கிறவன் தேகபெலத்தையும் இழந்துபோகிறான். அப்படி அவனவன் இழந்து போகாதபடி, அற்புதத்தாற் தடைபண்ணக்

னுந் தெளிவாய் நோக்குகிறார். சருவேசுரன் யாதொன்றை அறியக்கூடாதவராயிருந்தால், அல்லது, யாதொன்றைப்பற்றிச் சந்தேகிக்கக் கூடியவராயிருந்தால் அவர் வரம்பில்லாத சம்பூரணராய் இருத்தல் கூடாது.

17. **சருவேசுரன் எங்கும் வியாபியாயிருக்கிறார் (Omnipresent)**—அவர் தமது எல்லையுளடங்காத்தன்மையினால் எங்குஞ் சமுகராய் இருக்கிறார். அவர் உடல்களைப்போல இடத்தால் வரையறுக்கப்படாமல், உடலில் உள்ள ஆத்துமாவைப்போல ஏகமாயும் பகாமையாயும் முழுமையாயும் எங்கும் இருக்கிறார். அவர் தமது ஞானத்தாலும் வல்லமையாலும் அன்றி, தமது சுபாவத்தாலுமே எவ்விடத்திலும் இருக்கிறார். அவசியமும் அநந்தமுமான வஸ்து இடத்தால் மட்டுப்படாதாகையால், அவர் எங்கும் வியாபியாகாமலிருத்தல் ஒருகாலுங் கூடாது. ஆதலால், சருவேசுரன் வேதவாக்கியப்படி வானத்திலும் உயர்ந்தவர்; பாதாளத்திலும் ஆழ்ந்தவர்; பூமியிலும் அகன்றவர்; சமுத்திரத்திலும் விரிந்தவர். (யோபு. 11 அதி.) நாம் சருவேசுரனிலேயே சீவிக்கிறோம்; இயங்குகிறோம்; இருக்கிறோம் (அப். நட. 17 அதி.). இதற்கு அர்த்தமென்னவெனில், சடவாதிகள் சொல்வதுபோல நாம் கடவுளின் ஓர் கூறும் விரிவுமாயிருக்கிறோம் என்பதல்ல. ஆனால், கடவுள் எங்கும் வியாபியாயிருப்பதால், நாம் கடலில் மச்சங்கள்போல அவரில் தங்கி அவரால் சீவனையும் இயக்கத்தையும், சுருங்கச் சொல்லில், நமது சுபாவத்தை ஆக்குகின்றது எதுவோ அதையும் அச்சுபாவத்தின் இருத்தலுடைமையையும் பெற்றுக்கொள்ளுகிறோமென்பதே அர்த்தமாம்.

சருவேசுரன் **அநந்தர் (Infinite)**—அதாவது அவருடைய சுபாவமும் இலக்ஷணங்களும் அளவுபடாதவைகள்; ஆழமும் கரையும் காணாத சமுத்திரம் போன்றவைகள். அவர் அளவுபடாதவராகையால், சிருட்டிக்கப்பட்டதும் அளவுபட்டதுமாகிய எவ்வித புத்திக்கும் எட்டாதவர். பூமியிலே வாழும் மனிதர் அவரை விசுவசித்தலும், வானத்திலே விளங்கும் தூதரும் அர்ச்சியசிஷ்டரும் அவரைக்கண்டு பிரமித்தலும் கூடுமாயினும், அவரது சுபாவத்தைத் தெளிந்து கொள்ளுதலோ எவராலும் கூடாது. சருவேசுரன் ஒருவரே தம்மைத் தாம் இருக்கிறபடி விளங்கிக்கொள்ளுகிறார்.

18. **சருவேசுரன் யாவற்றையுந் தமது தேவாதீனத்தால் ஆளுகிறார் (God's Providence)**—தேவாதீனமாவது சருவேசுரன் தமது படைப்புக்களின்மேற் கொண்டிருக்கிற கவனமும் அவைகளை ஆண்டுநடத்துவதில் விளங்கப்பண்ணுகிற சாக்கிரதையுமேயாம். தேவாதீனம் தேவபராமரிப்பு என்றும் சொல்லப்படும். சகலலோகத்தையும் ஆண்டு, எல்லாச் சம்பவங்களையுந் திட்டப்படுத்தி வருகின்றவர் அவரே. அவருடைய கட்டளையோ உத்தாரமோ இன்றி யாதொன்றுஞ் சம்பவிக்கிறதேயில்லை. எவ்வித நன்மையும் சருவேசுரனுடைய கட்டளையாலேயே சம்பவிக்கும். அவர் நன்மையை அங்கீகரித்துக்கொள்ளுகிறார். அதைச் செய்யப் புத்தியுள்ள வஸ்துக்களை ஏவியும், அவைகளுக்குக் கற்பனையோ ஆலோசனையோ தந்தும், அதற்குச் சம்பாவனை அளித்தும் வருகிறார். தீமையோ அவருடைய கட்டளையால் வருகிறதில்லை. தீமையைச் செய்யவேண்டாமென்று அவர் விலக்குகிறார்; அதற்கு ஆக்கினையுமிடுகிறார். ஆயினும், ஒருவனுடைய சுயாதீனத்தைத் தாம் தடாதபடிக்கு, அவனைத் தீமைசெய்ய விடுகிறார். விட்டபோதிலும், தீமையால் நன்மைவினையவும் தமது தயையாவது நீதியாவது மேன்மேலும் விளங்கவுஞ்செய்ய அவரால் கூடும் ஆதலால், யாதொன்றும் தற்செயலாய் நடக்கிறதில்லை. தற்செயலென்பது கருத்தில்லாத ஒரு சொல்லாகையால், அது யாதொருசம்பவத்துக்குங் காரணமாகாது.

தேவாதீனம் எல்லாப்பொருள்களின்மேலும் செல்லும். அது எல்லா வஸ்துக்களையும் பொதுவாயும், அவற்றுள் ஒவ்வொன்றையும் விசேஷமாயும் பராமரிக்கின்றது. சம்பவிக்கிறதெல்லாம் தேவாதீனத்தால் கற்பிக்கப்பட்டாவது, முஸ்திப்புப்பண்ணப்பட்டாவது, இடங்கொடுக்கப்பட்டாவது சம்பவிக்கின்றது. கிரகங்கள் பருவங்கள் ஆதியவற்றின் கதிகளைத் திட்டப்படுத்துகிறதும், கனிகளைப் பிறப்பிக்கிறதும், தானியங்களை விளைவிக்கிறதும் தேவாதீனமே. குளிர், வெயில், பஞ்சம், வாழ்வு தாழ்வுகளை விளைவிக்கிறதும் தேவாதீனமே. சகல நன்மைகளையும் நமக்குத் தருகிறவரும், அவைகளை நம்மிடத்திலிருந்து நீக்குகிறவரும் சருவேசுரனே. அவர், எதைச்செய்தாலும், எப்போதும் எல்லாவற்றிலுந் தமது தயையையும் ஞானத்தையும் நோக்கியே செய்கிறார். ஓர் உத்தம பிதாவைப்போல, தமது சகல சிருஷ்டிகளுக்கும் வேண்டிய நன்மைகளை இடைவிடாது செய்துகொண்டு வருகிறார். அவர் நமக்கு ஆக்கினையிட்டாலும், சம்பாவனை அளித்தாலும், துயர் துன்பங்களை வரவிட்டாலும், இன்பத்தைக் கொடுத்தாலும், வேறெதைச் செய்தாலும் அவையெல்லாம் நமது மேலான நன்மைக்காகவேயாம்.

தேவாதீனம் என்னும் இலக்ஷணமானது தேவஞானம் தேவதயை தேவநீதி தேவபரிசுத்தம் ஆகிய இலக்ஷணங்களினின்று

கடவுளுக்குக் கடமை என்று யார் சொல்லத் திணிவார்? அன்றியும், மனிதன் சருவேசுரனுக்குச் செய்யும் துரோகமே அவனுக்கு நேரிடுங் கேடுகளுக்கு முக்கிய காரணம் என்று வேதவிசுவாசம் நமக்குப் போதிக்கின்றது. மேலும், சருவேசுரன் நியமித்த கிரமத்தைக் கெடுத்து மனிதனானவன் தன்னிட்டமாய்ச் செய்துகொண்ட தீமைக்கு உத்தரிக்க நேரிடும்போது முறையிடுதல் தகுமோ? தகாது. இம்மையில் நல்லவர்களாய் இருப்போர் தீயவர்களைப் போலவும், சில சமயங்களில், அத்தீயவர்களைக் காட்டிலும் அதிக நிர்ப்பாக்கியராகவும் இருப்பது உண்டு. ஆயினும், மறுமை ஒன்று உண்டென்பதும், மறுமையில் நல்லவர்களுக்குச் சம்பாவனையும் தீயவர்களுக்கு ஆக்கினையுங் கிடைப்பது நிச்சயமென்பதும் விசுவாசத்திற்கும் புத்திக்கும் ஒத்த சத்தியமாதலால் தேவாதீனக் கோட்பாட்டுக்கு அதனாற் குறைவொன்றும் உண்டாவதில்லை.

20. தேவாதீனத்தைப்பற்றி இதுவரையுஞ் சொல்லியவைகளால் 1-வது, நமக்கு விளங்கியவைகளும் விளங்காதவைகளுமாகிய சகல காரியங்களிலும் சம்பவங்களிலும் தேவாதீன வழிகளைத் தாழ்ச்சியோடு ஆராதித்து "சருவேசுரனுடைய ஞானம் அறிவு என்பவைகளின் சம்பூரணம் எவ்வளவு ஆழமானது! அவருடைய நியாயத்தீர்ப்புக்களோ புத்திக்கெட்டாதவைகள்" என்று அர்ச். சின்னப்பர் சொன்னதுபோலச் சொல்லுவது நமக்கு முதன்மையும் அவசியமுமான கடமையென்பதும்; 2-வது, இம்மை மறுமைச் சீவியங்களுக்கு வேண்டியவைகளை எல்லாம் சருவேசுரன் ஏராளமாக நமக்குத் தந்தருளுவாரென்று நாம் தளம்பாமல் எப்போதும் நம்பியிருக்கவேண்டுமென்பதும்; 3-வது, இவ்வுலகில் நம்மைப் பீடிக்குங் கேடுகள் எல்லாம் அளவில்லாத நன்மைத்தனமும் ஞானமும் உள்ள சருவேசுரனாலே திட்டப்படுத்தப்பட்டிருப்பதால், நாம் அவைகளை மிகுந்த சிரத்தையோடு அங்கீகரித்துப் பொறுதியோடு அனுபவித்து அவைகளின் நிமித்தம் மோக்ஷ ராச்சியத்தில் மிகச்சிறந்த சம்பாவனையைப்பெற்றுக்கொள்ளுவோம் என்று நம்பியிருக்கவேண்டுமென்பதும் தெளிவாயிருக்கின்றன.

சருவேசுரனுடைய மேன்மையையும் இலக்ஷணங்களையும் விசாரிக்குமிடத்து, ஆத்துமமானது அவருடைய மனோவாக்குக் கெட்டாத உந்நத மகத்துவத்தின் சன்னிதானத்தில் தன் எளிமையை உணர்ந்து நடுநடுங்குமல்லவா? இத்தனை உயர்வும் வல்லமையுமுள்ள கடவுளின் முன்பாக நாம் நம்மைத் தாழ்த்திக் கொள்ளாதிருப்பது எவ்வாறு? இந்த மகத்துவ சொரூபியின் சமுகத்தில் நாம் சாஷ்டாங்கமாய் விழுந்து, அடிவணங்கி, அவரது திரு



வுளத்தைச் சிரமேற்கொண்டு அவருடைய பரிசுத்ததனத்தையும் சன்னிதானத்தையும் நடுநடுக்கத்தோடு ஆராதிக்கக் கடவோம். அவருக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரஞ் செலுத்தி, நம்மால் ஆனமட்டும் பத்திவேகத்தோடு அவரைச் சிநேகித்தும் வரக்கடவோம். ஏனெனில், அவர் தமது அளவில்லாத மகத்துவத்தினாலும் செயிக்கப்படாத வல்லமையினாலும் யாவர்க்கும் பயங்கரத்துக்குரியவர் என்றாலும், தமது குறைவில்லாத நன்மைத்தனத்தினாலும் அதிஉந்நத சம்பூரணத் தன்மையினாலும் அவர் யாவர்க்கும் அன்புக்குரியவரே என்பது நிச்சயம்.

---

## 3-ம் பிரிவு

### சருவேசுரனுக்கு ஆராதனைசெய்வது அவசியம் என்பதின்பேரில்

21. சருவேசுரன் உண்டென்று ஒத்துக்கொண்டும் அவருக்கு எவ்வித வணக்கமுஞ் செய்யாதவர்களே ஆஸ்திகர் (Deists) என்னப்படுவர். சருவாதிகர்த்தர் ஒருவர் உண்டு என்று அங்கீகரித்தபின் அவருக்கு உரிய ஆராதனையைச் செய்யாது மறுத்தல் தன் புத்தியைத்தானே கெடுத்துக்கொண்டவன் செய்யும் அக்கிரமமாம். தன் சிருட்டிகரும் பேருபகாரியுமாய் விளங்குங் கடவுளுக்கு, அகத்திலுள்ளதும் புறத்திலுள்ளதும் பிரசித்தமானதும் கொண்டாட்டமானதுமான வணக்கத்தை மனிதன் செலுத்தவே வேண்டும் என்று, ஆசாபாசப் புகையால் மயங்கினவர்களேயன்றி, மற்று எல்லாரும் ஒரு வாய்ப்படக் கூறுவார்கள்.

**அகத்துவணக்கம்** ஆவது (Interior Worship) என்னவெனில், சருவேசுரன் மட்டில் ஆத்துமத்திலே உண்டாகும் ஆராதனை, சார்பு, கீழ்ப்படிவு, சிநேகம், நம்பிக்கை நன்றியறிதல் ஆதிய ஞானமுயற்சிகளேயாம். சருவேசுரனுடைய இலக்ஷணங்களை உற்றுநோக்குமிடத்து, அறிவும் சுயாதீன சித்தமும் உள்ள படைப்புக்களாகிய மனிதர் ஆராதனை முதலிய வழிபாடுகளை அவருக்குச் செய்யக் கடமைபூண்டவர்களாகவே இருக்கிறார்கள். அவர் சகலத்துக்கும் அதிபதி கர்த்தராயிருக்கிறபடியால், அவரை ஆராதித்து அவருக்கு ஊழியஞ் செய்வது மனிதருக்குக் கடமையேயாம். அவர் அளவில்லாத மகிமையும் அளவில்லாத வல்லமையும் அளவில்லாத நீதியுமுள்ளவராகையால், அவருடைய மகத்துவத்தையும் வல்லமையையும் அறிக்கையிட்டு அவருடைய நீதிக்கு

அஞ்சி நடப்பது மனிதருக்குக் கடமையேயாம். அவர் அளவில்லாத நன்மைத்தனமுள்ளவர் ஆகையால், தங்கள் ஆத்துமத்தின் சகல தத்துவங்களாலும் அவரைச் சிநேகித்துவருவது மனிதருக்குக் கடமையேயாம். அவர் ஒருவரே சருவநன்மைச் சம்பன்னராயும் மனிதரோ அத்தியந்த வறிஞராயும் இருக்கின்றமையால், மனிதர் தாழ்ச்சியோடு அவருடைய சகாயங்களை எப்பொழுதும் மன்றாடிக் கேட்கவேண்டும். அவர் இடைவிடாமல் மனிதருக்கு உபகாரஞ் செய்துகொண்டே வருகிறார். மனிதருடைய சரீரமும் ஆத்துமமும் அவர்களுக்குள்ள மற்றயாவும் அவருடைய தெய்வீக உதாரகுணத்தாலேயே அவர்களுக்குக் கிடைத்தவைகள். ஆதலால், அவரை ஆராதித்து அவருக்கு நன்றியறிதலைக் காண்பிக்கிறது மனிதர் எல்லாருக்கும் குன்றாத கடமையாம்.

நமது வந்தனை நமஸ்காரங்கள் சருவேசுரனுக்கு அவசியமா? அல்லவென்பது நிச்சயம். அவர் தம்மிலேதானே மகிமைப்பிரதாபமும் பேரின்பமும் நிறைந்தவர். இந்த நன்மைகள் ஒருகாலும் மாறாதவைகளாயும் நாம் ஆராதித்துப் புகழினும் புகழாதுவிடினும் மிகாதவைகளாயும் குறையாதவைகளாயும் இருக்கின்றன. தமக்கு ஆராதனை செய்யப்பட வேண்டுமென்று அவர் கற்பிப்பது தமக்கு ஆராதனை அவசியமென்பதைப்பற்றியா? அல்ல; சிருட்டியானது தன் சிருட்டிகருக்கு வந்தனைசெய்வது நீதியும் நியாயமுமாம் என்பதைப்பற்றி மாத்திரமேயாம். ஆதலால் தன் புத்தியால் சருவேசுரனை அறியவும், சித்தத்தால் அவரைச் சிநேகித்து அவருக்கு ஊழியஞ்செய்யவுங் கூடியதாகிய எவ்வித சிருட்டியும் தன் சிருட்டிகரைச் சார்ந்தும், அவருக்குக் கீழ்ப்படிந்தும், அவரைப் போற்றிப் புகழ்ந்தும், அவரைச் சிநேகித்தும் தனக்கு வேண்டியவைகளை நம்பிக்கையோடு அவரிடத்தில் மன்றாடியும், அவருக்கு நன்றியறிதலைக் காண்பித்தும் வருவது நீதியும் கிரமமுமான கடமைகளாம். இக்கடமைகள் வஸ்துக்களின் இயற்கையிலும் நீதிமுறையிலும் நின்று பிறக்குங் காரியங்களாகையால், இவைகளில்நின்று நம்மை நீக்கிவிடச் சருவேசுரனாலும் கூடாதென்பதும் பிரத்தியக்ஷம்.

22. நாம் சருவேசுரனுக்குப் **புறத்துவணக்கமும்** (Exterior Worship) செய்யவேண்டும். அதாவது: அவர்மட்டில் நமது ஆத்துமத்திலுள்ள அந்தரங்க உணர்ச்சிகளைப் பத்திக்குரிய வெளியநுசாரங்களால் காண்பிக்கவேண்டும். நமக்கு ஆத்துமமும் சரீரமும் உண்டு. இவை இரண்டையும் சிருட்டிகர்த்தாவே நமக்குத் தந்தருளினார். ஆதலால், நமது சரீரமும் தன்னாலானபடி சரு



வேசுரனைச் சங்கித்து, ஆத்துமமானது கடவுளுக்குச் செலுத்தும் ஆராதனைகளில் அதனோடு ஒன்றித்திருக்கவேண்டும். அன்றியும், ஆத்துமமானது தன்னிடத்தில் பலமாய் எழும்பும் உணர்ச்சிகளை அவற்றின் அறிகுறியாகிய வெளிக்கிரியைகளால் காண்பியாது விடுதல் கூடாது. ஆகையால், விசுவாச உணர்ச்சியால் பிறந்து வெளிக்கிரியைகளாற் காண்பிக்கப்படும் வணக்கமே புறத்து வணக்கம் எனப்படும்.

23. நாம் சருவேசுரனுக்குச் செலுத்தவேண்டிய வணக்கம் **பிரசித்தமானதும்** (Public) **கொண்டாட்டமானதுமாய்** (Solemn) இருக்கவேண்டும். மனிதர் கூட்டமாய் வாசம்பண்ணும்படி நியமிக்கப்பட்டவர்கள் ஆகையால், தங்கள் எல்லாரையும் சிருட்டித்த கர்த்தரை எல்லாரும் ஒருமிக்கச் சேர்ந்தும், பொதுவிலும் ஆராதித்து வாழ்த்தி வந்திக்கவேண்டியவர்கள். ஏனெனில், மனிதருள் ஒவ்வொருவரும் தனித்தனியே அவருடைய படைப்புக்களாய் இருப்பதுபோல, மனித சமூகங்களும் அவருடைய படைப்புக்களாம். அந்தச் சமூகங்கள் எல்லாம் அவரிலேயே தங்குகிறவைகள். எப்படியெனில், அவரே அவைகளைப் பரிபாலித்து அவைகளுக்கு நன்மை செய்துவருகிறார். அன்றியும் பிரசித்த ஆராதனையில்லாவிடில், வேதமும் இல்லை. மனிதர் ஒருவர் ஒருவரைப் புண்ணியத்திற்குத் தூண்டவும், வேதக்கடமைகளை அநுசரிக்கும்படி ஏவவும் பிரசித்த ஆராதனையே மிகவும் உதவியானதென்பது வெளிப்படையாம். உலக ஆரம்பந்தொட்டு மனிதர் கூட்டங் கூட்டமாய்ச் சேர்ந்து சிருட்டிகருக்கு ஆராதனை செய்து வந்தார்களென்பதும் நிச்சயம். எல்லாக் காலங்களிலும், சீர்திருத்தம்பெற்ற சாதிகளிடத்திலும் பெறாத சாதிகளிடத்திலும், தேவாராதனைக்குரிய செபங்கள் ஆலயங்கள் பீடங்கள் பூசைகள் பலிகள் முதலானவைகள் உண்டென்பதைக் கண்டும் கேட்டும் அறியாதவர்கள் யார்? எல்லாச் சாதிகளிடத்திலும் ஒரேவிதமான தேவாராதனை நடந்துவரவில்லை என்பது மெய்யே. ஆயினும், யாவற்றிற்கும் அதிபதிகர்த்தரான கடவுள் தங்கள் ஆராதனைக்கு முழுதும் உரியவர் என்று அறிக்கையிட்டு எல்லாச் சாதியாரும் ஓரோர் விதத்தில் அவரை வழிபட்டுக்கொண்டே வந்தார்கள்.

இதுவரையுங் கூறியவைகளாற் றெளிந்து கொள்ளவேண்டியதென்னவெனில்:—சருவேசுரனுக்கு எவ்வித வணக்கமுஞ் செய்யாது விடுதலும் ஏதோ ஒரு வேதத்தை அநுசரியாமற் சீவித்தலும் புத்தியால் அறியப்பட்ட சாதாரண கோட்பாடுகளையும் மெய்ஞ்ஞானத்தையும் மறுப்பதாகுமென்றும், மானிடசுபாவத்தின் முத

லுணர்ச்சிகளைத் தள்ளிவிடுவதாகும் என்றும், சிருட்டி கர்த்தாவால் மனிதனுக்கு நியமிக்கப்பட்ட முதற்பிரமாணத்தைத் துணிகரமாய் மீறுவதாகும் என்றும், சருவேசுரனுக்கும் அவரது சிருட்டிக்குமிடையே அகத்தியமாயுள்ள கிரமத்தை நேரே விரோதிப்பதாகும் என்றும், உலகம் அடங்கலும் உள்ள சனங்களின் விசுவாசத்தையும் உணர்ச்சிகளையும் ஆசாரங்களையும் அவமதிப்பதாகும் என்றும் தெளிந்துகொள்ளவேண்டும்.

இவ்வண்ணமாய், சருவேசுரன் ஒருவர் உண்டென்பதையும், அவரது இலக்ஷணங்கள் எவையென்பதையும், சகல மனிதரும் அவருக்கு ஆராதனை செய்யக் கடமை பூண்டவர்கள் என்பதையும், ஆதலால் மனிதர் யாதேனுமொரு வேதத்தை அநுசரிக்க வேண்டும் என்பதையும் யுத்தியானது, தேவ வெளிப்படுத்தலின் உதவி இன்றியும், விளக்கிக்காட்ட வல்லதாயிருக்கின்றது என்று நிச்சயித்துக்கொள்ளக் கடவோம்.

# 2-ம் அதிகாரம்

## வெளிப்படுத்திய வேதத்தைப்பற்றிப் பொதுவாய்ச் சொல்லியது

1-வது, தேவ வெளிப்படுத்தலின் அவசியம். 2-வது, தேவவெளிப்படுத்தலின் அறிகுறிகளாகிய அற்புதங்களும் தீர்க்கதரிசனங்களும்.

## 1-ம் பிரிவு

### தேவ வெளிப்படுத்தலின் அவசியத்தின் பேரில்

24. **தேவ வெளிப்படுத்தல்** என்பது (Revelation) மனிதன் மோக்ஷ பேரின்பத்தை அடைந்துகொள்ளும் பொருட்டு விசுவசிக்கவேண்டிய சத்தியங்களையும் அநுசரிக்கவேண்டிய கற்பனைகளையும் சருவேசுரன் தாமே அவனுக்கு, சுபாவத்துக்கு மேலான முறையில், நிச்சயமாய்த் தெரிவிப்பதாம். ஆகவே, வெளிப்படுத்திய வேதமாவது, சருவேசுரன்தாமே திட்டமானவிதமாய்ப் படிப்பித்த சத்தியங்களும் கற்பனைகளும் சேர்ந்த தொகுதி என்று சொல்லப்படும்.

முன் கண்ட பிரகாரம், மனிதனானவன் தன் யுத்தி ஒன்றையே துணையாய்க்கொண்டு சுபாவமுறைக்கடுத்த சில மூல சத்தியங்களை



யும் சில பொதுக் கடமைகளையும் அறிந்துகொள்ளக்கூடும் என்பது நிச்சயம். ஆயினும், தான் அநுசரிக்கவேண்டிய வேதத்தைப் பூரணமாகவும் நிச்சயமாகவும் அவனுக்குத் தெரிவிக்க யுத்தி ஒன்றுமே போதுமோ? எனில், போதாது. இதனை இரண்டு அத்தாட்சிகளாற் காட்டுவோம். 1-வது, தேவ வெளிப்படுத்தல் இன்றிச் சுபாவமுறையான எல்லாச் சத்தியங்களையும் எல்லாக் கடமைகளையும் அறிந்துகொள்ள மனிதனாற் கூடாது. 2-வது, தேவ வெளிப்படுத்தல் இன்றிச் சுபாவத்திற்கு மேலான எந்தச் சத்தியத்தையாவது எந்தக் கடமையையாவது அறிந்துகொள்ள மனிதனாற் கூடாது.

25. 1-வது, தேவ வெளிப்படுத்தல் இன்றிச் சுபாவமுறையான எல்லாச் சத்தியங்களையும் எல்லாக் கடமைகளையும் அறிந்துகொள்ள மனிதனாற் கூடாது என்பதற்குக் குன்றாத அத்தாட்சி என்னவெனில், மனிதன் தன் சொந்தப் புத்தியொன்றையே தனக்குத் துணையாகக் கொண்டிருந்தகாலத்தில் அவன் எத்தனையோ கொடிய தவறுகளுள் அமிழ்ந்திக்கிடந்ததேயாம். உள்ளபடியே, சுவிசேஷ வெளிப்படுத்தல் உண்டாகுமுன் உலகத்தில் வாழ்ந்த எத்தனையோ சாதிகளுக்குள் யூதசாதி ஒன்றுமே மெய்யான சருவேசுரனை அறிந்து அவருக்கு உரிய ஆராதனையைச் செய்துகொண்டுவந்தது. ஏனெனில், அந்தச் சாதி மாத்திரம் இயல்வேதம் என்னப்படுகிற ஆதிவேத போதகத்தைக் காப்பாற்றிக்கொண்டதோடு, மோசேசுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் கொடுக்கப்பட்ட வரிவேதத்தையும் பெற்றிருந்தது. மற்றச் சகல சாதியாருமோவெனில் இயல்வேத சத்தியங்களை அதிகமாய் வேறுபடுத்தியுங் கொஞ்சங் குறைய முற்றாய் மறந்துவிட்டும் இருந்தார்கள். வரிவேதத்தைப்பற்றியும் அவர்கள் நன்றாய் அறிந்திருக்கவில்லை. ஆதலால், வேத விஷயத்தில் மிகக் கொடிய தவறுகளுக்கு உள்ளாகிச் சுபாவத்திற்கு விரோதமானவைகளும் வெட்கத்துக்கு உரியவைகளுமான பாவ அக்கிரமங்களில் விழுந்து அழுந்தினார்கள். இவ்வாறுதான் அஞ்ஞானமும் அதின் துஷ்ட அநுசாரங்களும் முளைத்தன.

மிகச் சீர்திருத்தம்பெற்ற சாதியாருக்குள்ளும் மெய்த்தேவ அறிவு முற்றாய் அழிந்துபோயிற்று. அவர்கள் இயல்வேதக் கடமைகளை மிகவும் வேறுபடுத்தியே அநுசரித்தார்கள். சிருட்டிகருக்குப் பதிலாக, அவருடைய சிருட்டிகளாகிய சூரியனை, கிரகங்களை, கல்லை, மலையை, மரங்களை, மிருகங்களையும் இவைபோலும் பிறவற்றையும் வணங்கினார்கள். அரோசிகமும் மிருகத்தனமுமான

ஆசாபாசங்களுக்குந் தேவ வணக்கஞ்செய்ய ஏற்பட்டார்கள். சில சாதியாருக்குள் பிள்ளைகளே வயோதிகரான அல்லது வியாதிஸ்தரான தங்கள் பெற்றோரை மிருகங்களுக்கு உணவாக எறிந்துவிடுவார்கள். கிரேக்கர் உரோமர் முதலான சாதியாருக்குள் வாள் மல்ல யுத்தர், பார்ப்பவர்களின் வேடிக்கைக்காக, அகோர யுத்தஞ் செய்து இரத்தஞ்சிந்தி உயிரிழப்பார்கள். அவலக்ஷணமாய்ப் பிறந்த குழந்தைகள் எல்லாம் கொல்லப்பட்டன. இந்நாட்களிலும் அநேக தேசங்களில் குழந்தைகள் தாய் தந்தைகளால் பன்றி நாய் முதலான மிருகங்களுக்கு இரையாக எறியப்படுவதைக் கண்ணாரக் காணலாம். முற்கால தத்துவ சாஸ்திரிகளும் ஞானிகளுமாய் விளங்கின பெரியோர் தாங்களும், தேவவணக்கத்திலும் ஆதிவேத மூலகடமைகளிலும், பலவாறாய்த் தவறிப் போனார்களென்பது நிச்சயம்.

இச்சம்பவங்களைப் பார்த்து நாம் தீர்மானிக்கவேண்டியது என்னவெனில், சகலவித ஆசாபாசங்களுக்கும் ஏதுவாகிய மனிதன், தன்சொந்தப் புத்தியின்படி நடக்கவிடப்பட்டால் இயல்வேதத்தையடுத்த சகல சத்தியங்களையும் கடமைகளையுந் தெளிந்துகொள்ளமாட்டானென்றே தீர்மானிக்கவேண்டும். ஆதலால், சருவேசுரன்தாமே மெய்வேத சத்தியங்களையும் தமக்கு மனிதன் செலுத்தவேண்டிய கடமைகளையும் அவனுக்குப் போதிக்கவேண்டும் என்பது நிச்சயம்.

26. 2-வது, தேவவெளிப்படுத்தல் இன்றி, சுபாவத்திற்கு மேலான எந்தச் சத்தியத்தையாவது எந்தக் கடமையையாவது அறிந்துகொள்ள மனிதனாற் கூடாது. சுபாவ முறையின் எல்லாச் சத்தியங்களையுங் கடமைகளையும் அறிந்துகொள்ளவே மனிதனுக்குத் தேவவெளிப்படுத்தல் அவசியமென்றால், சுபாவத்திற்கு மேலான முறையின் சத்தியங்களாகிய பரம இரகசியங்களையும் கற்பனைகளையும் அறிந்துகொள்ளத் தேவவெளிப்படுத்தல் இன்றியமையாததென்பது தானாய் விளங்குமே. உள்ளபடியே, வேதசத்தியங்களாகிய பரம இரகசியங்கள் யுத்திக்கு விரோதமானவைகளல்ல ஆயினும், யுத்திக்கு எட்டாதவைகளேயாம். பரம இரகசியங்களை விளங்கிக்கொள்ள நம்மாற்கூடாவிடினும், சருவேசுரனுடைய தவறாத திருவாக்கின் நிமித்தம் நாம் அவைகளை விசுவசிக்க வேண்டும். சுபாவத்திற்கு மேற்பட்ட சத்தியங்களாகிய பரம இரகசியங்கள் மனிதரால் அறிந்துகொள்ளக் கூடாதவைகளாயிருப்பதுபோலச் சுபாவத்திற்கு மேற்பட்ட திட்டமான கற்பனைகளும் மனிதரால் அறிந்துகொள்ளக் கூடாதவைகளேயாம். அவை



கள் சுயாதீனமான தேவ திருச்சித்தத்திலிருந்து பிறக்கிறவைகளாகையால், சருவேசுரன் அவைகளை மனிதருக்கு வெளிப்படுத்தினால் அன்றி, மனிதர் அவைகளை ஒருபோதும் அறிந்துகொள்ளவே மாட்டார்கள். சுபாவத்திற்கு மேற்பட்ட இச்சத்தியங்களையும் கற்பனைகளையும் அறிந்துகொள்ள மனிதரால் முழுதுங் கூடாதபடியால், அவர்தாமே இவைகளை மனிதருக்கு வெளிப்படுத்தியிருத்தல் அவசியம் என்பது பிரத்தியக்ஷம்.

27. சருவேசுரன் பரம இரகசியங்களை நமக்கு வெளிப்படுத்தி நாம் அவைகளை விசுவசிக்கவேண்டும் என்று கற்பிக்கக் கூடுமா? யுத்திக்கெட்டாத சத்தியங்களையும் ஒத்துக்கொள்ள நமக்குக் கடமையுண்டா? எனில், அவர் கற்பிக்கக்கூடும் என்பதற்கும், ஒத்துக்கொள்ள நமக்குப் பாரமான கடமை உண்டென்பதற்கும் சந்தேகமில்லை. ஏனெனில், அளவில்லாத ஞானமுள்ளவர் நமது சிற்றறிவுக்கு எட்டாதவைகளையும் அறிந்திருக்கிறார். அன்றியும் அவர் எல்லாவற்றுக்கும் மேலான கர்த்தாவாய் இருப்பதால், தமக்குச் சித்தமாகும்போது அச் சத்தியங்களுட் சிலவற்றை நமக்குத் தெரிவித்து நாம் தமது திருவாக்கை நம்பி அவைகளை முழுதும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கற்பிக்கவுங் கூடும். சிற்றறிவுடைய நாம் அவர் கற்பிப்பது நமக்கு மறைவாயிருந்தாலும் அதை விசுவசிக்கக் கடமைபூண்டவர்களாகிறோம். ஒருபோதும் தவறக்கூடாதவரான சருவேசுரன் இன்னின்ன பரம இரகசியங்களை வெளிப்படுத்தி இருக்கிறார் என்பது ஒன்றுமே நாம் அவைகளை உறுதியாய் அங்கீகரித்து விசுவசிப்பதற்குப் போதிய ஆதாரமாம். இவ்வுலக சராசரங்களிலும் இயற்கைத் தோற்றங்களிலும் நமது புத்திக்கு எட்டாத காரியங்கள் எத்தனையோ உண்டு. ஆயினும், அவைகளை ஆக்ஷேபமின்றி ஒத்துக்கொள்ளுகிறோம். ஆத்துமத்திற்குஞ் சரீரத்துக்கும் இடையிலுள்ள ஐக்கியத்தின் தன்மையை விளங்கிக்கொண்டவர் யார்? ஆத்துமமானது சரீரத்தை நடத்தும் விதம் எப்படி என்றும், புறத்துப்பொருள்கள் பஞ்சேந்திரியங்களின் வழியாக ஆத்துமத்திற்குப் புலப்படுகிறமேரை என்ன என்றும் அறிந்துகொண்டவர் யார்? நாம் உண்ணும் உணவு இரத்தமாய் மாறித் தேகத்தை வளர்ப்பது எவ்வாறு என்று கண்டுபிடிப்பவருண்டோ? யாதேனும் ஒரு வித்தை மண்ணிற் புதைத்தவிடதது அது முன்பு அழுகி அழிவதுபோற்தோன்றினும், பின்பு சிறந்த முளையாய் அரும்பி, தாளாய் வளர்ந்து, இலைகளை வீசி, மலர்களைப் பூத்துக் கனிகளைக் காய்க்கின்றதே. ஒவ்வொரு இனத்து விதையும் அவ்வவ் இனத்துப் பயிரையும் பலன்களையும் அன்றி

வேறு இனத்துப் பயிர்களையும் பலன்களையும் பிறப்பியாதிருக்கின்றனவே. இவைகள் எல்லாம் நமது சிற்றறிவுக்கு இரகசியங்கள் அல்லவா? ஆயினும், இவைகள் அனுபவத்திற் கண்டவைகளாதலால், தத்தளிப்பு இன்றி விசுவசித்துக்கொண்டு வருகிறோம். அவ்வாறிருக்க, ஒருபோதும் தவறாத தேவவாக்கானது வெளிப்படுத்திய யாதொரு உண்மையை' முழுமனதாலும் ஒப்புக்கொள்ளாமல் விடுவது எப்படி? பிரபஞ்சமும் லௌகீக சாஸ்திரங்களும் மனிதராற் கண்டுபிடிக்கக்கூடாத இரகசியங்கள் நிறைந்தன என்றால், வைதிக விஷயங்களில் பரம இரகசியங்கள் அநந்தம் உண்டென்பதைச் சொல்லவும் வேண்டுமா? அப்படியிருக்க, யுத்திக்கு எட்டாத அநேக விஷயங்கள் தேவவேதத்திலிருப்பதைக் கண்டவர்கள் அவைகளைச் சிரவணத்தோடு அங்கீகரித்துக்கொள்ளாமல் தள்ளிவிடத் துணிவது எவ்வாறு? அன்றியும் பரம இரகசியங்கள் இல்லாத வேதம் தெய்வீகமானதாய் இருத்தல் கூடாதென்பதும் ஒன்று. வேதந் தெய்வீகமானதல்லவெனில், அது நமக்குப் பெரும் பிரயோசனந் தராது. தெய்வீகமானதேயாம் எனில் சருவேசுரன் அநந்தராயிருக்கிறபடியால், அவ்வேதமும், தேவசுபாவம் தேவ இலக்ஷணங்கள் தேவதொழில்கள் முதலானவைகள் மட்டில் மனிதருக்கு எட்டாததாய் இருத்தல் அகத்தியம் என்பது வெளிப்படை. சருவேசுரனின் இருத்தல் என்ன என்பதையும் அவராற் செய்யக்கூடியது என்ன என்பதையும் மனிதர் முற்றாய் அறியக்கூடுமாகில், அவர் சருவேசுரனாய் இருக்கமாட்டார்.

ஆதலால், அறிவுக்கு எட்டாத சத்தியங்களைச் சருவேசுரன் மனிதருக்கு அறிவித்தல் கூடும் என்பதும், மனிதரோ, அவருடைய திருவாக்கால் அச் சத்தியங்கள் தங்களுக்கு அறிவிக்கப்பட்டன என்று நிச்சயமாய் அறிந்துகொண்டவுடனே, அவைகளை விசுவசிக்கக் கடமைப்பட்டவர்கள் என்பதும் நிச்சயமாம்.

இதைக்கொண்டு தீர்மானிக்கவேண்டியது என்னவெனில், சருவேசுரன் ஓர் வேதத்தை வெளிப்படுத்தியிருக்கிறாரா என்பதையும், அவ்வேதம் எது என்பதையும் விசாரித்தறியச் சகல மனிதருக்கும் மீளாத கடமையுண்டு. மெய்வேதத்தை ஆராய்வதில் எவனாவது அசட்டையாயிருக்க ஒண்ணாது. ஏனெனில், சருவேசுரன் ஓர் வேதத்தை வெளிப்படுத்தினால், மனிதர் அதை அறிந்து அநுசரிக்கவேண்டும் என்றதே அவருடைய திருவுளம். ஆதலால், தவறான மார்க்கத்திலும் சருவேசுரனைப்பற்றிய அறியாமையிலுஞ் சந்தேகத்திலும் மன உச்சாகமாய் நிலைகொள்ளுகிற எவனும் பெருங் குற்றவாளியாயிருக்கிறான். ஒன்றுக் கொன்று மாறான போதகங்களையும் அநுசாரங்களையும் கற்பிக்கிற பல வேதங்கள் இருந்தால், அவற்றுள் ஒன்று மாத்திரமே உண்மையானதாயிருக்கும். அது ஒன்றுமே சருவேசுரனாற் படிப்பிக்கப்பட்டதென்பது நிச்சயம்.



இனி, சருவேசுரன் வெளிப்படுத்தின வேதத்தை ஒருவன் உறுதியாயும் தெளிவாயும் அறிந்துகொள்ளுவதற்கு அறிகுறிகள் உண்டோவெனில், அவைகளைப் பின்னாற்சொல்லுவோம்.

---

## 2-ம் பிரிவு

## தேவ வெளிப்படுத்தலின் அறிகுறிகள்

சருவேசுரன் ஓர் திட்டமான வேதத்தை உலகத்திற்கு வெளிப்படுத்தும்போது, அவர் அதைத் தமது சருவவல்லமையின் அழியாத முத்திரைகளாகிய சில அறிகுறிகளால் பிரித்துக்காட்டாமல் விடார். ஒருவன் யாதோர் வேதத்திலே இவ்வறிகுறிகளைக் காணும்போது, அதுதான் சருவேசுரனுடைய மெய்யான வேதம் என்று சந்தேக விபரீதமின்றி அறிந்துகொள்ளலாம்.

இவ்வறிகுறிகளுள் முக்கியமானவைகள் எவையெனில், அற்புதங்களும் தீர்க்கதரிசனங்களுமாம்.

28. அற்புதமாவது (Miracle) புலன்களுக்குத் தோற்றுவதும், இயற்கைவிதிகள் சகலத்தையும் கடந்ததும், நிச்சயமுள்ளதுமான ஓர் சம்பவமாம்.

அற்புதமானது **புலன்களுக்குத் தோற்றும்** (Sensible) ஒரு சம்பவமாயிருத்தல் வேண்டும். ஏனெனில், அது தேவவரப்பிரசாதம் ஆத்துமத்தில் அந்தரங்கமாய் விளைவிக்கும் ஆச்சரியத்துக்குரிய செய்கைகளைப்போல, பஞ்சேந்திரியங்களுக்கு எட்டாததாய் இருக்குமானால், தேவவெளிப்படுத்தலுக்கு அத்தாட்சியாய் இருத்தல் கூடாது. அற்புதமானது **இயற்கைவிதிகளைக் கடந்த** (Beyond the Laws of Nature) ஓர் சம்பவமாயிருத்தல் வேண்டும். சருவேசுரன் உலகத்தைச் சிருட்டித்து அது கிரமமாய் நடைபெற்று வரும்படி சில விதிகளை ஏற்படுத்தியிருக்கிறார். அவ்விதிகளுக்கு அமைந்தே சந்திரன் சூரியனும் நட்சத்திரங்கள் கிரகங்களும் கதி பிசகாது ஓடிக்கொண்டிருக்கின்றன; ஆற்றுத் தண்ணீர்

எப்போதும் பாய்ந்துகொண்டிருக்கின்றது, இறந்தவர்கள் உயிர்க்காது இருக்கிறார்கள். இவ்வாறான விதிகளைக்கடந்து சில விசேஷ சம்பவங்கள் நிகழ்ந்தால், உதாரணமாக: சூரியன் ஓடாமல் ஒரு இடத்தில் தரித்து நின்றால், அல்லது ஆற்றுச் சலமானது சடுதியாய்ப் பாயாதொழிந்தால், அல்லது மரித்தவனொருவன் உயிர்த்தால் இயற்கைவிதியைக் கடந்தே இச்சம்பவங்கள் நிகழ்ந்தன என்பதும், இவை மெய்யான அற்புதமே என்பதும் நிச்சயமாம். அற்புதமானது **சகல இயற்கைவிதிகளையும்** (All the Laws of Nature) கடந்த ஓர் சம்பவமாயிருத்தல் வேண்டும். ஏனெனில், ஒரு சம்பவம் ஒரு இயற்கை விதியைக் கடந்ததாயிருந்தாலும் வேறொரு விதியின் காரியமாயிருக்கக்கூடும். சகல விதிகளையும் கடந்ததென்றாலோ அது அற்புத சம்பவமென்றதற்குச் சந்தேகமிராது. உதாரணமாக: மரித்த ஒருவன் உயிர்பெற்று எழுதல் மெய்யான அற்புதம் என்று தீர்மானித்துக் கொள்ளுவதற்கு, இறந்தவர்கள் எந்த இயற்கைவிதியினாலும் உயிர்க்கிறதில்லை என்று அறிந்துகொள்ளுதல் அவசியமாயும் போதியதாயும் இருக்கின்றது. ஈற்றில், அற்புதமானது **நிச்சயமான** (Certain) ஒரு சம்பவமாயிருத்தல் வேண்டும். அதாவது, நியாயமான எவ்வித சந்தேகத்துக்கும் இடமில்லாத பிரத்தியக்ஷ சம்பவமாயிருத்தல் வேண்டும். அல்லாவிடில், மெய்யான அற்புதங்களையும் அறிவீனருக்கு அற்புதங்கள்போற் காணப்படும் அநேகசுபாவமுறையான ஆச்சரியங்களையும் வேறுபடுத்தி அறிதல் கூடாது. ஆதலால், இங்கே சொல்லிக் காண்பித்த குணங்கள் எல்லாம் பொருந்திய சம்பவம் மாத்திரமே மெய்யான அற்புதம் என்றும், அவற்றுள் ஒன்றாவது குறைந்த எவ்வித செயலும் மெய்யான அற்புதம் ஆகாது என்றும் தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

29. சருவேசுரன் ஒருவரே அற்புதங்களைச் செய்ய வல்லவர். சிருட்டிகர்மாத்திரம் தமது சிருட்டிப்பில் தாம் அமைத்த விதிகளைக் கடக்கவும் மாற்றவும் அதிகாரம் உள்ளவர். ஆதலால் அவரிடத்திலிருந்து அதிகாரம்பெற்ற ஒருவர் அன்றி, வேறு எவராவது, எவ்வித வல்லமைபடைத்தவராவது இயற்கை விதிகளைக் கடக்கவோ மாற்றவோ கூடாது என்பது வெளிப்படை. ஒருவன் தேவநாமத்தை முன்னிட்டும் தேவ அதிகாரத்தைக் கொண்டும் யாதொரு அற்புதத்தைச் செய்யுமிடத்து, சருவேசுரனே அவனை ஒரு கருவியாகக்கொண்டு அந்த அற்புதத்தைச் செய்கிறார் என்று தெளிந்துகொள்ளுதல் வேண்டும்.



அறிவிற் குறைந்த சனங்களுடைய புத்திக்கு எட்டாத சில சுபாவ காரணங்களில் நின்று அநேக விநோதகாரியங்கள் பிறக்கின்றன. உதாரணமாக: மின்சாரம் காந்தம் முதலிய காரணங்கள் சிற்றறிவோருக்கு அற்புதமாகக் காணப்படக்கூடிய அநேக காரியங்களைப் பிறப்பிக்கின்றன. அன்றியும், மானிட வல்லமையால் ஆகாத பலசெயல்கள் அரூபிகளால், அதாவது தேவதூதர்களால் அல்லது பிசாசுகளால், நடத்தப்படலாம். இந்த நூதன சம்பவங்களை மெய்யான அற்புதங்கள் என்று ஏற்றுக்கொள்ளத்தகாது. அரூபிகள் தங்களுக்குக்கிடைத்த மகா வல்லமையைக்கொண்டு நமது புத்திக்கெட்டாத அநேக ஆச்சரியங்களை நடத்துதல் கூடும். இவ் ஆச்சரியங்களைப் பிறப்பிப்பதற்கு அவர்கள் பிரயோகிக்கும் உபகரணங்கள், மனிதரால் விளங்கிக்கொள்ளக் கூடாதனவாயினும், இயற்கை விதிகளுக்குள் அடங்கியனவேயாம். ஆதலால், இவ்வித ஆச்சரியங்கள் எல்லாம் போலி அற்புதங்களேயன்றி உண்மையான அற்புதங்களல்லவென்று தீர்மானிக்கத்தகும். மேலும், தீய அரூபிகள் வேதவிஷயங்களில் மனிதரை மெய்யான அற்புதங்களால் அணுப்ப தயாபரராகிய சருவேசுரன் ஒருகாலும் உத்தரங்கொடார் என்பது நிச்சயம்.

30. எந்த வேதத்தின்பொருட்டு அற்புதஞ் செய்யப்படுகின்றதோ, அந்தவேதம் மெய்யானது என்பதற்குச் சந்தேகம் இராது. ஏனெனில், அற்புதமானது சருவேசுரன் ஒருவருடைய செயலும் அவரது சருவவல்லமையின் முத்திரையுமாய் இருப்பதால், எவனாவது தான்போதிக்கும் போதகத்தின் உண்மைக்கு ஓர் அத்தாட்சியாக ஒரு அற்புதத்தைச் செய்தால், அவ்வுண்மைக்குச் சருவேசுரன்தாமே அத்தாட்சியிடுகிறார் என்பது பிரத்தியக்ஷம். சருவேசுரன் தப்பான போதகத்தை அங்கீகரித்துக்கொள்ளுதலும் அசத்தியத்துக்கும் கபடத்துக்கும் சாட்சியிடுதலும் கூடாது ஆகையால், யாதொருவேதத்தின் உண்மையை அத்தாட்சிப்படுத்தும் பொருட்டு நிச்சயமான ஒரே அற்புதம் மாத்திரஞ் செய்யப்பட்டாலும், அவ்வொன்றுமே அது தவறாத தெய்வீக வேதமென்று ஒப்பிப்பதற்குப் போதியதாய் இருக்கும். ஆகவே, எவனாவது தான் சருவேசுரனால் அனுப்பப்பட்டவனென்று கூறி, அவ்வாறு அனுப்பப்பட்டதற்கு அத்தாட்சியாகத் தீராத வியாதிகளைத் தீர்த்தும், மரித்தவர்களை உயிரோடு எழுப்பியும், இவைபோலும் பிறவற்றைச் செய்தும் வருவதை நாம் கண்டால், அவனுடைய வாக்கை நம்பவே வேண்டும். ஏனெனில், அவன் செய்யும் அற்புதங்கள் மூலமாய் சருவேசுரனே அவனுடைய போதகத்திற்குச் சாட்சியும் பிணையும்

ஆகிறார். நம்பாது விடுதலோ தேவ வாக்கை நம்பாது விடுதலை ஒக்கும்.

31. தீர்க்கதரிசனமாவது (Prophecy) சுபாவ ஏதுக்களைக் கொண்டு அறியக்கூடாத யாதொரு எதிர்கால சம்பவத்தை நிச்சயமாகவும் பிரசித்தமாகவும் முன்னேறக் கூறுதலாம். ஆதலால், எந்தத் தீர்க்கதரிசனமும் 1-வது, ஒரு சம்பவம் நிகழுமுன் கூறப்பட்டதாயும், 2-வது, கூறப்பட்ட அச்சம்பவத்தின் உண்மை சந்தேக விபரீதமின்றி நிச்சயமாய் அறியப்பட்டதாயும், 3-வது, அச்சம்பவமானது சிருட்டிக்கப்பட்ட எவ்வித வஸ்துவாலும் சுபாவ ஏதுக்களைக்கொண்டு அறியப்படாத இயல்பினையுடையதாயும் இருந்தாலன்றி மெய்யான தீர்க்கதரிசனம் அல்ல. இனி, வானசாஸ்திரி இன்னின்னகாலங்களில் கிரகணங்கள் உண்டாகும் என்றும், வைத்தியன் இன்னின்ன சமயங்களில் வியாதியானது மரணத்துக்கேதுவாய் நடக்குமென்றும், தத்துவசாஸ்திரி இன்னின்ன காலங்களில் சராசரங்களில் அதிசயங்கள் தோன்றுமென்றும் முன்னமே அறிந்து கூறுமிடத்து அது தீர்க்கதரிசனமோவெனில், அல்ல. ஏனெனில், அச்சம்பவங்கள் சுபாவ ஏதுக்களைக்கொண்டே முன்னறிந்து கூறப்படுகின்றன.

32. தீர்க்கதரிசனத்துக்குக் காரணராயிருப்பவர் சருவேசுரனேயாம். ஏனெனில், தீர்க்கதரிசனமானது சிருட்டிக்கப்பட்ட அறிவுக்கெட்டாததாகிய ஒரு எதிர்கால சம்பவத்தை அது நடக்குமுன் நிச்சயமாயறிந்து கூறுவதே ஆதலால், அது சகலத்தையும் பூரணமாய் அறிந்தவரும் இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும் நிகழ்காலமாய்க் காண்கிறவருமான சருவேசுரனாலேயே அகத்தியமாய் உண்டாதல் வேண்டும். ஐஞ்ஞூறு ஆயிரம் வருஷங்களின் பின்பு பிறந்து சீவிக்கப்போகிற மனிதருடைய சுயாதீன சித்தத்தினால் நடத்தப்படும் செயல்களை, அவைகளோடுகூடிய நுட்பமான விபரங்களோடு, விளங்கிக்கொள்ளுதல் மானிடசக்திக்குள் அடங்கியதல்ல. அன்றியும், தான் சொல்லிய யாதொரு தீர்க்கதரிசனத்தோடு வருங்கால சம்பவங்களைக் கிரமமாய் நடத்தி இசையப்பண்ண எந்தமனிதனாலும் கூடாது. சருவாதி கர்த்தரும் சருவவல்லவருமாகிய சருவேசுரனால் மாத்திரங் கூடும். ஆதலால், அவர் மாத்திரமே மெய்யான தீர்க்கதரிசனத்துக்குக் காரணராயிருக்கிறார். மெய்யான தீர்க்கதரிசனங்களின் பக்கத்தில் போலித் தீர்க்கதரிசனங்களும் உண்டு. இவைகள் 1-வது, பல சம்பவங்களுக்கும் பொதுவானவிதமாய், திட்டமில்லாமலும், உத்தேச அளவாயும் மனிதராற் செய்யப்படுங் கூற்றுக்களும்; 2-வது,



தனக்கு இயற்கையாயுள்ள கூரிய புத்தியைக்கொண்டு மானிட அறிவுக்கெட்டாத அநேக சம்பவங்களை அனுமானித்தறிந்துகொள்ளும் பிசாசினாற் செய்யப்படுங் கூற்றுக்களுமாம். ஆயினும், சருவேசுரனுடைய சுயாதீன திருவுளத்தாலும் மனிதருடைய சுயாதீன சித்தத்தாலும் உண்டாகுஞ் செயல்களையும், விசேஷமாய், இன்னும் பிறவாத மனிதர் பிற்காலத்தில் நடத்துஞ் செயல்களையும் பிசாசு நிச்சயமாய் அறிந்துகொள்ளுதல் கூடுமோவெனில், ஒருகாலுங்கூடாது என்பதும், பிசாசினாற் செய்யப்படும் தீர்க்கதரிசனங்கள் மெய்யான தீர்க்கதரிசனங்களல்லவென்று கண்டுபிடிக்க உதவுமுபாயங்களைச் சருவேசுரன் மனிதருக்குத் தந்தருளினாரென்பதும் நிச்சயமாம். பொய்களையுந் தவறுகளையும் உறுதிப்படுத்தச் சருவேசுரன் அற்புதங்களை நடத்தார் என்பதுபோலவே, தீர்க்கதரிசனங்களையும் நடத்தார் என்பது வெளிப்படை.

33. தீர்க்கதரிசனமானது எந்த வேதத்தின் பொருட்டுச் செய்யப்படுமோ அது மெய்யான தெய்வீக வேதமென்பதற்குச் சந்தேகம் இராது. ஏனெனில் 1-வது, ஒரு சம்பவம் நிகழு முன்னரே அச்சம்பவம் தீர்க்கதரிசனமாக வசனிக்கப்பட்டது என்றும் 2-வது, அச்சம்பவம் முன்கூறப்பட்டதுபோற் சரியாய் நடந்தேறினது என்றும், 3-வது, அச்சம்பவம் தீர்க்கதரிசனமாக வசனிக்கப்பட்டகாலத்தில் சருவேசுரனால் அன்றி வேறு எந்த வஸ்துவாலும் அறியக்கூடாததாய் இருந்ததென்றும், 4-வது, சம்பவமும் அதைத் தெரிவித்த தீர்க்கதரிசனமும் ஆகிய இரண்டினும் பூரண இசைவு தற்செயலாய் உண்டானதல்ல என்றும் அத்தாட்சிப்படுத்தக்கூடுமாகில், அத்தீர்க்கதரிசனத்துக்குக் காரணர் சருவேசுரன் தாமே என்பதும், அப்படிப்பட்ட தீர்க்கதரிசனத்தால் உறுதியாக்கப்பட்ட வேதமானது சருவேசுரனால் அங்கீகரிக்கப்பட்ட வேதமே என்பதும் பிரத்தியக்ஷமாம்.

# 3-ம் அதிகாரம்

## வெளிப்படுத்திய வேதத்தைப்பற்றி விசேஷமாய்ச் சொல்லியது

1-வது, யூதவேதம். 2-வது, கிறீஸ்துவேதம்.

34. சருவேசுரனால் வெளிப்படுத்தப்பெற்ற வேதம் ஒன்று இருத்தல் அவசியம் என்றும், மனிதராற் கட்டப்பட்ட பொய்ச் சமயங்களிலிருந்து தேவவேதத்தைப் பிரித்துக் காண்பிக்கும் அறிகுறிகள் எவை என்றும் இரண்டாம் அதிகாரத்திற் சொல்லப்பட்டது. இந்த மூன்றாம் அதிகாரத்திலோ, சருவேசுரன் மனிதருக்கு வெளிப்படுத்தியருளிய வேதம் எது என்று ஆராயக்கடவோம். இதனை ஆராயுமிடத்து, எல்லாக்காலங்களுக்கும் எல்லாத் தேசங்களுக்கும் பொதுவாய் விளங்குகின்றதாகிய கிறீஸ்துவேதம் ஒன்றே சருவேசுரனால் அருளப்பட்ட வேதம் என்று கண்டுபிடிக்கிறோம். உள்ளபடி, கிறீஸ்துவேதமானது உலகாரம்பந் தொட்டே இருந்துவருகின்றது. சருவேசுரன் முன்பு ஆதாமுக்கும் நோவாவுக்கும் ஆபிரகாம் முதலான அதிபிதாக்களுக்கும், பின்பு மோசேசுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் அருளிச்செய்த வெளிப்படுத்தல்களோடு, கடைசியில் சருவலோக போதகராய் இப்பூமியில் எழுந்தருளிவந்த மெய்யான தேவ மனிதனாகிய கிறீஸ்துநாதர் செய்த உலகப் பிரசித்தமான வெளிப்படுத்தல்கள் கிறீஸ்துவேதத்திலேயே அடங்கியிருக்கின்றன என்பது தெளிவு. இந்த வெவ்வேறான வெளிப்படுத்தல்களும் இவற்றால் கற்பிக்கப்படும் வேத ஆசாரங்களும் வெளிக்கோலத்திலே தம்முள் வித்தியாசப்பட்டவைகள் என்றாலும், இவற்றின் உட்பொருளோ ஒன்றேயாம். அந்த உட்பொருள் யாதெனில்: முன்பு பிதாப்பிதாக்களுக்கு வாக்குப் பண்ணப்பட்டவரும், பின்பு யூதசாதியாருடைய வரிவேதத்தால் மிகத்தெளிவாகக் குறிக்கவும் தெரிவிக்கவும்பட்டவரும், கடைசியில் சுவிசேஷ வெளிப்படுத்தலினால் சகல சனங்களும் ஆராதித்துச் சிநேகிக்கும்படியாக உலகத்துக்கு அனுப்பப்பட்டவருமாகிய மேசியாவென்னும் யேசுக்கிறீஸ்துவேயாம். ஒரே வேதத்தின் மூன்றுபடி என்னத்தகும் இந்த மூவிதவெளிப்படுத்தல்களுள், ஆதி வெளிப்படுத்தல் அல்லது இயல்வேதமானது கிறீஸ்துவேதத்தின் சாரவையான ஆரம்பமென்னப்படும். இது ஆதிமனிதனின் காலம் தொடுத்து மோசேசின் காலம்மட்டும் வழங்கிவந்தது. மோசேசு



வேதம் அல்லது வரிவேதமானது கிறீஸ்துவேதத்துக்கு ஓர் தெளிவான கிட்டிய ஆயத்தமாய் விளங்கி, யூதர்காலந்தொடுத்து யேசுக்கிறீஸ்துநாதர்காலம்மட்டும் வழங்கிவந்தது. மூன்றாவதாகிய சுவிசேஷ வெளிப்படுத்தல் அல்லது கிறீஸ்துவேதமானது இரக்ஷணியத்தின் பூரண போதகமாய் மிளிர்கின்றது. மெய்யான தேவனும் மனிதனுமாகிய யேசுநாதரே கிறீஸ்துவேதத்தைப் போதித்து, அதைத் தமது களங்கமற்ற சீவியத்தினாலும் அற்புதங்களினாலும் உறுதிப்படுத்தியருளினார். பின்பு, அவருடைய அப்போஸ்தலர்களும் இவர்களைப் பின்தொடர்ந்துவந்த போதகர்களும், அதை உலகத்தின் எல்லாத்திசைகளிலும் பரம்பச்செய்தார்கள். கிறீஸ்துவேதமே இனி உலகமுடியுமட்டும் குறைவின்றி விளங்கிக்கொண்டிருக்கும்.

35. ஆதிவேதத்தை இயல்வேதம் என்று சொல்லுமிடத்து, மனிதன்தானே, அந்த இயல்வேத அந்தஸ்தில், தான் விசுவசிக்கவேண்டிய சகல சத்தியங்களையும் அநுசரிக்கவேண்டிய சகல கற்பனைகளையும் தன்சொந்த அறிவாற் கண்டுபிடிக்கக் கூடியவனாயிருந்தான் என்று தீர்மானிக்கத்தகாது. ஏனெனில், மேலேகண்டபிரகாரம், திட்டமான தேவ வெளிப்படுத்தலின் உதவியின்றி, மனித யுத்தியினால் இயல்வேதத்துக்கடுத்த எல்லாச் சத்தியங்களையும் கற்பனைகளையும் அறிந்துகொள்ளக் கூடாது. ஆதலால், சருவேசுரன் மனிதர் தங்கள் சுபாவ அறிவாற் தம்மை அறிந்துகொள்ளுந்தனையும் காத்திராமல், ஆரம்பத்திற்றானே ஒரு தெளிவான வெளிப்படுத்தலால் ஆதிவேதத்தை அவர்களுக்குத் தெரிவித்தருளினார். எவ்வாறெனில், அவர் எல்லாப் படைப்புகளுக்கும், விசேஷமாய் மனிதருக்கும் சிருட்டிகர்த்தர் தாமே என்றும், தாமே சகலத்தையுங் காப்பாற்றி நடத்துபவர் என்றும், எல்லாவற்றுக்கும் ஏகநாயகர் என்றும், கட்டளைகளை ஏற்படுத்தும் அதிபதியென்றும், தருமத்துக்குச் சம்பாவனையும் அதருமத்துக்கு ஆக்கினையும் இடுபவர் என்றும் நம்முடைய ஆதி பிதாமாதாக்களாகிய ஆதாம் ஏவாளுக்கு உணர்த்தியருளினார். மேலும், இவர்கள் தமது சாயலாக உண்டாக்கப்பட்டவர்கள் என்றும், தேவ ஆராதனை முதலான வழிபாடுகளைச் சிருட்டிக்கப்பட்ட எந்த வஸ்துவுக்குஞ் செய்யாமல் தமக்கு மாத்திரமே செய்யவேண்டும் என்றும் போதித்தருளினார். ஆகவே, ஏகரும் நித்தியரும் சிருட்டிகர்த்தருமாகிய சருவேசுரன் ஒருவர் இருக்கிறார் என்பதும், அவர் தமது தேவாதீனத்தால் சகலத்தையும் ஆண்டு நடத்துகிறார் என்பதும், அவருக்கு ஆராதனை செலுத்தவேண்டும் என்பதும், தேவதூதரும் பிசாசுகளும் உண்டு

என்பதும், மனிதன் பாவத்தால் கெட்டுப் போனான் என்பதும், அவன்மூலமாய் மற்றெல்லா மனிதரும் நித்தியகேட்டுக்கு உள்ளானார் என்பதும், உலகமீட்பர் எழுந்தருளிவருவார் என்பதும், மறுமைச் சீவியம் உண்டென்பதுமே ஆதிவேதத்தின் பிரதான சத்தியங்கள் எனப்படும். இச் சத்தியங்கள் காலாந்தரத்தில் அநேக சாதியாருக்குள்ளே அஞ்ஞானத்தினாலும் ஆசாபாசங்களினாலும் மாறுண்டுபோயின என்றாலும், உலகத்திலுள்ள எல்லாச் சாதிகளிடத்திலும் இவைகள் முன்னொருகாலம் வழங்கிக்கொண்டு வந்தன என்பதற்கு அநேக அடையாளங்களை இன்றுங் காணலாம். இவ்வடையாளங்கள் எல்லாம் ஆதியிலே ஓரேயொருவேதம் சருவேசுரனால் மனிதருக்குத் தரப்பட்டதென்பதற்குப் பலத்த அத்தாட்சிகளாம். இயல்வேதமானது சுபாவப்பிரமாணங்களை அன்றி, ஓய்வுநாளை அனுசரித்தல், பலியிடுதல் முதலான திட்டமான கற்பனைகளையும் அடக்கியிருந்ததென்று தெளிந்துகொள்ளத்தகும்.

இயல்வேதம் என்று சொல்லப்படுகிற ஆதிவேதத்தைக்குறித்து இந்தமட்டும் சொன்னதுபோதும். இனி, வரிவேதமாகிய யூதவேதத்தையும், அருள்வேதமாகிய கிறீஸ்துவேதத்தையும்பற்றிச் சற்று விரிவாகச் சொல்லக்கடவோம்.

---

## 1-ம் பிரிவு

### யூதவேதத்தின் பேரில்

36. யூதவேதமென்பது, சருவேசுரன் மோசேசு என்பவர் மூலமாக எபிரேய சாதியாருக்கு அருளிச்செய்த வேதமாம். யூதவேதத்திற்கு வரிவேதம் என்றும் பெயர். இயல்வேதமானது அறியாமையாலும் பாவ அக்கிரமங்களாலும் உலகத்திற் படிப்படியாய் மாறுண்டுபோனதைச் சருவேசுரன் கண்டு, விரிவான ஒரு புதிய வெளிப்படுத்தலைச் செய்யவும், அது சுத்தமாகவும் அழியாதவிதமாகவும் மனிதருக்குள் பாதுகாக்கப்பட்டு வரவும் திருவுளமானார். ஆதலால், உலகத்திலுள்ள சகல சாதியாருக்குள்ளும் ஒரு சாதியாரைத் தெரிந்தெடுத்து, அவர்களைத் தமது விசேஷ பாதுகாவலில் வைத்து அஞ்ஞான அந்தகாரக்கேடுகளினின்றும் காப்பாற்றியருளினார். அந்தச் சாதியாருக்கு எபிரேயரென்றும், இசிறவேலரென்றும், யூதர் என்றும் பெயர். அவர்களுக்குப் பிதாவாயிருந்தவர் ஆபிரகாம் என்பவரே. சருவேசுரன் தமக்கு மிகப்பிரீதியான இந்த யூதசாதியாரிடத்திற்றானே வரிவேதத்தையும் விசேஷமாக உலகமீட்பராகிய மேசியாவென்பவரின் பிறப்பைப்பற்றிய வாக்குத்தத்தத்தையும் ஒப்பித்தருளினார். ஆதலால், யூதவேதமானது, மேசியாவென்னும் உலகமீட்பர் பிறப்பாரென்னும் வாக்குத்தத்தத்தை அவர் பிறக்குந்தனையும் அழியாதமுறையோடு பாரம்பரையாக வைத்துக் காப்பாற்றியபின், அவர் பிறந்தவுடனேதான் வழக்கு ஒழிந்து அழிந்துபோக நியமிக்கப்பட்டிருந்தது.



37. சருவேசுரன் தம்முடைய பிரசையாகிய யூதசாதியாருக்கு மோசேசுவைச் சர்வ அதிகாரியாக நியமித்து அவர்மூலமாகத் தாந்தாமே அவர்களை ஆண்டு தமது கற்பனைகளை அவர்களுக்குக் கொடுத்துக்கொண்டுவந்தார். மோசேசுவோ எனில், சருவேசுரனால் அருளிச்செய்யப்பட்ட சகல சத்தியங்களையும் கற்பனைகளையும் சனங்களின் நிமித்தம் நடத்தப்பட்ட அற்புதங்களையும் மாறாதமுறையாய் பின்சந்தானங்கள் எல்லாம் அறிந்து அநுசரிக்கும்பொருட்டு, அவைகள் அனைத்தையும் யூதசாதியாரின் கண்முன்பாகவே எழுதிப் புஸ்தகமாக்கினார். அவர் ஆதிகாலங்களில் உள்ளபடி நடந்த விசேஷ சங்கதிகளையும், தாம் எபிரேயசாதியாருக்குத் தலைவராக நியமிக்கப்பட்ட நாள்முதல் தமது மரணமட்டும் நடந்த சம்பவங்களையும், ஐந்து புஸ்தகங்களாகச் சேர்த்துவைத்தார். அவைகளுக்கு மோசேசின் பஞ்சாகமம் (The Pentateuch) என்று பெயர். வேதாகமத்தின் முதற்பங்குகளாகிய அவைகள் முறையே ஆதி ஆகமம், யாத்திரை ஆகமம், லேவியர் ஆகமம், எண் ஆகமம், உபாகமம் என்றும் சொல்லப்படும். யூதர் பஞ்சாகம நூல்களை **நியாயப்பிரமாணம்** (Law) என்று அழைக்கிறார்கள். ஏனெனில் சருவேசுரன் மோசேசு மூலமாகத் தமது சனத்திற்கு அருளிச்செய்த கட்டளைச்சட்டமே அந்நூல்களின் மிகவும் முக்கியமான பாகம். அவர் மோசேசு மூலமாக தமது நியாயப்பிரமாணத்தை யூதருக்குப் பிரசித்தப்படுத்தினதின் நிமித்தம், இவருக்கு, யூதசனத்தின் சட்டநிரூபணர் என்னும் பெயர் உண்டாயிற்று.

மோசேசு மரித்தபின்பு, வேறு நூலாசிரியர்கள் தேவஏவுதல் பெற்று யூதசனத்தின் சரித்திரத்தை முறையாய் எழுதிவைத்தார்கள். சருவேசுரன் காலத்திற்குக்காலம் தீர்க்கதரிசிகளைத் தோற்றுவித்து, அவர்களைக்கொண்டு தமது திருவுளத்தையும் வாக்குத்தத்தங்களையும் மிரட்டல்களையும் சனங்களுக்கு அறிவித்துக்கொண்டு வந்தார். அன்றியும், அத்தீர்க்கதரிசிகளே உலகரக்ஷகரைப்பற்றிய விசுவாசமானது சனங்களுக்குள்ளே அழிந்துபடாதபடி காப்பாற்

றப்படவும், அவருடைய இலக்ஷணங்களை விரிவாய் எழுதிக் காண்பித்து அவர் தீவிரமாய் எழுந்தருளிவருவாரென்று சனங்கள் காத்துக்கொண்டிருக்கச்செய்யவும் எழுப்பப்பட்டோரானூர்கள்.

முதன்முதல் தேவப்பிரசையாகிய எபிரேய சனங்களின் போதனைக்காக இயற்றப்பட்ட மோசேசின் ஆகமங்களும், சரித்திர நூல், தீர்க்கதரிசன நூல், நீதிநூல், ஞான நூல் ஆகிய மற்ற வேதாகமங்களும் **பழைய ஏற்பாடு** (Old Testament) என்று பெயர் பெறும். ஏற்பாடென்பதும் உடன்படிக்கை என்பதும் ஒன்று. ஆகவே சருவேசுரன் எபிரேயரோடு செய்தருளிய தேவ உடன்படிக்கையும் (Covenant) அவர்களுக்குக் கொடுத்த கற்பனைகளும் வாக்குத்தத்தங்களுமாகிய எல்லாம் பழைய ஏற்பாட்டில் அடங்கும் என்று அறியத்தகும்.

யூதவேதத்தின் பிரமாணங்களும் ஒழுங்குகளுமாகிய முறை எல்லாம் பழைய ஏற்பாட்டு நூல்களின் உறுதிப்பாட்டிற்றங்கியிருக்கின்றதென்பது மேலேகூறியவைகளாற் தெளிவாய்க் காண்பிக்கப்படுகின்றது. ஆதலால் 1-வது, அந்நூல்களின் உண்மையை நிச்சயப்படுத்துவதும், 2-வது, யூதவேதமானது தெய்வீகவேதமென்பதற்குரிய அடையாளங்கள் அந்நூல்களில் உண்டோ என்று விசாரிப்பதும் அவசியமாம்.

## I. பழைய ஏற்பாட்டின் எல்லா நூல்களும் விசேஷமாய் மோசேசின் பஞ்சாகமமும் உண்மையானவை என்பதின்பேரில்

38. எந்நூலாவது பொதுவிலே உண்மையானது என்று ஒப்பிப்பதற்கு மூன்று காரியம் வேண்டப்படும். 1-வது, அந்நூல் அதற்கு ஆக்கியோன் என்று குறிக்கப்பட்டவராலுங் குறிக்கப்பட்டகாலத்திலும் செய்து பிரசித்தப்படுத்தப்பட்டது என்பது நிச்சயமாயிருத்தல் வேண்டும். 2-வது, அந்நூல் இயற்றப்பட்டகாலந்தொட்டு யாதொரு விசேஷ மாற்றமும் அடையவில்லை என்பது நிச்சயமாயிருத்தல்வேண்டும். 3-வது, அந்நூலை ஆக்கியோன் உண்மையையே கூறினுன் என்பது நிச்சயமாயிருத்தல் வேண்டும். அதாவது: அந்நூலாசிரியன் தான் விவரிக்குஞ் சம்பவங்களை ஐயந்திரிபின்றி அறிந்தவனுகவும், தான் பிரசித்தப்படுத்துஞ் சங்கதிகளிற் பிறரை அணுப்பாதவனுகவும் இருத்தல் வேண்டும். இம்மூன்று அத்தாட்சிகளும் பஞ்சாகமத்துக்கும் பழைய ஏற்பாட்டின் மற்ற எல்லா நூல்களுக்கும் பூரணமாயுண்டு.



1. பஞ்சாகமமும் பழைய ஏற்பாட்டின் மற்ற நூல்களும் அவைகளை ஆக்கியோரென்று குறிக்கப்பட்டவர்களாலும் குறிக்கப்பட்டகாலத்திலுமே எழுதிப் பிரசித்தப்படுத்தப்பட்டவைகள்.

39. பஞ்சாகமத்தை எழுதிவைத்தவர் மோசேசு என்பவர்தாம் என்று எப்போதுங் கைக்கொள்ளப்பட்டுவந்திருக்கிறது. யூதசாதியாரோவெனில், தங்களுக்குத் தலைவராயிருந்தவரும் தங்கள் பிரமாணங்களை ஏற்படுத்தினவரும் மோசேசு என்றும், தங்கள் சரித்திரம் இராச்சியமுறை வேதச் சட்டங்கள் ஆகியவைகளை அடக்கிய நூல்களாகிய பஞ்சாகமத்தை எழுதிப் பிரசித்தப்படுத்தினவரும் மோசேசுவேயன்றி வேறு ஒருவரல்லவென்றும், தாங்கள் உற்பத்தியானகாலந்தொடுத்து மாருத பரம்பரைமுறையோடு ஒருவாய்ப்படச் சாதித்துக்கொண்டு வந்தார்கள். மேலும், அந்நூல்கள் தங்களுக்கு மிகவும் அவமானமான கண்டனங்களை அடக்கியதாயிருந்தாலும், தங்களை ஓர் நன்றிகெட்ட சாதியென்றும் அமைச்சலில்லாத மூர்க்கமுள்ள சனமென்றும் தங்கள் தலைவரோடு எப்போதும் விரோதித்தெழும்புங் குணமுள்ளவர்கள் என்றும் அடிக்கடி கூறுகிறதாயிருந்தாலும், அந்நூலையுண்டாக்கினவர் தங்கள் தலைவரான மோசேசுவே என்னும் இடையருத பாரம்பரையை மறுக்கவாவது, ஒரு சிறிதேனும் மாற்றவாவது யூதசாதியார் ஒருகாலுந் துணிந்ததேயில்லை.

பஞ்சாகமம் உள்ளபடியே மோசேசுவால் எழுதப்படாமல் அவருக்கு நெடுங்காலத்தின்பின் வந்த வேறு ஒருவரால் உண்டாக்கப்பட்டதாயிருந்தால், அதை யூதசாதியார் எல்லாரும் தங்கள் முதற் தலைவருஞ் சட்டநிரூபணருமாகிய மோசேசுவாலே உண்டாக்கப்பட்டதை அங்கீகரித்தும், மிகுந்த வணக்கத்தோடு காப்பாற்றிக் கொண்டும் வருவார்களா? ஒருபோதுமில்லை. அன்றியும், தாங்கள் அடிக்கடி வாசித்துக்கொண்டுவரும் பொருட்டு எப்போதும் கையில் வைத்திருந்த நூல் இன்னுராலேயே உண்டாக்கப்பட்டது என்பதை அவர்கள் அறியாதிருந்தார்கள் என்று சொல்லக் கூடுமோ? ஒருபோதுங் கூடாது. ஆதலால் யூதசாதியார் தங்கள் பரம்பரையின்படி ஒருவாய்ப்பட நிச்சயிப்பதுபோல மோசேசுவே பஞ்சாகமத்தைச் செய்தவர் என்பது தெளிவாயிருக்கின்றது.

பழைய ஏற்பாட்டின் மற்ற எல்லா நூல்களும் அப்படியே உண்மையானவை. அவைகளுக்கு ஆக்கியோர் என்று குறிக்கப்பட்டவர்களாலும் குறிக்கப்பட்ட காலத்திலுமே அவைகள் எழுதிப் பிரசரிக்கப்பட்டவைகள் என்பதற்கு அவைகள் கூறுஞ் சம்பவங்களிலுள்ள பூரண பொருத்தமும் திறம்பாத சாட்சி பகருகின்றது.

அப்பொருத்தம் எத்தன்மையானதோவெனில், அந்நூல்களுள் ஒவ்வொன்றிலும் விபரிக்கப்பட்டிருக்கும் சம்பவங்கள் எல்லாம், முன்போகும் நூல்களில் எடுத்துக் கூறப்பட்டிருக்கும் சம்பவங்களின் உண்மைக்கு ஓர் அத்தாட்சியாகவும், பின்வரும் நூல்களின் சம்பவங்களுக்குச் செலுத்தும் ஓர் வழியாகவும் விளங்குகின்றன. அப்படியிருக்க, அந்நூல்களுள் ஒன்றாவது குறிக்கப்பட்ட காலத்திற்றானே இயற்றப்படாமற் பிற்காலத்திலே செய்யப்பட்டதெனில் முன்சொன்ன பொருத்தம் நீங்கி எல்லா நூல்களின் காலவரையறையும் மாறுபட்டு மயங்கும். மயங்கவே, பஞ்சாகமம் முதல் மற்றெல்லா ஆகமங்களும் பின்னைக்காலத்தில் ஓர் புரட்டனால்செய்து வெளிப்படுத்தப்பட்டன என்று தீர்மானிக்கவேண்டும். அப்படித் தீர்மானித்தலோ கூடாது. ஆதலால், ஆக்கியோரும் சம்பவங்களும் காலமுமாகிய எல்லாம் ஒரு சிறிதேனும் மாறுபடாத பூரணப் பொருத்தத்தோடு விளங்கும் நூற்பரம்பரையை நோக்குமிடத்து அந்நூல்கள் எல்லாங் குறிக்கப்பட்ட ஆசிரியராலுங் குறிக்கப்பட்ட காலங்களிலும் செய்து பிரசித்தமாக்கப்பட்டன என்றே அவசியமாய் ஒத்துக்கொள்ளவேண்டும்.

II. **பஞ்சாகமமும் பழைய ஏற்பாட்டின் மற்ற நூல்களும் யாதொரு விசேஷமாற்றமும் அடையாதவைகள்.**

40. பஞ்சாகமத்தின் சரித்திர சம்பவ விபரிப்பிலாவது, விசுவாசத்தையும் நல்லொழுக்கத்தையுமடுத்த விஷயங்களிலாவது எப்போதாவது எவ்வித விசேஷமாற்றமுமடைந்திருத்தல் கூடாது. ஏனெனில், யூதசாதியாருடைய உற்பத்தியையும், அவர்களுடைய திருவேதத்தையும், இராசாங்க முறைமையையும், முன்னோரின் சரித்திரங்களையும் விசேஷ சுதந்தரங்களையும், வழக்கங்களையும், அவர்களுக்காகவும் அவர்கள் கண்முன்பாகவுஞ் செய்யப்பட்ட அற்புதங்களையும் பஞ்சாகமம் அடக்கியிருந்தபடியால், அவர்கள் அவைகளைத் தங்களுக்கு அருமையான நூல்களாகக் கைக்கொண்டு தங்களுடைய ஒவ்வொரு குடும்பத்திலும் பூச்சியமாய்வைத்துக் காப்பாற்றித் தினந்தோறும் அதில் ஒவ்வொருபகுதியை வாசித்துக்கொண்டு வந்தார்கள். அன்றியும், அதில் ஒரு பிரதி, முன்பு உடன்படிக்கைப் பேழையிலும் பின்பு தேவாலயத்திலும் வைத்துக் காப்பாற்றவும், ஏழுவருஷத்துக்கு ஒருதரம் பிரசித்தமாக வாசிக்கவும்பட்டு வந்தது. மேலும் அக்கால யூதசனம் எல்லாம் அந்நூல்களையும் அதில் எழுதப்பட்டிருந்த சகல சம்பவங்களையும் பூரணமாய் அறிந்திருந்தது என்பதற்குச் சந்தேகமில்லை. அப்படியிருக்க, அதில் யாதேனுமொரு விசேஷ மாற்றத்தை எவனாவது வருவிக்கத் துணிந்



தான் என்று எண்ணுவது எப்படி ? யூதருக்குள் எத்தனை குடும்பங்கள் உண்டோ அத்தனையாகப் பெருகியிருந்த பிரதிகளை எல்லாம் ஒருவன் ஒருமிக்கச்சேர்த்து, ஒருவருக்குந் தெரியாமல் எல்லாவற்றிலும் ஒரே தன்மையான மாற்றங்களைச் செய்திருக்கலாம் என்று உத்தேசிக்கவுங் கூடுமோ ? ஒருபோதுங் கூடாது. ஆதலால், பஞ்சாகமத்தில் யாதொரு விசேஷமாற்றமுஞ் செய்யப்படவில்லை என்று தீர்மானிக்கக்கடவோம். அன்றியும், பஞ்சாகமத்துக்கும் மற்ற ஆகமங்களுக்கும் இடையே மிகப்பெரிதான ஒற்றுமைநயம் இருப்பதால், பஞ்சாகமத்தில் ஒருவன் உண்டாக்கத் துணியும் விசேஷ மாற்றங்களை எல்லாம் மற்ற ஆகமநூல்களிலும், மற்ற ஆகமங்களில் உண்டாக்கத்துணியும் விசேஷ மாற்றங்களை எல்லாம் பஞ்சாகமத்திலும் வருவித்திருக்கவேண்டும். இதுவுங் கூடாது ஆகையால், பழைய ஏற்பாட்டு நூல்கள் எல்லாம் யாதொரு விசேஷமாற்றமும் அடையாதவைகளேயாம் என்பது பிரத்தியக்ஷம்.

III. **பஞ்சாகமத்திலும் மற்ற ஆகமங்களிலும் விபரிக்கப்பட்ட சம்பவங்கள் எல்லாம் மெய்யானவைகள்.**

41. பஞ்சாகமத்தை எழுதி வைத்தவராகிய மோசேசு ஆதியாகமத்திலாவது, மற்ற நாலு ஆகமங்களிலாவது, தாம் விபரிக்கும் சம்பவங்கள் எல்லாவற்றையும் முழுதும் நிச்சயமாய் அறியக்கூடியவராயிருந்தார். ஆதியாகமத்திலே தாம் எழுதிய சம்பவங்களைப் பாரம்பரிய மூலமாய் அறிந்துகொள்ளுதல் அவருக்கு மிகவும் எளிதாயிருந்தது. அச்சம்பவங்களைச் சருவேசுரன் தாமே தெளிவித்தருளியவர்களிடத்திலிருந்தாவது, அவைகளைக் கண்ணாரக் கண்டவர்களிடத்திலிருந்தாவது, மோசேசு நன்றாய் அறிந்துகொள்ளக்கூடியவராயிருந்தார். ஏனெனில், அவர்களுக்கும் இவருக்கும் இடையே கடந்துபோன தலைமுறைகள் சிலவேயாம். அன்றியும், அச்சம்பவங்களின் ஞாபகமானது பாடல்களாலும் இடங்களின் ஆட்களின் காரணப் பெயர்களாலும் சுருக்கமான கல்வெட்டுகளாலுங் காப்பாற்றப்பட்டிருந்தது. மற்ற நாலு புஸ்தகங்களிலும் சொல்லப்பட்ட சம்பவங்களைப்பற்றியோவெனில், அவைகளெல்லாம் பிரசித்தமும் புலப்பாடும் காத்திரமுமான செயல்களாயிருந்தன. உதாரணம்: பார்வோன் அரசன் முன்னிலையிற் செய்யப்பட்ட அற்புதங்களும், செங்கடலைக் கடந்ததும், வனாந்தரத்தில் மன்னாபொழிந்ததும் பிறவுமாம். இச்சம்பவங்களுமோ தம்மாலும், தம் கண்முன்பாகவும் நடத்தப்பட்டவைகள் ஆகையால் இவைகளை மோசேசு அறிந்திருந்தார் என்று சொல்லவும் வேண்டுமோ ? ஆதலால் மோசேசு தாம் நன்றாயறிந்திருந்த சம்பவங்களையோ பஞ்

சாகமத்தில் எழுதிவைத்தார் என்பது நிச்சயம். இனி, மோசேசு பஞ்சாகமத்தை எழுதுவதில் பிறரை அனுப்பவில்லையோ எனில், இல்லை என்பதற்கு அவருடைய நேர்மையும் தாழ்ச்சியும் அடக்கமும் அசத்தியத்தின்மேல் வெறுப்புமுள்ள ஒழுக்கம் தகுந்த சாட்சி கூறுகின்றது. அவருடைய போதகமோ தருமநெறியையும் பரிசுத்தத்தையும் அடக்கியது என்றும் தேவபயத்தை உண்டாக்குவதென்றுங் காணாதவர் யார்.

அன்றியும், மோசேசு தமது சரித்திர பாகங்களில் அசத்தியமான சங்கதிகளை விபரித்துப் பிறரை அனுப்பக்கருதியிருந்தாலும் அவருடைய கருத்து நிறைவேறுமோ? ஒருபோதும் நிறைவேறாது. ஏனெனில், நீங்கள் செங்கடலுக்கூடே திறக்கப்பட்ட பாதையிலே கால் நனையாமல் நடந்தீர்கள், நாற்பதுவருஷகாலமாக வனாந்தரத்தில் மன்னா என்னும் ஆச்சரியமான உணவாற் போஷிக்கப்பட்டு வந்தீர்கள் என்று, இவை முதலான மிக ஆச்சரியமான சம்பவங்களை மோசேசு யூதருக்குச் சொல்லும்போது, அவைகள் நடவாத சம்பவங்கள் என்றால் யூதர் அவைகளை நம்புவார்களா? மோசேசை ஒரு அனுப்பியென்று நிந்தியார்களா? அவ்வளவு தப்பறைகள் நிறைந்த ஒரு நூலைத் துவேஷித்துத் தள்ளிவிடுவார்களல்லவா? ஆனால், யூதர் அவ்வாறு செய்யாமல் பஞ்சாகமத்தை ஒரு தெய்வீகமான நூலென்று பூச்சியத்தோடு அங்கீகரித்துக் கொண்டபோதே, அதிற்கூறப்பட்ட சம்பவங்கள் எல்லாவற்றையும் மெய்யென்று ஒத்துக்கொண்டார்கள் என்பது தானாய் விளங்கும். ஆதலால், மோசேசு தமது நூல்களாற் பிறரை அனுப்பினவரல்ல. மேலும், சருவேசுரன் மோசேசு மூலமாகச் செய்த மெய்யான அற்புதங்களும் இவருடைய நூலின் உண்மையை உறுதிப்படுத்தும் அசையாத அத்தாட்சிகளாம். பஞ்சாகமத்தின் உண்மையை உருசுப்படுத்தும்படி மேலேயெடுத்துக்கூறிய நியாயங்கள் பழைய ஏற்பாட்டின் மற்ற நூல்களுக்கும் பொருந்துமென்றும், அந்நூல்களின் உண்மையை ஒரு சிறிதாவது குறைக்கக்கூடிய எதிர் நியாயங்களில்லையென்றும் உணர்ந்துகொள்க.

## II. யூதவேதம் தெய்வீகமானது என்பதற்குரிய அத்தாட்சிகளின் பேரில்

I. அற்புதங்களாற்பெறப்படும் அத்தாட்சிகள்

42. சருவேசுரன் யூதருடைய வேதத்தை ஏற்படுத்திப் பரிபாலிக்கும் பொருட்டு அநேக அற்புதங்களை நடத்தியருளினார் என்று பழைய ஏற்பாட்டு நூல்கள் தெளிவாய்ச் சாட்சியிடுகின்றன.



அவ்வற்புதங்களுட் சில வருமாறு:—எகிப்துதேசத்தில் வாதைகள் நடந்ததும், செங்கடலுக்கூடே இசிறவேலர் பிரயாணஞ்செய்ததும், வனாந்தரத்திலே மன்னா என்னும் அப்பம் பொழிந்ததும் பிறவுமாம். மோசேசுவாலும் அவர் முன்னிலையிலும் இயற்றப்பட்ட இந்த அற்புதங்கள் எல்லாம் என்னத்தை அத்தாட்சிப்படுத்துகின்றன? யூதருடைய வேதப்பிரமாணங்களைப் பிரசித்தப்படுத்தினவராகிய மோசேசு சருவேசுரனுடைய முழு அநுமதியோடேயே அப்படிச் செய்தார் என்பதை அத்தாட்சிப்படுத்துகின்றன.

மோசேசு மரித்தபின்னும் அற்புதங்கள் அற்றுப்போகவில்லை. யூதசாதியாருடைய காலமுழுவதிலும் அற்புதங்கள் ஒன்றின்பின் ஒன்றாகத்தொடர்ந்து, சருவேசுரன் தாமே தமது சனத்தை ஆண்டு நடத்திக்கொண்டிருந்தார் என்பதைத் தெளிவாய்க் காண்பிக்கின்றன. யோசுவா என்பவர் கற்பித்த மாத்திரத்தில் யோர்தான் என்னும் மகா நதியானது பாயாது ஒழிந்தது; சூரியன் படாது தரித்துநின்றுவிட்டது. மீளவும், யூதரோடு யுத்தஞ்செய்து அவர்களை நிர்மூலமாக்க நினைத்த செனெக்கெரிப் என்பவனுடைய சேனையில் ஒரு லக்ஷத்தெண்பத்தையாயிரம் பேரை சருவேசுரனாலனுப்பப்பட்ட ஒரு தேவதூதன் ஒரு இரவிற்றானே சங்கரித்துச் சத்துருக்களைப் புறங்காட்டச்செய்தார். இவ்வற்புதங்களும் இவைபோலும் எண்ணிறந்தவைகளும் மெய்யான அற்புதங்களுக்குரிய குணங்களைப் பூண்டிருக்கின்றன. எவ்வாறெனில், இவைகள் 1-வது. கண்டோர் சகலருடையவும் புலன்களுக்குத் தோற்றியவைகளாயிருந்தன. 2-வது. இயற்கைவிதிகள் சகலத்தையும் கடந்தவைகளாயிருந்தன. 3-வது. இச்சம்பவங்கள் எவ்வித சந்தேகத்துக்கும் இடம்வையாத நிச்சயமுள்ளவைகளாயுமிருந்தன. ஆகையால், இவைகள் மெய்யான அற்புதங்களேயாமென அறிக.

II. தீர்க்கதரிசனங்களாற்பெறப்படும் அத்தாட்சிகள்

43. பழைய ஏற்பாட்டு நூல்கள் அநேக தீர்க்கதரிசனங்களை அடக்கியிருக்கின்றன. அவைகளுட்சில மோசேசு பிறக்குமுன் வசனிக்கப்பட்டவை. அவைகள் ஆபிரகாமுக்குச் செய்யப்பட்ட வாக்குத்தத்தங்களையும், அவருடைய தொகையான சந்ததியையும், எகிப்துதேசத்தின் அடிமைத்தனத்தையும், வாக்குத்தத்த பூமியை யாக்கோபின் சந்ததியார் சுதந்தரித்துக்கொள்ளுவதையும் அடுத்தவைகளாம். சில மோசேசுவாலேயே பிரசித்தப்படுத்தப்பட்டன. இவைகள் எகிப்துதேசத்திலிருந்து புறப்படும்போது இருபதுவயதும் அதற்கு மேற்படவுமுள்ள இசிறவேல் சனங்களில் யோசுவாவும் காலேபும் நீங்க வேறொருவரும் வாக்குத்தத்த பூமி

யிற் பிரவேசிக்கமாட்டார் என்பதையும், வேதப்பிரமாணங்களை அநுசரிப்பவர்களுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்களையும், அநுசரியாதவர்களுக்குக் கிடைக்கும் சாபங்களையும் பற்றியவைகளாம். சிலவோவெனில், மோசேசு மரித்தபின் வேறு தீர்க்கதரிசிகளால் வசனிக்கப்பட்டவை. உதாரணமாக: இசிறவேலர் பாபிலோனில் அடிமைகளாயிருப்பார்கள் என்பதும், அவ்வடிமைத்தனத்தில் எழுபது வருஷங்கள் செல்லுமென்பதும், இருநூறு வருஷங்களின்பின் பிறக்கும் பேர்சிய அரசனாகிய சீரூஸ் என்பவனால் அவர்கள் சிறைமீட்கப்படுவார்கள் என்பதும், நினிவேயும் பாபிலோனுமாகிய இருபட்டினங்களுஞ் சங்கரிக்கப்படுமென்பதும் பிறவுமாம்.

இவைகளில் மெய்யான தீர்க்கதரிசனங்களுக்குரிய குணங்கள் எல்லாம் குறைவின்றிக் காணப்படுகின்றன. 1-வது, குறித்த சம்பவங்கள் எல்லாம் முன்னேறவே அறிந்து தெளிவாய்க் கூறப்பட்டன. 2-வது, சம்பவங்கள் எல்லாம் முன்னேற உரைக்கப்பட்ட பிரகாரமே சுமுத்திரையாய் நடந்தேறின. 3-வது, அவைகள் சிருட்டிக்கப்பட்ட எந்த அறிவுள்ள வஸ்துவாலும் முன்னறியப்படக்கூடாதவைகளாயிருந்தன. இத்தொகைப்பட்ட சம்பவங்களும், இவற்றின் விபரங்களாகிய காலமும் இடமும் அநேக யுகங்களின் முன் கூறப்பட்ட தீர்க்கதரிசனங்களோடு திட்டமாய்ப் பொருந்தியிருப்பது தற்செயலின்காரியம் என்று சாதித்தல் ஒருபோதுங் கூடாது. ஆகையால், இவை எல்லாம் இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும் நிகழ்காலமாக உடையவராகிய சருவேசுரனால் நடந்த மெய்யான தீர்க்கதரிசனங்களேயாம். ஆதலால், யூதவேதமானது சருவேசுரனாலேயே ஸ்தாபிக்கவும் பரிபாலிக்கவும்பட்டுவந்தது என்பதற்கு மெய்யான அற்புதங்கள் அத்தாட்சியாயிருப்பதுபோல மெய்யான தீர்க்கதரிசனங்களும் அத்தாட்சியாயிருக்கின்றன என்று தீர்மானிக்கத்தகும்.

**44.** அற்புதங்களும் தீர்க்கதரிசனங்களுமாகியவற்றாற் பெறப்படும் அத்தாட்சிகளேயன்றி யூதசாதியாரின் ஏற்பாடு, அவர்களுடைய இராசாங்கப் பிரமாணங்கள் வைதீகப்பிரமாணங்கள், அவர்களது தருமநூலின் பரிசுத்தம் ஆதியவைகளிலிருந்தும் அநேக அத்தாட்சிகளையெடுத்துக் காண்பிக்கலாம். யூதசாதியாரின் ஏற்பாடு முதலாகச் சொல்லப்பட்டவைகள் எல்லாம் சருவேசுரன்தாமே யூதவேதத்தை அதாவது வரிவேதத்தை தமது சருவ ஞானத்தினாலும் வல்லமையினாலும் ஸ்தாபித்துப் பரிபாலித்து வந்தார் என்பதைத் தெளிவாய் ஒப்பிக்கின்றன.



**45.** தேவவழிபாட்டைச் சுத்தமாய்க் காப்பாற்றவும், உலகரக்ஷகரைப்பற்றிய வாக்குத்தத்தத்தைத் தலைமுறை தலைமுறையாக நிலைநிறுத்தவும், தீர்க்கதரிசிகளால் முன் கூறப்பட்ட தேவ சட்ட நிரூபணராகிய யேசுநாதரால் பிரசித்தப்படுத்தப்படும் அருள்வேதத்திற்கு ஓர் ஆரம்பமாக விளங்கவுமே வரிவேதமும் அதன் கற்பனைகளும் விசேஷமாய் நியமிக்கப்பட்டிருந்தன. ஆதலால், அந்த வரிவேதமானது சிலகாலமாகமாத்திரம் நிலைநின்று சகல சாதியாராலும் காத்திருக்கப்பட்ட உலகரக்ஷகர் தோன்றினவுடனே ஒழிந்துபோகவேண்டிய தன்மையுடையதாய் இருந்தது. கிறீஸ்துவேதந் தோன்றினவுடனே வரிவேதமானது வழங்காமல் நின்றுவிடும் இயல்பினையுடையதாயிருந்தது என்பதினால், அவ்வேதத்தின் போதகத்தையும் நல்லொழுக்கங்களையும் அடுத்த பகுதியும் மறைந்துபோக வேண்டியது என்று கருதத் தகாது. ஏனெனில், வேதபோதகம் முதலானவைகள் சருவேசுரனுடையவும் சிருட்டிகளுடையவும் இயற்கையைப் பொறுத்தவைகளாய் இருக்கின்றமையால் ஒருபோதும் மாறாதவைகளாம். சடங்கு முதலிய ஏற்பாடுகளோ காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்ப மாறத்தக்கவைகள். ஆதலால், வரிவேதமானது வேதபோதகத்தின் மட்டில் அல்ல, யூதசாதியொன்றுக்குமே சொந்தமாகிய நீதியையும் சடங்குகளையும் அடுத்தபிரமாணங்களின் மட்டில் மாத்திரம் அழிந்துபோக வேண்டியதாயிருந்தது. அன்றியும், தீர்க்கதரிசிகளின் வசனப்படி, பழைய வேதத்திற்கும் அதின் ஏற்பாடுகளுக்கும் பதிலாக ஒரு புதிய சட்ட நிரூபணரும் ஒரு புதிய ஏற்பாடும் ஒரு புதிய குருத்துவமும் ஒரு புதிய பலியும் உண்டாக்கப்பட வேண்டியவைகளாயிருந்தன. உலகத்திலுள்ள எல்லாச் சாதிகளிலுமிருந்து எடுத்துச் சேர்க்கப்பட்ட ஒரு புதிய சனமானது யூதசனத்துக்குப் பதிலாக நியமிக்கப்படுமென்று மோசேசுவும் தீர்க்கதரிசிகளும் ஏலவே வசனித்தும் இருந்தார்கள்.

---

## 2-ம் பிரிவு

### கிறீஸ்துவேதத்தின் பேரில்

**46.** யூதவேதத்தின் பூரணபருவமாகத் தாபிக்கப்பட்ட வேதமே கிறீஸ்துவேதமாம். கிறீஸ்துவேதம் என்னும் பெயர் அவ்வேதத்தை உண்டுபண்ணினவராகிய யேசுக்கிறீஸ்து நாதரிலிருந்து பிறந்தது. மோசேசுவால் புதிய சட்ட நிரூபணரென்று தீர்க்கதரி

சனமாய் வசனிக்கப்பட்டவரும் இவரே; தீர்க்கதரிசிகளால் வாக்குப்பண்ணப்பட்டவரும் யூதசாதியாராலும் அதிபிதாக்களாலுங் காத்திருக்கப்பட்டவருமான மேசியாவும் இவரே. மெய்யான தேவகுமாரனாகவும் பழைய ஏற்பாட்டுச் சடங்குகளையும் பலிகளையும் நீக்கிவிட உத்தியோகம்பூண்டவராகவும் எழுந்தருளிவந்தவராகிய யேசுக்கிறீஸ்துநாதர், தமது அருள்வேதத்தைப் பிரசித்தப்படுத்தியருளியபோது, வரிவேதத்தின் போதகம் ஒழுக்கம் தெய்வீக ஏற்பாடுகள் ஆகியவைகளின் சாரத்தை மாற்றினவரல்ல. இயல்வேதம் வரிவேதமாகியவைகளிற் காணப்படும் போதனையின் உட்பொருளானது சுவிசேஷ போதகத்திலுங் காணப்படும். அன்றியும் அருள்வேதமானது முன்போல இருவேதங்களின் விரிவும் சாங்கோபாங்கமுமேயாம். கிறீஸ்துவேத ஸ்தாபகமும், யேசுக்கிறீஸ்துவின் சீவியவரலாறு, அதாவது: திருப்பிரசங்கங்களும், அவர்செய்தருளிய அற்புதங்களுமாகியவைகளின் பொழிப்பு புதிய ஏற்பாட்டு நூல்களில் அடங்கியிருக்கின்றது. ஆதலால், யேசுக்கிறீஸ்துநாதரால் அருளப்பட்ட வேதம் சருவேசுரனுற் தரப்பட்ட வேதந்தானேவென்று எல்லாருக்குந் தெளிவாகும் பொருட்டு 1-வது, புதிய ஏற்பாட்டு நூல்களின் உண்மை எப்படிப்பட்டது என்றும், 2-வது, இந்நூல்கள் கிறீஸ்துவேதந் தெய்வீகமானதுதான் என்று தவறுத அத்தாட்சிகளால் ஒப்பிக்கின்றனவோ என்றும் ஆராயக்கடவோம்.

## I. புதிய ஏற்பாட்டு நூல்களின் உண்மை

47. உரோம அரசர்களாகிய அகுஸ்துசும் திபேரியுசும் செங்கோல் நடாத்திய காலத்தில், ஞானத்திலும் வல்லமையிலும் உயர்ந்தவராகிய யேசுக்கிறீஸ்துவென்னும் ஒரு மகான் தோற்றினார் என்னுஞ் சம்பவமானது, கிறீஸ்தவர்களால் மாத்திரமன்றி யூதர் அஞ்ஞானிகள் முதலான சகலராலும், பிரசித்தமாகவும் ஒருவாய்ப்படவும் அங்கீகரித்துக்கொள்ளப்பட்ட ஒரு சம்பவமாம். அவர் முன்பு தாமாகவும், பின்பு தம்முடைய சீஷர்மூலமாகவும், பரிசுத்தமும் சாங்கோபாங்கமும் உள்ள ஒரு திவ்விய போதகத்தைப் பிரசித்தப்படுத்தியருளினார். அவர், தாம் சருவேசுரனால் அனுப்பப்பட்டவரென்றும் மெய்யான தேவசுதனென்றும் கூறித் தமது தேவ அதிகாரத்தையும் தமது போதகத்தின் உண்மையையும் ஆச்சரியத்துக்குரிய அநேக அற்புதங்களால் உருசுப்படுத்தியருளினார். அன்றியும், தீர்க்கதரிசிகள் மேசியாவைக் குறித்து முன்னேறவே வசனித்ததெல்லாம் தம்மிடத்தில் நிறைவேறும்படி விளங்கினார். அவருக்கு அப்போஸ்தலர்களும் சீஷர்களுமாய் இருந்தவர்களில்



சிலர் தங்கள் தேவகுருவானவரிடத்திற் கண்டவைகளிலும் கேட்டவைகளிலும் சிலபாகங்களை நூல்களாகச்சேர்த்து எழுதிவைத்தார்கள். புதிய ஏற்பாடு என்று சொல்லப்படும் அந்நூல்கள் இருபத்தேழு. அவையாவன:—சுவிசேஷங்கள் நாலு; அப்போஸ்தலர் நடபடி ஒன்று; அர்ச். சின்னப்பர் நிருபங்கள் பதினாலு; அர்ச். இராயப்பர் நிருபங்கள் இரண்டு; அர்ச். இயாகப்பர் நிருபம் ஒன்று; அர்ச். அருளப்பர் நிருபங்கள் மூன்று; அர்ச். யூதா நிருபம் ஒன்று; காட்சி ஆகமம் ஒன்று. இந்நூல்கள் எல்லாம் பழைய ஏற்பாட்டு நூல்களைப்போல் உண்மையானவைகள் என்றும், இவ்வுண்மையை உருசுப்படுத்தும் அத்தாட்சிகள் எல்லாம் அவைகளில் உண்டென்றும் காட்டக்கடவோம்.

### I. புதிய ஏற்பாட்டு நூல்கள் எல்லாம் அவைகளை ஆக்கியோர் என்று குறிக்கப்பட்டவர்களாலேயே இயற்றப்பட்டவைகள்.

48. புதிய ஏற்பாட்டு நூல்கள் அத்தனையும் (சீஷர்கள் எழுதிய இரண்டு சுவிசேஷங்கள் புறநீங்கலாக) அப்போஸ்தலர்களாலேயே எழுதிப் பிரசித்தப்படுத்தப்பட்டன என்பதும், எல்லாம் இந்நாள் மட்டுந் தலைமுறை தலைமுறையாகக் காப்பாற்றப்பட்டு வந்திருக்கின்றன என்பதும், உலகத்தின் எத்திசையிலும் பரந்திருக்குந் திருச்சபையால் ஒருவாய்ப்பட நிச்சயிக்கப்படுஞ் சத்தியங்களாம். அஞ்ஞானிகளும் திருச்சபையைவிட்டுப் பிரிந்த பதிதருமே இவைகளுக்கு உறுதியான சாட்சியிடுகிறார்கள். பதிதரானவர்களோவெனில் இத்தெய்வீக நூல்களில் தங்கள் துர்ப்போதனைகளைக் கண்டிக்கும் பகுதிகளைக் கெடுக்கவும், வேறு அர்த்தமாக மாற்றவும் எத்தனை பிரயாசப்பட்டாலும் அந்நூல்களை உண்டாக்கினவர்கள் அப்போஸ்தலர்கள்தாமே என்பதை மறுக்க ஒருகாலுந் துணியவேயில்லை. யேசுநாதரென ஒருவர் இருக்கவில்லை என்றும் புதிய ஏற்பாட்டு நூல்கள் அப்போஸ்தலரால் எழுதப்படவில்லை என்றும், இக்காலத்திற் சிலர் பிதற்றுவதில்லையோவெனில், அவிசுவாசிகளுக்குள்ளும் பதிதர்களுக்குள்ளும் ஒருசிலர் இப்படிக் கூறுகிறார்கள் என்பது மெய்தான். இவர்கள் சொல்லும் நியாயங்களோ தம்முள் ஒவ்வாதவைகள் ஆகையால் அவைகள் அவர்களுடைய அறியாமையையும் கபடத்தையுமே துலாம்பரப்படுத்துகின்றன. அறிவாளிகளாகிய அவிசுவாசிகளும் பதிதருமோ யேசுக்கிறீஸ்துநாதர் உலகிலிருந்தார் என்பதும், அப்போஸ்தலரே புதிய ஏற்பாட்டு நூல்களின் ஆசிரியர்கள் என்பதும், உறுதியான சத்தியமென்பதற்குப் பலத்த அத்தாட்சிகளை எடுத்துத் தெளிவாய்க் காண்பித்தபின், இச்சத்தியத்தை மறுக்கத்

துணிபவன் அலேக்சாந்தர், நெப்போலியன் முதலான அதிபதிகள் ஒருபோதுமிருந்ததில்லையென்றும், தற்காலத்து நூலாசிரியர்கள் எழுதிய அந்தந்த நூல்கள் அவர்களால் எழுதப்படவில்லை என்றும் கூறும் முழுமூடனாவானென்று சொல்லி முடித்தார்கள்.

II. புதிய ஏற்பாட்டு நூல்கள் எல்லாம் யாதொரு விசேஷ மாற்றமும் அடையாதவைகள்.

49. இந்நூல்கள் அப்போஸ்தலர்களால் எழுதப்பட்ட பிரகாரமே இந்நாள்மட்டுங் காப்பாற்றப்பட்டுவந்திருக்கின்றன என்பதை அத்தாட்சிப்படுத்தும் நியாயங்கள் மூன்று உண்டு. அவற்றுள் முதலாவது: இந்நூல்கள் திருச்சபையின் முதல் யுகங்களிற்றானே எங்கும் பரம்பியிருந்தனவென்பதாம். உள்ளபடியே இவைகள் கிறீஸ்தவர்கள் ஆச்சரியத்துக்குரியவிதமாய் விருத்திபெற்றிருந்த எல்லாத் தேசங்களிலும், எல்லாப் பகுதிகளிலும், எல்லாமதபேதிகளிடத்திலும் இருந்தன. இவைகள் அநேக பாஷைகளில் சுமுத்திரையாய் மொழிபெயர்க்கப்பட்டு ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொரு பிரதிவைத்து வாசிக்கப்பட்டுவந்தது. எண்ணிறந்த இப்பிரதிகள் எல்லாம் பொருளில்மாத்திரமன்றிச் சாதாரணமாய்ச் சொல்வகையாலுமே தம்முள் ஒத்திருக்கின்றன. ஆதலால், எவனாவது இந்நூல்களில் யாதேனும் ஒரு விசேஷமாற்றஞ்செய்யத் துணிந்திருந்தால், அவன் அத்தனை தேசங்களிலும், அத்தனை பாஷைகளிலும், அத்தனை குடும்பங்களிலும் இருந்த எல்லாப் பிரதிகளையும் ஒன்றாகச் சேர்த்தே மாற்றியிருக்கவேண்டும். இது எவனாலுங் கூடுந்தன்மையல்லவென்று காணாதவர் ஆர்? இரண்டாம் நியாயமாவது: இந்நூல்கள் திருச்சபை அடங்கலும், எப்போதும் மிக்க வணத்தோடு காப்பாற்றப்பட்டிருந்தன என்பதாம். உள்ளபடியே மேற்றிராணிமார் எல்லோரும் இத்தெய்வீகமான நூல்களின்மேல் வெகு நுணுக்கமான கவனங்கொண்டிருந்தார்கள். ஒருநாள் ஒரு மேற்றிராணியார் சுவிசேஷ வாக்கியத்தை எடுத்துப் பிரசங்கம் பண்ணினபோது ஒரு சொல்லை அதின் அர்த்தம்பட வேறு ஒரு நேர்த்தியான சொல்லாக மாற்றினதைக்கண்டு, அங்கே கூடியிருந்த சனமெல்லாம் அந்த மாற்றத்தைப்பற்றி மனங்கொதித்துக் கலகம் விளைக்கப்பார்த்தார்கள். அதின்மேல் மேற்றிராணியார் தாமெடுத்த சொல்லை மாற்றி, சுவிசேஷத்திலிருந்த பழைய சொல்லையே பிரயோகித்துக் கலகமுண்டாகாதபடி அடக்கினார். இச்சிறு சம்பவமானது வேதபுத்தகங்கள் பொருள்மட்டிலன்றிச் சொல்மட்டிலும் விசேஷ மாற்றமடையாதபடி திருச்சபை எப்போதுங்கண்ணாயிருந்தது என்பதைத் துலாம்பரமாய்க் காண்பிக்கின்றது.



III. புதிய ஏற்பாட்டு நூல்கள் எல்லாம் உண்மையான சம்பவங்களையே அடக்கியிருக்கின்றன.

50. புதிய ஏற்பாட்டு நூல்களிற் கூறப்பட்ட சம்பவங்கள் எல்லாம் மெய்யானவைகளேயென்று ஒப்பிப்பதற்கு மூன்று பெலத்த அத்தாட்சிகள் உண்டு. அவைகள் 1-வது, அப்போஸ்தலர்கள் தாங்கள் விவரிக்குஞ் சம்பவங்களைப்பற்றி அணாப்புண்ணவில்லை என்பதும், 2-வது, அவர்கள் அவைகளைப் பிரசித்தப்படுத்துவதால் யாதொருவரையும் அணாப்பக் கருதவில்லை என்பதும், 3-வது, அவர்கள் பிறரை அணாப்பக் கருத்துக்கொண்டிருந்தாலும் அக்கருத்து நிறைவேறாதென்பதுமாம். 1-வது, அப்போஸ்தலர்கள் அணாப்புண்ணவில்லை. எவ்வாறெனில்: சுவிசேஷத்திற் சொல்லப்பட்டதெல்லாம் பிரசித்தமாகவும், பட்டப்பகலிலும், சனங்களின் சமுகத்திலும், கர்த்தரின் விரோதிகள் முன்னிலையிலுமே நிகழ்ந்த சம்பவங்கள். ஆதலால், அப்போஸ்தலர்கள் அவைகளை நிச்சயமாய் அறிந்துகொள்ளக்கூடியவர்களாயிருந்தார்கள். அன்றியும், இத்தன்மையான பிரசித்த சம்பவங்களில் எவனுந் தவறிப்போதல் கூடாது. 2-வது, அப்போஸ்தலர் பிறரை அணாப்ப ஒருபோதுங் கருதவில்லை. இதற்கு அவர்களிடத்தில் விளங்கின நல்ல ஒழுக்கமும் நற்குணங்களும் சாட்சியிடுகின்றன. அவர்கள் தேவபயமும் நேர்மையும் உண்மையும் உள்ளவர்கள். பொய் கள்ளஞானம் இவைகளின்மேல் வெறுப்புக் கொண்டவர்கள். அப்படியிருக்க அவர்களை அணாப்பிகளென்று சொல்லத் துணிவது எப்படி? அன்றியும், கல்வி செல்வாக்கு முதலியவைகள் இல்லாதவர்களும் சாமானியசனத்தைச் சேர்ந்தவர்களுமாகிய அப்போஸ்தலர்கள், உலகத்தை அணாப்புவதினால் தங்களுக்கு நெருக்கிடையும் ஆக்கினையுமேயன்றி யாதொரு ஆதாயமும் இராதென்று அறிந்துகொண்டும் அணாப்ப மனங்கொண்டார்கள் என்றும், அத்தீயகருத்தினாற் தேவகோபத்துக்கும் பகை கலாபனை முதலான கொடிய தீங்குகளுக்கும் அஞ்சாநெஞ்சராய் இருந்தார்களென்றும், உலகத்திலுள்ள எல்லாச் சனங்களும் தங்கள் தங்கள் மதாசாரங்களையும் ஆசாபாசங்களையும் வெறுத்து அவைகளுக்கு விரோதமான ஒரு புது வேதத்தைக் கைக்கொண்டு அநுசரிக்கவேண்டுமென்று போதிக்கத் தலைப்பட்டார்கள் என்றும் நினைக்கவும் சொல்லவுங் கூடுமோ? கூடாது. அப்போஸ்தலர்கள் தங்கள் நூல்களில் உண்மையான சம்பவங்களையே எழுதிவைத்தார்கள் என்பதற்கு இன்னுமோர் பிரத்தியக்ஷமான அத்தாட்சி என்னவெனில், தாங்கள் போதித்த படிப்பினையின் உண்மைக்குச் சாட்சியாக அவர்கள் தயிரியத்தோடு இரத்தஞ்சிந்தி உயிர்கொடுத்ததேயாம். அவர்கள் தங்கள்

பரமகுருவின் போதகத்தையும் அற்புதங்களையும் பிரசித்தப்படுத்தினவுடனே, ஒன்றில் அவைகளை மறுக்கவும் அல்லது அவைக்ளுக்காகச் சித்திரவாதை அனுபவித்து மரிக்கவும் வேண்டியதாயிருந்தபோது, அத்திவ்விய போதகங்களை மறுப்பதைக்காட்டிலும் கொடிய மரணத்துக்குள்ளாவதே தாவிளையென்று எண்ணி உயிர் கொடுத்தார்கள். 3-வது, அப்போஸ்தலர்கள் எவ்வித தோஷ துரோகங்களுக்கும் அஞ்சாமல் முழுதும் புத்திமயங்கிப் பிறரை அணுப்பக் கருத்துக்கொண்டிருந்தாலும், அவர்கள் கருத்து ஒருபோதும் அநுகூலமாகியிருக்கமாட்டாது. ஏனெனில், அவர்கள் தங்கள் நூல்களில் விவரித்த சம்பவங்கள் எல்லாம், 1-வது, யேசுக்கிறீஸ்துநாதரை மெய்யான மேசியாவாக ஒத்துக்கொள்ள வேண்டுமென்றும், அவரைக்கொன்ற துரோகமானது மெய்யான தேவகொலையாகிய பாரப்பழியே என்றும் யூதருக்குப் போதிப்பவைகளாகவும், 2-வது, விக்கிரக ஆராதனைகளையும் துர் இச்சைகளையும் வெறுத்து நீக்கிவிடவேண்டுமென்று அஞ்ஞானிகளைத் தூண்டுகிறவைகளாகவும், 3-வது, தங்கள் தப்பான எண்ணங்களுக்கும் துர்ச்சார்புகளுக்கும் முழுதும் விரோதமான ஒரு புதிதான வேதத்தைக் கைக்கொண்டு அநுசரிக்கவேண்டுமென்று சகல மனிதரையும் நெருக்குகிறவைகளாகவும் இருந்தபடியால், அவைகள் எல்லாச் சனங்களுக்கும் மிக்க கனமான சம்பவங்களேயாம். ஆதலால், யூதரும் அஞ்ஞானிகளுமாகிய சகல சனங்களும், விசேஷமாய்க் கல்விமான்களும், தங்கள் சமயக்கோட்பாடுகளுக்கும் சுபாவ இச்சைகளுக்கும் பூரண விரோதமான அச்சம்பவங்களின் உண்மையைப்பற்றி மிகுந்த கவனத்தோடு பற்றும் பற்றாய் விசாரித்துப் பூரணமாய்த் தெளிந்துகொண்டாலன்றி அவைகளை ஒருபோதும் ஒப்புக்கொண்டிருக்கமாட்டார்கள் என்பது நிச்சயம். அப்படியிருக்க, அப்போஸ்தலர்கள் பொய்யான சம்பவங்களை எழுதிப் பரப்பத் துணிந்திருந்தால், அவர்களுடைய துணிவு வியர்த்தமாய்ப்போகுமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆதலால், அப்போஸ்தலர்கள் தங்கள் நூல்களில் விவரித்த சம்பவங்கள் எல்லாம் உண்மையானவைகள் என்று தீர்மானித்துக்கொள்ளவேண்டும்.

51. ஆகவே, நம்முடைய திவ்விய இரக்ஷகராகிய யேசுநாதரையும் அவர் செய்தருளிய அற்புதங்களையும் பிரசங்கங்களையும் அவரது திருமரணத்தையும் அவருடைய பிரமாணிக்கமும் உண்மையுமுள்ள சீஷர்களாலெழுதப்பட்டபிரகாரமாய் இருக்கின்ற வேதத்தின் ஸ்தாபகத்தையும் விபரித்துக்காட்டும் மெய்யான சரித்திரம் ஒன்று நமக்குக் கிடைத்திருக்கிறதென்றும், கிறீஸ்துவேத விசு-



வாசமானது ஒருபோதும் அசையாத அஸ்திவாரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதென்றும், அவ்வேத விசுவாசத்தால் உணர்த்தப்படும் உண்மைகள் மறுக்கப்படாதவைகளும் நியாயத்தோடு பொருந்தியவைகளுமேயென்றும் தீர்மானித்துக்கொள்ளக்கடவோம்.

## II. கிறீஸ்துவேதம் தெய்வீகமானதென்பதைக் காட்டும் அத்தாட்சிகள்

கிறீஸ்துவேதம் ஓர் தெய்வீகமானது என்று ஒப்பிக்கும் அத்தாட்சிகள் நாலு; அவைகள்—1-வது, யேசுநாதரும் அவருடைய அப்போஸ்தலர்களும் செய்த அற்புதங்கள். 2-வது, யேசுநாதரிலே நிறைவேறின தீர்க்கதரிசனங்கள். 3-வது, கிறீஸ்துவேதத்தின் மேம்பாடு. 4-வது, கிறீஸ்துவேத ஸ்தாபகமும் அதன் ஆச்சரியமான பரம்புதலும்.

### I. யேசுநாதரும் அவருடைய சீஷர்களுஞ்செய்த அற்புதங்களாற் பெறப்படும் அத்தாட்சி

52. புதிய ஏற்பாட்டு அற்புதங்கள் எல்லாம் கிறீஸ்துவேதம் தெய்வீகமானது என்று ஒப்பிப்பதற்குவேண்டிய எல்லாக் குணங்களையும் அடக்கியிருக்கின்றன. 1-வது, அவ்வற்புதங்கள் நிச்சயமானவைகளும் பிரசித்தமானவைகளும் ஒப்புக்கொள்ளப்பட்டவைகளுமாம். (புதிய ஏற்பாட்டு நூல்களின் உண்மையைப்பற்றிச் சொன்னவைகளைக் காண்க.) 2-வது, அற்புதங்கள் எல்லாம் தங்கள் மட்டிலும் தங்கள் தொகையாலும் தாங்கள் செய்யப்பட்ட விதத்தாலும் இயற்கைவிதிகளை முழுதும் கடந்தவைகளே என்பது பிரத்தியக்ஷம். அவ்வற்புதங்கள் தங்கள்மட்டில் இயற்கைவிதிகளை முழுதும் கடந்தவைகள். உதாரணம்: தண்ணீர் திராக்ஷரசமாக்கப்பட்டதும்; நெடுங்காலமாயுள்ள தீராப்பிணிகள் சடுதியாய்த் தீர்க்கப்பட்டதும்; பிறவிக்குருடர் பார்வையடைந்ததும்; செவிடர் கேள்வியடைந்ததும்; ஊமர் பேசினதும்; மரித்தவர்கள் உயிர்த்ததும் பிறவுமாம். அவ்வற்புதங்கள் தொகையாலும் இயற்கை விதிகளைக் கடந்தவைகள். எப்படியெனில், யேசுநாதரால் குணப்படுத்தப்பட்ட வியாதிக்காருக்குக் கணக்கில்லை. அவர் சென்றசென்றவிடமெல்லாம் எண்ணிறந்த அற்புதங்கள் நடந்தன. அவர் தம்முடைய சீஷர்மூலமாயும் சனங்களுக்குள்ளே கணக்கற்ற

அற்புதங்களைச்செய்தருளினார் என்று அப்போஸ்தலர் நடபடி ஆகமத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வற்புதங்கள் செய்யப்பட்ட விதத்தாலும் இயற்கைவிதிகளைக் கடந்தவைகள். எப்படியெனில், யேசுநாதர் சடுதியாகவும் ஆயத்தங்கள் இன்றியும், எல்லாநேரத்திலும் எல்லாவிடத்திலும், சமீபமாயிருந்தவர்களிடத்திலும் கண்ணுக்கெட்டாத தூரத்தில் இருந்தவர்களிடத்திலும், பிரயாசமின்றியும், குணப்படக்கடவாய் மரித்தவனே எழுந்திரு என்னும் இவை முதலான சிறுவசனங்களாலும், தமது திருக்கரங்களை நீட்டிவைத்தும் இவ்விதமே பெரும் பெரும் அற்புதங்களைச் செய்தருளினார். அவர் செய்தருளிய அற்புதங்களால் சகலவித பிணியாளருக்கும் பூரண ஆரோக்கியமும் மரித்தவர்களுக்கு மெய்யான உத்தானமும் கிடைத்ததின் நிமித்தம், அவ்வற்புதங்கள் இயற்கைவிதிகளைக் கடந்தவைகளே என்பது தெளிவாய் விளங்குகின்றது. 3-வது, யேசுநாதர் தாம் மெய்யான சருவேசுரனால் அனுப்பப்பட்டவர் என்றும், தமது போதகமெல்லாம் தெய்வீகமானதே என்றும் எல்லாருக்கும் ஒப்பிக்கும்பொருட்டு அற்புதங்களைச்செய்து: நான் செய்கிற கிரியைகள் என் பிதா என்னை அனுப்பியிருக்கிறார் என்பதற்குச் சாட்சியிடுகின்றன என்றும், நீங்கள் என்வார்த்தையை விசுவசியாவிட்டாலும் என்கிரியைகளை விசுவசியுங்கள் என்றும் சொல்லுவார். அவர் திமிர்வாதக்காரனைக் குணப்படுத்தினபோது மனிதருடைய பாவங்களைப் பொறுக்கத் தமக்கு அதிகாரம் உண்டென்றும், தாம் சருவேசுரனால் அனுப்பப்பட்டவர் என்றும் வேதபாரகர் நன்றாய்த் தெளிந்துகொள்ளும்பொருட்டே அவ்வற்புதத்தைத் தாம் செய்ததாக வசனித்தார். யேசுநாதர் தமது போதகந் தெய்வீகமானது என்று உருசுப்படுத்தும்படி அநேக அற்புதங்களைச்செய்தது உண்மை ஆகையால், ஒன்றில் சருவேசுரன் தமது அளவற்ற வல்லமையால் மனிதரை வேதவிஷயத்தில் அனுப்பிப்போட்டார் என்று சொல்லவேண்டும்; அல்லது யேசுநாதரும் அப்போஸ்தலர்களும் போதித்தது தேவவேதமே என்று சொல்லவேண்டும். சருவேசுரன் மனுஷரை வேதவிஷயத்தில் அனுப்பினார் என்றே சொல்லவுங் கருதவுங் கூடாதாகையால், யேசுநாதரும் அவர் சீஷர்களும் போதித்தது தேவவேதமென்றே ஒப்புக்கொள்ளக்கடவோம்.

## II. தீர்க்கதரிசனங்களாற் பெறப்படும் அத்தாட்சி

53. ஆதிமனிதன் பாவத்தைக் கட்டிக்கொண்டவுடனே சருவேசுரன் அவனைநோக்கி: மனுக்குலத்தை மீட்க ஒரு இரக்ஷகனை

005746



அனுப்புவோமென்று வாக்குப்பண்ணியருளினார். * பல்லாயிரம் வருஷங்களின் பின் மாத்திரம் நிறைவேறவேண்டிய அவ்வாக்குத்தத்தத்தை அவர் காலத்துக்குக்காலம் புதுப்பிக்கச் சித்தமாகிப் பற்பல அறிகுறிகளால் வரவரத் தெளிவாக்கிக்கொண்டுவந்தார். தேவசனமென்று அழைக்கப்படும் யூதசாதியாருக்கு முற்பிதாவாய் விளங்கின ஆபிரகாமுக்குச் சருவேசுரன் அவ்வாக்குத்தத்தத்தைப் பண்ணி, அவருடைய சந்ததியில் உலக இரக்ஷகர் பிறப்பார் என்றும், இவர்மூலமாகச் சகல சனங்களும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்றுங் கூறினார். ஈசாக்கு யாக்கோபு என்பவர்களும் அவ்வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொண்டார்கள். யாக்கோபு, தேவ ஏவுதலை அடைந்து, தம்முடைய நாலாம் புத்திரனாகிய யூதாவென்பவரை நோக்கி: உன் இராசாங்கம் முடிந்துபோகும்போதே உன் குலத்தில் இரக்ஷகர் பிறப்பார் என்று தீர்க்கதரிசனமாக வசனித்தார். யாக்கோபு மரித்து முந்நூறு வருஷங்கள் செல்லுமுன் சருவேசுரன் மோசேசு என்னும் மகாத்துமாவைத் தெரிந்து அவருக்கும் அவ்வாக்குத்தத்தத்தைப் பண்ணியருளினார். இவர் தமது மரணத்தறுவாயில் இசிறவேலர் அனைவரையும் அழைத்து மேசியாவின் பிறப்பைப்பற்றிச் சருவேசுரன் தமக்குச் செய்த வாக்குத்தத்தத்தையும், மேசியாவைப்பற்றிய குறிப்புகளையும், அம்மேசியா ஒரு பெரிய தீர்க்கதரிசியாகவும் தமது சனத்தின் இரக்ஷகராகவும் ஓர் புதிய ஏற்பாட்டின் மத்தியஸ்தராகவும் சருவசாதியாராலும் வணங்கப்படும் ஏகநாயகராகவும் இருப்பார் என்பதையும் தெளிவாய் விவரித்துக் காட்டினார். (ஆதியாகமம் 49-ம் அதி.—உபாகமம் 18-ம் அதி.)

54. அதிபிதாக்களேயன்றி சருவேசுரனால் இடையிடையே தோற்றுவிக்கப்பட்ட தீர்க்கதரிசிகளும் மேசியாவென்னும் உலக இரக்ஷகர் பிறப்பார் என்பதையும், அவர் பிறக்கும்போது உலக முழுதும் அவரைச் சந்தேக விபரீதமின்றி அறிந்துகொள்ளக்கூடிய

---

* ஆதாமின் கேட்டுக்கும் மீட்பரின் வருகைக்கும் இடையில் சென்றது நாலாயிரம் வருஷம் என்றும் ஆறாயிரம் வருஷம் என்றும் பழைய அறிஞர்கள் கணக்கிட்டது உண்டு. வருஷக்கணக்கு பழைய ஏற்பாட்டில் தெளிவாய்க்கூறப்பட்டில்லை; ஆதி பிதாக்களுடைய வயதைக் கணக்கிட்டு ஒரு விதத்திலே நாலாயிரமும் ஆறாயிரமும் என்றார்கள். ஆதி பிதாக்கள் எல்லாரும் இடையீடில்லாமற் குறிக்கப்பட்டிருக்கிறார்களோ என்றது சந்தேகம். ஆதலால் ஆதாமுக்கும் கர்த்தருக்கும் இடைப்பட்ட காலம் இன்னும் பல ஆயிரமாகலாம் என்றது தற்கால கத்தோலிக்கு சாஸ்திரிகளின் கருத்து.

Nallur Swami Gnanapragasar Library
OBLATE FATHERS
"THODARBAH. M."
657/1, HOSPITAL ROAD, JAFFNA

அடையாளங்களையும் முன்னேறவே வசனித்திருந்தார்கள். மேசியாவுடைய பிறப்பின் விபரங்களும் அவரது சீவியமும் மரணமும் உத்தானமும் பிரசங்கங்களும் அஞ்ஞானிகளின் மனந்திரும்புதலுமாகிய இவை எல்லாம் தீர்க்கதரிசனங்களால் முன் விபரிக்கப்பட்டிருந்தபடியால், இரக்ஷகர் பிறக்குமுன்னமே அவரது திருச்சீவிய சரித்திரம் முழுதும் எழுதிவைக்கப்பட்டிருந்ததென்றும் சொல்லலாம்.

55. மேலேகண்டபிரகாரம், அதிபிதாவாகிய யாக்கோபு மேசியா உலகத்துக்கு வரவேண்டியகாலத்தைத் தெளிவாய்க் கூறியிருந்தார். மேசியாவின் மரணத்தைப்பற்றியோவெனில் தானியேல் என்னுந் தீர்க்கதரிசியானவர் பாபிலோனில் அடிமையாயிருந்தபோது அவருக்கு அறிவிக்கப்பட்டது. இத்தீர்க்கதரிசி இசிறவேல் சனத்தின் அடிமைத்தனத்தின்மேல் புலம்பி, அவ்வடிமைத்தனம் நிலைக்கவேண்டிய காலமாகிய எழுபது வருஷங்களைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கையில், சடுதியாய்த் தேவ ஏவுதலைப் பெற்று வசனித்ததாவது :– (ஏழு எழுபதுவருஷங்கள் என்னும் அர்த்தமுள்ள) எழுபது வாரங்கள் கடந்த பின்பு, அதாவது, எருசலேம் பட்டணத்தை மீளவும் கட்டியெழுப்ப உத்தரவுபண்ணப்பட்ட காலமுதல் நானூற்றுத்தொண்ணூறு வருஷங்கள் கழிந்தபின்பு, பாபிலோன் அடிமைத்தனத்தைக்காட்டிலுங் கொடிதான பாவவடிமைத்தனத்தினின்று மனிதரை மீட்டு நீதியின் இராச்சியத்தை ஸ்தாபிக்கும்படியாக மேசியா கொலைப்படுத்தப்பெறுவார் என்று எழுதினார். (தானியேல் 9-ம் அதி.)

மிக்கேயாஸ் என்னுந் தீர்க்கதரிசியானவர் (5-ம் அதி.) பெத்திலேம் என்னும் நகரத்தில் மேசியா பிறப்பார் என்று எழுதிவைத்தார். அவர் உரைத்த தீர்க்கதரிசனம் யூதசாதியார் எல்லோருக்கும் நன்றாய்த் தெரிந்திருந்தபடியால், கீழ்த்திசையிலிருந்து வந்த மூன்று சாத்திரிகளும் மேசியா எங்கே பிறந்திருக்கிறாரென்று அவர்களிடத்தில் வினாவினபோது, அவர் பெத்திலேம் பட்டினத்திற் தானே பிறந்திருக்கவேண்டுமென்று பிரதான ஆசாரியரும் வேதபாரகருஞ் சொன்னார்கள். இசையாஸ் என்னும் தீர்க்கதரிசியானவர் உலக இரக்ஷகர் ஒரு கன்னியாஸ்திரியிடத்திலிருந்து பிறப்பார் என்றும் (7-ம் அதி.) ; சருவேசுரன்தாமே எழுந்தருளிவந்து உங்களை இரட்சிப்பார், அப்போது குருடர் பார்ப்பார்கள், செவிடர் கேட்பார்கள், முடவர் நடப்பார்கள், ஊமர் பேசுவார்கள் (35-ம் அதி.) என்றும் தீர்க்கதரிசனம் சொல்லியிருந்தார்.



56. இரக்ஷகரின் பீடை மரணங்களும் மிகத்தெளிவாக முன் கூறப்பட்டிருந்தன. அவர் தம்முடைய சீஷர்களில் ஒருவனாற் காட்டிக்கொடுக்கப்படுவார் என்று ஆயிரம் வருஷங்களின்முன் தாவீது தீர்க்கதரிசியும் (சங். 40), அவர் முப்பது வெள்ளிக்கு விற்கப்படுவார் என்றும் அம்முப்பதுவெள்ளியும் கொடுத்தவர்களுக்கே மீளவும் கொடுக்கப்படுமென்றும் சக்கரியாஸ் என்னும் தீர்க்கதரிசியும் (11-ம் அதி.) முன் வசனித்திருந்தார்கள். அவர் தம்முடைய சீஷர்களாற் கைவிடப்படுவார், கள்ளச்சாட்சிகள் அவருக்கு விரோதமாய்ச் சாட்சி சொல்லுவார்கள், அவர்களுடைய சாட்சிகளோ ஒத்திராதென்றும் (சங். 26.) ; அவர் நிந்தை அவமானஞ் செய்யவும் முகத்திற் காறித்துப்பவும் படுவார் என்றும் (சங். 21. இசை. 50.) ; சவுக்கடிகளால் அவர் தேகம் கிழிந்து எலும்புகள் தோன்றுமென்றும் (சங். 21.) ; அவருடைய வஸ்திரம் பங்கிடப்படும், அவருடைய அங்கியின்மேல் திருவுளச்சீட்டு இடப்படும் என்றும் ; அவருடைய தாகத்துக்குக் காடியைக் கொடுப்பார்கள் என்றும் தாவீதுதீர்க்கதரிசி முன் கூறியிருந்தார்.

இன்னும், இப்படியே, மேசியாவின் உத்தானமும் ஆரோகணமும் இஸ்பிரீத்து சாந்துவின் ஆகமனமும் சருவ சனங்களும் ஒரே விசுவாசத்தையும் ஒரே வேதத்தையும் அங்கீகரிப்பதுமாகிய பலவும் தீர்க்கதரிசன ஆகமங்களிற் காணக்கிடக்கின்றன.

57. இத்தீர்க்கதரிசனங்கள் எல்லாம் யூதாசாரியரால் மிகுந்த கவனத்தோடு காப்பாற்றவும் விரித்துரைக்கவும் போதிக்கவும் பட்டுவந்தன. இவைகள் எல்லாம் யேசுக்கிறீஸ்துநாதருக்கு மிகப் பூரணமாய்ப் பொருந்துகின்றன என்பது, பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசன நூல்களையும் புதிய ஏற்பாட்டுச் சுவிசேஷநூல்களையும் ஒத்துப்பார்ப்பவர்கள் எல்லாருக்குந் தெளிவாய் விளங்கும். யேசுக்கிறீஸ்துநாதர் யூதாவின் செங்கோன்மை அழிந்த காலத்திலே தாவீதின் குலத்திலே ஒரு கன்னியாஸ்திரியிடத்திலே பெத்திலேம் பட்டினத்திலே பிறந்ததும், தம்முடைய சீஷரில் ஒருவனாகிய யூதாசினால் முப்பதுவெள்ளிக்குக் காட்டிக்கொடுக்கப்பட்டதும், யூதாஸ் அந்த முப்பதுவெள்ளியையும் மீளவும் யூதருக்குக்கொடுத்துவிட்டதும், அவர் நிந்தை அவமானங்களாற் பூரிக்கப்பட்டதும், முகத்திற் காறித்துப்பப்பட்டதும், சிலுவைமரத்தில் அறையுண்டதும், கை கால்களில் ஆணிகளாற் துளைக்கப்பட்டதும், சேவகர் அவர் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பிரித்துக்கொண்டு கீழ் அங்கிக்குத் திருவுளச்சீட்டுப் போட்டதும், அவருக்குப் பித்துங் காடியும் ஊட்டப்பட்டதுமாகிய இச்சம்பவங்கள் எல்லாம் இருவகை

நூல்களிலும் பூரணபொருத்தத்தோடு கூறப்பட்ட சம்பவங்களேயாம். இக் குணங்குறிகள் பூண்ட யேசுக்கிறீஸ்து, முன் தீர்க்கதரிசிகளாற் கூறப்பட்ட மேசியாவேயென்று தெளிந்துகொள்ளாதிருப்பது எப்படி ?

58. இனி, யேசுநாதர்தாமே வசனித்த தீர்க்கதரிசனங்களைப் பார்க்கக்கடவோம். 1-வது, தாம் யூதரால் அஞ்ஞானிகளுக்குக் கையளிக்கப்படுவார் என்றும், பிரம்புகளால் அடிக்கவும் துப்பவும் நிந்திக்கவும் சிலுவையில் அறையவும்படுவார் என்றும், மரித்த மூன்றாம் நாள் உயிர்த்து எழுவார் என்றும்; 2-வது, தம்முடைய பிரதான சீஷன் தம்மை மறுதலிப்பான் என்றும், வேறு ஒரு சீஷன் தம்மைக் காட்டிக்கொடுப்பான் என்றும், சீஷர்கள் எல்லாரும் தம்மைக் கைவிட்டு ஓடிப்போவார்கள் என்றும், அவர்கள் உபத்திரியங்களுக்கும் சகலவித வாதைகளுக்கும் கொடிய மரணத்துக்கும் உள்ளாவார்கள் என்றும், தமது போதகத்தை எல்லாருக்கும் துணிகரமாய்ப் பிரசங்கிக்கிறதற்கு வேண்டிய காவலும் திடனும் இஸ்பிரீத்துசாந்துதேவனால் அவர்களுக்குக் கிடைக்குமென்றும்; 3-வது, தமது மரணத்தின்பின் சுவிசேஷம் உலகமடங்கலிலும் பிரசங்கிக்கப்பட்டுச் சகல சாதியாரும் மெய்யான விசுவாசத்தைப் பெற்று ஒரே மெய்யான தேவனையே வணங்குவார்கள் என்றும், தமது வேதத்துக்குக் கலாபனை நேரிடும் என்றும், அது அக்கலாபனைகளை எல்லாஞ் செயித்து உலகமுடிவுமட்டும் அழியாதிருக்கும் என்றும்; 4-வது, எருசலேம் தேவாலயம் கல்லின்மேற் கல்லிராதபடி தகர்க்கப்படும் என்றும், யூதசாதியார் எல்லாரும் சிதறுண்டு போவார்கள் என்றும், அவ்வழிவுக்கு முன் வானத்தில் பயங்கரமான அதிசயங்கள் காணப்பட, அப்போது யுத்தம் கலகம் பஞ்சம் கொள்ளைநோய் பூமியதிர்ச்சிகள் உண்டாகிப் பட்டினத்தார் கலக்கமும் பயங்கரமுமடைய, சத்துரு சேனைகள் எருசலேமை வளைந்து தாக்கி அழித்துத் தேவாலயத்தையும் அக்கினிக்கிரையாக்குவார்கள் என்றும் யேசுநாதர் தீர்க்கதரிசனமாக வசனித்திருந்தார்.

(இவைகளை நான்கு சுவிசேஷங்களிலும் அவ்வவ்விடத்துக் காண்க.)

இத்தீர்க்கதரிசனங்கள் எல்லாம் சொல்லுச்சொல்லாக நிறைவேறினவென்பதற்குச் சுவிசேஷநூல்களும் அப்போஸ்தலர் நடபடியென்னும் நூலும் சாட்சிபகருகின்றன. யெருசலேம் பட்டணத்தின் சங்காரத்தைப்பற்றிய தீர்க்கதரிசனம் நிறைவேறினதை யூதருடைய சரித்திர நூலாசிரியராகிய யோசேபுஸ் என்பவர் பற்றும்



பற்றாய் விவரித்து: யேசுக்கிறீஸ்து கொலைப்படுத்தப்பெற்றுச் சிறிதுகாலஞ் சென்றவளவில் ரோம தளகர்த்தனாகிய தீத்துஸ் என்பவன் யெருசலேம் பட்டணத்தைப் பிடித்துச் சங்கரித்துத் தேவாலயத்தையும் நீறாக்கிவிட யூதர் எல்லாருஞ் சொல்லுதற்கரிய உபத்திரவங்களுக்கு உள்ளாகிப் பத்துலட்சத்துப் பதினாயிரம்பேர் யுத்தத்தில் மடிந்தார்கள் என்றும், தொண்ணூற்றேழாயிரம்பேர் சிறைபிடிக்கப்பட்டார்கள் என்றும் எழுதிவைத்தார். தங்கள் பட்டினத்தின் அழிவுக்குத் தப்பின யூதரோவெனில், தாங்கள் செய்த தேவகொலையின் நிமித்தம் குருவும் ஆலயமும் பூசையுமின்றித் தேவகோபத்துக்கிரையாய் உலகமடங்கலும் நாடோடிகளாய்த் திரிகிறார்கள்.

59. முடிவுரை:—யேசுநாதர் பிறக்குமுன் அவரைக்குறித்து வசனிக்கப்பட்ட தீர்க்கதரிசனங்களும், அவர்தாமே உரைத்த தீர்க்கதரிசனங்களுமாகிய எல்லாம் கிரமமாய் நடந்தேறினவென்பதும், அத்தீர்க்கதரிசனங்களாற் குறிக்கப்பட்ட சம்பவங்கள் நிகழுமுன்னமே அவைகள் மெய்யென்று அங்கீகரிக்கப்பட்டிருந்தனவென்பதும் வெளிப்படையாம். தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்ட செய்திகளை அவைகள் நிறைவேறுமுன் எவ்வித சிருட்டியாவது அறியக்கூடாதோவெனில் ஒருபோதும் கூடாது. ஏனெனில், 1-வது, தீர்க்கதரிசன சம்பவங்களுட் சில, உதாரணமாக, மேசியா மரித்தபின் மகிமைப்பிரதாபத்தோடு உத்தானமாதல், அவர் செய்த அற்புதங்களின் தன்மை, அற்புதங்களைச்செய்யும் வல்லமை முதலானவைகள் சிருட்டிகளின் எண்ணத்தைக் கடந்தவைகளாகவும் தேவதிருவுளத்தையே முழுதும் சார்ந்தவைகளாகவும் இருந்தன. சிலவோவெனில், உதாரணமாக, உலகரக்ஷகருக்குச் செய்யப்பட்ட பற்பலவித ஆக்கினைகள் முதலியன தீர்க்கதரிசனமாய் வசனிக்கப்பட்டகாலத்தில் இன்னும் பிறவாத மனிதருடைய சுயாதீன சித்தத்தைச் சார்ந்திருந்தன. 2-வது, அத்தீர்க்கதரிசனங்களுக்கும் அவற்றாற் குறிக்கப்பட்ட சம்பவங்களுக்கும் இடையே நெடுங்காலம், அதாவது, பலநூறு வருஷங்கள் இருந்தன. சருவேசுரன்தாமே அவைகளை இடையிடையே புதுப்பித்துக்கொண்டு வந்தார். 3-வது, அத்தீர்க்கதரிசனசம்பவங்கள் ஒன்றோடொன்று ஒருவிதத்திலும் தொடர்பில்லாத ஆள் இடம் காலம் பொருள் முதலிய விவரங்களோடு கூடச் சம்பவிக்கவேண்டியவைகளாய் இருந்தன. 4-வது, அத்தீர்க்கதரிசனங்கள் தோற்றத்தில் தம்முள் ஒவ்வாத சம்பவங்களைக் குறிக்கின்றவைகளாயிருந்தன. உதாரணமாக: மேசியா எல்லாச் சனங்கள்மேலும் இராச்சியபாரம்

பண்ணுவார் என்று வசனித்த தீர்க்கதரிசிதாமே, அவர் நிந்தை அவமானங்களை அடைவாரென்று, புறத்தே ஒவ்வாமை தோன்றும்படி அடிக்கடி வசனித்திருந்தார். ஆதலால், இங்கே சொன்ன நாலு நியாயங்களின் நிமித்தம் முன்காட்டிய தீர்க்கதரிசன சம்பவங்கள் சிருட்டிக்கப்பட்ட புத்தியுள்ள எந்த வஸ்துவாலும் முன்னறியக்கூடாதனவென்று உணர்ந்துகொள்ளத்தகும்.

ஆதலால், முன் அறிவிக்கப்பட்ட தீர்க்கதரிசன சம்பவங்கள் எல்லாம் ஒரு சிறிதேனும் பிசகாது யேசுநாதரிலேயே நிறைவேறினதை நாம் காணும்போது, எதிர்காலத்தையும் நிகழ்காலத்தையும் ஒன்றாய் அறிந்திருக்கும் சருவேசுரன் தாமே அத்தீர்க்கதரிசனங்களை வசனிப்பித்து தமது வரம்பில்லா வல்லமையினாலும் ஞானத்தாலும் அவைகளை நிறைவேறப்பண்ணினார் என்று தெளிந்து, அதிபிதாக்களுக்கு வாக்குப்பண்ணப்பட்டவரும் தீர்க்கதரிசிகளால் முன் அறிவிக்கப்பட்டவருமான மெய்யான மேசியா நம்முடைய ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துவேயென்று தீர்மானித்துக்கொள்ளக்கடவோம்.

### III. கிறீஸ்துவேதத்தின் மேம்பாட்டாற்பெறப்படும் அத்தாட்சி

ஒரு வேதத்தை ஸ்தாபித்தவருடைய சீவியம் முழுதும் உண்மையான பரிசுத்ததனத்தாலும் உண்மையான புண்ணியங்களாலும் நிறைந்திருப்பதையும், அவ்வேதத்தை முதன்முதல் பரப்பினவர்கள் தேவ உதவியைப்பெற்று விளங்கினார்கள் என்பதற்குப் பிரத்தியக்ஷமான அடையாளங்கள் இருப்பதையும், அவ்வேதம் உச்சிதமான போதகங்களையும் களங்கமற்ற ஒழுக்கநெறியையும் சாங்கோபாங்கமும் சுத்தமுமான ஆராதனைகளையும் சடங்குகளையும் கொண்டிருப்பதையும் நாம் காணும்போது, அவ்வேதம் சருவேசுரனாற் தரப்பட்டவேதமென்றே தீர்மானித்துக்கொள்ளவேண்டும்.

60. (I) கிறீஸ்துவேதத்தை ஸ்தாபித்தவராகிய யேசுநாதர் மெய்யான புண்ணியங்களும் பூரணமும் உச்சிதமுமான பரிசுத்தமுமுடையவராய் இருந்தார் என்பதும்; சருவேசுரன்மட்டில் குறைவில்லாத பத்தியும் கீழ்ப்படிதலும் உள்ளவராய் இடைவிடாத செபதியானங்களைப் பத்திவேகத்தோடு அநுசரித்துப் பரமபிதாவின் மகிமை ஒன்றையே எப்போதும் தேடிக்கொண்டுவந்தார் என்பதும்; புறத்தியார்மட்டிற் தணியாத அன்பும் தயாளமும் உடையவராய், அறிவீனரைப் படிப்பித்தும், தம்மைச் சூழ்ந்தவர்களுடைய துன்பதுரிதங்களை மகா இரக்கத்தோடு நீக்கியும், நிந்தை அவமானங்களை மதுர பொறுதியோடு சகித்தும், சன்மார்க்கத்தில் ஒரு அணுவள



வேனும் தவறாதவராய் உலக ஐசுவரியங்களை வெறுத்து, உபத்திரியங்களிற் சலியாது, அடக்கத்தையே ஆபரணமாய்ப் பூண்டிருந்தார் என்பதும்; சித்திரவேதனைகளையும் மானபங்கங்களையும் முறைப்பாடின்றிச் சாந்தகுணத்தோடு அநுபவித்து, தம்மை வாதித்துக் கொலைப்படுத்திய கொடிய பாதகர்களுக்காக மிகுந்த ஆதரவோடு பிரார்த்தித்து, அவர்கள் செய்ததெல்லாம் அறியாமற் செய்தார்கள் என்று அவர்களுக்காகப் பரமபிதாவிடத்தில் மன்னிப்புக்கேட்டார் என்பதும்; இவைமுதற் பிற நற்குண நற்செய்கைகளால் எப்போதும் விளங்கிக்கொண்டு இருந்தார் என்பதும் அவருடைய திருச்சரித்திரத்தை எழுதிவைத்த நாலு சுவிசேஷகரும் ஒருவாய்ப்படச் சொல்லுஞ் சாட்சியால் தெரிகிறது.

ஆதலால், கிறீஸ்துவேத ஸ்தாபகராகிய யேசுக்கிறீஸ்துவின் சீவியம் முழுதும் மெய்யான புண்ணியங்களும் குறைவற்ற உச்சித பரிசுத்ததனமுமுள்ளதாய் விளங்கிற்றென்று தெளிந்துகொள்ளத்தகும்.

61. (II) கிறீஸ்துவேதத்தை முதன்முதல் பரம்பச்செய்த அப்போஸ்தலர்கள் முன்பு பெலவீனமும் கோழைத்தனமுமுள்ளவர்களாய் இருந்தார்கள். பின்போவெனில், சடுதியாக ஆச்சரியத்துக்குரிய தைரியத்தை அடைந்து, கஸ்தி ஆபத்து வேதனை முதலியவைகளுக்குச் சற்றும் அஞ்சாமற் சுவிசேஷத்தைப் போதித்தார்கள். அவர்களுடைய ஒழுக்கம் முழுதும் பரிசுத்தமானதாய் இருந்தது. அவர்களுடைய போதகத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள் முதலாய் அவர்களது சன்மார்க்க நடைக்கு விரோதமாக யாதொன்றும் பேசக்கூடாதவர்களாய் இருந்தார்கள். அவர்கள் சருவேசுரன்மட்டில் அத்தியந்த பத்தி உள்ளவர்கள் என்பதையும், எல்லா மனிதர்மட்டிலும் உண்மையான அன்புடையவர்கள் என்பதையும், களங்கமற்ற சன்மார்க்கர் என்பதையும் அவர்களுடைய நூல்களுஞ் செய்கைகளும் தெளிவாய் அத்தாட்சிப்படுத்துகின்றன. இவ்வாறு, கிறீஸ்துவேதத்தின் முதற்பிரசங்கிகளாகிய அப்போஸ்தலர்கள் புதுமனுஷராகித் தங்கள் தெய்வீக தொழிலை அதற்கேற்ற தருமநெறியில் நின்று மரணபரியந்தம் தளராத ஊக்கத்தோடு நடத்திக்கொண்டுவந்ததினால், அவர்களுக்குச் சருவேசுரன் சனுவாய் இருந்தாரென்பது தானாய் விளங்குகின்றது.

62. (III) கிறீஸ்துவேதமானது உச்சிதமான போதகத்தை அடக்கியிருக்கின்றதென்பது 1-வது, சருவேசுரனைப்பற்றி அது போதிக்கும் சத்தியங்களாற் தெளிவாகின்றது. எவ்வாறெனில்,

சருவேசுரன் ஒருவர்; அவர் சருவலக்ஷண சம்பூரணர்; அவர் அனைத்தையும் சிருட்டித்தவர்; அவர் அளவில்லாதவர்; எங்கும் வியாபிப்பவர்; அவர் அநந்தஞானி; தருமத்துக்குச் சம்பாவனை கொடுத்து அதர்மத்துக்கு ஆக்கினையுமிடுபவர்; அவர் உத்தமர்; இரக்கமுள்ளவர்; தன்பாவங்களின்மேல் துக்கமுள்ள பாவிக்கு மன்னிப்புக்கொடுக்க எப்போதும் ஆயத்தமாய் இருப்பவர்; தாம் சிருட்டித்த சகல பொருட்களுக்கும் பேருபகாரியாய் விளங்குபவர் என்று இவை முதலான மாட்சிமையுள்ள சத்தியங்களைக் கிறீஸ்துவேதம் மனிதருக்குப்போதித்து, அவர்கள் தங்கள் சிருட்டிகருத்தாவைச் சிநேகித்தும் பத்தியோடு சேவித்துங்கொண்டுவரச் செய்கின்றது. 2-வது, மனிதனுடைய உற்பத்தி, சுபாவம், அந்தஸ்து, கதி முதலியவைகளைச் சார்ந்த போதகங்களாற் தெளிவாகின்றது. எவ்வாறெனில், மனிதனானவன் ஓர் அழிவில்லாத ஆத்துமமும் ஓர் அழிவுள்ள சரீரமுங்கொண்ட வஸ்து என்றும்; அவன் சுயாதீனம் உள்ளவன் என்றும்; இம்மையிற் சருவேசுரனை அறிந்து சிநேகித்துச் சேவித்தபின் மறுமையில் மோக்ஷபேரின்பத்தைச் சுதந்தரித்துக்கொள்ள நியமிக்கப்பட்டவன் என்றும் தெளிவித்தபின், பரிசுத்தமும் பாக்கியமுமான அந்தஸ்திலே உண்டாக்கப்பட்ட மனிதன் பாவத்தினாற்கெட்டு சகலவித ஆசாபாசங்களுக்கும் அறியாமை சாவு நோவு நரகமுதலிய ஆக்கினைகளுக்கும் உள்ளாகியிருந்தவிடத்து, சருவேசுரன் தம்முடைய திருக்குமாரனின் திருமரணத்தால் அவனை இரட்சித்து மோக்ஷ உரிமைக்கு ஆளாக்கிவைத்தார் என்றும்; அவன் இம்மையில் எவ்வளவு துன்பதுரிதங்கள் நேரிட்டாலும் தனக்கு நியமிக்கப்பட்ட மேலுலக பாக்கியத்தைத் திடம்பாத நம்பிக்கையோடு தேடவேண்டும் என்றும் படிப்பிக்கின்றது.

63. (IV) கிறீஸ்துவேதம் களங்கமற்ற ஒழுக்கநெறியைப் போதிக்கின்றதென்பது 1-வது, சகல மனிதரும் சருவேசுரனுக்கு ஆராதனை சிநேகம் நம்பிக்கை நன்றியறிந்தஸ்தோத்திரம் முதலிய வழிபாடுகளைச் செய்யவேண்டும் என்றும்; 2-வது, எல்லா மனிதரும் தங்கள் புறத்தியார்மட்டில் குறைவற்ற நீதியை அநுசரித்து அவர்களை உண்மையாகச் சிநேகித்துப் பகைவர்மேலும் அன்புகூர்ந்து வரவேண்டுமென்றும்; 3-வது, குடும்பங்களுக்குட் சமாதானமும், ஸ்திரி புருஷருக்குள் அன்னியோன்னிய சிநேகமும், தகப்பனிடத்தில் அவனுக்குரிய அதிகாரமும் அன்பும், பிள்ளைகளிடத்தில் அவர்களுக்குரிய அன்பும் கீழ்ப்படிதலும் வணக்கமும் இருக்கவேண்டும் என்றும்; 4-வது, எசமான்கள் தங்கள் ஊழியரைச் சிநேகிக்கவும், ஊழியர் தங்கள் எசமான்களுக்குக் கீழ்ப்படியவும், பிரசைகள் அரசரைத் தேவதானுபதிகளாக எண்ணி அவர்கள் அதிகாரிகளை வணங்கிக் கீழ்ப்படிந்து இருக்கவும் வேண்டுமென்றும்; 5-வது, சகல மனிதரும் தருமவழியில் நடந்து பாவமான கிரியைகளை அன்றிப் பாவமான சிந்தனைகளையும் விலக்கிவரவேண்டுமென்றும் அவ்வேதங் கற்பிப்பதால் தெளிவாகின்றது.



இவ்வண்ணமே, கிறீஸ்துவேதப் பிரமாணமானது ஒவ்வொருவருக்கும் நித்திய மோக்ஷ சம்பாவனையையாவது நித்திய நரக ஆக்கினையையாவது திட்டம்பண்ணும்படியாக அமைக்கப்பட்டிருப்பது, தேவஞானத்திற்கு யோக்கியமான செய்கையும் மனிதர் வேதகற்பனைகளை எல்லாம் சுமுத்திரையாய் அநுசரிப்பதற்கு ஓர் தகுந்த உபாயமுமாமே.

64. (V) கிறீஸ்துவேதத்திலுள்ள பரிசுத்த சடங்காராதனைகளும் அது தேவவேதம் என்று ஒப்பிப்பதற்கு அத்தாட்சிகளாம். உள்ளபடியே, கிறீஸ்துவேதத்தில் வழங்கும் தேவதிரவியானுமானங்கள் பூசை பிரார்த்தனைகள் திருநாட்கொண்டாட்டங்கள் பிரசித்தசெபம் சுற்றுப்பிரகாரம் முதலான சடங்கு ஆசாரங்கள் எல்லாம் மனிதருடைய இருதயங்களில் தேவபத்தி தேவசிநேகம் தேவபயம் ஆதியவைகளை உண்டாக்கி வளர்க்கவும், தேவ இரகசியங்களையும் தேவகற்பனைகளையும் நினைப்பூட்டிச் சகலரையும் தேவவழிபாட்டில் நிலைநிறுத்தவும் ஏற்பட்ட மேலான உபாயங்கள் அன்றோ? அன்றியும், வேதக்கொண்டாட்டங்களின் மகத்துவமாட்சிமை எல்லாருடைய மனங்களையும் உருக்கமான இன்பமான பத்தி உணர்ச்சிகளால்நிரப்பும் பரம உபாயங்கள் அன்றோ? இவ்வாறே, தேவன் மனித அவதாரஞ்செய்து ஒரு மாட்டுத்தொட்டியிலே வைக்கோல்மீது சிறு குழந்தையாய் வளர்த்தப்பட்ட செய்தியானது வருஷந்தோறும் கொண்டாடப்படும் அர்த்தசாம மகோற்சவ காட்சியால், தேவசிநேகமும் தாழ்ச்சியும் உலகவெறுப்பும் கொள்ளாத இருதயங்கள் இல்லை என்பதும்; உலக இரக்ஷகரது கஸ்தி பீடை மரணங்களின் கொண்டாட்டத்தினால் உருகி இழகாத மனங்கள் இல்லை என்பதும் நிச்சயமே. யேசுநாதர் மரணத்தைச் செயித்து உத்தானமான மகோற்சவ கொண்டாட்டத்தில் தேவநம்பிக்கையாற் பூரித்துக்களியாத உள்ளத்தைக்காண்பது அரிதேயாம். ஆதலால், திருச்சபையில் அநுசரிக்கப்படும் திருச் சடங்கு ஆராதனைகளும் கிறீஸ்துவேதத்தின் தேவ உற்பத்தியைக் காண்பிக்கின்றனவென்று உணர்ந்துகொள்க.

65. இனி, யேசுக்கிறீஸ்துநாதர் மெய்யான தேவன் அல்லாவிடில், வறிய தாய் தந்தையரிடத்திற் பிறந்து கல்விசாஸ்திரமின்றி

முப்பதுபிராயமட்டும் மிக்க கஸ்தியும் பிரயாசமுமான தச்சுத்தொழிலிலே பயின்றுவந்த அவர், உலகத்தில் எங்கும் இல்லாத பரம ஞானமும் தெய்வத்தன்மையான பரிசுத்ததனமும் உள்ளவராகியிருக்கமாட்டார். எக்காலத்திலாவது எத்தேசத்திலாவது உயர்ந்த ஞானத்தால் கீர்த்திபெற்று விளங்கிய சாஸ்திரிகளுக்கெல்லாம் எட்டாத சத்தியங்களும் கற்பனைகளும் அடங்கிய ஞானபோதகத்தை அவர் செய்திருக்கமாட்டார். மீளவும், மேலேகண்டவாறு பலவீனம் கோழைத்தனம் அகப்பற்றுப் புறப்பற்று முதலான தீக்குணங்களையே இயற்கையாயுடைய அப்போஸ்தலர்கள் சடுதியாய் வேறுமனிதராகி, தாழ்ச்சி ஞானம் தற்பரித்தியாகம் தேவசிநேகம் ஆதியாம் சுகிர்த இலக்ஷணங்களாற் சிறந்து விளங்கினது அவர்களுடைய பரம குருவின் தேவ வல்லமையால் அன்றி நிகழ்ந்திருக்கக் கூடுமோ? கூடாதாகையால் யேசுக்கிறீஸ்து மெய்யான தேவனே என்றும், அவர் அருளிச்செய்த வேதமே ஆத்தும ஈடேற்றத்துக்கு ஏக வழி என்றும் தீர்மானித்துக்கொள்ளக்கடவோம்.

### IV. கிறீஸ்துவேதத்தின் தாபகத்தினாலும் விருத்தியாலும் பெறப்படும் அத்தாட்சி

66. அப்போஸ்தலர்களது காலத்திற்றானே பலஸ்தீனா சின்ன ஆசியா கிரேசியா இத்தாலியா இஸ்பானியா முதலான தேசங்களில் கிறீஸ்துவேதம் பரம்பி இருந்ததென்று அப்போஸ்தலர்கள் நடபடி ஆகமத்திலும் அநேக நிருபங்களிலும் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கின்றது. மகா சாஸ்திரியாகிய தெற்றுல்லியானு என்பவரும் அர்ச். வேதசாட்சி யுஸ்தீனுவும் எழுதியிருக்கிறபிரகாரம்: அப்போஸ்தலர்கள் மரித்து நூறு வருஷங்கள் ஆகுமுன் யேசுக்கிறீஸ்துவின் திருநாமமானது அநேக அநேக சனங்களால் வணங்கப்பட்டும், பட்டினங்களும் பட்டிக்காடுகளுந் தீவாந்தரங்களும் கிறீஸ்துவேத அநுசாரிகளால் நிறைந்துமிருந்தன. அன்றியும், முதற் கிறீஸ்தவ சக்கரவர்த்தியாகிய கொன்ஸ்தந்தீனு செங்கோல்நடாத்துமுன்னமே சுவிசேஷபோதகம் உலகத்தின் அஷ்டதிக்கிலும் அநுசரிக்கப்பட்டிருந்ததென்பதற்கு அநேக சரித்திர அத்தாட்சிகள் உண்டு. கிறீஸ்தவர்களேயன்றி அஞ்ஞானிகளுமே இதற்குச் சாட்சியிடுகிறார்கள் என்று அவர்கள்நூல்களால் தெளிந்துகொள்ளலாம்.

கிறீஸ்துவேதமானது சிலவருஷங்களுக்குள் இத்தனை தீவிரமாக உலகமடங்கலும் பரம்பிவிட்டதாகிய சம்பவம், அவ்வேதம் தெய்வீகமானது என்பதற்கு அறிகுறியாய் விளங்குகின்றது. எவ்வாறெனில், சருவேசுரன் தமது அற்புதமான செய்கையால் நீக்கினால் அன்றி, மனிதரால் நீக்க ஒருகாலுங் கூடாத சுபாவ விக்கி



னங்களை எல்லாம் செயித்து உற்பத்தியாகிப் பரம்பும் வேதமெதுவோ அது தெய்வீகம் ஆகவேண்டியது. கிறீஸ்துவேதமோ சருவேசுரனுடைய மெய்யான அற்புதத்தால் அன்றி மனிதரால் ஒருபோதும் நீக்கக்கூடாத உண்மையான விக்கினங்களைச் செயித்து உண்டாகி உலகமடங்கலும் பரந்தது. ஆகையால், அது தெய்வீக வேதமேயாம். இங்கேகுறித்த விக்கினங்கள் ஐந்துவகைப்படும். அவற்றுள் முதலாம்வகையானது போதகத்தைப்பற்றிய விக்கினமாம். எவ்வாறெனில், கிறீஸ்துவேத போதகமானது மனிதருக்கு இன்பத்தைக் காண்பித்து அவர்களைத் தன்வசப்படுத்தக்கூடியதாயிராமல், அவர்களுடைய புத்தி மனம் சித்தங்களுக்கு மிகவும் வெறுப்பும் அநுசரிக்கக் கடுமையுமாயிருந்தது. அது படிப்பித்த சத்தியங்கள் மானிட புத்திக்கு எட்டாதவைகளாகவும், அது தெரிவித்த தேவ இரகசியங்கள் அக்காலத்துச் சமய கொள்கைகளுக்கும் தத்துவ சாஸ்திரிகளின் படிப்பினைகளுக்கும் முழுதும் விரோதமானவைகளாகவும் இருந்தன. மனிதரால் கண்டுபிடிக்கக்கூடாத இவ்வித நூதன சத்தியங்களைத் தெரிவித்து அவைகளை எல்லாமனிதரும் அங்கீகரித்துக்கொள்ளவேண்டுமென்று கற்பித்த போதகந்தானே, அவைகளை ஏற்றுக்கொள்ளாத எவரும் மோக்ஷ பேரின்பத்தை அடையார்கள் என்றும் நித்திய நரக ஆக்கினைகளுக்கு உள்ளாவார்கள் என்றும் துணிவோடு கூறிக்கொண்டுவந்தது. அன்றியும், சகலவித துர்மார்க்கங்களையும் கண்டித்து அவைகளை மனிதர் விலக்கவும், சன்மார்க்கத்தைப் புகழ்ந்து இவைகளை மனிதர் அநுசரிக்கவும் வேண்டிய விதிமுறைகளை ஏற்படுத்திச் சகலரும் ஐசுவரிய சுகபோகங்களை வெறுத்தும், நிந்தை அவமானங்களைச் சகித்தும், தங்கள் துர்ச்சுபாவத்தோடும் ஆசாபாசங்களோடும் பொருந்தாத தவமுதலான பல தர்மக்கிரிகைகளில் பயின்று வரவேண்டுமென்று கற்பித்துக்கொண்டு வந்தது. ஆதலால், கிறீஸ்துவேத போதகத்தின் இயல்பை ஒருவன் நன்றாய் ஆராயுமிடத்து அது உலகத்தில் ஸ்தாபகமாகவும் எங்கும் பரம்பவும் தானே தனக்கு ஓர் தடையாய் இருந்ததென்று எளிதிற் கண்டுபிடிப்பான்.

இரண்டாம் வகையான விக்கினமாவது கிறீஸ்துவேதத்தை முதன்முதற் போதித்தவர்களிடத்திலே காணப்பட்ட தடையாம். எவ்வாறோவெனில், முதற் சுவிசேஷ பிரசங்கிகளாகிய அப்போஸ்தலர்கள் வேதபோதகருக்கு உரிய குணங்கள் அற்றவர்களாயிருந்தார்கள். அவர்கள் கல்வி அறிவும் வாய்ச்சாலகமும் கொண்டவர்களல்ல. கிரேக்கராலும் உரோமராலும் புறக்கணிக்கப்பட்ட யூதசாதியைச் சேர்ந்தவர்களாகவும், சீர்திருத்தம் கணிசம் பணம் பண்

டம் பாக்கியம் இல்லாத ஏழை மீன்பிடிகாரராகவும் இருந்தார்கள். சிற்றறிவுடைய இவ்வேழைப் பிரசங்கிகள் சிலுவையிலே அறைந்து கொல்லப்பட்டவராகிய யேசுக்கிறீஸ்துவைப் பிரசங்கித்தபோது, அவரை விசுவசித்து மனந்திரும்புவோர்களுக்கு இவ்வுலக சுக செல்வ பாக்கியங்கள் கிடைக்குமென்று வாக்குப்பண்ணாமல், அன்னோர் இம்மையிற் துன்பதுரித ஆக்கினைகளையுங் கொடிய மரணத்தையும் அநுபவிக்க எப்போதும் ஆயத்தமாய் இருக்கவேண்டும் என்றே போதித்துக்கொண்டுவந்தார்கள். அறிவீனர் என்றும் கீழ்மக்கள் என்றும் உலகத்தாற் புறக்கணித்துத்தள்ளப்பட்ட இவ்வேழைப் பிரசங்கிகள் பேர்போந்த தத்துவ ஞானிகளாலும் பராக்கிரம அரசர்களாலும் உந்நத விவேகமுள்ள ராசகாரியஸ்தர்களாலும் செய்யக்கூடாத ஆச்சரியங்களைச் செய்து, கொஞ்சக்காலத்துக்குள் உலகத்தைத் தங்கள் வசமாக்கிக்கொண்டார்கள் என்பது மறுக்கப்படாத ஒரு சம்பவமாம்.

மூன்றாம்வகையான விக்கினமாவது, கிறீஸ்துவேதம் யாருக்கு முதன்முதல் போதிக்கப்பட்டதோ அவர்களில் இருந்த தடையாம். எவ்வாறெனில், மோசேசுவால் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேத சடங்காசாரங்களை விடாப்பிடியாய்ப் பற்றிக்கொண்டிருந்த யூதசாதியார், அவ் வேதசடங்கு ஆசாரங்களைத் தள்ளிவிட்டு புதிதானவைகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்குள்ளவர்களாயிருக்கவில்லை. அன்றியும், யேசுக்கிறீஸ்துவுக்குச் சென்ம சத்துருக்களாய் இருந்து அவருடைய போதகங்களைச் சகிக்கமாட்டாமல் அவர்மேற் பொய்யான குற்றங்களைச் சாட்டி நிஷ்டூரமாய் வாதித்துக் கொலைப்படுத்தியபின் அவரை மெய்யான மேசியா என்று ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நினைக்கவுங்கூடுமோ? அவர்கள் கிறீஸ்துவையும் அவரது போதகத்தையும் கைக்கொள்ளுவதைக்காட்டிலும் சீவனை இழந்துவிடவே ஆயத்தமாயிருந்தார்கள்.

அஞ்ஞானிகளாவது சுவிசேஷ போதகத்தை எளிதாய் ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாய் இருந்தார்களோ எனில், இல்லை. ஏனெனில், அவர்கள் தங்கள் உயர்ந்த குடிப்பிறப்பின் கீர்த்தியும், தங்கள் சமயத்தின் ஆடம்பர வீண்பத்திகளும், திருவிழாக் காட்சிகளும், பிரசித்த விளையாட்டுக் கொண்டாட்டங்களும், தங்கள் தேவாதிகளும் பூசாரிகளும் துன்மார்க்கத்திற்கொண்ட பற்றுதல் பழக்கங்களுமாகிய இவைகளின் நிமித்தம் கிறீஸ்துவேத போதகத்தைத் துவேஷித்துத் தள்ளுவோரானார்கள். பூசாரிகளோவெனில் சனங்கள் கிறீஸ்துவேதத்தைக் கைக்கொண்டால் தங்கள் கீர்த்தி செல்வங்களுக்கு இடையூறு நேரிடுமென்று அஞ்சிச் சனங்கள் எல்



லாம் தங்கள் சொந்தச்சமயத்தை அநுசரிக்கிறதே இராச்சியத்துக்கு உறுதிநிலையாம் என்று போதித்துக்கொண்டுவந்தார்கள். அதன்றியும், உரோம இராசாங்கமும் தன் சமயத்தைவிட்டு வேறு எந்தச் சமயத்தையும் எவனாவது கைக்கொள்ளக்கூடாது என்று கட்டளைச்சட்டம் பிறப்பித்திருந்ததைச் சகலரும் அறிந்திருந்தார்கள்.

நாலாம்வகையான விக்கினமாவது, காலத்தையும் இடத்தையும்பற்றிய எதிரிடையாம். எவ்வாறெனில், கிறீஸ்துவேதம் பிரசங்கிக்கப்பட ஆரம்பமான காலத்தில் தத்துவசாஸ்திரமும் நாகரீக வித்தைகளும் சகலவித கலைக்கியானங்களும் சிறந்து விளங்கி, மகா கீர்த்திபோந்த அநேக ஆயிரம் வித்துவசிரோன்மணிகளும் தேங்கி இருந்தார்கள். அத்தன்மையான காலத்தில் சிற்றறிவுள்ள வலைஞராற் போதிக்கப்படும் நூதனமான ஓர் வேதஞ் செல்லுமென்றாவது, கல்விமான்கள் அவர்களுடைய போதகத்துக்குச் செவிகொடுத்து அங்கீகரிப்பார்கள் என்றாவது கனவிலும் நினைக்கக்கூடாதே. மேலும், சுவிசேஷபோதகர்கள் தங்கள் வேதத்தை எங்கே பிரசங்கிக்கத்தொடங்கினார்கள்? பட்டிக்காடுகளிலும் மூலைமுடுக்குகளிலுமா? இல்லையே. எல்லாத்தேசங்களையும் தங்கள் வசமாக்கவேண்டுமென்று எண்ணி, அவர்கள் பெரிய பட்டினங்களின் மத்தியிலும் செபக்கூடங்களிலும் தேவர் கோயில்களிலும் வித்துவான்கள் கூடிய சங்கங்களிலும் இராசமாளிகைகளிலுமே பிரசங்கிக்க முற்பட்டார்கள். அம்மட்டோ! தங்களுக்கும் தங்கள் படிப்பினைக்கும் சென்ம சத்துருக்களாய் இருந்தவர்கள் வாசம்பண்ணின யெருசலேம் பட்டினத்திலும் பலஸ்தீனாதேசமடங்கலுமே போதிக்கத் துணிந்தார்கள் என்றால், அவர்களது போதகம் பலிக்குமென்று சொல்வது எவ்வாறு?

ஐந்தாம் விக்கினமாவது, கொடுங்கோல் அரசர்களாற் பிறந்த தடையாம். எவ்வாறெனில், கிறீஸ்துவேதம் ஆரம்பித்தநாள் முதல் முந்நூறு வருஷங்களாக அவ்வேத அநுசாரிகள் எல்லாம் நிந்திக்கப்பட்டும், பொருள் பறிக்கப்பட்டும், சாதியாற் தள்ளப்பட்டும், கண்ட கண்ட இடங்களில் பிடிக்கப்பட்டும் கொடியமரணத்துக்குத் தீர்வையிடப்படவேண்டுமென்று இராசநீதி நடந்துகொண்டுவந்தது. ஆயினும், சித்திரவேதனைகருவிகள் அதிகரிக்க அதிகரிக்க, கிறீஸ்துவேதமும் வளர்ந்துகொண்டேவந்தது. கிறீஸ்தவர்கள் எத்தனை ஆயிரம்பேர் மரித்தார்களோ அத்தனை ஆயிரம்பேருக்கு அதிகமான அஞ்ஞானிகளும் பிறரும் மனந்திரும்பிக் கிறீஸ்தவர்களானார்கள். அதின் நிமித்தமே, வேதசாட்சிகளின் இரத்தம் புதுக் கிறீஸ்த

வர்களைப் பிறப்பிக்கும் வித்தாமென்று தெற்றுல்லியானு சொல்லிய வாக்கியம் பழமொழியாகக் கூறப்பட்டுவந்தது.

மேலே எடுத்துக்காட்டிய ஐந்துவகையான விக்கினங்களையும் நடுநிலைமையோடு சீர்தூக்கிப்பார்ப்பவர்கள் எல்லோரும் அவைகள் சருவேசுரனால் அன்றி எந்த மனிதனாலும் தவிர்க்கக்கூடாதவைகளே என்றும், கிறீஸ்துவேதமானது அவ்விக்கினங்களைச் செயித்து உலகமுழுதும் பரம்பினபடியால், அது சருவேசுரனுடைய உதவியைப் பெற்று விளங்கும் தெய்வீகவேதமேயென்றும் ஒருவாய்ப்படக் கூறுவார்கள்.

மீளவும், அர்ச். அகுஸ்தீன் என்னும் மகா பண்டிதர் தமது காலத்து அவிசுவாசிகளுக்குக் கிறீஸ்துவேதம் தெய்வீகமானது என்று ஒப்பிக்கும்படி சொன்ன நியாயமாவது:— கிறீஸ்துவேதமானது ஒன்றில் அற்புதங்களைக்கொண்டு ஏற்படுத்தப்பட்டதாய் இருத்தல்வேண்டும். ஒன்றில் அற்புதங்களின்றி ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அற்புதங்களைக்கொண்டு ஏற்படுத்தப்பட்டது என்றால், அது தெய்வீக வேதமென்பதற்கு ஒரு சிறிதேனும் சந்தேகமில்லை. இனி, அற்புதங்கள் இன்றி ஏற்படுத்தப்பட்டது என்றால், உலக கல்விச்சாஸ்திரவறிவில்லாதவர்களும் தாழ்ந்த குடியிற் பிறந்தவர்களுமான அப்போஸ்தலர்கள் அற்புதங்களின் உதவியின்றி எல்லா விக்கினங்களையும் மேற்கொண்டு எண்ணிக்கையில்லாத மனிதரை மனந்திருப்பி அவ்வேதத்தை உலகமடங்கலும் பரம்பச்செய்ததே அற்புதங்களுள் மேலான அற்புதமாம் என்றார்.

இனி, லத்தெரான் எனும் சாதாரண திருச்சபைச் சங்கத்தின் மூன்றாவதுகூட்டத்தில் உச்சரிக்கப்பட்ட நாலு சாபத்தீடுகளை இங்கே எடுத்துக் காட்டி இவ்வதிகாரத்தை முடிக்கக்கடவோம்.

1-வது, மனிதன் சிருட்டிக்கப்பட்ட வஸ்துக்களைப் பார்த்துச் சிருட்டிகர்த்தாவாகிய ஏக மெய்யான கடவுளைத் தன்சொந்தப் புத்தியால் நிச்சயமாகவறிந்துகொள்ளல் கூடாதென்று எவனாவது சாதித்தால் அவனுக்குச் சாபம்.

2-வது, மனிதன் தேவவெளிப்படுத்தலினால் சருவேசுரனையும் அவருக்குச் செய்யவேண்டிய வழிபாடுகளையும்பற்றி உணர்த்தப்படுதல் கூடாதென்று எவனாவது சாதித்தால் அவனுக்குச் சாபம்.

3-வது, மனிதன் தன்சுபாவத்திற்கு மேற்பட்ட அறிவுக்கும் சாங்கோபாங்கத்துக்கும் தெய்வீகமாய் உயர்த்தப்படுதல் கூடாது என்றும், அவன் படிப்படியாகவே சகல சத்தியங்களையும் சகல



நன்மையையும் தானாகக் கண்டுபிடித்து அடைந்துகொள்ளவேண்டியவனாய் இருக்கிறான் என்றும் எவனாவது சாதித்தால் அவனுக்குச் சாபம்.

4-வது, எவனாவது பரிசுத்த வேத ஆகமநூல்களை திரேந்து நகர்ச் சாதாரண பரிசுத்த சங்கமானது தொகுத்தும் வகுத்துங் காண்பித்திருக்கிற பிரகாரம் முழுமையாகக் கைக்கொள்ளாவிட்டால், அல்லது அந்நூல்களை எழுதினவர்கள் தேவ ஏவுதலினாலே அவைகளை எழுதவில்லை என்று சாதித்தால் அவனுக்குச் சாபம்.

# 4-ம் அதிகாரம்

## யேசுநாதருடைய மெய்யான திருச்சபை

1-வது. மெய்யான திருச்சபையின் அறிகுறிகள். 2-வது. திருச்சபையின் அதிகாரம். 3-வது. திருச்சபைத் தலைவர். 4-வது. திருச்சபையின் அவயவங்கள்.

67. உலகத்திலே கிறீஸ்துவேத சபை என்னும் நாமத்தோடு தற்காலம் அநேகசபைகள் வழங்கிக்கொண்டுவருகின்றன. அவற்றுள் ஒவ்வொன்றும் தனித்தனியே தான்தான் யேசுநாதருடைய மெய்யான சபை என்று சாதிக்கும். சாதிப்பினும், அவை எல்லாம் மெய்யான சபையாய் இருத்தல் கூடாது. அவற்றுள் ஒன்றேயொன்று, அதாவது, யேசுக்கிறீஸ்துவையே தனது ஸ்தாபகராகக் கொண்டும், அவரால் ஏற்படுத்தப்பட்ட காலமுதல் இந்நாளீறாக மாறுபடாமல் நிலைநின்றும், அவராற் போதிக்கப்பட்ட போதகத்தை முழுதும் தன்னிடத்திற் காப்பாற்றியும், அவராற் தமது வேதத்துக்கு நியமிக்கப்பட்ட இலக்ஷணங்களை எல்லாம் பூண்டும் இருக்குஞ் சபை ஒன்றே மெய்யான சபையாய் இருத்தல் வேண்டும். அச்சபையே யேசுநாதரின் மெய்யான திருச்சபையென்று சொல்லுதற்கு உரியது.

திருச்சபையாவது என்னவெனில் வேதவிசுவாசத்தையும் தேவதிரவிய அநுமானங்களையும் பேதமின்றிக் கைக்கொண்டும், தன் காணப்படாத தலைவராகிய யேசுக்கிறீஸ்துநாதரின் பதிலாளியாகிய அர்ச். பாப்புவுக்குக் கீழ்ப்படிந்தும் ஒழுகும் விசுவாசிகளின் கூட்டமேயாம்.

68. திருச்சபையானது விசுவாசிகளின் ஓர் கூட்டமாகையால் அது உயிருள்ள ஓர் ஞான சரீரமாயிருக்கின்றது. அதற்கு ஓர் ஞான ஆத்துமமும் உண்டு. திருச்சபையின் சரீரமாவது வேத விசுவாசத்தையும் தேவதிரவிய அனுமானங்களையும் ஒரே தன்மையாகக் கைக்கொண்டு, முறைமையான ஞான அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்து ஒழுகும் விசுவாசிகளாம். திருச்சபையின் ஆத்துமமோவெனில், இஸ்பிரீத்துசாந்து சருவேசுரனாம். இவரே விசுவாசம் நம்பிக்கை தேவசிநேகம் முதலான தேவபுண்ணியங்களை விசுவாசிகளாகிய உடலுக்குக் கொடுத்து அவர்களிடத்தில் ஞானச் சீவனை உண்டாக்குகிறவர். விசுவாசம் முதலான புண்ணியங்கள் மூலமாக விசுவாசிகள் தங்கள் உயிராயிருக்கிற இஸ்பிரீத்துசாந்துவோடு சம்பந்தப்படுவார்கள். மனிதருட் சிலர் திருச்சபையின் சரீரத்துக்கும் ஆத்துமத்துக்குஞ் சேர்ந்தவர்கள். இவர்கள் யாரெனில் புண்ணியங்களும் வரப்பிரசாதங்களும் உடையவர்களாய்ச் சீவிக்கும் விசுவாசிகளாம். சிலர் திருச்சபையின் சரீரத்துக்கு மாத்திரம் சேர்ந்தவர்கள். இவர்கள் இஷ்டப்பிரசாதமின்றிச் சீவிக்கும் விசுவாசிகளாம். வேறுசிலரோவெனில், தங்களிடத்திற் பாரமான ஒரு குற்றமும் இல்லாவிடினும், யாதேனும் ஒரு நியாயத்தின் நிமித்தம், திருச்சபையின் சரீரத்துக்குச் சேராமல் ஆத்துமத்துக்கு மாத்திரஞ் சேர்ந்தவர்களாய் இருக்கலாம். ஆதலால் திருச்சபையானது தன்சரீரத்தின்மட்டில் வெளியானதும் காணத்தக்கதும், தன் ஆத்துமத்தின்மட்டிலோ உள்ளானதும் காணக்கூடாததுமாம்.

இனி, மெய்யான திருச்சபையின் அறிகுறிகளையும், அதின் அதிகாரத்தையும், தலைவரையும், அவயவங்களையும் முறையே பின்வரும் நாலுபிரிவுகளிலும் விரித்துச் சொல்லுவோம்.

---

## 1-ம் பிரிவு

### மெய்யான திருச்சபையின் அறிகுறிகளின்பேரில்

69. இங்கே திருச்சபையின் அறிகுறிகள் என்பன, மெய்யான திருச்சபையைப் பொய்ச்சபைகளில் நின்று பகுத்தறிதற்கு உதவும் இயற்கையான பிரத்தியக்ஷ குணங்களாம். முற்காலத்திலே அநேக பதிதசபைகள் முளைத்துத் தங்களை மெய்யான திருச்சபையென்று பாராட்டிக்கொண்டுவந்தன. அவைகள் எல்லாம் காலகதியில் அழிந்து மறைந்துபோக, அவைகளுக்குப் பதிலாக பிற்காலம் சிற்சில தேசங்களில் வழங்கிக்கொண்டுவரும் தப்பறையான பல சபைகளும் உண்டு. அவைகளுட் பிரதானமானவை கிரேக்க சபை, சுவிசேஷசபை அல்லது புரோட்டெஸ்தாந்துசபை, அங்கிளிக்கன்சபையென்று பிரித்துச் சொல்லப்படும். கிரேக்கசபையானது, கிறீஸ்துவுக்குப்பின் ஒன்பதாம் நூற்றாண்டில் திருச்சபையிலிருந்து பிரிந்து உண்டாயிற்று. சுவிசேஷசபை அல்லது, புரோட்டெஸ்தாந்து சபை என்று சொல்லப்படுகிற பலசபைகளுக்கும் லூத்தேர் என்பவன் பதினாறாம் நூற்றாண்டில் செருமானியராச்சியத்தில் முதன்முதல் அடியிட்டான். லூத்தேருக்குப் பின்வந்த கல்வீன் என்பவனால் அத்தப்பறை பிராஞ்சு இராச்சியத்தின் ஓர் பகுதியிலும் முளைத்தெழும்பிற்று. இந்த இரண்டு பதித தலைவர்களினும் அநுசாரிகள் எல்லாம் புரோட்டெஸ்தாந்தர் என்னப்படுவர். அங்கிளிக்கன் சபை, இங்கிலாந்துதேசத்து அரசனாகிய எட்டாம் என்றி என்பவனால் உண்டாக்கப்பட்டது. இவ்வரசன் தன் முறைமையான பெண்ணை நீக்கி வேறு ஒரு பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ள அர்ச். பாப்புவாற் தனக்கு உத்தாரங் கிடைக்கவில்லையென்று கண்டு மிகுதியுஞ் சினந்து, தன் ஆளுகைக்கு உட்பட்ட சகலரையும் திருச்சபையில் இருந்து பிரித்து, அவர்களுக்குத் தன்னையே மேலான ஞான அதிகாரியாகவும் பாதுகாவலனாகவும் ஏற்படுத்திக்கொண்டான். ஆயினும், மற்ற வேதபோதகங்களிலும் அநுசாரங்களிலும் யாதேனும் ஒரு மாற்றத்தை உண்டாக்க அவன் துணியவில்லை. அவனுக்குப் பின் அரசாண்ட அவன் குமாரனாகிய ஆறாம் எட்வாட்டென்பவனோ அநேக புரோட்டெஸ்தாந்த தப்பறைகளை அச்சபையில் நுழைவித்துக்கொண்டான்.



இச்சபைகளில் ஒவ்வொன்றும் கொஞ்சக்காலத்துக்குள் தம்முள் ஒவ்வாத அநேக வெவ்வேறு சபைகளாய்க் கிளைத்து மலிந்துவிட்டது.

இவைகளை எல்லாம் தப்பறையான எதிர்ச்சபைகள் என்று துவேஷித்து விலக்கி இவைகளுக்குப் புறம்பாய்நின்று விளங்குங் கத்தோலிக்கு திருச்சபையானது தான்மாத்திரமே யேசுநாதரின் மெய்யான சபை என்றும் தன்னிடத்தில் மாத்திரமே ஆத்தும ஈடேற்றவழி உண்டென்றும் நியாயத்தோடு உரித்தாடிக்கொண்டுவருகின்றது.

யேசுநாதர் தமது சத்திய திருச்சபையை ஆத்துமவீடேற்றத்துக்கு ஒரேயொருவழியாக ஏற்படுத்தினபடியால், அதை நன்மனம் உள்ள எல்லோரும் எளிதிற் கண்டுபிடித்துக்கொள்ளக் கூடியவித

மாய் அதற்குச் சில விசேஷ அறிகுறிகள் அமைந்திருக்கவேண்டும். அவ்வறிகுறிகள் எவை என்றும் எத்தன்மையானவைகள் என்றுஞ் சொல்லிக்காட்டக்கடவோம்.

யேசுக்கிறீஸ்துநாதரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான திருச்சபைக்கு இருக்கவேண்டிய அறிகுறிகள் நாலு. அவை எவையெனில்:—ஏகம் பரிசுத்தம் சாதாரணம் அப்போஸ்தொலிக்கம் என்பவைகளே.

### I. திருச்சபை ஏகமானது

70. திருச்சபை ஏகமாயிருத்தலாவது, அது ஒரேவிசுவாசத்தையும் ஒரே ஆராதனையையும் ஒரே ஆளுகையையுங் கொண்டிருத்தலாம். ஆதலால், திருச்சபையின் சரீரத்துக்குச் சேர்ந்திருக்கிறவர்கள் எல்லாரும், 1-வது, சருவேசுரனால் வெளிப்படுத்தப்பட்டவைகளும், திருச்சபையாற் போதிக்கப்படுபவைகளுமாகிய சகல சத்தியங்களையும் கற்பனைகளையும் விசுவசித்து அநுசரிக்கவும், தப்பறைகள் என்று திருச்சபையாற் தீர்மானிக்கப்பட்ட சகல போதகங்களையுந் தள்ளிவிடவும் கடமைபூண்டவர்கள். 2-வது, திருச்சபையில் வழங்கும் தேவதிரவிய அனுமானங்களை எல்லாம் பேதமின்றிக் கைக்கொண்டும் சருவேசுரனுக்கு ஒரேவித பிரசித்த ஆராதனையைச் செய்தும் தங்களுக்குள் ஒரேவிதமான ஐக்கியப் பிரயோசனத்தை உண்டாக்கிக்கொள்ளவேண்டியவர்கள். 3-வது, திருச்சபையை ஆண்டுநடத்தும் முறைமையான அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்திருக்கக் கடமைப்பட்டவர்கள். ஆதலால் ஒரே போதகத்தாலும் ஒரே ஐக்கியப் பிரயோசனத்தாலும் ஒரே ஆளுகையாலுமே மெய்யான திருச்சபை ஏகமாயிருக்கின்றதென்று விளங்கிக்கொள்ளவேண்டும். திருச்சபையானது போதகத்தால் ஏகமாயிருப்பதால், அது தன்னைச்சேர்ந்தவர்கள் எல்லாரும் ஒரே விசுவாசமுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்று கற்பித்து, தான் போதிக்குஞ் சத்தியங்களை ஏற்றுக்கொள்ளாதவர்களையும் புதிதான போதகங்களை உண்டாக்குகிறவர்களையும் தனக்குப் புறம்பாகத் தள்ளிவிடும். புதிதான போதனைகள் மெய்யான திருச்சபையில் உண்டாகக் கூடாது. அது ஆதியிலே விசுவசித்ததையே எப்போதும் விசுவசிக்கும். அதின் விசுவாசம் ஒருகாலும் வேறுபடாது. தற்போது திருச்சபைக்குப் பிள்ளைகளாய் இருக்கிறவர்கள் எல்லாரிடத்திலுமுள்ள ஒரே விசுவாசந்தானே முன்னிருந்த எல்லாவிசுவாசிகளிடத்திலும் இருந்திருப்பது அவசியம். அதுவே இனிவரும் எல்லா விசுவாசிகளிடத்திலும் எப்போதும் உலக முடிவுமட்டும் இருக்கவேண்டும்.



திருச்சபையின் விசுவாசம் அவசியம் ஒருபோதும் மாறுபடாமல் எப்போதும் ஒருதன்மையாய் இருக்கவேண்டியதுபோலவே; அதின் ஞானச் சீவியமும், ஞான ஆளுகையும் எப்போதும் ஒருதன்மையாய் இருக்கவேண்டியவைகளாம். யேசுநாதருடைய திருச் சுவிசேஷம் தொடங்கினபோது திருச்சபையில் அநுசரிக்கப்பட்ட ஏழு தேவதிரவிய அனுமானங்களும், வேதப்பிரமாணங்களால் விசுவாசிகளை ஆண்டுநடத்தும் ஞான அதிகாரமும், அந்நாள் தொட்டு உலகமுடிவுபரியந்தம் பூமியின் நாற்றிசையிலும் ஒரேவிதமாய் அநுசரிக்கப்பட்டுக்கொண்டு வரவேண்டியது.

71. யேசுநாதர் தமது திருச்சபையை ஞானச்சீவியம், விசுவாசம், ஞான ஆளுகை என்பவைகளில் ஏகமாய் இருக்கும்படி உண்டாக்கினார் என்பதற்கு வேதவாக்கியமும் பரம்பரையும் அத்தாட்சி கூறுகின்றன. 1-வது, வேதவாக்கியம் அத்தாட்சி கூறுவது எவ்வாறெனில் ;—புதிய ஏற்பாட்டு நூல்களில் திருச்சபையானது ஒரு குடும்பம் என்றும், ஒரு இராச்சியமென்றும், ஒரு பட்டணம் என்றும், யேசுநாதரைச் சிரசாயுடைய ஒரு தேகம் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால், ஒரு குடும்பத்தின் அங்கங்களும், இராச்சியத்தின் பிரசைகளும், பட்டணத்தில் வசிப்பவர்களும், தேகத்திலுள்ள அவயவங்களும் ஒரோர்விதத்தில் தம்முள் ஐக்கியப்பட்டிருப்பதுபோல, திருச்சபையின் மக்கள் எல்லாரும் விசுவாச முதலியவைகளால் தம்முள் ஒற்றுமைப்பட்டிருப்பது அவசியம். அன்றியும், யேசுநாதர் ஒன்றோடொன்று ஒவ்வாத விஷயங்களை அல்ல, முழுதும் பூரண இசைவுள்ள போதகங்களையே படிப்பித்தபடியால், அவருடைய திருச்சபையின் போதகங்களும் தம்முள் விரோதப்படாதவைகளாகவே இருத்தல் வேண்டும். 2-வது, பரம்பரை அத்தாட்சி கூறுவது எவ்வாறெனில்:—விசுவாசபோதகத்தை முழுமையாய் அங்கீகரியாதவர்களாய், திருச்சபையின் முறைமையான அதிகாரிகளை ஏற்றுக்கொள்ளாதவர்களாய் இருக்கும் பதிதரும் பிரிவினைக்காரரும் இரக்ஷணியவழியைவிட்டுத் தவறிப்போய் கிறீஸ்தவர்கள் என்ற பேருக்குத் தகாதவர்களாய் இருக்கிறார்கள் என்றும், இவர்களுடைய கூட்டங்களெல்லாம் யேசுநாதருடைய திருச்சபைக்கு விரோதமான அந்திக் கிறீஸ்துவின் கூட்டங்கள் என்றும், வேதசாஸ்திரிகள், வித்தியாபாரகர் திருச்சங்கத்தவர்களாகிய எல்லோரும் ஒருவாய்ப்படக் கூறியிருக்கிறார்கள். ஆதலால், யாராவது திருச்சபையின் சரீரத்துக்குச் சேர்ந்திருக்கவேண்டுமாகில், யேசுநாதருடைய திருச்சபையின் ஒரேவிசுவாசத்திலும் ஞானச்சீவியத்திலும் பங்குபற்றி

அதின் ஞான ஆளுகையின் கீழ் இருக்கவேண்டுமென்பது பிரத்தியக்ஷமாம்.

### II. திருச்சபை பரிசுத்தமானது

72. யேசுநாதர் தமது திருச்சபையைச் சிநேகித்து அதைப் பரிசுத்தப்படுத்தும்படி தம்மை மரணத்துக்குக் கையளித்தார் என்று அர்ச். சின்னப்பர் (எபே. 5-ம் அதி.) எழுதிவைத்த பிரகாரம், மெய்யான திருச்சபையானது பரிசுத்தமாயிருக்கவேண்டுமென்பது தெளிவான சத்தியமாம். 1-வது, அது தன்னை ஸ்தாபித்தவரிலே பரிசுத்தமாயிருக்கவேண்டும். 2-வது, தான்போதிக்கும் சத்தியங்களாலும், கற்பிக்கும் ஒழுக்க விதிகளாலும், கொடுக்குந் தேவ திரவிய அநுமானங்களாலும், செலுத்தும் தேவாராதனையாலும் பரிசுத்தமாயிருக்க வேண்டும். 3-வது, தன் அவயவங்களாகிய விசுவாசிகளிலே பரிசுத்தமாயிருக்க வேண்டும். மெய்யான திருச்சபைக்குச் சேர்ந்தவர்கள் எல்லாரும் சுத்தவாளரோவெனில், அல்ல. ஆயினும், மெய்யான திருச்சபையில் அந்தரங்கமான சுத்தவாளரொழியப் பகிரங்கமான அநேக ஆயிரம் சுத்தவாளர்கள் இருப்பார்களென்பதும், சருவேசுரன் இவர்களையும் இவர்களைப் பிறப்பித்த திருச்சபையையும் மகிமைப்படுத்தும்படியாக காலத்துக்குக்காலம் அற்புதங்களையும் செய்தருளுவாரென்பதும் நிச்சயமே.

### III. திருச்சபை சாதாரணமானது

73. மெய்யான திருச்சபை போதகத்திலும் காலத்திலும் இடத்திலும் சாதாரணமாய் இருக்கவேண்டும். திருச்சபை போதகத்தில் சாதாரணமாய் இருத்தலாவது, தன் தலைவராகிய யேசுநாதாற்தரப்பட்ட போதகத்தைச் சுத்தமாகவும் முழுமையாகவும் காப்பாற்றி வருதலாம். திருச்சபை காலத்திற் சாதாரணமாய் இருத்தலாவது, எக்காலத்திலாவது அது அழிந்துகெடாமல் அப்போஸ்தலர்காலந்தொட்டு இந்நாளீறுகவும் இனி இந்நாள்தொட்டு உலகமுடிவுபரியந்தமும் நிலை நிற்றலாம். திருச்சபை இடத்தில் சாதாரணமாய் இருத்தலாவது, எல்லாத் தேசங்களிலும் பரந்திருத்தலாம். போதகத்தில் சாதாரணமாயிருத்தல் ஏகமாய் இருத்தலோடும், காலத்திற் சாதாரணமாயிருத்தல் அப்போஸ்தொலிக்கமாய் இருத்தலோடும் சேருமாகையால், அவைகளைவிட்டு, திருச்சபை இடத்திற் சாதாரணமாய் இருத்தலைப்பற்றி மாத்திரமே இங்கே சில சொல்லக்கடவோம்.

யேசுநாதர் தமது திருச்சபையை ஸ்தாபித்தபோது, அது உலகமடங்கலும் பரந்து பொய்மதங்கள் அனைத்துக்கும் மேலாக



விளங்கவேண்டும் என்றும், சகல சாதிகளும் அதிற்சேர்ந்து ஆத்தும ஈடேற்றத்தை அடைந்துகொள்ளவேண்டும் என்றும் திருவுளமானார் என்பதற்கு அவருடைய திருச்சுவிசேஷ வாக்கியங்களே பிரத்தியட்ச அத்தாட்சிகளாம். எவ்வாறெனில், நீங்கள்போய்ச் சகலசாதியாரையும் படிப்பித்து நாம் உங்களுக்குப் போதித்தவைகளை எல்லாம் அவர்கள் அநுசரிக்கும்படி கற்பியுங்கள் என்றும் (அர்ச். மத்தேயு 28-ம் அதிகாரம்), தாம் பரலோகத்துக்கு எழுந்தருளுஞ்சமயத்தில்: இஸ்பிரீத்துசாந்துவின் வல்லமை உங்களுக்குக் கிடைக்கும், நீங்கள் யெருசலேமிலும் யூதேயா முழுவதிலும் உலக அந்தமட்டும் எனக்குச் சாட்சிசொல்லுவீர்களென்றும் (அப். நட. முதலாம் அதிகாரம்) யேசுநாதர் தம்முடைய அப்போஸ்தலர்களுக்குக் கற்பனை கொடுத்தருளினார்.

ஆதலால், அப்போஸ்தலர்களும் அவர்களைப் பின்தொடர்ந்து வந்த வேதபோதகர்களும் தங்கள் திவ்விய குருவின் கற்பனையைச் சிரமேற்கொண்டு உலகத்தின் எத்திசைக்கும்போய் வேதத்தைப் பிரசங்கித்துத் திருச்சபையை ஸ்தாபித்தார்கள். அவர்களுக்குப்பின் இஸ்பிரீத்துசாந்துவல்லமையைப் பெற்று விளங்கும் அநேக ஆயிரம் வேதபோதகர்கள் தளராமுயற்சியோடு கத்தோலிக்கு விசுவாசத்தை உலக முடிவுபரியந்தம் எல்லாத் தேசங்களிலும் பிரசங்கித்துத் திருச்சபையைப் பரம்பச்செய்துகொண்டு வருகிறார்கள்.

### IV. திருச்சபை அப்போஸ்தொலிக்கமானது

74. திருச்சபையானது அப்போஸ்தொலிக்கமாய் அதாவது அப்போஸ்தலர்களிலிருந்து தொடர்பாய் வருவதாயிருக்கின்றது என்பதற்கு மூன்றுநியாயங்களுண்டு. அவற்றுள் முதலாம் நியாயமென்னவெனில், யேசுநாதர் தம்முடைய அப்போஸ்தலர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் நமக்குச் சருவாதிகாரமும் கொடுக்கப்பட்டது. ஆதலால் நீங்கள்போய்ச் சகல சாதியாரையும் படிப்பித்துப் பிதாவுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்துசாந்துவுடையவும் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுங்கள் என்று கற்பித்தபடி அப்போஸ்தலர்களாலேயே அது ஸ்தாபிக்கப்பட்டதாயிருப்பதாம். இரண்டாம் நியாயமென்னவெனில், அப்போஸ்தலர்களாற் படிப்பிக்கப்பட்டதாகிய யேசுநாதருடைய போதகம் முழுதும் குறையாமலுங் கெடாமலும் அதிற் காப்பாற்றப்பட்டிருப்பதாம். அப்போஸ்தலர்களுடைய போதகமே எப்போதுந் திருச்சபையின் போதகமாயிருக்கவேண்டியதால், அப்போதகத்துக்கு ஒரு சிறிதேனும் விரோதமான போதகத்தைப் பரப்

பத் துணிந்த அனைவரையும் உடனே பதிதர் என்று தீர்மானித்து தன் ஒற்றுமையிலிருந்து தள்ளிவிடுவதே திருச்சபைத் துவக்கத்திலிருந்து அநுசரிக்கப்பட்டுவந்த சாதாரண விதியாயிருந்தது. இவ்விதியானது காலகதியில் சற்றேனும் மாறுபடாமல் எப்போதும் திருச்சபையில் அநுசரிக்கப்பட்டுக்கொண்டே வரும். ஆதலால், அப்போஸ்தலர்களது போதகத்தில் நின்றும் வேறான ஒரே ஒரு போதகத்தையாவது யாவனொருவன் படிப்பிக்கத் துணிந்தால் அவன் பதிதனாகத் திருச்சபையிலிருந்து தள்ளுண்டுபோவான். மூன்றாம் நியாயமென்னவெனில், நீங்கள் உலகமடங்கலும்போய்ப் பிரசங்கியுங்கள்......நாம் எப்போதும் உலகமுடிவுமட்டும் உங்களோடு இருக்கிறோம் (அர்ச். மத். 28-ம் அதி.) என்று யேசுநாதர் அப்போஸ்தலர்களுக்கு வாக்குப்பண்ணியபடி அப்போஸ்தலர்களை இடையறாத முறையோடு பின்தொடர்ந்துவரும் வேதபோதகர்களால் அது எப்போதும் ஆண்டு நடத்தப்பட்டிருப்பதாம்.

உலகமுடிவுபரியந்தம் நாம் உங்களோடு இருக்கிறோம் என்று யேசுநாதர் தம்முடைய அப்போஸ்தலர்களுக்குத் திருவுளம் பற்றினதினால், அவர் அவர்களோடிருந்து போதித்தும் தேவதிரவிய அனுமானங்களை வழங்கியும் திருச்சபையை ஆண்டுவந்தார் என்பதும், அப்போஸ்தலர்கள் இறந்தபின் அவர்களைப் பின்தொடர்ந்து வரும் முறைமையான அதிகாரிகளோடு எப்போதும் வாசம்பண்ணுகிறார் என்பதும் தெளிவாய் இருக்கின்றன. இவ்வண்ணமே, திருச்சபையானது அழியாததாயிருப்பதுபோல, யேசுநாதரால் அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்பட்ட உத்தியோகமும் அவர்களைத் தலைமுறைதலைமுறையாகப் பின்தொடர்ந்துவரும் வேத அதிகாரிகளிடத்தில் குறையாமலும் அழியாமலும் நிலைத்திருக்கும்.

ஆதலால் 1-வது அப்போஸ்தலர்களாற் போதிக்கப்பட்டதாகிய யேசுநாதரின் திவ்விய போதகமானது உலகமுடிவுபரியந்தம் யாதோர் மாற்றமுமின்றிச் சத்தியதிருச்சபையில் போதிக்கப்பட்டுக்கொண்டேவருமென்றும், 2-வது, அப்போஸ்தலர்களுக்குப் பதிலாய்வரும் ஞானவதிகாரிகள் திருச்சபையில் எப்போதும் இருப்பார்களென்றும், 3-வது, அப்போஸ்தலர்களிலிருந்து சங்கிலித்தொடர்போற் தொடர்ந்துவரும் மேற்றிராணிமார் குருமார் முதலான ஞானவதிகாரிகள் இல்லாத சபை எதுவோ அது மெய்யான சபை அல்லவென்றுந் தீர்மானித்துக்கொள்ளுதல்வேண்டும்.

75. அப்போஸ்தலர்களிடத்திலிருந்தாவது அவர்களைக் கிரமமாய்ப் பின்தொடர்ந்து வருபவர்களிடத்திலிருந்தாவது குருப்பட்டமும் ஞானவதிகாரமும்பெற்றவர்கள் மாத்திரமே திருச்சபையின்



முறைமையான ஞானமேய்ப்பர்களாய் இருப்பார்கள். மற்றெல்லாரும் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்ட ஓநாய்களன்றி மெய்யான இடையரல்ல. யேசுநாதர் அப்போஸ்தலர்களுக்குத் தமது அதிகாரத்தைக்கொடுத்து வேதத்தைப்போதிக்க அனுப்பினபோது, அவர்கள் வேறு ஞானமேய்ப்பர்களைத் தெரிந்து ஏற்படுத்தவும், இவர்களுக்குத் தங்கள் ஞானவதிகாரத்தைக்கொடுக்கவும் வேண்டுமென்று கற்பித்தார். அக்கற்பனையின்பிரகாரம், அப்போஸ்தலர்கள் அநேகம்பேரைத் தெரிந்தெடுத்துச் சிலரை மேற்றிராணிமாராகவும் சிலரைக் குருமாராகவும் அபிஷேகித்து, யேசுநாதரிடத்திலிருந்து நேராகத் தாங்கள் பெற்றுக்கொண்ட ஞான அதிகாரத்தையும் அவர்களுக்குக்கொடுத்து ஞானமேய்ப்பர்களாக ஏற்படுத்தி வைத்தார்கள். இம்மேற்றிராணிமார்களோவெனில் வேறு மேற்றிராணிமாரை ஏற்படுத்தி இவ்வாறு அப்போஸ்தொலிக்கு உத்தியோகமும் அதிகாரமும் தலைமுறைதலைமுறையாக எந்நாளும் திருச்சபையில் நடந்துகொண்டேவரும். ஆதலால், அப்போஸ்தலர்களை முறைமையாய்ப் பின்தொடர்ந்துவரும் ஓர் ஞானமேய்ப்பரால் உத்தியோகமும் அதிகாரமும் கொடுத்தனுப்பப்படாத எவருக்கும் திருச்சபையில் எவ்வித அதிகாரமும் இல்லை. அன்றியும், அவர் யாதோர் ஞானஉத்தியோகத்தைச் செய்யத் துணிந்தால் அது முழுதும் பயனற்றதும் சருவேசுரனாற் சபிக்கப்பட்டதுமாய் இருக்கும்.

மேலேசொன்ன நான்கும் யேசுநாதரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான திருச்சபைக்கு உரிய அடையாளங்களாம். அவ்வடையாளங்களைக்கொண்டு மெய்யான திருச்சபையைச் சகல பொய்யான சபைகளில் நின்றும் பகுத்தறிந்துகொள்ளலாம். ஆகையால், கிறீஸ்தவசபைகள் என்றபெயர் கொண்டிருக்கும் சபைகள் எல்லாவற்றுள்ளும் ஏகமானதும், பரிசுத்தமானதும், சாதாரணமானதும், அப்போஸ்தொலிக்கமானதுமாய் இருக்குஞ் சபை எது என்று விசாரித்துத் திட்டம்பண்ணக்கடவோம். காட்டிய நாலு குணங்களும் உள்ளதே மெய்யான திருச்சபையென்னுமிடத்து அவற்றுள் ஒன்றாவது குறைந்த எந்தச்சபையும் பொய்யான சபையென்பது தானாய் விளங்கும்.

### V. கத்தோலிக்குச் சபை ஒன்றே யேசுநாதருடைய மெய்யான திருச்சபை

கத்தோலிக்கு (அல்லது, அதிகதெளிவாய், உரோமான் கத்தோலிக்கு) திருச்சபை என்பது : யேசுநாதரே தன்னை ஸ்தாபித்துத் தனக்கு தோன்றாத் தலைவராய் இருக்கிறார் என்றும், ரோமாபுரியில் சிங்காசனம் ஏற்படுத்தி ஆளும் அர்ச். பாப்புவே தனக்குப்

பிரத்தியக்ஷ தலைவர் என்றும் அங்கீகரித்து ஒழுகுஞ் சபையேயாம். அச்சபையொன்றிலேயே மெய்யான திருச்சபைக்குரிய இலக்ஷணங்களெல்லாம் குறைவின்றிக் காணப்படுகின்றன. அது ஒன்றே ஏகமும் பரிசுத்தமும் சாதாரணமும் அப்போஸ்தொலிக்கமுமாய் உள்ளது.

76. கத்தோலிக்கு திருச்சபைமாத்திரம் போதகத்திலும் ஞானச்சீவியத்திலும் ஆளுகையிலும் **ஏகமாய்** இருக்கின்றது. 1-வது, போதகத்தில் ஏகமாயிருப்பது எவ்வாறெனில், அது ஒருபோதும் மாறுபடாத ஒரேவிசுவாசத்தை அநுசரித்துக்கொண்டு வருவதுமன்றி, அவ்விசுவாசத்தோடு பொருந்திய சத்தியங்களில் ஒன்றையாவது மறுதலிப்பவர்களையும் ஒன்றின்மேலாவது சந்தேகங் கொள்பவர்களையும் தனக்குப் புறம்பாய்த் தள்ளியும் விடுகின்றது. 2-வது, ஞானச்சீவியத்தில் ஏகமாய் இருப்பது எவ்வாறெனில், அதன் பிள்ளைகளாகிய விசுவாசிகள் எல்லாரும் ஒன்றைக் கூட்டாமலும் ஒன்றைக்குறைக்காமலும் ஏழு தேவதிரவிய அநுமானங்களையே எப்போதும் எங்கெங்கும் அங்கீகரித்துவருகிறார்கள். 3-வது, ஆளுகையால் ஏகமாய் இருப்பது எவ்வாறெனில், அதன் அநுசாரிகள் எல்லாரும் அர்ச். பாப்புவையே மேலான சிரேஷ்டராக அங்கீகரித்துக்கொள்ளுகிறார்கள். அன்றியும், முறைமையாய் நியமித்து அனுப்பப்படும் மேற்றிராணிமார் முதலான ஞானமேய்ப்பர்கள் அர்ச். பாப்புவோடு ஐக்கியப்பட்டிருக்குந்தனையும் அவர்களுக்குப் பூரணமாய்க் கீழ்ப்படிந்து நடக்கிறார்கள். தங்கள் ஞானமேய்ப்பர்களுக்குக் கீழ்ப்படியாத எவனும் பிரிவினைக்காரனாகித் திருச்சபையின் ஒருமைப்பாட்டில் நின்றும் தள்ளுண்டு போகிறான். இங்கே விரித்துக் காட்டிய விஷயங்களையெல்லாம் கத்தோலிக்கு திருச்சபையானது அந்நாள்தொட்டு இந்நாளீறாகப் பின்னபேதமின்றி எங்கெங்கும் அநுசரித்துக்கொண்டுவருன்றது.

புரோட்டெஸ்தாந்து சபைகளோ போதகமுதலியவைகளால் ஏகமாய் இருக்கின்றனவென்று சொல்லக்கூடாது. ஏனெனில், அவைகள் உற்பத்தியான நாள்முதல் போதகத்தால் மாறுபட்டுக் கொண்டேவருகின்றன. அன்றியும் அவைகள் தம்முள் ஒவ்வாதவைகளும் ஒன்றையொன்றை விரோதிப்பவைகளுமாகிய அநேகமதங்களாய் நின்று, ஆதியில் லுத்தேர் கல்வீன் முதலானவர்கள் மறுக்கத் துணியாத சத்தியங்களைத்தானும் மறுத்துக்கொண்டுவருகின்றன. புரோட்டெஸ்தாந்து சபைகளுக்கு அதிகாரமும் தலைவரும் இல்லாதபடியால் அவைகள் ஒன்றாய் இருக்க இடமில்லை என்பது பிரத்தியக்ஷம். இனி கிரேக்கசபையைநோக்குமிடத்து அதுவும்



புரோட்டெஸ்தாந்து சபைகளைப் போலத் தம்முள் ஒவ்வாத அநேக சிறு சபைகளாய்ப் பிரிந்திருக்கக்காண்கிறோம். ஒரு சபை தனக்கு ஞான அதிகாரி எருசலேம்பட்டணத்து அதிபிதாவென்றும், ஒரு சபை தனக்கு ஞான அதிகாரி அந்தியோக்கியபட்டணத்து அதிபிதாவென்றும், வேறு ஒருசபை தனக்கு ஞான அதிகாரி கொன்ஸ்தந்தீனபுரியின் அதிபிதாவென்றும், இன்னுமொருசபை தனக்கு ஞான அதிகாரி ருசியசக்கிரவர்த்தி என்றுங்கூறும். இவ் அதிபிதாக்களும் சக்கிரவர்த்தியும் தத்தம்சபைக்குமாத்திரம் சுயாதீன அதிகாரியாயிருக்கிறார்கள். பொது மேய்ப்பரோ கிரேக்கசபையில் எங்குமில்லை. இல்லை எனவே ஐக்கியத்திற்கு வேண்டிய தலைமையதிகாரமும் அதிலில்லை என்பது நிச்சயம். ஆதலால், மெய்யான திருச்சபைக்குரிய ஏகமாயிருத்தல் என்னுங் குணம் கத்தோலிக்கு சபை ஒன்றில் மாத்திரம் உண்டு.

77. கத்தோலிக்கு திருச்சபை மாத்திரம் **பரிசுத்தமாய்** இருக்கின்றது. 1-வது, அது தன்னை ஸ்தாபித்தவர்களிலும் முதன்முதல் விருத்தியாக்கினவர்களிலும் பரிசுத்தமாய் இருக்கின்றது. எப்படியெனில், அதை ஸ்தாபித்துப் பரப்பியவர்களாகிய அப்போஸ்தலர்களும் அவர்களை அடுத்துவந்த மேற்றிராணிமார்களும் மற்றும் போதகர்களும் மிகவுமுயர்ந்த பரிசுத்ததனத்தில் பேர்போனவர்கள். அவர்களில் அநேகாநேகர் தங்கள் போதகத்துக்கு அத்தாட்சியாகத் தங்கள் சொந்த இரத்தத்தைச்சிந்தி வேதசாட்சியாய் மரித்தார்கள். 2-வது, அது தன் போதகத்தில் பரிசுத்தமாய் இருக்கின்றது. எப்படியெனில், அது சகல அக்கிரமங்களையும் கண்டித்து அவைகளை நீக்கவும் சகலபுண்ணியங்களையும் கற்பித்து இவைகளை அநுசரிக்கவும் எல்லா மனிதரையும் தூண்டிக்கொண்டுவருகின்றது. 3-வது, தன் அங்கத்தவர்களாகிய விசுவாசிகளுள் அநேகரில் பரிசுத்தமாயிருக்கின்றது. எப்படியெனில், ஒவ்வொரு நூற்றாண்டிலும் அபூர்வமான அர்ச்சியசிஷ்டதனத்தால் பிரகாசிக்கும் சுத்தவாளர்கள் அநேகர் அதில் உண்டு. அவர்களுடைய உறுதியான விசுவாசத்தையும் உயர்ந்த புண்ணியங்களையும் சுத்தமான ஒழுக்கத்தையும் சருவேசுரன் தாமே ஆச்சரியமான அற்புதங்களால் உலகத்துக்கு அத்தாட்சிப்படுத்தியுமிருக்கிறார்.

புரோட்டெஸ்தாந்து சபைகளில் பரிசுத்தத்துக்குரிய அடையாளங்கள் ஒன்றுமில்லை. அவைகளை உண்டாக்கினவர்களெல்லாரும் ஆங்காரிகளும் புகழ்ச்சிப்பிரியருந் தூர்த்தருமென்பது உலகமறிந்த விஷயமேயாம். சகல பாவங்களுக்கும் ஆசாபாசங்களுக்கும் அகலத் திறந்த வாசல்கள் புரோட்டெஸ்தாந்து மதங்களே

யென்பது சொல்வாருமின்றி விளங்கும். ஏனெனில், விசுவாச விஷயத்தில் ஒவ்வொருவனுந் தன்தனக்குப் பிரியமானவைகளை அங்கீகரித்துக்கொள்ளலாம் என்பதும், நான் நீதிமானாக்கப்பட்டிருக்கிறேன் என்று விசுவசிக்கிறது மாத்திரமே ஒருவன் சுத்தவாளனாய் இருக்கிறதற்குப்போதும் என்பதும் முதலானவைகளே அம்மதங்களின் மதிகேடான போதனைகளாம். நற்கிரியைகளின்றி விசுவாசமொன்றே ஆத்தும ஈடேற்றத்துக்குப்போதும் என்று சாதிக்கும் சபைகளும் அநேகமுண்டு. புரோட்டெஸ்தாந்து சபைகளுள் யாதொன்று தன் போதகத்தின் உண்மைக்கும் தன் அநுசாரிகளின் பரிசுத்தத்துக்கும் அத்தாட்சியாக நிகழ்ந்த ஒரு சிறு அற்புதத்தையாவது எடுத்துக்காட்ட வல்லதோவெனில், ஒருபோதுமில்லை. இவ்வாறே கிரேக்கபிரிவினைச் சபைகளைப்பற்றியும் சொல்லத்தகும். ஆதலால், புரோட்டெஸ்தாந்து சபைகளாவது கிரேக்க சபைகளாவது பரிசுத்தமானவைகள் அல்லவென்றும் கத்தோலிக்கு திருச்சபை ஒன்றே பரிசுத்தமானது என்றும் தீர்மானித்துக்கொள்ளக்கடவோம்.

78. கத்தோலிக்கு திருச்சபை மாத்திரம் **சாதாரணமாய்** இருக்கின்றது. அது அப்போஸ்தலர்களது காலத்திற்றானே அறியப்பட்ட உலகத்தின் எல்லாத்தேசங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டு அக்காலமுதல் எப்போதும் அதிகம் அதிகமாய்ப் பரம்பிக்கொண்டுவந்தது. தற்காலத்திலோவெனில், கத்தோலிக்கர் இல்லாத ஒரு சிறுதேசமாவது உலகத்தில் எங்குமில்லை என்பது நிச்சயம். அன்றியும், கத்தோலிக்கு திருச்சபையைப் பொய்மதங்களுள் ஒவ்வொன்றோடும் ஒப்பிட்டுப்பார்க்குமிடத்து, அது தன் மாட்சிமையினாலும் விரிவினாலும் அவைகள் எல்லாவற்றையும் மேற்கொண்டு விளங்குகின்றது. இவ்வாச்சரியமான விஸ்தாரத்தின் நிமித்தமே கத்தோலிக்கு (சாதாரணம்) என்னும் சொல் இந்தத் திருச்சபைக்கு எப்போதும் வழங்கிக்கொண்டுவந்தது. தற்காலத்திலும் பிற சமயவாதிகளெல்லாம் அச்சொல்லைக்கொண்டே மெய்யான திருச்சபையைக் குறித்துக் காட்டுகிறார்கள். இக்காலம் இங்கிலாந்து "அங்கிளிக்கன்" புரோட்டெஸ்தாந்தர் தங்களை அங்கிளோ கத்தோலிக்குச் சபையார் என்று கூறவும், கிரேக்கபிரிவினைச் சபையார் தங்களை கிரேக்க கத்தோலிக்கு சபை என்று கூறவும் தலைப்பட்டிருக்கிறார்கள். ஆயினும், உரோமையிலே தனது தலைவரைக் கொண்டிருக்கிறதாகிய மெய்யான திருச்சபையையே கத்தோலிக்கு என்ற சொல்லு அந்நாளிற்போல இந்நாளிலும் சந்தேக விபரீதமின்றிக் குறிக்கும்.



அவ்வாறிருக்க, அநேகநூறு மதங்களாய்ப் பிரிந்துள்ள புரோட்டெஸ்தாந்தராவது கிரேக்கராவது வேறு எந்தமதஸ்தராவது தங்கள் சபை கத்தோலிக்கு திருச்சபையைப்போல் உலகமடங்கலிலும் பரந்திருக்கின்றது என்று சொல்லத்துணிவார்களோ? புரோட்டெஸ்தாந்தர் தங்கள் சபை உலகமடங்கலும் உண்டென்று சொல்லத் துணியார்கள்; ஏனெனில் அவர்கள் ஒன்றோடொன்று பொருந்தாத அநேகசபைகளாய்ப் பிரிந்திருக்கிறதினால் கத்தோலிக்கு (சாதாரணம்) என்னுஞ் சொல் அவற்றுள் ஒன்றுக்கும் பொருந்தாது. இனி புரோட்டெஸ்தாந்து சபைகளெல்லாம் திரண்டு ஒருசபையாய் இருந்தாலும், அது அநேகதேசங்களில் இன்னும்அறியப்படாமையால், யேசுநாதருடைய திருச்சபைக்கே உரிய சாதாரணம் என்னும் இலக்ஷணம் அதற்கு எவ்வாற்றாலும் பொருந்தாது. கிரேக்கர் தங்கள்சபை சாதாரணமென்று சொல்லத்துணியார்கள். ஏனெனில், கத்தோலிக்கு திருச்சபையாருடன் ஒத்துப்பார்க்குமிடத்து அவர்கள் மிகச்சிறியதொகையாய் இருக்கிறார்கள். மேலும், அவர்களுடைய சபை ஸ்தாபிக்கப்படாத தேசங்கள் அநேகமுண்டு. ஆதலால் கத்தோலிக்கு திருச்சபை ஒன்றே சாதாரண திருச்சபை என்று சொல்லப்படும்.

79. கத்தோலிக்கு திருச்சபைமாத்திரம் **அப்போஸ்தோலிக்கமாய்** இருக்கின்றது. ஏனெனில் அதுதான் அப்போஸ்தலர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் போதகம் அப்போஸ்தலர்களாலேயே பிரசித்தமாகி எல்லாக்காலங்களிலும் பிரசங்கிக்கப்பட்டதாம். அதன் ஞானமேய்ப்பர்கள் எல்லோரும் அப்போஸ்தலர்களில் நின்று இடையறாத முறையோடு தொடர்ந்துவருகிறவர்களாம். தற்காலம் மகிமைப்பிரதாபத்தோடு அதை அரசாளும் 12-ம் பத்திநாதர், 11-ம் பத்திநாதரையும் இவர் 15-ம் ஆசீர்வாதப்பரையும் இவர் 10-ம் பத்திநாதரையும் இவர் 13-ம் சிங்கராயரையும் நம்முள் அநேகர் அறிய ஒருவரைஒருவர் பின்தொடர்ந்துவந்தவர்களாம். இவ்வாறு அர்ச். பாப்புக்களை முறையாய் எண்ணிக்கொண்டு போனால், யேசுநாதர் தமக்குப்பதிலாகவும் தமது திருச்சபைக்கு முதற்பாப்புவாகவும் ஸ்தாபித்தருளிய அர்ச். இராயப்பர்மட்டும் போகலாம். ரோமான் திருச்சபையோடு ஐக்கியப்பட்டிருக்கும் அவ்வச்சபைகளைப்பற்றியும் இவ்வாறே சொல்லத்தகும். அவ்வச்சபைகளின் மேற்றிராணிமார் அனைவரும் அப்போஸ்தலர்களாலாவது அவர்களைப் பின்தொடர்ந்துவந்த அர்ச். பாப்புகளாலாவது அனுப்பப்பட்டவர்களேயென்பதை தற்போது அவ்வச்சபைகளை ஆளும் மேற்றிராணிமாரிலிருந்து பரம்பரையாய் எண்ணித் தீர்மானித்துக்கொள்ளுதல் எளிது.

திருச்சபையைவிட்டுப் பிரிந்த சபைகள் அப்போஸ்தொலிக்கு சபைகளோ? அல்ல. ஏனெனில், புரோட்டெஸ்தாந்த சபைகள் 16-ம் நூற்றாண்டுத்தொடக்கத்தில் இருந்த லுத்தேருங் கல்வீனும் ஆகிய இருவருக்கும்முன் உலகத்தில் அறியப்படாதவைகளேயாம். கிரேக்க சபையோவெனில், 9-ம் நூற்றாண்டில் மாத்திரம் உண்டுபட்டது. அவ்வாண்டிற்கு முன் அது ஒருபோதும் இருக்கவேயில்லை. பதிதருடைய போதகம் அப்போஸ்தலர்களில்நின்றுவந்த போதகமோ? அல்ல. அது முழுதும் நவமான ஒரு போதகம். அன்றியும் பதிதமதப் போதகர்கள் முறையான வேத அதிகாரிகளிடத்திலிருந்து குருப்பட்டமும் உத்தியோகமும் பெறாமல் தாங்களே தங்களைப் போதகர்கள் ஆக்கிக்கொண்டவர்கள். அப்போஸ்தலர்களுக்கும் பதிதத் தலைவர்களுக்குமிடையே ஆயிரத்து ஐந்நூறுவருஷங்கள் கடந்துபோயின. ஆதலால், பதிதருடைய சபை அப்போஸ்தொலிக்கு சபை என்று ஒருபோதும் அழைக்கப்படாது. பிரிவினைச் சபையாகிய கிரேக்கசபையின் கிளைகளெல்லாம் ஒன்பதாம் நூற்றாண்டில் அப்போஸ்தொலிக்கு கத்தோலிக்கு திருச்சபையை விட்டுப்பிரிந்தபோது, யேசுநாதர்தொடுத்து முறையாய்த் தொடர்ந்துவந்த ஞானமேய்ப்பர்களில்நின்றும் பிரிந்தவைகளாகையால், அவைகளும் அப்போஸ்தொலிக்குசபைகள் அல்லவென்பது நிச்சயம். ஆதலால் கத்தோலிக்கு திருச்சபை ஒன்றே அப்போஸ்தொலிக்கு திருச்சபை என்றும், மெய்யான திருச்சபைக்குரிய நாலு அறிகுறிகளும் அதில்மாத்திரங் குறைவின்றிக் காணப்படுதலால் அதுமாத்திரமே யேசுநாதரால் ஆத்தும ஈடேற்றத்துக்கு வழியாக ஸ்தாபிக்கப்பட்ட திருச்சபை என்றும், அதற்குப் புறம்பாய் இருக்கிறவர்களுக்கு ஆத்தும ஈடேற்றம் இல்லையென்றும் தீர்மானிக்கக்கடவோம்.

80. திருச்சபைக்குப் புறம்பாக ஆத்தும ஈடேற்றமில்லை என்னுங் கோட்பாடானது திருச்சபையின் சொற்படி கேளாதவன் அஞ்ஞானியையும் ஆயக்காரனையும்போல உனக்கு ஆகக்கடவான் என்று யேசுநாதர் திருவுளம்பற்றின தேவவாக்கால் உறுதிப்படுகின்றது. இரக்ஷணியத்தை அடைந்துகொள்ள விரும்பும் எவனும் யேசுநாதராற் போதிக்கப்பட்ட சத்தியங்களை விசுவசித்தும் அவராற் கொடுக்கப்பட்ட கற்பனைகளை அநுசரித்தும் வரவேண்டும். அச் சத்தியங்களும் கற்பனைகளுமோவெனில் யேசுநாதருடைய ஞானச் சரீரமாகிய கத்தோலிக்கு திருச்சபையில் மாத்திரம் உண்டு. ஆதலால், கத்தோலிக்கு திருச்சபைக்குப் புறம்பாய் உள்ளவர்களுக்கு இரட்சணியம் இல்லையென்பது உறுதி. இச்சத்தியத்துக்கு அத்தாட்சியாக வேதபாரகர் எல்லா



ரும் நோவாவென்பவரின் பேழையைத் திருச்சபைக்கு ஓர் உவமையாக எடுத்துக்காட்டி, பேழைக்குப் புறம்பாய் இருந்த அனைவரும் சலப்பிரளயத்தில் மடிந்ததுபோல, திருச்சபைக்குப் புறம்பாயிருக்கும் அனைவரும் தவறாமல் நித்தியகாலமாகக் கெட்டுப்போவார்கள் என்று வசனித்திருக்கிறார்கள். திருச்சபையைத் தாயாகக் கைக்கொண்டு நடவாத எவனும் சருவேசுரனைத் தந்தையாகக் கைக்கொள்ளாதவனும் என்று அர்ச். சிப்பிரியானு என்னும் பண்டிதர் எழுதிவைத்தார்.

81. இந்தக் கோட்பாட்டை நன்றாய் விளங்கிக்கொள்ளுவதற்கு அறியவேண்டியவை எவையெனில்: 1-வது, பதித மதங்களிலாவது பிரிவினைமதங்களிலாவது ஒழுங்கான விதமாய் ஞானஸ்நானம்பெற்ற குழந்தைகள் எல்லாம் விரகறிந்தவர்களாகுங் காலந்தனையும் திருச்சபைக்குப் பிள்ளைகளும் மோட்சத்துக்குரியவர்களுமாயிருக்கிறார்கள். 2-வது, விரகறிந்தவர்களோவெனில் பதிதத்திலாவது பிரிவினையிலாவது வளர்க்கப்பட்டவர்களாயினும் தங்கள் சொந்தச் சித்தத்தால் அம்மதங்களை இன்னும் ஒப்புக்கொள்ளாதவர்களாகவும், மெய்யான திருச்சபையைப்பற்றி ஒரு சிறிதேனும் அறியாதவர்களாகவும், அறிந்துகொண்டால் அதிற் பிரவேசிக்க ஆயத்தப்பட்டவர்களாகவும், இரட்சணியத்துக்கு அவசியமான கடமைகளைத் தங்களால் இயன்றமட்டும் அநுசரிக்கிறவர்களாகவும் இருந்தால் அவர்கள் திருச்சபையின் ஆத்துமத்துக்குச் சேர்ந்தவர்களும் மோக்ஷபாதையில் இருக்கிறவர்களுமேயாம். இப்படியே வேறு பொய்ச்சமயங்களிலே பிறந்து வளர்ந்திருக்கிறவர்களைப்பற்றியும் சொல்லத்தகும். ஆகையால், திருச்சபைக்குப் புறம்பாக ஆத்துமவீடேற்றம் இல்லையென்பதற்கு உண்மையான அர்த்தம் ஏதோவெனில், எவனாவது இதுதான் யேசுநாதருடைய மெய்யான திருச்சபை என்று அறிந்துகொண்டு, தன் முழு மனம் பொருந்திய அசட்டைத்தனத்தினால் தான் சாகுந்தனையும் அதிற் சேராதிருந்தால், அவனுக்கு ஒருபோதும் மோட்சமில்லையென்பதே உண்மையான அர்த்தமாம்.

82. ஆதலால் எல்லாச்சமயங்களும் உண்மையான சமயங்களென்றும், எந்தச்சமயத்தில் இருந்தாலுஞ்சரி இரக்ஷணியம் அடையலாமென்றும் சொல்லுவது நியாயத்துக்கு ஒவ்வாத தப்பறை என்பது பிரத்தியக்ஷம். சகல சமயங்களுஞ் சரிதானென்று சாதிப்பது அந்தகாரமும் பிரகாசமும், ஆமும் அல்லவும் ஒன்றுதானென்பதை ஒக்கும். சருவேசுரன் பிரகாசமும் சத்தியமும் என்

ருல் மெய்ச்சமயமொன்றையே அவர் அங்கீகரித்து, அதை அநுசரிக்கிறவர்களுக்குமாத்திரமே சம்பாவனை அருளுவார். சருவேசுரன் ஒருவராய் இருப்பதுபோல அவராற் தரப்பட்ட சத்தியவேதமும் ஒன்றுயன்றிப் பலவாயிருத்தல் கூடாது. அச்சத்தியவேதம் கத்தோலிக்கு வேதமேயாகையால் மற்றச்சமயங்களெல்லாம் பொய்ச்சமயங்களேயென்பது தெளிவாயிருக்கின்றது. ஆதலாற் பொய்ச்சமயங்களிற் பிறந்துவளர்ந்த எவனும் தன்சமயந் தெய்வீகசமயந் தானே என்பதின்மேல் உண்மையான சந்தேகம் பிறந்தவுடனே மெய்வேதத்தைச் சாக்கிரதையாய்த் தேடவும், அதைக் கண்டுபிடித்தவுடனே அதிற் பிரவேசிக்கவுங் கடமைபூண்டவனேயாம்.

---

## 2-ம் பிரிவு

### திருச்சபையின் அதிகாரத்தின்பேரில்

83. யேசுநாதர் சகல மனிதரையும் மோக்ஷவழியில் நடத்திக்கொண்டுவரும்படியாகவே தமது திருச்சபையை ஸ்தாபித்தருளினதினால், வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களை அவர்களுக்குப் படிப்பிக்கவும் வேதநெறியில் அவர்களை ஆளவும் வேண்டிய முழு அதிகாரத்தையும் அதற்குக்கொடுத்தருளினுரென்பது நிச்சயம். இதற்கு அத்தாட்சி என்னவெனில்: நீங்கள்போய்ச் சருவசாதியாரையும் படிப்பித்து நாம் உங்களுக்குக் கற்பித்தவைகளையெல்லாம் அவர்கள் அநுசரித்துக்கொண்டுவரும்படி செய்யுங்கள். (அர்ச். மத். 28-ம் அதி.) என்னும் வேதவாக்கியமேயாம். ஆதலால், படிப்பிக்கிற அதிகாரமும் சட்டங்களை நிருபிக்கிற வதிகாரமும் என இருவகையான அதிகாரம் திருச்சபைக்கு உண்டு. ஞான ஆளுகைக்கடுத்த சட்டங்களை ஏற்படுத்தும் அதிகாரத்தை யேசுநாதர் தமது திருச்சபைக்குக் கொடுத்தபோதே, அவ்வதிகாரத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறது சகல விசுவாசிகளுக்குங் கடமையாம் என்று காண்பிக்கும்பொருட்டு: உங்களுக்குச் செவிகொடுக்கிறவன் நமக்குச் செவிகொடுக்கிறுன்; உங்களைப் புறக்கணிக்கிறவன் நம்மைப் புறக்கணிக்கிறுனென்றும் (அர்ச். லூக். 10-ம் அதி), திருச்சபையின் சொற்படிகேளாதவன் அஞ்ஞானியும் ஆயக்காரனுமாவானென்றும் (அர்ச். மத். 18-ம் அதி.) வசனித்திருக்கிறுர்.



திருச்சபையிலுள்ள போதிக்கும் அதிகாரத்தைப்பற்றி அறியவேண்டியகாரியங்கள் நாலு உண்டு. 1-வது, கிறீஸ்தவர்களின் விசுவாசத்தையும் ஒழுக்கங்களையும் திட்டப்படுத்துவதற்குத் தவறுதலில்லாத ஓர் அதிகாரத்தை யேசுநாதர் தமது திருச்சபைக்குக் கொடுத்திருக்கிறுர். 2-வது, திருச்சபை விசுவாசிகளுக்குப் படிப்பிக்கவேண்டிய வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களுக்கு ஊற்றுகிய பிரமாணங்கள் எவை? 3-வது, விசுவாச விஷயத்தில் உண்டாகுந் தர்க்கங்களைத் தீர்த்தறுப்பதற்குத் திருச்சபையில் உள்ள தவறுத நடுவர் யார்? 4-வது, போதிக்கும் திருச்சபையானது என்னென்ன விஷயங்களில் தவறிப்போகாது?

I. *கிறீஸ்தவர்களின் விசுவாசத்தையும் ஒழுக்கங்களையும் திட்டம் பண்ணுவதற்குத் தவறுத ஓர் அதிகாரத்தை யேசுநாதர் தமது திருச்சபைக்குக் கொடுத்திருக்கிறுர்.*

84. கிறீஸ்தவர்களின் விசுவாசத்தையும் ஒழுக்கத்தையும் திட்டம்பண்ணுவதற்கு ஓர் மேலான அதிகாரம் திருச்சபையில் இருப்பது அவசியம். ஏனெனில், மானிட புத்தியானது அறியாமை தப்பெண்ணம் ஆசாபாசங்கள் ஆதியவற்றிற்கு ஏதுவாயிருக்கிறபடியால், யேசுநாதர் ஒவ்வொருவனையும் தன்தன் விசுவாசத்தைத் தான்தானே திட்டம்பண்ணிக்கொள்ளலாம் என்று விட்டிருந்தால், வேதவிஷயங்களைக்குறித்து மனிதருக்குள் இடைவிடாத சந்தேகங்களும் தர்க்கங்களும் உண்டாகி, ஒருவன் அங்கீகரிப்பதை மற்றவன் மறுப்பான், ஒருவன் மறுப்பதை மற்றவன் அங்கீகரிப்பான். அவ்வாறிருப்பின் விசுவாசத்தின் ஒருமைப்பாடு கெட்டழிந்துபோம். ஆதலால், திருச்சபையின் தெய்வீக ஸ்தாபகரானவர் வேதவிசுவாசத்துக்கும் ஒழுக்கத்துக்கும் அடுத்த சந்தேகங்களைத் தெளிவிக்கவுந் தர்க்கங்களைத் தீர்க்கவும் தவறுத ஓர்மேலான அதிகாரத்தைத் திருச்சபைக்குக் கொடுத்தருளினுர். அதற்கு, திவ்வியநாதர் தாம் பரலோக கமனமாகுஞ் சமயத்திற் தம்முடைய சீஷர்களைநோக்கி: வானத்திலும் பூமியிலும் சருவ அதிகாரமும் நமக்குக் கொடுக்கப்பட்டது; நீங்கள்போய்ச் சகலசாதியாரையும் படிப்பித்துப் பிதாவுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்துசாந்துவுடையவும் நாமத்தினுல் அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நாம் உங்களுக்குக் கற்பித்தவைகளையெல்லாம் அவர்கள் அநுசரிக்கும்படி செய்யுங்கள்; இதோ! உகாந்தமட்டும் நாம் உங்களோடு இருக்கிறேம் (அர்ச். மத் 28) என்று திருவுளம்பற்றின தேவவாக்கியமே அத்தாட்சியாம். இத்தெய்வீக வாக்கியத்தில் இரண்டு வாக்குத்தத்தங்கள் அடங்கியிருக்கின்றன. 1-வது, அப்போஸ்

தலர்கள் வேதபோதகத்தைப் போதிக்குந்தோறும் யேசுநாதர் அவர்களோடு இருந்து, தாமே அவர்கள் வாக்காற் போதித்தருளுவார். யேசுநாதர் அவர்களோடிருந்து போதித்தருளுவாரெனவே, அவர்கள் வேதபோதகங்களிற் தவறிப்போதல் கூடாதென்பது தெளிவு. எவ்வாறெனில், அவர்கள் தவறிப்போனால் யேசுநாதர் தாமே தவறிப்போனாரென்று சொல்லவேண்டியதாயிருக்கும். அப்படிச்சொல்லுதல் கூடாதாகையால், அப்போஸ்தலர்கள் யேசுநாதரது நாமத்தாலும் அவரது துணையைக்கொண்டும் வேதபோதகஞ் செய்யும் போதெல்லாம் தவறக்கூடாதவர்களாயிருக்கிறார்கள். 2-வது, இந்தத் தவறாமையென்னும் வரமானது அப்போஸ்தலர்களுக்கேயன்றி அவர்களுக்குப் பதிலாய்வரும் திருச்சபையின் முதன்மையான அதிகாரிகளுக்கும் கொடுக்கப்பட்டது. எப்படியெனில், சிறிதுகாலத்துக்குள் இறந்துபோகவேண்டியவர்களாயிருந்த தம்முடைய அப்போஸ்தலர்களை நோக்கி: போதித்து ஞானஸ்நானங் கொடுப்பவர்களாகிய உங்களோடு உகாந்தமட்டும் நாம் இருப்போமென்று கர்த்தர் வாக்குப்பண்ணினபோதே, அவ்வாக்குத்தத்தத்தில் அப்போஸ்தலர்களைப்பற்றி மாத்திரம் குறித்துப்பேசினவரானால், அவரது வாக்கியம் விபரீத அர்த்தமுள்ளதாகியிருக்கும். அப்படி இருத்தலோ கூடாது. ஆதலால், அவ்வாக்குத்தத்தத்தை அப்போஸ்தலர்களுக்கன்றி அவர்களைப்பின்தொடர்ந்து உலகமுடிவுமட்டும் திருச்சபையை ஆண்டுநடத்திச் சனங்களுக்குப் போதித்துத் தேவதிரவிய அநுமானங்களைக் கொடுத்துக் கொண்டுவரவேண்டிய முதலதிகாரிகளாகிய அனைவருக்குமே கொடுத்தருளினாரென்பதும், தவறாமை என்னும் வரமானது போதிக்குஞ் சபைமுழுவதுக்குஞ் சேர்ந்ததென்பதும் நிச்சயமேயாம். யேசுநாதர் எல்லா அப்போஸ்தலர்களுக்கும் பொதுவாகக் கொடுத்த அவ்வாக்குத்தத்தத்தை அர்ச். இராயப்பருக்கு விசேஷமாகக் கொடுத்து: நீ கல்லு; இக்கல்லின்மேல் என் திருச்சபையைக் கட்டியெழுப்புவேன்; நரகவாசல்கள் அதைச்செயங்கொள்ள மாட்டாவென்றும் வசனித்தருளினார் (மத். 16-ம் அதி.). ஆதலால் இங்கே நரகவாசல்கள் என்பதினால் குறிக்கப்பட்டவைகளாகிய பொய்யுந்தவறும் திருச்சபையின் போதகத்தில் காணப்படுதல் ஒருகாலுங் கூடாதென்று அறிந்துகொள்ளல் வேண்டும்.

சபைப்பிதாக்கள் எல்லோரும் திருச்சபைக்குத் தவறாமையாகிய வரமுண்டென்று ஒருவாய்ப்படச் சாதித்திருக்கின்றார்கள். அவர்கள் ஒரு பக்கத்தில்: விசுவாசவிஷயங்களில் சந்தேகமுள்ள யாவரும் தங்கள் சந்தேகத்துக்குப் பொய்யாத தீர்மானத்தைப்



பெற்றுக்கொள்ளவேண்டில் அதைத் திருச்சபைக்குத் தெரிவிக்கக் கடவார்களென்றும், மறுபக்கத்தில்: திருச்சபையின் தீர்மானத்துக்குக் கீழ்ப்படியாதிருத்தலாவது, அதை மறுத்தலாவது அவிவேகமும் தேவநிந்தையுமாமென்றும் கூறியிருக்கிறார்கள். இது விசுவாசத்துக்கடுத்த சகல விஷயங்களையும் பொய்யாதவிதமாய்த் தீர்மானம்பண்ணுவதற்குத் தேவ அதிகாரத்தையே திருச்சபை பெற்றிருக்கின்றதென்பதைத் தெளிவாய்க் காண்பிக்கின்றது. ஆதலால் கிறீஸ்தவர்களுடைய ஒழுக்கங்களையும் விசுவாசத்தையும் பொய்யாத போதகத்தாற் திட்டம்பண்ணுவதற்குவேண்டிய மேலான தேவ அதிகாரத்தை யேசுநாதர் தமது திருச்சபைக்குக் கொடுத்திருக்கிறாரென்பதும்; திருச்சபையின் தீர்மானங்கள் கிறீஸ்தவர்களின் விசுவாசத்துக்கும் ஒழுக்கத்திற்கும் ஓர் மாறாத விதியாய் இருப்பதால் அத்திருச்சபை போதிக்கிறதையெல்லாம் விசுவாசிகள் வணக்கத்தோடு அங்கீகரித்து விசுவசித்தல் வேண்டும் என்பதும் நிச்சயமாமென்று உணர்ந்துகொள்ளத்தகும்.

## II. *திருச்சபை விசுவாசிகளுக்குப் போதிக்கவேண்டிய சத்தியங்களுக்கு ஊற்றாகிய பிரமாணங்கள்.*

திருச்சபை விசுவாசிகளுக்குப் போதிக்குஞ் சத்தியங்களுக்குப் பிரமாணம் இரண்டு. அவை: வேதாகமங்களும் பாரம்பரியமும் என்னப்படும்.

85. 1-வது, **வேதாகமம்.** வேதாகமமாவது இஸ்பிரீத்துசாந்துவின் ஏவுதலால் எழுதப்பட்ட தேவவாக்காம். அது பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் என இருவகுப்பாயுள்ளது. மேசியாவாகிய யேசுநாதருடைய ஆகமனத்தின்முன் செய்யப்பட்ட வேதநூல்கள் பழையஏற்பாடு என்றும், அவருடைய ஆகமனத்தின்பின் செய்யப்பட்ட வேதநூல்கள் புதியஏற்பாடு என்றுஞ் சொல்லப்படும். இவ்விருவகை நூல்களையும்பற்றி 38—41-ம் 47—51-ம். இலக்கங்களில் விரிவாய்ச் சொல்லியிருக்கிறோம். இவ்விடத்தில் இவைகள் தேவ ஏவுதலாலே எழுதப்பட்டனவென்பதைக்குறித்துச் சில சொல்லுவோம்.

86. தேவ ஏவுதலாவது என்னவெனில், ஒருவன் யாதொன்றை எழுதும்படி சருவேசுரன் அந்தரங்கமான சுபாவத்திற்கு மேலான ஓர் முயற்சியால் அவனைத்தூண்டித் தீர்மானிப்பித்து, அவன் எழுதவேண்டியதை அவனுடைய மனதிலே தோற்றுவித்து, அவன் எழுதும்போது யாதொரு தப்பறையும் நேரிடாத

படி அவனைக் காப்பாற்றுவதேயாம். தேவ ஏவுதலுக்குந் தேவ துணைக்கும் வித்தியாசம் உண்டு. தேவதுணையாவது, ஓர் சம்பவத்தை எழுதத் தானாய்த் தீர்மானித்திருக்கும் ஒருவனைச் சருவேசுரன் நடப்பித்து அவன் எழுதுவதில் தப்பறை நுழையாதபடி காப்பாற்றுவதாம். அதன்றிச் சருவேசுரன் எழுதுபவனுக்கு எண்ணங்களையும் சம்பவங்களையும் தோற்றுவிப்பதில்லை. இதன் நிமித்தம் தேவதுணையோடுமாத்திரம் இயற்றப்பட்ட எந்த நூலாவது மெய்யான தேவவாக்கு என்று அழைக்கப்படாது. சாதாரண திருச்சங்கங்களின் தீர்மானங்களும், திருச்சபையில் அங்கீகரிக்கப்பட்டனவாகிய அர்ச். பாப்புக்களின் கட்டளைகளும் தேவதுணையோடு செய்யப்பட்டபடியால் தப்பறைகள் அற்றனவாயிருந்தாலும், தேவவாக்கு என்றும் வேதாகமத்தின் பங்குகளென்றும் கொள்ளப்படா. தேவ ஏவுதலோவெனில், வேதாசிரியனை நூல் எழுதத் தீர்மானிப்பிப்பதும், வேண்டிய எண்ணங்களை அவன்மனதில் தோற்றுவிப்பதும், தீர்க்கதரிசனங்கள் தேவரகசியங்கள் வேதசத்தியங்கள் அறியப்படாத சம்பவங்கள் ஆதியவைகளை அவனுக்குத் தெரிவிப்பதும், இச்சத்தியங்களை வெளிப்படுத்துவதற்கு யோக்கியமான சொற்களைமுதலாய் வேண்டியவேண்டியபோது அவனுக்கு அறிவிப்பதுமாகிய ஓர் தெய்வீக செய்கையாம். வேத ஆசிரியன் தன்னூலில் தப்பறைகளை வரையாவண்ணம் அவனைக் காப்பாற்றுவதற்கு அவசியமான தேவதுணையும் தேவ ஏவுதலில் அடங்கியுள்ளது என்று உணர்ந்துகொள்ளத்தகும்.

வேதாகமம் முழுவதும் தேவ ஏவுதலால் எழுதப்பட்டது என்பது விசுவாசசத்தியமாம். பழைய ஏற்பாட்டு நூல்களெல்லாம் தேவ ஏவுதலால் எழுதப்பட்டவைகள் என்று யூதசாதியார் எப்போதும் அங்கீகரித்துக்கொண்டார்கள். கத்தோலிக்கு திருச்சபையோவெனில், சபைப்பிதாக்களும் வித்தியாபாரகரும் ஒருமித்துக் கூறுவதுபோல், இரண்டு ஏற்பாட்டு நூல்களும் தேவ ஏவுதலால் இயற்றப்பட்ட நூல்களென்று எப்போதுங் கைக்கொண்டுவந்திருக்கின்றது. திரேந்து மகாசங்கமானது இந்நூல்களைத் தெய்வீக நூல்களாக அங்கீகரித்துக்கொண்டதுமன்றி, இவைகளைத் திருச்சபையில் வழங்கிக்கொண்டுவருகிறபிரகாரம், பொதுவாகவும் தனித்தனியேயும், தேவ ஏவுதலால் எழுதப்பட்ட நூல்களாக ஏற்றுக்கொள்ளாத எவனுக்குஞ் சாபங்கூறியிருக்கின்றது.

87. **பரம்பரை.** பரம்பரையாவது எழுதப்படாமல் வாய்ச்சொல்லாய்ச் செய்யப்பட்ட போதகமாம். இது அப்போஸ்தோலிக்கு பரம்பரை என்றும் திருச்சபைப் பரம்பரை என்றும் சொல்லப்படும்.



அப்போஸ்தோலிக்கு பரம்பரையானது இஸ்பிரீத்துசாந்துவின் ஏவுதலால் எழுதப்படாததாய் யேசுநாதராலாவது அப்போஸ்தலர்களாலாவது வாய்ச்சொல்லாய்ப் பிரசித்தஞ்செய்யப்பட்டதாயுள்ள தேவவாக்காம். இது காலகதியில் நூல்களிற் சேர்க்கப்பட்டும் இருக்கலாம். சேர்க்கப்படாமல் திருச்சபையின் சாதாரண விசுவாசத்திலும் அநுசரிப்பிலும் தலைமுறை தலைமுறையாக வழங்கிக்கொண்டும்வரலாம். அப்போஸ்தலர்கள் தங்கள் நூல்களில் எழுதிவையாத அநேக காரியங்களைத் திவ்விய இரட்சகரிடத்திலிருந்து கற்றுக்கொண்டார்களென்பதும், அவைகளைத் தங்கள் போதகங்களைக் கேட்டவர்களுக்குப் படிப்பித்தார்களென்பதும் நிச்சயம். இவ்வாறு யேசுநாதரிடத்திலிருந்து அப்போஸ்தலர்களும் அப்போஸ்தலர்களிடத்திலிருந்து ஆதி மேற்றிராணிமார்களும், இவர்களிடத்திலிருந்து மற்ற மேற்றிராணிமார்களும் வாய்ச்சொல்லாய்ப் பெற்றுக்கொண்ட சத்தியங்கள் தலைமுறை தலைமுறையாக இந்நாள்மட்டுங் காப்பாற்றப்பட்டுவந்திருக்கின்றன.

88. விசுவாசவிஷயத்தில் வேதாகமத்திற்குள்ள பிரமாணத்தன்மை பரம்பரைக்குமுண்டு. ஏனெனில், வேதாகமத்தில் தேவவாக்கு அடங்கியிருப்பதுபோலப் பரம்பரையிலும் தேவவாக்கே அடங்கியிருக்கின்றது. வேதாகமத்திலுள்ள தேவவாக்குப் பொய்யாதெனில், பரம்பரையிலுள்ள தேவவாக்கும் பொய்யாதென்பது பிரத்தியட்சம். ஆதலால், வேதாகமம் நமது விசுவாசத்துக்குப் பிரமாணமாயிருப்பதுபோல, பரம்பரையும் ஓர் பிரமாணமேயாம். இதைப்பற்றித் திரேந்துமகாசங்கமானது, தான், வேதாகமநூல்களைப் பத்திவணக்கத்தோடு அங்கீகரித்துக்கொள்வதுபோல், யேசுநாதராலாவது இஸ்பிரீத்து சாந்துவினாலாவது படிப்பிக்கப்பட்டவைகளாய், விசுவாசத்துக்கும் ஒழுக்கத்துக்கும் அடுத்தவைகளாய் திருச்சபையில் காப்பாற்றப்பட்டுவரும் பரம்பரைகளையும் அங்கீகரித்துக்கொண்டதென்று கூறியிருக்கின்றது. உள்ளபடியே, யேசுநாதர் தமது போதகத்தை எழுதிவைக்கவுமில்லை. அதை எழுதிவைக்கவேண்டுமென்று அப்போஸ்தலர்களுக்குக் கற்பிக்கவுமில்லை. அப்போஸ்தலர்கள் வாய்ச்சொல்லாகவே வேதத்தைப் போதித்துச் சனங்களை மனந்திருப்பிக்கொண்டுவந்தார்கள். திருச்சபை ஸ்தாபிக்கப்பட்டு அநேகவருஷங்கள் கடந்தபின்பு மாத்திரம் சுவிசேஷங்களும் மற்றைய புதிய ஏற்பாட்டு ஆகமங்களும் எழுதப்பட்டன. ஆதலால், பரம்பரையால் மாத்திரமும் மெய்யான

விசுவாசம் நிலைநிற்றல்கூடும். வேதாகமம் தேவ ஏவுதலால் எழுதப்பட்டதென்பதும், அதன் மூலவாக்கியங்களுக்கு அர்த்தமின்னதென்பதும், பதிதராற் கொடுக்கப்பட்ட ஞானஸ்நானம் பலனுள்ளதென்பதும், அர்ச். தேவமாதா எப்போதுங் கன்னியாயிருந்தாளென்பதும் முதலிய விசுவாசசத்தியங்கள் வேதாகமத்திற்கண்ட சத்தியங்களா? அல்ல. பரம்பரையால் போதிக்கப்பட்ட சத்தியங்களேயாம்.

89. பின்வரும் விதிகளைக்கொண்டு மெய்யான அப்போஸ்தொலிக்கு பாரம்பரியங்களை மனித பரம்பரைகளினின்றும் பிரித்தறிந்துகொள்ளுதல் எளிது.

1-ம் விதி. வேதாகமங்களில் அடங்காத எந்தப் போதகமாவது விசுவாச சத்தியமாகத் திருச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அது அப்போஸ்தொலிக்கு பரம்பரையைச்சேர்ந்த போதகமாம். திருச்சபையின் ஆகம டாப்பில் சேர்க்கப்பட்டிருக்கும் புஸ்தகங்களெல்லாம் தேவ ஏவுதலால் எழுதப்பட்ட புஸ்தகங்கள் என்று இந்த விதியைக்கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது.

2-ம் விதி. சருவேசுரனால்மாத்திரம் உண்டாகக்கூடியதாயும் வேதாகமங்களில் பேசப்படாததாயும் சாதாரண திருச்சபையில் வழங்கும் எந்த அநுசரிப்பும் அகத்தியமாய் அப்போஸ்தொலிக்கு பரம்பரையைச் சேர்ந்ததாம். இந்த விதியைக்கொண்டே தனிப் பாவசங்கீர்த்தனம் மெய்யான பச்சாத்தாபமென்பதும், ஞானஸ்நானமும் உறுதிப்பூசுதலும் குருப்பட்டமும் ஆத்துமத்திலே அழியாத முத்திரையைப் பதிப்பிக்கின்றனவென்பதும், ஆதலால், அவைகளை இரண்டுதரம் பெற்றுக்கொள்ளுதல் கூடாதென்பதும் பிறவும் தீர்மானிக்கப்படுகின்றன.

3-ம் விதி. திருச்சபையில் எங்கும் எக்காலத்திலும் வழங்கும் யாதோர் வழக்கம், இன்னசங்கத்தாரால் அல்லது இன்ன பாப்புவால் ஏற்படுத்தப்பட்டதென்று சொல்லக்கூடாததாகில், அவ்வழக்கம் அப்போஸ்தலர்களால் உண்டாக்கப்பட்டதென்றே ஏற்றுக்கொள்ளப்படும். உதாரணம்: தபசுகாலத்து உபவாசம், சிலுவையடையாளம் முதலியன அப்போஸ்தொலிக்கு பரம்பரையைச் சேர்ந்தவைகளேயாம்.

4-ம் விதி. எல்லாக்காலங்களிலும் எல்லாச் சபைப்பிதாக்களும், அல்லது மிகச்சிலர்நீங்க மற்றெல்லாரும், ஒருவாய்ப்பட ஒத்துக்கொள்ளுஞ் சத்தியமும் கட்டளையும் வேதபுஸ்தகங்களிற்



பேசப்படாவிடினும் அப்போஸ்தொலிக்கு பரம்பரையேயென்பதும், அப்போஸ்தலர்கள் அவைகளை யேசுநாதரிடத்திலிருந்து கற்றுப் பிறருக்கு உபதேசித்தார்களென்பதும் குன்றாதசத்தியமாம்.

இவ்விதிகளெல்லாம், திருச்சபையானது தவறாமையுடையதாயிருப்பதால் அது விசுவாசத்திலும் அநுசரிப்பிலும் அபத்தத்துக்குள்ளாகக் கூடாதென்னும் மூல விதியிலிருந்து பெறப்படும்.

90. திருச்சபைப் பரம்பரையானது பொதுச் சங்கங்களால் செய்யப்பட்ட தீர்மானங்களிலும் சபைப்பிதாக்களும் வித்தியாபாரகரும் இயற்றிய நூல்களிலும் அடங்கியிருக்கின்றது. **சபைப் பிதாக்கள்** யாரெனில், முதல் ஆறு நூற்றாண்டுகளில் வேதவிஷயங்களைப்பற்றி நூலெழுதின ஆசிரியர்களாம். அர்ச். வேணாட்டென்பவர், 12-ம் நூற்றாண்டில் இருந்தவராயினும் சபைப்பிதா என்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார். ஏழாம் நூற்றாண்டுதொடுத்து வேதவிஷயங்களைக்குறித்து எழுதினவர்கள் **வேதநூல் ஆசிரிய**ரென்று மாத்திரம் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். **வித்தியாபாரகர்** என்னும் பட்டமானது சில பூர்வ சபைப்பிதாக்களுக்கும் வேதபண்டிதர்களுக்குங் கொடுக்கப்பட்டிருக்கின்றது. சபைப்பிதாக்களுக்குப்பின் பரம்பரை முறையைத் தொடர்பாய் எழுதிக் காப்பாற்றிக்கொண்டுவந்த நூலாசிரியருட் சிலரும் வித்தியாபாரகரென்று அழைக்கப்படுகிறார்கள்.

### III. *விசுவாசவிஷயத்தில் திருச்சபையிலுள்ள நடுவர் யார்?*

91. விசுவாசத்தையும் ஒழுக்கத்தையுமடுத்த விஷயங்களில் தவறாத தீர்ப்புச்செய்யுஞ் சுதந்தரத்தை யேசுநாதர் தம்முடைய அப்போஸ்தலர்களின் இடமாக இருக்கும், அர்ச். பாப்புவுக்கும் அவரோடு ஐக்கியப்பட்ட மேற்றிராணிமாருக்கும் மாத்திரம் கொடுத்தருளினார். அவர் சகலசாதியாரையும் படிப்பிக்கும் உத்தியோகத்தை அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்து அவர்களோடு எப்போதுந் துணையாயிருக்க வாக்குப்பண்ணியசமயத்தில், அர்ச். இராயப்பரையும் மற்ற அப்போஸ்தலர்களையும்மாத்திரம் குறியாமல், உகாந்தமட்டும் தலைமுறை தலைமுறையாகப் போதிக்குந்திருச்சபைக்கு அங்கங்களாய் விளங்கவேண்டிய அப்போஸ்தலர்களின் பிரதிஸ்தர்களைக் குறித்துமே வாக்குப்பண்ணியருளினார். அப்படியிருக்க, பின்னாற் காண்பிக்கப்படுவது போல் அர்ச். பாப்புவோ, அர்ச். இராயப்பருக்குப் பதிலாகவும், மேற்றிராணிமாரோ, மற்ற அப்போஸ்தலர்களுக்குப் பதிலாகவுமிருக்கிறார்கள். ஆதலால், அர்ச். பாப்புவும் அவரோடுசேர்ந்த மேற்றிராணிமாரும் மாத்திரம், போதிக்குந்

திருச்சபை என்னப்படுவார்கள். விசுவாச தர்க்கங்களில் தவறாத தீர்ப்புச்சொல்லுஞ் சுதந்தரம் இப் போதகர்கூட்டத்திற்கே உரியது. திருச்சபையில் யாதோர்விஷயமாய் தர்க்கமுண்டானபோதெல்லாம் அது, அர்ச். பாப்புவுக்கும் மற்ற மேற்றிராணிமாருக்கும் தெரிவிக்கப்பட்டதென்றும், அர்ச். பாப்புவாலும் அவரோடு ஐக்கியப்பட்ட மேற்றிராணிமாராலும் பண்ணப்பட்ட தீர்ப்பே விசுவாசப்பிரமாணமாகக் கொள்ளப்பட்டதென்றும் திருச்சபைச் சரித்திரம் சாட்சிபகருகின்றது. திருச்சபையில் யாதோர் துர்ப்போதனை தோன்றினபோதெல்லாம் அதை நடுவராகநின்று விசாரித்துப் பதிதமெனச் சபித்துத்தள்ளும் உத்தியோகம்பூண்டவர்களாய் எப்போதும் விளங்கிக்கொண்டுவந்தவர்கள் அர்ச். பாப்புவும் மேற்றிராணிமார்களுமே. அன்றியும், யாதோர்சங்கம் நடத்தப்படவேண்டியபோதெல்லாம் விசுவாசிகள் குருமார் அரசர் முதலானவர்கள் அழைக்கப்படாமல், மேற்றிராணிமார் மாத்திரம் வேத நடுவராக அழைக்கப்பட்டு வந்தார்கள். ஆத்துமவிசாரணைசெய்கிறவர்களாகிய குருமார், போதிக்குந் திருச்சபையைச் சேர்ந்தவர்களன்றேவெனிற் சேர்ந்தவர்களேயாம். ஆயினும், இவர்கள் மேற்றிராணிமாருக்குக் கீழ்ப்படிந்திருந்து, அவர்கள் போதிப்பதையே தாங்களும் போதிக்கவேண்டியவர்களாயிருப்பதால், விசுவாச தர்க்கங்களைப் போதகமுறையாய்த் தீர்த்தொழிக்கும் அதிகாரம் இவர்களுக்கு இல்லை. ஆதலால், விசுவாசவிஷயங்களில் உண்மையான நடுவர் அர்ச். பாப்புவும் மேற்றிராணிமாருமேயென்று தீர்மானித்துக்கொள்ளுதல் வேண்டும்.

92. பின்வரும் பிரிவில் அர்ச். பாப்புவின் முதன்மை அதிகாரத்தை அத்தாட்சிப்படுத்தியபின் அவ்வதிகாரம் விசுவாச விஷயத்தில் எத்தன்மையானதென்று காட்டுவோம். இவ்விடத்தில் நாம் யேசுநாதரால் அப்போஸ்தலர்களுக்கு வாக்குப்பண்ணப்பட்ட தவறாமை என்னும் வரமானது அர்ச். பாப்புவோடு ஒற்றுமைப்பட்டிருக்கிற மேற்றிராணிமார் கூட்டத்திற்கு உரியது என்பதை மனதிற் தரித்துக்கொள்ளவேண்டியது. ஏனெனில், அர்ச். பாப்புவோடு ஒற்றுமைப்பட்டிருக்கும் மேற்றிராணிமார் மாத்திரம் போதிக்குந் திருச்சபையாம். ஆதலால்,

1-வது, ஒவ்வொரு மேற்றிராணியாருந் தனித்தனியே எண்ணப்படும்போது தவறாமையாகிய சுதந்தரத்துக்கு உரிமையுடையவர் அல்ல. 2-வது, அர்ச். பாப்பு இல்லாது பிரத்தியேகமாய்க் கூடின சிறுதொகையான மேற்றிராணிமார் சபையுந் தவறாமையாகிய சுதந்தரத்துக்கு உரிமையுடையதல்ல. 3-வது, விசுவாச தர்க்கங்களில் திட்டமானதும் தவறாததுமான ஓர் தீர்மானஞ் செய்வதில் மேற்றிராணிமார் அனைவரும் ஏகமாய் ஒருமனப்பட்டிருத்தல் அவசியமல்ல. அன்றியும் அர்ச். பாப்புவோடு ஐக்கியப்பட்டிருக்கும் மேற்றிராணிமாருட் பெரும்பாலாரால் விசுவாசவிஷயத்தில் பண்ணப்படுந் தீர்மானங்களை எல்லாம் சிரவணத்தோடு அங்கீகரித்துக்கொள்வதும், அத்தீர்மானங்களின் உண்மையைப்பற்றி ஒரு சிறிதேனும் சந்தேகப்படாமல் இருப்பதும் திருச்சபையின் அங்கத்தவர்களாகிய போதகர்களுக்கும் விசுவாசிகளுக்குங் குன்றாத கடமையாம்.



93. அர்ச். பாப்புவும் அவரோடு ஒற்றுமைப்பட்டிருக்கும் மேற்றிராணிமாருள் மிகப்பெரும்பாலாரும் யாதோர் வேதவிஷயத்தில் போதகமுறையான ஒரு தீர்மானத்தைப் பிரசித்தப்படுத்தும்போதெல்லாம், அத்தீர்மானமானது சங்கமாய்க்கூடியிருந்த மேற்றிராணிமாராற் செய்யப்பட்டிருந்தாலுஞ்சரி, தங்கள் தங்கள் ஆசனப்பகுதிகளிலே தங்கியிருந்த மேற்றிராணிமாராற் செய்யப்பட்டிருந்தாலுஞ்சரி, தவறாத தீர்மானமேயாம். ஏனெனில், மேற்றிராணிமார் தங்கள் தங்கள் பிரிவுகளில் தனித்தனியே இருந்தாலும் சங்கத்திற் கூடியிருந்தாலும் போதிக்குந் திருச்சபையாகவே இருக்கிறார்கள். ஆதலால், இரண்டு இடத்திலும் தவறாமை என்னுஞ் சுதந்தரம் அவர்களுடைய தொகுதிக்கு உண்டு.

94. சங்கமாவது என்னவெனில் திருச்சபைக்குரிய விசுவாசத்தையும் ஒழுக்கத்தையும் நடப்பிப்பையும் அடுத்தகாரியங்களைப் பற்றித் தீர்மானிக்கும்பொருட்டு முறைப்படி அழைத்துச் சேர்க்கப்படும் மேற்றிராணிமாரது கூட்டமாம்.

சங்கம், பொதுச்சங்கம் என்றும் தனிச்சங்கம் என்றும் இருவகைப்படும். பொதுச்சங்கம் அர்ச். பாப்புவால், அல்லது அவருடைய அநுமதியோடு கூட்டப்படுவது. அதற்குச் சகல மேற்றிராணிமாரும் அழைக்கப்படுவார்கள். அர்ச். பாப்பு தாமாயாவது, தம் ஸ்தானாபதிகளைக்கொண்டாவது அதை நடத்துவார். சாதாரண திருச்சபையின் சங்கமென்று சொல்லப்படக்கூடிய தொகையான மேற்றிராணிமார் அதில் சமுகராய் இருந்தாற்போதும். பொதுச்சங்கத்தாற் செய்யப்படும் ஏற்பாடுகளெல்லாம் அர்ச். பாப்புவால் அங்கீகரிக்கவும் உறுதிப்படுத்தவும்படவேண்டியன.

தனிச்சங்கம் திருச்சபையின் ஓர் பகுதியாரால் அதாவது, ஓர் இராச்சியத்தாரால், அல்லது ஓர் மாகாணத்தாரால் நடத்தப்படுவது. ஓர் இராச்சியத்திலுள்ள மேற்றிராணிமாரெல்லோரும்

அதிமேற்றிராணியாரோடுசேர்ந்து நடத்துஞ் சங்கத்திற்கு இராச்சியசங்கமென்றும், மாகாணத்திலுள்ள மேற்றிராணிமார் தங்கள் அதிமேற்றிராணியாரோடு சேர்ந்து நடத்துஞ் சங்கத்திற்கு மாகாணச்சங்கமென்றும் பெயர். பொதுச்சங்கங்களெல்லாம் சாதாரண திருச்சபையின் சங்கங்களாகையால் அவைகள் விசுவாசத்தையும் ஒழுக்கத்தையும்பற்றிச் செய்யும் தீர்மானங்கள் யேசுநாதாரற் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் பிரகாரம் தவறாத தீர்மானங்களாம். தனிச்சங்கங்களின் தீர்மானங்களோ அப்படியல்ல. ஆயினும் அத்தீர்மானங்களை ஏற்றுக்கொண்ட மேற்றிராணிமாரின் அதிகாரத்துள் அடங்கிய விசுவாசிகளெல்லாம் அவைகளை அநுசரித்து நடக்கக் கடமைப்பட்டவர்களாய் இருப்பார்கள்.

### IV. திருச்சபை என்னென்ன விஷயத்தில் தவறிப்போகாது ?

95. திருச்சபையானது 1-வது, விசுவாசத்துக்கடுத்த விஷயங்களிற் தீர்மானம்பண்ணும்போதும், 2-வது, சாதாரண திருச்சபைக்குப் பொதுவானவைகளாயும் இரக்ஷணியத்துக்கு அவசியமானவைகளாயுமுள்ள ஒழுக்கவிதிகளை நிருபிக்கும்போதும் தவறாமை உள்ளதாயிருக்கின்றது. ஆதலால் விசுவாசத்தையும் ஒழுக்கத்தையும்பற்றித் திருச்சபைபண்ணும் தீர்மானங்களை எல்லாம் கிறீஸ்தவர்கள் அநுசரித்து நடக்கவேண்டியவர்கள். 3-வது, தன் நடப்பிப்புக்கு, அதாவது தன்வெளியாளுகைக்கடுத்த பிரமாணங்களையும் ஒழுங்குகளையும் திட்டம்பண்ணும்போதெல்லாம் தவறாமை உள்ளதாயிருக்கின்றது. அதாவது, இவ்வித பிரமாணங்களையும் ஒழுங்குகளையும் நிருபிக்குமிடத்து, விசுவாசத்திற்கும் ஒழுக்கத்திற்கும் விரோதமானது எதுவும் நிருபிக்கப்படமாட்டாது. திருச்சபையின் கருத்திலும் விசுவாசிகளின் எண்ணத்திலுமுள்ள யாதொரு சத்தியத்தோடு சமுத்திரையாய்ப் பொருந்தியிருக்கின்றவைகளும், சாதாரண திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்டவைகளுமான அநுசரிப்புகளைப்பற்றியும் இவ்வாறே சொல்லவேண்டும். உதாரணமாக, பரமதிரீத்துவத்தின் சத்தியத்தை அத்தாட்சிப்படுத்த திரீத்துவ மந்திரத்தைப்பாடும் வழக்கமும், யேசுநாதர் சற்பிரசாதத்தில் மெய்யாகவே எழுந்தருளியிருக்கிறார் என்பதைக் காண்பிக்கத் தேவநற்கருணைக்குத் தேவஆராதனை செய்யும் வழக்கமும், உத்தரிப்புஸ்தலம் உண்டென்னும் விசுவாசத்தைக்காண்பிக்க மரித்தவர்களுக்காகச் செபம்பண்ணும் வழக்கமும் பிறவுமாம். 4-வது, சுத்தவாளர்களுக்கு அர்ச். பட்டங்கொடுக்கும் போது அதாவது: மரித்தவர்களில் இன்னார் இன்னார் மோக்ஷபேரின்பத்தைப் பெற்றுக்கொண்டார்கள் என்று ஆடம்பரமாகவுந் திட்டமாகவுந் தீர்மானித்து, அவர்கள் விசுவாசிகளுடைய வணக்கத்திற்கும் கண்டுபாவிப்புக்குந் தக்கவர்கள் என்று கூறும்போதெல்லாம் தவறாமையுள்ளதாயிருக்கின்றது. அர்ச். பட்டஞ்சூட்டுவதிற் திருச்சபை தவறிப்போகக் கூடியதாயிருந்தால், நல்லொழுக்கத்திற்கடுத்த விதிகளிலேயே தவறியதாகிவிடும். ஆனால், மேலேசொன்னபடி நல்லொழுக்கவிதிகளிற் திருச்சபை தவறிப்போதல் ஒருபோதுங் கூடாது. ஆதலால், அர்ச். பட்டஞ்சூட்டுவதிலும் திருச்சபை ஒருபோதுந் தவறக்கூடாது.



---

## 3-ம் பிரிவு

## திருச்சபைத் தலைவரின்பேரில்

96. திருச்சபையின் காணப்படாத பரம தலைவர் யேசுநாதசுவாமியேயாம். ஆயினும், அத் திவ்விய இரக்ஷகர் தமது திருச்சபையை ஸ்தாபித்து அதின் ஆளுகையை அப்போஸ்தலர்களிடத்தில் ஒப்பித்தபோது, அவர்களில் ஒருவரைத்தெரிந்து மற்றவர்களுக்குத் தலைவராக நியமித்தருளினார். அவ்வாறு தெரிந்தேற்படுத்தப்பட்டவருக்குச் சீமோன் இராயப்பர் என்று பெயர். யேசுநாதர் அர்ச். இராயப்பருக்கு மற்ற அப்போஸ்தலர்கள்மேலும் முழுத் திருச்சபைமேலும் ஞான அதிகாரங் கொடுத்தருளினார் என்பது நிச்சயம்.

ரோமாபுரியிலே தமது சிங்காசனத்தை ஸ்தாபித்து விளங்கின அர்ச். இராயப்பருக்குப் பதிலாக முறைப்படி அச்சிங்காசனத்தில் வீற்றிருந்து ஆளுபவர்கள் எல்லாரும், விசுவாசிகள்மேலும் போதகர்கள்மேலும் அர்ச். இராயப்பருக்குக் கிடைத்திருந்த ஞான அதிகாரம் உள்ளவர்களாகிறார்கள். ஆதலால், ரோமாபுரியில் வீற்றிருக்கும் மேலான ஞானமேய்ப்பரே திருச்சபை முழுதுக்கும் பிரத்தியக்ஷதலைவராய் இருக்கிறார். அவருக்குப் பாப்பு என்று பெயர். பாப்பு அல்லது பப்பா என்பதற்கு அப்பா அல்லது பிதா என்று அர்த்தம். அவர் திருச்சபையின் பிள்ளைகளெல்லாருக்கும் ஞானத்தந்தையாய் இருப்பதால் அப்படி அழைக்கப்படுகிறார்.

### I. அர்ச். பாப்புவின் முதன்மை

97. முதன்மையானது சங்கையைப்பற்றிய முதன்மையென்றும் அதிகாரத்தைப்பற்றிய முதன்மையென்றும் இருவகைப்படும்.

சங்கையைப்பற்றிய முதன்மை என்னவெனில், மற்றவர்கள்மேல் யாதோர் அதிகாரத்தையுஞ் செலுத்தாமல் அவர்களுக்குள் தலையானவிடத்தில் ஒருவரை இருக்கச்செய்யும் உரிமையாம். அதிகாரத்தைப்பற்றிய முதன்மை, ஒருவரை மற்றவர்களுக்குச் சிரேஷ்டராயிருக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடவும் அவர்களைக் கண்டிக்கவுஞ் சிட்சிக்கவும் அதிகாரங்கொடுக்கும் உரிமையாம்.

அர்ச். இராயப்பர் ரோமாபுரிக்குப்போனதும், அங்கே சுவிசேஷத்தைப்போதித்துத் தமது ஆசனத்தை ஸ்தாபித்ததும், வேதசாட்சியாக மரித்ததுமாகிய இச்சம்பவங்களெல்லாம் பொய்யாத சம்பவங்கள் என்பதற்கு சபைப் பிதாக்கள் அனைவரும் வேதநூலாசிரியர்களும் திருச்சங்கங்களும் அர்ச். பாப்புக்களும் ஏகமாய்ச் சாட்சியிடுகிறார்கள். திருச்சபையின் சாதாரணமானதும் இடையறாததுமான பரம்பரையும் அவ்வண்ணமே கூறுகின்றது. இதன்றி அர்ச். இராயப்பர் மரித்தநாள்தொட்டு உரோமை மேற்றிராணிமார் இடையறாமல் அவருடைய சிங்காசனத்தில் வீற்றிருந்து ஆண்டுவந்தவர்களென்பதும், அம்மேற்றிராணிமாரெல்லாம் அர்ச். இராயப்பருக்கிருந்த மேலான அதிகாரத்தை திருச்சபையின்மேலே கொண்டிருந்தார்களென்பதும் நிச்சயமே.

அர்ச். பாப்பு முழுத் திருச்சபையின்மேலும் முதன்மை பெற்றிருக்கிறார் என்று ஒப்பிப்பதற்கு 1-வது, யேசுநாதர்தாமே இராயப்பருக்கு அதை அளித்தார் என்றும், 2-வது, அர்ச். இராயப்பரின் இடத்தில் அர்ச். பாப்பு இருப்பதினால் அவர் பெற்றிருந்த அந்த அதிகாரத்தையே இவரும் தெய்வீக உரிமைப்படி கொண்டிருக்கிறார் என்றும் காண்பிக்கக்கடவோம்.

98. I. யேசுநாதசுவாமி தம்முடைய அப்போஸ்தலர்களை நோக்கி: நீங்கள் நம்மை யாரென்று சொல்லுகிறீர்களென்று வினவினபோது, சீமோன் இராயப்பர் பிரத்தியுத்தரமாக: சீவியரான சருவேசுரனின் குமாரனாகிய கிறீஸ்து நீரேயென்று சொன்னார். அப்போது யேசுநாதர் அவரைநோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாமிசமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. பரலோகத்தில் இருக்கிற என்பிதாவே இதை உனக்கு வெளிப்படுத்தினார். ஆகையால் நானும் உனக்குச் சொல்லுகிறதாவது: நீ கல்லு, இந்தக் கல்லின்மேல் என் சபையைக்கட்டுவேன்; நரகவாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. பரலோக இராச்சியத்தின் திறவுகோல்களை உனக்குத் தருவேன்; பூலோகத்தில் நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலுங் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்தில் நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலுங் கட்டு அவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார். (அர்ச். மத். 16-ம் அதி.)



வேதவாக்கியத்தில் நரகவாசல்கள் என்பதற்குப் பிரிவினையையும் பதிதத்தையும் விளைவிக்கும் துட்டவல்லமைகளென்று அர்த்தமாம். திறவுகோல்கள் ஆளும் வல்லமையைக் குறிக்கும். கட்டுதல் என்பது கட்டளைகொடுக்கும் அதிகாரத்தையும் சட்டங்களை நிருபிக்கும் அதிகாரத்தையும், கட்டவிழ்த்தல் என்பது மன்னிப்புக் கொடுக்கும் அதிகாரத்தையும் விளக்கும். இந்த வாக்குத்தத்தத்தின்படி அர்ச். இராயப்பர் திருச்சபை முழுதுக்கும் தலையும் அஸ்திவாரமும் ஆக்கப்படவிருந்தார் என்பது தெளிவாயிற்று. திருச்சபையின் அங்கத்தவர்களாயுள்ள எல்லார்மீதும் மேலான அதிகாரங்கொண்டிருக்கவும், அவர்களை ஆளவும், அவர்களுக்குக் கட்டளை கொடுக்கவும், அவர்களுக்கு மன்னிப்பு அருளவும் வேண்டிய மேலான வல்லமை அவருக்குக் கிடைக்கப்போவதாயிருந்தது.

இந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும் பொருட்டே யேசுநாதர் தாம் உத்தானமானபின் மற்ற அப்போஸ்தலர்களோடு கூடவிருந்த இராயப்பரை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாக நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? என்றார். அதற்கு அவர்: ஆம் ஆண்டவரே உம்மை நேசிக்கிறேனென்பதை நீர் அறிவீர் என்றார். அப்போது அவர் என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார். இரண்டாந்தரம் அவரை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாய் இருக்கிறாயா? என்றார். அதற்கு அவர் ஆம் ஆண்டவரே உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றார். அப்போது அவர் என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார். மூன்றாந்தரமும் அவரைநோக்கி: யோனாவின் குமாரனான சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா? என்றார். என்னை நேசிக்கிறாயாவென்று யேசுநாதர் மூன்றாந்தரமும் தம்மைக் கேட்டபடியால் இராயப்பர் துக்கப்பட்டு: ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீரே. நான் உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றார். அப்போது அவர் என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார் (அர்ச். அருளப். 21-ம் அதி.). இந்த வாக்கியங்களால் யேசுநாதர் தமது ஞான மந்தை முழுவதுக்கும் அர்ச். இராயப்பரை மேய்ப்பராகவும் தலைவராகவும் நியமித்தருளினார் என்பதும், ஆடுகளாலுங் குட்டிகளாலுங் குறிக்கப்பட்டவர்களாகிய போதகர்களும் விசுவாசிகளுமாகிய அனைவரையும் ஆண்டுநடத்தும்

அதிகாரத்தை அவருக்கே தந்தருளினார் என்பதும் தெளிவாயிற்று. ஆதலால் திருச்சபைக்குட்பட்ட யாவரும் தாங்கள் எந்த வகுப்புக்குச் சேர்ந்தவர்களாய் இருப்பினும் எந்த மேலான உத்தியோகம் பூண்டவர்களாயிருப்பினும் அர்ச். இராயப்பரது அதிகாரத்துக்கு உட்பட்டவர்களேயாம்.

இந்த முதன்மையை அர்ச். இராயப்பர் வேண்டியவேண்டிய போதெல்லாம் செலுத்திக்கொண்டே வந்தார். மற்ற அப்போஸ்தலர்களும் அதை அங்கீகரித்தும் அதற்குக் கீழ்ப்படிந்தும் வந்தார்கள். அப்போஸ்தலர்களுடைய எண்ணிக்கையில் அவரே முதல்வராய் எண்ணப்பட்டிருந்தார். எப்போதும் எவ்விடத்தும் அவரே தலைவராயிருந்து பேசியும் காரியங்களை நடத்தியுங்கொண்டு வந்தார். யேசுநாதர் பரலோகத்திற்கு ஆரோகணமானபின் அப்போஸ்தலர்களும் சீஷர்களுங் கூடியசபையில் அத்தியக்ஷராய் இருந்து பிரசங்கித்துச் சதிகாரனாகிய யூதாசுக்குப் பதிலாக வேறு ஒரு அப்போஸ்தலரைத் தெரிந்து ஏற்படுத்தப்பண்ணினவரும் அர்ச். இராயப்பரே. யேசுநாதருடைய உத்தானத்தை யூதருக்கு முதன்முதல் தெரிவித்தவரும் அவரே. அஞ்ஞானியாகிய கோர்நேலியு என்பவனுக்கு ஞானஸ்நானங் கொடுக்கவேண்டும் என்றும், கிறீஸ்துவேதத்தில் யூதர் மாத்திரமன்றிச் சகல அஞ்ஞானிகளும் சேர்த்துக்கொள்ளப்படவேண்டுமென்றும் முதன்முதல் அர்ச். இராயப்பருக்கே தெரிவிக்கப்பட்டது. யெருசலேமிற் கூடிய சங்கத்தில் அவரே முதன்மையாயிருந்து பேசி அதிற்பண்ணவேண்டிய தீர்மானம் இன்னபடி என்று காண்பிக்கவே அப்போஸ்தலர்களும் சீஷர்களுமாகிய சபையார் எல்லாரும் ஒருமனமாய் அதை அங்கீகரித்துக்கொண்டார்கள். இந்தச் சங்கத்தைப்பற்றி அர்ச். கிறிசோஸ்தம் எழுதினவிடத்திலே: அர்ச். இராயப்பரே முதல்வராயிருந்து பேசுகிறார். ஏனெனில் அப்போஸ்தலர்களுக்குத் தலைவராய் இருப்பவர் அவரே; யேசுநாதர் தமது மந்தையை அவரிடத்திலேயே ஒப்பித்தருளினார் என்று கூறுகிறார். போதகர்களுக்கும் மற்ற விசுவாசிகளுக்கும் அர்ச். இராயப்பரே தலைவரென்னுஞ் சத்தியமானது பண்டுதொட்டுத் திருச்சபையில் எப்போதும் வழங்கிக்கொண்டுவந்திருக்கின்றது. தலைமுறை தலைமுறையாயுள்ள திருச்சபைப் பாரம்பரியமும் இதற்கொத்திருக்கின்றது. சபைப்பிதாக்களின் நூல்களும் திருச்சபையின் நடபடியும் இதற்குக் குன்றாத சாட்சியாயிருக்கின்றன. போசுவே என்னும் மகாவிற்பன்னர் இதைக் குறித்துச் சொல்லியிருக்கிறதாவது: அரசர் பிரசைகள் ஆயர் மந்தைகளாகிய அனைவரும் அர்ச். இராயப்பருக்குக் கீழ்ப்படிந்தவர்க



ளேயாம். முன்பு மற்ற அப்போஸ்தலர்களிலும் அதிகமாய் நேசிக்கவேண்டுமென்றும், பின்பு புருவைகளையும் ஆடுகளையும், குட்டிகளையுந் தாய்களையும், மேய்ப்போரையும் ஆண்டுநடத்த வேண்டுமென்றும் கட்டளை அடைந்தவர் அர்ச். இராயப்பரே என்கிறார்.

கடைசியாக, வத்திக்கான் மகா சங்கமானது நாலாங்கூட்டத்தில் இதை விசுவாசசத்தியமாக ஏற்படுத்தி, அர்ச். இராயப்பர் மற்ற அப்போஸ்தலர்களுக்கு முதல்வராகவும் உலகத்திலுள்ள முழுத் திருச்சபைக்கும் பிரத்தியக்ஷதலைவராகவும் யேசுநாதரால் நியமிக்கப்படவில்லை என்றாவது, அர்ச். இராயப்பர் மகிமையைப் பற்றிய முதன்மையையன்றி அதிகாரத்தைப்பற்றிய உண்மையான முதன்மையை யேசுநாதரிடத்திலிருந்து நேராகப்பெற்றுக்கொள்ளவில்லை என்றாவது யாவனொருவன் சொல்லத்துணிந்தால் அவனுக்குச் சாபமென்று தீர்மானம்பண்ணியிருக்கின்றது.

99. II. அர்ச். பாப்பு அர்ச். இராயப்பருக்குப் பதில்வராய் இருக்கிறபடியால் தெய்வீக உரிமைப்படி திருச்சபையின்மேல் பூரண அதிகாரமுள்ளவராகவிளங்குகிறார். ஏனெனில், அர்ச். இராயப்பருக்குக் கொடுக்கப்பட்டதாகிய சங்கையையும் அதிகாரத்தையும் பற்றிய முதன்மையானது அவர் ஒருவருக்குச் சொந்தமாய் அளிக்கப்பட்ட சுதந்தரமாயிராமல், விசுவாசிகளின் ஒற்றுமைக்காகத் திருச்சபைக்கே அளிக்கப்பட்ட அகத்தியமான ஓர் சுதந்தரமாயிருந்தது. ஆதலால், உகாந்தமட்டும் ஒருவர்பின் ஒருவராக அர்ச். இராயப்பருக்குப் பதிலாகத் திருச்சபையையாளும் அர்ச். பாப்புக்களெல்லாம் அந்த இரண்டுவகையான முதன்மைக்கும் உரியவர்களாம். திருச்சபையானது நரகவல்லமைகளால் ஒருபோதும் செயங்கொள்ளப்படாதபடிக்கு அசைவில்லாத ஒரு அஸ்திவாரத்தில் ஊன்றிநிற்பதும் திருச்சபை எனும் மந்தையிற் சேர்ந்த விசுவாசிகளை மேய்த்துப் பராமரிக்கும் இடையனாகிய ஒரு தலைவர் இருக்கவேண்டியதும் அவசியமாகையால் யேசுநாதர் தாம் அர்ச். இராயப்பருக்குத் திருவுளம்பற்றின வசனங்களை அவருக்குப்பின் அவருக்குப் பதிலாகத் திருச்சபையை ஆண்டுநடத்தும் சகல பாப்புகளுக்குமே திருவுளம்பற்றினார் என்பது நிச்சயமாம். இந்த விஷயத்தில் வத்திக்கான் மகா சங்கமானது: சாதாரண திருச்சபையின்மேல் முதன்மைபெற்று அர்ச். இராயப்பருக்குப் பதிலாக ஒருவர்பின்னொருவராக அர்ச். பாப்புக்கள் தொடர்ந்துவருவது யேசுநாதருடைய நிருபிப்பினால் அல்லவென்றாவது, மேலேசொன்ன முதன்மையோடு அர்ச். பாப்பு அர்ச். இராயப்பருக்குப் பதில்வ

ராய் இருப்பவரல்ல என்றாவது சொல்லத் துணிபவன் எவனோ அவனுக்குச் சாபமென்று நாலாங்கூட்டத்திற் தீர்மானம்பண்ணியிருக்கின்றது. ரோமாபுரி மேற்றிராணியாரென்று அழைக்கப்படுபவராகிய அர்ச். பாப்புவுக்குச் சாதாரண திருச்சபையின்மேல் இந்த மேலான அதிகாரமும் உச்சிதமேன்மையும் உண்டென்று இடையறாத பரம்பரையாலும் சபைப்பிதாக்களாலும் திருச்சபைச் சங்கங்களாலும் எப்போதும் அங்கீகரிக்கப்பட்டுக்கொண்டேவந்தது. ஆதலால், அர்ச். இராயப்பரை முறைமையாய்த் தொடர்ந்துவருபவராகிய அர்ச். பாப்பு தெய்வீக நியமிப்பின்படி முழுத்திருச்சபைக்கும் மேலான தலைவர் என்பதும், விசுவாசிகளும் போதகர்களுமாயுள்ள அனைவரும் அவரைச் சங்கிக்கவும் அவருக்குக் கீழ்ப்படியவும் அவரை நேசிக்கவும் கடமைப்பட்டிருக்கிறார்களென்பதும் கத்தோலிக்குத் திருச்சபையில் வழங்கிவரும் முக்கியமான சத்தியமாம்.

வத்திக்கான் மகா சங்கம் அர்ச். பாப்புவுக்குரிய முதன்மையின் இயல்பையுங் குணங்களையும் விரித்துரைத்தவகையாவது: உலகமடங்கலும் பரந்திருக்கும் திருச்சபையில் விசுவாசத்திற்கும் ஒழுக்கத்திற்கும் அடுத்தகாரியங்களோடு ஆளுகையிலும் ஒழுங்கிலும் அர்ச். பாப்பு மேலான அதிகார மில்லாதவராய் கண்காணித்து நடப்பிக்கும் உத்தியோகம் ஒன்றேகொண்டிருப்பவர் என்றாவது, அவ்வதிகாரத்தில் ஓர் பெரும் பங்கேயன்றி முழுவதும் அவருக்கு இல்லையென்றாவது, அவருக்குரிமையான அவ்வதிகாரம் எல்லாச் சபைகள்மேலும் அவற்றுள் ஒவ்வொன்றின்மேலும் போதகர்கள்மேலும் விசுவாசிகள்மேலும் அவர்களில் ஒவ்வொருவர்மேலும் இயல்பாகவும் நேராகவும் உள்ளது அல்லவென்றாவது சொல்லத் துணிபவன் எவனோ, அவனுக்குச் சாபமென்று நாலாங்கூட்டத்தில் விரித்துக் காண்பித்திருக்கின்றது.

II. அர்ச். பாப்புவின் முதன்மைக்குரிய சுதந்தரங்கள்

100. அர்ச். பாப்பு அர்ச். இராயப்பருக்குப் பதிலாகத் திருச்சபைக்குத் தலைவராகவும் அஸ்திவாரமாகவும், சாதாரண மேய்ப்பராகவுமிருக்கிறபடியால்,

**1-வது, அவர் சாதாரண திருச்சபைக்கிருக்கவேண்டிய ஐக்கியத்தின் மையமாம்.** ஆதலால், திருச்சபைக்கு அங்கமாயிருக்க விரும்பும் எவனும் விசுவாசம் முதலான ஞானபந்தனங்களால் அர்ச். பாப்புவோடு ஐக்கியப்பட்டிருத்தல் அவசியம். இந்தப் பிரதான மேய்ப்பரோடு ஐக்கியப்படாமல் அதாவது அப்போஸ்தொலிக்கு ஸ்தானத்தாற் போதிக்கப்படும் முழு விசுவாசத்தையும் அங்கீகரியாமலும், கற்பிக்கப்படும் எல்லாக் கற்பனைகளுக்கும் கீழ்ப்படியாமலும், அனுப்பப்படும் மேற்றிராணிமாரை ஏற்றுக்கொள்ளாமலும் இருப்பவன் எவனோ, அவன் இரட்சணியவழியை விட்டுத் தவறிப்போன பிரிவினைக்காரனாகிறான் அல்லது பதிதனாகிறான்.



101. **2-வது அவர் திருச்சபையின் தலைவராகிய அளவில் அபத்தத்தைப் போதிக்கக்கூடாதவராயிருக்கிறார்.** இதற்கு அர்த்தம் என்னவெனில்: விசுவாசத்திற்கும் ஒழுக்கத்திற்கும் அடுத்தவைகளை அர்ச். பாப்பு படிப்பிக்கும்போதெல்லாம் தவறாமை என்னுஞ் சுதந்தரத்தையுடையவர் என்றும் அப்படிப்பினை பொய்யாதது என்றும் அறிக. போதிக்குந் திருச்சபைக்குப் பொதுவாக உண்டென்று மேலே ஒப்பித்துக்காட்டிய தவறாமையானது அர்ச். பாப்புவுக்கு விசேஷமாக உண்டு. இந்தத் தவறாமையென்னுஞ் சுதந்தரத்தையே யேசுநாதர் அர்ச். இராயப்பருக்கும் அவரிடமாய்வரும் அர்ச். பாப்புக்களுக்குங்கொடுத்தருளினாரென்பதற்கு அவருடைய தேவ வாக்கு குன்றாத அத்தாட்சியாம். எவ்வாறெனில், அவர் இராயப்பரை நோக்கி: சீமோனே, உன்விசுவாசம் தவறிப்போகாதபடிக்கு நான் வேண்டிக்கொண்டேன். உன் சகோதரரை நீ ஸ்திரப்படுத்துவாயாக என்றும் (அர்ச். லூக் 22-ம் அதிகாரம்), நீ கல்லு இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டி எழுப்புவேன் நரகவாசல்கள் அதை மேற்கொள்ளமாட்டாவென்றும் (அர்ச். மத். 16-ம் அதிகாரம்) திருவுளம்பற்றியருளினார். ஆதலால் அர்ச். பாப்பு, திருச்சபைத் தலைவராக ஒரு சங்கத்திற் சேர்ந்திருந்தாவது தனித்திருந்தாவது, விசுவாசத்திற்கும் ஒழுக்கத்திற்கும் அடுத்த யாதொன்றைத் தமது மேலான ஞான அதிகாரத்தைக்கொண்டு தீர்மானித்தால் அத்தீர்மானம் தேவ ஏற்பாட்டின்படி தவறாத தீர்மானமாம் என்று ஒப்புக்கொண்டு அநுசரிப்பது சகல விசுவாசிகளுக்கும் கடமையாம்.

விசுவாச விதிகளையும் ஒழுக்க விதிகளையும் நிரூபிக்குந்தோறும் அர்ச். பாப்பு தவறாமையென்னும் சுதந்தரமுடையவர் என்னும் சத்தியமானது வத்திக்கான் திருச்சங்கத்தின் நாலாங்கூட்டத்தில் ஓர் விசுவாச சத்தியமாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது

102. **3-வது, அவர் சகலகிறீஸ்தவர்களையுங் கடமைப்படுத்தும் பிரமாணங்களை நிருபிக்கவும் கற்பனைகளைச் செய்**

**யவும் கூடியவர்.** அர்ச். பாப்பு சாதாரண திருச்சபையின் மேலான தலைவராகவும் பிரதான மேய்ப்பராகவும் இருக்கிறபடியால், தமது ஆளுகைக்குட்பட்ட சகலரையும் பாமரித்து இரட்சணிய வழியில் நடத்துவதும், விசுவாசத்தையும் தருமநெறியையும் பழுதின்றிக் காப்பாற்றிக்கொண்டுவருவதும் அவருக்கு உரிய கடமையாம். ஆதலால், அந்தக் கடமையைக் கிரமமாய் நிறைவேற்றும்பொருட்டு விசுவாசவிதிகளையும் நடப்பிப்பின் ஒழுங்குகளையும் ஏற்படுத்தும் உரிமை அவருக்கு இருக்கவேண்டும் என்பது பிரத்தியட்சம்.

103. இதைக்கொண்டு தீர்மானிக்கவேண்டியதென்னவெனில், 1-வது, அர்ச். பாப்புவாற் கொடுக்கப்படும் வேதகட்டளைகளைக் கிறீஸ்தவர்களாயுள்ள சகலரும், உலக அதிகாரிகளால் உண்டாகும் எவ்வித தடைகளையும் சட்டைபண்ணாமல், அநுசரித்துவருவது மனச்சாட்சிக் கடமையாம். 2-வது, திருச்சபையின் பொதுவானவைகளும் விசேஷமானவைகளுமான பிரமாணங்களால் உண்டாகும் கடமைகளில் நின்று ஒருவரை நீக்கிவிட அர்ச். பாப்புவுக்கு எப்போதும் உரிமையுண்டு.

104. **4-வது, அவர் சாதாரண சங்கங்களைக் கூட்டவும் நடத்தவும் அவைகளின் கற்பனைகளை உறுதிப்படுத்தவும் உரிமை பூண்டவர்.** ஒரு சங்கம் எத்தனை பெரிதாய் இருந்தாலும், அதில் அர்ச். பாப்பு சேராதிருப்பின், அது சாதாரண திருச்சபையின் பொதுச் சங்கமாய்க் கணிக்கப்படாது. ஏனெனில், அது சிரசில்லாத ஓர் உடல்போலிருக்கும். யேசுநாதர் தமது திருச்சபைக்கு அளித்த தவறாமையென்னும் சுதந்தரம் அதற்கு இல்லை. இல்லையெனவே, அதின் கற்பனைகள் விசுவாசிகளின் மனச்சாட்சிகளைக் கடமைப்படுத்துபவைகளுமல்ல. ஆதலால், எந்தச்சங்கமும் சாதாரண திருச்சபையினிடமாய் நிற்பதாய், தவறாமையென்னும் சுதந்தரமுள்ளதாய், விசுவாசிகளின் மனச்சாட்சிகளைக் கடமைப்படுத்தும் கற்பனைகளைக் கொடுக்கிறதாய் இருக்கவேண்டில், அது திருச்சபைத்தலைவராகிய அர்ச். பாப்புவாலே கூட்டவும் அவரால் நடத்தவும் அதின் தீர்மானங்களெல்லாம் அவரால் அங்கீகரிக்கப்படவும் வேண்டும்.

105. **5-வது, மேற்றிராணிமாரை ஏற்படுத்த அவருக்கு மாத்திரம் அதிகாரமுண்டு.** முறைப்படி தெரியப்பட்ட ஒரு பாப்பானவர் தாம் சாதாரண திருச்சபையின்மேல் செலுத்தவேண்டிய அதிகாரத்தை யேசுநாதரிடத்திலிருந்தே நேராகப் பெற்



றுக்கொள்ளுகிறார். ஆதலால், திருச்சபையை ஆண்டுநடத்தவும் தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றவும் எல்லா விசுவாசிகள்மட்டிலும் தமக்குள்ள ஞானவிசாரணைக்குரிய தொழில்களை நடத்தவும் அவருக்குப் பூரண அதிகாரமுண்டு. ஆயினும், பூமியடங்கலும் பரம்பி இருக்குங் கிறீஸ்தவர்களை அர்ச். பாப்பு ஒருவரே தாமாக விசாரணை செய்யக்கூடாதாகையால், திருச்சபையின் அவசியத்துக்கேற்றபடி மேற்றிராணிமார் நியமிக்கப்படவேண்டுமென்றும், அவர்கள் சாதாரண திருச்சபைத் தலைவருக்குக் கீழ்ப்படிந்திருந்து தங்களுக்குக் குறிக்கப்பட்ட பகுதிகளை ஆண்டு கொண்டுவரவேண்டுமென்றும் யேசுநாதர் தாமே நிரூபித்தருளினார். ஆதலால், அர்ச். பாப்பு அப்போஸ்தலர்களுள் அர்ச். இராயப்பருக்குப் பதிலாய் இருப்பதுபோல, மேற்றிராணிமார் மற்ற அப்போஸ்தலர்களுக்குப் பதிலாய் இருக்கிறார்கள். ஆயினும், அப்போஸ்தலர்கள் தனித்தனியே திருச்சபையில் மட்டுப்படாத அதிகாரமும் தவறாமையாகிய சுதந்தரமுங்கொண்டிருந்ததுபோல் மேற்றிராணிமார் தனித்தனி மட்டுப்படாத அதிகாரமும் தவறாமையாகிய சுதந்தரமுங் கொண்டிருப்பதோ இல்லை.

106. சாதாரண திருச்சபையின் ஆளுகை முழுவதும் தெய்வீக ஏற்பாட்டின்படி அர்ச். பாப்புவுக்கே ஒப்பிக்கப்பட்டிருக்கின்றபடியால், தாமாக விசாரணைசெய்யக்கூடாதபகுதிகளைத் தமக்குப் பதிலாகவுந் தமது அதிகாரத்தோடும் விசாரணைசெய்யும்படி தகுந்த தலைமேய்ப்பர்களைத் தெரிந்து ஏற்படுத்துவது அவருடைய மேலான அதிகாரத்துக்கு உரியதென்பது பிரத்தியக்ஷம். ஆதலால், அர்ச். பாப்பு மாத்திரம் திருச்சபை அடங்கலும் மேற்றிராணிமாரைத்தெரிந்து ஏற்படுத்த உரிமை பூண்டவரென்பதும், அவரால் நியமிக்கப்பட்ட மேற்றிராணிமாருக்கு மாத்திரம் திருச்சபையில் மெய்யான அதிகாரமுண்டென்பதும், அவரால் அனுப்பப்படாத எந்த மேற்றிராணியாருக்கும் திருச்சபையில் எவ்வித அதிகாரமும் இல்லையென்பதும் குன்றாத சத்தியமாம்.

அர்ச். பாப்புவால் நியமிக்கப்பட்ட மேற்றிராணிமார்மாத்திரம் திருச்சபையில் அந்தந்த மேற்றிராசனப்பகுதிகளை ஆண்டு நடத்த அதிகாரமுள்ளவர்களாய் இருப்பதுபோல, மேற்றிராணிமாரால் ஞானவதிகாரத்தோடு நியமிக்கப்படுங் குருமார்மாத்திரம் அந்தந்தப் பங்குகளை விசாரணைசெய்யவும், போதித்தல் தேவதிரவிய அநுமானங்களைநிறைவேற்றல் முதலான குருத்தொழில்களை நடத்தவும் அதிகாரமுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆதலால், முறை

மையான மேற்றிராணிமாரால் அனுப்பப்படாத குருமாருக்குத் திருச்சபையில் எவ்வித அதிகாரமும் இல்லையென்று தெளிந்து கொள்ளவேண்டும்.

---

## 4-ம் பிரிவு

### திருச்சபையின் அங்கத்தவர்கள்பேரில்

திருச்சபையின் அங்கத்தவர்களாய் இருப்பவர்கள் யாரென்பது தெளிவாகும் பொருட்டு, அவிசுவாசிகளும், ஞானஸ்நான ஆயத்தகாரரும், வேதத்துரோகிகளும், பதிதரும், பிரிவினைக்காரரும், திருச்சபைக்குப் புறம்பாக்கப்பட்டவர்களும், மோட்சத்திற்குநியமிக்கப்பட்டவர்களும், நரகத்திற்குள்ளாக்கப்படுவோரும், நீதிமான்களும், பாவிகளும் யாரென்பதைத் தனித்தனியே சொல்லிக்காட்டக்கடவோம்.

107. **அவிசுவாசிகள்** யாரெனில், ஞானஸ்நானம் பெறாமலும் உலகமீட்பரை விசுவசியாமலும் இருப்பவர்களாம். ஞானஸ்நானம் பெறாத சிறுபிள்ளைகளும், சருவேசுரனுக்குரிய தேவ ஆராதனையை விக்கிரகங்களுக்குச் செய்கிறவர்களாகிய அஞ்ஞானிகளும், யேசுநாதரை விசுவசியாமல் மகமது என்னும் பொய்த் தீர்க்கதரிசியை வணங்குகிற மகமதியரும், தங்கள் அதிபிதாக்களாகிய ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களுக்கு வாக்குப்பண்ணப்பட்ட மேசியா என்பவர் யேசுக்கிறீஸ்துதாம் என்று ஒத்துக்கொள்ளாத யூதர்களும் அவிசுவாசிகளேயாம்.

சத்தியவேதம் போதிக்கப்பெற்ற அவிசுவாசிகளுமுண்டு. அது போதிக்கப்பெறாத அவிசுவாசிகளுமுண்டு. சத்தியவேதமானது போதிக்கப்பெற்றும் அதை அங்கீகரியாமல், தங்கள் அவிசுவாசத்திலே மனோச்சாகமாய் ஊன்றிநிற்பவர்கள் திருச்சபையின் சரீரத்துக்காவது ஆத்துமத்துக்காவது சேர்ந்தவர்களல்ல. ஆனால் சத்தியவேதம் போதிக்கப்பெறாதவர்களுக்குள் உண்மையை அறிந்து அதைப் பற்றிக்கொள்ள ஆசையுள்ளவர்களும் தங்கள் மனச்சாட்சிப்படி தவறாது நடக்கிறவர்களுமிருந்தால், சருவேசுரன், தமது திருவுளப்படி, அவர்களுக்கு யேசுக்கிறீஸ்துவில் விசுவாசத்தையும் [illegible] மத்தியஸ்தரின் பெறுபேறுகளால் அடையப்படும் நித்திய

005746



சீவியத்தில் நம்பிக்கையையும் தேவசிநேகத்தையும் கொடுத்தருளி இரட்சணியவழியைக் காண்பிப்பாரென்பது நிச்சயம், அப்போது அவர்கள் திருச்சபைக்குப் பிள்ளைகளாகி இரட்சிக்கப்படுதல்கூடும். ஆனால் அவர்கள் சத்தியத்தையறிந்து பற்றிக்கொள்ள ஆசையுள்ளவர்களோ, தங்கள் மனச்சாட்சிப்படி நடக்கிறவர்களோ என்பதைப் பற்றித் தீர்மானிக்கக்கூடியவர் சருவேசுரன் ஒருவரேயாம். அவர் மாத்திரமே, அவர்களில் ஒவ்வொருவரிடத்திலுமுள்ள அறிவு அறியாமை துஷ்டத்தனம் மனநேர்மை ஆகியவைகளின் அளவாக, ஆக்கினையையாவது சம்பாவனையையாவது கட்டளையிட வல்லவராயிருக்கிறார்.

**ஞானஸ்நான ஆயத்தகாரர்** யாரெனில், அந்தத் தேவதிரவிய அனுமானத்துக்கு ஆயத்தமாக விசுவாச சத்தியங்களைப் படிக்கிறவர்களாம். அவர்களிடத்தில் உண்மையான விசுவாசமும் பூரண தேவசிநேகமுமிருந்தால் திருச்சபையின் ஆத்துமத்துக்குச் சேர்ந்தவர்களும் மோட்சத்துக் குரியவர்களுமாகிறார்கள். ஆயினும், அவர்கள் ஞானஸ்நானத்தை உள்ளபடி பெற்றுக்கொள்ளுமுன் திருச்சபையின் சரீரத்துக்குச் சேர்ந்தவர்களல்ல.

**வேதத்துரோகிகள்** யாரெனில், சத்தியவேதத்தை அங்கீகரித்து அநுசரித்தபின், அதை முழுதுந் தள்ளிவிடுகிறவர்களாம். இவர்கள், விசுவாசத்தைப் பிரசித்தமாய் வெறுத்த துரோகிகள் ஆகையால், திருச்சபைக்கு முழுதும் புறம்பாக இருக்கிறார்களென்பது பிரத்தியட்சம்.

**பதிதரென்பவர்கள்** யாரெனில், கிறீஸ்துவேதத்தை அநுசரிக்கிறவர்களாயிருந்தாலும், கத்தோலிக்குத் திருச்சபையின் போதகத்தை நன்றாயறிந்தும் அதற்குமாறாகத் தங்கள் சொந்த எண்ணங்களில் சலஞ்சாதித்து நிற்கிறவர்களாம்.

**பிரிவினைக்காரர்** யாரெனில், கத்தோலிக்கு விசுவாசத்தை அநுசரிக்கிறவர்களாயிருந்தாலும், திருச்சபைக்குப் பிரத்தியட்ச தலைவரான அர்ச். பாப்புவுக்குக் கீழ்ப்படியமாட்டோம் என்று சலஞ்சாதித்து நிற்கிறவர்களாம். விசுவாச சத்தியத்தை அல்லது சத்தியங்களைப் பகிரங்கமாய்த் தள்ளிவிடுகிறவர்களும் அவைகளுக்கு விரோதமான தப்பறைகளை வெளியாய்ப் போதிக்கிறவர்களும் பிரசித்த பதிதரென்னப்படுவார்கள். திருச்சபையின் ஐக்கியத்தை விட்டு வெளியரங்கமாய்ப் பிரிந்து போகிறவர்கள் பிரசித்த பிரிவினைக்காரரென்று அழைக்கப்படுவார்கள். பிரசித்த பதிதரும் பிரசித்த பிரிவினைக்காரரும் திருச்சபையின் சரீரத்துக்காவது ஆத்

Nallur Swami Gnanapragasar Library
657/1, H...TAL ROAD, JAFFNA

துமத்துக்காவது சேர்ந்தவர்களல்ல. அந்தரங்கபதிதரும் அந்தரங்க பிரிவினைகாரருமோ எனில், திருச்சபையின் ஆத்துமத்துக்குச் சேராதவர்களாயிருந்தாலும் அதின் சரீரத்துக்கு எப்போதுஞ் சேர்ந்தவர்களேயாம்.

**திருச்சபைக்குப் புறம்பாக்கப்பட்டவர்கள்** யாரெனில், சில கனமான பிரசித்த குற்றங்களுக்கும் திருச்சபைக்குக் கீழ்ப்படியாத மூர்க்கத்தனத்துக்கும் ஆக்கினையாக, விசுவாசிகளின் ஐக்கியப் பிரயோசனத்தினின்று தள்ளப்பட்டவர்களாம். இவர்கள் திருச்சபையின் ஆத்துமத்துக்குஞ் சரீரத்துக்குஞ் சேராதவர்களென்பது தானாய் விளங்கும்.

**மோட்சபேரின்பத்துக்கு நியமிக்கப்பட்டவர்களும் நரகாக்கினைக்குள்ளாக்கப்படுவோரும்.** 1-வது, மோட்சத்திற்கு நியமிக்கப்பட்டவர்களெல்லாரும் இப்போது திருச்சபையின் அங்கத்தவர்களாயிராமற்போகலாம். ஆயினும், தவறாமல் இரட்சிக்கப்படவேண்டிய இவர்கள் திருச்சபைக்குப் புறம்பே இரட்சணியம் இல்லாதபடியால், ஒரு நாள் திருச்சபையின் பிள்ளைகளாகவே இருப்பார்களென்பது நிச்சயம். 2-வது, மோட்சத்திற்கு நியமிக்கப்பட்டவர்களெல்லாரும் தற்போது திருச்சபையின் அங்கத்தவர்களாய் இருக்கிறதில்லையென்பது காணலாம். ஏனெனில், அவிசுவாசிகள் பதிதர் பிரிவினைக்காரர் ஆகியவர்களுக்குள் அநேகர் மனந்திரும்பி இரட்சிக்கப்படுவார்களாயினும் தங்கள் அவிசுவாசத்திலும் பதிதத்திலும் பிரிவினையிலும் சீவிக்குந்தனையும் திருச்சபைக்குப் புறம்பாகவே இருக்கிறார்கள். ஆதலால், திருச்சபைக்குப் புறம்பாயுள்ளவர்களுக்குள்ளும் மோட்சத்திற்கு நியமிக்கப்பெற்றவர்கள் உண்டென்று தீர்மானித்துக்கொள்ளவேண்டும். 3-வது, நரகத்துக்குள்ளாக்கப்படுவோர் திருச்சபையிலும் உண்டென்பது நிச்சயம். ஏனெனில், திருச்சபையின் அங்கத்தவர்களாயிருக்கும் அநேகர் இஸ்பிரீத்துசாந்துவின் அந்தரங்ககொடைகளைப்பெற்றும் திருச்சபையோடு வெளியரங்கமாய்ச் சம்பந்தப்பட்டும் இருந்தாலும், கடைசிமட்டும் மோட்சவழியில் நிலைகொள்ளாமல் சபிக்கப்பட்டவர்களாய் மரிக்கலாம். ஆதலால், மோட்சத்துக்கு நியமிக்கப்பட்டவர்கள் மாத்திரம் திருச்சபையில் சேர்ந்திருப்பார்களென்று சொல்லுவது தவறு.

**நீதிமான்கள்** யாரெனில், சாவானபாவமில்லாமல் விசுவாசம் நம்பிக்கை தேவசிநேகம் பிறர்சிநேகம் முதலான புண்ணியங்களோடு சீவிக்கிறவர்களாம். இவர்கள் திருச்சபையின் ஆத்துமத்துக்குஞ் சரீரத்துக்குஞ் சேர்ந்தவர்களென்பது பிரத்தியட்சம்.



**பாவிகள்** என்பவர்கள் யாரெனில், சாவானபாவத்தினால் தேவநேசத்தை முழுதுமிழந்து சீவிக்கிறவர்களாம். இவர்களிடத்தில் விசுவாசமும் நம்பிக்கையும் இருக்கக்கூடுமாயினும் தேவ சிநேகமில்லாமையால் திருச்சபையின் ஆத்துமத்துக்கு முழுதுஞ் சேர்ந்தவர்களென்று சொல்லப்படார்கள். ஆயினும், பிரசித்த பதிதராயாவது திருச்சபைக்குப் புறம்பாக்கப்பட்டவர்களாயாவது இராதபாவிகள் திருச்சபையின் சரீரத்துக்குச்சேர்ந்தவர்களேயாம். ஏனெனில் அவர்கள் வெளியரங்க ஒற்றுமையை முழுதும் நீக்கிவிடாததினால் இன்னுந் திருச்சபையோடு சம்பந்தப்பட்டவர்களாகிறார்கள். ஆதலால், நீதிமான்களும் மோட்சத்துக்கு நியமிக்கப்பட்டவர்களும் மாத்திரம் திருச்சபையில் இருக்கிறார்களென்று சொல்லுவது அபத்தமாம்.

# 5-ம் அதிகாரம்

## விசுவாசம்

1-வது, விசுவாசத்தின் தன்மை. 2-வது, விசுவாசத்தின் விஷயம். 3-வது, விசுவாசத்தின் மூகாந்திரம். 4-வது, விசுவாசத்திற்கு அதிகாரியாயுள்ளவர்கள்.

108. சருவேசுரன் மனிதருக்கு வெளிப்படுத்தி அவர்கள் விசுவசிக்கவேண்டும் என்று கற்பிக்கும் சத்தியங்களை நிச்சயமாய் அறிந்துகொள்வதற்கான வழிகள் அல்லது விசுவாசப்பிரமாணங்கள் எவையோவெனில், நாம் முந்தின அதிகாரத்திற் தெரிவித்தபடி தவறுதலில்லாததும் உயிருள்ளதுமான திருச்சபையின் அதிகாரத்தால் அர்த்தம்பண்ணவும் வியாக்கியானஞ் செய்யவும்பட்ட வேதாகமமும் பாரம்பரையுமேயாம். ஆனால், பிரதான சத்தியங்களுள் ஒவ்வொன்றையும் பற்றி விசுவாசமானது நமக்குப் போதிப்பது என்னவென்று விவரிக்குமுன், விசுவாசமாவது என்ன, அதின் பொருள் என்ன, அதின் மூகாந்திரம் என்ன, அதற்கு அதிகாரியாயுள்ளவர்கள் அதாவது அதைக் கைக்கொள்ளவேண்டியவர்கள் யார் என்பவைகளைப் போதகமுறையாய் மாத்திரம் இங்கே விளக்கிக்காண்பிப்போம்.

## 1-ம் பிரிவு

### விசுவாசத் தன்மையின்பேரில்

விசுவாசம் ஆவது என்னவெனில்: ஒருவர் நிச்சயிக்கும் சம்பவத்தையாவது போதிக்கும் சத்தியத்தையாவது அவருடைய உண்மைத்தனத்தின் நிமித்தம் மெய்யென்று நம்பி அங்கீகரித்துக்கொள்ளுவதாம். அது மானிடவிசுவாசம் என்றும் தெய்வீக விசுவாசம் என்றும் இருவகைப்படும். மனிதருடைய சாட்சியை ஆதாரமாய்க்கொண்டு பிறப்பது மானிட விசுவாசம் அல்லது சுபாவமான விசுவாசமென்றும், சருவேசுரனுடைய சாட்சியை ஆதாரமாய்க்கொண்டு பிறப்பது தெய்வீக விசுவாசம் அல்லது சுபாவத்திற்கு மேலான விசுவாசம் என்றும் பெயர்பெறும். நாம் இங்கே எடுத்துப் பேசுவது தெய்வீக விசுவாசத்தைப்பற்றியேயாம்.

விசுவாசமானது வழக்கமுறையான விசுவாசமென்றும் முயற்சிமுறையான விசுவாசம் என்றும் இரண்டாய் வகுக்கப்படும். அவற்றுள் **வழக்கமுறையான** விசுவாசம் யாதெனில், சருவேசுரன் வெளிப்படுத்தியருளிய சத்தியங்களையெல்லாம் அவருடைய பரிபூரண உண்மைத்தனத்தின் நிமித்தம் உறுதியாய் விசுவசிக்கும்படி நம்மைத் தூண்டும் சுபாவத்திற்கு மேலான ஓர் புண்ணியமாம்.

விசுவாசம், ஒரு **புண்ணியம்** என்னப்படும். ஏனெனில், அது நம்மை நன்மைக்குத் தூண்டும்படியாக ஆத்துமத்தில் வழக்கமாய் நிலைபெறுகின்ற ஒரு குணமாயிருக்கின்றது. விசுவாசம், **சுபாவத்திற்கு மேலான** ஒரு புண்ணியம் என்னப்படும். ஏனெனில், அது, மோக்ஷத்தில் சருவேசுரனை முகமுகமாய்த் தரிசிப்பதே மனிதனுக்குப் பரமகதியாகையால், அவன் அக்கதியை அடைந்து கொள்ளும்படி சருவேசுரன் அவனுக்குக் கொடுத்தருளும் இலவசமான ஓர் நன் கொடையாயிருக்கின்றது. அன்றியும் தெய்வீகமாய் வெளிப்படுத்தப்பெற்ற சத்தியங்களை மனிதன் விசுவசிக்கும் பொருட்டு, சருவேசுரன் அவனுடைய சித்தத்தை இணக்கும் போதே அவனுடைய புத்தியையும் ஞானவிதமாய் தெளியப் பண்ணுவதால் விசுவாசம் ஓர் ஞானவொளி என்றும் சொல்லப்படும். ஆதலால் விசுவாசத்தையாவது அதின் ஆரம்பத்தையாவது எந்த மனிதனும் தன் சுயவல்லமையால் அடைந்துகொள்ளுதல் கூடாதென்பது நிச்சயம். விசுவாசமானது **உறுதியாய் விசுவசிக்கும்படி தூண்டுகின்றது.** அதாவது: சருவேசுரன் வெளிப்



படுத்தினது எதுவோ, அதை மெய்யானதென்றும் நிச்சயமானதென்றும் அங்கீகரித்துக்கொள்ளும்படி செய்கின்றது. உள்ளபடியே விசுவாசமுள்ள எவனும் எவ்வித சந்தேகத்தையும் நீக்கி பூரண சம்மதி உள்ளவனாயிருத்தல் வேண்டும். **சருவேசுரனுடைய பரிபூரண உண்மைத்தனத்தினிமித்தம்** என்பதினால், விசுவாசத்தின் முகாந்திரமும், **சருவேசுரன் வெளிப்படுத்திய சத்தியங்களையெல்லாம்** என்பதினால் விசுவாசத்தின் விஷயமும் காண்பிக்கப்படுகின்றன. **முயற்சிமுறையான** விசுவாசம் யாதெனில், சருவேசுரனால் வெளிப்படுத்தப்பெற்ற சத்தியங்களுக்கு அவருடைய பரிபூரண உண்மைத்தனத்தின் நிமித்தம் நாம் தற்போது கொடுக்கும் உறுதியும் நிச்சயமுமான சம்மதியாம்.

முயற்சிமுறையான விசுவாசம் சிறப்பானதும் தொகுப்பானதுமென இரண்டு வகையாயிருக்கும். சிறப்பான விசுவாசமாவது, இன்னதென்று விசேஷமாய்க் குறிக்கப்பட்ட ஒரு சத்தியத்தை விசுவசிக்கும் முயற்சியாம். உதாரணம்: “பிதா சுதன் இஸ்பிரீத்துசாந்து என மூன்று ஆட்களாயிருக்கும் ஒரே சருவேசுரனை விசுவசிக்கிறேன்” என்று நாம் சொல்லும்போது பரமதிரீத்துவத்தின் பேரில் சிறப்பான விசுவாசமுயற்சி செய்கிறோம். தொகுப்பான விசுவாசமாவது பொதுவான ஒரு சத்தியத்தில் அடங்கியிருக்கும் ஒன்றும் பலவுமான வேறு சத்தியங்களை விசுவசிக்கும் முயற்சியாம். உதாரணம்: “திருச்சபை விசுவசித்துப் படிப்பிப்பதையெல்லாம் விசுவசிக்கிறேன்” என்று நாம் சொல்லும்போது, திருச்சபையாற் படிப்பிக்கவும் விசுவசிக்கவேண்டுமென்று தெரிவிக்கவும்பட்ட சகல விசுவாச சத்தியங்களின் பேரிலும் தொகுப்பான விசுவாசமுயற்சி செய்கிறோம்.

---

## 2-ம் பிரிவு

### விசுவாச விஷயத்தின்பேரில்

109. சருவேசுரனுடைய சாட்சியின் நிமித்தம் நாம் விசுவசிக்கவேண்டிய தெய்வீக சத்தியங்களே விசுவாசத்தின் விஷயமென்னப்படும். இச்சத்தியங்கள் எவையென்று நாம் தெளிந்துகொள்ளும்பொருட்டு, தேவ வெளிப்படுத்தலானது தனிவெளிப்படுத்தலென்றும் பொதுவெளிப்படுத்தலென்றும் இருவகைப்படுமென்பதை அறிதல் அவசியம். தனிவெளிப்படுத்தலாவது, ஒருவனுக்குத் தெரியாதவைகளும் மற்ற மனிதருடைய ஆத்தும

ஈடேற்றத்தையாவது கடைசிமுடிவுகளையாவது சேராமல் அவனை மாத்திரம் சேர்ந்தவைகளுமான காரியங்களை சருவேசுரன் அவனுக்குத் தெரிவித்தலாம். உதாரணமாக: இன்ன நாளில் சாவான். தவறாது மோட்சபாக்கியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுவானென்று இவைமுதலியவைகளைச் சருவேசுரன் அவனுக்குத் தெரிவித்தல் தனிவெளிப்படுத்தலாம். பொதுவெளிப்படுத்தலோ மற்றமனிதர்களும் விசுவசிக்கும் பொருட்டு அவர்களுக்குத் தெரிவிக்கப்படும்படியாகச் சருவேசுரன் யாதொருவனுக்கு யாதொன்றை அறிவித்தலாம். உதாரணமாக: மோசேசு, தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்களாகியவர்களுக்குச் சருவேசுரன் செய்த வெளிப்படுத்தல் பொதுவெளிப்படுத்தலெனப்படும். தனிவெளிப்படுத்தலைப் பெற்றுக்கொண்ட எவனும் தனக்குத் தெரிவிக்கப்பட்ட விஷயங்கள் தேவனாலேயே தெரிவிக்கப்பட்டவைகளென்பதற்குக் குன்றாத அடையாளங்கள் உண்டென்று தெளிவாய்க் கண்டுபிடித்தால், அவன் தனக்குத் தெரிவிக்கப்பட்ட விஷயங்களை உறுதியாய் விசுவசிக்கக் கடமைபூண்டவனாமென்று வேதசாஸ்திரிகள் பொதுவாக நிச்சயித்திருக்கிறார்கள். ஏனெனில், சருவேசுரன் நேராக யாதொருவனுக்கு யாதொன்றை வசனிக்கத் திருவுளமானபோது அவன் தமது தவறாத திருவாக்கை உறுதியாய் விசுவசித்துக் கொள்ள வேண்டுமென்றே கற்பித்தருளுகிறார். ஒருவனுக்குச் செய்யப்பட்ட தனிவெளிப்படுத்தலை அறிந்திருக்கக் கூடிய மற்ற மனிதரோவெனில், அவ்வெளிப்படுத்தல் சருவேசுரனாலாவது அவரால் ஏவப்பட்ட ஒருவராலாவது தங்களுக்குத் தெரிவிக்கப்படாதவரையில் அவைகளைத் தேவ விசுவாசத்தோடு விசுவசிக்கக் கடமை பூண்டவர்களல்ல. ஆயினும், சருவேசுரன் யாதொருவரை ஏவி அறியப்படாத ஒரு சத்தியத்தையாவது சம்பவத்தையாவது யாதொரு கட்டளையையாவது தமது நாமத்தினால் இன்னானுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று உத்தியோகங்கொடுத்தலும், அவ்வுத்தியோகம் தெய்வீகமானது என்பதற்குத் தெளிவும் நிச்சயமுமான அடையாளங்கள் இருத்தலுங்கூடும். அப்போது விசுவசிக்கவேண்டிய குன்றாத கடமை உண்டாகின்றது. சருவேசுரன் பழைய ஏற்பாட்டில் பலதரம் இவ்விதமான வெளிப்படுத்தல்களைச் செய்தும் உத்தியோகங்களைக் கொடுத்தும் வந்தாரென்பது வெளிப்படை. தனிவெளிப்படுத்தலாற் பிறக்கும் விசுவாசத்திற்குத் **தனிவிசுவாசம்** அல்லது **தேவசாஸ்திரத்திற்கடுத்த** விசுவாசமென்று பேர்.

பொதுவெளிப்படுத்தலே சாதாரணமான விசுவாசவிஷயமாயிருக்கின்றது. ஆதலால் அதையறிந்தவர்களும் அறியக்கூடியவர்களுமாகிய எல்லாரும் அதிலடங்கிய சகல சத்தியங்களையும் உறுதியாய் விசுவசிக்கக் கண்டிப்பான கடமை பூண்டவர்களாயிருக்கிறார்கள். இச்சத்தியங்களோவெனில் விசுவாச இருப்பில் அதாவது: வேதாகமம் பாரம்பரை என்பவைகளில் அடங்கியிருக்கின்றன. இச்சத்தியங்களை அறிந்துகொள்ளுதற்குள்ள சாதாரண வழி தேவ வெளிப்படுத்தலைத் தவறாதவிதமாய் வியாக்கியானஞ்செய்ய உத்தியோகம் பூண்டிருக்குந் திருச்சபையால் அவைகள் தெரிவிக்கப்படுதலேயாம். பொதுவெளிப்படுத்தலும் திருச்சபையின் போதகத் தீர்மானமுமாகிய இரண்டிலும் நின்று பிறக்கும் விசுவாசமானது **கத்தோலிக்கு விசுவாசம்** என்னப்படும். ஆத்தும ஈடேற்றத்தை அடையவிரும்பும் சகலருக்கும் கத்தோலிக்கு விசுவாசம் இன்றியமையாத அவசியமாயிருப்பதால், சருவேசுரனால் வெளிப்படுத்தப்பெற்றதும் திருச்சபையால் தீர்மானிக்கப்பட்டதுமாகிய ஒரேயொரு சத்தியத்தையென்கிலும் மறுக்கிற எவனும், அல்லது, அதின்மேற் சந்தேகப்படுகிற எவனும் நாம் முன்சொன்னபடி (80) திருச்சபைக்குப் புறம்பாகி இரக்ஷணியவழியினின்றும் பிசகிப் போகிறான்.

---

## 3-ம் பிரிவு

### விசுவாச முகாந்திரத்தின்பேரில்

110. வெளிப்படுத்தப்பெற்ற சத்தியங்களை விசுவசிக்கும்படி நம்மைத் தூண்டும் தீர்ப்பான நியாயமே விசுவாசத்தின் முகாந்திரம் என்னப்படும். வெளிப்படுத்தப்பெற்ற சத்தியங்களுக்குக் கொடுக்கும் பூரணமும் நிச்சயமுமான சம்மதியே விசுவாச முயற்சியாதலால், அந்த முயற்சியைச் செய்வதில் தவறிப்போகக் கூடாதென்று முழுதும் உறுதியாய் நிச்சயித்துக்கொண்டால் அன்றி அதைப் பிறப்பித்தல் கூடாது. ஆதலால், சந்தேகத்துக்காவது, தவறிப்போகக்கூடும் என்னும் பயத்துக்காவது இடமில்லாத நிச்சயத்தை பிறப்பிப்பதற்கான ஒரு பலத்த முகாந்திரத்தால் தூண்டப்பட்டே அம்முயற்சியைச் செய்யத் துணியவேண்டும். அப்படியிருக்க, விசுவாசத்தின்மட்டில் இவ்விதமான நிச்சயத்தை நம்மிடத்திற் பிறப்பிக்கும் முகாந்திரம் யாதோவெனில், சருவேசுரனிடத்தில் விளங்கும் பரிபூரண உண்மைத்தனமேயாம். நமக்குத் தெரியாத யாதொன்றை ஒருவன் நமக்குத் தெரிவிக்கும்போது அவனுடைய பேச்சை நம்ப நம்மைத் தூண்டுவதென்ன?

அவன் தானும் அணுப்புண்ணவில்லை நம்மையும் அணுப்பான் என்னும் உறுதியான நம்பிக்கையேயாம். சருவேசுரனுடைய வெளிப்படுத்தலைப்பற்றியும் இவ்விதமே சொல்லவேண்டும். அவருடைய ஞானமும் திரு வாக்கும் தவறிப்போதல் கூடாது என்னும் நிச்சயத்தினிமித்தமே நாம் அவருடைய வெளிப்படுத்தலை ஏற்றுக் கொள்ளுகிறோம். இவ்வண்ணமே, மனிதரால் நமக்குப் போதிக்கப்படும் யாதோர் சத்தியமானது சருவேசுரனால் முன்வெளிப்படுத்தப்பட்டதென்பது நிச்சயமாயிருந்தால், நாம் அச்சத்தியத்தை மனிதருடைய வாக்கென்று கைக்கொள்ளாமல் தேவவாக்கென்றே கைக்கொண்டு, சருவேசுரன் தாமே நேராக அதை நமக்குத் தெரிவித்தாற்போல உறுதியாய் ஏற்று விசுவசிக்கிறோம். ஏனெனில், அவ்வாக்குக்கு ஆதாரமாயிருப்பது அவருடைய பரிபூரண உண்மைத்தனம். ஆதலால் நம்முடைய விசுவாசத்தின் ஏகமுகாந்திரம் சருவேசுரனுடைய பரிபூரண உண்மைத்தனமேயன்றி வேறொன்றல்ல. இதைக்கொண்டு, நாம், சுபாவமான அறிவுகளுக்குள்ள நிச்சயத்திற்கு எவ்வளவாயினுங் குறையாததும் அதற்கு மேற்பட்டதுமான நிச்சயம் விசுவாச சம்மதிக்கு உண்டென்று தெளிந்துகொள்ளவேண்டியது. ஏனெனில், தவறுதலில்லாமையை இயல்பாயுடையதும் ஒப்பில்லாததுமான சாட்சியாகிய தேவசாட்சியே நாம் விசுவசிப்பதற்கு அசையாத அஸ்திவாரமாகின்றது.

நாம் சருவேசுரன் வெளிப்படுத்தியருளிய சத்தியங்களை அவருடைய சாட்சியையே அஸ்திவாரமாய்க் கொண்டு விசுவசிக்கத் துணியுமுன், அவரால் ஒருவெளிப்படுத்தல் நடந்தமையையும் அவ்வெளிப்படுத்தலின் அர்த்தத்தையும் தெளிந்துகொள்ளுவது அவசியம். ஆதலால், விசுவாச முயற்சிக்கு ஆரம்பமாய் வரவேண்டிய காரியங்கள் மூன்று. 1. நாம் விசுவசிக்கவேண்டிய சத்தியங்களைப் பிரசித்தப்படுத்திய தேவவெளிப்படுத்தலின் உண்மை, 2. அதின் அர்த்தத்தைத் தவறாத முறையாய் வியாக்கியானஞ் செய்யுந் திருச்சபையின் அறிவித்தல். 3. வெளிப்படுத்தலின் உண்மையைப்பற்றி நன்றாய்த் தீர்மானித்துக்கொள்வதற்கு உதவும் நம்பத்தகைமையின் முகாந்திரங்கள்.

**111. (I) தேவவெளிப்படுத்தல்.** சருவேசுரன் வெளிப்படுத்திய சத்தியங்களே விசுவாசத்தின் விஷயமாயிருப்பதால் தேவவெளிப்படுத்தல் விசுவாசத்திற்கு மிகவும் முக்கியமான அம்சமாயிருப்பினும் விசுவாசத்திற்கு முகாந்திரமல்ல. ஏனெனில், வெளிப்படுத்தப்பெற்ற யாதொரு விஷயத்தை நாம் விசுவசிக்கும்போது அதைச் சருவேசுரன் வெளிப்படுத்தியருளினார் என்பதை நோக்கி



யல்ல அவர் பூரண உண்மைத்தனமுள்ளவராயிருக்கிறார் என்பதை நோக்கியே விசுவசிக்கிறோம். ஆதலால் தேவவெளிப்படுத்தலானது விசுவாசத்திற்கு ஆரம்பமாய் வரவேண்டிய ஓர் அகத்திய அம்சமாய் மாத்திரம் இருக்கின்றது. அது விசுவாசத்திற்கு முகாந்திரமாயிராமல் விசுவசிக்க வேண்டிய பொருளை மாத்திரந் தெரிவிக்கும்.

**112. (II) திருச்சபையின் அறிவித்தல்.** திருச்சபையானது இன்னின்ன நூல் தேவ ஏவுதலால் செய்யப்பட்டது என்றும், இன்ன சத்தியம் தேவவெளிப்படுத்தலாகிய இருப்பில் அடங்கியது என்றும், ஆதலால் இன்ன சத்தியம் கத்தோலிக்கு விசுவாச சத்தியந்தானென்றும் தனக்குள்ள தவறாத அதிகாரத்தைக் கொண்டு தீர்மானிப்பதே திருச்சபையின் அறிவித்தல் என்னப்படும். விசுவாசத்தின் தன்மையை நோக்குமிடத்து, திருச்சபையின் அறிவித்தல் அதற்கு அத்தியாவசியகமென்று சொல்லத்தகாது. ஏனெனில், திருச்சபையின் தீர்மானமின்றி சில சமயங்களில் தேவவெளிப்படுத்தலை நிச்சயமாய் அறிந்துகொள்ளுதலும் விசுவசித்தலும் கூடும். தனிவெளிப்படுத்தலில் இவ்வாறே நடக்கின்றது. சருவேசுரன் மறைந்த சில சத்தியங்களைத் தாமே நேராகச் சிலமனிதருக்குத் தெரிவித்து, அவர்கள் அவைகளை விசுவசிக்கவேண்டுமென்று கற்பிக்கக் கூடும் என்பது நிச்சயம். பூர்வ அதிபிதாக்களோடும் தீர்க்கதரிசிகளோடும் இவ்வாறே செய்தார். வேதாகமத்திலுள்ள மிகத்தெளிவான சிலசத்தியங்களை நோக்குமிடத்து, அவைகள் சருவேசுரனால் வெளிப்படுத்தப்பெற்றவைகளோ அவைகளின் அர்த்தம் யாதோவென்று சந்தேகிக்கச் சற்றேனும் இடமில்லாதிருப்பதினாலும், இடையறாத பரம்பரையே அவைகளை அத்தனை விசுவாச சத்தியங்களாகக் கைக்கொண்டிருப்பதினாலும் அவைகளை நிச்சயப்படுத்தத் திருச்சபையின் தீர்மானம் வேண்டியதில்லை. ஆயினும் விசுவாச சத்தியங்களை நாம் அறிந்துகொள்வதற்குள்ள சாதாரணமும் வழக்கமுமான வழியாக திருச்சபையின் அறிவித்தலையே கர்த்தர் ஏற்படுத்தியிருக்கிறார் என்று விளங்கிக் கொள்ளவேண்டும். சருவேசுரன் வெளிப்படுத்திய ஒரு சத்தியம் வேதாகமத்திலும் பரம்பரையிலும் அடங்கியிருந்தாலும் விசுவாசிகள் அதை அறியாதிருத்தல் கூடும். அறியாதிருந்தால் விசுவசிக்கக் கடமையுமில்லை ; விசுவசியாததினால் சாபனையுமில்லை. இந்தச் சத்தியம் வெளிப்படுத்தலின் இருப்பிலே உண்டு என்று திருச்சபை சிறப்பான அல்லது தொகுப்பான தீர்மானத்தால் அறிவிக்கும்போதோவெனில், விசுவாச சம்மதியோடு அங்கீகரித்

துக் கொள்ளக்கடமை உண்டு. அங்கீகரித்துக்கொள்ளாவிடில் சாபாக்கினையு முண்டு. இதினிமித்தமே அர்ச். அகுஸ்தீன் என்பவர் திருச்சபையின் அதிகாரம் என்னைக் கட்டாயப்படுத்தாவிடில் சுவிசேஷ நூல்களையும் நான் நம்பியிரேன் என்றார்.

சிறப்பான அல்லது **தொகுப்பான** தீர்மானத்தால் என்றோம்; ஏனெனில், நாம் விசுவசிக்கவேண்டிய சத்தியங்களை எல்லாம் திருச்சபையானது சிறப்பான விதமாய்த் தீர்மானித்துத் தெரிவித்திருக்கவில்லை. ஆயினும் சிறப்பாய்த் தீர்மானிக்கப்படாத அநேக சத்தியங்கள் விசுவாச சத்தியங்களாகவே இருக்கின்றன என்பது நிச்சயம். ஏனெனில், அவைகள் தேவ வெளிப்படுத்தலின் இருப்பிலும் சிறப்பான தீர்மானங்களிலும் அடங்கி இருக்கின்றன. உதாரணமாய், எல்லாக்காலத்திலும் எல்லாஇடத்திலும் விசுவாச சத்தியங்களாகக் கைக்கொள்ளப்பட்டு இருக்கும் சில உண்மைகளைக் காணலாம். இவ்வாறே, திருச்சபையானது வேதாகமங்கள் எல்லாம் தேவவாக்காம் என்று ஒருதரம் தீர்மானித்தபோதே அந்நூல்களில் சிறப்பாய்க் குறிக்கப்பட்டிருக்கும் சத்தியங்கள் எல்லாம் சருவேசுரன் வெளிப்படுத்தியவைகளும் கத்தோலிக்கு விசுவாசத்திற்கு அடுத்தவைகளும் என்று தொகுப்பாய்த் தீர்மானித்துத் தெரிவித்தாற்போலாயிற்று.

தேவ வெளிப்படுத்தலுக்கும் திருச்சபையின் அறிவித்தலுக்கும் வித்தியாசமுண்டு. எப்படியெனில், திருச்சபையானது தேவ வெளிப்படுத்தலில்லாதவிடத்தும் சில சத்தியங்களை விசுவாச சத்தியங்களாகத் தீர்மானித்து அவைகளை விசுவசிக்க வேண்டுமென்று கற்பித்தலுங் கூடும். யேசுநாதருக்குப்பின் புதிதான வெளிப்படுத்தல் நடவாமலும் விசுவாசவிஷயமானது அதிகரியாமலும் இருந்தாலும், திருச்சபையானது தேவவெளிப்படுத்தலினின்று பிறக்கிற சில புது உண்மைகளைப் பலமுறையும் நிரூபணஞ் செய்து அவைகளையும் கிறீஸ்தவர்கள் விசுவசிக்க வேண்டுமென்று அறிவித்திருக்கின்றது. உதாரணம்: ஒரு பதிதனாற் கொடுக்கப்பட்ட ஞானஸ்நானம் பலனுள்ளதென்னும் சத்தியமாம்.

113. (III) **நம்பத்தகைமையின் முகாந்திரங்கள்.** நம்பத்தகைமையின் முகாந்திரங்கள் எவையெனில், நாம் திருச்சபையின் சுபாவத்திற்குமேலான அதிகாரத்தை நோக்காமல், தேவ வெளிப்படுத்தலொன்று உண்டென்பதை பொதுவாகவும், சிலசத்தியங்கள் தெய்வீகமாய் வெளிப்படுத்தப்பட்டு வேதாகமத்திலாவது பாரம்பரையிலாவது தெளிவாய்க் குறிக்கப்பட்டிருக்கின்றன



வென்பதை விசேஷமாகவும் அறிந்துகொள்ளுவதற்குதவும் நியாயங்களாம். இவ்வாறே, மெய்யான வேதம் ஒன்று உண்டென்பதை நம்பத்தகைமையின் முகாந்திரங்களால், அதாவது: அற்புதங்களாலும், தீர்க்கதரிசனங்களாலும், சனங்கள் ஒருவாய்ப்படவும் இடைவிடாமலும் சொல்லும் சாட்சியாலும் மெய்யான வேதத்தை விசேஷித்துக்காட்டும் பிறவிலக்ஷணங்களாலும் தெளிந்து கொள்ளுகிறோம்.

விசுவாச முயற்சியானது விவேகமும் நியாயமுமான ஒருகிரியையாயிருப்பதால், பெரும்பாலும் நம்பத்தகைமையின் பலத்த முகாந்திரங்களைக்கொண்டே தேவ வெளிப்படுத்தல் உண்டென்று நிச்சயித்துக்கொள்ளவேண்டும். பெரும்பாலும் என்றோம். ஏனெனில், சிறுபான்மை சருவேசுரன்தாமே ஒருவருடைய புத்தியை விசேஷவிதமாய் விளக்கி தேவவெளிப்படுத்தல் உண்டென்பதைத் தெளிந்துகொள்ளச் செய்தலும் கூடும். இப்படியே சிறுபிள்ளைகளிடத்திலும் அவிவேகிகளிடத்திலும் சம்பவிக்கின்றது. இவர்கள் தாங்கள் மெய்யான வேதத்திலிருப்பதையும், தாங்கள் விசுவசிக்கும் சத்தியங்கள் சருவேசுரனாலே வெளிப்படுத்தப்பட்டவைகளென்பதையும் நியாயங்களால் அல்லது நம்பத்தகைமையின் முகாந்திரங்களால் நிச்சயமாய் அறிந்துகொள்ளக் கூடாதவர்களாயிருந்தாலும், மெய்யான விசுவாசமுயற்சி செய்கிறார்களென்பதிற் சந்தேகமில்லை. நம்மிடத்தில் விசுவாசமுண்டாவதற்கு நம்பத்தகைமையின் முகாந்திரங்கள் பெரும்பாலும் அவசியமாகையால் நாம் அவைகளை ஆராய்ந்தறிந்துகொள்ளுவது நலமென்றுமாத்திரம் சொல்லாமல், பெரும் கடமையென்றுமே சொல்லவேண்டும். ஏனெனில், நாம் எதினிமித்தம் ஒன்றை விசுவசிக்கிறோமென்பதை இயன்றமட்டும் தெளிந்துகொள்ளவும், நம்முடைய விசுவாசத்திற்கு விரோதமாய்ப் பேசுகிறவர்களுக்கு நியாயமுத்தரிக்கவும் கடமைபூண்டவர்களாயிருக்கிறோம்.

விசுவாசமுயற்சிக்கு வேண்டிய நம்பத்தகைமையின் முகாந்திரங்களோ மெய்யானவைகளாயும், சாதாரண உத்தேசப்படி தவறுதவைகளாயும் இருப்பது அவசியம். ஏனெனில், நாம் விசுவாச முயற்சிசெய்யும்போது, சந்தேகமாவது, தவறிப்போகக்கூடுமென்னும் பயமாவது இல்லாமல் முழுநிச்சயத்தோடே அதைச் செய்ய வேண்டும். இந்த நிச்சயமோ பலத்த முகாந்திரங்களாலன்றி உண்டாதல் கூடாது ஆதலால், போலியான முகாந்திரங்கள் விசுவாசமுயற்சிக்கு ஒருகாலும் போதாது என்று தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

114. விசுவாசத்தின் முகாந்திரத்திற்கும் நம்பத்தகைமையின் முகாந்திரத்திற்குமிடையே வித்தியாசமுண்டு. விசுவாசத்தின் முகாந்திரமானது விசுவாச சத்தியங்களுக்கு நாம்கொடுக்கும் உறுதியும் நிச்சயமுமான சம்மதிக்கு அடிப்படையாம். நம்பத்தகைமையின் முகாந்திரமோ விசுவாசத்திற்குமுன்வருவதாயும், அதற்குவழியாயும், பெரும்பாலும் அதற்கோர் சங்கேதமாயுமிருக்கும். எப்படியெனில், நம்பத்தகைமையின் முகாந்திரத்தைக் கொண்டு தேவவெளிப்படுத்தலுண்டென்னும் உண்மையையும், தேவவெளிப்படுத்தலைக்கொண்டு விசுவாசத்தின் விஷயத்தையும் அறிந்துகொள்ளுகிறோம். விசுவாசத்தின் முகாந்திரமானது சகலருக்கும் ஏகமானதாயும் மாறாததாயும் தவறாமையைத் தெய்வீகமாயுடையதாயுமிருக்கின்றது. நம்பத்தகைமையின் முகாந்திரங்களோவெனில் பலவாயும் வெவ்வேறான சத்துவமுள்ளனவாயுமிருக்கும். ஒன்றை நிச்சயிப்பதற்கு ஒருவருக்குப் போதிய முகாந்திரம் வேறொருவருக்குப் போதாததாயிருக்கலாம்.

115. விசுவாசத்தின் முகாந்திரத்தைக்குறித்து நாம் இதுவரையும் சொல்லியவைகளைக்கொண்டு ஒருவன் விசுவாசத்திற்குக் கொடுக்குஞ் சம்மதியானது மூன்றுகாரணங்களாற் பிறக்கின்றது என்று அறியலாம். அவை வெளிப்படுத்தலைச் செய்கின்றவராகிய சருவேசுரனுடைய உண்மைத்தனமும், வெளிப்படுத்தலின் அர்த்தத்தை நிருணயிக்கின்றதாகிய திருச்சபையின் அதிகாரமும், வெளிப்படுத்தல் உண்டென்பதையும் திருச்சபை உண்டென்பதையும் தெரிவிக்கின்றதாகிய நம்பத்தகைமையின் முகாந்திரமும் என்னப்படும். ஆதலால், விசுவாசமானது அதற்கு நேரான முகாந்திரமாகிய தேவனுடைய மேலான உண்மைத்தனத்தாலும், வெளிப்படுத்தப்பட்டவைகளை வியாக்கியானஞ் செய்யும் உயிருள்ள பிரமாணமாகிய திருச்சபையின் அதிகாரத்தாலும், விசுவசிக்க ஆயத்தப்படுத்தும் அத்தாட்சிகளாகிய நம்பத்தகைமையின் முகாந்திரங்களாலும் உண்டாகின்றது. உதாரணமாக: ஒரு கத்தோலிக்கனைநோக்கி, அர்ச். திரித்துவ பரம இரகசியத்தை நீ விசுவசிக்கிறதற்கு நியாயமென்னவென்று கேட்டால் அவன் சொல்லவேண்டியது என்னவெனில், சருவேசுரன் தேவசுபாவத்தில் ஒருவராயும் ஆள்வகையில் மூவராயும் இருக்கிறாரென்று விசுவசிக்கிறேன். ஏனெனில், இந்தச் சத்தியத்தை எனக்கு வெளிப்படுத்தின சருவேசுரன் ஞானத்திலும் போதகத்திலும் தவறாதவராயிருக்கிறார். தவறாவரத்தைப் பெற்றிருக்குந் திருச்சபை இப்படியே எனக்குப் படிப்பிக்கின்றது. இதன்றித் திருச்சபை உண்டென்பதையும், விசுவாசத்துக்கடுத்த



விஷயங்களைப்பற்றித் தீர்மானம்பண்ணத் தவறா அதிகாரம் அதற்கு உண்டென்பதையும், அர்ச். திரீத்துவ பரமரகசியத்தை சருவேசுரனே வெளிப்படுத்தினாரென்று அது போதிப்பதையும் நம்பத்தகைமையின் முகாந்திரங்களைக்கொண்டு நான் உறுதியாய் அறிந்திருக்கிறேனென்று சொல்லவேண்டும். இந்த முறையை அநுசரித்தால் சகல விசுவாசிகளும் தங்கள் விசுவாசத்தைப் பகுத்தறிந்து தெளிவாய்க் கண்டுகொள்வார்கள்.

---

## 4-ம் பிரிவு

### விசுவாசத்திற் கதிகாரியாயுள்ளவர்களின் பேரில்

116. விசுவாசம் யார்யாரிடத்திலுண்டோ அவர்களே விசுவாசத்திற்கு அதிகாரிகளாம். 1-வது, பூமியிலே வாழும் சிறுவரும் வளர்ந்தவர்களுமான எல்லா நீதிமான்களிடத்திலும் விசுவாசமுண்டென்பது நிச்சயம். ஏனெனில், விசுவாசமில்லாமல் நீதிமானாயிருத்தல் அதாவது: சருவேசுரனுக்கு உகப்பாயிருத்தல் ஒருபோதும் கூடாது. 2-வது, அஞ்ஞானிகளாயிருப்பவர்களிடத்தில் விசுவாசம் இல்லையென்பது நிச்சயம். இவர்களிடத்தில் விசுவாசம் இல்லாததின்நிமித்தமே அவிசுவாசிகளென்னப்படுகிறார்கள். 3-வது, விசுவாசம் பாவிகளாயுள்ளவர்களிடத்திலுமிருக்கலாம். இச்சத்தியத்தை திரேந்துநகர சங்கமானது புரோட்டெஸ்தாந்தருடைய துர்ப்போதகத்துக்கோர் மறுப்பாக ஆறுங்கூட்டத்தில் இருபத்தெட்டாம் விதியாகத் தீர்மானித்திருக்கின்றது. அன்றியும் நான் மலைகளைப் பெயர்க்கத்தக்க விசுவாசமுள்ளவனாயிருந்தாலும் என்னிடத்தில் அன்பில்லாவிட்டால் நான் ஒன்றுமில்லையென்று அர்ச். சின்னப்பர் வசனித்தபோது இந்தச் சத்தியத்தையே தேவ வாக்கியமாய் ஸ்தாபித்தார். விசுவாசமும் பாவமும் ஒருவனிடத்தில் ஒருமிக்க இருக்கக்கூடுமாயினும், பாவமானது படிப்படியாய் விசுவாசத்தைக் குறைக்கவும் கடைசியாய் அதின் பழக்கத்தை முற்றாய் அழித்துவிடவும் பலகாலும் நேரிடும்.

பதிதர், தெளிந்தபதிதர் தெளியாதபதிதரென்று இருவகைப்படுவர். ஒரு சத்தியத்தை சருவேசுரன் வெளிப்படுத்தினார் என்றும் அதைத் திருச்சபை படிப்பிக்கிறதென்றும் பூரணமாய் அறிந்தும், அதை மூர்க்கத்தனமாய் மறுதலிக்கிறவர்கள் தெளிந்த பதிதரென்றும்; யாதொரு சத்தியத்தைச் சருவே

சுரன் வெளிப்படுத்தியதைக் கொஞ்சமாவது அறியாததினால் அதை மறுதலிக்கிறவர்கள் தெளியாத பதிதரென்றும் சொல்லப்படுவர். தெளிந்தபதிதரிடத்தில் விசுவாசமிருத்தல் கூடாது. ஏனெனில் அவர்கள் வெளிப்படுத்தப்பெற்ற சில சத்தியங்களை விசுவசித்தாலும் விசுவாசத்தின் முகாந்திரத்தையோ தள்ளிவிடுகிறார்கள். அன்றியும், சருவேசுரன் மேலான உண்மைச் சுரூபியாயிருப்பதின் நிமித்தம் அவர்கள் விசுவசிக்கிறதில்லை. அவ்வச்சத்தியங்களைத் தள்ளிவிடும்போது அல்லது அங்கீகரித்துக்கொள்ளும்போது சருவேசுரனை நம்புகிறதைக்காட்டிலும் தங்களையே அதிகமாய் நம்பிக்கொள்ளுகிறார்கள்.

பிசாசுகளிடத்திலும், நரகவாசிகளிடத்திலும் விசுவாசமில்லை. ஏனெனில், விசுவாசமானது உள்ளபடியே சருவேசுரனாற் கிடைக்கும் சுபாவத்திற்கு மேலான ஒருவரமாம். இந்தவரமோவெனில் ஒருவனுடைய சித்தத்திலே பத்தியான ஏவுதலை உண்டாக்கி, தேவவெளிப்படுத்தலான சத்தியங்களை அவன் விசுவசிக்கவும் சருவேசுரனிலே அவன் உருக்கமான அன்புகூரவும் விசுவாசத்தின்மூலமாய்த் தான் நம்பியிருக்கிற நித்திய சீவியத்தை விரும்பவுஞ்செய்கின்றது. இங்கே சொன்ன ஞானவுணர்ச்சிகள் பிசாசுகளிடத்திலாவது நரகவாசிகளிடத்திலாவது இருத்தல் ஒருபோதும் கூடாது. ஏனெனில், சருவேசுரன் அவர்களுக்கு எவ்வித ஞானவரத்தையாவது கொடுக்கிறதேயில்லை. ஆதலால், மோக்ஷபேரின்பத்தைப் பற்றிய நம்பிக்கையும் அவர்களிடத்தில்லை. அர்ச். யாகப்பர் தமது நிருபத்தில் 2-ம் அதிகாரத்தில் பிசாசுகளும் விசுவசித்து நடுங்குகின்றன என்று எழுதியபோது, நாம் இங்கே சொல்லிய மெய்யான விசுவாசத்தைக்குறித்து பேசாமல், வெளிப்படுத்தலையும் வெளிப்படுத்தப்பெற்ற அநேக சத்தியங்களையும்பற்றி பிசாசுகளுக்கு இயல்பாயுள்ள அறிவைக்குறித்தே பேசினார். உள்ளபடி, பிசாசுகள் தங்களுக்குத் திருஷ்டாந்தமான சத்தியங்களை, உதாரணமாக: சருவேசுரன் இருக்கிறார், அவர் நீதியுள்ளவர், அவர் சருவ வல்லபமுள்ளவர், அவர் தங்களுக்கு ஆக்கினை இடுகிறாரென்னும் இவைபோலும் சத்தியங்களைக் கொஞ்சமாகிலும் மறுக்கக்கூடாததின் நிமித்தமே கட்டாயத்தால் விசுவசிக்கிறார்கள். அவர்களுடைய விசுவாசமோ முழுதும் சுபாவமான விசுவாசமாம். ஆதலால், அது அவர்களுக்குப் பிரயோசனமற்றதேயாம்.

மோட்சவாசிகளிடத்தில் விசுவாசம் உண்டோவெனில் அவர்களுக்கு அது வேண்டியதில்லை. ஏனெனில், அவர்கள் சருவேசுரனை முகமுகமாய்த் தரிசிக்கிறார்கள். பிரகாசமயமான சருவேசுர



னிலே அவர்கள் சகலத்தையும் காண்கிறார்கள். நித்திய பேரின்ப பாக்கியமே அவர்களுடைய அந்தஸ்தாயிற்று. ஆதலால், அவர்கள் விசுவாச அந்தஸ்துக்குமேலான அந்தஸ்திலே இருக்கிறார்கள். உத்தரிப்புஸ்தலத்து ஆத்துமாக்களைப்பற்றி இப்படிச் சொல்லக்கூடாது. சருவேசுரனை முகமுகமாய்த் தரிசிக்க இன்னும் அவர்களுக்குக் கிடையாததினால், அந்தத் தரிசனைக்கு ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களிடத்திலுள்ள நம்பிக்கையானது விசுவாசத்திலேயே ஊன்றியிருக்கின்றது. ஆதலால், விசுவாசம் அவர்களிடத்தில் உண்டென்பது நிச்சயமாம்.

லத்திரான் திருச்சங்கம் 3-ம், கூட்டத்தில் விசுவாசத்தையும் புத்தியையும்பற்றிச் செய்த தீர்மானங்களை இங்கே எடுத்துச் சொல்லி முடிப்போம்.

### விசுவாசத்தைப்பற்றி

1. மானிட புத்தியானது கொண்டிருக்கிற சுயாதீனத்தின் நிமித்தம், அது யாதொன்றை விசுவசிக்கவேண்டும் என்று சருவேசுரன் கற்பிக்கக்கூடாதவராயிருக்கிறார் என்று யாராவது சொல்லத் துணிந்தால் அவனுக்குச் சாபம்.

2. தேவ விசுவாசமானது சருவேசுரனைப்பற்றிய சுபாவ அறிவுக்கும், நல்லொழுக்கத்துக்கடுத்தவைகளைப்பற்றிய சுபாவ அறிவுக்கும் வேறானது அல்லவென்றும், ஆதலால், வெளிப்படுத்தலான சத்தியத்தை அதை வெளிப்படுத்தின சருவேசுரனுடைய அதிகாரத்தினிமித்தம் விசுவசிப்பது தெய்வீக விசுவாசத்திற்கு அவசியமல்லவென்றும் யாராவது சொல்லத்துணிந்தால் அவனுக்குச் சாபம்.

3. தேவ வெளிப்படுத்தலை வெளியரங்கமான அறிகுறிகளைக் கொண்டு விசுவசிப்பது கூடாதென்றும், ஆதலால், ஒவ்வொருவனும் தன் தன் அந்தரங்க அநுபவத்தாலாவது தனித் தேவ ஏவுதலாலாவது விசுவாசத்திற்குக் கொண்டுவரப்படவேண்டுமென்றும் யாராவது சொல்லத்துணிந்தால் அவனுக்குச் சாபம்.

4. அற்புதங்களிருத்தல் கூடாதென்றும், ஆதலால், பொதுவாய் அற்புதங்களைப்பற்றிச் சொல்லப்பட்ட எல்லாச் சங்கதிகளும் விசேஷமாய் வேதாகமத்திற் சொல்லப்பட்ட சங்கதிகளும் கட்டுக்கதை என்றும், அல்லது அற்புதங்களை ஒருபோதும் நிச்சயமாய் அறிந்துகொள்ளுதல் கூடாதென்றும், கிறீஸ்துவேதத்தின் தெய்வீக உற்பத்தியை அற்புதங்களால் உறுதியாய் அத்தாட்சிப்

படுத்தக் கூடாதது என்றும் யாராவது சொல்லத்துணிந்தால் அவனுக்குச் சாபம்.

5. விசுவாசத்துக்குக் கொடுக்கப்படும் சம்மதியானது தன்னிட்டமானதல்ல, அது மானிடயுத்தியின் அநுமானத்தினால் கட்டாயமாயுண்டாகின்றது என்றாவது, அன்பினால் கிரியைகளைச் செய்கின்றதாகிய உயிருள்ள விசுவாசத்திற்குமாத்திரம் சருவேசுரனுடைய வரப்பிரசாதம் வேண்டியது என்றாவது யாராவது சொல்லத்துணிந்தால் அவனுக்குச் சாபம்.

6. விசுவாசத்தைப் பெற்றுக்கொண்டவர்களுடைய நிலைபரமும் அதை இன்னும் பெற்றுக்கொள்ளாதவர்களுடைய நிலைபரமும் ஒன்றுதானென்றும், திருச்சபையின் படிப்பினையாற் தாங்கள் பெற்றுக்கொண்ட விசுவாசத்தைப்பற்றிச் சந்தேகங் கொள்ளக் கத்தோலிக்கருக்கு நியாயமான முகாந்திரங்கள் இருக்கக்கூடுமென்றும், அவர்கள் விசுவாசத்தின் உண்மையையும் நம்பத்தகைமையையுங்குறித்து சாஸ்திரமுறையான அத்தாட்சிகாணுந்தனையும் விசுவாசத்திற்குச் சம்மதிகொடாமலிருக்கலாமென்றும் யாராவது சொல்லத் துணிந்தால் அவனுக்குச் சாபம்.

### விசுவாசத்தையும் யுத்தியையும்பற்றி

1. தேவவெளிப்படுத்தலில் மெய்யான பரம இரகசியம் ஒன்றுமில்லையென்றும், விசுவாச சத்தியங்களையெல்லாம் சுபாவமான மூலக்கோட்பாடுகளால் தெளிந்தயுத்தியானது விளங்கிக்கொள்ளவும் திருட்டாந்தப்படுத்தவும் கூடியதாயிருக்கின்றது என்றும் யாராவது சொல்லத்துணிந்தால் அவனுக்குச் சாபம்.

2. உலக சாஸ்திரங்களால் நிச்சயிக்கப்படுகின்றவைகள் தெய்வீக வெளிப்படுத்தலுக்கு விரோதமானவைகளாயிருந்தாலும் அவைகளை மெய்க்கொத்தவைகளாகவும் திருச்சபையிற் சேர்ந்திருந்துகொண்டும் கைக்கொள்ளலாம் என்று யாராவது சொல்லத்துணிந்தால் அவனுக்குச் சாபம்.

3. உலக சாஸ்திரங்கள் வளரவளர, திருச்சபை போதிக்கிற சத்தியங்களுக்கு அத்திருச்சபையின் கருத்துக்கு மாறான வேறு அருத்தங்களைக் குறிக்கவேண்டிய அவசியம் நேரிடக்கூடுமென்று யாராவது சொல்லத்துணிந்தால் அவனுக்குச் சாபம்.

# 6-ம் அதிகாரம்

## அர்ச்.தம திரீத்துவ பரம இரகசியம்

117. ஒரே சருவேசுரன் பிதா சுதன் இஸ்பிரீத்துசாந்து என மூன்றாட்களாயிருப்பதாகிய உண்மை அர்ச்சியசிஷ்டதம **திரீத்துவ** பரம இரகசியமென்று சொல்லப்படும். இதற்கு திரியேக திரீத்துவ பரம இரகசியமென்றும் பெயர். இது சத்தியவேதத்திலுள்ள மற்றெல்லாப் பரம இரகசியங்களுக்கும் ஓர் அஸ்திவாரமாம். சத்தியவேதம் போதிக்கின்ற இந்தத் தேவஇரகசியம் விசுவாசமந்திரத்தில் தெளிவாய்க் காண்பிக்கப்பட்டிருக்கின்றது. மானிடயுத்திக்கு எட்டாததாகிய இவ் இரகசியத்தைச் சருவேசுரனே நமக்குத் தெரிவித்தருளினார். இதில் நாம் யோசிக்க வேண்டிய விஷயங்கள் இரண்டு. 1-வது, அது தன்மட்டில் எப்படிப்பட்டது? 2-வது, அது தேவ ஆட்களுள் ஒவ்வொருவருக்கும் சொந்தமாயிருப்பவைகளின் மட்டில் எப்படிப்பட்டது?

### I. அர்ச்.தம திரீத்துவ பரம இரகசியம் தன்மட்டில் எப்படிப்பட்டதென்பதைப்பற்றி.

118. நாம் திரீத்துவ பரம இரகசியத்தை அதன்மட்டில் யோசிக்கும்போது வேதாகமம், பாரம்பரை, விசுவாசமந்திரம், திருச்சபைச் சங்கங்களாகியவைகள் படிப்பிக்கின்ற அநேகசத்தியங்கள் அதில் அடங்கியிருக்கக் காண்கிறோம். திரீத்துவ பரம இரகசியத்தைப்பற்றி இயன்றமட்டும் தெளிவாயும் யதார்த்தமாயும் உணர்ந்துகொள்ளுதல் கூடாது. ஆயினும், அதை ஒருவாறு விளக்கிக் காண்பிக்குமுன் வேதசாஸ்திரமுறைப்படி சுபாவம் ஆவதென்ன, ஆள் ஆவதென்ன என்பதைத் தெளிவிக்கக்கடவோம்.

**சுபாவம்** ஆவது (Nature) ஒரு வஸ்துவை பிற வஸ்துக்களுக்கு வேறானதாயிருக்கப்பண்ணும் குணங்களின் சேர்க்கையாம். உதாரணமாக: சரீரமும் ஆத்துமமுமாகிய இரண்டினும் சேர்க்கையினால் மனிதசுபாவம் உண்டாகின்றது. ஏனெனில், சரீரமும் ஆத்துமமுமே மனிதனை வேறொரு வஸ்துவாயிராமல் மானிட வஸ்துவாக் இருக்கப்பண்ணுகின்றன. இருத்தலையும் அநந்த இலக்ஷணமுடைமையையும் தானாய்க்கொண்டிருத்தலே தேவ சுபாவமென்னப்படும்.

ஆள் ஆவது (Person) தன்னைக் காட்டிலும் பூரணமானதும் தன்னைப் பூரணமாக்கத்தக்க வேறொரு வஸ்துவோடும் இணைந்து

நில்லாமல், தன்னினத்திலேயே பூரணப்பட்டதாய் யாதோர் கருமத்தைத் தானாய்ச் செய்யவும் தனக்குரிய தொழில்களைத் தானாய் முடிக்கவும் கூடியதாய் இருக்கும் புத்தியுள்ள ஓர் வஸ்துவாம். உதாரணம்: சம்மனசுகளும் மனிதரும் தனித்தனியே ஆட்களாயிருக்கிறார்கள். ஏனெனில், இவர்கள் தங்களைப் பூரணப்படுத்துவதற்கும் தங்களுக்குரிய தொழில்களைச் செய்விப்பதற்கும் வேறொரு வஸ்துவைத் தேவைப்படாமல் தங்களுக்குரிய தொழில்களைத் தாங்களாய்ச் செய்துமுடிக்கக் கூடிய அறிவுள்ள வஸ்துக்கள். ஆத்துமத்தின் சேர்க்கை நீங்கின மானிட சரீரத்தை ஆள் என்று சொல்லக்கூடாதோவெனில், கூடாது. ஏனெனில், ஆத்துமத்தின் சேர்க்கை நீங்கின தேகமானது தன்னினத்தில் பூரணம் அற்றதாயும், தனக்குரிய தொழில்களைத் தானாய்ச் செய்யக்கூடாததாயுமிருக்கின்றது.

புத்தியுள்ள சிருட்டிகளைக் குறிக்கும்போது ஆள் என்னும் சொல்லுக்குள்ள அர்த்தமானது, சருவேசுரனைக் குறிக்கும்போது சற்று மாறிப்போகின்றது. எவ்வாறெனில், மனிதர் மட்டில் மூன்று ஆட்கள் மூன்று மனிதராயிருக்கிறார்கள். அல்லது தம்முள்வேறுபட்ட தனித்தனியான மூன்று மானிட சுபாவங்களாயிருக்கிறார்கள். சருவேசுரன்மட்டிலோ மூன்று பரம ஆட்களும் ஒரே தேவசுபாவமும் ஒரே தேவனுமாகவே இருக்கிறார்கள். ஆள் என்னும் சொல்லை ஒரு சிருட்டியின்மேல் ஏற்றிச் சொல்லும்போது, அது தனித்ததும் புத்தியுள்ளதும் மற்றெவ்வித பொருட்களுக்கும் வேறானதுமான ஒரு வஸ்துவை உணர்த்தும். எவ்வாறெனில், நான் ஒரு மனிதனைக் குறித்து ஒரு ஆள் என்று சொல்லும்போது, ஆள் என்ற சொல்லு மற்றெவரையும் நீக்கி, குறிக்கப்பட்ட ஒரே மனிதனை மாத்திரங் காண்பிக்கின்றது. இரண்டு மனிதரைக் குறித்து ஆட்கள் என்று சொல்லும்போது, ஆட்கள் என்ற சொல் தம்முள் வெவ்வேறான இரண்டு தனித்தனியான மனிதரையே குறிக்கின்றது. இரண்டு மனிதர் எனவே, அவர்கள் இரண்டு மானிட சுபாவங்களாயும் வெவ்வேறான இரண்டு மானிட வஸ்துக்களாயுமிருக்கிறார்கள். அதன்றி அவ்விருவரும் ஒரே சுபாவமுள்ளவர்களாயிருப்பதுமில்லை, ஒரே பொருளாயிருப்பதுமில்லை. ஏனெனில் ஒவ்வொருவருக்கும் அவரவருக்குரிய ஒவ்வொரு சுபாவமும் உண்டு, ஒவ்வொரு சரீரமும் உண்டு, ஒவ்வொரு ஆத்துமமும் உண்டு. ஆதலால் ஆள்வகையில் மாத்திரமன்றி வஸ்துவகையிலுமே அவ்விருவருந் தம்முள் வெவ்வேறான இரண்டு மனிதராம். சருவேசுரனையும் திரித்துவத்தையும் நோக்கிப் பேசும்போதோவெனில் ஆள் என்பது வேறுபடாததும் ஏகமாயுள்ளதுமான தேவசுபாவத்



தில் சருவேசுரன் மூன்றுவிதமாயிருக்குந்தன்மையை மாத்திரங் குறித்துக்காட்டி, சுதன் பிதாவல்ல என்றும், இஸ்பிரீத்துசாந்து பிதாவும் அல்ல சுதனும் அல்ல என்றும் தெளிவிக்கின்றது. ஏனெனில், சருவேசுரன் மூன்றாட்களாயிருந்தாலும் அவர் மூன்று சுபாவங்களும் மூன்று பொருட்களுமல்ல. அவரிடத்தில் ஒரே தேவசுபாவம் மாத்திரமுண்டு. அந்த ஒரேயொரு தேவசுபாவமானது பிரிவும் வேறுபாடுமின்றி பிதாவிலும் முழுமையாயுண்டு; சுதனிலும் முழுமையாயுண்டு; இஸ்பிரீத்துசாந்துவிலும் முழுமையாயுண்டு.

119. முதலாம் சத்தியம். ஒரேசருவேசுரன் மூன்று ஆட்களாயிருக்கிறார், அதாவது தேவசுபாவம் ஒன்று மாத்திரம் உண்டு. அந்த ஒரே தேவசுபாவத்திலோவெனில் மூன்றாட்களிருக்கிறார்கள். அவர்களில் முதலாம் ஆளுக்குப் பிதா என்றும், இரண்டாம் ஆளுக்குச் சுதன் என்றும், மூன்றாம் ஆளுக்கு இஸ்பிரீத்துசாந்து என்றும் பெயர். சருவேசுரன் ஒரேயொருவர், அல்லது தேவசுபாவம் ஒன்றே அன்றி பல அல்ல என்பது யுத்திக்கும் விசுவாசத்துக்கும் ஒத்த சத்தியமாம். இது வேதசத்தியங்கள் எல்லாவற்றிற்கும் ஆதிசத்தியமாயிருக்கின்றது. அன்றியும், எப்போதும் ஒன்றாயிருக்கின்றதாகிய தேவசுபாவமானது தம்முள் வெவ்வேறான மூன்றாட்களுள் ஒவ்வொருவரிலும் பொதுவாயும் தனித்தனியாயும் முழுமையாயுண்டென்பதும், பிதாவாகிய ஆள் வேறு, சுதனாகிய ஆள் வேறு, இஸ்பிரீத்துசாந்துவாகிய ஆள் வேறு என்பதும் விசுவாசம் நமக்குப் போதிக்கும் சத்தியங்களாம்.

அஞ்ஞான தத்துவசாஸ்திரிகளுக்கும் யூதசாதியாருள் சாதாரண சனங்களுக்கும் புலப்படாத இப்பரம இரசியமானது, அதிபிதாக்கள் தீர்க்கதரிசிகள் யூதவேத சாஸ்திரிகள் முதலானவர்களுக்குத் தெரியாமலிருக்கவில்லை. யேசுக்கிறீஸ்துநாதருடைய காலந் தொடுத்தோவெனில் இது உலகத்து நாற்றிசையாராலும் அறிந்துகொள்ளப்பட்டது என்பதைப் புதிய ஏற்பாட்டு நூல்களாலும் பரம்பரையாலும் திருச்சபையில் வழங்கிவரும் வெவ்வேறான அநுசரிப்புகளாலும் கண்டுகொள்ளலாம். திவ்விய இரக்ஷகர் ஞானஸ்நானம் பெற்றபோது சருவேசுரனே பிரஸ்தாபமானவிதமாய் இவ்விரகசியத்தை உலகத்தவர்களுக்கு வெளிப்படுத்தியருளினார். எப்படியெனில், அந்தச் சமயத்தில் பிதாவானவர் யேசுநாதரைத் தமது நேச குமாரன் என்றுகூற, இஸ்பிரீத்துசாந்துவானவர் அந்தத் தேவகுமாரனுடைய திருச்சிரசின்மேல் ஒரு புறாவின் உருவத்தோடு இறங்கியருளினார். அன்றியும் யேசுநாதர் தம்முடைய

அப்போஸ்தலர்களை வேதபோதகராக நியமித்து: நீங்கள்போய் எல்லாரையும் படிப்பித்து பிதாவுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்து சாந்துவுடையவும் நாமத்தினால் ஞானஸ்நானங் கொடுங்களென்று அருளிச் செய்தபோது, திரியேக பரம இரகசியத்தைத் தெளிவாகவும் திட்டமாகவும் உலகத்துக்கு வெளிப்படுத்தியருளினார். இடைவிடாத பரம்பரையும் திருச்சபையின் பற்பல அநுசரிப்புகளும் திரீத்துவ பரம இரகசிய விசுவாசத்தை எல்லாருக்கும் எப்போதும் நினைப்பூட்டிக்கொண்டு வருகின்றன. தேவதிரவிய அனுமான மந்திரங்களும், திருச்சபையின் பற்பல சுகிர்தசெபங்களும், திரீத்துவ தோத்திரமந்திரமும், அப்போஸ்தலர்கால முதல் கிறீஸ்துவர்களுக்குள் வழங்கிக்கொண்டுவரும் அர்ச். சிலுவை அடையாளமும், அத்தோடு சேர்ந்திருக்கும் பரம திரீத்துவ வேண்டுதலுமாகிய இவையெல்லாம் அந்தப் பரம இரகசியத்தைப் பற்றிய விசுவாசமானது எங்கும் சாதாரணமாயிருக்கின்றதென்பதற்கு அத்தனை பிரத்தியக்ஷ அத்தாட்சிகளாம்.

120. **இரண்டாம் சத்தியம்.** அர்ச். திரீத்துவத்திலுள்ள மூன்றாட்களுள் ஒவ்வொருவரும் மெய்யான சருவேசுரனேயாம். பிதா மெய்யான சருவேசுரன். அவர் சருவேசுரன் அல்லவெனில் சருவேசுரன் என ஒருவர் இல்லையென்றே சொல்லவேண்டும். ஏனெனில், பிதா சருவேசுரனாயிராவிடில் அவரை ஆதிகாரணமாய்க்கொண்டு அவரிடத்திலிருந்து நித்தியமாய்த் தோற்றுகின்றவர்களாகிய சுதனும் சருவேசுரனாயிருத்தல் கூடாது, இஸ்பிரீத்துசாந்துவும் சருவேசுரனாயிருத்தல் கூடாது. சுதன் மெய்யான சருவேசுரன். ஆதியிலே வார்த்தை இருந்தது. அவ்வார்த்தை தேவனில் இருந்தது; அவ்வார்த்தை தேவனாயிருந்தது; சகலமும் அவராலே உண்டாயிற்று; உண்டானதெதுவும் அவராலன்றி உண்டாகவில்லை என்று அர்ச். அருளப்பர் தமது சுவிசேஷத்து முதல் அதிகாரத்தில் எழுதியபடி வார்த்தை என்றும் அழைக்கப்படுகிறவராகிய தேவசுதன் சகலகாலங்களுக்கும் முன்னிருந்தவர் என்பதும், ஆதலால் அவர் அநாதி நித்தியர் என்பதும், அவர் சருவவல்லவர் என்பதும், பரமபிதாவோடு ஏக சுபாவமானவர் என்பதும், மெய்யான சருவேசுரனே என்பதும் பிரத்தியட்சமாகின்றன. இஸ்பிரீத்துசாந்துவும் மெய்யான சருவேசுரன். அர்ச். இராயப்பர் அனனியா என்பவனை நோக்கி: இஸ்பிரீத்துசாந்துவுக்குப் பொய்சொல்ல பிசாசு உன் இருதயத்தை அனுப்பினதென்ன? நீ மனிதருக்கல்ல சருவேசுரனுக்கே பொய்சொன்னாய் என்று வசனித்ததாக அப்போஸ்தலர் நடபடியில் சொல்லப்பட்



டிருக்கின்றது. இந்த வாக்கியத்தின்படி இஸ்பிரீத்துசாந்து மெய்யான தேவனேயாம். ஏனெனில், இஸ்பிரீத்துசாந்துவுக்குப் பொய் சொல்லுகிறது தேவனுக்கே பொய்சொல்லுகிறதாகின்றது.

121. **மூன்றாம் சத்தியம்.** அர்ச். திரீத்துவத்தின் மூன்றாட்களும் ஒரே சருவேசுரனாம். அந்த மூன்றாட்களுக்கும் ஒரே தேவசுபாவம் மாத்திரம் உண்டு. பிதாவின் தேவசுபாவமே சுதனின் சுபாவமாயிருக்கின்றது. ஆதலால், பிதாவும் சுதனும் ஒரே தேவனாம். சுதனின் சுபாவமே பிதாவுக்கும் இஸ்பிரீத்து சாந்துவுக்கும் சுபாவமாயிருக்கின்றது. இஸ்பிரீத்துசாந்துவின் சுபாவமே பிதாவின் சுபாவமும் சுதனின் சுபாவமுமாயிருக்கின்றது. சுதனும் இஸ்பிரீத்துசாந்துவுமாகிய ஏகதேவனோடு பிதாவும் ஏக தேவனாம். பிதாவும் சுதனும் ஒரே தேவனாயிருப்பதுபோல, அவர்களோடு இஸ்பிரீத்துசாந்துவும் ஒரேதேவனாம். ஆதலால் பரமதிரீத்துவத்தின் மூன்றாட்களும் தம்முள் முழுதும் வெவ்வேறான ஆட்களாயிருந்தாலும், ஒரு சருவேசுரனாக மாத்திரம் இருக்கிறார்கள். அர்ச். அத்தனாசியார் உண்டாக்கியதாகத் திருச்சபையில் வழங்கிவரும் விசுவாசப் பிரமாணத்திலே தேவ ஆட்களில் ஒருவரை வேறொருவராக எண்ணவும்வேண்டாம்; தெய்வீக வஸ்துவைப் பிரிக்கவும்வேண்டாம் என்று சொல்லியிருக்கிறது. ஆதலால், திரீத்துவத்தின் மூன்றாட்களும் ஏகசுபாவமுள்ளவர்கள், அல்லது ஏகவஸ்து என்பது பிரத்தியக்ஷம். அப்படியிருக்கத் திரீத்துவத்தின் மூன்றாட்களையும் மூன்று மனிதராக உருபிகரித்துக்கொள்ளுதல் பெருந்தவறாயிருக்கும். ஏனெனில், மூன்று மனிதர் அல்லது மூன்று மானிட ஆட்கள் வெவ்வேறுந் தனித்தனியுமான மூன்று பொருட்களாயிருக்கிறார்கள். அர்ச். திரீத்துவத்திலோவெனில் பிதா சுதன் இஸ்பிரீத்துசாந்து ஆகிய மூன்றாட்களும் ஒரே பொருளன்றிப் பல பொருட்களல்ல.

122. **நாலாம் சத்தியம்.** ஒரு பொருள் தானே தனக்கு ஒப்பாயிருப்பதுபோல, அர்ச். திரீத்துவத்தின் மூன்றாட்களும் அகத்தியமாய் ஒருவருக்கு ஒருவர் ஒப்பானவர்களாம். ஏனெனில், அந்த மூன்றாட்களுக்கும் தேவசுபாவம் ஒன்றாயிருப்பதால் சகல இலக்ஷணங்களும் அற்பபேதமுமின்றி மூவருக்கும் பொதுவானவைகளேயாம். ஆதலால் மூவருக்கும் ஒரே நித்தியத்துவம், ஒரேவல்லமை, ஒரே ஞானம், ஒரே பரிசுத்ததனம் உண்டு. உண்டெனவே, அவர்கள் ஒரு தெய்வமும், ஒரு கர்த்தரும், நித்தியம் சருவவல்லமை சருவஞானம் அத்தியந்த பரிசுத்தம் எனுமிவையெல்லாம் பொருந்திய ஒரு கடவுளுமாயிருக்கிறார்கள்.

123. தேவதிரீத்துவ பரமஇரகசிய சத்தியங்களுள் சிலவற்றை மறுத்தபதிதர்கள் யாரெனில். 1-வது, சபெல்லியராம். இவர்களுக்குக் குருவாயிருந்த சபெல்லியுஸ் என்பவன் சருவேசுரன் மூன்று வெவ்வேறான ஆட்கள் என்பது அபத்தம் என்றும், மூன்றாட்கள் என்று சொல்லுவது ஏகசருவேசுரனுடைய மூன்று தொழில்கள் அன்றி வேறல்ல என்றும் சாதித்தான். 2 வது, ஆறியரென்பவர்களாம். இவர்களுக்குக் குருவாயிருந்த ஆறியுஸ் என்பவன் யேசுக்கிறீஸ்துநாதர் ஓர் வெறும் சிருட்டியே அன்றி வேறல்ல என்றும், கணிக்கக்கூடாத யுகங்களின்முன் சருவேசுரன் அவரைச் சிருட்டித்தருளினார் என்றும் போதித்தான். இந்த அபத்த போதகம் முந்நூற்றிருபத்தைந்தாம் ஆண்டு நிசியா பட்டினத்திற் கூடிய சாதாரணதிருச்சங்கத்தில் சபித்துத்தள்ளப்பட்டது. 3-வது, மசேதோனியர் என்பவர்களாம். இவர்களுக்குக் குருவானவன் மசேதோனியுஸ் என்று சொல்லப்படுவோன். இவனோ பிதாவுக்கும் சுதனுக்கும் ஒத்த சுபாவம் இஸ்பிரீத்து சாந்துவுக்கு இல்லை என்றும், இவர் மெய்யான சருவேசுரன் அல்ல என்றும் போதித்தான். இந்த அபத்தபோதகம் கொன்ஸ்தாந்தின் புரி என்னும் பட்டினத்து சாதாரண திருச்சங்கத்தில் முந்நூற்று எண்பத்தொராம் ஆண்டு சபித்துத்தள்ளப்பட்டது.

II. அர்ச்.தம திரீத்துவம் அதில் உள்ள மூன்று ஆட்களில் ஒவ்வொருவருக்கும் சொந்தமாயுள்ளவைகள் மட்டில் எப்படிப்பட்டது என்பதைப்பற்றி.

அர்ச். திரீத்துவத்தின் மூன்றாட்களும் சுபாவத்தாலும் இலக்ஷணங்களாலும் தம்முள் வேறுபடாமல் ஏகராயிருந்தாலும், அவர்களில் ஒவ்வொருவரும் 1-வது, அகத்துத் தனித்தனியாயுள்ள உரிமைகளாலும், 2-வது, அவரவருக்குச் சொந்தமாயுள்ள தொழில்களாலும், 3-வது, அவரவருக்குச் சொந்தமெனக் குறிக்கப்பட்டிருக்கின்ற புறத்துத் தொழில்களாலும் தம்முள் முழுதும் வெவ்வேறானவர்கள்.

124. **தனித்தனிமையாயுள்ள உரிமைகள்.** முதலாம் ஆளுக்குப் பிதா என்று பெயர். ஏனெனில், அவர் சுதனும் இஸ்பிரீத்து சாந்துவுமாகிய மற்ற இரண்டு ஆட்களுக்கும் காரணமாயிருக்கிறார். அவருக்குக் காரணமாயுள்ளவரோ ஒருவருமில்லை. சுதன் அநாதி நித்தியகாலமாய் பிதாவிடத்திலிருந்து தோன்றுகிறார். ஆதலால், சுதனுக்குக் காரணர் பிதாவேயன்றி வேறொருவரல்ல. இஸ்பிரீத்துசாந்துவோ பிதாவுஞ் சுதனுமாகிய காரணத்தாற் புறப்படுகிறார்; பிதாவும் சுதனுமாகிய இரு ஆட்களும் தங்களுக்குப் பொதுவாயுள்ளதாகிய இருத்தலையும் தெய்வீக சுபாவத்தையும் நித்தியமான இடையறாததான ஒரே தேவமுயற்சியால் இஸ்பிரீத்து சாந்துவிடத்தில் முழுமையாய் அமைந்திருக்கச் செய்கிறார்கள். ஆதலால் பரமதிரீத்துவத்தில் இரண்டு தோற்றங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று சுதனின்தோற்றமாம். இதற்கு வார்த்தையானவரின் நித்திய சென்மம் என்று பெயர். மற்றது இஸ்பிரீத்துச் சாந்தின்தோற்றமாம். இதற்கு இஸ்பிரீத்துசாந்துவின் நித்திய புறப்பாடு என்றுபெயர். பிதா என்பவர் யாதோர் ஆதிகாரணத்திலிருந்து தோன்றுபவருமல்ல. சுதன் என்பவரின் சென்மமும் இஸ்பிரீத்துசாந்து என்பவரின் புறப்பாடும் நித்தியமானவைகளும் அகத்தியமானவைகளும் தெய்வீக சுபாவத்தின் பாற்பட்டவைகளுமாம். ஏனெனில் சுதனும் இஸ்பிரீத்து சாந்துவும் பிதாவோடு ஏகசுபாவமுள்ளவர்களும் ஏகநித்தியத்துவமுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்.

125. **பரம திரீத்துவத்தின் மூன்று ஆட்களுள் அவரவருக்குச் சொந்தமாயுள்ள தொழில்கள்.** பிதாவானவர் தமது ஞானமும் தமது வார்த்தையும் சாயலுமான சுதனை அநாதி நித்தியகாலமாய் சனிப்பிக்கிறார். அதாவது தம்மிடத்திலிருந்து தோன்றச்செய்கிறார். பிதாவும் சுதனும்கூடி தங்கள் அன்னியோன்னிய அன்பின் அவதியும் தங்களை ஐக்கியப்படுத்தும் ஞானபந்தனமுமாகிய இஸ்பிரீத்துசாந்து புறப்படச்செய்கிறார்கள். இவ்வண்ணமே அர்ச். பரமதிரீத்துவத்தில் பிதாவின் அகத்துத் தேவதொழிலானது அவரால் சனிப்பிக்கப்படும் சுதன்மட்டில் உண்டென்றும், பிதாவும் சுதனுமாகிய இருவரினும் அகத்துத் தேவ தொழிலானது அவர்களால் தோற்றுவிக்கப்படுகின்றவராகிய இஸ்பிரீத்துசாந்துவின் மட்டில் உண்டென்றும் அறிந்துகொள்ளத் தகும். ஆதலால், பிதாவின் மட்டில் சுதன் புரியுந் தேவதொழில் யாதொன்றுமில்லை என்பதும், பிதாவும் சுதனுமாகிய இருவர்மட்டிலும் இஸ்பிரீத்துசாந்து புரியுந் தேவதொழில் யாதொன்றும் இல்லை என்பதும் பிரத்தியக்ஷமாம்.

126. **அவரவருக்குச் சொந்தமெனக் குறிக்கப்பட்டிருக்கின்ற புறத்துத் தொழில்கள்.** சருவத்துக்கும் ஏக ஊற்றும் ஏக காரணமுமாய் விளங்கும் பிதாவானவருக்குச் சொந்தம் எனக்குறிக்கப்பட்ட தொழில்கள் எவையெனில்: சிருட்டிதொழிலும் தேவ வல்லமையோடு பொருந்திய மற்றெல்லாத் தொழில்க

ளுமாம். மனித இரக்ஷணியத்தை யேசுநாதர் செய்த பரிகாரக் கிரியைகளாகிய காரணத்தாற் பிறந்த ஓர் காரியமாய் எண்ணும் போது, அவ்விரக்ஷணியத் தொழிலானது மனிதனாய் அவதரித்துப் பாடுபட்டு மரித்தருளினவராகிய சுதனின் சொந்தத்தொழிலாகின்றது. அன்றியும், இவர் பிதாவின் வார்த்தையும் ஞானமுமாயிருப்பதால் ஞானத்தோடு பொருந்திய கிரியைகள் அனைத்தும் இவருக்கே சொந்தக்கிரியைகள் என்று குறிக்கப்படும். அர்ச்சிப்பும் அன்பின்கிரியைகள் அனைத்தும் இஸ்பிரீத்துசாந்துவின் தொழில்களாய் எண்ணப்படுகின்றன. ஏனெனில், இவர் பிதாவும் சுதனுமாகிய இருவரினும் அன்னியோன்னிய பரம அன்பாயிருக்கிறார். இன்னின்ன கிரியை இன்னின்னாருக்கு உரியது என்று சொல்லுவது மனிதருக்குள் வழங்கும் வழக்கமேயாம். ஆயினும், உள்ளபடி தெய்வீகதொழில்கள் எல்லாம் மூன்றாட்களுக்கும் பொதுவாகிய சருவவல்லமை ஞானம் அன்பு என்பவைகளாலேயே நடக்கின்றன. தெய்வீகசுபாவமானது கரைகாணாத பரம இரகசிய சமுத்திரமாயிருக்கின்றது என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடாமல், சிருட்டிக்கப்பட்ட எவ்வித புத்திக்கும் எட்டாததாகிய பரமதிரீத்துவத்தை நடுநடுக்கத்துடன் ஆராதிக்கக்கடவோம். அகங்காரம் நிறைந்ததாகிய நமது புத்தியை அடக்கி, தேவவாக்காற் துலாம்பரமாய்ப் போதிக்கப்பட்டிருக்கும் இத்தேவ பரம இரகசியத்தைத் தாழ்ச்சியோடு விசுவசித்து, தமது தேவசுபாவத்தின் இரகசியங்களை நமக்கு வெளிப்படுத்தியருளிய கடவுளுக்கு மேன்மேலும் நன்றியறிந்திருக்கக்கடவோம். என் சருவேசுரா, தேவரீர் உம்மை மனிதனுக்கு வெளிப்படுத்த அவன் எம்மாத்திரம்! நாங்கள் இம்மையிலே நன்றாய் விளங்கிக்கொள்ளாமல் விசுவசிப்பதை மறுமையிலே கண்ணாரக்கண்டு தரிசித்துக் களிகூரும் வரத்தை எங்களுக்கு அநுக்கிரகித்தருளும்.

# 7-ம் அதிகாரம்

## சிருட்டிப்பு

1-வது, உலகத்துக்கு ஓர் ஆரம்பம் உண்டா? 2-வது, அதைச் சிருட்டித்தவர் யார்? 3 வது, சருவேசுரன் அதை எப்படிச் சிருட்டித்தார்? 4-வது, எவ்வளவுகாலத்துக்குள் சிருட்டித்தார்? 5-வது, எப்போது சிருட்டித்தார்? 6-வது, ஏதுக்காகச் சிருட்டித்தார்?

### உலகத்துக்கு ஓர் ஆரம்பம் உண்டா?

127. வானமும் பூமியும், அவற்றுள் அடங்கிய சூரிய சந்திர நட்சத்திரங்களும், வானவர் மனிதர் மிருகங்களும், விருட்ச சல அக்கினிகளும் பிறவுமே உலகம் எனப்படும். உலகம் எப்போதும் இருந்ததா? இல்லை. எப்போதும் இருந்ததெனில், அது ஓர் அவசிய வஸ்துவாயிருத்தல்வேண்டும். அது அவசிய வஸ்துஎனில், அதின் இருத்தலின்மையையாவது அதன் உறுப்புகளின் இருத்தலின்மையை ஆவது நாம் உத்தேசித்துக் கொள்ளுதல் கூடாது. அன்றியும், எப்போதும், அதாவது, அநாதியாய் இருந்ததெனில், அது தன்மட்டிலும் தன் உறுப்புகள் மட்டிலும் நிர்விகாரமாயிருத்தல்வேண்டும். உலகமோ இத்தன்மையானதல்ல என்பது தெளிவு. எவ்வாறெனில், உலகத்தின் ஒவ்வோர் உறுப்பின் இருத்தலின்மையை மாத்திரம் அன்றி, முழு உலகத்தின் இருத்தலின்மையையுமே நாம் உத்தேசித்துக்கொள்ளுதல் கூடும். தினந்தோறும் உலகத்தில் பற்பல மாற்றங்கள் உண்டாகிறதைக்காணாதவர் யார்? மாற்றம் அடைந்துகொண்டுவரும் ஒரு பொருள் நித்தியமாய் இருத்தல்கூடாது. நித்தியமானது எப்போதும் ஓர் இயல்பாயிருக்கும். இப்போது உள்ள உலகத்திலும் மிகப் பூரணமான வேறோர் உலகம் இருத்தல்கூடும் என்பதை மறுக்க வல்லவர் யார்? நித்தியமானதோ பூரணமாயிருக்கவேண்டியது; இல்லாமற் போகமுடியாதது. ஆதலால், உலகம் நித்தியமானதல்ல. நித்தியமானது அல்லஎனில் அதற்கு ஓர் ஆரம்பம் உண்டு. எனவே, முன் இல்லாதிருந்த உலகமானது பின் தனக்கு முந்தியதும் தனக்கு வேறானதுமான பிறிதோர் காரணத்திலிருந்தே தனது இருத்தலைப் பெற்றுக்கொண்டது என்பது பிரத்தியக்ஷம்.

மேலும், உலகம் அநாதியானது அல்ல என்பதற்கு சாட்சி பூகோளசாஸ்திரத்தாலும் பெறப்படுகிறது. இந்தப்பூமி முன்னே அக்கினிமயமான ஒரு கோளமாயிருந்து பின்பு படிப்படியாய்க் குளிர்ந்து வந்து பிராணிகள் சஞ்சரிக்கத்தக்கதாயிற்று என்றும், தாவரவர்க்கங்களும் நீந்துவன பறப்பனவும் தரையில் நடமாடுவன

வும் தோன்றிய பின்பே மனுஷன் தோன்றினன் என்றும் பூவக சாஸ்திரிகள் கண்டுபிடித்துக் கூறியிருக்கிறார்கள். அன்றியும், மானிட சீவியத்திற்கு மிகவும் அவசியமான வித்தைகளையும், மிகப் பூர்வமான சனங்களின் உற்பத்தியையும், இராச்சியங்களின் தோற்றத்தையும், இராசாங்கப் பிரமாணங்களையும், மோசேசு எழுதிய பொய்யாத உலகசரித்திரத்திற்கும் மற்றச்சரித்திரங்களுக்கும் உள்ள ஒப்புமையையும் சீர்தூக்கிப்பார்க்குமிடத்து, இவை எல்லாம் உலகத்தைப்போல மனுஷரும் இப்பூவுலகில் தொடக்கமுள்ளவர்களே என்றதை அத்தாட்சிப்படுத்துகின்றன. ஆதலால், உலகம் நித்தியமானதல்ல என்றும் அதற்கு ஓர் ஆரம்பம் உண்டென்றும் தீர்மானித்துக்கொள்ளவேண்டும்.

## உலகத்தைச் சிருட்டித்தவர் யார் ?

128. முன் இல்லாத ஒரு பொருளை உண்டாயிருக்கச்செய்தலே சிருட்டித்தல் எனப்படும். சிருட்டித்தொழிலானது வரம்பில்லா வல்லமையால், அதாவது, தேவவல்லமையால் மாத்திரமே அமையக்கூடியது. ஆதலால், சம்மனசுகளும் மனிதரும் எவ்வளவு ஞானமும் வல்லமையும் பூண்டவர்களாயிருப்பினும் ஓர் மணலையாவது சிருட்டிக்கக்கூடியவர்களல்ல. மிகச் சாமர்த்தியமுள்ள கம்மாளர் யாதொன்றைச் சிருட்டிக்க வல்லவர்களா ? அல்ல. அவர்கள் முன் உள்ள ஒரு பொருளை அல்லது பல பொருட்களை எடுத்து மாறுபடுத்தி வேறோர் பொருளை உண்டாக்குவார்கள். சிற்பாசாரி மரம், கல், சுண்ணும்பு முதலிய பொருட்களிருந்தால் அவைகளைக் கிரமமாய் அதனதன் இடத்திற் சேர்த்து வீட்டைச் சமைப்பான். சித்திரகாரன்கையில் சில மரம் முதலிய முதற் காரணங்கள் இருந்தால், அவைகளிற் கழிக்கத்தகுவதெல்லாங் கழித்துச் சிறந்த உருவத்தை உண்டாக்குவான். சருவேசுரன் மாத்திரமே இல்லாத ஒன்றை ஒரு முதற்காரணம் இல்லாமல் உண்டாக்க வல்லவர். அவரே உலகத்தைச் சிருட்டித்தார். ஆதியில் சருவேசுரன் வானத்தையும் பூமியையும் சிருட்டித்தார் என்று மோசேசுவின் ஆதி ஆகமத்து முதலாம் வசனத்திலுங் கூறப்பட்டிருக்கின்றது. சிருட்டிப்பின் முன் உலகம் இருக்கவேயில்லை. ஆதலால், வானமும் இல்லை பூமியுமில்லை. மனிதர் மரங்கள் விலங்குகளுமில்லை. யாதொன்றும் இருக்கவே இல்லை. சருவேசுரன் மாத்திரமே தமது மகிமைப் பிரதாப பேரானந்தத்தில் வாழ்ந்துகொண்டிருந்தார். அவரே உலகத்தைச் சிருட்டிக்கத் திருவுளம்கூர்ந்து, கண்ணுக்குத் தோற்றுபவைகளும் தோற்றாதவைகளுமாகிய சகலபொருட்களையும் யாதோர் உபாதானமும் இன்றிச் சிருட்டித்தார். இதுவே



தேவவெளிப்படுத்தலை அடையப்பெற்ற சகல சனங்களாலும் எப்போதும் கைக்கொள்ளப்பட்டுவந்த கோட்பாடாம். இதையே கிறீஸ்தவர்கள், யூதர், அதிபிதாக்களாகிய எல்லோரும் ஒருவாய்ப்படக் கூறுவார்கள்.

## சருவேசுரன் உலகத்தை எப்படிச் சிருட்டித்தார் ?

129. சருவேசுரன் தமது சுவாதீன சித்தத்தின் ஒரே ஒரு முயற்சியால் உலகத்தைச் சிருட்டித்தருளினர். சிருட்டித்தொழிலை முடிக்க முதற்காரணந் துணைக்காரணம் என்று சொல்லப்பட்ட இருகாரணங்களும் அவருக்கு அவசியமாயிருக்கவில்லை. வானத்திலும் பூமியிலும் உள்ள கோடாகோடி வஸ்துக்களை உண்டாக்கத் தமது சித்தத்தின் முயற்சி மாத்திரம் அவருக்குப் போதியதாயிருந்தது. வெளிச்சம் உண்டாகக்கடவது என்று அவர் திருவுளம்பற்ற வெளிச்சம் உண்டாயிற்று என்று ஆதிஆகமத்து முதலாம் அதிகாரத்திலும் ; அவர் திருவாய் மலர்ந்தருள சகலமும் உண்டாயிற்று, அவர் கற்பித்தருள எல்லாஞ் சிருட்டிக்கப்பட்டது என்று நூற்றுநாற்பத்தெட்டாம் சங்கீதத்திலும் கூறப்பட்டிருப்பதைக்கண்டுகொள்க. சருவேசுரனுடைய திருவாக்காவது அவருடைய திருவுளமேயாம். அத்திருவுளத்திற்கு எதிர்நிற்கக்கூடியது ஒன்றுமில்லை. சருவலோகத்திலும் விளங்கும் அத்தனை ஆச்சரியங்களும் காலகதியில் விரிந்து விரிந்து தோன்றும்படியாக சிருட்டித்தருளிய தேவவல்லமையை என்னென்று சொல்வோம் ! சிருட்டிகர்த்தாவின் திருவாக்குத் தொனிக்கவே உலகமானது சூனியமாகிய பாதாளத்தில் நின்று புறப்பட்டதையும் அது அவர் கட்டளையின் பிரகாரம் படிப்படியாய்த் தோற்றுவித்த சிருட்டிகளையும் எவ்வாறு வருணிப்போம் !

## சருவேசுரன் எவ்வளவு காலத்திற்குள் உலகத்தைச் சிருட்டித்தார் ?

130. சருவேசுரன் ஆறுநாட்களுக்கிடையில் எல்லாப் பொருட்களையும் சிருட்டித்து ஏழாம்நாள் ஓய்ந்திருந்தாரென்று வேதவாக்கியம் சொல்லுகின்றது. இந்த வேதவாக்கியந்தானே சிருட்டித்தொழில்களை ஒன்றின்பின் ஒன்றாக விபரித்துக் காண்பிக்குமுன் ஆதியிலே சருவேசுரன் வானத்தையும் பூமியையுஞ் சிருட்டித்தார்; பூமியோ உருவம் அற்று வெறுமையாயிருந்தது ; ஆழத்தின்மேல் இருள் இருந்தது என்றும் ஆதி ஆகமத்து முதலாம் அதிகாரத்தில் கூறியிருக்கின்றது. இங்கே ஆதி என்பது மேலேசொன்ன ஏழுநாட்களில் முதலாம் நாளைக்கருதாமல் காலங்களும் பொருட்

களும் ஆகியவைகளின் ஆரம்பத்தை மாத்திரம் கருதுகின்றது. ஏனெனில், காலமாவது சிருட்டிக்கப்பட்ட பொருட்கள் ஒன்றையொன்று தொடர்ந்துவரும் தொடர்ச்சியின் அளவே ஆகையால், சிருட்டித் தொழிலுக்குமுன் காலம் என்பது இருக்கவேயில்லை. சருவேசுரன் மாத்திரம் வரம்பில்லா நித்தியத்தில், அதாவது அநந்தகாலத்திற்கு ஒப்பான பகுக்கப்படாததும் மாறாததுமான ஒருநிலையில் வாழ்ந்துகொண்டிருந்தார். சிருட்டிகள் உண்டாக்கப்பட்டபோதுமாத்திரம் காலமும் உண்டாயிற்று. ஆதலால், சருவேசுரன் ஆதியில் வானத்தையும் பூமியையும் சிருட்டித்தார் என்று மோசேசுகூறியதற்கு அர்த்தம் என்னவெனில், ஒன்றும் இல்லாதிருக்கையில் சருவேசுரன் பிரமாண்டமானதும் உருவமற்றதுமான ஓர் பிண்டத்தைச் சிருட்டித்தருளின அந்த நிமிஷத்திற்றானே காலமும் உண்டாயிற்று என்பதாம். இந்த உருவமற்ற பிண்டமாகிய முதற்காரணத்திலிருந்தே சருவேசுரன் பிற்காலத்தில் வானத்தையும் பூமியையும் அவற்றில் அடங்கிய சராசரங்களாகிய சிருட்டிகளையும் ஒன்றின் பின் ஒன்றாய்த் தோற்றுவித்தார். அச்சிருட்டிகள் வருமாறு :

131. முதலாம் நாள் சருவேசுரன் வெளிச்சத்தைத்தோற்றுவித்தார். எவ்வாறெனில், அவர் வெளிச்சம் உண்டாகக்கடவது என்று கற்பிக்கவே வெளிச்சம் உண்டாயிற்று. அப்போது சருவேசுரன் வெளிச்சத்தையும் இருளையும் வெவ்வேறாகப் பிரித்து, வெளிச்சத்திற்குப் பகல் என்றும் இருளுக்கு இரவென்றும் பேரிட்டார். இதற்கு அர்த்தமேதெனில், பூமியை மூடியிருந்த நீராவி முதலிய ஆவிகளால் இந்த முதலாம் நாளுக்குமுன் பூமியில் ஒளி சற்றும் இல்லாதிருந்தது. ஆதலால் சூரியனானது இன்னும் பூமிக்குத்தோற்றாவிடினும், அதன் வெளிச்சம் ஒருவாறு பூமியின் முகத்தைப் பிரகாசிப்பிக்கச்செய்தார் என்று விளங்கிக் கொள்ளவேண்டியது.

இரண்டாம் நாள் சருவேசுரன் ஆகாயவிரிவை உண்டாக்கி, அதற்குமேலே உள்ள தண்ணீர்களையும் கீழே உள்ள தண்ணீர்களையும் பிரித்துவேறாக்கி, ஆகாயவிரிவுக்கு வானம் என்று பேரிட்டார். ஆகாய விரிவாவது பூமியைச்சுற்றி அதற்கு மேலே அநேக காததூரம் பரந்திருக்கும் தடிப்பான ஆகாயத்தின் திரளேயாம். சருவேசுரன் தண்ணீர்களைப்பிரித்து வேறாக்கினார் என்பதினால், அதன்முன் ஒருகண்டசீருக்கு நீராவியாய் நின்ற தண்ணீரைக் குளிர்ந்த சலமாகவும் மேகங்களாகவும் பிரிந்து நிற்கப்பண்ணினார் என்று விளங்கிக்கொள்ளவேண்டும்.



மூன்றாம் நாள் சருவேசுரன் பூமியெங்கும் பரந்திருந்த சலங்களை ஒன்றாக ஓரிடத்திற்சேர்க்கவே வெட்டாந்தரை தோன்றினது. அப்போது அவர் வெட்டாந்தரைக்குப் பூமியென்றும் சலங்களின் கூட்டங்களுக்கு கடல்கள் என்றும் பேரிட்டார். மீளவும் சருவேசுரன் சகலவித விருட்சங்களும் புல் பூண்டுகளும் தங்கள் தங்கள் சாதிக்குரிய வித்தைப் பிறப்பிக்கக் கூடியவைகளாய் பூமியிலிருந்து முளைத்துத் தோற்றும்படி செய்தார்.

நாலாம் நாள் சருவேசுரன் வானத்திலே சந்திர சூரிய நட்சத்திரங்களை உண்டாக்கிப் பகலை ஆளச் சூரியனையும் இரவை ஆளச் சந்திரனையும் வைத்தார். அதாவது இதன்முன் ஆவிகளால் மறைந்து நின்ற வானசோதிகள் பூமிக்குத் தெளிவாய்த் தோற்றி மாதங்கள், வருஷங்கள், பருவங்களைக் குறிக்கத்தக்கவைகளாயின என்பது கருத்து. இங்கே சொன்ன வானமும் மேலே சொன்ன ஆகாயவிரிவும் ஒன்றல்ல. இது ஆகாயவிரிவுக்கு மேலாயுள்ள பரந்த வெளியேயாம். இந்த வெளியிற்றானே சந்திர சூரிய நட்சத்திரமண்டலங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

ஐந்தாம் நாள் சருவேசுரன் சலத்தில் நீந்தும் மச்சங்களையும் ஆகாயத்தில் பறக்கும் பட்சிகளையும் உண்டாக்கினார். எவ்வாறெனில் நீந்திவாழும் உயிர்ப்பிராணிகளையும் பறந்துவாழும் பறவைகளையும் தண்ணீர்கள் பிறப்பிக்கக்கடவனவென்று கற்பிக்கவே கடலானது மச்சவகைகளாலும் ஆகாயவிரிவானது பறவைச் சாதிகளாலும் தேங்கின. தண்ணீர்கள் பிறப்பிக்கக்கடவன என்றதனால் மச்சங்களாலும் மச்சங்களோடொத்த இறகுள்ள பறவைகளாலும் தண்ணீரும் ஆகாயமும் நிறையக்கடவது என்பதே கருதப்பட்டது.

ஆறாம் நாள் சருவேசுரன் திருவுளம்பற்றினதாவது : பூமியானது சாதிசாதியான சீவசெந்துக்களாயுள்ள மிருகங்களையும் ஊர்வனவையும் காட்டுமிருகங்களையும் வீட்டுமிருகங்களையும் பிறப்பிக்கக்கடவதென்றார். பூமி அவ்வாறே எல்லாவற்றாலும் தேங்கினது. (ஆதி ஆக. 1-ம் அதி.) இவ்வண்ணமே சிருட்டிகர்த்தர் நாநாபேதமான சீவசெந்துக்களை வேறுவேறான உருவமும் வேறுவேறான அங்கவமைவும் வேறுவேறான சுபாவ உணர்ச்சியும் வேறுவேறான இச்சையுங் கொண்டவைகளாய் வகுத்து உண்டாக்கினதைப்பார்த்து அவருடைய தேவ வல்லமையை என்னென்று சொல்லுவோம், அவருடைய தேவ ஞானத்தை எப்படி வருணிப்போம் !

சருவேசுரன் இவ்வாறு தாம் சிருட்டித்த சராசரங்கள் அனைத்தையும் ஆண்டுநடத்தக்கூடிய ஒரு அரசனை அவைகளுக்குக் கொடுக்கத் திருவுளங்கூர்ந்து: நம்முடைய சாயலாக, நம்முடைய உருவமாக மனிதனை உண்டாக்குவோமாக; அவன் சமுத்திரங்களின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் மிருக சீவன்களையும் பூமி அனைத்தையும் பூமியின்மேல்வாழும் சகல ஊர்வனவையும் ஆளக்கடவானென்று திருவாய்மலர்ந்து மனிதனைத் தம்முடைய சாயலாகவே உண்டாக்கினார். இச் சாயலானது மனிதனுடைய சரீரத்திலல்ல ஆத்துமத்திலேயே உள்ளதென்று விளங்கிக்கொள்ளவேண்டியது.

ஆதி ஆகமத்து இரண்டாம் அதிகாரத்திற் கூறியிருக்குமாறு வானமும் பூமியும் அவற்றிற்குரிய சகல அலங்காரங்களோடு ஆறு நாட்களுக்குள், அதாவது படிப்படியாய் ஒவ்வொரு உகத்தில் சிருட்டித்து முடிந்தபடியால், சருவேசுரன் ஏழாம்நாள் ஓய்ந்திருந்தார். இங்கே ஓய்ந்திருந்தாரென்று சொல்லியிருப்பதற்கு அர்த்தம் என்னவெனில், சருவேசுரன் உலக சிருட்டிப்பைச் செய்து முடித்தபின் வேறு ஒரு உலகத்தைச் சிருட்டிக்கத் தொடங்கவில்லையென்பதே அர்த்தமாம்.

### சருவேசுரன் உலகத்தை எப்போது சிருட்டித்தார்?

132. அவர் உலகத்தை எப்போது சிருட்டித்தார் என்பதைப் பற்றித் தீர்மானிக்குமுன் அறிந்துகொள்ளவேண்டிய காரியங்கள் இரண்டு. 1-வது, சருவேசுரனுக்கு ஏகமும் படைக்கப்படாததும் நித்தியமுமான நிகழ்காலமேயன்றி இறந்தகாலமாவது எதிர்காலமாவது முன்பின் என்னுங் காலத்தொடர்ச்சியாவது இல்லை. 2-வது, ஆறுதினங்களில் அல்லது உகங்களில் நடந்த சிருட்டித் தொழிலுக்கு முந்தியே சருவேசுரன் உலகத்திற்கு முதற்காரணமாகிய பிண்டத்தைச் சிருட்டித்திருந்தார்.

வானமும் பூமியும் உண்டாவதற்கு முதற்காரணமாயிருந்த உருவமற்ற பிண்டமானது சருவேசுரனாலேயே சிருட்டிக்கப்பட்டதென்பது சத்தியமாயினும், அது எப்போது சிருட்டிக்கப்பட்டதென்றும் அது எவ்வளவுகாலமாக உருவமற்று வெறுமையாய்க் கிடந்ததென்றும் நிருணயித்துச் சொல்லுதலோ கூடாது. ஆதியாகமநூல் ஆசிரியராகிய மோசேசு இதைப்பற்றி யாதொன்றும் பேசவேயில்லை. பேசாவிடினும் சருவேசுரன் சராசரங்களாய் அமைந்த உலகத்தைச் சிருட்டிக்குமுன் அதற்குக் காரணமான பூமியானது அநேகாயிரம் உகங்களாக உருவமற்று வெறுமை



யாய்க்கிடந்ததென்று தற்கால ஆராய்ச்சிகளால் வெளிப்படுகிறது. வேதாகமமானது உலகம் எப்போது சிருட்டிக்கப்பட்டதென்பதைப்பற்றி யாதொன்றும் பேசாதுவிட்டதுபோல, ஆறுநாள் என்பதிலுள்ள நாள் என்னுஞ் சொல்லுக்கு அர்த்தமென்ன, அது இருபத்துநாலுமணித்தியாலங்கொண்ட கால அளவையோ அல்லது அநேகவருஷங்கள் கூடிய கால அளவையோ என்பதைப்பற்றியும் யாதொன்றும் சொல்லாதுவிட்டது. ஆதியாகமம் எழுதப்பட்ட மூலபாஷையில் "நாள்" என்றதற்குப் பிரயோகிக்கப்பட்டிருக்கும் "யோம்" என்னும் சொல்லானது இருபத்துநாலுமணி நேரத்தைக்கொண்ட கால அளவைக்கும், அநேக வருஷங்கள்கூடிய கால அளவைக்கும் பொதுவான சொல்லாகையால், ஒவ்வொருவரும் தம்தம் இஷ்டப்படி அதற்கு அர்த்தம்பண்ணிக்கொள்ளலாம். மனிதருடைய உற்பத்தியையும் அவர்களுடைய பூர்வகாலங்களையும் உலகத்திற்குத் தெரிவிப்பதே ஆதியாகம நூலாசிரியராகிய மோசேசுவுக்கு இருந்த விசேஷ நோக்கமாகையால் அவர் மானிட சிருட்டிக்குமுன் நிகழ்ந்த காலங்களைத் திட்டமாய் வரையறுத்துத் தமது நூலிற் பேசவில்லை. மோசேசு முனிவரிடத்தில் இப்பரம ஏவுதலைச் செய்தருளிய சருவேசுரன் மனித சிருட்டிப்புக்குமுன் கடந்தகாலங்களைப்பற்றி அவருக்குத் தெரிவிக்கத் திருவுளங்கூரவில்லையென்று சொன்னாலும் பொருந்தும்.

### சருவேசுரன் உலகத்தை ஏதுக்காகச் சிருட்டித்தார்?

133. மோட்சத்திலே தம்மை முகமுகமாய்த் தரிசித்து பேரின்பபாக்கியத்தை அநுபவிக்கும்படி நியமிக்கப்பட்டவர்களாகிய ஞானம்பொருந்திய சிருட்டிகள் உலகத்திலும் பாக்கியமுள்ளவர்களாய் வாழவேண்டுமென்பதே உலகத்தைச் சிருட்டிப்பதில் சருவேசுரனுக்கிருந்த கருத்தென்னத்தகும்.

அன்றியும், சுயம்புவாகிய அவர் செய்யும் புறக்கிரியைகளிலெல்லாம் அவருடைய மகிமை விளங்குவது அவசியமாகையால் அவர் உலகத்தைத் தமது மகிமைக்காகவே அதாவது: சருவவல்லபம் சருவஞானம் முதலிய தமது தேவ இலட்சணங்களை அறிவுள்ள சிருட்டிகளாய் உள்ள தேவதூதர்களும் மனிதரும் கண்டு ஆராதனை ஸ்தோத்திரம் நன்றியறிதல் சிநேகம் முதலான வழிபாடுகளைத் தமக்குச் செய்யத்தக்கதாகவுமே சிருட்டித்தாரென்பது நிச்சயம்.

# 8-ம் அதிகாரம்

## தேவதூதரும் மனிதரும்

## 1-ம் பிரிவு

### தேவதூதரின் பேரில்

(தேவதூதன் என்பதும் சம்மனசு என்பதும் ஒருவஸ்துவையே குறிக்கும் சொற்களாகையால் இந்தப்பிரிவில் இரண்டுங் கலந்து வழங்கப்படுமென்று அறிக.)

134. (I) **தேவதூதர்களின் சுபாவமும் இருத்தலும்.** தூதன் என்னுஞ்சொல்லுக்கு அனுப்பப்பட்டவன் என்று அர்த்தமாம். ஆதலால், அது சம்மனசுகளுடைய சுபாவத்தையல்ல உத்தியோகத்தையே குறித்துக்காட்டும். சருவேசுரன் தம்முடைய ஊழியர்களாகிய சம்மனசுகளைக்கொண்டு தமது திருவுளத்தை மனிதருக்குத் தெரிவிப்பதால் அவர்களுக்குத் தூதர் என்னும் பெயர் உண்டாயிற்று. தேவதூதர்கள் உலகாரம்பத்திற் சிருட்டிக்கப்பட்டவர்களான ஞானம்பொருந்திய சுத்த அரூபிகளாம். தேவதூதர் சுத்த அரூபிகள். அவர்களுக்குத் தேகமில்லை, அவர்கள் தேகத்தோடு கூடிவாழ நியமிக்கப்பட்டவர்களுமல்ல. ஆதலால், அவர்கள் கண்ணுக்கெட்டாதவர்களும் தங்கள் சுபாவமுறைப்படி அழிவில்லாதவர்களும் தேகத்திற்குரிய பசி தாகம் பிணிமுதலிய துன்பங்கள் நீங்கியவர்களுமாயிருக்கிறார்கள். அவர்கள் சிற்சில சமயங்களில் மானிட உருவங்கொண்டு மனிதருக்குத் தோற்றினதினால் அவர்கள் மனிதர்போலவும், அவர்கள் சுத்த அரூபிகளாயிருப்பதால் உடலில்லாத சிரங்கள்போலவும், அவர்கள் பாவமில்லாதவர்களாதலால் குழந்தைகளின் முகம்போலவும், சருவேசுரனுடைய ஏவல்களையெல்லாம் மிகத் துரிதமாய்ச் செய்து முடிப்பவர்களாதலால் சிறகுடையவர்கள் போலவும் சித்திரங்களிற் காண்பிக்கப்படுகிறார்கள்.

**தேவதூதர்கள் ஞானம்பொருந்தியவர்கள்.** அதாவது: அவர்கள் ஒன்றை நினைக்கவும் விளங்கிக்கொள்ளவும் நிதானிக்கவும் நியாயம் ஆராயவுங்கூடிய புத்தியுள்ளவர்களாம். அவர்களுக்குள்ள புத்தியோவெனில் மனிதருடைய புத்திக்கு மிகவும் மேற்பட்டதாம்.



கண்ணுக்கெட்டியவைகளும் எட்டாதவைகளுமாகிய சகல வஸ்துக்களையும் ஒன்றுமில்லாமையிலிருந்து தோற்றுவித்தவர் சருவேசுரனே. ஆதலால், கண்ணுக்கெட்டாத வஸ்துகளென்னப்படும் சம்மனசுகளையும் மனித ஆத்துமங்களையும் சிருட்டித்தவர் அவரேயாம். தேவதூதர்கள் இன்னகாலத்திற்றான் உண்டாக்கப்பட்டார்களென்பதைக்குறித்து வேதாகமம் திட்டமாய் யாதொன்றும் சொல்லியிருக்கவில்லை. ஒன்றுமில்லாதிருக்கையில் சருவேசுரன் பூமியைச் சிருட்டித்தபோதே தேவதூதரையும் சிருட்டித்திருக்கவேண்டுமென்று வேதசாஸ்திரிகளுக்குட் பெரும்பாலார் தீர்மானிக்கிறார்கள். நித்தியமாய்ச் சீவித்துக்கொண்டிருக்கிறவராகிய சருவேசுரன் சருவத்தையும் ஒருங்கு சிருட்டித்தருளினாரென்று எக்கிளேசியாஸ்திக்குஸ் என்னும் வேதாகமநூலில் எழுதப்பட்டிருக்கின்ற வாக்கியமே இவர்களுடைய தீர்மானத்துக்கு ஆதாரமாம். தேவதூதர் உண்டாக்கப்பட்ட காலத்தைப்பற்றிச் சந்தேகமிருப்பினும் தேவதூதர் மெய்யாகவே இருக்கிறார்களென்பதைப்பற்றி ஒரு சிறிதேனும் சந்தேகமில்லை. இந்தச் சத்தியத்தை வேதாகமமும், பாரம்பரையும், தேவாராதனைக்கடுத்த செபங்களும் திருச்சபை அநுசரிப்புகளும் தெளிவாய் அத்தாட்சிப் படுத்துகின்றன. சருவேசுரன் தமது திருவுளத்தைச் சம்மனசுகள் மூலமாய் மனிதருக்குத் தெரிவிக்கிறதைக்குறித்து மோசேசுவும் தீர்க்கதரிசிகளும் சுவிசேஷகரும் அப்போஸ்தலர்களும் சாதாரணமாய் எல்லா வேதசாஸ்திரிகளும் தங்கள் தங்கள் நூல்களிற் பேசியிருக்கிறார்கள். தேவதூதருண்டு என்னும் விசுவாசமானது உலகாரம்பந்தொட்டு வழங்கிக்கொண்டு வருகிறது என்பதற்குக் கீழ்த்திசையிலும் மேற்றிசையிலுமுள்ள வேதசபைகளில் மாத்திரமன்றி சகல பூர்வீகசனங்களின் பரம்பரைகளிலுமே அநேகாநேக அத்தாட்சிகள் காணப்படுகின்றன.

தேவதூதர்களின் தொகையைப்பற்றியோவெனில், அது அலகிடக்கூடாததும் சிருட்டிகர்த்தாவுக்குமாத்திரம் தெரிந்ததென்றும் சொல்லவேண்டும். சம்மனசுகளின் தொகை கோடாகோடியென்று வேதாகமம் கூறும். மனிதருடைய தொகையிலும் தேவதூதர்களின் தொகை மிகவும் அதிகமானதென்பதே வேதசாஸ்திரிகளின் துணிபாம்.

135. (II) **தேவதூதரின் பூர்வ அந்தஸ்தும் தற்கால அந்தஸ்தும்.** சம்மனசுகள் பரிசுத்தமும் பாக்கியமுமான அந்தஸ்திலே உண்டாக்கப்பட்டிருந்தார்கள். சிருட்டிகர் அவர்களை அழிவில்லாதவர்களாகவும் தமது மகிமைக்கும் பேரின்பத்திற்கும்

பங்காளிகளாகவும் இருக்கும்படிக்குத் தமது சாயலாகச் சிருட்டித்தார். ஆயினும், அவர்களுக்குப் பூரண மனச் சுவாதீனமிருந்தது. ஆதலால், சருவேசுரன் தங்களுக்கு அளித்திருந்த பரிசுத்தத்தையும் பாக்கியத்தையும் காப்பாற்றிக்கொள்ளவாவது இழந்துபோகவாவது கூடியவர்களாயிருந்தார்கள். எண்ணிக்கையில்லாத இந்தத் தேவதூதர்களுக்குள்ளே ஒருபகுதியார் தங்கள் சிருட்டிகருக்குக் கீழ்ப்படிந்து நடந்தார்கள். இந்தக் கீழ்ப்படிதலுக்குச் சம்பாவனையாகச் சருவேசுரன் அவர்களை வரப்பிரசாத அந்தஸ்திலே என்றென்றைக்கும் நிலைப்படுத்தியருளினார். அவர்கள் இப்போது மோட்சத்திலே சருவேசுரனை முகமுகமாய்த் தரிசித்து பேரின்பபாக்கியத்தைச் சுகித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பாக்கியம் பூரணமானது. ஏனெனில், அதற்குக் குறைவாவது முடிவாவது வரக்கூடுமென்னும் அச்சம் அவர்களிடத்தில் ஒருபோதும் இல்லை. அவர்களுக்கே நல்ல சம்மனசுகள் அல்லது சுருக்கமாகச் சம்மனசுகள் என்ற பேர் வழங்கிக்கொண்டு வருகின்றது.

சம்மனசுகளுக்குள் மற்றப் பகுதியாரோவெனில், தங்கள் தலைவனாகிய பிரகாசி என்னும் அர்த்தமுள்ள லூசிப்பேர் என்பவனோடு சேர்ந்து அகங்கார ஆவேசங்கொண்டு, தங்கள் சிருட்டிகர்த்தாவும் பேருபகாரியுமாகிய சருவேசுரனுக்குத் தாங்கள் எல்லாத்திலும் சரியொத்தவர்கள் என்றெண்ணி, அவருக்குச் செய்யவேண்டிய சிநேகம் வந்தனை ஆதிய வழிபாடுகளைச் செய்யோமென்று எதிரிடைபண்ணத் தலைப்பட்டார்கள். இவ்வாறு சருவேசுரனோடு எதிரிடைசெய்யத்துணிந்த தேவதூதருக்குப் பிசாசுகளென்றும் கெட்ட அரூபிகளென்றும் பலவேறு துர் நாமங்கள் வழங்கிக்கொண்டுவருகின்றன. இவர்களுடைய தளகர்த்தனாகிய லூசிப்பேருக்கு மாற்றான் என்று அர்த்தமுள்ள சாத்தானென்றும் தந்திரஞ்செய்வோன் என்றும் பெயர் உண்டு.

கெட்ட அரூபிகளுடைய அக்கிரமமானது அக்ஷணத்திற்றானே அகோரமாய்த் தண்டிக்கப்பட்டது. அவர்கள் நாலுவிதமான ஆக்கினைக்குள்ளானார்கள். 1-வது, தாங்கள் பெற்றிருந்த சுபாவ அதீதமான ஞானத்தையிழந்து சுபாவத்துக்கடுத்த புத்தி சித்தம் முதலிய தத்துவங்களோடுமாத்திரம் விடப்பட்டார்கள். 2-வது, அவர்களுடைய சித்தமானது நன்மையை விரும்பும் குணத்தை முற்றாய் இழந்து தீமையிலேயே மீளாதவிதமாய் அழுந்திவிட்டது. 3-வது, தங்கள் மகிமைப் பாக்கியத்தையிழந்து மோக்ஷத்திலிருந்து துரத்தப்பட்டார்கள். 4-வது, சாத்தானுக்கும் அவனுடைய தூத



ருக்குமாக ஆயத்தம்செய்யப்பட்டதென்று யேசுநாதர் சுவிசேஷத்திற் குறித்துக் காட்டிய அந்த நரகாக்கினியில் இரக்கமின்றி உடனே தள்ளப்பட்டார்கள். பாவஞ்செய்த தூதர்களைச் சருவேசுரன் தப்பவிடவில்லை. அவர் அவர்களை நரகபாதாளத்திலே தள்ளிவிட்டு நியாயத்தீர்ப்பின் நாள் வருந்தனையும் அங்கே அந்தகாரச் சங்கிலிகளாற் கட்டப்பட்டு வேதனை அநுபவித்துக்கொண்டிருக்கச் செய்தாரென்று அர்ச். இராயப்பரும் தமது இரண்டாம் நிருபத்தில் எழுதியிருக்கிறார்.

136. (III) **கெட்ட அருபிகளின் உண்மையும் தொழிலும் வல்லமையும்.** கெட்ட அரூபிகளாகிய பிசாசுகள் உண்டென்பதும் அவர்கள் தீத்தொழிலையே புரிந்துகொண்டு வருகிறார்கள் என்பதும் மறுக்கப்படாத காரியங்களாம். பிசாசுகள் மனிதருடைய பரிசுத்தத்தையும் பாக்கியத்தையுங் குறித்து காய்மைகாரமாயிருக்கிறார்களென்றும் மனிதரைக் கெடுக்கத் தேடுவதே அவர்களுக்கு இடைவிடாத தொழிலென்றும் வேதாகமும் திருச்சபைப் போதனைகளும் தேவாராதனைக்கடுத்த செபங்களும் சாக்ஷியிடுகின்றன. வேதசாஸ்திரிகள் வித்தியாபாரகர் முதலானவர்களுடைய துணிபுமிதுவே. யேசுநாதர் தமது தேவ வல்லமையால் பிசாசுகளை மனிதருடைய தேகங்களிலிருந்து பலதரந் துரத்தினாரென்றும், அந்த வல்லமையைத் தம்முடைய அப்போஸ்தலர்களுக்கும் கொடுத்தருளினாரென்றும் சுவிசேஷநூல்கள் கூறுகின்றன. பிசாசானது யாரை விழுங்குவேனென்று கெர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல மனிதரைச் சுற்றித்திரிகின்றதென்று அர்ச். இராயப்பர் எழுதின நிருபத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. இத்தனை சாக்ஷிகளும் இவைபோலும் பிறவும், பிசாசுகள் உண்டென்பதற்கும் அவர்கள் மனிதரை நரகத்திற்கு இழுத்துக்கொண்டு போகும்படியாகத் தந்திர சோதனைகளை உண்டாக்கிப் பாவத்தில்விழுத்தத் தேடுவதையே இடையறாத தொழிலாய்ப் பூண்டிருக்கிறார்களென்பதற்கும் அத்தாட்சிகளாயிருக்கின்றன.

அர்ச். சின்னப்பர் எபேசியருக்கு எழுதின நிருபத்து ஆறாம் அதிகாரத்தில், நம்முடைய போராட்டமானது விசேஷமாய் இவ்வுலக துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் அந்தகாரத்தின் வல்லமைகளோடும் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளோடும் நடக்கின்றது என்று வசனித்தபிரகாரம், பிசாசுகள் எல்லாம் எப்போதும் நரகத்திலே மாத்திரம் வசித்துக்கொண்டிருக்கிறதில்லை. அவர்களுக்குள் அநேகர் தேவ உத்தரவினால் நரகவேதனையோடு அங்கிருந்து புறப்பட்டுப் பூமியிலும் ஆகாயத்திலும்

பரந்து மனிதருக்கு இடர் விளைத்து அவர்களைக் கெடுக்கத் தேடுகிறார்கள். ஆயினும் மனிதருடைய பெலனுக்கு மேலாக பிசாசுகள் அவர்களுக்குத் தந்திரசோதனைகளை உண்டாக்கச் சருவேசுரன் ஒருபோதும் விடை அளிக்கமாட்டார் என்பதும், மனிதர் விழிப்பாயிருந்து செபம்பண்ணினால் சருவேசுரன் தாம் வாக்குப் பண்ணினபடி இந்தப் பராக்கிரம சத்துருக்களைச் செயங்கொள்ளுவதற்கு வேண்டிய பரம சகாயங்களைக் கொடுத்தருளுவார் என்பதும் நிச்சயமாம்.

**137. (IV) நல்லதூதரின் உத்தியோகமும் காவலான சம்மனசுகளும்.** தேவதூதருக்குள்ள இடையறாத அலுவல் என்னவெனில், தங்கள் சிருட்டி கர்த்தாவை எப்போதும் துதித்துக்கொண்டிருப்பதும் அவராற் கற்பிக்கப்படும் ஏவல்களைச் சுமுத்திரையாய்ச் செய்துமுடிப்பதுமேயாம். சம்மனசுகள் சருவேசுரனுடைய சிம்மாசனத்தைச் சூழ்ந்துநின்று அவரை ஆராதிக்கிறார்கள். அவருடைய புகழைப் பாடுகிறார்கள். அவருடைய ஞானம் பரிசுத்தம் வல்லபம் மகிமை ஆதியான இலக்ஷணங்களைக்கொண்டாடுகிறார்கள். கடவுளுடைய திருவுளத்தை மனிதருக்குத் தெரிவிக்கவேண்டியபோதுமாத்திரம் அவர்கள் மோக்ஷத்தை விட்டு பூமிக்கு வருவார்கள். சருவேசுரன் தமது கற்பனையை வெளிப்படுத்தினவுடனே அவர்கள் அதை நிறைவேற்றும்பொருட்டு பூமியின் அந்தங்கள் மட்டும் மின்னலைக்காட்டிலும் வேகமாய்ப்பறந்து செல்வார்கள். சம்மனசுகள் மனிதருக்குத் தேவ ஸ்தானாபதிகளாகவும் விழிப்புள்ள பாதுகாவலராகவும் இருக்கிறார்கள் என்றும், இராச்சியங்கள் மாகாணங்கள் பட்டினங்கள் முதலியவைகளுக்கு காவலாளிகளாயிருக்கிறார்களென்றும் வேதமானது நமக்குப் போதிக்கின்றது. சம்மனசுகள் மனிதரோடு சம்பாஷிக்கிறதாகவும் சருவேசுரனுடைய கற்பனைகளையும் தேவ இரக்கத்தையும் தேவ நீதியையும் அவர்களுக்குத் தெரிவிக்கிறதாகவும் வேதாகமத்தில் பற்பல இடங்களில் தெளிவாய்க்காணக்கிடக்கின்றது.

இங்கே சொல்லப்பட்ட வெவ்வேறான தொழில்கள் எல்லாச் சம்மனசுகளுக்கும் பொதுவாயிருப்பினும், நமது ஆயுசுபரியந்தம் நம்மைப் பாதுகாக்கவும் ஆதரிக்கவும் சருவேசுரன் சில தேவதூதர்களுக்கு விசேஷ உத்தியோகங் கொடுத்திருக்கிறார். இவர்களுக்குக் காவலான சம்மனசுகள் என்று பெயர். இவர்கள் நமக்காகச் சருவேசுரனிடத்தில் மனுப்பேசுகிறார்கள். நமக்கு வேண்டிய ஞான வெளிச்சத்தையும் வரப்பிரசாதங்களையும் அவரிடத்தில் மன்றாடிக்கேட்கிறார்கள். இறப்பியேல் என்னுந் தேவதூதன் தொபியாஸ் என்பவருக்குத் தெரிவித்ததுபோல, இவர்கள் நம்முடைய செபங்களையும் சருவேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கிறார்கள். இவர்கள் பிசாசின் தந்திர சோதனைகளில் நம்மைத் தயிரியப்படுத்துகிறார்கள். ஆபத்துகளில் நம்மைப் பாதுகாத்துத் தீமைகளில் நின்று நம்மை இரட்சிக்கிறார்கள். காவலான சம்மனசுகள் உண்டு என்பதையும் அவர்கள் நம்மைப் பாதுகாத்துக்கொண்டு வருகிறார்களென்பதையும் தெளிவாய்க்காண்பிக்கும் அத்தாட்சிகள் வேதாகமநூல் அடங்கலுங் காணப்படுகின்றன. ஒவ்வொரு சனத்துக்கும், ஒவ்வொரு மாகாணத்துக்கும், ஒவ்வொரு பட்டினத்துக்கும், ஒவ்வொரு சபைக்கும் ஒவ்வொரு காவலான சம்மனசு உண்டென்று வேதநூலாசிரியர் வித்துவான்கள் ஆகியவர்களுக்குட் பெரும்பாலார் எண்ணுகிறார்கள்



**138. (V) பொதுவாக எல்லாத் தேவதூதர்மட்டிலும் விசேஷமாகக் காவலான சம்மனசுகள் மட்டிலும் நமக்குள்ள கடமைகள்** எவையெனில் 1-வது, அவர்களுடைய சமுகத்துக்கு அயோக்கியமும் மகிமைக் குறைவுமாயுள்ள யாவற்றையும் விலக்கி அவர்களைச் சங்கிப்பதும், 2-வது, அவர்களிடத்திற் பத்திசெய்து அவர்களுடைய பாதுகாவலில் முழுநம்பிக்கை வைப்பதும், 3-வது, தந்திரசோதனைகளிலும் ஆபத்தான மற்றச் சமையங்களிலும் அவர்களைநோக்கி மன்றாடுவதும், 4-வது, அவர்கள் மனதில் உண்டாக்கும் நல்ல எண்ணங்களைச் சுமுத்திரையாய் அநுசரிப்பதும், 5-வது, அவர்களிடத்திலிருந்து நாம் பெற்றுக் கொள்ளும் நன்மைகளுக்காக அவர்களுக்கு நன்றியறிதல் காண்பித்துக்கொண்டு வருவதுமாம்.

**139. தேவதூதரின் வெவ்வேறான வரிசைகள்.** தங்கள் சிருட்டிகர்த்தாவுக்குப் பிரமாணிக்கமாயிருந்த சம்மனசுகளின் தொகையோ கணிக்கப்படாதது என்பது நிச்சயம். இந்தச் சம்மனசுகளெல்லாம் மூன்று பெரும்வகுப்பாய்ப் பிரித்து எண்ணப்படுவார்கள். தேவ ஏவல்களைச் சருவேசுரனிடத்திலிருந்து நேராகப் பெற்றுக்கொள்ளுகிறவர்கள் முதல்வகுப்புக்கும், இவர்களால் அத்தேவ ஏவல்களைத் தெரிவிக்கப் பெற்றுக்கொள்ளுகிறவர்கள் இரண்டாம் வகுப்புக்கும், அவைகளை மனிதருக்கு அறிவிக்கிறவர்கள் மூன்றாம் வகுப்புக்கும் சேர்ந்தவர்களென்னப்படுவார்கள். இதன்றி ஒவ்வொரு வகுப்பிலும், இன்னும் மும்மூன்று பிரிவாம் என்பர். முதல்வகுப்பைச்சேர்ந்த மூன்று பிரிவாரும் முறையே பத்திசுவாலகர், ஞானாதிக்கர், பத்திராசனர் என்று அழைக்கப்படுகிறார்கள். இரண்டாம் வகுப்பைச் சேர்ந்த மூன்று பிரிவாரும் முறையே நாத

கிருத்தியர் சத்துவர் பலவத்தர் என்று சொல்லப்படுகிறார்கள். மூன்றாம் வகுப்பைச்சேர்ந்த மூன்று பிரிவாரும் முறையே பிராதமிகர், அதிதூதர், தூதர் என்று பெயரடைவார்கள். அதிதூதருக்குள் மூன்றுபேருடைய நாமங்களை மாத்திரம் வேதாகமம் நமக்குத் தெரிவிக்கின்றது. முதலாம் அதிதூதனுக்கு மிக்கேல் என்று பெயர். இதற்கு சருவேசுரனுக்கு ஒப்பானவர் யார் என்று அர்த்தமாம். இரண்டாம் அதிதூதனுக்கு இறப்பியேல் என்று பெயர். இதற்குத் தேவ அவுஷதம் என்று அர்த்தமாம். மூன்றாம் அதிதூதனுக்கு தேவ வல்லமையென்று அர்த்தமுள்ள கபிரியேல் என்று பெயர். இவர் தானியேல் தீர்க்கதரிசிக்கும் ஸ்நாபக அருளப்பரின் பிதாவாகிய யக்கரியாசுக்குந் தோன்றித் தேவ திருவுளத்தை அவர்களுக்கு அறிவித்தார். தேவ திருச்சுதனின் மனுஷாவதாரத்தைத் தெரிவித்து அர்ச். கன்னிமரியம்மாளுக்கு மங்களங்கூறினவரும் இவரே. மேலே சொன்ன ஒன்பது வகுப்பான சம்மனசுகளுங் கூடியசபைக்கு நவவிலாச சபையென்றும் வானோர் நவகணங்களென்றும் பெயர்.

---

## 2-ம் பிரிவு

### மனிதன் பேரில்

140. (I) **மனிதனுடைய சிருட்டிப்பு.** ஆதியாகம நூலாசிரியராகிய மோசேசு எழுதியபடி சருவேசுரன் வானத்தையும் பூமியையும் வெளிச்சத்தையும் சோதிமண்டலங்களையும் புல் பூண்டு விருக்ஷங்களையும் மிருகசீவன்களையும் சிருட்டித்தபின்பு: நம்முடைய சாயலாகவும் நம்முடைய உருவத்தின்படியும் மனிதனை உண்டாக்குவோமாக, அவன் சமுத்திரங்களின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் மிருகசீவன்களையும் பூமி அனைத்தையும் பூமியின்மேல் ஊரும் சகல ஊர்வனவையும் ஆளக்கடவான் (ஆதி. 1.) என்று வசனித்து மனிதனுடைய சரீரத்தைப் பூமியின் மண்ணால் உருவாக்கி சீவ சுவாசத்தை அவன் நாசியிலே விட்டார்; அப்போது மனிதன் உயிருள்ள சீவாத்துமாவானான். மீளவும் சருவேசுரன்: மனிதன் ஒன்றியாயிருக்கிறது நல்லதல்ல, அவனுக்கு ஒப்பான ஒரு துணைவியை உண்டாக்கக்கடவோம் என்று கூறி, ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை அனுப்பி அவர் உறக்கமாயிருக்கும்போது அவருடைய விலா எலும்புகளில் ஒன்றை



யெடுத்து அந்த இடத்தைத் தசையினால் அடைத்தார். எடுத்த எலும்பைக்கொண்டு பின்பு ஒரு ஸ்திரியை உண்டாக்கி அவளை ஆதாமுக்குத் துணைவியாகக்கொடுத்தார். (ஆதி. 2)

141. மானிட சிருட்டிப்பை விபரிக்கும் இந்த வர்த்தமானத்தைக்கொண்டு நாம் தெளிந்துகொள்ளத்தகுங் காரியங்கள் பலவுண்டு. 1-வது, சருவேசுரன் மற்றச் சிருட்டி வகைகளையெல்லாம் தமது திருவுளத்தின் ஒரேயொரு முயற்சியால் உண்டாக்கியருளினார். அவ்வப்பொருள் உண்டாகக்கடவதென்று அவர் வசனித்தமுறையே எல்லாமுண்டாயிற்று. மனிதனை உண்டாக்க வேண்டியபோதோவெனில், போசுவே என்னும் மகாபண்டிதர் உரைத்தவண்ணம், சிருட்டி கர்த்தாவானவர் தாம் செய்யப்புகுந் தொழிலானது மற்றெல்லாத் தொழில்களிலும் மிக முக்கியமானதென்று நமக்குத் தெளிவாகும் பொருட்டுத் தம்மிற்றாமே ஆலோசிப்பவராகத் தோன்றினார். 2-வது, மானிட சிருட்டிப்பை நோக்கும்போது மனிதனானவன் மண்ணால் உருவாக்கப்பட்ட ஒரு சரீரமும் தேவசாயலைக்கொண்ட ஒரு ஆன்மாவுங் கூடிய வஸ்துவென்பது தெளிவாகின்றது. மனிதனுடைய சரீரம் தன் மகிமை பொருந்திய உருவத்தாலும் வானத்தைநோக்கும் நிமிர்ந்த முகத்தாலும் மற்றச் சீவபிராணிகளின் உடல்களைக் காட்டிலும் உந்நத மகத்துவம் பூண்டதாயிருப்பினும், மற்ற மிருகங்களின் உடல்களைப் போலவே தானும் அழிவுக்குரியதென்பது நிச்சயம். ஆயினும், தன்னிட்டமாய் யாதொன்றை விரும்பவும் வெறுக்கவும் நினைக்கவும் நியாயமாராயவும் முடிவுகட்டவும் கூடிய அறிவுள்ள சித்தாகிய ஆத்துமாவே மனிதனை மற்ற மிருகசாதிகளினின்றும் விசேஷித்துக் காண்பிக்கின்றது. இங்கே சொன்ன ஞானதத்துவங்களின் நிமித்தமே மனிதன் தேவசாயலைப் பூண்டவனாயிருக்கிறான். அதாவது, புத்தி சித்தம் சுவாதீனம் உடையவனாய், அழிவின்றியவனாய், அறிவினாலும் அன்பினாலும் கடவுளைப்போல் சீவிக்கக் கூடியவனாயிருக்கிறான். இதுபற்றியே சிருட்டி கர்த்தாவானவர் மானிட ஆன்மாவை உண்டாக்குகையிற் தமதுசுவாசத்தை அவன் நாசியில் விட்டார் என்று உருவகப்படுத்திச் சொல்லியிருக்கிறது. மனிதனானவன் சரீரமும் அசரீரமும் எனும் வெவ்வேறான இரண்டு பொருட்களால் ஆக்கப்பட்டவனாயினும், அவ்விருபொருட்களும் தம்முள் அந்நியோந்நிய ஐக்கியம் பூண்டவைகளாயிருப்பதால் அவன் ஒரே ஆளும் ஒரே சுபாவமுமன்றி பலசுபாவங்களும் பல ஆட்களும் அல்லவென்றும், ஆத்துமம் சரீரத்தை ஆளவும் சரீரம் ஆத்துமத்துக்குக் கீழ்ப்படிந்து ஏவல்செய்யவும் வேண்டு

மென்று சிருட்டிகர்த்தா நிருபித்திருக்கிறாரென்றும் தெளிந்துகொள்ளவேண்டும். 3-வது, சருவேசுரன் மனிதனை உண்டாக்கினபோது அவனை உலகத்துக்கு அரசனாக ஏற்படுத்திச் சகல சீவசெந்துக்களையும் அவனுடைய அதிகாரத்துக்குள் அமைத்து அவைகளை ஆண்டுநடத்தும் வல்லமையையும் அவனுக்குக்கொடுத்து அவைகள் சுபாவமாய் அவனுக்குக் கீழ்ப்படிந்திருக்கவும் செய்தார். தாம் இவ்வாறு மனிதனை உலகத்துக்கு அரசனாக ஏற்பத்தினதற்கு ஓர் அறிகுறியாகவே கர்த்தர் சகல மிருக செந்துகளையும் ஆதாம் முன்பாக வரப்பண்ணி இவர் அவைகளுள் ஒவ்வொன்றிற்கும் அதனதன் சுபாவம் குணம் நியதிகளுக்கேற்ற நாமங்களையிடப்பண்ணினார். 4-வது, சருவேசுரன் மனிதனுக்குத் துணைவியாக அவனுடைய உடலிலிருந்தே ஒரு ஸ்திரியைச் சிருட்டித்துக் கொடுத்ததினால் பெண்ணானவள், ஆண்மகன் தன்னைக்காட்டிலும் மேம்பாடுடையவனென்பதை விளங்கிக்கொள்ளவேண்டுமென்றும், ஆண்மகனானவன் தான் பெண்மகளைச் சிநேகித்து ஆதரிக்கக் கடமை பூண்டவனென்பதை உணர்ந்துகொள்ள வேண்டுமென்றும், ஆணும் பெண்ணுமாகிய இருவரும் விவாகஞ் செய்துகொண்டால் அவர்களுக்கிடையில் இருக்கவேண்டிய ஒற்றுமை நயத்தைத் தெளிந்துகொள்ளவேண்டுமென்றும் காண்பித்தருளினார்.

142. (II) **ஆத்துமத்தின் சித்துத்தன்மை.** மனிதனுடைய ஆத்துமமானது உடலோடுகூடிய உயிரேயன்றி உடலினின்றும் வேறாகிய ஒரு சித்துப்பொருள் அல்லவென்று சாதிப்பாரும் சிலருண்டு. இவர்களுக்குச் சடவாதிகளென்று பெயர். (சடம் என்பது சித்து அல்லாத பொருள்). மானிட ஆத்துமமானது சித்துப் பொருளென்றும், அது சடத்தினின்றும் முழுதும் வேறானது என்றும் புத்தி ஒன்றைமாத்திரம் கொண்டு திருஷ்டாந்தப்படுத்திக் காண்பித்தல் எளிது. எவ்வாறெனில், நாம் யாதொன்றை நினைக்கவும், நம்முடைய எண்ணங்களை ஒன்றோடொன்று ஒப்பிட்டுப்பார்க்கவும், ஒன்றை நிதானிக்கவும், ஒன்றின்மேல் நியாயமாராயவும், நமக்கு இஷ்டமானபோதும் இஷ்டமானபடியும் யாதொன்றை விரும்பவும், யாதொன்றைச்செய்யவுங் கூடியவர்களாயிருக்கிறோமென்று நாமே உணர்ந்து கொள்ளுகிறோம். இத்தன்மையான கிரியைகளோ மனித ஆத்துமமானது உடலின் பஞ்சேந்திரியங்களிற் தங்கியிராத மேலான தொழில்களைச் செய்யும் வன்மை உடையது என்று காட்டுகின்றன. பஞ்சேந்திரியங்களோடு கட்டுப்பட்டு அவைகளுக்குரிய பார்வை கேள்வி முதலியவைகளை மட்டுஞ் செய்கிற மிருகங்களுடைய உயிர், உடலோடு முழுதும் சம்பந்தப்பட்டு உடலுக்குரிய கிரியைகளை மாத்திரம் செய்கிறதினால்,



உடல் அழிய அதுதானும் அழிந்துபோம். மனித ஆத்துமமோ, உடலோடு கூட இருந்தாலும் உடலுக்கு மேற்பட்ட கிரியைகளையும் செய்கின்றமையால், உடல் அழியும்போது தான் அழியாமல் நிலைபெறும். ஆதலால், அது ஒரு சித்துப்பொருளே என்று முடிப்பது அவசியம்.

இவ்வாறே வேதாகமமும் திருச்சபையும் போதிக்கின்றன. இவ்வாறே வேதபாரகர் அனைவரும் ஒருவாய்ப்பட நிச்சயித்திருக்கிறார்கள். ஆத்துமமானது சித்துப்பொருளென்பது, கடவுள் உண்டென்பதைப்போல, உலகத்தில் எக்காலத்திலும் நிலைபெற்ற ஒரு சாதாரண விசுவாசமாம். ஆத்துமமும் சரீரமும் அதாவது, சித்துப் பொருளும் சடப்பொருளும், ஒன்றல்ல, அவை தம்முள் வெவ்வேறானவைகளேயென்பது அவனவன் தன்தன் உள்ளத்திலேயும் உணர்ந்துகொள்ளக்கூடிய சத்தியமாம். பூர்வகாலத்தில் நீசமிருகசெந்துக்களுக்குத் தேவாராதனைசெய்துகொண்டுவந்த சனங்களுள்ளேதானும் யாதொன்றை நினைக்கக்கூடிய சத்துவம் சடப்பொருளுக்கு உண்டென்றாவது, மனிதனானவன் தன்னுடலின் அந்தசந்தத்தால் மாத்திரம் நீச செந்துக்களுக்கு மேற்பட்டவன் என்றாவது கைக்கொண்டுவந்தவர்களை எங்காவது கண்டதுமில்லை கேட்டதுமில்லை.

143. (III) **ஆத்துமத்தின் சுயாதீனம்.** மனிதனுக்குச் சுயாதீனம் இல்லை என்று சாதிப்பவர்களுக்கு விதிவாதிகள் என்று பெயர். மனிதனுக்குப் பூரண சுயாதீனம் உண்டென்பதற்கு உள்ள அசையாத அத்தாட்சி எல்லா மனிதரிடத்திலும் விளங்கும் உள்ளுணர்ச்சியேயாம். நடக்கவும் தரித்து நிற்கவும், பேசவும் மோனமாயிருக்கவும், நன்மையைச்செய்யவும், தீமையைப்புரியவும் தங்களுக்கு இஷ்டம் உண்டென்று எல்லா மனிதருந் தம்மிற்றானே உணர்ந்துகொள்ளுகிறார்கள். ஆதலால், மனிதனுக்குச் சுயாதீனம் உண்டோ என்று சந்தேகிக்கிறவனையும் இல்லையென்று மறுக்கிறவனையும் சுத்தப் பயித்தியகாரன் என்றே சொல்லவேண்டும். மனிதனுக்குத் தன்னிஷ்டம் இல்லையெனில், ஒழுக்கவிதிகளெல்லாம் வியர்த்தமாகும். தீமையைச் செய்யாதபடி ஒருவனைத் தடுக்க அவைகளாலாகாது; ஒருவனைக்கொண்டு நன்மையைச் செய்விக்கவும் அவைகளாற்கூடாது. ஏனெனில், அவன் விரும்பியபடி ஒழுக விதிவசம் இடங்கொடாது. அப்படியாயின் ஒழுக்கமுறைக்கடுத்த நன்மை தீமை இரண்டிற்கும் இடையில் யாதொரு பேதமுமில்லை என்று முடியும். தன்னிஷ்டமின்றிக் கட்டாயத்தாற் செய்யப்பட்டதும் தவிர்க்கப்பட்டதும் ஆகிய எவ்வித கிரியையாயினும் ஒழுக்கமுறைப்படி நற்கிரியை என்றாவது

துர்க்கிரியை என்றாவது சொல்லப்படாது. சூரியன் தன் கிரணங்களால் நமக்குப் பிரகாசத்தையும் உஷ்ணத்தையுங் கொடுப்பதினால் அது ஒரு புண்ணியக் கிரியையைச் செய்கின்றது என்று சொல்லத்தகுமோ? இடியேறானது ஒருவனைக்கொன்றுவிட்டதினால் அல்லது ஒரு வீட்டைச் சுட்டெரித்ததினால் அது ஒரு பாவக் கிரியையைப் புரிந்ததென்று கூறுவதெவ்வாறு? மெய்யறிவானது இத்தன்மையான அபத்தங்களைத் தள்ளிவிட்டு, மிருகசாதிகளுக்கில்லாத சுயாதீனம் மனிதனிடத்தில் அகத்தியமாய் உண்டென்றும், அவன் தன் சுயாதீனத்தை நல்லவழியில் செலுத்துவதினால் புண்ணியவானாகவும் தீயவழியிற் செலுத்துவதினால் பாவியாகவும் இருப்பானென்றும் போதிக்கின்றது.

144. (IV) **ஆத்துமத்தின் அழியாமை.** மானிட ஆத்துமமானது பகுக்கக்கூடாத சித்துப்பொருளாக இருப்பதால் அது அழிவில்லாததாம். சடப்பொருளோ தன் உறுப்புகள் குலைந்து கெடுவதினால் தானும் கெடும். ஆத்துமத்துக்கு உறுப்புகளில்லை. ஆதலால் அது தன் சுபாவமுறைப்படி அழிவில்லாததேயாம். அன்றியும் கடவுள் நீதிபராயிருக்கின்றமையால் பாவத்திற்கு ஆக்கினையும் புண்ணியத்திற்குச் சம்பாவனையுங்கொடுப்பது அவசியம். அவ்வாறிருக்கப் பாவ புண்ணியங்களுக்கேற்ற ஆக்கினை சம்பாவனைகள் இவ்வுலகத்திற் பெரும்பாலும் கிடைக்கிறதில்லை என்பது பிரத்தியக்ஷம். அம்மட்டோ! புண்ணியத்தைச் செய்தவன் அவமான துன்பங்களையும் பாவத்தைப் புரிந்தவன் வெகுமான சுகங்களையும் இம்மையில் அனுபவிக்கக் காண்கிறோம். ஆதலால் வரம்பில்லா நீதியையுடைய கடவுளானவர் வேறொரு சீவியத்தில் புண்ணிய பாவங்களுக்கேற்ற சம்பாவனை ஆக்கினைகளை நிருபிப்பார் என்று ஒத்துக்கொள்வது அவசியம். இங்கே சொன்ன நியாயங்களை ஆதாரமாய்க் கொண்டே எல்லாக் காலத்திலும் எல்லாச் சாதியாரும் மனித ஆத்துமம் அழியாது அதற்கு மறுமைச் சீவியம் உண்டு என்னும் சத்தியத்தைக் கைக்கொண்டு வந்தார்கள். மறுமைச் சீவியம் ஒன்று உண்டென்னும் விசுவாசமானது புண்ணியத்திற்குச் சம்பாவனை அளிப்பவரும் பாவத்திற்கு ஆக்கினை இடுபவருமாகிய கடவுள் ஒருவர் இருக்கிறார் என்னும் சாதாரண விசுவாசத்தோடு அகத்தியமாய்ச் சேர்ந்திருந்தது என்பதை விளக்கும் அத்தாட்சிகள் எல்லாத் தேசங்களிலும் எல்லாக் காலங்களிலும் தெளிவாய்க் காணப்படுகின்றன.

145. (V) **எல்லாச் சாதியாருக்கும் உள்ள ஏக உற்பத்தி.** ஆதி மனிதனுக்கு ஆதாம் என்று பெயர். இப் பெயருக்கு



அர்த்தம் என்னவெனில், செம்மண் அல்லது செம்பூமி என்பர். ஆதிமனிதனுடைய தேகம் மண்ணால் சிருட்டிக்கப்பட்டதினால் இப்பெயர் அவருக்கு உண்டாயிற்றுப்போலும். ஆதி மனுஷிக்கு ஏவாள் என்று பெயர். ஏவாள் என்பது சீவன் அல்லது சீவியத்தினூற்று அல்லது சீவியத்தின் தாய் என்னும் அர்த்தத்தைக்கொடுக்கும். ஆதாமும் ஏவாளும் மனுக்குலத்தின் ஆதி பிதா மாதாக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். ஏனெனில், சகல மனிதரும் இவ் விருவரிலும் இருந்தே பிறக்கிறார்கள். இவ்வாறே வேதாகம நூலும் திட்டமாய்ப் போதிக்கின்றது. இவ்வாறே சரித்திர ஆசிரியர்களும் வேதசாஸ்திரிகளும் ஒத்துக்கூறுகிறார்கள். ஆதலால் ஆதாம் சிருட்டிக்கப்படுமுன் மனிதர் இருந்தார்கள் என்று தப்பறையாய்ச் சாதிப்பவர்களாகிய பூர்வ ஆதாமித்தர் என்பவர்களைத் திருச்சபையானது பதிதர் என்று சபித்துத் தள்ளிவிட்டது. பூமியிலுள்ள வெவ்வேறு சாதியாருக்கு வெவ்வேறான நிறம் இருப்பதற்குக் காரணங்கள் அநேகம். அவை: தேசசுவாத்தியம், சீர்திருத்தம், ஒழுக்கம், உணவு, பற்பலநோய்கள், மனதுக்கடுத்த அநேகாநேக விஷயங்கள், தேகத்துக்கடுத்த நாநாவித இடையூறுகள் முதலியனவாம். இக்காரணங்கள்பற்றியே மனிதர் முன்பு தனித்தனியாகவும் பின்பு மொத்தமாகவும் நிறவேறுபாட்டை அடைந்து கொள்ளுகிறார்கள். ஆதலால் அவ்வச்சாதியாருடைய நிறவேற்றுமையானது அவ்வச்சாதியாருடைய ஆதி உற்பத்தியும் வெவ்வேறானதென்று காண்பியாது. உஷ்ணம் மீதியாயுள்ள தேசங்களில் வசிப்பவர்கள் கருமைநிறம் உடையவர்களாகவும், உஷ்ணம் சமமாயுள்ள தேசங்களில் வசிப்பவர்கள் கபில நிறம் உடையவர்களாகவும், உஷ்ணம் தணிவாயுள்ள தேசங்களில் வசிப்பவர்கள் வெண்மை நிறம் உடையவர்களாகவும் இருப்பார்கள். முக இரேகைகளோ பெரும்பாலும் சீர்திருத்தத்தைப்பற்றியே உண்டாகும்.

146. (VI) **ஆதாம் ஏவாள் என்பவர்களின் ஆதிஸ்திதி.** சருவேசுரன் மனிதனைத் தமது சாயலாகவும், புத்தி தன்னிஷ்டங்கள் உள்ள ஓர் வஸ்துவாகவும் சிருட்டித்தபோதே, அவர் அவனுக்கு யாதேனும் ஒரு பாக்கியம் நிருபியாமல்விடுதல் கூடாது. மனிதனுக்குக் கிடைக்கக்கூடிய பாக்கியங்கள் இருவகைப்படும். அவற்றுள் ஒன்று சுபாவமான பாக்கியம் என்றும், மற்றது சுபாவத்துக்கு மேலான பாக்கியம் என்றும் பெயர்பெறும். மனிதனுக்குக் குன்றாத உரிமையாயுள்ளபாக்கியம் சுபாவமானபாக்கியம் என்னப்படும். அது அவனுடைய சுபாவத்தோடு அகத்திய சம்பந்தம் பூண்டதும், அவன் தன் சுபாவ சக்தியால் அதாவது தன்

புத்தியாலும் சித்தத்தாலும் பெலத்தாலும் சேகரித்துக் கொள்ளக் கூடியதுமாம். சுபாவத்திற்கு மேலான பாக்கியம் என்பது மனிதனுடைய சுபாவத்தின் தேவைக்கு மேற்பட்ட பாக்கியமாம். அதாவது: மனிதனுக்கு அவன் சுபாவத்தினிமித்தமாகவும், அவன் ஓர் சரீரத்தோடு புத்தியுள்ள ஆத்துமமுங் கூடிய வஸ்துவாயிருக்கிறான் என்றபடியாலும் வரவேண்டியதல்லாத ஒரு பாக்கியமாம். அதை மனித சுபாவ ஏதுக்களால் மாத்திரம் அடைந்து கொள்ளுதலுங் கூடாது. இங்கே காட்டிய இருவித அந்தஸ்துகளுள் ஒன்றில் அதாவது சுபாவ அந்தஸ்திலேனும் சுபாவத்திற்கு மேற்பட்டதான பரிசுத்த அந்தஸ்திலேனும் சருவேசுரன் மனிதனை உண்டாக்கிவைக்கக்கூடியதாயிருந்தது. பாவம் இல்லாததும், தேவவரப்பிரசாதம் இல்லாததும், ஆசாபாசத்தோடும் பசி தாகம் பிணி மரணம் முதலான துன்பங்களோடும் கூடியதுமாகிய ஸ்திதியே சுபாவ அந்தஸ்து என்று சொல்லப்படும். இந்த அந்தஸ்திலே மனிதன் சிருட்டிக்கப்பட்டிருந்தால் அவன் சுபாவமான பாக்கியத்திற்கே, அதாவது சருவேசுரனை முகமுகமாய்த் தரிசித்து அநுபவிப்பதாகிய பேரின்பபாக்கியமல்லாததாகிய ஓர்வித பாக்கியத்திற்கே நியமிக்கப்பட்டிருப்பான். இப்பாக்கியமானது மோக்ஷத்திலே சருவேசுரனை முகமுகமாய்த் தரிசித்து அநுபவிக்கும் பேரின்பபாக்கியத்திற்கு மிகவும் கீழ்த்தரமானதென்பது பிரத்தியக்ஷம். சுபாவத்திற்கு மேலான பரிசுத்த அந்தஸ்து ஆவது என்னவெனில்: இஷ்டப்பிரசாதத்தோடு கூடியதும் ஆசாபாசங்களில் துன்பதுரிதங்களில் மரணம் ஆகியவைகளினின்று நீங்கியதுமான ஸ்திதியாம். இவ்வந்தஸ்திலே சிருட்டிக்கப்பட்ட மனிதனே எனில் மோக்ஷத்திலே சருவேசுரனை முகமுகமாய்த் தரிசிக்கவும் அவரோடு கூட இருந்து பேரின்பபாக்கியத்தை அநுபவிக்கவும் நியமிக்கப்பட்டவனாயிருப்பான். சருவேசுரன் மனிதனைச் சுபாவமான அந்தஸ்திற்றான் உண்டாக்கிவைக்கவும், அவனோர் புத்தியுள்ள சிருட்டியாகையால் அவனுடைய சுபாவத்தினிமித்தம் அவனுக்கு அகத்தியமாய்க் கொடுக்கவேண்டியவைகளை மாத்திரம் கொடுக்கவுங் கூடியவராயிருந்தாலும், அவ்வாறு செய்யாமல், சுபாவத்திற்கு மேலான அந்தஸ்திலே அவனைச் சிருட்டித்துவைக்கத் திருவுளமானார்.

147. ஆதாமும் ஏவாளும் சுபாவத்திற்கு மேலான பரிசுத்த அந்தஸ்திற்றான் சிருட்டிக்கப்பட்டிருந்தார்களென்பது விசுவாச சத்தியமாம். அவர்கள் இந்தப் பாக்கியமான அந்தஸ்திற்கு உரிய மேலான சுதந்தரங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தார்கள் என்று வேதநூல்களும் பரம்பரையும் திருச்சபைப் போதகமும் அத்தாட்சி பகருகின்றன. 1-வது, அவர்களுடைய புத்தியானது அறியாமைஎன்னும் அந்தகாரம்நீங்கித் தெளிந்த அறிவால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தங்கள் புத்தி கொள்ளக்கூடியவைகளும், தங்கள் அந்தஸ்துக்கு ஏற்றவைகளுமான உலக அறிவுகளையும் ஞான அறிவுகளையும் அவர்கள் பெற்றிருந்தார்கள். 2-வது, அவர்களுடைய ஆத்துமமானது பரிசுத்தத்தினாலும் இஷ்டப்பிரசாதத்தினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. 3-வது, ஆசாபாசத்தை அடக்கி ஆளுவதற்குவேண்டிய புண்ணியத்தால் அலங்கரிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் நல்லவர்களாயிருந்தார்கள். நன்மைக்குச் சார்புள்ளவர்களாயும் தீமைக்குச் சார்பில்லாதவர்களாயும் விளங்கினார்கள். 4-வது, அவர்கள் மரணத்துக்காவது வேறெவ்வித நிர்ப்பாக்கியங்களுக்காவது ஏதுவாக்கப்பட்டவர்களாயிருக்கவில்லை. ஏனெனில், வேத வாக்கியத்தில் (ரோ. 5-ம் அதி.) சொல்லியிருக்கிற பிரகாரம், மரணமானது பாவத்தினிமித்தமே மனிதருள் நுழைந்தது. அவர்கள் துக்கம், பிணி, பலவீனம், காலக்கொடுமை முதலிய வாதைகளுக்கு எட்டாதவர்களாயிருந்தார்கள். கெடுதலில்லாத பாக்கியமே அவர்களுடைய பங்கு. அவர்கள் தங்கள் சிருட்டிகரைச் சிநேகித்துக்கொண்டிருந்தார்கள். சிருட்டிகரும் அவர்களைச் சிநேகித்துக்கொண்டிருந்தார். 5-வது, அவர்கள் சருவேசுரனை முகமுகமாய்த் தரிசிக்கும் மகிமைப் பிரதாபத்தின் வீடாகிய மோக்ஷத்தில் நித்திய பேரின்பபாக்கியத்துக்கு நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போம் என்று அறிந்திருக்கிறோமென்று அர்ச். அருளப்பர் 1-ம் நிருபம் 3-ம் அதிகாரத்திற் சொல்லியிருக்கிறதைக் கண்டுகொள்க. ஆதலால் நம்முடைய ஆதித்தாய் தந்தையானவர்கள் இவ்வுலகத்தில் இன்பசுகத்தோடு சிலகாலம் சீவித்தபின்பு மரணமடையாமல் முத்தி அடைந்து அங்கே பேரின்பத்தில் வாழவேண்டியவர்களாகச் சிருட்டிக்கப்பட்டிருந்தார்கள்.



148. ஆதாமும் ஏவாளும் சிருட்டிக்கப்பட்டபோது பரதீசு நந்தாவனத்திலே குடியிருத்தப்பட்டார்கள். பரதீசு நந்தாவனமானது, நம்முடைய ஆதித்தாய் தந்தையருக்குப் பிரயோசனமும் இன்பமுமாயிருக்கும்படி சருவேசுரன் சகலவித விருட்சங்களாலும் மலர்ச் செடிகொடிகளாலும் அலங்கரித்து உண்டாக்கிவைத்த ஓர் தோட்டமாம். பரதீசு நந்தாவனத்தைக் காவல்செய்தலும் அதைத் திருத்துதலுமே அவர்களுக்கிருந்த ஒரேயொரு அலுவலாம்.

சிருட்டிகர் தாமே அவர்களுக்கு இவ்வலுவலைக் கற்பித்தருளினார். ஆயினும் இவ்வலுவலானது அவர்களுக்குக் கஸ்தி ஆயாசங்களுக்கல்ல இன்பமான காலப்போக்குக்கே ஓர் ஏதுவாயிருந்தது.

# 9-ம் அதிகாரம்

## மனிதனுடைய கேடும், சென்ம பாவமும், இரட்சகரைப்பற்றிய வாக்குத்தத்தமும்

## 1-ம் பிரிவு

### மனிதனுடைய கேடு

1-வது, அக்கேட்டின் வரலாறு. 2-வது அதனால் விளைந்தபயன்கள்.

149. **1-வது, மனிதனுடைய கேட்டின்வரலாறு.** சருவேசுரன் மனிதனுக்கு இம்மையில் சுகபாக்கியத்தையும் மறுமையில் மகிமைப்பிரதாபத்தையும் நிரூபித்தபோது, நம்முடைய ஆதிபிதா மாதாக்கள் தங்கள் மனச் சுதந்தரத்தை நல்வழியில் நிறுத்தி தமக்கு எல்லாவற்றிலும் கீழ்ப்படிவதினால் மாத்திரமே தங்கள் பரிசுத்த அந்தஸ்தில் நிலைபெற்று மோக்ஷபேரின்பத்தைச் சுதந்தரித்துக்கொள்ள வேண்டும் என்று சித்தமாயிருந்தார். ஆதலால், தாமே அவர்களுக்கு ஏகாதி கர்த்தர் என்றதைக் காண்பித்து, அவர்களுடைய கீழ்ப்படிதல் விளங்கும்படியாக ஓர் எளிதான கற்பனையை அவர்களுக்குக்கொடுக்கத் திருவுளமானார்.

நந்தாவனத்தின் மத்தியில் மற்றவைகளிலும் பார்க்க விசேஷம் பெற்ற இரண்டு விருட்சங்கள் நின்றன. அவற்றுள் ஒன்றுக்குச் சீவியவிருட்சம் என்று பெயர். ஏனெனில், அதின் கனியானது, தன்னை உண்பவர்களுக்குச் சாவுவராமற்காக்கத்தக்க சத்துவமுடையதாயிருந்தது. மற்றதற்கு நன்மை தீமை அறியும் விருட்சம் என்று பெயர். ஏனெனில், இதின் கனியை உண்ணாமல்விடுவதினாலேயே ஆதாமும் ஏவாளும் நன்மையில் நிலைகொள்ளவும் தீமையினின்று விலகவும் கூடியவர்களாயிருந்தார்கள். சருவேசுரன் மற்றெல்லா மரங்களின் கனிகளையும் உண்ணலாம் என்று ஆதாம் ஏவாளுக்கு உத்தரவுபண்ணியபோதே நன்மை தீமையை அறியும் மரத்தின் கனியை உண்டாற் சாவுவரும் என்று அவர்



களுக்குத் தெரிவித்து, அதை ஒருபோதும் உண்ணவேண்டாம் என்று விலக்கி, இவ்வாறே அவர்களையும் அவர்களுடைய சந்ததியாரையும் பரிசுத்தமும் பாக்கியமுமான அந்தஸ்தில் நிலைநிறுத்துமுன் அவர்களுடைய கீழ்ப்படிதலைப் பரீட்சிக்கத் திருவுளமானார். மனுக்குலத்திற்கு ஆதிபிதாவாகிய ஆதாம் ஆனவர் சருவேசுரனுடைய கற்பனையை அநுசரித்தால் அவர் சந்ததியாராகிய சகல மனிதரும் அவருக்கு நியமிக்கப்பட்டிருந்த சுபாவ நன்மைகளோடும் ஞான நன்மைகளோடும் பிறக்கவேண்டியவர்களாயிருந்தார்கள். அவர் கற்பனையை மீறினாலோ, அவருடைய சந்ததியாராகிய சகல மனிதரும் அவருடைய பாவத்துக்கும் ஆக்கினைக்கும் பங்காளிகளாய்ப் பிறக்கவேண்டியவர்களாயிருந்தார்கள். அப்படியிருக்க, ஆதாமும் ஏவாளும் தேவகற்பனையை அநுசரித்து நடந்தார்களோவெனில் இல்லை. அவர்கள், அக்கிரமமாய் அதை மீறிப்போட்டார்கள். ஆதலால், இம்மைப் பாக்கியமும் மறுமைப் பேரின்ப சுதந்தரங்களும் ஆகிய எல்லாவற்றையும் தாங்களும் இழந்துவிட்டுத் தங்கள் சந்ததியாராகிய சகல மனிதரும் இழந்துபோகச் செய்தார்கள்.

150. ஆதித்தாய்தந்தையர் சருவேசுரனுடைய கற்பனையை மீறிக் கெட்டுப்போன சங்கதி ஆதியாகமத்து மூன்றாம் அதிகாரத்தில் விரிவாய் விவரிக்கப்பட்டிருக்கின்றது. அதெவ்வாறெனில், கெட்டுப்போன தூதர்களாகிய பிசாசுகளுக்குள் ஒன்று, மனுக்குலத்தின் தலைவர்களுக்குக் கிடைத்திருந்த பாக்கியத்தின்மேல் அழுக்காறு கொண்டு அவர்களைக் கெடுக்கத் தேடிற்று. அது சகல சீவசெந்துகளைப்பார்க்கிலும் கபடமுள்ளதாகிய சர்ப்பத்தின் உருவத்தை அணிந்து ஆதிஸ்திரியை நோக்கி: நீங்கள் இந்தத் தோட்டத்திலுள்ள எல்லா விருட்சங்களின் கனிகளையும் தின்னவேண்டாம் என்று சருவேசுரன் ஏன் விலக்கியிருக்கிறார் என, ஸ்திரி சொன்னதாவது: தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளை நாங்கள் புசிக்கிறோம். தோட்டத்தின் மத்தியிலுள்ள விருட்சத்தின் கனியைக் குறித்தோ: நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவேண்டாம், அதைத் தொடவும் வேண்டாம் என்று கடவுள் எங்களுக்குச் சொல்லியிருக்கிறாரென்றாள். அதற்குச் சர்ப்பமானது: அப்படியல்ல, நீங்கள் சாகமாட்டீர்கள். நீங்கள் அதில் புசிக்கும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமைகளை அறிந்து கடவுளைப்போலிருப்பீர்கள் என்றும் சருவேசுரனுக்குத் தெரியுமென்று உத்தாரஞ் சொல்லிற்று. இவ்வார்த்தைகளால் மயங்கிப்போன ஏவாள் அவ்விருட்சத்தின் கனி வாய்க்கு உருசியும் கண்ணுக்கு அலங்காரமுமானதென்று கண்டு

அதிலே ஆய்ந்து தானும் புசித்தாள்; தன் கணவனுக்குங்கொடுக்க அவனும் புசித்தான். இவ்வாறே ஆதாமும் ஏவாளும் சருவேசுரனுடைய கற்பனையை மீறினதினால் எல்லாப் பாக்கியங்களையும் தாங்களுமிழந்தார்கள்; தங்கள் சந்ததியாரையும் இழக்கச்செய்தார்கள். அன்றியும் எல்லாவித நிர்ப்பாக்கியங்களையும் தங்கள்மேலும் தங்கள் சந்ததியார்மேலும் வருவித்துக்கொண்டார்கள்.

**151. ஆதி மனிதனுடைய கேட்டினால் விளைந்த பயன்கள்.** எங்கள் ஆதிப் பிதா மாதா தேவ கற்பனையை மீறிப் பாவத்தைக் கட்டிக்கொண்டவுடனே, அப்பாவமானது தங்களை எவ்வளவு கேடுகளுக்குள்ளாக்கிவிட்டதென்பதை உணர்ந்துகொள்வோரானார்கள். வேதவாக்கியத்திற் கூறியிருக்கிறபடி, கொஞ்சநேரத்துக்குள்ளே அத்தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்த சருவேசுரனுடைய குரற்சத்தம் கேட்கப்பட்டது. அப்போது அவர்கள் கர்த்தருடைய சன்னிதானத்துக்குத் தப்பிக்கொள்ளும்படி தோட்டத்திலுள்ள விருக்ஷங்களின் நடுவே ஒளித்துக்கொண்டார்கள். ஆனால், அவர் ஆதாமைக்கூப்பிட்டு நீ எங்கே என்றார். அதற்கு அவர் நான் நிர்வாணியானபடியால் இத்தோட்டத்திலே தேவரீருடைய சத்தம் என்காதில் விழுந்தபோது பயமுற்று ஒளித்துக்கொண்டேன் என்றார். அப்போது சருவேசுரன்: நீ நிர்வாணியென்று உனக்குத்தெரிவித்தது யார்? புசிக்கவேண்டாமென்று நான் விலக்கினமரத்தின் கனியைப் புசித்தாயா? என்றார். அதற்கு ஆதாம்: எனக்குத் துணைவியாகத் தேவரீர் தந்த பெண்ணானவள் விருக்ஷத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்றார். அப்போது சருவேசுரன் ஸ்திரியைப்பார்த்து: நீ ஏன் இதைச் செய்தாய் என, அவள்: சர்ப்பம் என்னை அனுப்பினதினால் புசித்துவிட்டேன் என்றாள். இதைக்கேட்ட கர்த்தராகிய சருவேசுரன் சர்ப்பத்தைப்பார்த்து வசனித்ததாவது: நீ இதைச் செய்தபடியால் எல்லா மிருகங்களிலும் சபிக்கப்பட்டதாயிருக்கிறாய். நீ உன் வயிற்றால் நகர்ந்து உன் ஆயுள் முழுதும் மண்ணைப் புசிப்பாய். உனக்கும் ஸ்திரிக்கும் உன் வித்திற்கும் அவள் வித்திற்குமிடையே பகையை உண்டாக்குவோம். அவள் உன் தலையை நசுக்குவாள்.* நீயோ அவளுடைய குதிக்காலுக்குத் தீங்கு

* மூலபாஷையின்படி "அது உன் தலையை நசுக்கும்" என்றிருக்க வேண்டுமென்பார்கள் ஆன்றோர். ஆயினும், இங்கு குறித்த ஸ்திரியான தேவதாயார் தாமாயல்ல தமது வித்தாகிய தேவசுதனின் அருளாலேயே பிசாசின் தலையை நசுக்குவாராயினர் என்பதுதான் வேத போதனையாதலால் இருவித மொழிபெயர்ப்பும் பொருந்தும்.



செய்யத் தேடுவாய் என்றருளிச்செய்தபின், ஸ்திரியை நோக்கி, நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வருத்தத்தை மிகவும் பெருகப் பண்ணுவோம், வேதனையோடு பிள்ளைகளைப் பெறுவாய். உன் புருஷனுக்குக் கீழ்ப்படிந்திருப்பாய். அவனே உன்னை ஆளுவான் என்றார். பின்பு அவர் ஆதாமுக்குச் சொன்னதாவது: நீ உன் பெண்சாதியின் சொல்லுக்குச் செவிகொடுத்து நான் விலக்கின கனியை உண்டபடியால், பூமி உன்னிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும். நீ உயிரோடிருக்கிற நாளெல்லாம் வருத்தத்தோடு அதன் பலனைப் புசிப்பாய். அது முள்ளையும் குருக்குத்தியையும் பிறப்பிக்கும். நீ பூமிக்குட் திரும்புமட்டும் உன் நெற்றி வேர்வையால் அப்பம் புசிக்கக்கடவாய். நீ மண்ணால் உண்டாக்கப்பட்டபடியால் மண்ணாயிருக்கிறாய். ஆதலால் மீளவும் மண்ணாகவே மாறிப் போவாய் என்றார். (ஆதியாக. 3-ம் அதி.) இந்தப் பயங்கரமான தீர்வையைச் சருவேசுரன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் இட்டபின்பு இருவரையும் பரதீசு நந்தாவனத்திலிருந்து வெளியே துரத்தி, அவர்கள் மீளவும் உள்ளேசென்று சீவ விருக்ஷத்தின் கனியைப் புசியாதபடி தடைசெய்யும்பொருட்டு ஒரு சம்மனசானவரைக் கையிலேந்திய அக்கினிப்பட்டயத்தோடு நந்தாவனத்து வாசலைக் காவல்செய்ய வைத்தருளினார்.

இவைகளே நம்முடைய ஆதிப் பிதாமாதாக்களுக்கு தேவ கற்பனையை மீறினதினால் விளைந்த கேடுகளாம். அவர்கள் பாவத்தைக் கட்டிக்கொண்ட க்ஷணத்திற்றானே தங்கள் பரிசுத்த அந்தஸ்தையும் சருவேசுரன் தங்களுக்களித்திருந்த மேலான சகல நலங்களையும் இழந்துவிட்டார்கள். அவர்களுடைய புத்தி ஞான அந்தகாரத்தால் மங்கிப்போயிற்று. தங்கள் ஆத்துமத்தில் விளங்கின தேவசாயலைப் பாவத்தால் அசுத்தப்படுத்திக்கொண்டதினால், தேவனுடைய அன்பையும் இழந்து அவருடைய கோபம் பகை பழிவாங்கல் முதலான ஆக்கினைகளுக்கும் ஏதுவானார்கள். அவர்களுடைய சித்தம் நன்னெறியினின்றும் வழுவிப்போயிற்று. ஆசாபாசங்களோ, புத்தியை அந்தகாரப்படுத்தி விரோதித்தெழும்பத் தலைப்பட்டன. வெகுவாய்க் கிளைத்தெழுந்த துர்ப்பற்றுதல்களால் அவர்கள் தீமைக்கே எப்போதும் சார்புடையவர்களானார்கள். பாவத்தாற் சருவேசுரனைவிட்டுப் பிரிந்ததினால் மோக்ஷ உரிமையை இழந்து நரகாக்கினைக்கே பாத்திரவான்களானார்கள். அவர்களுடைய சரீரமும் சகலவித துன்பங்களுக்கும் பிணிகளுக்கும் மரணத்திற்கும் ஏதுவாயிற்று. தங்கள் அந்தியகாலமட்டும் பிரயாசங்கள் துன்பங்களில் வாழ்நாட்கழித்துச் சகலவித நிர்ப்பாக்கியங்களையும் அனுபவிக்கவேண்டியவர்களானார்கள்.

# 2-ம் பிரிவு

## சேன்மபாவத்தின்பேரில்

**1-வது, சென்மபாவம் உண்டென்பது. 2-வது, சென்மபாவத்தினால் விளைந்தபயன்கள். 3-வது, சென்மபாவத்தோடு மாத்திரம் மரிக்கிறவர்களுக்குச் சம்பவிக்கிறதென்ன ?**

152. (I) **சேன்மபாவம் உண்டேன்பது.** ஆதாமின் கீழ்ப்படியாமையானது அவர் சந்தானத்திற்குங் கேட்டை விளைவித்ததென்பதும், அவருக்குச் சருவேசுரன் தயவாய் அளித்திருந்த ஆதி இஷ்டப்பிரசாத அந்தஸ்தையும் பரிசுத்தத்தையும் தாமுமிழந்து நமக்கும் இல்லாமற்பண்ணினாரென்பதும், கீழ்ப்படியாமை என்னும் பாவத்தால் கறைப்பட்டவராகிய அவர் சரீரத்தின் ஆக்கினைகளையும் மரணத்தையுமேயன்றி, ஆத்துமத்தின் மரணமாகிய பாவத்தையும் சகல மனிதசென்மத்திற்கும் வருவித்தாரென்பதும் விசுவாச சத்தியமாக திரேந்து சங்கத்து ஐந்தாங் கூட்டத்திற் தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானத்தால் அத்திருச்சங்கமானது சென்மபாவம் உண்டென்பதை உறுதிப்படுத்தியும், சென்மபாவத்தைக் குறித்துத் திருச்சபை போதிக்கிறதென்னவென்பதை வெளிப்படுத்தியு மிருக்கின்றது. ஆதலால், ஒவ்வொருவனும் தன் தன் தாய் உதரத்தில் உற்பவமாகிச் சரீரத்தோடு ஆத்துமமுங்கூடி உயிர்பெறும் அக்ஷணத்திற்றானே, சருவேசுரனுடைய விசேஷ அருளால் காப்பாற்றப்பட்டாலன்றி, ஆதிப் பிதாமாதா தங்கள் சந்ததியாருக்கு வருவித்த பாவத்தாற் கறைப்பட்டவனாயிருக்கிறானென்பதும், நம்முடைய ஆத்துமம் தன் இருத்தலைப் பெற்றுக்கொண்ட முதல்க்ஷணத்திற்றானே சென்மபாவத்தின் கறையை மெய்யாகவே தரித்துக்கொள்ளுகின்றதென்பதும், அப்பாவத்திற்கு வரவேண்டிய ஆக்கினைகளை அநுபவிக்க நியமிக்கப்பட்டிருக்கிறதென்பதும் விசுவாச சத்தியமாம். ஆதிப்பிதாவிடத்தினின்று நமக்குவரும் இந்தப் பாவத்துக்குச் சென்மபாவமென்று பெயர். ஏனெனில், நாம் அவர்களுடைய பிள்ளைகளாயிருப்பதினால், நாம் தாய்வயிற்றில் உற்பவமாகும்போது தானே அப்பாவம் நம்மிடத்திலுண்டாகி நாம் அதினாற் கறைப்பட்டவர்களாகிறோம். சென்மபாவம் எல்லா மனிதரிடத்திலுமுண்டாகி எல்லாமனிதரையும் மாசுபடுத்தி எல்லா மனிதரையும் தேவ கோபத்துக்குள்ளானவர்களாக்கிவிடுகின்றது. ஏனெனில், போசுவே என்னும் மகா பண்டிதர் கூறியபடி, எல்லா மனிதரும் தங்களாத்துமத்தின்மட்டிலும் சரீரத்தின்மட்டிலும் ஒரேயொரு மனிதனுடைய சித்தத்திலும் சுயாதீனத்திலும் தங்கியிருக்கவேண்டுமென்று சருவேசுரன் தமது மனோவாக்குக் கெட்டாத பரம ஞானத்தால் நிருபித்தருளினார்.



153. சென்மபாவம் உண்டென்னும் சத்தியம் வேதாகமத்தில் தெளிவாய் விளக்கியிருக்கிறது. எவ்வாறெனில், அசுத்தமான இரத்தத்தினின்று உற்பத்தியான மனிதனைச் சுத்தமாக்கக் கூடியவர் நீரேயன்றி வேறியார் என்று யோபு ஆகமத்துப் பதினாலாம் அதிகாரத்திலும் ; இதோ அக்கிரமத்தில் உருவானேன், என் தாய் பாவத்திலே என்னைக் கர்ப்பந்தரித்தாள் என்று சங்கீதாகமத்து ஐம்பதாம் சங்கீதத்திலும் ; ஒரேமனிதனால் பாவமும் பாவத்தினால் மரணமும் உலகத்தில் பிரவேசித்தது, அவ்வண்ணமே ஒரே மனிதனால் எல்லாரும் பாவிகளானதினால் அவன் மூலமாய் மரணமும் எல்லா மனிதருக்கும் வந்தது என்று ரோமர் நிருபத்து ஐந்தாமதிகாரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

இது எல்லாக்காலங்களிலும் போதிக்கப்பட்ட சத்தியமாம். இது கிறீஸ்துவேதத்திற்கு மாத்திரமன்றி யூத வேதத்திற்கும் இயல்வேதமாகிய ஆதிவேதத்திற்குமே ஓர் மூலசத்தியமாகக் கைக்கொள்ளப்பட்டுவந்தது. எப்படியெனில், இயல்வேதமும் வரிவேதமும் வழங்கிக்கொண்டுவந்த காலங்களில் மனிதர் மேசியாவைப் பற்றிய வாக்குத்தத்தத்தை அறிந்தும் நம்பியும் அதனை வேதவழிபாட்டின் விசேஷபொருளாகக் கைக்கொண்டும் வந்தவிடத்து, அவரை ஒரு இரக்ஷகராகவே விரும்பிக் காத்துக்கொண்டிருந்தார்கள். ஆதலால், அம்மேசியாவானவர் மனுக்குலத்தின் ஆதிப் பிதா மாதாக்களால் செய்யப்பட்டு அவர்கள் மூலமாய் அவர்கள் சந்ததியாரிடத்திலுமுண்டாயிருந்த பாவத்தின் அடிமைத்தனத்திலும் அதின் கேடுகளிலுமிருந்து உலகத்தை மீட்டருளுவாரென்பதே எல்லாமனிதரிடத்திலுமிருந்த பொதுவான நம்பிக்கையாம்.

திருச்சபையும் இதை எப்போதும் தன் விசுவாசத்திற்கும் போதகத்திற்கும் ஓர் அஸ்திவாரமாக வைத்துக்கொண்டது. அது இச்சத்தியத்தைத் தன் போதனைகளுக்கு ஓர் திறவுகோலாக எண்ணிக்கொண்டமையால், இதை மறுக்கவாவது இதன்மேற் சந்தேகங்கொள்ளவாவது துணிந்த அனைவரையும் எப்போதும் கண்டித்துப் பலத்த நியாயங்களாற் செயித்துப் பின்வாங்கியோடப் பண்ணிற்று. சென்மபாவத்தினிமித்தமே திருச்சபை 1-வது, இரக்ஷக

ராகிய யேசுக்கிறீஸ்து இல்லாமலும் அவருடைய வரப்பிரசாதம் இன்றியும் மனிதனுக்கு ஈடேற்றம் ஒருகாலுமில்லையென்று எப்போதும் விசுவசித்தும் படிப்பித்துங்கொண்டுவந்தது. 2-வது, சிறுகுழந்தைகளுக்கும் ஞானஸ்நானம் அவசியம் என்று தீர்மானித்துக்கொண்டது. 3-வது, குழந்தைகள் பிறக்கும்போது பாவத்துக்கும் பிசாசுக்கும் அடிமைகளாயிருப்பதைப்பற்றியே ஞானஸ்நானச் சடங்கில் பல உச்சாடண செபங்களையும் கற்பித்திருக்கின்றது. ஆதிமனிதனாற் செய்யப்பட்ட ஒரு பாவமானது தேவசாபத்தோடு அவன் சந்ததியார் எல்லாரிடத்திலும் உண்டாயிற்றென்னும் விசுவாசம் பூர்வசாதிகளாகிய கிரேக்கர், எகிப்தியர், பேர்சியர், இந்தியர், சீனர் முதலான எல்லாச்சாதிகளிடத்திலும் இருந்ததென்பதும் நிச்சயமே. சென்மபாவம் உண்டென்னும் சத்தியம் உலகத்திற் சாதாரணமாய் அங்கீகரிக்கப்பட்டுள்ள சத்தியமேயென்றபடி பூர்வ அஞ்ஞான தத்துவசாஸ்திரிகளும் கவிஞர்களும் ஆங்காங்கு பேசியிருக்கிறார்கள். பிளேற்றோ என்னுந் தத்துவசாஸ்திரி தாமியற்றிய அநேகநூல்களிற் சென்மபாவத்தைப்பற்றிப் பேசியிருக்கிறார். வீர்ஜில் என்னும் பேர்போன இலத்தீன் புலவரும் விரகறியுமுன் இறந்தபாலர்கள் கன்மபாவமில்லாதவர்களாயினும் நரகத்திலே விழுகிறார்களென்று தமது செய்யுளிற் காண்பித்திருக்கிறார். ஆதித் தவறுதல் ஒன்று நடந்தது என்பதையும், அது எல்லா மனிதரிடத்திலும் உண்டாகின்றதென்பதையும்பற்றிய விசுவாசமானது சகல சாதியாருடையவும் வைதீக போதனைகளுக்கெல்லாம் ஓர் அஸ்திவாரமாயிருக்கின்றதென்று வொல்த்தேர் என்னும் நிரீச்சுரவாதியும் உடன்பட்டுக் கூறியிருக்கிறான்.

154. சென்மபாவம் மானிடபுத்திக்கெட்டாத ஓர் இரகசியமென்பது நிச்சயமாம். ஆதலால், நாமதை முற்றாய் உணர்ந்துகொள்ளுதல் கூடாது. மனிதனுடைய புத்தி மிகச் சிறிதாயிருப்பதால், அது சருவேசுரனுடைய நீதியினுரிமைகளை அளவிட்டறியவும் அவருடைய திருச்செயல்களுக்குரிய நியாயங்களைக் கண்டுபிடிக்கவுங்கூடாதென்பது பிரத்தியக்ஷம். தவறாத சத்தியமும் தாழாத நீதியுமாய் விளங்கும் பரம்பொருள்தாமே மனிதனுடைய பாவத்தால் மற்றெல்லா மனிதரும் நித்தியகேட்டுக்குள்ளானார்களென்னுஞ் சம்பவத்தை நமக்கு வெளிப்படுத்தியருளினாரென்பது நிச்சயமாகையால், நாம் அவ்வெளிப்படுத்தலை அறிந்தமாத்திரத்தில் சந்தேக விபரீதமின்றி உறுதியாய் விசுவசித்துக்கொள்ளவேண்டும். ஆயினும், ஆதி மனிதன் செய்த பாவம் அவன் சந்ததியாருக்கும் உண்டாவது எவ்வாறு என்பது உலக நீதிப்பிரமாணத்



தை உற்றுநோக்குபவர்களுக்குச் சற்றே தெளிவாகலாம். எவ்வாறெனில், நீதிபதியிட்ட தீர்வையால் பொருளெல்லாம் பறியுண்டு பட்டமும் நீக்கப்பட்டவனாகிய ஒருபிரபுவானவன், தானிழந்துவிட்ட ஐசுவரியங்களையும் பிரபுத்துவ பட்டங்களையும் தன் புத்திர சந்தானங்களுக்கும் இல்லாமற் போகப் பண்ணினவனேயாம். அவ்வண்ணமே, பாவத்தாற் குற்றவாளியாகி அப்பாவத்திற்கு ஆக்கினையாக தன் மேலான சுதந்தரங்களையெல்லாம் இழந்துபோன ஆதாமின் புத்திரசந்தானமாகிய மனிதர் எல்லாரும் அவருக்கு நேரிட்ட சாபத்தீர்வைக்குள்ளாயிருப்பதும், அவருடைய பாவத்தால் விளைந்த கேடுகளை அநுபவிப்பதும் நீதியேயாமென்பது தானாய் விளங்கும். ஆதாமுடைய சுபாவம் பாவத்தாற் தேவசாபத்துக்குள்ளாகிப் பழுதடைந்ததாயிருக்கையில் அவர்வழியாய் நமக்கு வருவதாகிய அச் சுபாவமும் பழுதடைந்திருக்குமென்பது சொல்லவும்வேண்டுமோ? அன்றியும், சருவேசுரன் தமது வரப்பிரசாதத்தை எவருக்காயினும் அளிக்கக் கடமைபூண்டவர் அல்ல. அவர் தமது வரப்பிரசாதத்தை யாதொரு சங்கேதப்படி மாத்திரம் கொடுக்க அவருக்குப் பூரண அதிகாரம் உண்டென்பதும் பிரத்தியக்ஷமேயாம். ஆதலால், அவர் பாவியாகிய ஆதாமின் சந்ததியாராகிய மனிதருக்குச் சுபாவத்திற்குமேலான கொடையையில்லாமற்போகச்செய்தது தேவநீதிக்குக் குறைவல்ல. இனி, சென்மபாவத்தை அதின்மட்டிலும் அதினால்விளையுங் காரியங்களின்மட்டிலும் யோசித்துப்பார்க்குமளவில், சுபாவத்திற்கு மேலான வரங்களைப் போக்கடிப்பதிலேயே அது விசேஷமாய் அடங்கியிருக்கின்றதென்று தெளிந்துகொள்ளவேண்டும்.

சென்மபாவமானது விளங்கிக்கொள்வதற்கரிதாயிருப்பினும், அது இல்லையென்று வைத்துக்கொண்டு மனிதனுடைய ஸ்திதிக்கு நியாயஞ்சொல்லுவது இன்னும் அரிதாகின்றது. சென்மபாவம் இல்லையென்றால், மனிதனிடத்தில் காணப்படும் நன்மையுந் தீமையும், உயர்வுந் தாழ்வும், அறிவும் அறியாமையும், இன்ப ஆசையும் துன்பநுகர்ச்சியுமாகிய விரோதங்கள் ஏககாலத்தில் உண்டாயிருப்பதற்கு நியாயங்கூறுவதெப்படி? மேலும், அவன் தான் நன்மையெனக்கண்டு விரும்பினதைச் செய்யாதுவிடுவதற்கும், தீமையெனக்கண்டு வெறுத்ததைச் செய்வதற்கும் காரணமென்ன? சென்மபாவம் உண்டென்னும் விசுவாசமொன்றே இவ்விரோதங்களுக்கு நியாயங்காண்பிக்க வல்லதாயிருக்கின்றது. இவ்விசுவாசம், மனிதனிடத்தில் இன்னும் விளங்குகின்றவைகளாகிய அறிவும் நற்குணங்களும் பூர்வ அந்தஸ்திற் சருவேசுரன் அவனுக்களித்த பூரண

அறிவு நற்குணங்களின் சேடங்களேயென்றும், அறியாமையும் துர்க் குணங்களும் பாவத்தால் உண்டான கேடுகளேயென்றும் நமக்குத் தெரிவிக்கின்றது.

**155. (II) சென்மபாவத்தால் விளைந்த பயன்கள்.** சென்மபாவமானது ஆதித்தாய் தகப்பனாற் செய்யப்பட்டு அவர்களுடைய சந்ததியார் எல்லாரிடத்திலும் உண்டாகின்றதாயிருப்பதால் அது அவர்கள் தேவகற்பனையை மீறினபோது அவர்களிடத்தில் விளைவித்த கேடுகள் அனைத்தையும் நம்மிடத்திலும் விளைவிக்கின்றது. இக்கேடுகள் இம்மை மறுமைச் சீவியங்களிரண்டையும் அடுத்தவைகளாம். இம்மையில் அவைகள் ஆத்துமமும் சரீரமுமாகிய இரண்டையும் பாதிக்கும். சரீரமானது கஸ்தி துன்பம் பிணி மரணங்களால் வருந்தும். ஆத்துமமோ ஆதிப் பரிசுத்தத்தையும் மோக்ஷபாக்கியத்தையுமேயன்றி சுபாவத்திற்கு மேலான வரங்களையுமிழந்து அறியாமைக்கும் ஆசாபாசத்திற்கும் இரையாகி வருந்தும். அறியாமையால் நாம் சருவேசுரனை அவருடைய பரம இலக்ஷணங்களை தெளிவாய் விளங்கிக்கொள்ளவும், நம்மை நம்முடைய கடமைகளை நமது கடைசிமுடிவை அறிந்துகொள்ளவுங் கூடாதவர்களாகின்றோம். ஆசாபாசமோ, சித்தத்தை மிகவும் பெலவீனப்படுத்திப்போடுகின்றமையால், இது தன் துர்ச்சார்புகளுக்கே அடிமையாகி நன்மையைச் செய்யவும் தீமையை விலக்கவும் தைரியமற்றதாகின்றது. ஆத்தும ஈடேற்றத்திற்குத் தடையாயிருக்கின்ற விக்கினங்களை மேற்கொள்ளும்பொருட்டு தேவவரப்பிரசாத உதவி நமது சித்தத்துக்கு மிகவும் வேண்டப்படும்.

**156. (III) சென்மபாவத்தோடு மாத்திரம் சாகிறவர்களுக்குச் சம்பவிக்கிறதென்ன?** சலத்தினாலும் இஸ்பிரீத்து சாந்துவினாலும் மறுபடியும் பிறவாத எவனும், மோட்ச இராச்சியத்துட் பிரவேசிக்கமாட்டான் (அர்ச். அருளப்பர் 3-ம் அதி.) என்று யேசுநாதர் திருவுளம்பற்றியிருக்கிறதின்படி, ஞானஸ்நானம் பெறுமுன் இறக்கும் குழந்தைகளும், கன்மபாவம் யாதொன்றுமில்லாமல் சென்மபாவத்தோடுமாத்திரம் சாகிறவர்களுமாகிய எல்லோரும் சருவேசுரனை முகமுகமாய் தரிசித்து அநுபவிப்பதாகிய பேரின்பத்தை அடைந்துகொள்ள மாட்டார்களென்பது விசுவாச சத்தியமாம். சென்மபாவத்தோடுமாத்திரம் சாகிறவர்கள் எல்லாம் மோக்ஷபேரின்பத்தை இழந்துபோவார்கள் என்பதையல்லாமல் வேறொன்றையும் வேதவிசுவாசமானது நமக்குத் தெரிவிக்கிறதில்லை. அர்ச். தோமாஸ் முதலான வித்தியாபாரகரோவெனில், சென்மபாவத்தோடு இறக்கிற குழந்தைகளுக்கு இந்திரிய ஆக்கினை



யென்னப்படும் நரகாக்கினை இல்லையென்றும், அவர்கள் மோக்ஷபேரின்பத்திலிருந்து நீக்கப்பட்டவர்களாயிருப்பினும் அதினால் கஸ்தி வியாகுலப்படாதிருப்பதுமன்றி, ஒருவித சுபாவமான பாக்கியத்தையும், அதாவது சருவேசுரனை சிருட்டிகர்த்தாவாக அறிந்து சிநேகிப்பதாகிய மகிழ்ச்சியையும், அநுபவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும் எண்ணுகிறார்கள்.

---

## 3-ம் பிரிவு

## இரக்ஷகரைப்பற்றிய வாக்குத்தத்தம்

1-வது, இவ்வாக்குத்தத்தத்தின் ஆரம்பம். 2-வது, இயல்வேதகாலத்தில் நடந்த பிரதான சம்பவங்கள். 3-வது மேசியாவுக்குமுன் நடந்ததாகிய வரிவேதகாலத்தின் சரித்திரம்.

**157. (I) இரக்ஷகரைப்பற்றிய வாக்குத்தத்தத்தின் ஆரம்பம்.** சருவேசுரனுக்குச் சத்துருவும் நித்திய ஆக்கினைக் கேதுவுமாய்ப்போன மனிதன், தேவ அருளையும் பாவமன்னிப்பையும் தானாய் அடைந்துகொள்ளக் கூடாதவனாயிருந்தான். அவன், தன் பாவ நிவாரணத்திற்காக சருவேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கக் கூடியதெல்லாம், அநந்த மகிமைப்பிரதாபமுள்ள சிருட்டிகருக்குத் தன் கீழ்ப்படியாமையால் விளைந்த துரோகத்தைப் பரிகரிக்கக் கூடாததாயிருந்தது. ஆதலால், தன் துரோகத்துக்கிலக்கான சருவேசுரன் தயைபுரிந்தால் மாத்திரம் தனக்கு மன்னிப்புக் கிடைக்குமென்பதே அவனுக்கிருக்கக்கூடிய ஏக நம்பிக்கையாயிற்று. கர்த்தர் ஆதிப்பிதாவின் பாவத்தால் விளைந்த நிர்ப்பாக்கிய அந்தஸ்தில் மனிதர் அனைவரையும் கைவிட்டிருந்தால் அதினால் அவருடைய தேவ இலக்ஷணங்களுக்கு ஒரு இழுக்கும் வாராது என்பது நிச்சயம். அகங்காரத்தாற் தமக்குக் கீழ்ப்படியாமல் விரோதித்தெழுந்த தூதர்களுக்கு அவர் இரக்கங் காண்பியாமல் விட்டதுபோல, மானிடசந்ததியாருக்கும் இரக்கம் காண்பியாமல், அவர்கள் தேடிக்கொண்ட நித்திய ஆக்கினைக்கே அவர்களை உள்ளாக்கிவிடக்கூடியவராயிருந்தார். ஆயினும்கெட்ட தூதர்களை தமது நீதிக்கோபாக்கினைக்கு இரையாக்கி வாதித்துக் கொண்டிருந்தவர் குற்றவாளியாகிய ஆதாம்மேலும் அவர் சந்ததியார்மேலும் கிருபைகூர்ந்து, பாவத்தால் அவர்களுக்கு விளைந்த நிர்ப்பாக்கியத்

னைப் பரிகரிப்பதற்கு மிகவும் சித்திகரமான ஒரு அவுஷதத்தை தமது ஞானமும் தயாளமுமாகிய களஞ்சியங்களினின்று தோற்றுவித்தருளினார்.

158. ஆதாம் பாவத்தைக்கட்டிக்கொண்டபின் கொஞ்சநேரத்துட்டானே சருவேசுரன் தாம் அவருக்கும் அவர் சந்ததியாருக்கும் ஆயத்தப்படுத்திய இரக்ஷணியத்தை அவர் உணர்ந்துகொள்ளும்படி செய்தருளினார். ஆதிமனுஷியை அனுப்பிக்கெடுக்கும்படி பிசாசு உதவிகொண்ட கருவியாகிய சர்ப்பத்தைச் சபித்தசமயத்தில் இந்த நரகசத்துருவின் தலையை நசுக்குபவரான அதாவது மனிதனைப் பாவத்திலும் நித்திய மரணத்திலும் நின்றிரக்ஷிப்பதினால் பிசாசின் வல்லமையையும் இராச்சியத்தையும் அழித்துத்தொலைப்பவரான ஒருவர் வேறோர் ஸ்திரீயிடத்திருந்து ஒருநாள் பிறந்து தோன்றுவார் என்று தெரிவிப்பாராயினார். இந்த உலகமீட்பர் யாரோவெனில், கன்னியுந் தாயுமாய்விளங்கும் ஒரு ஸ்திரீயிடத்திலிருந்து பிற்காலத்திற் பிறக்கவேண்டியிருந்த மேசியாவேயாம். இவ்விதமாகவே தேவவாக்குத்தத்தத்தை விளங்கிக்கொண்டவர்களாகிய நம்முடைய ஆதிப் பிதா மாதாக்கள் தங்கள் இரக்ஷணியம் சருவேசுரனால் வாக்குப்பண்ணப்பட்டவராகிய இரக்ஷகராலேயே நிறைவேறுமென்று அன்றுமுதல் நம்பிக் காத்திருக்கத் தொடங்கினார்கள். அவர்களுடைய பிற்சந்ததியாருந் தலைமுறை தலைமுறையாக இப்படியே காத்துக்கொண்டிருக்கையில், ஆதாமும் ஏவாளும் கெட்டுப்போன காலத்தின்மேல் ஆயிரக்கணக்கான வருஷங்கள் கழிந்தபின்னே அவ்வாக்குத்தத்தம் நிறைவேறலாயிற்று. கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற இத்தனைகாலந் தாமதித்ததற்கு முகாந்திரம் யாதெனில், மனிதர் பாவத்தால் தங்களுக்கு நேரிட்ட கொடிய நிர்ப்பாக்கியத்தையும், ஒரு இரக்ஷகர் தங்களுக்கு அவசியமென்பதையும், தாம் அவர்களுக்குச் செய்யும் உபகாரத்தின் பெருமையையும் நன்றாயுணர்ந்துகொள்ளவேண்டுமென்பதேயாம். அன்றியும், இத்தனை நெடுங்காலம் செல்லுமளவில் இரக்ஷகரைப்பற்றிய வாக்குத்தத்தத்தை தலைமுறை தலைமுறையாக வியாக்கியானப்படுத்தி, அது நிறைவேறுங் காலம் சமீபித்துவரவர அதை மேண்மேலும் தெளிவாய்த் தோற்றுவிக்க வேண்டுமென்பது தேவதிருவுளத்திலிருந்த மற்றொரு கருத்தென்னப்படும். அந்த வாக்குத்தத்தம் முன்பு ஆதாமால் அவர் பிள்ளைகளுக்கும், பின்பு, இவர்களாற் தங்கள் சந்ததியாருக்குந் தெரிவிக்கப்பட்டது. ஆதலால், உலகமீட்பரின் வருகைக்குமுன் சீவித்த மனிதர் வரவிருந்த இரக்ஷகரின் பெறுபேறு



களை விசுவசித்து நம்புவதாலும் தங்களுக்குத் தவறாமற்கிடைக்கும் வரப்பிரசாத உதவியைக்கொண்டு வேதப்பிரமாணத்தை அநுசரிப்பதாலும் ஆத்தும ஈடேற்றத்தை அடைந்துகொள்ளக்கூடியவர்களாயிருந்தார்கள்.

159. (II) **இயல்வேதகாலத்தில் நடந்த பிரதான சம்பவங்கள்.** ஆதாம் கெட்டதுமுதல் மேசியாவென்னும் இரட்சகரின் வருகை ஈறாக நிகழ்ந்தகாலம் இயல்வேத காலமென்றும் வரிவேதகாலமென்றும் இரண்டாய் வகுக்கப்படும். இயல்வேத காலமாவது: சுபாவ கற்பனைகளாலும் சருவேசுரனால் வெளிப்படுத்தப்பட்டுத் தலைமுறை தலைமுறையாக வாய்ப் பரம்பரையாய்த் தெரிவிக்கப்பட்டுவந்த சில திட்டமான கற்பனைகளாலும் மனிதர் ஆளப்பட்டிருந்த காலமாம். இது ஆதித்தகப்பன் பாவத்தைக் கட்டிக்கொண்டதுமுதல் சருவேசுரன் மோசேசு மூலமாகத் தமது சனத்திற்குப் பிரமாணத்தைக் கொடுத்ததீறாகவுள்ளது. ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தினின்று துரத்தப்பட்டபின் அநேக பிள்ளைகளைப்பெற்றார்கள். அவர்களுள் தலைச்சன் குமாரனாகிய காயீன், சன்மார்க்கனாயிருந்த தன் சகோதரனாகிய ஆபேல் மேல் பொறாமைகொண்டு அவரைக் கொன்றுவிட்டான். காயீனின் சந்ததியார் அவனைப்போலக் கெட்டவர்களும் அக்கிரமிகளுமாயிருந்தார்கள். ஆயினும், ஆபேலின் தம்பியாகிய சேத்துவுடைய குடும்பத்தில் நெடுங்காலமாகத் தேவ அறிவும் தேவவழிபாடுங் காப்பாற்றப்பட்டுக்கொண்டு வந்திருந்து, பின்பு சேத்துவின் சந்ததியார் காயீனின் சந்ததியாரோடு தீயொழுக்கமாய்ச் சேர்ந்துகொண்டதினால் நரசென்மம் முழுவதும் வெட்கத்திற்குரிய பாவச்சேற்றில் அமிழ்ந்திப்போயிற்று.

160. **சலப்பிரளயம்.** அப்போது சருவேசுரன் ஓர் சலப்பிரளயத்தால் மனிதரை அழித்துவிடத் தீர்மானித்தார். நோவா என்பவரும் அவர் குடும்பத்தவர்களும் சன்மார்க்கர்களாயிருந்தபடியால், சருவேசுரன் அவர்களையும், ஒவ்வொருவகை மிருகசெந்துக்களில் ஒவ்வொரு சோட்டையும் மாத்திரம் அழியாமற் காப்பாற்றத் திருவுளங்கொண்டு நோவாவைநோக்கி: நீ ஒரு பேழையை உண்டாக்கி அதிலே நீயும் உன் பெண்சாதியும் உன் பிள்ளைகளும் அவர்களுடைய பெண்களும் ஒவ்வொரு சோடு மிருகசெந்துக்களுடன் சலப்பிரளயத்தில் மாளாமற் தப்பிக்கொள்ளுங்களென்று கற்பித்தபின்பு, நாற்பது பகலும் நாற்பது இரவுமாகப் பயங்கரமான சோனாவாரியைப் பூமியின்மேற் பொழியப்பண்ணி

னார். கடல்களெல்லாம் புரண்டோடின. பூமியை மூடிக்கொண்ட சலப்பிரவாகம் அதி உன்னத மலைச்சிகரங்களையுந் தாண்டி மேலே பதினைந்து முழம் வரையிலெழுந்ததினால் பேழையிலேயிருந்த மனிதரும் மிருக சீவன்களும் நீங்க மற்றெல்லா மனிதரும் மிருகசீவன்களோடு அழிந்துபோனார்கள். சலம் வற்றிக் காய்ந்த தரை தோன்றினபின்பே நோவா பேழையினின்றும் புறப்பட்டுச் சருவேசுரனுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரமாக ஓர் பலியை ஒப்புக்கொடுத்தார்.

**161. சாதாரண அறியாமையும் விக்கிரக ஆராதனையும்.** நோவாவின் புத்திரராகிய சேம், காம், யாப்பெத் என்பவர்களாலும் அவர்களுடைய வமிசத்தாராலும் உலகத்தில் மீளவும் சனம் உண்டாயிற்று. மனிதர் தீவிரமாய்ப் பலுகி அவர்கள் தொகை மேன்மேலும் அதிகரித்துக்கொண்டு வந்தபடியால், அவர்கள் பலநாடுகளுக்கும்போய் வெவ்வேறான சாதிகளாய்ப் பிரிந்து வாசம் பண்ண வேண்டியவர்களானார்கள். அவ்வாறு பிரிந்துபோய் நெடுங்காலஞ் செல்லுமுன் தங்கள் ஆதி பரம்பரையை மறந்தும் இயல் வேதப் பிரமாணத்தைச் சட்டைபண்ணாதும் விட்டுத் தங்கள் துர் ஆசாபாசங்களையே மிகுதியும் அநுசரித்துக்கொண்டு வந்ததினால், புத்திக் குருடராகித் தங்கள் சிருட்டிகராகிய மெய்க்கடவுளைக் கைவிட்டு வெட்கத்திற்குரிய விக்கிரக ஆராதனையை அநுசரிக்கத் தலைப்பட்டார்கள். சந்திர சூரிய கிரகங்களையும், பராக்கிரம செய்கைகள் பாவாக்கிரமங்களிற் பேர்போன மனிதர்களையுமன்றி விலங்கு விருட்சங்களையும் உயர்ந்த மலைகள்சிலைகளையுமே தேவனாக வணங்கி ஆராதித்து, போசுவே என்னும் மகா பண்டிதர் கூறியவாறு, மெய்யான கடவுள் ஒருவர் நீங்க மற்றெல்லாவற்றையும் தங்களுக்குக் கடவுளாக ஏற்படுத்திக்கொண்டார்கள்.

**162. ஆபிரகாம் அழைக்கப்பட்டது.** சேமின் சந்ததியில் மெய்த்தேவ அறிவானது அழியாது போற்றப்பட்டுக்கொண்டு வந்திருந்தாலும், சருவேசுரன் விக்கிரக ஆராதனைக்கு ஓர் பலத்த அணைகட்டினாற்போல், தம்மை எப்போதும் வழிபட்டுத் தமது வாக்குத்தத்தங்களைக் காப்பாற்றி மேசியா என்னும் இரட்சகரைத் தன் கோத்திரத்தில் பிறப்பிக்கவேண்டிய ஒரு சனத்தைத் தமக்கு உண்டாக்கத் திருவுளங் கூர்ந்து, அச்சனத்துக்கு ஒரு குல முதலாக, சேமின் வமிசத்தாராகிய ஆபிரகாமைத் தெரிந்துகொள்ளச் சித்தமானார். கல்தேயாநாட்டிலுள்ள ஊர் என்னும் கிராமத்தில் ஆபிரகாம் வாசம்பண்ணிக்கொண்டிருக்கையில் சருவேசுரன் அவரை நோக்கி: நீ உன் சுயதேசத்தைவிட்டுக் கானான் தேசத்திற்



போய் வாசம்பண்ணக்கடவாயென்று கற்பித்து: நாம் அத்தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுப்போம், சகல சாதியாரும் ஆசீர்வதிக்கப்படும்படியாக விளங்கவேண்டியவரை உன் கோத்திரத்திலிருந்தே பிறக்கச்செய்வோம் என்ற வாக்கையும் அவருக்குப் பண்ணியருளினார். அப்போது, அவர், சருவேசுரனுடைய கற்பனையைச் சிரமேற்கொண்டு புறப்பட்டுப்போய் அவராற் காண்பிக்கப்பட்ட கானான் தேசத்தில் வாசம்பண்ணிக்கொண்டிருந்தார். இத்தேசமே பிற்காலத்தில் யூதேயா, பலஸ்தீனா, பரிசுத்தநாடு என்னும் பேர்களோடு வழங்கிக் கொண்டு வருகின்றது. மீளவும் சருவேசுரன் ஆபிரகாமை நோக்கி: உனக்கு ஒரு குமாரன் பிறப்பான்; அவனுடைய சந்ததியார் ஆகாயத்தின் நட்சத்திரங்களுக்கும் கடற்கரையின் மணலுக்குஞ் சரியாயிருப்பார்கள் என்று வாக்குப்பண்ணி, தமது சனத்திற்கு ஓர் விசேஷ அறிகுறியாகவுந் தாம் அவரோடும் அவர் சந்ததியோடும் செய்துகொள்ளும் உடன்படிக்கைக்கு ஓர் முத்திரையாகவும் விருத்தசேதனத்தை அநுசரிக்க வேண்டுமென்று அவருக்குக் கற்பித்தருளினார்.

163. ஆபிரகாம் தொண்ணூற்றொன்பது பிராயமும் அவருடைய பெண்ணாகிய சாராள் எண்பத்தொன்பது பிராயமுமுடையவர்களாயிருந்தார்கள். ஆயினும் சருவேசுரன் அவர்களுக்கு வாக்குப்பண்ணியிருந்ததும் அவர்கள் ஆவலோடு காத்துக்கொண்டிருந்ததுமான புத்திர பாக்கியம் அவர்களுக்கு இன்னுங் கிடைக்கவேயில்லை. அந்த வாக்கைச் சருவேசுரன் மீண்டும் அவர்களுக்குப் பண்ணியருளினார். ஆபிரகாம், என்றுந் தளராத நம்பிக்கையோடு காத்துக்கொண்டிருக்கையில் ஒரு வருஷமாகுமுன் பிள்ளைப்பாக்கியம் அவர்களுக்குக் கிடைக்கவே அவர்கள் மனோவாக்குக்கெட்டாத சந்தோஷமடைந்து பிள்ளைக்கு ஈசாக்கென்று பெயரிட்டார்கள். தேவாசீர்வாத புத்திரனும் தேவவாக்கின்படி மிகவும் விஸ்தாரமான. ஓர் சந்ததிக்கு அடியுமாய்ப் பிறந்திருந்த ஈசாக்கு விஷயமாய்ச் சருவேசுரன் ஆபிரகாமுடைய விசுவாசத்தைக் கடுமையாய்ப் பரீட்சிக்கத் திருவுளமாகி, குமாரனைத் தமக்குப் பலியாக்க வேண்டுமென்று கற்பித்தார். அதற்கு ஆபிரகாம் குறையாத நம்பிக்கையோடு கீழ்ப்படிந்து தம்முடைய குமாரனைப் பலியிட எத்தனிக்கையில் சருவேசுரனே, அவருடைய கீழ்ப்படிதலொன்றுமே போதுமென்று அங்கீகரித்து ஈசாக்கைவெட்டிப் பலியாக்க ஓங்கின கரத்தைத் தடுத்தருளினார். ஈசாக்குவுக்கு ஏசா என்றும் யாக்கோபென்றும் இரு குமாரர்களிருந்தார்கள். சருவேசுரன் தாம் ஆபிரகாமோடு செய்திருந்த உடன்படிக்கையையும் அதற்கு

அடையாளமாகிய வாக்குத்தத்தங்களையும் யாக்கோபுவிடத்திலே உறுதிப்படுத்தத் திருவுளமானார். ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு என்பவர்கள் கானான் தேசத்தில் நிலையான பதியின்றி வாசம்பண்ணி பெருந்தொகையான மந்தைகளை வளர்த்துக்கொண்டு வந்தார்கள். அவர்களுடைய முழு ஐசுவரியமும் அம்மந்தைகளே. அவர்கள் கர்த்தருக்குப் பயந்து அவருக்கு ஊழியம்பண்ணிக்கொண்டு வர அவரும் அவர்களை ஆசீர்வதித்து வந்தார். கானான் தேசத்துப் பிரதானிகளும் மற்றெல்லாரும் அவர்களைச் சங்கித்துவருவார்கள். யாக்கோபுவுக்குப் பன்னிரண்டு புத்திரரிருந்தார்கள். அவர்களே தேவசனமாகிய பன்னிரு கோத்திரங்களுக்கும் மூதாதைகள். தேவசனத்துக்கு எபிரேயர் என்றும், சருவேசுரன் யாக்கோபுவுக்குச் சூட்டிய மற்றொரு நாமமாகிய இசிறவேல் என்னும் பேரைப் பற்றி இசிறவேலர் என்றும், மேசியா பிறக்கவேண்டிய கோத்திரமாகிய யூதகோத்திரத்துத் தலைவராகிய யூதாவுடையபேரால் யூதர் என்றும் பல நாமங்கள் வழங்குகின்றன.

**164. தேவசனம் எகிப்துதேசத்தில் அடிமையாயிருந்ததும் சிறை மீட்கப்பட்டதும்.** தேவாதீனத்தால் நிகழ்ந்த பல சம்பவங்களின் பயனாக யாக்கோபு தம்முடைய குமாரனாகிய யோசேப்பு அதிபதியாயிருந்த எகிப்துதேசத்தில் தமது குடும்பத்தோடு குடியேறி, அங்கே தம் குமாரனுடைய பாதுகாப்பில் இன்பமாய் வாழ்ந்துகொண்டிருந்தார். அவர் மரித்தபின் அவருடைய குடும்பத்தார் தங்கள் முன்னோரிடத்தில் விளங்கின விசுவாசத்தைக் கைவிடாமல், கொடிய விக்கிராகாராதனையில் அமிழ்ந்திக்கிடந்த எகிப்தியர் அறியாத ஆபிரகாம் ஈசாக் யாக்கோபென்பவர்களுடைய மெய்த்தேவனுக்கே வழிபாடு செய்துகொண்டு வந்தார்கள். அவர்கள் கொஞ்சத்திற்குள்ளே ஆச்சரியமான விதமாய்ப் பலுகிப் பெருஞ்சனமாய்விட்டார்கள். ஆதியில் எகிப்துதேசத்திற் குடியேறின எபிரேயர் எழுபது பேரேயாயினும் இருநூறுவருஷங்களுக்கிடையிலே அவர்களுக்குள்ளே பெண்களும் சிறுவரும் நீங்க அறுபதினாயிரம் ஆடவர்களிருந்தார்கள். யாக்கோபுவின் சந்ததியார் இவ்வளவாய்ப் பெருகிவருவதைக்கண்டு பயந்த எகிப்தியர் அவர்களை நெருக்கிடைப்படுத்திக்கொண்டுவந்ததுமன்றி முழுதுஞ் சங்கரித்துவிடவும் தீர்மானித்திருந்தார்கள். சருவேசுரனோ தமது நேசமான சனத்தை அக்கொடிய சிறையினின்று மீட்கும் பொருட்டு மோசேசுமூலமாய் பத்து ஆச்சரியமான வாதைகளை எகிப்துதேசத்திற்கு வருவித்து, அந்நாட்டரசனாகிய பார்வோனுடைய ஆணவத்தை அடக்கவும் எகிப்தியருடைய குரூரத்தைக் கண்டிக்கவும் அவர்களுடைய விக்கிரக ஆராதனையைச் செயித்துத் தடுக்கவும் திருவுளமானார். கடைசியான பத்தாம் வாதை, மற்றெல்லாவற்றிலும் மிகப் பயங்கரமானது. சருவேசுரனுடைய தூதனானவர் ஒரு இரவிற்றானே எகிப்தியருடைய தலைப்பிள்ளைகள் எல்லாவற்றையும் சங்கரித்துவிட்டார். அப்போது, தேவ வல்லமையோடு எதிர்க்கத் தன்னால் இனிக் கூடாதென்றுகண்ட பார்வோன், இசிறவேலர் எகிப்துதேசத்தைவிட்டுப் புறப்படலாமென்று உத்தரவுபண்ணினதுமன்றித் தீவிரமாய்ப் போய்விடவேண்டுமென்றும் அவர்களை நெருக்கினான். அவர்களோ தேவகற்பனையின்படி பாஸ்காப் புருவையைச் சாப்பிட்டு அன்றிரவிற்றானே எல்லோரும், மோசேசு தங்களை நடத்த, புறப்பட்டுப் பயணமானார்கள். இப்புறப்பாடுதான், எபிரேயர், தாங்கள் எகிப்தின் அடிமைத்தனத்தினின்று மீட்கப்பட்டதிற்கு ஞாபகமாக, பாஸ்குப்பண்டிகையை பிற்காலம் எப்போதும் கொண்டாடிவருவதற்குக் குறிக்கப்பட்ட திகதியாயிற்று. இசிறவேலர் செங்கடலின் கரையை அடைந்தபோது, கடல் இரண்டாய்ப்பிரிந்து நடுவே ஒரு காய்ந்த பாதை உண்டாயிற்று. அவர்கள் அதிலே நடந்துசெல்லுகையில், அவர்களைப் போகவிட்டதை நினைத்துத் துன்பமுற்ற எகிப்தியர் மீளவுமவர்களைச் சிறைப்படுத்திக்கொள்ளவேண்டுமென்றெண்ணிப் பின்தொடர்ந்து நடுக்கடலிற் சேர்ந்தவுடனே இருகடலும் முன்போலவே ஒன்றாய்ச்சேர, பார்வோனுடைய யுத்தவீரரெல்லாம் ஒருவரும் நீங்காது ஆழிவாய்ப்பட்டிறந்துபோனார்கள்.



**165. (III) வரிவேதகாலத்தில் நிகழ்ந்த பிரதான சம்பவங்கள்.** வரிவேதகாலமாவது மோசேசுவின் ஆகமங்களில் அடங்கிய பிரமாணத்தால் தேவசனமாகிய இசிறவேலர் ஆளப்பட்டுவந்த காலமாம். இவர்கள் செங்கடலைத் தாண்டி வனாந்தரத்திலே சென்றபோது அங்கே நாற்பதுவருஷங்களாக பிரத்தியக்ஷமானவிதமாய்ச் சருவேசுரனால் இடைவிடாமல் பரிபாலிக்கப்பட்டிருந்தார்கள். வானத்தினின்று பொழிந்த மன்னாவென்னும் மதுரமான அப்பமும், மோசேசு கோலால் அடித்த ஒரு கற்பாறையிலிருந்து சொரிந்த ஏராளமான சலமும் அவர்களுக்கு அன்னபானங்களாயிருந்தன. எபிரேயர் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட ஐம்பதாம்நாளில், சருவேசுரன் நாற்பாங்கும் இடிகள் ஆர்ப்பரிக்கவும் மின்னல்கள் பிரகாசிக்கவும் தமது தெய்வீக மகத்துவ ஆடம்பரத்தோடு சீனாயிபருவதத்திற் தரிசனையாகிப் பத்துக் கற்பனைகளை இரண்டு கற்பலகைகளில் வரைந்து மோசேசுவிடத்திற் கொடுத்து மலையடிவாரத்திற் தங்கியிருந்த சனங்களின்முன்பாக அவைகளை வாசித்துப் பிரசித்தப்படுத்தக் கற்பித்தருளினார்.

**166. இசிறவேலர் வாக்குத்தத்தப்பூமியில் பிரவேசித்தது.** மோசேசு இசிறவேலரை நாற்பதுவருஷகாலமாக நடப்பித்துக்கொண்டுவந்த பின்பு வாக்குத்தத்தப் பூமியைத் தூரத்திற் கண்டமாத்திரத்தில் அவர்களுடைய விசாரணைக் காரணாக யோசுவா என்பவரை நியமனம்பண்ணி மரித்துவிட்டார். நெடுங்காலமாக ஆசித்துத் தேடப்பட்ட கானான் தேசத்தில் தேவசனத்தைக் கூட்டிக்கொண்டுபோய்ச் சேர்க்கும் பாக்கியம் யோசுவாவுக்கே கிடைத்தது. எபிரேயர் யோர்தான்நதிக்கூடே தெய்வீகமாயுண்டான வரண்டபாதையால் நடந்துபோய் அதிற் சேர்ந்தார்கள். யெரிக்கோபட்டணத்து மதில்களெல்லாம் அற்புதமாய் அடிபாறி விழுந்தன. கபோனித்தர் என்னும் சாதியார் எதிர்த்து யுத்தமாடத் துணியாது மனோச்சாயமாகப் பணிந்தார்கள். போராடத் துணிந்த மற்றச் சாதியார்கள் அபசெயப்பட, அவர்களுடைய பட்டினங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. இராசாக்கள் வாளுக்கிரையாக்கப்பட்டார்கள். இவ்வாறு செயிக்கப்பட்ட கானான் தேசத்தை யோசுவா பன்னிரண்டு மாகாணங்களாகப் பிரித்துப் பன்னிரண்டு கோத்திரத்தாருக்குங் கொடுக்க, ஒவ்வொரு கோத்திரத்தாரும் தங்கள் தங்கள் நாமத்தையே தங்கள் தங்கள் மாகாணத்துக்கிட்டுக்கொண்டார்கள். தேவாராதனைசெய்துகொண்டுவரும்படி சருவேசுரனாற் தெரிந்தேற்படுத்தப்பட்டவர்களாகிய லேவி கோத்திரத்தாருக்கோ காணி ஆட்சி கிடைக்கவில்லை. மற்றக் கோத்திரத்தவர்களே தங்கள் தங்கள் வருடாந்த பிரயோசனங்களில் பத்திலொன்று கொடுத்து அவர்களைத் தாபரிக்கக் கடமைபூண்டவர்களாயிருந்தார்கள்.

**167. நியாயாதிபதிகள்.** யோசுவா மரித்தபின்பு, இசிறவேலர், கர்த்தர் தங்களுக்குச்செய்த சகாயங்களையும் தாங்கள் அவருக்குக் கொடுத்திருந்த பிரமாணிக்கத்தின் வாக்குத்தத்தங்களையும் முற்றாய் மறந்துவிட்டு விக்கிரக ஆராதனைக்காரரோடு கொண்டாட்டம்பண்ணி அவர்களிடத்திலிருந்து பெண்கொண்டதினால், அடிக்கடி தாங்களும் அவர்களைப்போல விக்கிரக ஆராதனைக்காரருந் துன்மார்க்கருமானார்கள். சருவேசுரன் அவர்களுடைய நன்றிகேட்டையும் விசுவாசத்துரோகத்தையும் கண்டிக்கும்பொருட்டு அவர்களுடைய சத்துருக்களுக்கு அவர்களைக் கையளித்துக்கொண்டுவருவார். அவர்களுக்குள் பிரசாதிபதியாவது இராசாங்கமாவது இல்லாதிருந்ததே அவர்களுக்கு நேரிட்ட மிகப் பெருங் கேடாம். ஆயினும், காலத்திற்குக்காலம் ஒவ்வொரு தலைவரைத் தாங்களே தெரிந்து ஏற்படுத்திக்கொள்ளுவார்கள். சரு



வேசுரனுஞ் சிலசமயத்தில் சிலரை நியமித்துக்கொடுத்துவருவார். இவ்வாறு தலைவராக நியமிக்கப்பட்டவர்களே தேசாதிபதிகளாகவும் படைத்தலைவராகவுமிருந்து யுத்தங்களை நடாத்தியும் நீதிவழங்கியுங்கொண்டுவருவார்கள். அவர்களுக்கு நியாயாதிபதிகளென்று பெயர். பிரமாணங்களை ஏற்படுத்தவும் வரிகளை நிருபிக்கவும் வேண்டிய அதிகாரமோ அவர்களுக்கொருபோதுங் கிடைக்கவில்லை. நியாயாதிபதிகளுடைய ஆளுகை சுமார் 350 வருஷங்களாக நடந்துகொண்டுவந்தது. பிரதான ஆசாரியராகிய ஏலி என்பவருக்குப்பின் அவரிடமாகவந்த சாமுவேல் என்பவரே கடைசியான நியாயாதிபதியாயெண்ணப்படுவார்.

**168. தாவீதுவும் சலோமோனும் இராசாங்கம் புரிந்ததும் பத்துக்கோத்திரங்கள் பிரிவினைசெய்ததும்.** சாமுவேலுடைய காலத்திற்றானே மெய்யான இராசாங்கம் இசிறவேலருள் ஏற்படுவதாயிற்று. அவர்கள் தங்களுக்கு ஒரு அரசன் வேண்டுமென்று சருவேசுரனிடத்தில் விண்ணப்பஞ்செய்ய, அவர் அதை அங்கீகரித்து, சவுல் என்பவனைத் தெரிந்து பட்டாபிஷேகஞ்செய்து இராசாவாக ஏற்படுத்தவேண்டுமென்று சாமுவேலுக்குக் கற்பிக்க, சாமுவேல் அப்படியே செய்தார். சவுலரசன் கொஞ்ச வருஷங்களுக்கிடையில் சருவேசுரனுக்குத் துரோகியானபடியால் அவர் அவனை இராச்சிய பரிபாலனத்தினின்றும் தள்ளிவிட்டுத் தாவீதென்பவரைத் தெரிந்து இராசாவாக்கும்படி செய்வித்தார். தாவீது மிகவும் இளம்பிராயமுள்ளவராயிருந்தாலும், ஒரு தனியுத்தத்தில் கோலியாத்தென்னும் இராக்ஷதனைக் கொன்று வெற்றிமாலைசூடிக்கொண்டதினால் அதைப்பார்த்துப் பொறாமையுற்ற சவுல் அவரைக் கொன்றுபோடத் தேடினான். அவர் அவனுடைய மரணபரியந்தம் ஒளித்து மறைந்து திரிந்து அந்தரங்கமாய்ச் சீவித்துக்கொண்டுவந்து அவன் மரித்த உடனே சிங்காசனமேறிச் செங்கோல்நடத்தத் துவக்கினார். இவ்வாறே இராசத்துவமானது தாவீதின் குடும்பத்தில் நிலைப்பட்டு அதற்கே உரிமையாயிற்று. அன்றியும், மேசியா வருந்தனையும் தாவீதின் கோத்திரமாகிய யூதாவின் மக்களுட்டானே இராசாங்க அதிகாரம் நடைபெறுவதாயிற்று. தாவீது தாம்செய்த வியபிசாரமும் மனுக்கொலையுமாகிய இரண்டு அக்கிரமங்களையும் நினைத்து ஆறாக் கண்ணீர்சிந்தி அருந்தவம்புரிந்தமையால், உலகமீட்பர் அவருடைய கோத்திரத்திற்றானே அவதாரஞ்செய்வாரென்னும் வாக்குத்தத்தத்தைச் சருவேசுரன் அவரிடத்திலே புதுப்பித்தருளினார். தாவீதாசர் சருவேசுரனுக்கு ஸ்துதியாகவும் நன்றியறிந்த ஸ்தோத்திர

மாகவும் அநேக கீர்த்தனங்களை இயற்றிவைத்தார். இவைகளுக்குத் தாவீதின் திருச்சங்கீதங்களென்றுபெயர். இச்சங்கீதங்களைத் திருச்சபையானது தேவாராதனையில் அடிக்கடி வழங்கிக்கொண்டுவருகின்றது. தாவீதாசர் நாற்பதுவருஷங்களாக மங்காத கீர்த்தியோடு செங்கோல்நடாத்தி மரித்தபின்பு அவருக்குப்பதிலாக அவருடைய குமாரனாகிய சலொமோன் இராசாங்கம் புரியத்தொடங்கினார். யெருசலேம்பட்டினத்தில் ஒரு சிறந்த தேவாலயம் அவரால் கட்டுவிக்கப்பட்டது. உலகமெங்கும் இது ஒன்றிலேயே மெய்யான சருவேசுரனுக்குரிய ஆராதனை செய்யப்படுகின்றதென்று சொல்லும்படியாக அவ்வாலயமானது விளங்கிற்று. சலொமோன் தன்னாயுசுபரியந்தம் மெய்த்தேவ வழிபாட்டில் நிலைநிற்கவில்லை. அவன் இன்பசுகங்களுக்கு அடிமையாகி மெய்க்கடவுளை மறந்து விக்கிரகாராதனைக்குள்ளானதினால் சருவேசுரன் அவனுடைய பாவத்தை அவன் குமாரனாகிய ரேபோவாமென்பவனிடத்தில் கண்டிக்கத் திருவுளமாயினார். எவ்வாறெனில், ரேபோவாம் சிங்காசனமேறினபின் பன்னிரு கோத்திரங்களுள் யூதாகோத்திரமும் பெஞ்சமின்கோத்திரமும் நீங்க மற்றப் பத்துக் கோத்திரங்களும் தங்கள் அரசனைப்பகைத்துப் பிரிவினைசெய்து யேரேபோவாமென்பவனைத் தங்களுக்கு அரசனாக்கிக்கொண்டார்கள். ரேபோவாமுக்குப் பிரமாணிக்கமாயிருந்த இருகோத்திரங்களால் யூதாவின் இராச்சியமும், பிரிவினையான மற்றக்கோத்திரங்களால் இசிறவேல் இராச்சியமும் உண்டாயின. சமாரியாபட்டினத்தைத் தலைநகரமாய்க்கொண்ட இசிறவேலிராச்சியத்தை ஆண்டுகொண்டுவந்த அரசர் எல்லாந் தேவபத்தியற்றவர்களாயிருந்தபடியால் அவர்களுடைய இராச்சியமானது 250 வருஷங்களுக்கதிகமாக நிலைகொள்ளவில்லை. அதெப்படியெனில், ஒசே என்பவனுடைய ஆளுகையில் அசீரியதேசத்தரசனாகிய சல்மனாசார் என்பவன் சமாரியாவைப்பிடித்து இசிறவேலிராச்சியத்தாரனைவரையும் நினிவேபட்டினத்திற்கு அடிமைகளாய்க்கூட்டிக்கொண்டுபோகவே அவர்கள் அவ்விடத்திலிருந்து ஆசியாவின் பற்பல நாடுகளிலும் சிதறுண்டு போய்விட்டதினால் அதுமுதல் இசிறவேலிராச்சியம் யூதாவினின்றும் வேறான ஓர் இராச்சியமாயிராது ஒழிந்துபோயிற்று.

169. **யூதசாதியார் பாபிலோனுக்த அடிமையாய்க்கொண்டுபோகப்பட்டது.** யூதாவின் இராச்சியத்தாராகிய யூதரும் அடிக்கடி தங்கள் முன்னோர் ஆராதித்த மெய்க்கடவுளை மறந்துவிட்ட பாவத்தினிமித்தம் பலதரம் தேவாக்கினைக்குள்ளாகி வருந்தினார்கள். அவர்களுடைய அரசராகிய அக்காபு மனாசே என்பவர்கள் புரிந்த அக்கிரமங்களின் நிமித்தமாய்ச் சருவேசுரன் பாபிலோனிய அரசனாகிய நபுக்கொதோனொசோர் என்பவனைக் கொண்டு தமது சனத்துக்கு ஆக்கினை இடுவித்தருளினார். அவ்வரசன் யெருசலேம்பட்டினத்தை முழுதுமழித்துவிட்டுத் தேவாலயத்தைத் துகளாக்கிச் சனங்களைச் சிறைப்படுத்திப் பாபிலோனுக்குக் கொண்டுபோனான். ஆயினும், கர்த்தர் தமது பூர்வகிருபையையும் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபென்பவர்களுக்குத் தாம் பண்ணியிருந்த வாக்குத்தத்தங்களையும் நினைவுகூர்ந்து எழுபதுவருஷச் சிறை கழிந்தபின் தமது சனத்தை மீளவும் அவர்களுடைய சுயதேசத்திற்குக் கொண்டுவந்து சேர்த்தருளினார். அப்போது அவர்கள் அழிந்துபாழாய்க்கிடந்த தங்கள் பட்டினத்தைத் திரும்பவும் கட்டியெழுப்பித் தேவாலயத்திற்கும் அஸ்திவாரமிட்டார்கள். இம்மகா கருமத்தைமுடிக்கப் பார்சிக அரசனாகிய சீறுஸ் என்பவனே சருவேசுரனால் தெரிந்துகொள்ளப்பட்டவனாயிருந்தான். அவனுடைய பரிபாலனத்தில் எஸ்திறுஸ் நெகேமியாசு என்னுமிருவரும் மிகுந்த பத்திவேகத்தோடு வேலையை நடப்பித்துக்கொண்டுவந்தார்கள். ஆலயத்தைப் புதிதாய்க் கட்டியெழுப்பும்படி சீறுஸ் உத்தரவளித்தது கி. மு. 536-ம் ஆண்டிலாம். யூதர் மிகுந்த மனமகிழ்ச்சியோடு திருப்பணியைப் பரபரப்பாய் நடத்திக்கொண்டுவருகையில் அவர்களுடைய சத்துருக்களின் உபாயதந்திரங்களால் அது சிறிதுகாலமாக நிறுத்திவிடப்பட்டிருந்தபின்பு, பார்சிக அரசனாகிய டாறியுஸ் என்பவன் கி. மு. 520-ம் ஆண்டு ஒரு கட்டளையை உண்டாக்கி யூதர் தங்கள் தேவாலயத்தை இஷ்டப்படி கட்டியெழுப்பலாமென்று உத்தரவளித்தவுடனே திருப்பணிவேலைகள் மீளவும் தொடங்கி நடத்தப்பட்டன. ஆலய அபிஷேகம் கி. மு. 516-ம் ஆண்டிலே நிறைவேறலாயிற்று. அறுபது வருஷங்கள் சென்றபின் அதாவது; கி. மு. 454-ம் வருஷத்தில் அர்த்தாக்சேர்செஸ் லோங்மான் என்னும் பெயருடைய அரசன் யெருசலேம்பட்டினத்து மதில்களையும் கோட்டைகளையும் கட்டியெழுப்பலாமென்று ஓர் புதுக்கற்பனையால் உத்தாரம்புரிந்தான். தானியேலென்னுந் தீர்க்கதரிசியானவர் எழுபது வாரங்களின் முடிவிலே கிறீஸ்துவானவர் கொல்லப்படுவார் என்று சொல்லிக் குறித்த வருஷ வாரங்களானவை மேலேசொன்ன இராசகற்பனை பிறந்தகாலந்தொட்டே எண்ணப்பட்டுவருகின்றன.



170. **தீர்க்கதரிசனங்கள்.** உலகாரம்பமுதல் பொதுவாக எல்லா உகங்களிலும், விசேஷமாகச் சவுலரசனுடைய இராச்சிய

பாரந்தொடங்கி யெருசலேம்பட்டணமானது மீளவும் அரணிடப்பட்டிருகவுள்ள காலங்களிலும் சருவேசுரன் தமது ஞானம் நிறைந்த அநேக தீர்க்கதரிசிகளைத் தோற்றுவித்து, அவர்கள் மூலமாக மனிதருக்குத் தமது திருவுளங்களைத் தெரிவிக்கவும், எதிர்காலச் சம்பவங்களை முன்னுணர்த்தவும், இரக்ஷகரைப்பற்றிய வாக்குத்தத்தங்களைப் புதுப்பித்து அவருடைய குண இலக்ஷணங்களையும் வருகையையும் சீவியத்தையும் பாடுகளையும் மரணத்தையும் முன்னேறக் காண்பிக்கவும், இச்சம்பவங்களோடுகூடிய விருத்தாந்தங்களையும் காலத்தையும் தெளிவாய்க் குறித்துக்காட்டவுந் திருவுளமானார். இந்தத் தீர்க்கதரிசனங்களெல்லாம், ஆதியிலே மெய்யான உலக இரக்ஷகராக வாக்குப்பண்ணப்பட்டு காலாந்தத்தில் சருவேசுரனால் உலகத்திற்கனுப்பப்பட்டவராகிய யேசுக்கிறீஸ்துநாதரில் நிறைவேறலாயின.

171. உலக இரக்ஷகராகச் சருவேசுரனால் வாக்குப்பண்ணவும் குறித்துக்காண்பிக்கவும்பட்டுக் கடைசியில் அவரால் அனுப்பப்பட்டவராகிய யேசுக்கிறீஸ்துநாதர் எல்லாக்காலங்களுக்கும் பொதுவாயுள்ளவரென்றும், அவருடைய திவ்விய வேதமானது எல்லாக்காலங்களையும் தழுவி நிற்கின்றதென்றும், மனிதர் அனைவரும் எவ்வெக்காலத்திலுள்ளவர்களாயினும் இரக்ஷகரின் பெறுபேறுகளால் ஈடேற்றம் அடைதல் கூடுமென்றும் மேலே சொல்லியவைகள் துலாம்பரமாய் அத்தாட்சிப்படுத்துகின்றன. மகா சாஸ்திரியாகிய போசுவே என்பவர் சொல்லியவாறு: நெடுங்காலமாகக் காத்திருக்கப்பட்டவரும் கடைசியாயனுப்பப்பட்டவருமாகிய இரக்ஷகர் எல்லாக்காலங்களிலும் தேவமக்களுக்கு நம்பிக்கையும் ஆறுதலுமாயிருந்தாரென்றும், வேதமானது மனுஷ சிருட்டிகாலந்தொட்டு ஒரேதன்மையாகவே இருந்ததென்றும், அது ஒரே சருவேசுரனையே தனக்கு ஆதிகாரணராகவும் ஒரே யேசுக்கிறீஸ்துவையே மனுக்குலத்திற்கு இரக்ஷகராகவும் எப்போதும் அங்கீகரித்துவந்ததென்றும் தீர்மானித்துக்கொள்ளக்கடவோம். ஆதிமனிதன் பாவத்தைக் கட்டிக்கொண்டபோதே சருவேசுரன் மனிதரை ஈடேற்ற ஒரு இரக்ஷகரை அனுப்புவோமென்று வாக்குப்பண்ணி, அவ்வாக்குத்தத்தத்தை இடையிடையே ஞாபகப்படுத்தியும், புதுப்பித்தும், ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபென்பவர்களிடத்தில் விசேஷவிதமாய் உறுதிப்படுத்தியும், அது நிறைவேறுங்காலம் சமீபித்துவரவர அதைமிகத் துலாம்பரமாகவும் வெளிப்படையாகவும் விளங்கச்செய்ததைக் காண்பது கிறீஸ்தவனுடைய மனதுக்கு எவ்வளவோ ஆறுதலைப் பயக்கின்றது. சங்கிலித்தொடர்போல விளங்கும்



இத்தனை சம்பவங்களின் காட்சியால் நமது விசுவாசத்திற்கு ஒளியும் நம்பிக்கைக்கு உறுதியும் பத்தி சிநேகங்களுக்கு அதிகரிப்புமுண்டாகுமென்பது நிச்சயமேயாம்.

# 10-ம் அதிகாரம்

## மனுஷாவதாரப் பரம இரகசியம்

**1-வது, மனுஷாவதாரமுண்டென்பது. 2-வது, மனுஷாவதாரப் பரம இரகசியத்தின் இயல்பு. 3 வது, யேசுக்கிறீஸ்துவின் மாதாவாகிய அர்ச். கன்னிமரியம்மாள்.**

## 1-ம் பிரிவு

### மனுஷாவதாரப் பரம இரகசியமுண்டென்பது

172. (I) **மனுஷாவதாரமாவதென்ன?** மனுஷாவதாரமாவது மனுஷசுபாவத்தை எடுத்துப்பிறத்தலாம். அதாவது: வார்த்தை என்னுந் தேவ ஆளானவர் தமது தேவசுபாவத்தோடு மனிதசுபாவத்தையும் சேர்த்து மெய்யான தேவனும் மெய்யான மனிதனுமாகிய யேசுக்கிறீஸ்துவாய்த் தோன்றின பரம இரகசியமாம். சுருக்கமாய்ச்சொல்லுகில், அது சுதனாகிய சருவேசுரன் மனிதனாய்ப் பிறந்த பரம இரகசியமென்னப்படும். மனுஷாவதாரத்தில் தேவசுபாவமும் மனிதசுபாவமும் இனிமேலில்லையென்ற ஐக்கியம்பூண்டிருக்கின்றன. அது மானிட சரீரத்திற்கும் ஆன்மாவுக்கு மிடையிலுள்ள அன்னியோன்னிய ஐக்கியத்தை ஒத்தது. அவ்விரு சுபாவங்களுமொன்றாய்க் கலந்துபோகாமலும், கெடாமலும், இரண்டும் தனித்தனியே முழுமையாகவும் பூரணமாகவுமிருக்கின்றது. இரு சுபாவங்களினும் சேர்க்கையானது சுதன் என்னுந் தேவ ஆளிலேயே நிகழ்ந்தது. பிதாவாவது இஸ்பிரீத்துசாந்துவாவது மனிதனாய் அவதரிக்கவில்லை. நித்தியராகிய சுதன் அல்லது வார்த்தையானவர் மாத்திரமே மனுஷாவதாரஞ் செய்தருளினார். மானிடவஸ்துவில் ஆத்துமமும் சரீரமுமாகிய இரண்டின் சேர்க்கையால் ஆட்தன்மை தோன்றுவதுபோல தேவசுபா

வமும் மனிதசுபாவமுமாகியவைகளின் சேர்க்கையால் யேசுநாதரிடத்திலுள்ள ஏகமாகியஆட்தன்மை தோன்றுகின்றதென்று கருதவேண்டாம், ஏனெனில், யேசுநாதரிடத்திலுள்ள ஆட்தன்மையானது நித்தியரும் நிர்விகாரியுமான சுதனாகிய சருவேசுரனிடத்திலே விளங்கும் ஆட்தன்மையேயன்றி வேறல்ல. சுதனாகியசருவேசுரனே தமது ஆட்தன்மையை மனிதசுபாவத்தோடு ஐக்கியப்படுத்தி இதைப் பூரணப்படுத்துகின்றார். ஆதலால், யேசுக்கிறீஸ்துநாதர் பூரணதேவனும் பூரணமனிதனுமாம். இத்தன்மையானவரே முன்பு சருவேசுரனால் மனிதருக்கு வாக்குப்பண்ணப்பட்டவரும் பின்பு அவர்களுக்கு அனுப்பப்பட்டவருமாகிய உலகவிரக்ஷகர். சருவேசுரனுடைய நித்திய குமாரனும் வார்த்தையானவருமாகிய இவரே மனிதருடைய ஈடேற்றத்துக்காகப் பாடுபட்டு மரிக்கும்பொருட்டுப் பாவமொன்று நீங்கலாக மெய்யான மனுச்சுபாவத்தைத் தம்மோடுசேர்த்து மனிதனாய்ப் பிறந்தருளினார்.

173. (II) **மனுஷாவதாரம் உண்டு.** நித்தியமாயுள்ள வார்த்தையானவரும் தம்முடைய பரமபிதாவுக்கு முழுதும் சரியொத்த தேவனும் அவரால் நித்தியமாய்ச் சென்மிக்கப்படுகிறவருமாகிய ஏக தேவகுமாரனானவர் நமது சரீரத்தையும் ஆத்துமத்தையும்போன்ற ஒரு மெய்யான சரீரத்தையும் ஆத்துமத்தையும் எடுத்தருளினார். ஆதலால், மனுஷாவதாரப் பரம இரகசியமானது யேசுக்கிறீஸ்து ஆகிய ஆளில் இரண்டுகாரியங்களால் உளதாகின்றது. அவைகள் தேவகுமாரனுக்குரிய தெய்வத் தன்மையும் மனுஷனுக்குரிய மெய்யான ஆத்தும சரீரங்களின் சேர்க்கையுமாம். அவருடைய தேவசுபாவம், மேசியாவைக்குறித்துச் சொல்லப்பட்டிருந்த தீர்க்கதரிசனங்கள் எல்லாம் அவரிடத்தில் நிறைவேறினதினாலும், தம்மைத் தேவசுதனென்று ஒப்பிக்கும்பொருட்டு அவர்செய்த ஆச்சரியமான அநேக அற்புதங்களினாலும், அவர் மெய்யான தேவனென்றும் மெய்யான தேவகுமாரனென்றும் தமது பிதாவோடு ஒரே தேவசுபாவமுடையவரென்றும் திருச்சபை கூறியிருக்கும் விசுவாசசத்தியத்தினாலும் அத்தாட்சிப்படுகின்றது. அவருடைய மனிதசுபாவம், அவரிடத்தில் விளங்கின ஆத்தும சரீரங்களால் அத்தாட்சிப்படுகின்றது. யேசுக்கிறீஸ்துநாதர் எடுத்த தேகம் நமது தேகத்தைப்போன்ற மெய்யான மானிடதேகமேயாம். அது நமது தேகத்தைப்போல, பசி தாகம் உபத்திரவங்களுக்கும், போசனம் பானம் முதலிய தேவைகளுக்கும், உறங்குதல் முதலிய தொழில்களுக்கும் ஏதுவாகவேயிருந்தது. ஆதலால், அவர் நம்மைப்போற் பசியுற்றார், தாகமுற்றார், போசன



பானம் பண்ணினார், நித்திரைசெய்தார். அன்றியும் அவர் கன்னிமரியம்மாளிடத்தினின்று பிறந்தாரென்றும் பாடுபட்டாரென்றும், சிலுவையில் அறையுண்டாரென்றும், மரித்தாரென்றும், அடக்கம் பண்ணப்பட்டாரென்றும் விசுவாசமந்திரத்திற் சொல்லப்பட்ட வாக்கியங்களெல்லாம் யேசுக்கிறீஸ்துநாதருடைய சரீரம் மெய்யான மானிடசரீரமென்றே பிரத்தியக்ஷமாய் ஒப்பிக்கின்றன. யேசுநாதர் எடுத்தசரீரம் மெய்யான மானிட சரீரமாயிருப்பதுபோல, அவர் எடுத்த ஆத்துமமும் மெய்யான மானிட ஆத்துமமேயாம். என்னுடைய ஆத்துமம் மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது என்று அவர்தாமே திருவுளம்பற்றினார். இங்கே ஆத்துமம் என்பது மானிட ஆத்துமத்தையன்றி வேறொன்றைக் கருதல் கூடாது. அன்றியும், தேவகுமாரன் மனிதனானாரென்று விசுவாசமந்திரத்திற் சொல்லப்பட்டிருப்பதால் மனுஷீகத்தை ஏற்படுத்துகிறவைகளாகிய மெய்யான ஆத்துமமும் சரீரமும் அவருக்கு உண்டென்பது நிச்சயமாம். ஆதலால், யேசுநாதர் மெய்யானதேவனும் மெய்யான மனிதனுமேயாம். அவர் மனிதனாயிருக்கத்தொடங்கின அக்ஷணத்திற்றானே சாங்கோபாங்கத்தோடும் பரிசுத்தத்தோடும் மாறுபடாதவைகளாகிய சகல மானிட துன்பதுரிதங்களுக்குமுள்ளானார். அறியாமையும் ஆசாபாசமும் பாவமும் நீங்கலாக நமது மானிட சுபாவமுழுதும் அவருக்கு உண்டென்பது பிரத்தியக்ஷம்.

மனுஷாவதாரமானது இஸ்பிரீத்துசாந்துவின் அற்புதமான தெய்வீகத் தொழிலால் நிறைவேறிற்று. ஆதியில் வாக்குப்பண்ணப்பட்டவரும், எல்லா மனிதராலும் எதிர்பார்த்திருக்கப்பட்டவருமாகிய மேசியா ஆனவர் உலகத்தில் பிறக்கவேண்டியகாலம் வந்தவுடனே யூதாகோத்திரத்தாளாகிய மரியம்மாளென்னும் ஒரு கன்னிகையிடத்திற்குச் சருவேசுரன் கபிரிகேல் என்னும் அதிதூதனை அனுப்பியருளினார். அத்தேவதூதன் அவளை நோக்கி: பிரியதத்தத்தினாற் பூரணமானவளேயென்று வாழ்த்தி, உலக இரக்ஷகருக்கு மாதாவாகச் சருவேசுரன் உம்மைத் தெரிந்தருளினார் என்றார். அப்போது, சிறுபிள்ளைப் பிராயந்தொட்டுத் தன் சரீரத்தையும் ஆத்துமத்தையும் தேவனுக்குக் காணிக்கையாக்கிவைத்திருந்த கன்னிமரியம்மாள் தன் கற்புக்கு யாதொரு பழுதும் நேரிடாதென்று தேவதூதன் நிச்சயிக்கக்கேட்டு, இதோ ஆண்டவருடைய அடிமையானவள் உமது வார்த்தையின்படி எனக்காகக்கடவதென்று உத்தரஞ் சொன்னாள். அக்ஷணத்திற்றானே இஸ்பிரீத்துசாந்துவாகிய சருவேசுரன் அக்கன்னிகையின் திரு உதரத்தில்

அவளுடைய நின்மல இரத்தத்தால் ஒரு மானிட தேகத்தை உருவாக்கி, அத்துடன் தாம் சிருட்டித்த ஒரு ஆத்துமத்தையும் சேர்த்தருளினார். அவ்வேளையிலேதானே தேவகுமாரனானவர் அச்சரீரத்தையும் ஆத்துமத்தையும் ஒருபோதும் பிரியாதவிதமாய் தம்மோடு ஐக்கியப்படுத்திக்கொள்ள, இவ்வாறே மனுஷாவதாரமாகிய பரம இரகசியம் நிறைவேறலாயிற்று. திருச்சபையானது இச்சம்பவத்தைப் பங்குனிமீ 25-ந் திகதியில் திருநாளாகக் கொண்டாடிவருகின்றது. இச்சம்பவமே கிறீஸ்து ஆப்தத்துக்கு ஆரம்பமாய்க் கணிக்கப்படும்.* மனிதனாயவதரித்த தேவகுமாரனாகிய யேசுக்கிறீஸ்து மெய்யான தேவனும் மெய்யான மனிதனுமாயிருக்கிறார். தேவனாகியமட்டும் அவருக்கு ஒரு தேவபிதா உண்டு. அந்தப் பரம பிதாவாலேயே அவர் நித்தியமாய்ச் சனிக்கப்படுகிறார். மனிதனாகியமட்டும் தம்மைக்காலாந்தத்தில் கர்ப்பந்தரித்துப் பெற்றெடுத்த ஒருமாதாவை உடையவராயிருக்கிறார். சருவேசுரனாகியமட்டும் அவர் எங்கும் பரிபூரணராயிருக்கிறார். மனிதனாகியமட்டும் இன்றைக்குப் பரலோகத்திலும் திவ்விய நற்கருணையிலுமே எழுந்தருளியிருக்கிறார்.

174. **யேசு** என்னும் பெயருக்கு **இரக்ஷகர்** என்று அர்த்தமாம். கபிரிகேல் என்னும் அதிதூதன் அர்ச். கன்னிமரியம்மாளுக்குத் தெரிவித்திருந்த இந்த நாமம் மனுஷனாய் அவதரித்த தேவகுமாரனுக்கு நன்றாய்ப் பொருந்தும். ஏனெனில், அவர் நம்மைப் பாவத்திலும் நரகத்திலுமிருந்து மீட்டவராம். கிறீஸ்துவென்னும் சொல்லுக்கு அபிஷேகிக்கப்பெற்றவரென்று அர்த்தமுண்டு. பழைய ஏற்பாட்டில் அரசர்களும் ஆசாரியர்களும் அபிஷேகிக்கப்பட்டுவந்தார்கள். அவ்வபிஷேகமானது அவர்கள் பெற்றுக்கொண்ட மகிமைக்கு ஓர் அடையாளமாயிருந்தது. யேசுக்கிறீஸ்துநாதரே வானத்திற்கும் பூமிக்கும் இராசாவாயிருக்கிறார். முன் நமக்காகத் தம்மைப் பலியாக்கினவரும் இப்போதும் தினந்தினம் தம்மைப் பலியாக்கிக்கொண்டுவருகிறவருமாகிய நித்திய ஆசாரியரும் அவரே. யேசுக்கிறீஸ்துநாதர் சரீரமுறையான அபிஷேகத்தை எப்போதாவது பெற்றுக்கொண்டாரோவெனில் இல்லை. அவர் பெற்றுக்கொண்டது ஞானமுறையான அபிஷேகத்தையேயாம். தேவசுபாவமானது மனுஷீகத்தைத் தன்னோடு ஐக்கியப்படுத்திக் கொண்டபோதே யேசுநாதர் பூரணமும் உந்நதமுமான ஞான அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டார்.

* இது சாதாரண கணிப்பு. இதின்படி இவ்வாண்டு கி. பி. 1943 ஆவதாம். ஆயினும், இக்கணிப்பு நாலுவருஷம்வரையிற் பிந்தியே தொடங்கியது என்றும், ஆதலால் மனுஷாவதாரம் சம்பவித்து இப்போது 1947-ம் வருஷமாயிற்றென்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர்.



175. **மனுஷாவதாரத்தின் முகாந்திரம்.** மனுஷாவதாரத்திற்கு முகாந்திரம், நமது இரக்ஷணியமேயன்றி வேறல்ல. யேசுக்கிறீஸ்துநாதரே நமது இரக்ஷணிய அலுவலைச் செய்துமுடித்தவர். அவரே நம்மைப் பாவத்திலும் நித்திய நரகத்திலும்நின்று இரக்ஷித்தருளினார். அவருடைய பெறுபேறுகளினிமித்தமே நாம் நித்திய மோக்ஷபாக்கியத்திற்குச் சுதந்தரம் பூண்டவர்களானோம். இவர் மனுஷராகிய எங்களுக்காகவும் எங்கள்மீட்புக்காகவும் பரலோகத்தினின்று இறங்கினார் என்று திருச்சபையும் நிசேயா விசுவாசப் பிரகரணத்திற் திவ்விய பூசைநேரத்தில் பாடிக்கொண்டு வருகின்றது.

கெட்டுப்போன மனிதனை இரக்ஷிக்கத் தேவன் கடமைபூண்டவரல்லவென்றும், தேவகுமாரன் மனுஷாவதாரஞ்செய்தது சருவேசுரனுடைய அநந்தகிருபையால் விளைந்ததாகிய கட்டாயமற்ற இலவசமான காரியமேயென்றும் மேலே (157-ல்) காண்பித்தோம். இவ்விடத்தில் நாம் தெளிந்துகொள்ளவேண்டியது யாதெனில், ஆதாம் கெட்டுப்போனபின் சருவேசுரன் மனிதரை இரக்ஷிக்கத் தீர்மானம்பண்ணினது நிச்சயமேயென்று நாம் வைத்துக்கொண்டாலும், அவ்விரக்ஷணியத்தைமுடிக்க மனுஷாவதாரமானது அவசியமாயிருக்கவில்லை என்பதாம். ஏனெனில், சருவேசுரன் குற்றவாளியாகியமனிதன் தமக்குச்செய்த நிந்தை அவமானத்திற்குப் பூரணபரிகாரம்செய்து முடிக்கும் கடனை அவன்மேற் சுமத்தாமல் அவனுடைய பாவத்தை இலவசமாய் மன்னித்துவிடக்கூடியவரேயாம். அவர் தமது நீதியின் அகோரத்தை முற்றாய்க்காண்பியாமல் விடுவதற்குத் தடையாயிருக்கக்கூடியது யாதொன்றுமில்லை. பாவத்தை மட்டற்ற மேரையாய்ப் பகைப்பதும் பாவியானவன் தான் கடவுளுக்குச்செய்த துரோகத்தின்மேல் உண்மையான விசனங்கொண்டபோதே அவனுக்கு மன்னிப்பதுமாகிய இவைகளே அவருடைய பரிசுத்தத்துக்குவேண்டிய காரியங்களாம். ஆதலால், மனுஷாவதாரமின்றி கடவுள் கெட்டுப்போன நரசென்மத்தை இரக்ஷிக்கக்கூடியவரேயாம். ஆயினும், பாவத்திற்குப் பூரணமான பரிகாரஞ்செய்யப்பட்டாலொழியக் கெட்டுப்போன மனிதனை இரக்ஷிக்கச் சருவேசுரன் திருவுளங்கூரவில்லையென்று சொல்லுமிடத்திலோவெனில், மனுஷாவதாரம் அவசியமாகவேயிருந்தது. ஏனெனில், பாவத்தினிமித்தம் சருவேசுரனுக்குவிளைந்த துரோகத்தைப்

பூரணமானவிதமாய்ப் பரிகரிப்பதற்கு எந்தச்சிருட்டியாலுங் கூடவே கூடாது. குற்றவாளியான மனிதனால் தேவநிந்தை அடைந்தவராகிய சருவேசுரனுடைய அநந்த மகத்துவத்திற்குப் பாவத்தால் உண்டான மகா அவமானத்தைக் குறைவின்றிப் பரிகரிப்பதற்கு, அளவில்லாத பெறுமானமுள்ள பிராயச்சித்தஞ்செய்யக்கூடியவரும், ஒருங்கே தேவனும் மனிதனுமாய் விளங்குபவருமாகிய ஒரு மத்தியஸ்தர் வேண்டியதாயிற்று. அவர் தமது பிராயச்சித்தக் கிரியைகளை அநந்த பெறுமானமுள்ளவைகளாக்கி அவைகளை நிந்தைப்பட்ட தேவமகத்துவத்திற்கு ஒப்பானவைகளாயிருக்கும்படி செய்யவேண்டியவராகையால், அவர் சருவேசுரனாகவும், வேதனைப்பட்டுத் தாழ்மையடைந்து பிராயச்சித்தஞ்செய்ய வேண்டியவராகையால் மனிதனாகவுமிருப்பது அவசியம். ஆதலால், இந்த நியாயங்களுக்காக மனுஷாவதாரம் அவசியந்தானென்று தீர்மானிக்கக்கடவோம்.

---

## 2-ம் பிரிவு

### மனுஷாவதாரத்தின் இயல்பு

176. பரமசுதனாகிய தேவஆளிற்றானே தேவசுபாவமும் மனிதசுபாவமுமாகிய இரண்டு சுபாவங்களும் ஐக்கியப்பட்டிருப்பது மனுஷாவதாரத்தினியல்பாகையினால், யேசுக்கிறீஸ்துநாதரில் ஒரேயொரு ஆளும் இரு சுபாவங்களும் இரு சித்தங்களும் இருவகைத் தொழில்களுமுண்டு. மேலும், அவர் தேவனும் மனிதனுமாயிருப்பதால் தெய்வீகத்துக்குரிய அகத்தியமான தேவ இலக்ஷணங்களேயன்றி மனுஷீகத்துக்குரிய இலக்ஷணங்களும் அவரிடத்திலுண்டு.

177. **(I) யேசுக்கிறீஸ்துநாதரிடத்திலுள்ள ஏக ஆட்தன்மை (Personality).** யேசுக்கிறீஸ்துவிடத்திலுள்ள மனிதசுபாவத்திற்கு ஆட்தன்மை இல்லை. மனிதசுபாவத்தை அத்தோடு கூடியிருக்கும் தேவசுபாவமே பூரணப்படுத்துகின்றது. ஆதலால், கிரியைகளை நடத்துவதில் மனிதசுபாவமானது பிறிதின் சார்பில்லாத மூலகாரணமாய் (Principle) இருப்பதுமில்லை. தன் கிரியைகளுக்கு உத்தரவாதியாய் இருப்பதுமில்லை. ஏனெனில், அது தன்னைப் பூரணப்படுத்துவதாகிய தேவசுபாவத்தோடு சேர்மானப்



பட்டிருக்கின்றது. ஆதலால், மனமுறையாய் மாத்திரமன்றி, ஆள்முறையாயும் உடல்முறையாயும் பதார்த்தமுறையாயும் உள்ள இச்சேர்மானத்தின்நிமித்தம் யேசுக்கிறீஸ்துநாதரின் மனுஷீக கிரியைகள் எல்லாவற்றிற்கும் அவரிடத்தில் விளங்கும் தேவ ஆளே மூலகாரணமாயிருப்பதால், அவைகள் அவ்வாளின்மேல் ஏற்றிச் சொல்லப்படும். கிறீஸ்து ஆப்தம் 5-ம் நூற்றாண்டில் கொன்ஸ்தாந்தின்புரியின் பத்திறியார்க்குவாயிருந்த நெஸ்தோரியுஸ் என்னும் பேர்போன பதிதன் தேவசுபாவமும் மனிதசுபாவமுமாகிய இரண்டும் இரு சினேகிதர்களுக்கிடையிலுள்ள மன ஐக்கியம்போலவே தம்முள் ஐக்கியப்பட்டிருந்தனவென்று சாதிக்கத் தலைப்பட்டான். தலைப்பட்டு, யேசுக்கிறீஸ்துநாதரில் இரண்டு ஆட்களுண்டென்றும், மனிதசுபாவமானது தேவ சுபாவத்தோடு மனமுறையாய்மாத்திரம் சேர்மானப்பட்டிருப்பதால் அது தனக்குரிய ஆட்தன்மையைக் கொண்டிருக்கின்றதென்றும், யேசுக்கிறீஸ்துநாதர் மனிதனாகியமட்டும் சுவிகாரத்தினால்மாத்திரமே தேவகுமாரனாயிருக்கிறார் என்றும், அர்ச். கன்னிமரியம்மாள் தேவமாதா அல்ல, ஏனெனில், அவள் பெற்றெடுத்தவர் மனித ஆளேயன்றி தேவ ஆள் அல்லவென்றும் சாதித்தான். இக்கொடிய பதிதத்தை எபேசுநகரத்திற்கூடிய 3-ம் சாதாரண திருச்சங்கமானது சபித்துத்தள்ளி, அர்ச். கன்னிமரியம்மாள் மெய்யான தேவமாதாவென்பதை ஓர் விசுவாச சத்தியமாக ஏற்படுத்திற்று. யேசுக்கிறீஸ்துநாதரில் ஒரே ஆட்தன்மையன்றி இரண்டு ஆட்தன்மை இல்லை என்றது விசுவாசப்பிரமாணத்தாலும், திருச்சபையானது யேசுக்கிறீஸ்துநாதரிடத்திலுள்ள மனுஷீக கிரியைகளைச் சுதனாகிய தேவ ஆளின்மேலேற்றிக் கூறுவதினாலும் உருசுவாகின்றது. அப்போஸ்தலர்களுடைய விசுவாசமந்திரத்தில் சருவேசுரனுடைய "ஏகசுதனாகிய நம்முடைய நாயன் யேசுக்கிறீஸ்துவை விசுவசிக்கிறேன்; இவர் இஸ்பிரீத்து சாந்துவினாலே கர்ப்பமாய் உற்பவித்து, அர்ச். கன்னிமரியாயிடத்தில்நின்று பிறந்து, போஞ்சியு பிலாத்துவின்கீழ்ப் பாடுபட்டு, சிலுவையிலே அறையுண்டு, மரித்து, அடக்கப்பட்டு, பாதாளங்களிலிறங்கி, மூன்றாம்நாள் மரித்தவர்களிடையினின்று உயிர்த்து எழுந்தருளினார்; பரமண்டலங்களிலேறிச் சருவத்துக்கும்வல்ல பிதாவாகிய சருவேசுரனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார்; அவ்விடத்தினின்று சீவியர்களுக்கும் மரித்தவர்களுக்கும் நடுத்தீர்க்க வருவார்" என்று கூறியவிடத்து மனிதசுபாவத்தை நோக்கி யேசுக்கிறீஸ்துநாதருக்குப் பொருந்துவனவாகிய இக்கிரியைகளுக்கும் அந்தஸ்துகளுக்கும் சருவேசுரனுடைய ஏககுமாரனாகிய தேவ ஆள் ஆனவரே ஏக மூலகாரணமும்

ஏக கர்த்தாவுமாய் இருப்பதாக விளக்கிக்காட்டியிருக்கிறது. ஆதலால், மானிட சுபாவமானது தேவசுபாவத்தின் சேர்க்கையால் தனக்குரிய ஆட்தன்மையை இழந்துபோகின்றது. தானே தன்னை ஆண்டுநடத்துவதுமில்லை, தானே தன் கிரியைகளுக்கு ஏகமும் முழுமையுமான மூலகாரணமாயிருப்பதுமில்லை. ஆயினும், இதனால் அதற்கு யாதோர் குறைவாவது அபூரணமாவது உண்டாகின்றதோ? இல்லை. ஏனெனில், அது நித்திய வார்த்தையானவரோடும் அவருடைய தெய்வீக இலக்ஷணங்களோடும் ஐக்கியப்பட்டிருப்பதாலும், அவரே தன் கிரியைகளை நடத்துவதாலும் மிகுந்த சிறப்பும் சாங்கோபாங்கமும் அடைந்து விளங்குகின்றது. தேவனுக்கும் மனிதனுக்குமுள்ள மெய்யான ஐக்கியத்தினிமித்தம் மனுஷீக இலக்ஷணங்களைத் தேவன்மேலேற்றி, தேவன் சிலுவையிலே அறையுண்டார், அவர் பாடுபட்டார், அவர் மரித்தார் என்றும்; தெய்வீக இலக்ஷணங்களை மனிதன்மேலேற்றி இம்மனிதன் சருவவல்லவர் இம்மனிதன் அழிவில்லாதவர் என்றுஞ் சொல்லுவது நியாயமேயாம்.

178. **(II) இருசுபாவங்களினும் பேரில்.** யேசுக்கிறீஸ்துநாதரிடத்தில் தேவசுபாவமும் மனிதசுபாவமுமாகிய இரண்டு சுபாவங்களுண்டென்பதற்கு விரோதமாகக் கொன்ஸ்தாந்தின்புரியில் மடாதிபதியாயிருந்த எயுத்திக்கேஸ் என்பவன் போதிக்கத் தலைப்பட்டதனால், 451-ம் ௵ கல்செதோன் நகரத்திற் கூடிய திருச்சங்கமானது அவனுடைய போதகந் தப்பறையானதெனத் தீர்மானித்து, யேசுநாதரிடத்தில் இருசுபாவங்களுண்டென்பதை ஓர் விசுவாச சத்தியமாக ஏற்படுத்திற்று. எயுத்திக்கேஸ் கூறியது எவ்வாறெனில், ஒருதுளிதேனானது சமுத்திரத்திற் தண்ணீரோடு கலந்து மறைந்துபோகிறதுபோலவும், கொஞ்சம் மெழுகானது நெருப்பிற் கரைந்து அழிந்துபோகிறதுபோலவும் மனுஷாவதாரப் பரம இரகசியத்தில் மனிதசுபாவமானது தேவசுபாவத்தோடு வேற்றுமைதோன்றாமல் ஒன்றாய்க் கலந்துபோகின்றது, அல்லது தேவசுபாவத்தோடு சேர்ந்து அழிந்து கெட்டுப்போகின்றதென்று போதித்தான். திருச்சங்கத்தாரோவெனில், அவனுடைய போதனை முழுப்பதிதமே என்று சபித்துத்தள்ளி, யேசுக்கிறீஸ்துநாதரிடத்திலுள்ள ஒரே ஆளில் இரண்டு சுபாவங்களுண்டு, அவைகள் தம்முள் வெவ்வேறானவைகள், மாறுபடாதவைகள், பிரிந்துபோகாதவைகள், ஆதலால், அவர் பூரணதேவனும் பூரணமனிதனுமாம் என்பதை யாவரும் அங்கீகரித்துக்கொள்ளவேண்டிய விசுவாச சத்தியமாகத் தீர்மானித்தேற்படுத்தினார்கள்.



179. யேசுநாதரிடத்தில் இரு சுபாவங்களிருக்கின்றமையால், அவரிடத்தில் இரண்டு சித்தங்களும் இருவகைக் கிரியைகளும் உண்டென்றே முடிக்கவேண்டும். இரண்டு சித்தங்களுமெவையெனில், தேவசித்தமும் மனிதசித்தமுமாம். இருவகைக் கிரியைகளுமெவையெனில், தெய்வீக கிரியையும் மனுஷீககிரியையுமாம். கொன்ஸ்தாந்தின்புரியிலே 680-ம் ஆண்டு கூடின ஆறாம் சாதாரண திருச்சங்கத்தில் தீர்மானிக்கப்பட்ட இவ்விசுவாசசத்தியமானது வேதாகமத்தின் வேறிடங்களில் உணர்த்தப்பட்டிருந்தாலும், நம்முடைய திவ்விய இரக்ஷகர் ஒலிவேத்துதோப்பில் திருவாய்மலர்ந்தருளிய வசனத்தால் விசேஷவிதமாய்த் தெளிவிக்கப்பட்டிருக்கின்றது. அவர்: பிதாவே கூடுமாகில் இப்பாத்திரம் என்னைவிட்டகலக்கடவது என்றவிடத்துத் தம்முடைய பிதாவின் சித்தத்தினின்றும் வேறாகிய ஒரு சித்தத்தையே வெளியரங்கப்படுத்தினார். அது தேவசித்தமோ? அல்ல. ஏனெனில், அவர் தேவனாகியமட்டும் பரமபிதாவின் சித்தத்தையே தமது சித்தமாயுடையவர். ஆதலால், அவர் குறித்துக்காண்பித்தது மனிதனாகியமட்டுந் தமக்குள்ளதும் தேவசித்தத்தினின்றும் வேறாகியதுமான ஒரு மனித சித்தத்தையேயாம்.

180. மேலே சொல்லப்பட்டதே மனிதனாயவதரித்த தேவசுதனாகிய யேசுக்கிறீஸ்துவைப்பற்றிய விசுவாசபோதகமென்னப்படும். இப்போதகத்தின்படி, வார்த்தை என்னுந் தேவ ஆளில் தேவ சுபாவமும் மனித சுபாவமுமாகிய இரண்டிற்கும் உள்ள ஐக்கியத்தால் ஒரே ஆளும் இரு சுபாவங்களும் இரு சித்தங்களும் உண்டாகின்றன: இப்போதகம் மனுஷாவதாரப் பரம இரகசியத்தைப்போல் பழமையாயுள்ளது. தனக்கு அஸ்திவாரமாகிய தேவவாக்கைப்போல் மாறுபடாமையுந் தவறாமையுமுள்ளது. திருச்சபையானது, இதற்கு விரோதமான பதிதங்கள் உண்டான காலங்களில் அந்தந்தச் சமயங்களுக்கு ஏற்றபடி இதை விரித்துரைத்தும் வியாக்கியானஞ்செய்தும் அப்பதிதங்களை நிர்மூலமாக்கிவிட்டது.

**(III) யேசுக்கிறீஸ்துநாதரின் இலக்ஷணங்கள்.** மனிதனாகியமட்டும் யேசுக்கிறீஸ்துநாதருக்குள்ள எல்லா இலக்ஷணங்களையும்பற்றி இவ்விடத்திற் பேசாமல், பரிசுத்தம் ஞானம் சுயாதீனம் ஆகிய மூன்றையுங்குறித்தே சொல்லிக்காண்பிப்போம். இம்மூன்று இலக்ஷணங்களும் தேவனாகியமட்டும் அவருக்குள்ள பரிசுத்தம் ஞானம் சுயாதீனம் ஆகியவைகளினின்றும் வேறானவைகளென்று தெளிந்துகொள்க.

181. மனிதனாகியமட்டும் யேசுக்கிறீஸ்துநாதர் முழுதும் பரிசுத்தர். 1-வது, அவர் தமது சுபாவத்தால் பரிசுத்தராம். இது எவ்வாறெனில், அவருடைய சுபாவம் வழக்கமுறையான (Habitual Grace) இஷ்டப்பிரசாதத்தாலும் இஸ்பிரீத்து சாந்துவின் கொடைகளாலும் சிறந்து விளங்குகின்றது. அன்றியும், ஆட்தன்மையாகவும் சுபாவமுறையாகவும் அத்தோடு ஐக்கியப்பட்டும், அதில் வியாபித்தும், அதைச் சுத்தப்படுத்தியும், உண்மையாலும் பிரசாதத்தாலும் அதை நிரப்புபவராகிய தேவ வார்த்தையானவர் வரரூபமான (Infused Virtues) புண்ணியங்களை அதற்குக் கொடுத்தருளினார். 2-வது, அவர் தமது எல்லாக்கிரியைகளாலும் பரிசுத்தராம். அந்தக் கிரியைகளெல்லாம் தேவ வார்த்தையானவருக்கே உரியவைகள். அவரே அவைகளை ஏவுபவராயும் அவைகளுக்கு மூலகாரணராயும் இருக்கின்றமையால், அவைகள் பரிசுத்தமானவைகள் என்பது தானாய்விளங்கும். ஆதலால், யேசுக்கிறீஸ்துநாதர் ஒருகாலும் பாவத்தைச் செய்யாதவரும் செய்யக்கூடாதவருமேயாம். அன்றியும், தீமைக்குத் தூண்டுவதாகிய ஆசாபாசத்தினின்றும் அவர் என்றும் நீங்கியவராம். 3-வது, அவர் தமது கிரியைகளின் சாங்கோபாங்கத்தாலும் பரிசுத்தராம். "என் பிதாவுக்குப் பிரியமானதையே நான் எப்போதுஞ் செய்துமுடிக்கிறேன்" என்னுஞ் சுவிசேஷ வாக்கியத்துக்கிணங்கத் தமது சுயாதீனத்திற்கு ஓர் குறைவுமின்றி மிகச் சாங்கோபாங்கமானவைகளையே எப்போதுந் தெரிந்து அநுசரித்துக் கொண்டுவந்தார்.

மனிதசுபாவத்தின்படியும் யேசுநாதர் சகலகாரியங்களையுமறிவார். ஆயினும், அது அளவில்லாத ஞானம் அல்ல. அவரிடத்தில் ஞானம் அறிவு ஆகியவைகளின் பொக்ஷங்கள் எல்லாம் உண்டென்று (கொலோ 2-ம் அதி.) அர்ச். சின்னப்பர் உரைத்தவண்ணம், அது சிருட்டிக்கப்பட்ட ஒரு ஞானவஸ்துவிடத்தில் எவ்வளவிருக்கக்கூடுமோ அவ்வளவான ஞானமேயாம். அவர் தமது மகிமைப்பிரதாபத்திற் பிரவேசிக்குமுன் ஒரு சிருட்டிக்கப்பட்ட புத்தியால் அறிந்துகொள்ளக்கூடியவைகள் எவைகளோ அவைகளில் யாதொன்றையும் அறியாதிருக்கவேயில்லை. இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் முக்காலங்களும், இருதயங்களின் உள்ளாசைகளும், அந்தரங்கமான நினைவுகளுமாகிய எல்லாம் அவருக்குத் தெரிந்திருந்தன. தெய்வீகத்திற்கும் மனுஷீகத்திற்கும் இடையேயுள்ள ஆட்தன்மையான ஐக்கியத்தினிமித்தமே அவருக்கு இந்த மேலான ஞானமுண்டாயிற்று. ஆதலால், அவர் உற்பவித்த க்ஷணத்திற்றானே சருவஞானம்பூண்டவராயிருந்தார்.



யேசுக்கிறீஸ்துநாதர் பூரண சுவாதீனமுள்ளவராயிருந்தார். ஆயினும் பாவத்தின்மட்டில் அல்ல. ஏனெனில், தீமையைச்செய்யக்கூடிய சுவாதீனமானது சாங்கோபாங்கமான நிலைக்கு ஒரு குறைவேயாம். அவ்வித சுவாதீனம் தெய்வீக பரிசுத்தத்தோடு பொருந்தாது. ஒன்றைச் செய்யவும் செய்யாதுவிடவும், ஒரு கருமத்தை நீக்கி மற்றொன்றைத் தெரிந்துகொள்ளவும் கூடியதாயிருப்பதே மெய்யான சுவாதீனமாகையால் அதே அவரிடத்திலிருந்தது. சுவாதீனமானது மனுஷீகத்துக்கு மிகவும் ஏற்ற ஒரு இலக்ஷணமாயிருப்பதால் தேவ வார்த்தையானவர் மனுஷீகத்தைத் தம்மோடு ஐக்கியப்படுத்திக் கொண்டபோது அதின் சுவாதீனத்தைக் கெடுத்துவிடாமல் சிறப்பித்துச் சாங்கோபாங்கப்படுத்தியருளினார். அவருடைய சுவாதீனம் கட்டாயம் ஒன்றின்றி இஷ்டமாய்த் தம்மை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்ததிலே விசேஷமாய்த் தெளிவாகின்றது. "நான் என்னிஷ்டமாகவே என் சீவனைக் கொடுக்கிறேன். அதைக் கொடுக்கவும் மீண்டு அதை எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு" என்று அவரே திருவுளம்பற்றியருளினார். "தாம் விரும்பினதினிமித்தமே கொலையுண்டார்" என்று இசையாஸ் தீர்க்கதரிசியானவர் மேசியாவைப்பற்றிச் சொல்லியிருந்த வாக்கியமும் அந்த வசனத்தோடு பொருந்துகின்றது. அன்றியும், யேசுநாதர் தேவநீதிக்கு உத்தரித்ததினாலும் தமது பெறுபேறுகளால் நம்முடைய பாவங்களுக்கு மன்னிப்பை உண்டாக்கினதினாலுமே நம்மை இரக்ஷித்தருளினாரென்பது நிச்சயமாகையால் அவருடைய கிரியைகள் மனோச்சாயமானவைகளும் இஷ்டமானவைகளுமாயிருத்தல் அவசியம். அல்லாவிடில், அவைகளால் தேவநீதிக்கு உத்தரிப்பும் பாவங்களுக்கு மன்னிப்பும் உண்டாயிருத்தல் கூடாது. ஆதலால், நமது இரக்ஷணியத்தின் பொருட்டு யேசுநாதர் தாம் செய்தவைகளும் அனுபவித்தவைகளுமாகிய எல்லாவற்றையும் சுயேச்சையாகவே செய்தும் அனுபவித்தும் வந்தாரென்று நிச்சயித்துக்கொள்ளக்கடவோம்.

---

## 3-ம் பிரிவு

### தேவமாதாவாகிய அர்ச். கன்னிமரியம்மாள்பேரில்

**182. (1) அர்ச். கன்னிமரியம்மாளின் அமலோற்பவம்.** கன்னிமரியம்மாள் இணையற்றதாகிய ஓர் விசேஷ தேவ அருளால் சென்மபாவ தோஷமின்றி உற்பவித்தாள் என்பது திருச்சபையில் எப்போதும் விசுவசிக்கப்பட்டுக்கொண்டுவந்தது. இவ்விசுவாசத்திற்கு ஆதாரம் யாதெனில், அவளைப் பிரியதத்தத்தினால் பூரணமானவள் என்று கூறும் வேதாகமநூலும்; பெருந்தொகையான சபைப் பிதாக்களுடைய படிப்பினையும்; 12-ம் நூற்றாண்டு தொட்டுக் கொண்டாடப்பட்டுவரும் அமலோற்பவத் திருநாளின் ஏற்பாடும்; தேவமாதாவின் இச்சுதந்தரத்திற்கு விரோதமாக எவராயினும் தர்க்கித்தல் கூடாதென்றும், தர்க்கிப்பவர்கள் எவர்களோ அவர்கள் ஞானதண்டனைக்குள்ளாவார்களென்றுங்கூறி அர்ச். பாப்புமார் பிரசித்தப்படுத்திய நிருபங்களும்; தேவசுதனுக்கு மாதாவாயிருக்கும்படியாக நியமிக்கப்பட்ட ஒரு பெண் சுபாவத்திற்கு மேலான அந்தஸ்தில் ஒரு சுத்தசிருஷ்டி எவ்வளவாக உயர்த்தப்படக்கூடுமோ அவ்வளவாக உயர்த்தப்பட்டவளாயிருத்தல் வேண்டும் ஆதலால், அவள் சென்மபாவ தோஷத்தினின்றுங் காப்பாற்றப்பட்டவளாகவேயிருத்தல் வேண்டும் என்னும் நியாயமுமாகிய இவை எல்லாம் ஆதாரமாயிருக்கின்றன. அழியாத ஞாபகத்திற்குரிய 9-ம் பத்திநாதர் என்னும் பாப்பானவர் தேவதாயாரின் அமலோற்பவத்தை ஒரு விசுவாச சத்தியமாக்கவேண்டுமென்று தமக்கிருந்தகருத்தை 1849-ம் ஆண்டு திருச்சபைக்குத் தெரிவித்து அமலோற்பவத்தின் பேரில் மேற்றிராணிமாருக்கும் சகல விசுவாசிகளுக்குமுள்ள எண்ணம் யாதென்று வினவியவிடத்து, தேவதாயாரின் அமலோற்பவத்தைத் தாங்கள் ஒத்துக்கொள்ளுகிறதாகவும் அவருடைய கருத்துத் தீவிரமாய் நிறைவேறும்நாள் எந்நாளோ என்று தாங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறதாகவும் எல்லோரும் ஒருமனமாய்க்கூறினார்கள். ஆதலால், தமது அழைப்பைக் கேட்டுப் பூமியின் அஷ்டதிக்கிலும் நின்றுவந்து தம்மைப் புடைசூழ்ந்து விளங்கின இருநூறு மேற்றிராணிமார் சமுகத்தில் 1854-ம் ஆண்டு மார்கழி மீ 8-ந் உ 9-ம் பத்திநாத பாப்பானவர் தேவமாதாவின் அமலோற்பவமானது சருவேசுரனால் வெளிப்படுத்தப்பட்ட சத்தியமே என்றும், இதை விசுவசிக்கச் சகல விசுவாசிகளுக்கும் குன்றாத கடமை உண்டென்றும் தீர்மானித்தருளினார். பரம இராக்கினிக்குக் காண்பிக்கப்பட்ட இந்த மேலான வணக்கத்தினிமித்தம் அப்போது திருச்சபையில் எங்குந் திருவிழாக் கொண்டாட்டமாயிற்று.



அர்ச். கன்னிமரியம்மாளுக்கு இன்னுமோர் சுதந்தரங்கிடைத்திருந்தது என விளங்குகிறது. அது யாதெனில், அவள் தனது சீவியகாலம்முழுதும் ஒரு அற்ப பாவத்தைமுதலாய்ச் செய்யாதிருக்கும்படி அடைந்துகொண்ட பரம வரமேயாம். இப்பரம வரம் அர்ச். கன்னிமரியம்மாளுக்குக் கிடைத்திருந்ததென்பதைத் திரேந்துநகரச் சங்கமானது, ஒருவன் தன் சீவியகாலமுழுதும் ஒரு அற்பபாவத்தை முதலாய்ச் செய்யாதிருத்தல் கூடாது என்று தீர்மானித்தவிடத்து "அர்ச். கன்னிமரியம்மாளைப்போல விசேஷ சுதந்தரம்பெற்றிருந்தாலொழிய" என்று வைத்த புறநடை வசனத்தால் துலாம்பரமாகத் தெளிவித்திருக்கின்றது.

**183. (II) அர்ச். கன்னிமரியம்மாளின் தேவதாய் மகிமை.** அர்ச். கன்னிமரியம்மாள் மெய்யான தேவனாகிய யேசுக்கிறீஸ்துநாதரைக் கர்ப்பந்தரித்துப் பெற்றதினால் மெய்யான தேவதாயாயிருக்கிறாள். தேவசுபாவமும் மனிதசுபாவமுமாகிய இரு சுபாவங்களும் நித்திய தேவவார்த்தை ஆகிய ஏக ஆளிற்றானே ஐக்கியப்பட்டிருப்பதை நோக்கி மானிட சுபாவத்திற்கே உரியவைகளைத் தேவசுபாவத்தின்மேலேற்றி: சருவேசுரன் கன்னிமரியம்மாளின் திரு உதரத்தில் உற்பவித்தருளினார், கன்னிமரியம்மாளிடத்தினின்று பிறந்தருளினார் என்று இவ்வாறு சொல்லவுங்கூடும், சொல்லவும் வேண்டும் என்று மேலே (177-ம்) இலக்கத்தில் நாம்காண்பித்ததின்படி, இவ்வசனத்தை எதிர்நிரலாகவைத்து: அர்ச். கன்னிமரியம்மாள் தேவனைக் கர்ப்பந்தரித்தாள் தேவனைப் பெற்றாள் என்றும், ஆதலால், அவள் தேவதாய் அல்லது தேவமாதாவாயிருக்கிறாளென்றும் சொல்லவேண்டும். வேதாகமநூலும் பரம்பரையுமாகிய இரண்டும் மரியம்மாளைத் தேவமாதாவென்றே பேதமின்றி அழைக்கின்றன. அன்றியும், உலகமடங்கலும் பரந்திருக்கும் கிறீஸ்தவர்கள் எல்லாரும் அவளைத் தேவதாய் என்றே எப்போதும் வணங்கி நம்பிக்கை அன்போடு மன்றாடிக்கொண்டுவந்தார்கள். ஆதலால், நெஸ்தோரியுஸ் என்பவன் அர்ச். கன்னிமரியம்மாள் தேவமாதா அல்லவென்றும் அவளை அப்படி அழைத்தல் தகாதென்றும் தேவதூஷணமாய்ச் சாதித்தபோது, எபேசு நகரத்திற் கூடின திருச்சங்கத்தார் அவனுடைய தேவதூஷணங்களை மறுத்து அவனையும் பதிதனென்று சபித்துத் தள்ளிவிட்டார்கள். திருச்சங்கத்தாரின் தீர்மானத்தைக் கேள்வியுற்றவுடனே கிறீஸ்தவர்கள் எல்லாரும் நிகரில்லாத சந்தோஷ ஆர்ப்பரிப்புச்செய்தார்

கள். அன்றியும், அப்பதிதன் பரதேசத்தில் நாப்புழுத்துச் செத்து விட்டான் என்ற செய்தியை அறிந்தமாத்திரத்தில், அவன் தேவ தாய்க்கு விரோதமாய்க் கக்கின தேவதூஷணங்களுக்கு இதுவே தகுந்த ஆக்கினை தகுந்த ஆக்கினை என்று சகலரும் ஒருவாய்ப்படக் கூறினார்கள்.

184. (III) **அர்ச். கன்னிமரியம்மாளின் நித்திய கன்னித்துவம்.** சருவேசுரனுடைய அர்ச். மாதா ஆனவள் திருக்குமாரனைப் பெறுமுன்னும் பெறும்போதும் பெற்றபின்னும் கன்னிமகிமை கெடாதவளாயிருந்தாளென்பது விசுவாச சத்தியமாம். மரியம்மாளின் நித்திய கன்னித்துவத்தைக்குறித்தே வேதசாஸ்திரியாகிய அர்ச். அகுஸ்தீன் என்பவர் அவளைத் திருக் **கன்னிகை** என்று எழுதிவைத்தார். "கன்னிமரியம்மாள்" என்று அந்நாட்டொட்டு இருக்கும் வழக்கும் இதற்கு ஒரு சான்று. சருவேசுரனுடைய மட்டற்ற வல்லமையால் நிகழ்ந்த ஆற்புதத்தினால்மாத்திரம் கன்னிமரியம்மாள் கர்ப்பந்தரித்துத் தேவசுதனைப் பெற்றாள். குமாரனைப் பெற்றபின்னும் அவள் எப்போதும் அழிவில்லாத கன்னியாகவே விளங்கிக்கொண்டுவந்தாள். பரிசுத்த தேவமாதா சூசையப்பரோடு உண்மையான விவாக சம்பந்தம் பூண்டிருந்தாளென்பது மெய். ஆயினும், இந்த விரத்தபத்தாவாகிய சூசையப்பர் தேவதாயாரது கன்னிமையைப் பாதுகாக்கவும், மனோவாக்குக் கெட்டாத மனுஷாவதாரப் பரம இரகசியத்திற்கு ஓர் மறைதிரையாய் விளங்கவும், மரியம்மாளைத் தாயாயுடைய தேவகுமாரனை வளர்த்துக் காத்துவரவுமே சருவேசுரனால் நியமிக்கப்பட்டவராயிருந்தார்.

அர்ச். தேவமாதா மரித்து அடக்கஞ்செய்யப்பட்டபின் உயிர்த்து எழுந்து மோக்ஷத்திற்கு ஆரோபணமானாள் என்னும் விசுவாசமுந் திருச்சபையில் வழங்கிக்கொண்டுவருகின்றது. எல்லாப் பரிசுத்ததனத்திற்கும் ஊற்றாயிருக்குங் கடவுளின் திருத்தேகமானது தன் உதரத்தில் உருவாகும்படியாக விளங்கின நின்மல கன்னியானவளுடைய திருத்தேகமும் அழிவுக்குள்ளாகாதிருப்பது நியாயமேயாம். பரமநாயகி ஆத்தும சரீரத்தோடு பரலோகப் பிரவேசஞ்செய்த திருநாள் ஆவணி மீ 15-ந் உ திருச்சபையிற் கொண்டாடப்பட்டுவருகின்றது.

# 11-ம் அதிகாரம்

## யேசுக்கிறீஸ்துநாதரின் பேரில்

1. யேசுக்கிறீஸ்துநாதரின் பிறப்பும், சீவியமும். 2. அவரது திரு மரணம். 3. இரக்ஷணியப் பரம இரகசியம். 4. உத்தானமும் ஆரோகணமும்.

## 1-ம் பிரிவு

### யேசுக்கிறீஸ்துநாதரின் பிறப்பும் சீவியமும்

#### I. கிறீஸ்துநாதரின் பிறப்பு

185. சருவேசுரனுடைய மட்டற்ற தயாளம் மனிதன்மேல் விளங்கும்படி ஆயிரமாயிரம் வருஷங்களாக சருவசாதியாராலும் ஆவலோடு காத்திருக்கப்பட்டவராகிய உலகமீட்பர் பிறக்க வேண்டிய காலம் நிறைவேறி, பூர்வீக தீர்க்கதரிசனத்தின்படி யூதாவின் கோத்திரத்திலிருந்து செங்கோலும் அகன்றுபோய், உலகமெங்கும் சமாதானமும் விளைந்து, தேவசுதனைக் கர்ப்பந்தரித்திருந்த அற்புத கன்னித்தாய்க்கு ஒன்பது மாசங்களும் பூரணமாய் முற்றிய அளவில் சேசார் அகுஸ்து என்னும் ரோம சக்கிரவர்த்தி தன் இராச்சியம் அடங்கலும் குடிமதிப்பு எழுதப்படவேண்டுமென்று கட்டளை பிறப்பித்தான். ஆதலால், குடும்பத்தலைவர் எல்லாரும் பேர்எழுதுவிக்கும்படி தங்கள் தங்கள் சொந்த ஊருக்குப் போனார்கள். அப்பொழுது அர்ச். சூசையப்பரும், தாம் தாவீது வமிசத்தாரும் குடும்பத்தாருமாயிருந்தபடியால், தமக்கு மனைவியாகிய மரியம்மாளோடு குடிமதிப்பெழுதப்படும்படி கலிலேயாநாட்டிலுள்ள நசரேத்தூரிலிருந்து யூதேயாநாட்டிலுள்ள பெத்திலேகேம் என்னும் தாவீதுவின் ஊருக்குப் போனார். அங்கேவந்து கூடியிருந்த திரளான சனங்களால் சத்திரங்களெல்லாம் தேங்கியிருந்தபடியால் சூசையப்பரும் மரியம்மாளும் தங்களுக்கு இடமில்லையென்றுகண்டு மலைச்சரிவிலிருந்த ஒரு குகையிற் போய் ஒதுங்கினார்கள். அங்கிருந்தபோதே அர்ச். தேவமாதா தமது முதற்பேறான குமாரனைப் பெற்றுத் துணிகளாற்சுற்றி முன்னணையிற் கிடத்தினாள். பெத்திலேகேம் நகரியிற்றானே மேசியா பிறந்தருளுவார் என்று மிக்கேயாஸ் என்னும் தீர்க்கதரிசியானவர் எழுநூற்றைம்பது வருஷங்களுக்கு முன் கூறியிருந்த தீர்க்கதரிசனமானது இவ்வண்ணமே நிறைவேறலாயிற்று.

முன்னிட்டியிலே தெய்வீக குழந்தையானவர் பிறந்தருளியவுடனே அச்சுபசங்கதியைச் சம்மனசுகளே மனிதருக்குத் தெரிவித்தார்கள். எவ்வாறெனில், அப்பொழுது மேய்ப்பர்கள் அந்நாட்டில் வயல்வெளியில்தங்கி இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் சருவேசுரனுடைய தூதன் அவர்களுக்குத் தோன்றவே, கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது. அவர்கள் மிகவும் பயந்தார்கள். தேவதூதனோ அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள், இதோ எல்லாச்சனங்களுக்கும் மிகுந்த சந்தோஷத்தையுண்டாக்குஞ் சுபசெய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்; இன்று கர்த்தராகிய இரக்ஷகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்; பிள்ளையைத் துணிகளிற்சுற்றி முன்னணையில் கிடத்தியிருக்கக் காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம் என்றார். அக்ஷணமே வானசேனையின் திரள் அந்தத் தூதனோடுதோன்றி உந்நதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே நல்ல மனதுடைய மனிதருக்குச் சமாதானமும் உண்டாகக்கடவதாக என்று பாடித் தேவனைத் துதித்தார்கள். (அர்ச். லூக். 2-ம் அதி.) தேவதூதர்கள் தங்களைவிட்டு மறைந்தபின் இடையர்கள் தீவிரமாய்ப் பெத்திலேகேமுக்குச் சென்று முன்னிட்டியில் நுழைந்தவுடனே மரியம்மாளையும் சூசையப்பரையும் வைக்கோலணையின்மீது கிடத்தியிருந்த குழந்தையையுங் கண்டு அத்திருக் குழந்தையை வணங்கிச் சருவேசுரனை ஸ்தோத்திரித்துத் திரும்பிப் போனார்கள். கர்த்தர்பிறந்த திருநாளை திருச்சபை மார்கழி ௴ 25-ந் ௳ கொண்டாடி வருகின்றது.

## II. யேசுக்கிறீஸ்துநாதரின் பாலத்துவம்

**186. யேசுநாதர் விருத்தசேதனம் பெற்றது.** பாலன் பிறந்த எட்டாம்நாள் அவருக்கு விருத்தசேதனஞ்செய்யப்பட்டது. இந்தப் பழைய சடங்கைச் சருவேசுரன்தாமே ஆபிரகாம் என்பவருக்குக் கற்பித்திருந்தார். திவ்வியபாலன் மெய்யான தேவனாகவும் அளவற்ற பரிசுத்தத்தனமுள்ளவராகவுமிருந்தபடியால், அவர் பாவிகளாகிய மனிதருக்காக விதிக்கப்பட்டிருந்த அந்தச்சடங்கை அனுசரிக்கக் கடமைபூண்டவரல்ல என்பது நிச்சயம். ஆயினும், மனிதரெல்லாரும் தேவகற்பனைகளுக்கு எப்போதுங் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்று முன்மாதிரிகாண்பிக்கும் பொருட்டு அவரும் அதை அனுசரிக்கத் திருவுளமானார். முன்னே தேவதூதனால் மரியம்மாளுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்த யேசு என்னுந் திருநாமமும் பாலன் விருத்தசேதனஞ் செய்யப்பட்ட



போது அவருக்குச் சூட்டப்பட்டது. விருத்தசேதனத்திருநாள் வருஷப்பிறப்பாகிய தைமாசம் முதலாந்திகதி கொண்டாடப்படுகின்றது.

**187. யேசுநாதர் பிரத்தியட்சமானது.** உலக இரக்ஷகர் பிறந்த செய்தியை இடையருக்கு ஒரு தேவதூதன் அறிவித்ததுபோலவே, கீழ்த்திசையிலிருந்த மூன்று சாஸ்திரிகளுக்கு நவமாய்த் தோன்றின ஒரு நக்ஷத்திரம் அதைத் தெரிவித்தது. இச்சாஸ்திரிகள் அரசராயிருந்தார்களென்று பரம்பரையினால் அறிகிறோம். உலக இரக்ஷகர் பிறக்கும்போது ஒரு நக்ஷத்திரம் நவமாகக் கிழக்கிற் தோன்றுமென்று ஒரு தீர்க்கதரிசனம் முன் சொல்லியிருந்ததை அவர்களறிந்திருந்தார்கள். ஆதலால், அந்த வானசோதியைக்கண்ட அளவில் உலகமீட்பர் பிறந்துவிட்டாரென்று தங்களுக்குள்ளே தீர்மானித்துக்கொண்டு நக்ஷத்திரமே வழிகாட்டப் புறப்பட்டு யெருசலேமுக்குப் பிரயாணமானார்கள். அவர்கள் அப்பட்டினத்திற்கு வந்து சேர்ந்தவுடனே நக்ஷத்திரம் மறைந்துபோயிற்று. ஆயினும், யூதரின் அரசனாகிய ஏரோது மேசியா எங்கே பிறந்திருப்பாரென்று வேதபாரகர் தனக்குத் தெரிவித்ததின்படி பெத்திலேகேமிற்றானே அவர் பிறந்திருக்கவேண்டுமென்று அறிவிக்க, அதைக்கேட்டு அவ்வூருக்குப் புறப்படுகையில், முன் மறைந்துபோயிருந்த நக்ஷத்திரம் மீளவும் தோன்றி அவர்களுக்கு வழிகாட்டிக்கொண்டுபோய்ப் பாலன் இருந்த இடத்திற்குமேற் தரித்தது. அதைக் கண்ட சாஸ்திரிகள் அந்தவீட்டுக்குள்ளே பிரவேசித்துப் பிள்ளையையும் அதின் தாயாராகிய மரியம்மாளையுங் கண்டு சாஷ்டாங்கமாய் விழுந்து ஆராதித்தார்கள். பின்பு, திவ்விய பாலன் தேவன்தாமே என்று காண்பிக்கத் தூபத்தையும், இராசாவென்று காண்பிக்கப் பொன்னையும், அழிவுள்ள மனிதனென்று காண்பிக்க வெள்ளைப் போளத்தையும் அவருக்குக் காணிக்கை வைத்தார்கள். இதெல்லாம் முடிந்தபின் சாஸ்திரிகள் தங்களூருக்குத் திரும்பிப்போக ஆயத்தப்பட்டசமயத்தில், பாலன்மேல் வஞ்சனையான கருத்துக்கொண்டிருந்த ஏரோதுவைச் சந்திக்காமல் வேறுவழியால் தங்களூருக்குப் போகவேண்டுமென்று தேவதூதன் தெரிவித்தபடியால், அவர்கள் வேறு வழியாகத் தங்களூருக்குத் திரும்பிப்போனார்கள். கிறீஸ்துநாதர் சாஸ்திரிகளுக்குப் பிரத்தியட்சமானதிருநாளைத் திருச்சபை தைமாசம் ஆறாந்திகதி கொண்டாடிவருகின்றது. இத்திருநாள் சாதாரணமாக மூவிராசாக்கள் திருநாளென்று சொல்லப்படும்.

**188. பாலன் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.** பாலன் பிறந்த நாற்பதாம்நாள் அர்ச். கன்னிமரியம்மாளும்

அர்ச். சூசையப்பரும் அவரை யெருசலேமிலுள்ள தேவாலயத்திலே சருவேசுரனுக்கு ஒப்புக்கொடுத்து, மோசேசுவின் நியாயப்பிரமாணத்தால் கற்பிக்கப்பட்டிருந்த காணிக்கையையுஞ் செலுத்தினார்கள். நியாயப்பிரமாணமானது, தலைச்சன்பிள்ளையாக ஆண்குழந்தையைப் பெற்ற தாயுந் தகப்பனும் அதைத் தேவாலயத்தில் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்துக் காணிக்கையால் மீட்டுக்கொள்ளவேண்டுமென்று கற்பித்திருந்தது. ஐசுவரியவான்கள் ஒரு ஆட்டுக்குட்டியோடு ஒரு காட்டுப்புறாவையாவது ஒரு மாடாப்புறாவின் குஞ்சையாவது காணிக்கை செலுத்தவும், வறியவர்களோ இரண்டு காட்டுப்புறாக்களையாவது, இரண்டு புறாக்குஞ்சுகளையாவது காணிக்கை செலுத்தவும் கடமை பூண்டவர்களாயிருந்தார்கள். திவ்விய பாலனைச் சருவேசுரனுக்கு ஒப்புக்கொடுத்து மீட்ட சமயத்தில், முப்போதுங் கன்னியாய் விளங்கின அர்ச். மரியம்மாள் அசுத்தத்தோடு கர்ப்பந்தரித்துப் பிள்ளைகளைப்பெறுந் தாய்மாருக்கு என்று விதிக்கப்பட்டிருந்ததாகிய சுத்திகரச் சடங்கைத் தானும் அனுசரித்துக்கொண்டாள். திவ்விய குழந்தையைத் தாய் தந்தையர் தேவாலயத்திற்குக் கொண்டுபோனபோது, நீதிமானாகிய சிமியோன் என்னும் விருத்தாப்பியரும் அன்னா என்னும் தீர்க்கதரிசினியும் அக்குழந்தை மெய்யான மேசியாவென்றும் உலக இரக்ஷகரென்றும் சகலசாதிகளுக்கும் உதித்த பிரகாசமென்றும் இசிறவேல் சனத்தின் மகிமைப் பிரதாபமென்றும் தெளிந்து பிரசித்தப்படுத்தினார்கள். பாலன் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்ட திருநாளும், தேவமாதாவின் சுத்திகரத் திருநாளும் மாசிமாசம் இரண்டாந்திகதி கொண்டாடப்படுகின்றன. இந்தத் திகதியிலே கோவிலில் மெழுகுதிரிகள் ஆசீர்வதிக்கப்படுவது வழக்கம்.

189. **திவ்வியபாலன் எகிப்துதேசத்துக்குக் கொண்டுபோகப்பட்டது.** மேசியாவாகிய திருக்குழந்தை யூதருக்குப் புது அரசனாய்ப் பிறந்திருந்ததென்று சாஸ்திரிகள் சொல்லக்கேட்ட ஏரோது அக்குழந்தையை நாசஞ்செய்துவிட யோசித்தான். அக்குழந்தை பெத்தலேகேம் எனும் ஊரில் பிறந்திருக்கவேண்டுமென்று வேதபாரகர் அவனுக்கு நிச்சயித்திருந்தபடியால், அவன் அவ்வூரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பிறந்திருந்த சிறு பிள்ளைகளை எல்லாம் கொன்றுவிட்டால் தான்நினைத்த குழந்தையும் அகப்பட்டு மாய்ந்துபோகுமென்று தனக்குள்ளே தீர்மானித்து அப்பிள்ளைகளையெல்லாம் கொல்லக் கட்டளையிட்டான். ஆயினும், ஒரு தேவ தூதன் இரவில் அர்ச். சூசையப்பருக்குத் தோன்றி, அரசனுடைய கொடியகருத்தை அவருக்கு அறிவித்து, தாமத



மின்றிப் பிள்ளையையும் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்து தேசத்திற்கு ஓடிப்போய் அங்கே வாசம்பண்ணவேண்டும் என்று கற்பிக்க, அவர் அப்படியே செய்தார். ஏரோது மாணித்தபின் தேவதூதன் மீளவும் அர்ச். சூசையப்பருக்குத் தரிசனையாகி இசிறவேல் தேசத்திற்குப் போகச் சொன்னபடியால், அவர் தாயையும் பிள்ளையையுங் கூட்டிக்கொண்டு அங்கே போனபோது, ஏரோதுவின் குமாரனாகிய அர்க்கலாவுஸ் தன் பிதாவுக்காக யூதேயாவில் செங்கோல் நடத்திக்கொண்டிருக்கிறானென்று கேள்விப்பட்டுப் பயந்திருக்கையில், ஒரு தேவதூதனால் எச்சரிக்கப்பட்டு நசரேத்தூருக்குப் போய் அங்கே வாசம்பண்ணிக்கொண்டிருந்தார்.

190. **யேசுநாதர் நசரேத்தூரிலே நடத்தின அந்தரங்க சீவியம்.** திவ்விய இரட்சகர் நசரேத்திலே நடத்திக்கொண்டுவந்த நெடுஞ் சீவியத்தைப்பற்றிச் சுவிசேஷ நூல்களில் அதிகமாய்ப் பேசப்பட்டிருக்கவில்லை. பாலன் ஞானத்திலும் வயதிலும் வளர்ந்துகொண்டுவந்தாரென்றும், சருவேசுரனுடைய கிருபை அவர்மேலிருந்ததென்றும், அர்ச். கன்னிமரியம்மாளுக்கும் அர்ச். சூசையப்பருக்குங் கீழ்ப்படிந்து இருந்தாரென்றும்மாத்திரம் அவைகள் நமக்குத் தெரிவிக்கின்றன. திவ்வியபாலன் மாதாவோடும் சூசையப்பரோடும் வேலை செய்துகொண்டும், அவர்களோடு வருஷந்தோறும் தேவாலயத் திருவிழாக்களுக்குக் கிரமமாய்ப் போய்க்கொண்டும் வருவார். கீழ்ப்படிதல் பரிசுத்தம் ஞானம் அடக்கம் முதலான சுகிர்தபுண்ணியங்களாற் சிறுவர்களுக்குத் திவ்விய மாதிரியாய் விளங்கிவருவார். அவர் சகலத்தையும் அறிந்தவராயிருந்தாலும், பிரசித்தமான சீவியத்திற்கென்று பரமபிதாவாற் குறிக்கப்பட்ட காலந் தமக்கு வருந்தனையும் உலகத்திற்கு அறியப்படாதவர் போல சீவித்துக்கொண்டு வந்தார். ஆயினும், அவர் பன்னிரண்டாம் பிராயத்தில் தாய் தந்தையரோடு பாஸ்குப்பண்டிகைக்காகத் தேவாலயத்திற்குப் போனசமயத்தில், கொண்டாட்டம் முடிந்து தாய்தந்தையர் ஊருக்குத் திரும்பியபோது அவர் அவர்களையறியாமல் தேவாலயத்திலே தங்கி வேதாசாரியர்களோடு தர்க்கம் பண்ணிக்கொண்டிருந்துவிட்டார். மரியம்மாளும் அர்ச். சூசையப்பரும் வெவ்வேறுவழியாய் ஒரு நாள் முழுதும் பிரயாணம்பண்ணியபின் குமாரன் தங்களோடில்லையென்றுகண்டு, மிகுந்த வியாகுலத்தோடு மூன்றுநாள்மட்டுந் தேடிக் காணாமல், மூன்றாம்நாள் தேவாலயத்திற்குத் திரும்பிப் போனபோது அவர் சாஸ்திரிகள் மத்தியிலுட்கார்ந்திருந்து அவர்கள் தம்மிடத்தில் வினாவியவைகளுக்கு விடைகொடுக்கிறதையும்

தாமே எல்லாருக்கும் ஆச்சரியத்தைவருவிக்கும்மேலான ஞானம் பொருந்திய கேள்விகளை அவர்களிடத்திற் கேட்கிறதையுங் கண்டார்கள். இரட்சகராகிய யேசுநாதர் ஏறக்குறைய முப்பதுவயது மட்டும் நசரேத் தூரில் மிகுந்த தரித்திரத்தோடு மறைவாய்ச் சீவித்துக் கொண்டு வந்தார்.

### III. யேசுக்கிறீஸ்துநாதரின் பகிரங்க சீவியம்

கர்த்தர் தம்மை மெய்யான மேசியாவாக மனிதருக்குக் காண்பிக்கும்படி செலவழித்தகாலமே அவருடைய பகிரங்க சீவியமெனப்படும். அவர் ஞானஸ்நானம்பெற்று வனாந்தரத்திற்குப் போய்த் தவம்புரிந்ததும், சனங்களுக்குப் பிரசங்கம் பண்ணினதும், அற்புதஞ் செய்ததும், மேலான புண்ணியங்களை அனுசரித்து வந்ததும் அச்சீவியத்தின் பிரதான சம்பவங்களாம்.

191. **யேசுநாதர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதும் வனாந்தரத்திற் தவம்புரிந்ததும்.** யேசுநாதருக்கு முப்பதாம் பிராயமானவுடனே அவர் தம்முடைய முன்னோடியாகிய ஸ்நாபக அருளப்பரிடத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளத் திருவுளமானார். அர்ச். ஸ்நாபக அருளப்பருடைய தகப்பனுக்குச் சக்கரியாசென்றும் தாய்க்கு எலிசபேத்தென்றும் பெயர். எலிசபேத்து அர்ச். கன்னிமரியம்மாளுக்கு மைத்துனியாயிருந்தாள். ஸ்நாபக அருளப்பருடைய பிறப்பும், முன்னோடி உத்தியோகமும், பிரசங்கமும், தவமும், பரிசுத்தமுமாகிய இவையெல்லாம் ஒரு தேவதூதனால் முன்னேறவே அறிவிக்கப்பட்டிருந்தன. எலிசபேத்தம்மாள் இவரைக் கர்ப்பந்தரித்திருந்தபோதே அர்ச். தேவமாதா அவளைச் சந்தித்து "என்னாத்துமந் தேவனை மகிமைப்படுத்துகின்றது" என்னுஞ் சங்கீதத்தைப் பாடிச் சருவேசுரனுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரஞ் செலுத்தினாள். அருளப்பர் வனாந்தரத்திற் சீவித்திருந்து, பின் யோர்தான்நதிக் கரையிலே தங்கி, தவம்பண்ணவேண்டுமென்று போதிக்கவும், தமது பிரசங்கத்தைக் கேட்க ஆவலோடு வந்துகூடின திரளான யூதர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கவும், இரட்சகரின் வரவு சமீபித்துவிட்டதென்று தெரிவிக்கவுந் தொடங்கினார். அருளப்பருடைய ஞானஸ்நானத்தால் பாவமன்னிப்பு விளையவில்லை. அது ஒரு சமயாசாரமாகவும் தவஞ் செய்யக் கடமைப்படுத்துவதாகவும் புதிய ஏற்பாட்டின் மெய்யான ஞானஸ்நானத்திற்கு ஓர் ஆயத்தமாகவும் இருந்தது. யேசுநாதரும் பாவிகளோடுகலந்து அவர்களைப்போல ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்படி தம்மிடத்தில்வந்ததைக்கண்ட அருளப்பர், அவர் மெய்யான மேசியாவென்றறிந்து அவரை வணங்கினார்.



இரட்சகரை எல்லாருக்குந் தெரிவிக்கும்பொருட்டுச் சருவேசுரனும் தமது இஸ்பிரீத்துசாந்துவை ஓர் வெள்ளைப்புறாவினுருபமாக அவர்மேல் தங்கப்பண்ணி, இவர் என்னுடைய நேசகுமாரன், இவர்மேற் பட்சமாயிருக்கிறேன் என்ற சத்தத்தையுங் கேட்கச் செய்தார்.

யேசுநாதர் ஞானஸ்நானம் பெற்றபின்பு வனாந்தரத்திற்கு எழுந்தருளி அங்கே நாற்பதுநாள் அரியதவஞ்செய்து முடித்தபோது பிசாசால் சோதிக்கப்பட்டார். ஒருவனுடைய சீவியம் எவ்வளவு பரிசுத்தமானதாயிருப்பினும் அது இன்னும் தந்திர சோதனைகளுக்கு ஏதுவாக இருக்கின்றதென்றும், தந்திரசோதனைகளோடு போர்செய்து செயங்கொள்ளுவதெப்படியென்றும் நமக்குக் காண்பிக்கும்படியாகவே அவர் சோதிக்கப்படச் சித்தமானார்.

192. **யேசுநாதருடைய திவ்விய போதகம்.** கர்த்தர் வனாந்தரத்தைவிட்டுவந்து, தவத்தைப் பிரசங்கிக்கவும் தம்முடைய ஞான இராச்சியத்தை அறிவிக்கவுந் தொடங்கினார். அவர் தம்மைப் பின்சென்றுகொண்டிருந்த பெருந்தொகையான சீஷர்களுக்குள் பன்னிரண்டுபேரைத் தெரிந்தெடுத்து அப்போஸ்தலராக ஏற்படுத்தினார். அப்போஸ்தலன் என்பதற்கு அனுப்பப்பட்டவனென்பது அர்த்தமாம். அப்போஸ்தலர்களுக்குட் பெரும்பாலார் வறிய மீன்பிடிகாரராயிருந்தார்கள். யேசுநாதர் அவர்களைச் சுவிசேஷப் பிரசங்கிகளாகவும் தமது அற்புதங்களுக்கும் விசேஷமாய் உத்தானத்துக்குஞ் சாட்சிகளாகவுமிருக்கவேண்டுமென்று நியமித்து அவர்களை வேதபோதகத்திற் பழக்கிக்கொண்டுவந்தார். அவர்களோடுகூட பட்டினம் பட்டிக்காடுகள்தோறுஞ் சென்று எல்லாருக்குஞ் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டு வருவார். விசேஷமாய் வறியவர்களுக்கே பிரசங்கம்பண்ணுவார். அறிவீனரைத் தளராத தயவுசிநேகத்தோடு படிப்பிப்பார். வருந்தினவர்களைத் தேற்றுவார். பாவிகளை மனந்திருப்புவார். தமது தெய்வீக போதகத்தை அநேகாநேக புதுமைகளால் அத்தாட்சிப்படுத்துவார். நற்செய்தி என்றர்த்தமுள்ள சுவிசேஷமென்னுஞ் சொல் யேசுநாதருடைய திவ்விய போதகத்திற்கு நன்றாய்ப் பொருந்தும். எவ்வாறெனில், முன் வாக்குப்பண்ணப்பட்டிருந்தவராகிய மீட்பர் வந்துவிட்டாரென்றும், உலகத்தின் பாவங்களைப் போக்கி மனிதரைச் சருவேசுரனோடு உறவாக்க நியமிக்கப்பட்டவரும் சகல சாதிகளும் எதிர்பார்த்திருந்தவருமாகிய அந்த உலகமீட்பர் தாமேயென்றும் இவைமுதலான சந்தோஷ சங்கதிகளையே அவர் மனிதருக்குத் தெரிவித்துக்கொண்டு வந்தார். அர்ச். மத்தேயு அர்ச். மாற்கு

அர்ச். லூக்கா அர்ச். அருளப்பர் என்னும் நாலுபேராலுந் தனித்தனியே எழுதப்பட்ட யேசுநாதருடைய திருச்சீவிய சரித்திரத்திற்கும் சுவிசேஷம் என்று பேர்வழங்கும்.

சுவிசேஷ போதகமானது 1-வது, சருவேசுரனையும் அவரது இலட்சணங்களையும், 2-வது, உலகத்திற்கு இரக்ஷகராகவும் அவசிய மத்தியஸ்தராகவும் விளங்கும் யேசுக்கிறீஸ்துநாதர் மனித இரட்சணியத்திற்காகச் செய்து முடித்தவைகளையும், 3-வது, சருவேசுரன் மனிதனுக்குக் குறித்த கதியையும் அதை அடைவிக்கும் உபாயங்களையும் விளக்கிக் காண்பிப்பதிலேயே விசேஷமாயடங்கும். நித்தியராகிய சருவேசுரனை விசுவசிப்பதும், மெய்யான தேவ குமாரனும் மெய்யான மனிதகுமாரனுமாகிய யேசுக்கிறீஸ்துநாதரை விசுவசிப்பதும், தேவகற்பனைகளையெல்லாம் அனுசரித்து நடப்பதுமே கதியடைவிக்கும் உபாயங்களெனப்படும். ஆத்தும ஈடேற்றத்தின் பொருட்டு விசுவசிக்கவேண்டியவைகள் எவை அனுசரிக்கவேண்டியவைகள் எவையென்று படிப்பித்து, மனிதரை நித்திய சீவியத்திற்குச் சுதந்தரவாளிகளாக்கும்படியாகவே யேசுக்கிறீஸ்துநாதர் சருவேசுரனுடைய ஸ்தானாபதியாக இவ்வுலகத்திற்கு எழுந்தருளிவந்தார். அவர் பண்ணின பிரசங்கங்கள் எல்லாம் மனிதருடைய இருதயத்திலே தேவசிநேகத்தையும் பிறர்சிநேகத்தையும் எழுப்புகிறவைகளாயிருந்தன. சருவேசுரனுக்கு ஊழியம்பண்ணி மோட்சத்தைச் சுதந்தரித்துக்கொள்ளத் தேடுவதே மனிதருக்கு முக்கியமான கடமையென்று அவர் எப்போதும் போதித்துக்கொண்டுவருவார்.

**193. யேசுக்கிறீஸ்துநாதர் அற்புதங்கள் செய்தது.** மேசியாவைக்குறித்துச் சொல்லப்பட்டிருந்த பூர்வ தீர்க்கதரிசனங்களெல்லாம் தம்மிடத்தில் நிறைவேறும்படியாக விளங்கின யேசுநாதர், மெய்யான தேவசுதனும் மெய்யான மேசியாவும் தாமேயென்று ஒப்பிக்கும்பொருட்டு அநேக அற்புதங்களைச் செய்தருளினார். அவருடைய அற்புதங்களெல்லாஞ் சனங்கள் முன்பாகவே செய்யப்பட்டன. அவரை மெய்யான மேசியாவென்று ஏற்றுக்கொள்ளாத அவருடைய சத்துருக்களும் அவ்வற்புதங்களைக் கண்ணாரக் கண்டிருந்தார்கள். தாம் மெய்யாகவே சருவேசுரனால் அனுப்பப்பட்டவராகையால் தம்முடைய நாமத்தாலுந் தமது மத்தியஸ்தத்தாலுமேயன்றி வேறுவழியால் ஆத்துமஈடேற்றமில்லை என்பதற்கு அத்தாட்சியாக அவர் மேலும்மேலும் புதுமைகளைச் செய்து, தம்முடைய விரோதிகளை நோக்கி: நீங்கள் என்னுடைய போதகத்தை விசுவசியாவிட்டாலும் என் கிரியைகளையாவது விசுவசியுங்கள், அவைகளே என்னைப்பற்றிச் சாட்சியிடுகின்றனவென்பார். மீளவும் ஸ்நாபக அருளப்பரால் அனுப்பப்பட்ட சீஷர்கள் அவரிடத்தில் வந்து மேசியா நீர்தானோவென்று வினவிய சமயத்தில், அவர், நோயாளிகளையுங் கொடிய வியாதிக்காரர்களையும் பேய்பிடித்தவர்களையும் அவர்கள் கண்முன்பாகக் குணமாக்கி அநேகங் குருடருக்குப் பார்வையளித்தார். பின்பு, அருளப்பருடைய தூதர்களை நோக்கி அவர் பிரதியுத்தரமாகச் சொன்னதாவது: நீங்கள் போய்க் கண்டவைகளையும் கேட்டவைகளையும் அருளப்பருக்குச் சொல்லுங்கள். குருடர் பார்வையடைகிறார்கள்; சப்பாணிகள் நடக்கிறார்கள்; செவிடர் கேட்கிறார்கள்; குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள்; மரித்தோர் எழுந்திருக்கிறார்கள்; தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகின்றது என்றார். அன்றியும் ஒருநாள் யூதர் அவரைச் சூழ்ந்து: நீர் கிறீஸ்துவானால் எங்களுக்குத் தெளிவாய்ச் சொல்லுமென்றார்கள். அப்போது யேசுநாதர் அவர்களை நோக்கி: அதை உங்களுக்குச் சொன்னேன். நீங்களோ விசுவசிக்கவில்லை. என் பிதாவின் நாமத்தினால் நான் செய்யுங் கிரியைகளே என்னைக் குறித்துச் சாட்சியிடுகின்றன என்று திருவுளம்பற்றினார். உள்ளபடியே, திவ்விய இரட்சகர் தமது பகிரங்க சீவியகாலம் முழுதும் இடைவிடாமல் அற்புதங்களைச் செய்துகொண்டுவந்தார். அவர் ஒரேவார்த்தையால் சகலவித வியாதிஸ்தரையும் குணப்படுத்துவார். குருடருக்குப் பார்வையையளிப்பார். செவிடரைக் கேட்கப்பண்ணுவார். ஊமைகளைப் பேசப்பண்ணுவார். திமிர்வாதக்காரரை ஆரோக்கியப்படுத்துவார். அப்பங்களை அதிகரிக்கப்பண்ணுவார். மரித்தவர்களை உயிர்ப்பித்தும் சண்டமாருதங்களை அமர்த்தியும் வருவார். தமக்குச் சித்தமாகும்போது மனிதருடைய கண்களுக்கு மறைந்தருளுவார். மனிதருடைய அதி அந்தரங்கமான எண்ணங்களையும் வருங் காரியங்களையும் அறிந்து கூறுவார். அவர் இவ்வண்ணமே மூன்று வருஷகாலமாகத் தமது தேவவல்லமையைப் புலப்படும் பிரசித்தமுமான புதுமைகளாற் காண்பித்துத் தாம் மெய்யான தேவன் என்பதைத் திறம்பாத அத்தாட்சிகளால் யாவர்க்கும் ஒப்பித்தருளினார்.



**194. யேசுநாதர் மேலான புண்ணியங்களை அனுசரித்தது.** பரம இரக்ஷகருடைய சீவியம் முழுதும் அவருடைய உன்னத சாங்கோபாங்கமான தெய்வீக போதகத்துக்கு ஒத்ததாக இருந்தது. அவர் எல்லாப் புண்ணியங்களையும் அனுசரித்துக்கொண்டுவந்தார். ஆயினும், தாழ்ச்சி சாந்தம் பொறுதி பத்திவேகம் பிறர்சிநேகம் இரக்கம் ஆகிய இவ்வரிய புண்ணியங்களிலேயே அவர் யாவருக்கும் விசேஷ முன்மாதிரியாய் விளங்கிக்

கொண்டுவந்தார். சிறுபிராயத்திற்குரிய சிரவணத்தையும் கீழ்ப்படிதலையும் அனுசரித்துச் சிறுவருக்கு முன்மாதிரிகாண்பிக்கும்பொருட்டே தாம் ஒரு சிறு பாலனாய்ப் பிறக்கத் திருவுளமானார். தரித்திரம் தற்பரித்தியாகமாகிய புண்ணியங்களைச் சீவியகாலமுழுதும் இடைவிடாது அனுசரித்துக்கொண்டுவந்தார். ஒரு வறிய மாதாவிடத்திற் பிறக்கவும் முப்பதாண்டளவும் உலகத்தாரால் அறியப்படாமல் மறைவாகச் சீவிக்கவுந் திருவுளமானார். அவர் ஒருகாலுந் தமது மகிமையைத் தேடினவரல்ல. தாம் புதுமைகளைச் செய்தபோதும் அவைகளைப் பிரசித்தப்படுத்தவேண்டாமென்று கற்பித்துவந்தார். ஐசுவரியங்களை முழுதும் வெறுத்துத் தரித்திரத்தையே தமக்கு ஓர் அருமையான அணிகலமாக்கிக் கொண்டார். சங்கை வெகுமானங்களை வெறுத்து அவமானங்களையே தேடினார். இன்பங்களைத் துவேஷித்துப் பீடைகளையே ஆசித்தார். மாறாத சாந்தகுணத்தை எப்போதும் அனுசரித்துப் பெரும் பாவிகளைமுதலாய்த் தம்மிடத்தில் வரச்செய்து, அவர்களுடைய மனதையிளக்கி நல்வழியிற் சேர்க்கும்பொருட்டு அவர்களோடு போசனம்பண்ணவும் பின்வாங்கினவரல்ல. தம்மை ஊதாரிப் பிள்ளையின் பிதாவாகக் காண்பித்து பாவிகளை அன்பாதரவோடு ஏற்றுக்கொண்டார். சகலவித துன்பதுரிதங்களிலும் மாறாத பொறுதியும் அமரிக்கையும் அவரிடத்தில் விளங்கின. எப்போதும் கஸ்தி உபத்திரவங்களைத் தேடி அனுபவித்துவந்தார். பசியால் வருந்தினார். தாகத்தாற் பீடிக்கப்பட்டார். இளைப்புற்றார். தரித்திரத்தால் விளையுங் குறைபாடுகளையெல்லாம் சந்தோஷத்தோடு சகித்தார். உலகத்தில் அவருக்குச் சொந்தமாயிருந்த தொன்றுமில்லை. தலைசாய்க்கமுதலாய் அவருக்கு இடமில்லாதிருந்தது. மனிதருக்காகத் திருப்பாடுகளை அனுபவித்தகாலத்திலே தமது பராக்கிரமமுந் தெய்வீகமுமான பொறுமையை இன்னும் அதிகமாய் விளங்கச்செய்தார். நிந்தையவமானங்களாற் பூரிக்கப்பட்டபோதும், அகோரமான வேதனைகளுக்கு உள்ளாக்கப்பட்ட சமயத்திலும் அவர் சற்றேனும் முறைப்பட்டவரல்ல. குற்றவாளியைப்போலச் சிலுவையிலே அறைந்து கொல்லப்பட்ட தருணத்திலே அவர் தம்முடைய விரோதிகளுக்காகவுங் கொலைக்காரருக்காகவும் பரம பிதாவை வேண்டிக்கொண்டார். அவர் தமது சீவியத்தையெல்லாம் செபதியானங்களிற் செலவழித்துக்கொண்டுவந்தார். அடிக்கடி இராக்காலமுழுதையுந் தியானத்திலே போக்குவார்.

இவ்வாறே மனுஷருக்கு இரக்ஷகராய் எழுந்தருளிவந்த யேசுக்கிறீஸ்துநாதர் தம்முடைய சத்துருக்கள் முதலாய்த் தம்



மிடத்தில் யாதோர் குற்றமுங் கண்டுபிடிக்கக்கூடாதவிதமாய் அதியுந்நத சாங்கோபாங்கம்பொருந்திய பரிசுத்தத்தோடு சீவித்துக்கொண்டுவந்தார். ஆதலால், அவருடைய சீவியமானது ஞானிகளுடைய சீவியத்தையும் சுத்தவாளருடைய சீவியத்தையுங் கடந்து கடவுளுக்கேயுரிய சீவியமாயிருக்கின்றதென்பதற்குச் சந்தேகம் இல்லை.

---

## 2-ம் பிரிவு

## யேசுநாதருடைய திருப்பாடுகளும் மரணமும்

### I. அவருடைய திருப்பாடுகள்

195. **அவர் யூதராற் பிடிபட்டது.** திவ்விய இரட்சகராகிய யேசுக்கிறீஸ்துநாதருடைய பரிசுத்த சீவியத்தையும் நின்மல போதகத்தையும் பிரஸ்தாப புதுமைகளையுங் கண்டு ஆச்சரியப்பட்ட சனமெல்லாம் அவரைப் பின்பற்றிக்கொண்டிருக்கையில், யூதருக்குட் பிரதானிகளாய் விளங்கின பரிசேயர் சதுசேயரும் வித்தியாபாரகரும் அவர்மேற் தணியாத பொறாமையுற்று அவரை மிகுதியும் பகைத்துக்கொண்டு வந்தார்கள். ஏனெனில், அவர் அநேகந்தரங்களில் தெய்வீக ஞானத்தோடும் அசையாத தைரியத்தோடுந் தங்கள் அகங்காரத்தை அடக்கியும் கள்ள ஞானத்தைப் பிரசித்தப்படுத்தியும்வைத்ததை அவர்கள் ஒருபோதும் சகிக்கக்கூடாதவர்களாயிருந்தார்கள். ஆதலால், அவர்கள் வன்மத்தாற் தூண்டப்பட்டு அவரைக் கொன்றுபோடத் தீர்மானித்து, தங்கள் துர் ஆலோசனையை நிறைவேற்றுவதற்கு உதவியாகப் பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்குள் ஒருவனாகிய யூதாஸ் என்பவனைத் தங்களோடு சேர்த்துக்கொண்டார்கள். அவன், பிரதான வேதாசாரியர்களிடத்தில் முப்பது வெள்ளிக்காசு வாங்கிக்கொண்டு, அவர்களால் அனுப்பப்பட்ட கொடிய போர்ச்சேவகர்களோடு போய் நான் எவனை முத்தஞ்செய்வேனோ அவன் தான், அவனைப் பிடித்துப் பத்திரமாய்க் கொண்டுபோங்கள் என்று தான் முன்சொல்லி வைத்திருந்த குறிப்பின்படி யேசுநாதரை அணுகிக் குருவே வாழ்கவென்று சொல்லி அவரை முத்தமிட்டான். அப்போது அவர்கள் அவரைப் பிடித்து நிந்தையவமானப்படுத்தி யெருசலேம் பட்டினத்திற்குக் கொண்டு போனார்கள். திவ்விய இரக்ஷகர் பிடிபட்ட இடம் பட்டினத்திற்குச் சமீபமாயுள்ள ஒலிவேத்து மலையின் மீதிருந்த ஒரு தோட்டமாம். அவர் அன்றிரவு தம்முடைய சீஷர்

களோடு தமது கடைசிப் பாஸ்குப்பண்டிகைச் சடங்குகளை நிறைவேற்றின பின்பு தமது வழக்கத்தின்படி அங்கே செபஞ்செய்யப் போயிருந்தார். யேசுநாதரைப் பிடித்த யூதர்கள் அவரை ஆசாரியர் மூப்பர் வேதபாரகராகியவர்களோடு கூடவிருந்த பிரதான ஆசாரியன்முன்பாகக் கொண்டுபோய்விட்டார்கள். அங்கே அவர் இரவுமுழுதும் நானாவித நிந்தையவமானஞ் செய்யப்பட்டார். சிலர் அவரை முகத்திலே அறைந்தார்கள். வேறுசிலர் அவர்மேற் காறித்துப்பிப் பரிகாசம்பண்ணினார்கள். கள்ளச்சாட்சிக்காரரு மெழுந்து பொய்யான குற்றங்களை அவர்மேற் சாட்டத்தொடங்கினார்கள். யேசுநாதர் முன் தெரிவித்திருந்தபடி அன்றிராவிற்றானே அர்ச். இராயப்பரும் அவரை அறியேனென்று மூன்றுமுறை மறுதலித்துவிட்டார்.

**196. யேசுநாதர் மரணத்துக்குத் தீர்வையிடப்பட்டது:** பொழுதுவிடிந்தவுடனே பிரதான ஆசாரியரும் மூப்பரும் வேதபாரகரும் ஆலோசனைச்சங்கத்தாரனைவரும் அவரைக் கட்டிக் கொண்டுபோய் யூதேயாவின் அதிபதியாகிய பிலாத்து என்பவனிடத்தில் ஒப்பித்தார்கள். அவனோ அவரிடத்தில் யாதொரு குற்றத்தையுங் காணாததினால் அவரை விடுதலையாக்க வேண்டுமென்று எண்ணினான். ஆயினும், பிரதான ஆசாரியர் முதலானவர்களால் ஏவப்பட்ட சனங்கள் எல்லாந் திரண்டு கலகக்காரனுங் கொலைக்காரனுமாய்க் காவலிலே அடைக்கப்பட்டிருந்த பராபாஸ் என்பவனை விடுதலையாக்கலாம் கிறீஸ்துவையோ கொன்றுவிடவேண்டும் கொன்றுவிடவேண்டுமென்று மேன்மேலுங் கூவிச் சொன்னதினால் கோழைத்தனமுள்ள பிலாத்து அவரை வாரினால் அடிப்பித்தால் அவர்களுடைய கோபவெறி தணிந்துபோகுமென்று நினைத்து அப்படியே செய்யக் கட்டளையிட்டான். அப்போது, போர்ச்சேவகர் அவரை ஒரு கற்றூணிலே கட்டித் தேகம்முழுதும் கிழிந்து இரத்தம் வெள்ளமாயோடும்படி சவுக்குகளாலடித்தார்கள். பின்பு சிவப்பான மேலங்கியை அவருக்கு அணிவித்து, ஒரு முண்முடியைப் பின்னிச் சிரசிலேயழுந்தும்படி சூட்டி, கையிலே மூங்கிற் தண்டு கொடுத்துப் பரிகாச இராசாவாக ஏற்படுத்தி: யூதருடைய இராசாவே வாழ்க என்று சொல்லிக் கோறணிசெய்தார்கள். யேசுநாதரை இந்தப் பரிதாபத்திற்குரிய கோலத்தோடு சனங்களுக்குக் காண்பித்தால் அவர்களுடைய மனம் ஓர்வேளை இளகுமென்று பிலாத்து யோசித்து, அவரைச் சனங்களுக்கு முன்பாகக் கொண்டுபோய்: இதோ மனிதன் என்று சொன்னான். சொன்ன உடனே அவர்கள் முன்னிலுமதிகமாய்க் கூவிச் சிலுவையிலே அறைந்து கொல்லுமென்றார்கள். ஆனதினால் அவன் அவரைச் சிலுவையிலே



அறைந்து கொல்லும்படி அவர்களுக்கே கையளித்துவிட்டான். பிலாத்து குற்றமில்லாத செம்மறிப்புருவையாகிய யேசுநாதரை மரணத்துக்குத் தீர்வையிட்டதின் நிமித்தம் கொஞ்சத்துக்குள்ளே சருவேசுரனால் பயங்கர தண்டனைக்குள்ளானான். எவ்வாறெனில், யூதசரித்திர ஆசிரியராகிய யோசேபுசென்பவர் எழுதியிருக்கிறபடி, அவன் யூதராலே குற்றஞ்சாட்டப்பட்டும் பரதேசத்திற்கு ஏற்றப்பட்டும் அங்கே குரூர வியாதியாற் பீடிக்கப்பட்டும் தன்னைத்தானே கொலைசெய்துகொண்டான். யேசுநாதரை முப்பதுவெள்ளிக்காசுக்காக யூதருக்குக் காட்டிக்கொடுத்த யூதாஸ் என்னும் துரோகிச் சீஷனும் தேவாக்கினைக்குத் தப்பிப்போகவில்லை. அவன், திவ்விய குருவானவர் மரணத்துக்குத் தீர்வையிடப்பட்டாரென்று அறிந்த மாத்திரத்தில் அவநம்பிக்கையானது அவனுடைய மனதைக் கொள்ளைகொண்டதினால், கொடிய வேதனைக்குள்ளாகி, தன் குற்றத்தின் கிரயமாகிய முப்பது வெள்ளியையுங் கொண்டுபோய் யூத ஆசாரியர்முன் எறிந்துவிட்டு, பணவாஞ்சையினிமித்தம் அத்தனை கொடிய அக்கிரமத்திற்குள்ளானதினால் நிர்ப்பாக்கியனாகவும், தனக்கு மன்னிப்புக் கிடைக்குமென்று நம்பி அதைத் தன்னாற் காட்டிக்கொடுக்கப்பட்டவரிடத்து கேளாததினால் இன்னும் அதிக நிர்ப்பாக்கியனாகவும் நான்றுகொண்டு உயிர்விட்டான்.

### II. யேசுநாதர் மரித்ததும் அப்போது சம்பவித்தவைகளுமாவன

**197. யேசுநாதர் சிலுவையிலே அறையப்பட்டது.** பிலாத்து யேசுநாதரை மரணத்திற்குத் தீர்வையிட்டவுடனே சேவகர்கள் ஒரு பாரமான சிலுவையை அவருடைய திருத்தோளிலே சுமத்திக் கொலைக்களமாகிய கல்வாரிமலைமட்டும் அவரே அதைச் சுமந்துகொண்டுபோகவேண்டுமென்று கட்டாயப்படுத்தினார்கள். அவர் தமதுமரண எத்தனமாகிய அந்தப் பளுவான சிலுவையோடு கல்வாரிமலைக்கு வந்துசேர்ந்தவுடனே அந்த உரோமைச்சேவகர்கள் அவரைச் சிலுவையிலே கிடத்திக் கைகால்களில் ஆணிகள் தைத்தபின்பு, அதை இரண்டு கள்வர்கள் அறையப்பட்டிருந்த இரண்டு சிலுவைகளுக்கு நடுவே நிறுத்தி நாட்டினார்கள். அவர் மூன்றுமணித்தியாலமாகச் சிலுவையிலே மனோவாக்குக்கெட்டாத கஸ்திவாதைகளை அனுபவித்துக்கொண்டிருந்தார். பிரதான ஆசாரியர் வேதபாரகர் மூப்பர் கொலைக்காரர் முதலானவர்கள் அவர்மேல் இடைவிடாமல் தேவதூஷணங்களைச் சொல்லியும், அவரைப் பரிகாசம்பண்ணியும், சபித்துங் கொண்டிருந்தார்கள். கடைசியாய்த் திவ்விய இரக்ஷகர், தம்மைக்குறித்துச் சொல்லப்பட்ட வேதவாக்கியங்களெல்லாம் நிறைவேறினவென்றுகண்டு,

தமது ஆத்துமத்தைப் பரம பிதாவின் கரங்களிலே ஒப்புக் கொடுத்து உரத்தசத்தமாய்க் கூப்பிட்டுத் தலைகுனிந்து உயிர்விட்டார். அவர் சிலுவையில் அறையுண்டது ஒரு வெள்ளிக்கிழமை பகல் 12 மணிநேரத்திலாம். மரணித்தது மூன்றாம்மணிநேரத்திலாம். இச்சம்பவத்தைத் திருச்சபையானது வருஷந்தோறும் பெரியவெள்ளிக்கிழமையிற் கொண்டாடிவருகின்றது.

யேசுநாதர் மரித்தபோது அவருடைய திரு ஆத்துமம் சரீரத்தைவிட்டுப் பிரிந்தாலும் அவருடைய தேவசுபாவமோ இரண்டையும் விட்டுப் பிரிந்ததல்ல. கல்லறையிலடக்கப்பட்ட அவருடைய சரீரமும் பாதாளங்களிற்றங்கின அவருடைய ஆத்துமமும் மெய்யாகவே தேவசுதனின் ஆத்துமமுஞ் சரீரமுமாய் இருந்தன. அவர் மனிதனாகியமட்டுமே பாடுபட்டு மரித்தார். தேவனாகியமட்டுமோ அவர் பாடுபடவும் மரிக்கவுங் கூடாதவராயிருந்தாரென்பது நிச்சயம். ஆயினும், அவர் மனிதனாகியமட்டும் செய்த கிரியைகள் முதலாய்ச் சுதனாகிய தேவனின்மேலேற்றிச் சொல்லப்படவேண்டியவைகளாயும் அந்த தேவ ஆளுக்கே சொந்தமாய்ச் சேர்ந்தவைகளாயுமிருக்கின்றமையால், சருவேசுரன் பாடுபட்டார் சருவேசுரன் மரித்தார் என்றே கூறவேண்டும்.

**198. யேசுநாதர் மரித்தபோது நிகழ்ந்த ஆச்சரியங்கள்.** தேவகுமாரன் சிலுவைமரத்தில் உயிர்விட்டசமயத்தில் வானமும் பூமியும் தங்கள் சிருட்டிகர்த்தாவுக்கு மனிதராற் செய்யப்பட்ட பாதகத்தைநோக்கிக் கலங்கினாற்போலத் துக்கவேஷமணிந்து அவருடைய தெய்வீகத்துக்கு அத்தாட்சிகாண்பித்துக்கொண்டிருந்தன. சூரியன் மங்கிப்போயிற்று. ஆறாம்மணி துவக்கம் ஒன்பதாம் மணிமட்டும் அதாவது, நடுப்பகல்தொடுத்து மூன்றாம்மணிமட்டும் அடர்ந்த இருள் பூமியை மூடிக்கொண்டது. தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடுத்துக் கீழ்மட்டும் இரண்டாய்க் கிழிந்துபோயிற்று. பூமி அதிர்ந்தது. கற்பாறைகள் பிளந்தன. கல்லறைகள் திறபட்டு மரித்தோர் உயிர்த்தெழுந்து எருசலேம்பட்டினத்தில் அனேகருக்குத் தரிசனையானார்கள். இவ்வாச்சரியங்களைக்கண்ட நூற்றுக்கதிபதியென்னும் அர்த்தமுள்ள செந்தூரியோனும் அவனோடுகூட யேசுநாதரைக் காவல்காத்துக்கொண்டிருந்த மற்றவர்களும் வெகுவாய்ப் பயந்து மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரனென்று சொல்லித் தங்கள் நெஞ்சில் அறைந்துகொண்டார்கள்.

**199. யேசுநாதர் அடக்கம்பண்ணப்பட்டது.** கர்த்தர் உயிர்விட்டபின்பு ஒரு போர்ச்சேவகன் அவருடைய திரு விலா



வை ஈட்டியாற் குத்தினான். குத்தினவுடனே, அதிலிருந்து இரத்தமுந் தண்ணீரும் பாய்ந்தது. சாயங்காலமானபோது, யேசுநாதருடைய சீஷனும் ஐசுவரியவானுமாயிருந்த யோசேப்பென்னும் பெயர்கொண்ட அரிமத்தியா ஊரானாகிய ஒருவன் பிலாத்துவினிடத்திற்போய், யேசுநாதரின் சரீரத்தைக் கேட்டான். அப்போது பிலாத்து யேசுநாதர் மெய்யாகவே மரித்துவிட்டாரென்று செந்தூரியோன் சொல்லக்கேட்டு, சரீரத்தை எடுத்து அடக்கஞ்செய்ய உத்தரவு கொடுத்தான். கொடுக்கவே யோசேப்புவும் யேசுநாதரின் மற்றொரு சீஷனாகிய நீக்கோதேமுவுமாகிய இருவரும் மெல்லிய துப்பட்டியை வாங்கிக்கொண்டுவந்து, தேகத்தையிறக்கி வெள்ளைப் போளமும் கரியபோளமுங் கலந்த சுகந்தவர்க்கங்களுடனே அதை துப்பட்டியாற் சுற்றி, கல்மலையில் வெட்டப்பட்டதுமாய் ஒருகாலும் எவனும் வைக்கப்படாததுமாயிருந்த கல்லறையிலடக்கிக் கல்லறை வாசலில் அதன் மூடிக் கல்லை வைத்துப்போனார்கள். இந்தந் திருச்சேமச் சடங்கு நடந்தபோது மரியமதலேனாளும் வேறு அனேக ஸ்திரீகளும் அங்கேயிருந்தார்கள். பரிசேயரும் பிரதான ஆசாரியருமோ, யேசுநாதருடைய சீஷர்கள் இரவில் வந்து தேகத்தைக் களவாயெடுத்துக்கொண்டு போனபின் அவர் முன் வாக்குப்பண்ணியிருந்தபடி மெய்யாகவே உயிர்த்துவிட்டார் என்று பொய்யான கதையைப் பரப்புவார்களென்று சொல்லி, பிலாத்துவிடத்திற்போய் உத்தாரம்பெற்றுக் கல்லுக்கு முத்திரையும்போட்டுக் காவலும்வைத்துக் கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள். இவர்கள் இதில் எடுத்துக்கொண்ட காரியங்கள் எல்லாம் தேவாதீனமாய் அப்போஸ்தலர்களிடத்தில் சூதில்லையென்பதற்கும் யேசுநாதருடைய உத்தானம் மெய்யான சம்பவமேயென்பதற்கும் தளராத அத்தாட்சியாக முடிந்தது.

**200. யேசுநாதருடைய திரு ஆத்துமம் பாதாளங்களிலே இறங்கினது.** உலக இரக்ஷகருடைய திருச் சரீரமானது கல்லறையிலே வைக்கப்பட்டிருந்தபோது அவருடைய திரு ஆத்துமம் இறந்த புண்ணிய ஆத்துமாக்களின் தலமாயிருந்த பாதாளங்களிலே யிறங்கி அங்கிருந்த ஆத்துமாக்களுக்குத் தரிசனைகொடுத்து மோக்ஷபேரின்பபாக்கியம் இதோ உங்களுக்குக் கிடைக்கப்போகின்றதென்னும் சுபசெய்தியைத் தெரிவித்தருளினது. அங்கே இருந்த புண்ணிய ஆத்துமாக்கள் யாரெனில், யேசுநாதர் உலகத்திற்கு எழுந்தருளுமுன் சீவித்து மரித்த நீதிமான்களேயாம். ஆதாமுடைய பாவத்தினிமித்தம் மோக்ஷவாசல் அடைபட்டிருந்தமையினாலும் உலக இரக்ஷகரால்மாத்திரம் அது திறக்கப்பட

வேண்டியிருந்ததினாலும் அவர் வருந்தனையும் அவ்வாத்துமாக்கள் பாதாளத்திலே காத்துக்கொண்டிருந்தார்கள். சருவேசுரனை முக முகமாய்க் காணாத ஆக்கினையேயன்றி, வேறு ஆக்கினை அவர்களுக்கு இருக்கவில்லை. அவரை ஒரு நாள் நிச்சயமாய்க் காண்போமென்னும் நம்பிக்கையிலேயே அவர்களுக்கு ஆறுதலுண்டாயிருந்தது.

### III. இரட்சணியப் பரம இரகசியம்

201. யேசுக்கிறீஸ்துநாதர் ஒரு சிலுவை மரத்திலே மரித்து நமக்காகத் தேவநீதிக்கு உத்தரித்து நம்மைப் பாவத்திலும் நித்திய நரகத்திலுமிருந்து மீட்டு நம்மை நித்திய சீவியத்துக்கு சுதந்தரவாளிகளாயிருக்கச் செய்ததுதான் இரட்சணியத்தின் பரம இரகசியம் என்று சொல்லப்படும். இந்தப் பரம இரகசியத்தைப்பற்றிச் சத்தியவேதம் நமக்குப் போதிப்பதென்னவென்று நன்றாய் உணர்ந்துகொள்ளும்பொருட்டு கர்த்தர் நமதிரட்சணியத்தினிமித்தம் ஒப்புக்கொடுத்த பிராயச்சித்தத்தின் இயல்பையும் அதின் உண்மையையும் குணங்களையும் நன்றாய் ஆராய்ந்து அறிந்துகொள்வது அவசியம்.

202. (I) **யேசுக்கிறீஸ்துநாதர் ஒப்புக்கொடுத்த பிராயச்சித்தத்தின் இயல்பு.** பிராயச்சித்தமாவது (Satisfaction) ஒருவருடைய சங்கைக்கு விளைந்த அவமானத்தைப் பரிகரிப்பதேயாம். அது சரிவந்த பிராயச்சித்தமென்றும் யோக்கிய பிராயச்சித்தமென்றும் இருவகைப்படும். **சரிவந்த** பிராயச்சித்தமாவது: பரிகரிக்கப்படவேண்டிய அவமானத்திற்கு முழுதும் போதியதான பிராயச்சித்தமாம். **யோக்கிய** பிராயச்சித்தமாவது பரிகரிக்கப்படவேண்டிய அவமானத்திற்குப் போதியதாயிராமல் பரிகரிப்பவனுடைய சத்துவத்தின் அளவாய்மாத்திரமிருக்கும் பிராயச்சித்தமாம். ஒரு வெற்றுச் சிருட்டி சுபாவவரங்களாலும் ஞானவரங்களாலும் எவ்வளவு சிறந்து விளங்கினாலும் பாவத்தாற் சருவேசுரனுக்கு விளைந்த அவமானத்தைச் சரிவந்தவிதமாய்ப் பரிகரிக்க அச்சிருட்டியாற் கூடாதென்பது பிரத்தியட்சம். ஏனெனில்; பாவத்தாற் சருவேசுரனுக்கு நேரிட்ட அவமானத்தின் கனத்திற்கும், ஒரு வெற்றுச் சிருட்டியாற் செய்யப்படும் பிராயச்சித்தத்தின் பெறுமானத்திற்கும் இடையே ஒப்புமையில்லை. ஆதலால், நாம் மேலேகூறியபடி சருவேசுரன் பாவத்தாற் தமக்குவிளைந்த அவமானத்திற்குச் சரிவந்த பரிகாரஞ் செய்யப்படவேண்டுமென்று திருவுளங்கொண்டாரென்றால் தேவன் மனுஷனாய் அவதாரம் பண்ணுவது அவசியம் என்பது தானாய் விளங்குகின்றது.



203. (II) **கிறீஸ்துநாதரால் ஒப்புக்கொடுக்கப்பட்ட பிராயச்சித்தத்தின் உண்மை.** யேசுக்கிறீஸ்துநாதர் நமக்காகச் சருவேசுரனுக்கு மெய்யாகவும் சரிவரவும் உத்தரித்தருளினாரென்பது விசுவாச சத்தியமாம். உள்ளபடியே, நாம் பாவத்தாற் சருவேசுரனுக்கு இறுக்கமுடியாத கடனாளிகளாகவும் நித்திய ஆக்கினைக்கு ஏதுவானவர்களாகவுமிருந்தவிடத்து யேசுக்கிறீஸ்துநாதர் தமது திருவிரத்தத்தின் பலனால் நமது பாவக்கடனைத் தீர்த்துத் தமது மத்தியஸ்தத்தினால் நம்மைச் சருவேசுரனோடு உறவாக்கி நாம் நித்திய சீவியத்திற்கு சுதந்தரவாளிகளாகும் பொருட்டுத் தம்மையே நமக்காகப் பலியாக்கி மரித்தருளினார். இந்த உண்மையைத் தேவவாக்கும் சபைப்பிதாக்களும் திருச் சங்கங்களும் விசுவாசமந்திரங்களும் ஒருப்படக்கூறி நிச்சயித்திருக்கின்றன.

204. **யேசுக்கிறீஸ்துநாதருடைய பிராயச்சித்தத்தின் குணங்கள்.** அவர் விரும்பினதினிமித்தமே பலியாக்கப்பட்டாரென்று இசையாஸ் என்னுந் தீர்க்கதரிசி 53-ம் அதிகாரத்திலும், என் சீவனை ஒருவனும் என்னிடத்திலிருந்து எடுக்கமாட்டான், நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் மீளவும் அதை எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரமுண்டென்று சுவிசேஷக அருளப்பர் பத்தாம் அதிகாரத்திலும் எழுதப்பட்டிருக்கிறதின்படி, யேசுக்கிறீஸ்துநாதருடைய பிராயச்சித்தமானது மனோச்சாயமானதும் தன்னிஷ்டமானதுமாம். அவர் மரணத்துக்குள்ளாகாதிருக்கக் கூடியவராயிருந்தும் சுயேச்சையாகவே அதை அங்கீகரித்துக்கொண்டார். யேசுநாதர் ஒப்புக்கொடுத்த பிராயச்சித்தம் சரிவந்ததும் மிகுதியானதுமாம். அது சரிவந்ததாய் இருக்கின்றது எவ்வாறெனில்: யேசுநாதருடைய கிரியைகளெல்லாம் தேவசுதனுக்குச் சேர்ந்த கிரியைகளேயாதலால் அவைகள் சருவேசுரனுடைய கிரியைகளே. இதனால், பாவத்தால் கடவுளுக்கு விளைந்த அவமானத்தினளவுக்கு ஒப்பான பெறுமதி அவைகளுக்கு உண்டென்பது நிச்சயம். ஏனெனில், இங்கே அவமானஞ்செய்யப்பட்டவருடைய மகிமைக்கும் பிராயச்சித்தம் செய்கிறவருடைய மகிமைக்குமிடையே பூரண ஒப்புமை உண்டு. எனவே யேசுநாதர் சிந்தின ஒருகண்ணீர், விட்ட ஒரு பெருமூச்சு முதலான எவ்வித சிறிய கிரியைதானும் தேவநீதிக்கு முழுதுமுத்தரித்து மனித இரட்சணியத்தை நிறைவேற்றக்கூடியதாய் இருந்ததென்பது தானாய்விளங்கும். யேசுநாதருடைய பிராயச்சித்தமானது சரிவந்ததாயிருந்ததன்றி **மிகுதியானதாயும்** இருக்கின்

றது. எவ்வாறெனில், அவர் தமது உதிரத்தை முழுதுஞ் சிந்திச் சகலவித பாடுகளையும் அனுபவித்து நிஷ்டூரமும் அவமானமும் பொருந்திய ஒரு மரணத்திற்குள்ளானதினால், சருவேசுரனுக்குப் பாவத்தினால் விளைந்த அவமானத்தைக்காட்டிலும் மிகப் பெரிதான மகிமையுண்டாயிற்று. இதனிமித்தமே பாவம் அதிகரித்த விடத்தில் கிருபையானது இன்னும் மேலாக அதிகரித்ததென்று அர்ச். சின்னப்பர் (உரோமர் 5-ம் அதி.) எழுதிவைத்தார். சருவேசுரனுக்கு அதிகமான ஸ்தோத்திரமுண்டாகவும் நாம் பாவத்தின் அகோரத்தையும் தமது நேசத்தின் பெருக்கத்தையும் நன்றாய்த் தெளிந்துகொள்ளவுமே பரமஇரக்ஷகர் அத்தனை மிகுதியான கஸ்தி துன்பங்களை அனுபவிக்கச்சித்தமானார்.

யேசுநாதருடைய பிராயச்சித்தமானது, **பொதுவானதாயு**மிருக்கின்றது. அவர் எல்லாப்பாவங்களுக்கும் பரிகாரமாகவும் தமக்கு முன்னிருந்தவர்கள்முதலாயுட்பட எல்லா மனிதருடைய இரக்ஷணியத்திற்காகவுமே மரித்தருளினார். இதற்கு அத்தாட்சியாக அர்ச். அருளப்பர் தமது 1-ம் நிருபம் 2-ம் அதிகாரத்தில்: நம்முடைய பாவப்பரிகாரப்பலி அவரே, அவர் நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சருவலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிறவராயிருக்கிறார் என்றெழுதினார். அர்ச். சின்னப்பரும் 2-ம் கொரிந்தியர் 5-ம் அதிகாரத்தில்: யேசுக்கிறீஸ்துநாதர் எல்லா மனிதருக்காகவுமே மரித்தாரென்று எழுதிவைத்தார். இவ்வாறே, திவ்விய இரட்சகர் நித்திய சீவியத்தையும் அதை எளிதாய் அடைந்துகொள்வதற்கான வரப்பிரசாதங்களையும் எல்லா மனிதருக்குஞ் சுதந்தரித்துக்கொடுத்தருளினார்.

205. யேசுக்கிறீஸ்துநாதர் ஒப்புக்கொடுத்த பிராயச்சித்தத்தினிமித்தம் நம்முடைய சொந்தப்பாவங்களுக்காக நாம் தேவ நீதிக்கு உத்தரிக்கவேண்டுமென்னுங் கடமைப்பாடு நமக்கில்லாமற் போகின்றதோ? இல்லை. ஏனெனில், திவ்விய இரக்ஷகருடைய திரு மரணமானது நமக்குப் பிரயோசனமுள்ளதாயிருக்கவேண்டுமாகில், அதன் பலன்களை நமது உடன் முயற்சியினால் நமக்கு வருவித்துக்கொள்ள வேண்டும். ஆயினும், தேவ வரப்பிரசாத உதவியின்றி இரக்ஷணியத்திற்கேற்ற யாதொன்றையுஞ் செய்ய நம்மாற் கூடாதாகையால், அவருடைய திருமரணத்தினாலும் பெறுபேறுகளினாலும்மாத்திரமே நம்முடைய நற்கிரியைகளுக்கும் பிராயச்சித்தங்களுக்கும் பலனுண்டாகவேண்டுமென்று அறிந்துகொள்ளக்கடவோம்.



206. யேசுநாதர் மனிதனைப் பரிபூரணமானவிதமாய் மீட்டருளினார் என்னுமிடத்தில்: அவன் பாவத்தால் முன் இழந்து போனவைகள் எல்லாவற்றையும் அவர் அவனுக்கு மீளவுந் தந்தருளினாரென்று எண்ணத்தகாது. மனிதன் பாவத்தைக் கட்டிக்கொண்டதினால், இஷ்டப்பிரசாதத்தையும் மோட்ச உரிமைகளையுமேயன்றிப் பரிசுத்த அந்தஸ்துக்கென்று சருவேசுரனால் முன் நியமிக்கப்பட்டிருந்த மற்றச் சுதந்தரங்களையும் இழந்துபோயிருந்தான். அப்படியிருக்க, யேசுநாதராற் செய்யப்பட்ட மீட்பானது மனிதனை மீளவும் வரப்பிரசாதத்தில் நிலைநிறுத்தினவிடத்துப் பேரின்ப பாக்கியத்தை அடைந்து கொள்வதற்கான நம்பிக்கை மீளவும் அவனுக்குக் கொடுக்கப்பட்டதேயன்றி, நோயின்மை சாவின்மை அறியாமையின்மை ஆசாபாசமின்மை முதலான விசேஷ வரங்கள் கொடுக்கப்படவில்லை. ஆதலால், மனிதனுக்குத் தற்போதுள்ள அந்தஸ்தை நோக்குமிடத்து அவன் தன் சுபாவ அந்தஸ்திலிருந்து வரப்பிரசாத நிரையில் உயர்த்தப்பட்டவனாகவும் சுபாவநிரையில் அதற்குரிய குறைகளோடு விடப்பட்டவனாகவுமே இருக்கிறானென்று காண்பது எளிது.

---

## 3-ம் பிரிவு

## யேசுக்கிறீஸ்துநாதருடைய உத்தானம்

207. பூர்வீக தீர்க்கதரிசிகள் மேசியாவின் உத்தானத்தைக் குறித்து முன்னமே கூறியிருந்தார்கள். அந்த மெய்யான மேசியாவாக எழுந்தருளிவந்த யேசுநாதரும் தம்முடைய பிரசித்த சீவியகாலத்தில் அநேகந்தரம் தமது உத்தானத்தைப்பற்றி யூதருக்கும் பிறருக்குந் தெளிவாய்த் தெரிவித்ததுமன்றி, அதைத் தம்முடைய தெய்வீகத்திற்கு ஓர் பிரஸ்தாப அத்தாட்சியாகவும் ஏற்படுத்தி, மனுமகன் மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பற்பல பாடுகள்பட்டுக் கொலையுண்டு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்திருப்பார் (மத். 16) என்று திருவுளம்பற்றியும், யோனாஸ் என்னுந் தீர்க்கதரிசியானவர் ஒரு மச்சத்தின் வயிற்றிலே மூன்று பகலும் மூன்று இரவுந் தங்கி இருந்த சம்பவமானது தமது உத்தானத்திற்கு ஓர் அடையாளமாய் இருந்ததென்று காண்பித்துங் கொண்டுவந்தார்.

பின் நடந்த சம்பவங்களால் அவருடைய திருவாக்கு மெய்ப்பிக்கப்பட்டது. எவ்வாறெனில், அவர் அடக்கப்பட்ட மூன்றாம்

நாள் உதயமாகிக்கொண்டுவருகையில், தமது சுயவல்லமையில் ஆத்துமத்தையுஞ் சரீரத்தையும் ஒன்றாகச்சேர்த்து வாசற்கல்லிலே இடப்பட்டிருந்த முத்திரைக்குப் பழுதுவராமல் கல்லறையிலேயிருந்து மகிமைப்பிரதாபத்தோடு புறப்பட்டார். அக்ஷணமே பூமியதிர்ச்சியுண்டாக, ஒரு தேவதூதன் பிரகாச உருபத்தோடு வானத்தினின்றிறங்கிக் கல்லறை வாசலிலிடப்பட்டிருந்த கல்லை உருட்டிவிட்டு அதன்மேல் உட்கார்ந்துகொண்டிருந்தார். அப்போது கல்லறையைக் காத்துக்கொண்டிருந்த சேவகர்கள் பயந்து நடுங்கிச் செத்தவர்கள் போலானார்கள். பின்பு மூர்ச்சைதெளிந்து எழுந்து ஓட்டம்பிடித்தார்கள். அவர்களுக்குட் சிலர் பிரதான ஆசாரியர்களிடத்திற்போய் நடந்த யாவற்றையும் அறிவிக்கவே ஆசாரியர்களும் மூப்பருங்கூடித் தங்களுக்குள்ளே ஆலோசனைபண்ணிச் சேவகருக்கு மிகு பணங் கொடுத்து, நீங்கள் நித்திரை செய்கையில் அவருடைய சீஷர்கள்வந்து இராத்திரியில் அவரைக் களவாய்க்கொண்டுபோய்விட்டதாகச் சொல்லுங்களென்று கற்பித்தார்கள். பணம்பற்றிக்கொண்ட சேவகர்களும், தங்களுக்குக் கற்பிக்கப்பட்டபடி பொய்யான கதையைப் பரப்பப் பிரயாசப்பட்டார்கள்.

208. மேலேகண்டபிரகாரமாக யேசுநாதர் உத்தானமான சங்கதி சுவிசேஷங்களிற் கூறப்பட்டிருக்கின்றது. அவைகளிற் கூறப்பட்ட சம்பவங்களெல்லாவற்றுள்ளும் இது யேசுநாதருடைய தெய்வீகத்திற்கும் அவருடைய நின்மல போதகத்திற்கும் ஓர் அசையாத அத்தாட்சியாய் விளங்குகின்றது. ஆதலால், இது மெய்ச் சம்பவந்தானோவென்று நாம் பற்றும்பற்றாய் ஆராய்ந்து அறிந்துகொள்வது நன்றாகும். இதை நாம் ஆராயுமிடத்து இதைக்காட்டிலும் மிகப் பிரத்தியக்ஷமாய் ஒப்பிக்கப்பட்டிருக்கும் சம்பவம் வேறொன்று வைதீக சரித்திரத்திலாவது லௌகீக சரித்திரத்திலாவது இல்லையென்று காண்பிப்பது எளிதேயாம். இதில் ஒரு ஆச்சரியமுமில்லை. ஏனெனில், யேசுநாதருடைய உத்தானமே கிறீஸ்துவேதத்தின் முக்கிய அஸ்திவாரமாயிருக்கின்றமையால், சருவேசுரன் தாமே அதை எவ்வித சந்தேகத்திற்கும் ஆட்சேபங்களுக்கும் இடமின்றித் தளராத நிச்சயத்தோடு எப்போதும் விளங்கிக் கொண்டிருக்கச் செய்தருளினார்.

209. ஒரு சம்பவம் அணாப்பப்படாதவர்களும் அணாப்பக் கூடாதவர்களுமான சாட்சிகளால் நிச்சயிக்கப்பட்டதாயும் தன்னைப் போதிய அத்தாட்சிகளைக்கொண்டு நுணுக்கமாய் ஆராய்ந்தறிந்து கொள்ளவேண்டியவர்களால் ஆரம்பத்திற்றானே அங்கீ



கரித்துக்கொள்ளப்பட்டதாயும் இருந்தால் அது மெய்யான சம்பவமேயாம். யேசுநாதருடைய உத்தானமோ அத்தன்மையான ஒரு சம்பவமாம். எவ்வாறெனில் :

210. (I) உத்தானத்தை நிச்சயித்துச்சொல்லியவர்களாகிய அப்போஸ்தலர்கள் இந்தவிஷயத்தில் அணாப்புண்ணவில்லை. இதற்கு 1-வது யேசுநாதர் உயிர்த்தெழுந்தபின் அவரைக் கண்ணாரக்கண்ட திரளான சாட்சிகளும் அவர் கொடுத்த பெருந்தொகையான தரிசனைகளும் போதிய அத்தாட்சிகளாம். எவ்வாறெனில், அவர் முன்பு பரிசுத்த ஸ்திரிகளுக்கும் அர்ச். இராயப்பருக்கும், பின்பு எம்மாவுஸ் என்னுங் கிராமத்திற்குப் போய்க்கொண்டிருந்த இரண்டு சீஷர்களுக்குந் தம்மைக் காண்பித்தார். சீஷர்கள் எல்லோரும் ஓர் இடத்திற் கூடியிருந்த சமயத்திலும், அவர் அவர்களுக்குத் தரிசனையாகித் தமது காயங்களை அவர்களுக்குக் காண்பித்தார். கடைசியாய் ஏழு சீஷர்கள் திபேரியாக்கடலிலிருந்தபோது அவர்களுக்குங் காட்சிகொடுத்தார். இத்தனை சாட்சிகள் உத்தானமான தங்கள் இரக்ஷகரை ஒருகாலுங் காணாதவர்களாயிருந்தால் அவரைக் கண்டதாக நாற்பதுநாள் மட்டும் பொய்யாய் நம்பிக்கொண்டிருந்தார்களென்று உத்தேசிக்கக் கூடுமோ ? ஒருபோதுங் கூடாது. அப்போஸ்தலர்கள் அணாப்புண்ணவில்லையென்பதற்குள்ள இரண்டாம் அத்தாட்சி என்னவெனில், யேசுநாதருடைய உத்தானத்தை அவர்கள் உடனே விசுவசியாமல் இருந்தமையாம். யேசுநாதர் தாம் மரித்த மூன்றாம்நாள் உயிர்த்தெழுந்திருப்போம் என்று ஏலவே அவர்களுக்குத் தெரிவித்திருந்தும் அவர்களதை நம்பவில்லை. அவர் மெய்யாகவே உயிர்த்தெழுந்திருப்பதைக் கண்ணாரக்கண்ட பரிசுத்த ஸ்திரிகள் தங்களிடத்தில் ஓடிவந்து தெரிவித்தபோது அப்போஸ்தலர்கள் அவர்களைப் பயித்தியகாரிகளென்று எண்ணிச் செவிகொடாமற் துரத்திவிட்டார்கள். யேசுநாதர் உத்தானமான அன்றுதானே அப்போஸ்தலர்கள் அவரைத் தங்கள்மத்தியிற் பிரத்தியக்ஷமாய்க் கண்டபோதாவது நம்பினார்களோ ? இல்லை. தங்களுக்குத் தோன்றினது ஒரு மாயா உருபமென்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய அவநம்பிக்கையை அகற்றிவிடும் பொருட்டுத் திவ்விய இரட்சகர் தமது திருத்தேகத்தையும் அதிலேயுள்ள காயங்களையும் தொட்டுப் பார்க்கும்படி அவர்களுக்குக் கற்பிக்க வேண்டியதாயிற்று. அப்போதும் அவர்களுடைய சந்தேகம் முற்றாய் நீங்கவில்லையென்று கண்ட யேசுநாதர் உணவு பரிமாறவேண்டுமென்று கேட்டு, அவர்கள் கண்முன்

பாகவே போசனம்பண்ணி அவர்களைப்பார்த்து: நான் மாயா உரூபமல்லவென்றும் அரூபிகளுக்குச் சதையு மெலும்புமில்லையென்றுங் கண்டு இப்போதாவது நம்மை விசுவசியுங்களென்று திருவுளம்பற்றினார். தாங்கள் கண்ணாரக்கண்டதை விசுவசிக்க இவ்வளவாய்ப் பின்னிட்டுக்கொண்டிருந்தவர்கள் அணாப்புண்ணக் கூடியவர்களா? இல்லையென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். ஆதலால், யேசுநாதர் மெய்யாகவே உத்தானமானாரென்று அப்போஸ்தலர்கள் விசுவசித்தமை உத்தானத்தின் உண்மைக்கு ஓர் குன்றாத அத்தாட்சியாயிருக்கின்றது. உள்ளபடியே திவ்விய இரக்ஷகர் அநேகதரமும் நெடுநேரமாகவும் வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் தம்முடைய அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்த அத்தனை தரிசனைகளெல்லாம் அவர்களுடைய மனதிற் தளராத நிச்சயத்தைப் பிறப்பியாமல் விடுவதெப்படி? அவர்கள் கண்ட காட்சிகள் அபூர்வமானவைகளுமல்ல; க்ஷணப்போதில் நடந்து முடிந்து போனவைகளுமல்ல. அவர்கள் உத்தானமானவரை நாற்பது நாளளவாக பலமுறைகளிற் கண்ணாரக்கண்டும், அவரோடு போசனம் பண்ணியும், சம்பாஷித்தும், அவருடைய தெய்வீக உபதேசத்தைக் காதாரக்கேட்டும், தங்கள் சந்தேகங்களை அவருக்குத் தெரிவித்தும், அவர் அருளிச்செய்த விடைகளைப் பெற்றுக் கொண்டும் வந்தார்கள். முதலிலே அவர்களிடத்திற் புத்திமயக்கமுண்டாகக் கூடியதாயிருந்தது என்று வைத்துக்கொண்டாலும் அவர்கள் அந்த மயக்கம் தெளிந்துகொள்வதற்குப் போதியகாலமிருந்ததென்பதற்குச் சந்தேகமேயில்லை. காலகதியிலே தான் அப்போஸ்தலர்கள் திவ்விய இரக்ஷகருடைய உத்தானத்தை உறுதியாய் விசுவசித்துக்கொண்டார்கள். ஆதலால், இந்த விஷயத்தில் அப்போஸ்தலர்கள் ஒருபோதும் அணாப்புண்ணவில்லையென்பது தெளிவாயிருக்கின்றது.

211. (II) அப்போஸ்தலர்கள் யேசுநாதரின் உயிர்த்தெழுதல் விஷயமாய் மனிதரை அணாப்பத் தேடவில்லையென்பதுந் திருஷ்டாந்தமேயாம். எவ்வாறெனில்: அவர்கள் தங்கள் குரு உயிர்த்தெழவில்லையென்று நம்பியிருந்தால் அவரை ஒரு நீசப்புரட்டரென்றும், தாம் உயிர்ப்போம் என்று தங்களுக்குக் கள்ளத் தீர்க்கதரிசனஞ் சொல்லித் தங்களை அணாப்பிக் கெடுத்த பெரும்பாவியென்றுமே எண்ணிக்கொள்ளுவார்கள். அப்படியாயின், இறந்துபோன அவரிடத்திலிருந்து தங்களுக்கு யாதேனும் ஓர் நன்மைவரக்கூடுமென்று காத்திருப்பதற்குப் பதிலாய் அவரை முழுதும் வெறுத்துத்தள்ளிப்போடுவார்களே. தங்களெண்ணத்-



திற்கும் மனச்சாட்சிக்கும் விரோதமாக அவர் உத்தானமானார் என்று ஒரு படுபொய்யைப் பிரசங்கித்தால் சருவேசுரனால் தங்களுக்கு நித்திய ஆக்கினையும் மனிதரால் நிந்தைகளும் உபத்திரவங்களுமன்றி மரணமுமே நேரிடும் என்று அவர்கள் நன்றாயறிந்திருந்தார்கள். அறிந்திருந்தும், பத்தியொழுக்கங்களிற் சிறந்தவர்களாகிய அவர்கள் பொய்யை மெய்யென்று காட்டி உலகத்தவர்களை மயக்கவும் எத்தனாய் இறந்துபோன ஒருவரை மெய்யான கடவுளாக ஆராதிக்கவேண்டுமென்று தூண்டவும் துணிவார்களோ? கல்விநாகரீகமின்றிக் கோழைத்தனமும் பயங்கரமும் நிறைந்தவர்களாயிருந்த அவர்கள், மனிதருடைய ஞானத்தாலும் பராக்கிரமத்தாலும் தயிரியத்தாலும் நிறைவேற்றக்கூடாத ஒரு நவமான யோசனையைக் கண்டுபிடித்து, ஒரு பொய்யைக் கொண்டு உலகம்முடிவு வரையும் அழியாதிருக்கப்போகிற திருச்சபையை ஸ்தாபித்திருப்பார்களா? இதெல்லாம் அவர்களாற் கூடாதென்பது தானாய் விளங்கும்.

212. (III) யேசுநாதருடைய உத்தானமானது, தன்னைப் போதிய அத்தாட்சிகளைக்கொண்டு நுணுக்கமாய் ஆராய்ந்தறிந்து கொள்ளவேண்டியவர்களால் ஆரம்பத்திற்றானே அங்கீகரித்துக் கொள்ளப்பட்டதாயிற்று. எவ்வாறெனில், யேசுநாதர் மரணித்து இன்னும் ஐம்பதுநாள் செல்லுமுன், யூதருடைய பெந்தெக்கோஸ்து என்னுந் திருநாட்கொண்டாட்டத்திற்காகப் பற்பல நாடுகளினின்றும் யெருசலேம்பட்டினத்தில்வந்து கூடியிருந்த சனமத்தியில் அப்போஸ்தலர்கள் தோன்றித் துணிகரமான நிச்சயத்தோடு அவர்களை நோக்கி: நீங்கள் கொலைசெய்த நசரேத்தூராராகிய அந்த யேசுநாதரை சருவேசுரன் மரித்தோரிலிருந்து எழுப்பியருளினார்; இந்தச்சம்பவம் அவருடைய தெய்வீகத்தை ஒப்பித்துக் காட்டுங் குன்றாத அத்தாட்சியாயிருக்கின்றது; ஆதலால், அவரை வானத்திற்கும் பூமிக்கும் ஏக மெய்யான கடவுளாக ஆராதியுங்களென்று போதித்தார்கள். அப்போதகத்தைக் கேட்ட திரளான சனங்கள், தங்கள் முன்னைய தப்பெண்ணங்களையும் ஆசாபாசங்களையும் வெறுத்துத் தள்ளிவிட்டு யேசுநாதருக்குச் சீஷர்களாகி ஞானஸ்நானம் பெற்றார்கள். யேசுநாதருக்கு சீஷர்களாய் வந்தோர் எல்லாரும் அவருடைய உத்தானத்தை உறுதியாய் நம்பிக் கொண்டதினிமித்தமே அந்த உண்மைக்குச் சாட்சியாய் மரிக்க ஆயத்தமாயிருந்தார்கள். உள்ளபடி அநேகர் அந்த உண்மையை ஒப்பிக்கும்பொருட்டுக் கொடிய வேதனைகளை அனுபவித்து மரிக்கிறது தங்களுக்கு மகிமையும் பாக்கியமுமென்று எண்ணி, அதற்-

காக மரிக்கத்துணிந்தார்கள். இரக்ஷகருடைய உத்தானமானது எங்கெங்கே பிரசித்தப்படுத்தப்பட்டதோ, அங்கங்கே அதற்குச் சாட்சிகளாக உயிர்விட்டவர்கள் அநேகர் என்பது சரித்திர சம்பவமாம். உத்தானத்தைப்பற்றிய விசுவாசமே கொஞ்சக்காலத்திற்குள் சகலசாதிகளையும் மனந்திருப்பி, சிலுவையிலே மரித்தவராகிய யேசுநாதரை ஆராதிக்கும்படி பண்ணிற்று. அப்படியிருக்க, வெவ்வேறுசாதியாராகிய இத்தனை மனிதரெல்லாம் இரக்ஷகருடைய உத்தானத்தைக் குறித்துப் பத்தும்பத்தாய் ஆராயாமலும், ஆராய்ந்து உண்மையைக் கண்டுபிடியாமலும், கண்டுபிடித்து உறுதியாய் நம்பாமலுமிருந்தால் அத்தனை சீக்கிரமாகவுந் திறம்பாத துணிவோடுந் தங்கள் சொந்தச் சமயங்களையும் கைவிட்டு நடக்கைகளையும் மாற்றினார்களென்று நம்பக்கூடுமோ ?

213. யேசுநாதர் மெய்யாகவே உயிர்த்தெழுந்துவிட்டார் என்னுஞ் சம்பவத்தை அறிந்தும் இனி இதற்கென்னசெய்வோமென்று மயங்கின யூதர்களோ, தாங்கள் வைத்த காவற்சேவகர்கள் நித்திரைபண்ணிக்கொண்டிருந்தபோது அப்போஸ்தலர்கள்போய்த் திருமேனியைக் களவாய் எடுத்துக் கொண்டுபோய்விட்டார்களென்று வெட்கமில்லாமற் சாதிக்கத் தலைப்பட்டார்கள். அவர்களுடைய சாதனை வெறுங் கட்டுக்கதையேயென்றதைக் கண்டுபிடிப்பது எளிது.

1-வது, திருத்தேகத்தை அப்போஸ்தலர்கள் களவாயெடுத்துக்கொண்டு போனார்கள் என்றால், அப்படிச்செய்ய அவர்களுக்கிருந்த முகாந்திரமென்ன ? அதினால் அவர்களுக்கு விளையக்கூடிய பிரயோசனமென்ன ? ஒன்றுமில்லையே. 2-வது, காவற்சேவகர் தாங்கள் நித்திரைபண்ணிக்கொண்டிருந்தபோது தேகம் எடுத்துக் கொண்டுபோகப்பட்டதென்று சாதித்தபோதே தாங்கள் தேகத்தைக் கொண்டுபோனதைக் காணவில்லை என்றதாயிற்று. காணாதவர்களுடைய சாட்சி எள்ளளவேனும் நம்பத்தக்கதா ? அன்றியும் இயல்பாய்க் கோழைத்தனமும் பயப்பாடுமுள்ளவர்களாகிய அப்போஸ்தலர்கள், எப்பக்கத்திலும் அநேக தடைகளிருக்கக்கண்டும் சட்டைபண்ணாமல், தங்கள் பரம குருவின் தேகத்தைக் களவாயெடுத்துக்கொண்டுபோகத் துணிந்தார்கள் என்று சொல்லுவதெப்படி ? துணிந்தாலுங் காவல்செய்துகொண்டிருந்த சேவகர்கள் எல்லாரும் நித்திரையாய்க்கிடந்தாலன்றி, அப்போஸ்தலர்களுடைய கருத்து நிறைவேறுவதெப்படி ? சேவகர்களுக்குள் ஒருவனாவது விழிப்பாய் இருந்தால் அவனோடு மல்லுக்கட்டியாவது அவனுக்குக் கையிடை கொடுத்தாவது தாங்கள் நினைத்ததைச் செய்து



முடிக்க வேண்டுமே. இதெல்லாங் கூடுந்தன்மையோ ? தேகங் களவாயெடுக்கப்பட்டதென்றால் அதை எடுத்தவர்கள் கல்லறையை மூடியிருந்த பாரமான கல்லை பிரயாசத்தோடு புரட்டிவிட்ட சமயத்தில் அந்தச் சத்தத்தால் சேவர்களுக்குள் ஒருவனாவது விழித்தெழும்பவில்லையென்றால் அதை நம்புவதெப்படி ? மேலும் திருமேனியை மூடிக் கட்டியிருந்த பரிவட்டம் அப்படியேயிருக்க தலையைச் சுற்றியிருந்த துணியும் வேறாய் கல்லறையில் ஒரு பக்கத்தில் வைக்கப்பட்டிருந்ததே. அப்போஸ்தலர்களிரவில்வந்து திருத்தேகத்தைக் களவா யெடுத்துக்கொண்டுபோகத் துணிந்தார்களென்றால் அவர்கள் பரபரப்பாய்த் தங்கள் வேலையை முடித்துத் திருமேனியை அதைச்சுற்றிக் கட்டியிருந்த பரிவட்டத்தோடு கொண்டோடிப்போய்விடாமல் பரிவட்டத்தையும் தலைச்சீலையையும் எடுத்து கல்லறையிற் பவித்திரமாக வைத்துவிட்டுப் போவார்களா ? ஆதலால் அப்போஸ்தலர்கள் யேசுநாதருடைய திருத்தேகத்தைக் களவாய் எடுத்துக்கொண்டு போனார்களென்று சொல்லியது நம்பக்கூடாத வெறுங் கட்டுக்கதையேயாயிற்று.

214. பரம இரக்ஷகர் தாம்மரித்தபின் உயிர்த்து எழும்புவதாகத் தமது சீவியகாலத்திலே போதித்தும் அந்த உத்தான அற்புதத்தைத் தமது தெய்வீகத்திற்கு ஓர் திறம்பாத அத்தாட்சியாய் ஏற்படுத்தியுங்கொண்டுவந்தார். அவருடைய தீர்க்கதரிசனம் பிசகிப் போகவேயில்லை. அவர் மரித்த மூன்றாம்நாள் தமது சுய வல்லமையினால் ஆத்தும சரீரத்தோடு கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தருளினார். ஆதலால் அவர் தாம் போதித்தபடி மெய்யாகவே, தேவசுதனாயிருக்கிறார். அவர் உத்தானமாயினாரெனவே இனி அவரைக்குறித்துச் சந்தேகமாவது தர்க்கமாவதிருத்தல் கூடாது. யேசுநாதர் மெய்யாகவே உயிர்த்தெழுந்தாரென்றபோதே, அவருடைய திவ்விய வேதமானது, ஒருபோதும் திறம்பாத அஸ்திவாரத்திலும் நரக வல்லமைகளாற் செயங்கொள்ளப்படாத கற்பாறையிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றதென்பது தானாய் விளங்கும். யேசுநாதர் உயிர்த்தெழுந்தருளினதினால் அவருடைய வேதம் தெய்வீகவேதமேயாம். ஆதலால் இவ்வேதம் படிப்பிப்பதை விசுவசிக்கவும் இது கற்பிப்பதை அநுசரித்து நடக்கவும் நம்மெல்லாருக்கும் குன்றாத கடமை உண்டென்று சொல்லி முடிக்கக் கடவோம்.

215. யேசுநாதருடைய உத்தானத்தைத் திருச்சபை பாஸ்குத் திருநாளன்று கொண்டாடிக்கொண்டுவருகின்றது. உத்தானத் திருவிழாவானது, யூதருடைய பாஸ்காப்பண்டிகையோடு

சம்பந்தம் பூண்டிருப்பதால் பாஸ்குத்திருநாளென் றழைக்கப்படும். பாஸ்கா என்பதற்குக் கடத்தலென்றர்த்தமாம். யூதருடைய பாஸ்காப்பண்டிகையானது சங்கரிக்கும் தேவதூதனானவர் எபிரேயருடைய வீடுகளுக்கு யாதொரு தீங்குஞ் செய்யாமல் அவைகளைக் கடந்துபோய் ஒரு இரவிற்றானே எகிப்தியருடைய தலைச்சன் பிள்ளைகளையெல்லாம் மடியச்செய்த சம்பவத்தையும் எபிரேயர் செங்கடலைத் தாண்டிச்சென்ற சம்பவத்தையும் ஞாபகப்படுத்தும்படியாக ஏற்படுத்தப்பட்டிருந்தது. கிறீஸ்தவர்களுடைய பாஸ்காப் பண்டிகையோவெனில், யேசுநாதர் சாவைத்தாண்டி உயிர்த்தெழுந்தாரென்னுஞ் சம்பவத்தையும், தாங்களே பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து வரப்பிரசாத அந்தஸ்தாகிய சுயாதீனத்திற்குச் செல்லவேண்டுமென்பதையும் அவர்களுக்கு எப்போதும் நினைப்பூட்டிக்கொண்டு வருகின்றது.

---

## 4-ம் பிரிவு

## யேசுக்கிறீஸ்துநாதருடைய ஆரோகணம்

216. யேசுநாதர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தபின் இன்னும் நாற்பதுநாள் உலகத்திற் சீவித்தார். அந்த நாற்பதுநாளும் அநேக தரம் அவர் அப்போஸ்தலர்களுக்கும் மற்றச் சீஷர்களுக்கும் தம்மைக்காண்பித்துத் தம்முடைய உத்தானத்தின் விசுவாசத்தில் அவர்களை ஸ்திரப்படுத்தினதுமன்றி, அவர்களோடு அடிக்கடி நெடுநேரம் சம்பாஷித்துத் தமது தெய்வீக போதகத்தையும் தமது திருச்சபையின் ஏற்பாட்டையும் அவர்களுக்கு உணர்த்தி, அவர்கள் வேதபோதகத்தினிமித்தம் தங்களுக்கு நேரிடவேண்டிய உபத்திரியங்களில் பின்வாங்காத தைரியத்தோடிருக்கும்படி செய்துகொண்டு வந்தார். இந்த நாற்பதுநாளுக்கிடையிற்றானே அவர் தம்முடைய அப்போஸ்தலர்கள்மேல் சுவாசம்விட்டு: இஸ்பிரீத்துசாந்துவைப் பெற்றுக்கொள்ளுங்கள், எவர்களுடைய பாவங்களை மன்னிப்பீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும் (அர்ச். அருள. 20-ம் அதி.) என்று திருவுளம்பற்றிப் பாவங்களை மன்னிக்க அவர்களுக்கு அதிகாரங் கொடுத்து, தாம் முன்னே



அர்ச். இராயப்பருக்கு வாக்குப்பண்ணியிருந்தபடி அவரை முழுத் திருச்சபைக்குந் தலைவராக ஏற்படுத்தியருளினார்.

நாற்பதுநாளுஞ் சென்றபின், அப்போஸ்தலர்களும் சீஷர் பலரும் யெருசலேம்நகரியிற் கூடியிருந்தசமயத்தில், யேசுநாதர் கடைசியாய் அவர்களுக்குத் தரிசனையாகி: சில நாட்களுக்குள் இஸ்பிரீத்துசாந்துவானவர் உங்களிடத்தில் எழுந்தருளிவருவார், நீங்கள் உலகமடங்கலும்போய்ச் சகலசாதியாருக்குஞ் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்றும் உகாந்தமட்டும் நாம் உங்களோடிருப்போமென்றும் வாக்குப்பண்ணியருளினார். அதன்பின் அவர் அவர்களை ஒலிவேத்துமலையின்மேற் கூட்டிக்கொண்டுபோய் அங்கே அவர்களை ஆசீர்வதித்து அவர்கள் கண்முன்பாகவே தமது சுயவல்லமையினால் மோக்ஷராச்சியத்திற்கு எழுந்தருளினார். எழுந்தருளினபோது, அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ வெண்மையான வஸ்திரந் தரித்த இரண்டுபேர் அவர்கள் அருகேநின்று: கலிலேயாகிய மனிதரே நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்துக்கொண்டு நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த யேசுநாதர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்திற்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள். (அப். நட. 1-ம் அதி.) இந்த வார்த்தைகளைக் கேட்டபின் அப்போஸ்தலர்கள் யெருசலேமுக்குத் திரும்பிப்போனார்கள். கர்த்தருடைய ஆரோகணத்திருநாள் பாஸ்குத் திருநாளுக்குப்பின் நாற்பதாம்நாள் கொண்டாடப்படுகின்றது.

217. யேசுநாதர் என்னமுகாந்திரங்களுக்காக மோக்ஷத்திற்கு எழுந்தருளிப்போனாரெனில்: 1-வது, தமது மனுஷீகமானது இவ்வுலகத்திற் கொடிய கஸ்தி வேதனைகளை அனுபவித்துச் சுதந்தரித்துக்கொண்ட மகிமைப் பாக்கியங்களை அதற்குக் கொடுக்கவும், 2-வது தாம் அப்போஸ்தலர்களை விட்டுப் பிரியுமுன் அவர்களுக்கு வாக்குப்பண்ணியிருந்தபடி அங்கே நம்மெல்லாருக்கும் ஒவ்வொரு இடத்தை ஆயத்தம்பண்ணி வைக்கவும், 3-வது, தமது மனுஷசுபாவத்தின்படியே தம்முடைய பரம பிதாவிடத்தில் நமக்கு மத்தியஸ்தராயிருந்து நமக்காகப் பரிந்துபேசவுமேயாம்.

218. சருவேசுரனாகியமட்டும் அளவில்லாத வல்லமையோடு எங்கும் வியாபித்திருக்கிறவராகிய யேசுநாதர் பரலோகத்திலே தம்முடைய பிதாவின் வலதுபாரிசத்திலே வீற்றிருக்கிறார். உந்நத பிரதாபத்தோடு பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் திவ்விய நற்கருணையிலுமிருக்கிறார். அவர் நம்முடைய அரசரும் எசமா

னுமானபடியால் நாம் அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். நாம் அவருடைய சுதந்தரமும் சிறையுமாயிருக்கிறோம். அவர் நம்முடைய சிருஷ்டிகரும் இரக்ஷகருமாயிருப்பதால், நாம் அவருக்குச் சொந்தமேயாம். நம்முடைய பிரதான ஆசாரியராயிருப்பவரும் அவரே. நம்முடைய பாவ நிவிர்த்திக்காகத் தம்மைச் சிலுவையிலே பரமபிதாவுக்குப் பலியாக ஒப்புக்கொடுத்தபோதே அவர் தமது ஆசாரிய உத்தியோகத்தை நிறைவேற்றியருளினார். பரலோகத்திலேயும் அவர் தாம் மனிதருக்காக அனுபவித்த சகல நிர்ப்பந்த பீடைகளையும் தம்முடைய பரமபிதாவுக்குக் காண்பித்து, ஆசாரியத் தொழிலைச் செய்துகொண்டுவருகிறார். அவரே திருச்சபை என்னும் தமது ஞானச்சரீரத்தின் தலையாய் விளங்கித் தம்முடைய ஆவியாகிய இஸ்பிரீத்துசாந்துவினால் அதற்குச் சீவனையும் அருளையுங் கொடுத்துக்கொண்டுவருகிறார். எல்லா வரப்பிரசாதங்களும் புண்ணியங்களும் அவரிடத்தினின்றே புறப்பட்டுத் திருச்சபையின் அங்கங்களிற் பரவிப் பாய்கின்றன.

219. இத்தன்மையானவரே மெய்யான சருவேசுரனும் மெய்யான மனிதனுமாகிய யேசுநாதர். அவருக்கு சருவேசுரனாகியமட்டும் அளவில்லாத சகல தேவ இலட்சணங்களும் இருக்கின்றன. மனிதனாகியமட்டும் சிருட்டிக்கப்பட்ட மற்றெந்த வஸ்துவுக்கும் கிடைக்கக்கூடாத மானிட இலட்சணங்களெல்லாம் உச்சிதமேரையாய் அவரிடத்தில் விளங்குகின்றன. அவர் தேவனாகிய மட்டும் பிதாவாகிய சருவேசுரனோடு ஒரே சுபாவமுள்ளவராகவும் அவரது நித்தியமான சாயலாகவும் வார்த்தையாகவும் ஞானமாகவும் சதாகாலங்களின்முன் செண்மிக்கப்பட்ட ஏக பேறான சுதனாகவும் மகிமைப்பிரதாப சோதியாகவும் இருக்கிறார். மனிதனாகியமட்டும் வானத்திலும் பூமியிலும் எல்லா அதிகாரமும் பெற்றவராகவும் எல்லா மனிதருக்கும் நீதிபரராய் ஏற்படுத்தப்பட்டவராகவும் இருக்கிறார். சுருங்கச் சொல்லுகில், யேசுக்கிறீஸ்துநாதர் நம்முடைய மேய்ப்பராயும் குருவாயும் பலியாயும் வைத்தியராயும் மாதிரியாயும் இருக்கிறார். நாம் நடக்கிறதற்கு வழியாயிருப்பவரும் அவரே. நாம் உள்ளே செல்லுவதற்கு வாசலாயிருப்பவரும் அவரே. நமது சீவனும் நமது இளைப்பாற்றியும் நமது கிரீடமும் நமது மகிமையும் பாக்கியமும் அவரே. நாம் சருவேசுரனால் நித்தியகாலமாக இராச்சியபாரம்பண்ணும்படி அழைக்கப்பட்டதும் அவர்மூலமாகவும் அவருடைய பெறுபேறுகளின் நிமித்தமாகவுமேயாம்.

# 12-ம் அதிகாரம்

## இஸ்பிரீத்துசாந்துவின் ஆகமனமும் திருச்சபையின் ஸ்தாபகமும்

220. அப்போஸ்தலர்களுக்கு வேதசத்தியங்களைப் படிப்பித்து அவர்கள் பிரயாச உபத்திரியங்களில் ஆறுதலுந் துணையுமாயிருக்கும்படி இஸ்பிரீத்துசாந்துவானவரை அனுப்புவோமென்று யேசுநாதர் தாம் பரமண்டலங்களுக்கு எழுந்தருளு முன்னமே வாக்குப்பண்ணியிருந்தார். எழுந்தருளும்போதும் அவர்களை நோக்கி: நீங்கள் சில நாட்களுக்குள்ளே இஸ்பிரீத்துசாந்துவினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுவீர்கள்; ஆதலால் நீங்கள் யெருசலேமை விட்டுப் போகவேண்டாம்; என்னிடத்திற் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறுந்தனையும் அங்கே காத்துக்கொண்டிருங்களென்று கட்டளையிட்டார். அப்போஸ்தலர்கள் அவ்வண்ணமே ஒலிவேத்துமலையை விட்டிறங்கி யெருசலேமுக்குத் திரும்பிப்போய் அங்கே இருந்த மகா அசனசாலையில் அர்ச். மரியம்மாளோடும் வேறு சில ஸ்திரீகளோடும் அநேக சீஷர்களோடும் கூடிச் செபத்திலும் வேண்டுதலிலும் நிலைத்து இஸ்பிரீத்துசாந்துவின் வரவுக்குக் காத்துக்கொண்டிருந்தார்கள். அசனசாலையிலிருந்தவர்களுடைய தொகை சுமார் நூற்றிருபதாம். இவர்களெல்லாரும் செபித்துக்கொண்டிருக்கையில் பெந்தெக்கோஸ்தென்னும் தினத்திலே, அதாவது ஆரோகணத்தின் பின் பத்தாவதும் உத்தானத்தின் பின் ஐம்பதாவதுமான தினத்திலே, காலை ஒன்பதாம்மணி வேளையில் பலத்தகாற்றின் முழக்கம்போலும் ஒரு பெருஞ் சத்தம் கேட்கப்பட்டது. அந்நேரத்திற்றானே இஸ்பிரீத்துசாந்துவானவர் அக்கினிநாக்கு ரூபமாக அப்போஸ்தலர்மேலும் மற்றச் சீஷர்கள்மேலும் இறங்கியருளினார். அந்த அக்கினிநாக்குகள், அவர்கள் இஸ்பிரீத்துசாந்து சருவேசுரனிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஆச்சரியமான வரங்களுக்கு ஓர் புலப்பாடான அறிகுறியாயிருந்தன. எவ்வாறெனில், இஸ்பிரீத்துசாந்துவினால் நிரப்பப்படுமுன் அவர்கள் உலகப் பற்றுள்ளவர்களாய் திருத்தமற்றவர்களாய் கோழைத்தனமும் பயப்பாடும் உள்ளவர்களாய் கல்வியறிவு அதிகம் இல்லாதவர்களாய் இருந்தார்கள். இஸ்பிரீத்துசாந்துவை அடைந்துகொண்டவுடனே உயர்ந்த அறிவும் பத்திவேகமும் மனத்தைரியமும் பரிசுத்தமும் நிறைந்தவர்களானார்கள். வேதவாக்கியங்களைத் தெளிவாய் விளங்கிக்கொள்ளவும் புதுமைகளைச் செய்யவும் தீர்க்கதரிச

னங்களை உரைக்கவும் பல பாஷைகளைப் பேசவும் வேண்டிய வரங்களை இஸ்பிரீத்துசாந்துவானவர் அவர்களுக்கு ஏராளமாய்க் கொடுத்தருளினார். பெந்தெக்கோஸ்து என்பது சருவேசுரன் சீனாயிபர்வதத்திலே பத்துக்கற்பனைகளைப் பிரசித்தம்பண்ணியருளிய சம்பவத்திற்கு ஓர் ஞாபகமாக யூதர் பாஸ்காத்திருநாளுக்குப்பின் ஐம்பதாம்நாள் வருஷந்தோறும் அனுசரித்துக்கொண்டுவந்த கொண்டாட்டமாம். பூர்வீக பிரமாணமானது கற்பலகைகளிலே வரைந்து இசிறவேல்சனத்திற்குக் கொடுக்கப்பட்ட வருஷாந்தரத் தினத்திற்றானே சுவிசேஷப் பிரமாணமும் பிரசித்தமாகி இருதயங்களில் பதியும்படி இஸ்பிரீத்துசாந்து சருவேசுரன் அப்போஸ்தலர்களிடத்தில் இறங்கியருளச் சித்தமானார்.

221. அப்போஸ்தலர்கள் இஸ்பிரீத்துசாந்துவை அடைந்துகொண்டவுடனே யேசுநாதருடைய திவ்விய வேதத்தைப் போதிக்கவும் பலபாஷைகளிற் பேசவுந் தொடங்கினார்கள். இந்த ஆச்சரியமான சம்பவம் எங்கும் பிரசித்தியாகவே, யெருசலேம்பட்டின வாசிகளும் பெந்தெக்கோஸ்துத் திருநாட்கொண்டாட்டத்தின் நிமித்தம் பற்பல நாடுகளிலும் நின்று அங்கேவந்து கூடின திரளான சனங்களும் தாங்கள் கேள்விப்பட்டது மெய்தானோ என்று அறியும்பொருட்டு அப்போஸ்தலர்களிடத்தில் ஓடிவந்தார்கள். அப்போது, திருச்சபைக்குத் தலைவராய் நியமிக்கப்பட்டிருந்தவரான அர்ச். இராயப்பர், யேசுநாதருடைய உத்தான சம்பவத்தை எல்லாருக்கும் பிரசங்கிக்க இதுவே தக்கசமயமென்றுகண்டு, அவர்களை நோக்கி: இசிறவேலரே கேளுங்கள். நீங்கள் அறிந்திருக்கிறபடி நாசரேயராகிய யேசுவைக்கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும் அற்புதங்களையும் அடையாளங்களையும் நடப்பித்து அவைகளால் அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். நீங்களோ அக்கிரமிகளுடைய கைகளினால் அவரைச் சிலுவையிலே அறைந்து கொன்றீர்கள். ஆயினும் சருவேசுரன் அவரை எழுப்பினார். இதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். சருவேசுரனால் எழுப்பப்பட்ட இந்த யேசுநாதரே இஸ்பிரீத்துசாந்துவை எங்கள்மேற் பொழிந்தருளினார். இவர் நீங்கள் கேட்கிறதுங் காண்கிறதுமாகிய இந்த ஆச்சரியங்களைச் செய்திருக்கிறார் என்றார். (அப். நட. 2-ம் அதி.) இந்த முதலாம் பிரசங்கத்தில் மூவாயிரம் யூதர் மனந்திரும்பி ஞானஸ்நானம்பெற்று யேசுநாதருடைய சீஷர்களுக்குள்ளே சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். சிலநாட் சென்றபின் செபவேளையாகிய ஒன்பதாம்மணி நேரத்திலே அர்ச். இராயப்பரும் அருளப்பரும் தேவாலயத்திற்குப்



போனார்கள். அப்போது, தேவாலய வாசலிலே கொண்டுபோய் விடப்பட்டிருந்த ஒரு பிறவிச் சப்பாணியானவன் அவர்களிடத்திற் பிச்சைகேட்டான். அர்ச். இராயப்பர் அவனைப் பார்த்து: வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன். நாசரேயராகிய யேசுவின் நாமத்தால் எழுந்து நடவென்றார். (அப். நட. 3-ம் அதி.) அக்ஷணமே சப்பாணி எழுந்து நடந்து குதித்துத் தேவனைத் துதித்துக்கொண்டு அவர்களோடு தேவாலயத்திற்குட் பிரவேசித்தான். இந்த அற்புத செய்தியைக் கேள்விப்பட்டவுடனே சனங்களெல்லாந் தேவாலயத்தில் வந்து கூடவே அர்ச். இராயப்பர் மறுபடியும் யேசுநாதருடைய மரணத்தையும் உத்தானத்தையுங் குறித்து அவர்களுக்குப் பிரசங்கித்தார்; விசுவசித்தவர்களது தொகை ஐயாயிரம் ஆயிற்று.

222. இந்த ஆதிக் கிறீஸ்தவர்களுக்கு ஒரே ஆத்துமமும் ஒரே இருதயமும் என்றதுபோலத் தங்களுக்குட் பூரண ஐக்கியமுள்ளவர்களாயிருந்தார்கள். லௌகீக நன்மைகளை வெறுத்துப் பத்திவேகம் நிறைந்தவர்களாய் இடைவிடாத செபத்திலும் நற்கிரியைகளிலும் அலுவலாயிருந்தார்கள். யூதருட் பெரும்பாலாரோ திவ்விய இரக்ஷகருடைய ஞானபோதகத்துக்குச் செவிடராயிருந்ததுபோல அப்போஸ்தலர்களுடைய படிப்பினைக்குஞ் செவிடராயிருந்தார்கள். கொஞ்சத்திற்குள்ளே யூதசபைத் தலைவர்கள் சுவிசேஷபோதகத்தைத் தடைபண்ண ஆலோசனைசெய்து அப்போஸ்தலர்களைப் பிடித்துக் காவலிலேபோடுவித்தார்கள். ஆயினும், சருவேசுரனால் அனுப்பப்பட்ட ஒரு தேவதூதனானவர் ஆச்சரியமானவிதமாய் அவர்களைச் சிறைச்சாலையினின்று மீட்டுவிட, அவர்கள் யேசுக்கிறீஸ்துவின் திருநாமத்தின்பொருட்டு நிந்தை அவமானங்களை அனுபவிக்கத் தங்களுக்குக் கிடைத்ததைப்பற்றிச் சந்தோஷப்பட்டுத் துன்ப உபத்திரியங்களுக்குப் பின்வாங்காதவர்களாய் முன்னிலும் அதிக உற்சாகத்தோடு வேதத்தை எங்கும் பரப்பப் பிரயாசப்பட்டுக்கொண்டுவந்தார்கள்.

223. அப்போஸ்தலர்களை மிகவும் பகைத்து உபத்திரவப்படுத்திக்கொண்டுவந்த சவுல் என்கிறவர் யேசுநாதருடைய கிருபையால் மனந்திரும்பி பேர்போன வேதப்பிரசங்கியராய் விளங்கினார். அதெப்படியெனில், அவர், மோசேசின் பிரமாணத்திலே பெரும் பத்திவைராக்கியமுடையவராயிருந்தபடியால், அப்போஸ்தலர்கள் போதித்த கிறீஸ்துவேதத்தை முளையிற்றானே களைந்துவிடவேண்டுமென்ற கருத்துக்கொண்டு, தமாஸ்குபட்டினத்திலிருந்த கிறீஸ்த

வர்களை எல்லாம் பிடித்து வாதித்துச் சிறைப்படுத்திக்கொண்டு வரும்படி பிரதான ஆசாரியரிடத்தில் உத்தாரம்பெற்று அப்பட்டினத்திற்குப் பிரயாணமாய்ப்போனார். போகும் வழியில், யேசுநாதர் அவருடைய தீய ஆலோசனைகளை மாற்றித் தமது வல்லமையுள்ள பிரசாதத்தால் அவரை மனந்திருப்பி, கலாபனைக்காரனாகிய அவரைத் தமது அப்போஸ்தலனாகவும் தமது திவ்விய வேதமாகிய மாளிகையின் ஓர் முக்கிய ஸ்தம்பமாகவும் இருக்கச்செய்தருளினார்.

224. அப்படியிருக்க, புதிய கிறீஸ்தவர்களுடைய தொகையானது நாளொருவண்ணம் பொழுதொருமேனியாய் அதிகரித்துக் கொண்டுவந்தது. அப்போஸ்தலர்களோ, அந்நாளிலே எருசலேமில் நடந்துகொண்டுவந்த வேதகலாபனையினிமித்தம் அப்பட்டினத்தைவிட்டு விலகிப்போய், யூதேயா கலிலேயா சமாரியா நாடுகளிற் பிரசங்கம்பண்ணினார்கள். அதின்பின் சகல சாதியாருக்கும் வேதத்தைப் பிரசங்கியுங்கள் என்று யேசுநாதர் தங்களுக்குக் கற்பித்திருந்தபடி ஒருவரையொருவர் விட்டுப்பிரிந்து மற்றத்தேசங்களில் வாசம்பண்ணிக்கொண்டிருந்த சனங்களுக்குப் பிரசங்கம் பண்ணப்போனார்கள். அர்ச். இராயப்பர் அநேக ஊர்களிற் சுற்றித் திரிந்து சனங்களை மனந்திருப்பினார். அவர் தமது ஆசனத்தை முதன்முதல் அந்தியோக்கியாபட்டினத்தில் ஸ்தாபித்தார். யேசுநாதருடைய அநுசாரிகள் கிறீஸ்தவர்களென்று முதன்முதல் அழைக்கப்பட்டதும் அப்பட்டினத்திலேயாம். பின்பு அர்ச். இராயப்பர் அந்தியோக்கியாவைவிட்டு அக்காலத்தில் உலகமுழுவதுக்குந் தலைப்பட்டினமும் விக்கிரகாராதனைக்கு மையமுமாய் விளங்கிக்கொண்டிருந்த உரோமாபுரிக்குச் சென்றார்.

சவுல் மனந்திரும்பி ஞானஸ்நானம்பெற்றுக்கொண்டபின் பவுல் அல்லது சின்னப்பரென்னும் நாமம் பூண்டிருந்தார். இவர் அஞ்ஞானிகளுக்கு அப்போஸ்தலனாக யேசுநாதரால் நியமிக்கப்பட்டிருந்தபடியால், கஸ்தி உபத்திரவங்களுக்கும் மரணத்திற்கும் அஞ்சாமல், தணியாத பத்திவேகத்தோடு நாடுகள் நகரங்கள்தோறும் போய் அவர்களுக்குப் பிரசங்கித்து, கணக்கற்ற சனங்களை மனந்திருப்பி வேதசபைகளை ஏற்படுத்தினார். மற்ற அப்போஸ்தலர்களும், ஆங்காங்குசென்று வேறு அனேக சனங்களை மனந்திருப்பிக் கொண்டுவந்தார்கள். சுவிசேஷ வாக்கானது எங்கும் ஆச்சரியங்களை விளைவித்துக் கொண்டுவந்தது. விக்கிரக பத்திக்காரர் தங்கள் ஆலயங்களையும் பொய்த்தேவ வழிபாட்டையுந் தள்ளிவிட்டு யேசுநாதருடைய திவ்விய வேதத்தை அங்கீகரித்துக்கொண்டார்கள். அதனாற் சத்திய திருச்சபையானது மேன்மேலும் வளர்ந்து



கொண்டுவந்தது. இத்தனை திரளான சனங்கள் நாள்தோறும் மனந்திரும்பி யேசுநாதருடைய வேதத்தைப்பற்றிக்கொண்டது சருவேசுரனுடைய ஆச்சரியமான செயலையாம். அவரே மனிதருடைய புத்திக்கு வெளிச்சத்தையும் இருதயத்துக்கு நல்லுணர்ச்சியையுங்கொடுத்ததோடு, சுவிசேஷப் பிரசங்கத்தை அநேகாநேக அற்புதங்களால் உறுதிப்படுத்திக்கொண்டும் வந்தார். அக்காலம் அங்கங்கே இராசாக்கள் கிறீஸ்துவேதத்தைப் பகைத்து உபத்திரியப்படுத்திக்கொண்டுவந்த போதிலும், அப்போஸ்தலர்களும் சீஷர்களும் ஆணும் பெண்ணுமான அநேக விசுவாசிகளும், கொடிய வேதனைகளுக்கும் மரணத்துக்கும் அஞ்சாமல், கிறீஸ்துவேதத்திற் சேர்ந்துகொண்டு வந்தமையும் சனங்கள் திரள்திரளாய் மனந்திரும்பி வேதத்தில் உட்பட்டதற்கு ஓர் காரணமாயிருந்தது.

# 13-ம் அதிகாரம்

## அர்ச்சியசிஷ்டர்களுடைய ஐக்கியப்பிரயோசனம்

1. ஐக்கியப்பிரயோசனமாவதென்ன? 2. அதற்கு விஷயமாயுள்ள நன்மைகள் எவை? 3. அதற்குப் பங்காளிகளாய் இருப்பவர்கள் யார்? 4. பங்காளிகளாய் இருப்பதற்குச் செய்யவேண்டியவைகள் எவை?

### I. அர்ச்சியசிஷ்டர்களுடைய ஐக்கியப்பிரயோசனமாவது என்ன?

225. திருச்சபையின் பிள்ளைகளாயிருக்கும் அந்தந்த வகுப்பாருக்குப் பொதுவாயுள்ள ஞான நன்மைகளில் மற்றவர்களுக்கும் பங்கு உண்டாயிருப்பதே அர்ச்சியசிஷ்டர்களுடைய ஐக்கியப்பிரயோசனமெனப்படும். ஐக்கியம் என்னுஞ் சொல்லுக்கு அநேகர் ஒன்றாய்ச் சேர்ந்திருப்பது என்று அர்த்தமாம். அது இவ்விடத்தில் யேசுக்கிறீஸ்துநாதரைத் தங்களுக்குத் தலைவராய்க்கொண்டிருக்கும் விசுவாசிகளின் கூட்டத்தைக் கருதுகின்றது. அர்ச்சியசிஷ்டர்கள் என்னுஞ் சொல் ஓட்டோலகசபையென்று கூறப்படும் மோக்ஷவாசிகளையும், உத்தரிக்கும் சபையென்று கூறப்படும் உத்தரிப்புஸ்தலத்து ஆத்துமாக்களையும், யுத்த சபை என்று கூறப்

படும் உலகத்து விசுவாசிகளையுங் குறிக்கும். இந்த மூன்று வகுப்பான சபைகளும் ஒரே ஞான உடல்போலிருக்கின்றன. அந்த உடலுக்குச் சிரமாய் விளங்குபவர் யேசுநாதரேயாம். உலகத்தில் வாழுஞ் சகலவிசுவாசிகளும் பொதுவாக அர்ச்சியசிஷ்டர்களென்று சொல்லப்படுவது ஏனெனில், இவர்களுக்குள்ளே சிலர் உள்ளபடி பரிசுத்தராய் இராவிட்டாலும் எல்லாரும் ஞானஸ்நானத்தால் அர்ச்சிக்கப்பட்டவர்களாயும் பரிசுத்தத்திற்கு அழைக்கப்பட்டவர்களாயுமேயிருக்கிறார்கள். ஆதலால், ஒரு குடும்பத்தின் பிள்ளைகளுக்கு அக்குடும்பத்தின் முதுசொங்கள் எல்லாம் பொதுவாயிருக்கிறதெப்படியோ, திருச்சபையின் பிள்ளைகளுக்கும் அதின் ஞானநன்மைகளெல்லாம் அப்படியே பொதுவாயிருக்கின்றன. அர்ச். சின்னப்பர் திருச்சபையை ஒரு மானிடதேகத்தோடு ஒப்பிட்டுக்கூறின உவமானத்தாலும் அர்ச்சியசிஷ்டர்களுடைய ஐக்கியப் பிரயோசனம் மிகத் தெளிவாகின்றது. எவ்வாறெனில், ஒரு தேகத்தின் உயிரும், சுபாசுபமும் மற்ற நன்மைகளும் தேகத்தின் அவயவங்களெல்லாவற்றிற்கும் பொதுவாயிருக்கின்றன. அவ்வண்ணமே திருச்சபையின் ஞானநன்மைகள் எல்லாம் அச்சபைக்குச் சேர்ந்த எல்லாருக்கும் பொதுவாயிருக்கின்றன. அர்ச்சியசிஷ்டர்களுடைய ஐக்கியப்பிரயோசனமானது விசுவாசமந்திரத்திற் தெளிவாய் சொல்லப்பட்டிருக்கிற ஒரு விசுவாசசத்தியமேயாம்.

II. *அர்ச்சியசிஷ்டர்களுடைய ஐக்கியப் பிரயோசனத்திற்கு விஷயமாயிருக்கும் நன்மைகள் எவை ?*

226. அர்ச்சியசிஷ்டர்களுடைய ஐக்கியப் பிரயோசனத்திற்கு விஷயமாயுள்ள நன்மைகள் எவையெனில்: தேவதிரவிய அனுமானங்களும், திவ்விய பூசைப்பலியும், வேதவாக்கியங்களும், விசுவாசிகளுடைய நற்கிரியைகளும், பெறுபேறுகளும், செபங்களும், மோக்ஷவாசிகளுடைய செபங்களுமாம். இந்த நன்மைகள் எல்லாம் சேர்ந்ததுதான் திருச்சபையின் பொதுவான ஞானப்பொக்ஷம். இந்தப் பொக்ஷத்துக்குப் பங்காளியாயிருக்கத் திருச்சபையின் பிள்ளைகளாகிய ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. ஒவ்வொருவரும் தத்தம் ஆயத்தம் அவசியங்களுக்குத் தக்கபடியும், சருவேசுரனுடைய காருண்ணியமுள்ள திருவுளத்துக்கு ஏற்றபிரகாரமாகவும் இந்த ஞானப்பொக்ஷத்தில் பங்குபற்றிக் கொண்டுவருகிறார்கள். இந்த ஞானநன்மைகளுக்குள்ள பெறுமதியானது எதினால் அவைகளுக்கு விளைகின்றதெனில், யேசுநாதருடைய அளவில்லாத பெறுபேறுகளினாலேயே விளைகின்றது.



திவ்விய இரக்ஷகருடைய பெறுபேறுகளே திருச்சபையிலுள்ள ஞானப்பொக்ஷத்திற்கு மெய்யான அஸ்திவாரமாம். அவைகளே தேவ திரவிய அனுமானங்களின் மூலமாகவும் திவ்விய பூசைப்பலியின் மூலமாகவுந் திருச்சபையின் அங்கங்களுக்குச் செலுத்தப்படுகின்றன. அவ்வாறே விசுவாசிகளுடைய செபங்களும் நற்கிரியைகளுமாகியவைகளெல்லாம் திவ்விய இரக்ஷகருடைய வரப்பிரசாதத்தைத் தங்களுக்கு மூலகாரணமாய்க்கொண்டிருப்பதினால் மாத்திரம் பலனுள்ளவைகளாகின்றன. நம்முடைய ஆத்தும ஈடேற்றத்துக்கு மிகப் பிரயோசனமாயுள்ள மோக்ஷவாசிகளுடைய வேண்டுதற் பெறுபேறுகளும் யேசுநாதர் மூலமாகவே நமக்குக் கிடைக்கின்றன. எப்படியெனில், மோக்ஷவாசிகள் இவ்வுலகத்திலிருந்தபோது யேசுநாதருடைய வரப்பிரசாதத்தை நன்றாய் உபயோகித்தும் அவருடைய பெறுபேறுகளாற் தங்களைப் பரிசுத்தப்படுத்தியுங் கொண்டுவந்தவர்களேயாம்.

III. *ஐக்கியப்பிரயோசனத்திற்குப் பங்காளிகளாயிருக்கிறவர்கள் யார் ?*

227. திருச்சபையானது, மேலேகண்டபடி, மோக்ஷத்திலேயுள்ள அர்ச்சியசிஷ்டர்களும் உத்தரிப்பு ஸ்தலத்திலிருக்கும் நீதிமான்களும் உலகத்தில்வாழும் விசுவாசிகளுமாகியவர்களின் சேர்க்கையால் உண்டாயிருக்கின்றது. ஆதலால், 1-வது, மோக்ஷத்திலிருக்கும் அர்ச்சியசிஷ்டர்களுக்கும் பூமியில்வாழும் விசுவாசிகளுக்குமிடையே ஐக்கியப் பிரயோசனமுண்டு. அதினால் உலகத்திலுள்ள விசுவாசிகள் மோக்ஷவாசிகளை வணங்கியும் மன்றாடியுங் கொண்டுவருகிறார்கள். மோக்ஷவாசிகளும், விசுவாசிகளுடைய ஆத்தும ஈடேற்றத்தின்மேல் கவலையுற்று, அது நிறைவேறும்படி சருவேசுரனிடத்தில் மன்றாடிக்கொண்டு வருகிறார்கள். 2-வது, விசுவாசிகளுக்கும் உத்தரிப்புஸ்தலத்து ஆத்துமாக்களுக்குமிடையே ஐக்கியப்பிரயோசனம் உண்டு. அதனால், விசுவாசிகள் உத்தரிப்புஸ்தலத்து ஆத்துமாக்களின் வேதனை தணியும்படி வேண்டுதல் செய்தும், தங்கள் நற்கிரியைப் பலன்களை ஒப்புக்கொடுத்தும் வருகிறார்கள். உத்தரிப்புஸ்தலத்து ஆத்துமாக்கள், மிகப் பேர்போன வேதசாஸ்திரிகள் வசனித்திருக்கிறபடி, தாங்களே தங்களுக்குப் புண்ணியபேறுகளைச் சம்பாதித்துக்கொள்ளக் கூடாதவர்களாய் இருந்தும் உலகத்தவர்களுக்குப் பிரயோசனமானவிதமாய்க் கடவுளைப்பார்த்துப் பிரார்த்திக்கத்தக்கவர்களாம். 3-வது, உலகத்தில் வாழும் விசுவாசிகளுக்கிடையில் ஐக்கியப் பிரயோசனமுண்டு எவ்வாறெனில், விசுவாசிகளாகிய எல்லாரும் ஒருவரொருவருடைய

செபங்களுக்கும் நற்கிரியைகளுக்குமன்றித் திருச்சபையிலுள்ள எல்லாப் பேறுபேறுகளுக்கும் பங்காளிகளாய் இருக்கிறார்கள். இவ்வண்ணமே, இஷ்டப்பிரசாதத்தோடுசீவிக்கிற கிறீஸ்தவன் தான் பண்ணுஞ் செபமும் படும் பிரயாசமும் பெற்றுக்கொள்ளும் பேறுமாகிய இவையெல்லாவற்றையும் சாதாரண திருச்சபைக்காகச் செய்கிறவனாகவும், சாதாரண திருச்சபையால் அனுசரிக்கப்படும் செபங்களும் புண்ணியங்களும் பிரயாசங்களுமாகியவைகளால் விளையும் பேறுபேறுகளைத் தான் பற்றிக்கொள்ளுகிறவனாகவும் இருக்கிறான். ஒரு நீதிமானுடைய நற்கிரியைகளை நோக்குமிடத்து, அவைகளெல்லாம் பேறுபேறுகள்மட்டிலே ஒரு அளவில் திருச்சபையின் சீவந்தராகிய எல்லா அங்கங்களினும் நற்கிரியைகளாகவும், இவர்களுடைய நற்கிரியைகளெல்லாம் ஒரு அளவில் அந்த நீதிமானுடைய நற்கிரியைகளாகவும் இருக்கின்றன.

IV. அர்ச்சியசிஷ்டர்களுடைய ஐக்கியப்பிரயோசனத்திற்குப் பங்காளிகளாயிருப்பதற்குச் செய்யவேண்டியவைகள் எவை?

228. திருச்சபையில் வெளி ஞான நன்மைகளென்றும், உள் ஞான நன்மைகளென்றும் இரண்டுவகையான ஞான நன்மைகள் உண்டு. அவ்வண்ணமே, திருச்சபையோடு ஆத்துமாக்கள் கொண்டிருக்கிற ஐக்கியமும் வெளி ஐக்கியம் என்றும் உள்ஐக்கியம் என்றும் இரண்டுவகையாகும். ஒரே விசுவாசத்தை அனுசரிக்கிறதினாலும், தேவதிரவிய அனுமானங்களை ஒத்தவிதமாய்க் கைக்கொண்டிருப்பதினாலும், முறைமையான எல்லா ஞானமேய்ப்பருக்கும் விசேஷமாய்த் திருச்சபையின் பிரத்தியக்ஷ தலைவருக்கும் கீழ்ப்படிந்திருப்பதினாலும் கிறீஸ்தவர்களுக்குள்ளே உண்டாவது வெளி ஐக்கியமாம். உள் ஐக்கியமோ, தேவசிநேகத்தாலும் இஸ்பிரீத்துசாந்துவின் பிரசாதங்களாலும் விசுவாசிகளைத் தங்களுக்குள் ஐக்கியப்பட்டிருக்கச்செய்வதாம். ஆதலால், 1-வது, தேவதிரவிய அனுமானங்கள் பிரசித்த செபங்கள் முதலான திருச்சபையின் வெளி நன்மைகளுக்குப் பங்காளிகளாயிருக்கவேண்டுமாகில், திருச்சபையின் வெளி ஐக்கியத்திலாவது சேர்ந்திருப்பது அவசியம். ஏனெனில், ஒருவன் விசுவாசிகளுடைய சபையினின்று நீக்கப்பட்டவனாயிருந்தால் அவன் அந்தச் சபைக்குச்சேர்ந்தவர்களுக்குப் பொதுவாயுள்ள நன்மைகளுக்குப் பங்காளியாயிருத்தல் கூடாது. ஆதலால், திருச்சபையின் அங்கங்கள் அல்லாதவர்களாகிய யூதர் அஞ்ஞானிகள் பதிதர் பிரிவினைக்காரர் தள்ளுண்டவர்கள் முதலானவர்களுக்கு அர்ச்சியசிஷ்டர்களுடைய ஐக்கியப்பிரயோசனத்தில் எள்ளளவேனும் பங்கில்லை. திருச்சபையின்



வெளி ஐக்கியத்துக்குப் புறம்பாக்கப்படாத பாவிகள் தேவதிரவிய அனுமானங்களைப் பெற்றுக்கொள்ளவோ, திருவாக்குப் பிரசங்கங் கேட்கவோ, பூசை பிரசித்த ஆராதனை தனி ஆராதனைகளின் பேறுகளை அடைந்துகொள்ளவோ உரிமையற்றவர்களாவதில்லை. ஏனெனில், இவைகளால் அவர்கள் மனந்திரும்பிச் சன்மார்க்கராவதற்கு வேண்டிய தேவசகாயங்களைப் பெற்றுக்கொள்ளுதல் கூடும். 2-வது, ஒருவன் நித்திய சீவியத்திற்கு உரிய முறையாய் நற்கிரியைப் பேறுபேறுகளுக்குப் பங்காளிகளாவதற்கு தேவசிநேகத்தாற் திருச்சபையின் உள் ஐக்கியப்பிரயோசனத்திற்குச் சேர்ந்தவனாயிருப்பது அவசியமாம். பாவிகளாயுள்ளவர்கள் திருச்சபையின் உடலினின்றும் நீங்காதவர்களாயிருந்தாலும் செத்த அவயவங்கள்போலிருக்கிறார்கள். உடலிலுள்ள சீவன் அவைகளிலே செல்லாது. நீதிமான்கள் மாத்திரமே தங்கள் விசுவாசம் தேவசிநேகம் பரிசுத்தமாகியவைகளின் அளவாகத் திருச்சபையின் ஞானச் சீவனிற் பங்குபற்றிக்கொள்ளுகிறார்கள்.

# 14-ம் அதிகாரம்

## தேவ வரப்பிரசாதம்

### ஆயத்த உணர்ச்சிகள்

229. மனிதர் பரிசுத்தராகிச் சருவேசுரனுக்கு யோக்கியமும் பூரணமுமான ஆராதனையைச் செலுத்திக்கொண்டுவரும்படியாக யேசுநாதர் தமது திருச்சபையை ஸ்தாபித்தருளினார். தேவ வரப்பிரசாதத்தினாலேயே மனிதர் பரிசுத்தராவார்கள்.

சுபாவமுறையிலாவது ஞானமுறையிலாவது சருவேசுரன் மனிதருக்கு இலவசமாய் அளிக்குஞ் சகல வரங்களும் சகல சகாயங்களும் பொதுவாக தேவவரப்பிரசாதம் எனப்படும். ஆதலால், வரப்பிரசாதங்கள் சுபாவ வரப்பிரசாதங்களும் ஞானவரப்பிரசாதங்களும் என இரண்டுவகைப்படும். சருவேசுரன் மனிதனை அவனுடைய சுபாவத்திற்குமேலாக, அதாவது, ஆத்துமமும் சரீரமுங் கூடிய ஒரு அறிவுள்ள வஸ்துவாகியமட்டும் அவனுக்கு உரிமை

யாயிருப்பது எதுவோ அதற்கு மேலாக உயர்த்தாமல், அவனுக்குக் கொடுக்கும் வரப்பிரசாதங்களே சுபாவ வரப்பிரசாதங்களாம் (Natural Graces). சுபாவ வரப்பிரசாதங்களெல்லாம் இம்மைச் சீவியத்திற்கு அடுத்தவைகளாயிருக்கின்றன. இவைகள் தேக சௌக்கியமும் புத்திசித்தமும் தன்னிஷ்டமுமேயன்றி, பார்ப்பதற்கு கேட்பதற்கு நினைப்பதற்கு நிதானிப்பதற்கு நியாயம் ஆராய்வதற்கு அவசியமான சத்துவமும் பிறவுமாம்.

ஞானவரப்பிரசாதங்கள் (Supernatural Graces) சருவேசுரன் மனிதனைச் சுபாவ அந்தஸ்துக்குமேலாக உயர்த்தும்படி கொடுக்கும் வரப்பிரசாதங்களாம். இவைகள் நேரே ஆத்தும ஈடேற்றத்துக்கு அடுத்தவைகளாயும் மோக்ஷத்திலே சருவேசுரனை முகமுகமாய்த் தரிசித்துப் பேரின்பத்தை அனுபவிக்க மனிதனைத் தக்கவனாக்கும்பொருட்டு நியமிக்கப்பட்டவைகளாகவுமிருக்கின்றன. இத்தன்மையான வரங்களைச் சருவேசுரன் நம்முடைய ஆதிப் பிதா மாதாக்களுக்குக்கொடுத்து அவர்களைப் பரிசுத்தமும் பாக்கியமுமான அந்தஸ்தலே ஏற்படுத்தியருளினார். இத்தன்மையான வரப்பிரசாதங்களையே அவர் இப்போதும் மனிதருக்களித்து அவர்கள் மோக்ஷபேரின்பத்தை அடைந்துகொள்ளவேண்டுமென்று திருவுளங்கொண்டிருக்கிறார். வரப்பிரசாதமென்னுஞ் சொல்லானது பொதுவானவழக்கில் ஞானவரப்பிரசாதத்தையே குறித்துக் காட்டும்.

230. ஞானவரப்பிரசாதமானது நாம் நித்திய ஆத்தும ஈடேற்றத்தை அடைந்துகொள்ளும்படி சருவேசுரன், யேசுக்கிறீஸ்துநாதருடைய பெறுபேறுகளைநோக்கி, நமக்கு இலவசமாய்க் கொடுக்குஞ் சுபாவத்திற்குமேலான கொடையாம்.

1-வது, வரப்பிரசாதம் ஒரு கொடை ; ஏனெனில், அது ஒரு உபகாரம். 2-வது, அது சுபாவத்திற்கு மேலானது; ஏனெனில் அது மறுமைச் சீவியத்திற்கு அடுத்ததாயும், சருவேசுரனை முகமுகமாய்த் தரிசிக்க நம்மை ஆயத்தப்படுத்துவதாயும் இருக்கின்றது. 3-வது, சருவேசுரனாற் கொடுக்கப்படும் என்பதினால் வரப்பிரசாதத்தைத் தரக்கூடியவர் சருவேசுரன்மாத்திரமேயென்றும் சம்மனசுகளும் மனிதரும் நமக்காக அதைச் சருவேசுரனிடத்தில் மன்றாடிக் கேட்கமாத்திரங்கூடுமென்றும் அறிந்துகொள்க. 4-வது, வரப்பிரசாதம் இலவசமாய் அளிக்கும் கொடை என்றுசொல்வது ஏனெனில், அது சருவேசுரனுடைய சுயாதீனமான இரக்கத்தினால்மாத்திரம் நமக்குக் கிடைக்கின்றது. அவர் அதை நமக்குத் தராமல் விட்டாலும் அதனால் அவருக்குக் குற்றம்விளையாது. அவர் மனிதனைச் சிருட்டித்தபோது அவனைச் சுத்த சுபாவ அந்தஸ்திற்றானே விட்டுவிடவும் தமது பேரின்பமாகிய மோக்ஷ சம்பாவனைக்கு அவனை நியமியாதிருக்கவுங் கூடியதாய் இருந்தது. அப்படியிருக்க மனிதனோ பாவத்தாற் தன்னுடைய ஆதிஸ்திதியிலிருந்து வழுவிக் கெட்டுப்போனபின் சருவேசுரன் அவனுக்குத் தமது ஞான வரப்பிரசாதத்தைக் கொடாமல் அந்தப் பாழான அந்தஸ்திற்றானே அவனைக் கைவிட்டுவிடக்கூடுமென்பதைச் சொல்லவும்வேண்டுமோ ? மீளவும், மனிதன் யேசுக்கிறீஸ்துநாதரால் மீட்கப்பட்டபின்புமுதலாய், தன் ஆத்தும ஈடேற்றத்துக்கு அவசியமான வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வேண்டிய உரிமையானது, சருவேசுரனால் முழுதும் இலவசமாய்க் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களாலன்றி வேறெந்த வழியாலும் அவனுக்கு உண்டாவதில்லை. ஆதலால், எப்படிப்பார்த்தாலும் வரப்பிரசாதத்தை ஒரு இலவசமான கொடை என்றே சொல்ல வேண்டும். 5-வது, யேசுக்கிறீஸ்துநாதருடைய பேறுபலன்களை நோக்கியென்று சொல்வது ஏனெனில், ஆதாம் கெட்டுப்போகு முன் அவருக்குக் கிடைத்திருந்த ஞான வரப்பிரசாதங்களெல்லாம் சிருட்டிகராகிய சருவேசுரன் தமது மட்டுக்கடங்காத தேவ தயாளத்தினிமித்தம் அவருக்குச்செய்த உபகாரங்களாயிருந்தன. ஆதி மனிதனுடைய கேட்டுக்குப்பின்போவெனில், மனுக்குலத்து இரக்ஷகராகிய யேசுநாதருடைய பெறுபேறுகளினிமித்தமாக மாத்திரமே சருவேசுரன் தமது வரப்பிரசாதங்களை மனிதருக்குக் கொடுத்தருளுகிறார். 6-வது, நாம் நித்திய ஆத்தும ஈடேற்றத்தை அடைந்துகொள்ளும்படியாக என்பதினால் சருவேசுரன் தமது ஞான வரப்பிரசாதங்களை எதின்பொருட்டுத் தந்தருளுகிறாரென்பது பிரத்தியக்ஷமாகின்றது.



231. வரப்பிரசாதங்கள் : வெளிவரப்பிரசாதங்களென்றும் உள் வரப்பிரசாதங்களென்றும் இருவகையாகும். வெளி வரப்பிரசாதங்கள் (External) நம்மை நன்மைக்குத் தூண்டவும் நித்திய சீவியத்திற்குச் செலுத்தவுங்கூடியவிதமாய் நமக்குப் புறத்தே சருவேசுரன் முஸ்திப்புப்பண்ணிவைக்கும் உபாயங்களாம். உதாரணமாக : நன்மாதிரிகளும் கிறீஸ்தவனுக்குரிய வளர்ப்பும் பத்திக்குரிய வாசிப்புகளும் பிறவும் வெளி வரப்பிரசாதங்களெனப்படும். உள் வரப்பிரசாதங்கள் (Internal) சருவேசுரன் நம்முடைய மனதிலே பிறப்பிக்கும் நல்லெண்ணங்களும் நல்லுணர்ச்சிகளும் முதலியவைகளாம். வெளி வரப்பிரசாதமானது உள்வரப்பிரசாதத்தோடு

சேர்ந்திருந்தால்மாத்திரம் ஒருவனை நன்மைக்குத் துணியப்பண்ணும். வரப்பிரசாதங்களுக்குள்ளே சில அவைகளைப் பெற்றுக் கொள்ளுகிறவர்களுடைய **சொந்தநன்மைக்காக** (Gratia gratum faciens) விசேஷமாய்க் கொடுக்கப்படுகின்றன. மேலே சொன்னவைகள் இத்தன்மையானவைகளாம். **இலவசமாய்க் கொடுக்கப்படும்** (Gratis data) வரப்பிரசாதங்கள் என்று அழைக்கப்படும் மற்றவைகளோ பிறருடைய ஞான நன்மைக்காக ஒருவனுக்குக் கொடுக்கப்படுகின்றன. இவை பாஷைவரம், தீர்க்கதரிசனவரம், தேவதிரவிய அனுமானங்களைக் கொடுப்பதற்கான அதிகாரம் முதலியவைகளாம். இந்தமட்டும் ஆயத்த உணர்ச்சிகளையெடுத்துக் காண்பித்தோம். இனி, திருச்சபையின் போதகத்துக்கிணங்க 1-வது, தேவ வரப்பிரசாதத்தின் அவசியத்தையும், 2-வது, அதின் வகைகளையும், 3-வது, அதினால்விளையும் பயன்களையும்பற்றிச் சொல்லுவோம்.

---

# 1-ம் பிரிவு

## வரப்பிரசாதத்தின் அவசியம்

1. வரப்பிரசாதத்தைப்பற்றிய தவறுகள், 2. **சுபாவமுறையில்** வரப்பிரசாதம் அவசியம். 3. **ஞானமுறையில் வரப்பிரசாதம்** அவசியம்.

232. **வரப்பிரசாதத்தைப்பற்றிய தவறுகள்.** *தேவ வரப்பிரசாதத்தைக்குறித்துத் தப்பறைகளைப் போதித்தவர்களுக்குள்ளே சிலர் வரப்பிரசாதத்திற்குக் குறைவுண்டாகும்படி மனிதனுடைய தன்னிட்டத்தோடு பொருந்தாதவைகளைக் கூட்டிச் சொன்னார்கள். மற்றச் சிலர் மனிதனுடைய தன்னிட்டத்துக்குக் குறைவுண்டாகும்படி வரப்பிரசாதத்தோடு பொருந்தாதவைகளைக் கூட்டிச்சொன்னார்கள். முன் சொல்லப்பட்டவர்கள் பெலேஜியர்களும் அரைப்பெலேஜியர்களுமாம். பின் சொல்லப்பட்டவர்கள் புரோட்டெஸ்தாந்தர்களும் ஜான்சேனிஸ்தர்களுமாம்.

1-வது பெலேஜியர் என்பவர்கள் பெலேஜியஸ் என்னும் ஒரு அங்கிலேய சந்நியாசியின் சீஷர்கள். ஐந்தாம் நூற்றாண்டில் சீவித்த அந்தப் பெலேஜியஸ் ஆதாமின் பாவமானது அவர் சந்ததியாரைச் சேராதது என்றும், ஆதாம் கெட்டுப்போகுமுன் எவ்



வளவு தன்னிஷ்டம் உள்ளவராய் இருந்தாரோ, அவருடைய சந்ததியாரும் அவ்வளவு தன்னிஷ்டமுள்ளவர்கள் என்றும், இவர்கள் ஆத்தும ஈடேற்றத்துக்கு வேண்டியமட்டும் தங்கள் சுபாவப்பெலனால் மாத்திரம் நன்மையைச் செய்யவுந் தீமையை விலக்கவுங் கூடியவர்கள் என்றும் அபத்தமாய்ப் போதித்தான். இந்தத் துர்ப்போதகத்தை அர்ச். ஜெரோமும் அர்ச். அகுஸ்தீனும் வெகு பலத்த நியாயங்களால் மறுத்தார்கள். அன்றியும், நானூற்று முப்பத்தோராம் ஆண்டு எபேசு நகரத்திற்கூடிய திருச்சபைச் சங்கமானது அப்போதகத்தைப் பதிதமென்று சபித்துத்தள்ளிவிட்டது. பெலேஜியர்களுடைய அபத்தங்களில் ஒருபங்கை அங்கீகரித்துக் கொண்டதினால் அரைப் பெலேஜியர்களென்று சொல்லப்பட்ட வேறுசில பதிதர் போதித்தது என்னவெனில்: சென்மபாவத்தால் பலவீனமடைந்தவனாகிய மனிதன் தன் சொந்தப்பெலனால் விசுவாசத்தைப் பற்றிக்கொள்ளவும் நன்மையைச் செய்யவுங் கூடாதவனாயிருக்கிறான்; தேவ வரப்பிரசாதத்தின் உதவியின்றி விசுவாசத்தின் ஆரம்பத்தைப் பற்றிக்கொள்ளவும் நன்மையைச் செய்யவும் அதாவது: சருவேசுரனை விசுவசிக்கவும், நன்மையைப்புரிய ஆசைகொள்ளவும் அவனாற் கூடும்; சருவேசுரன் இந்தப் பத்தியுள்ள ஆசையைப்பார்த்து ஈடேற்றத்துக்கு அவசியமான விசுவாசத்தைப் பற்றிக்கொள்ளவும் நற்கிரிகைகளைச் செய்யவும்வேண்டிய வரப்பிரசாதத்தை அவனுக்கு அருளுகிறார் என்றார்கள்.

2-வது, புரோட்டெஸ்தாந்தர்கள் தங்கள் குருவாகிய லுத்தேருடைய போதகத்தை அனுசரித்துப் படிப்பிக்கிறது என்னவெனில், ஆதாமுடைய பாவத்தால் மனிதன் பாவரூபியும் நிர்ப்பாக்கியனுமாக மாறிப்போய்விட்டான். தன்னிஷ்டமானது அவனிடத்தில் முழுதுங் கெட்டழிந்து போயிற்று. விசுவாசமும் வழக்கப்பிரசாதமுமில்லாவிடில் பாவமல்லாத யாதொன்றையுஞ் செய்ய அவனால் ஆகாது என்கிறார்கள். இப்பொய்ப்போதகத்தின்படி அவிசுவாசிகளாற் செய்யப்படும் எல்லாக் கிரியைகளும், விசுவாசமுள்ள பாவிகளாற் செய்யப்படுஞ் சகல கிரியைகளும் பாவங்களாம் என்றும் முடிக்கிறார்கள். ஜான்சேனிஸ்தரோ மனிதன் தான்செய்யுஞ் சகல கிரியைகளையுந் தேவசிநேகத்தாலாவது தீமையை விளைவிக்கும் ஆசாபாசத்தாலாவது தூண்டப்பட்டே செய்யத் துணிகிறான் என்று சாதித்து, தேவசிநேகத்தால் ஏவப்படாத கிரியைகளெல்லாம் ஆசாபாசத்தால் ஏவப்படுகின்றனவென்றும், ஆதலால் அவைகளெல்லாம் பாவமான கிரியைகளே என்றுந் தீர்மானித்தார்கள். இந்த அபத்தங்களெல்லாம் பொதுவாகத் திருச்

சபையால் சபித்துத் தள்ளப்பட்டன. புரோட்டெஸ்தாந்தர்கள் சொல்லும் அபத்தங்கள் விசேஷமாய்த் திரேந்துநகரச் சங்கத்தாரால் சபித்துத் தள்ளப்பட்டன.

233. **சுபாவமுறையில் வரப்பிரசாதம் அவசியம்.** மனிதனுடைய புத்தியானது ஆதாமுடைய பாவத்தால் மிகவுந் தளர்ந்துபோனாலும், அது முற்றாய் அழிந்துபோகவில்லை. ஆதலால், பாவத்தின்பின்னும் தேவ வரப்பிரசாதத்தின் உதவி இன்றிச் சுபாவமுறையிற் சிலசில சத்தியங்களை அறிந்துகொள்ள மனிதனாற் கூடும். ஆயினும் பரிசுத்த அந்தஸ்திலேயிருந்தால் அறிந்துகொள்ளக்கூடிய அவ்வளவாக அறிந்துகொள்ள அவனாற் கூடாது என்பது நிச்சயம். பாவத்தின்பின்னும் விசுவாசமும் மெய்த்தேவ அறிவுமில்லாமல் சுபாவமுறையிற் சில சில நற்கிரியைகளைச்செய்ய மனிதனாற்கூடும். ஆதலால், அவிசுவாசிகளுடைய கிரியைகளெல்லாம் பாவமென்று சொல்வது அபத்தமாம். ஏனெனில், ஒரு கிரியையானது சுபாவமாக நற்கிரியையாயிருப்பதற்கு, அது தன்னிலே நல்லதாகவும் தன்னைச் செய்கிறவனுடைய துர்க்கருத்தாற் பழுதுபடாததாகவும் இருந்தால், அவ்வளவுமே போதும். இத்தன்மையான கிரியையை, அதாவது தான தருமத்தைப்போலத் தன்னிலே நல்லதான ஒரு கிரியையை, வறியவர்களுக்கு உதவிபுரிய வேண்டுமென்றே பிச்சைகொடுப்பவனிடத்திலுள்ள கருத்தைப்போலும் பழுதுபடாத கருத்தோடு ஒருவன் செய்துமுடிப்பதற்கு விசுவாசமும் மெய்த்தேவ அறிவும் அவசியமல்ல என்பது பிரத்தியக்ஷம். இவ்விதமாகச் செய்துமுடிக்கப்படுங் கிரியைகளெல்லாம் சருவ நன்மைக்கும் ஆதியும் அந்தமுமாகிய கடவுளைத் தாமாகவே போய்ச்சேருகின்றன.

பாவத்தின் பின்னும், மனிதனானவன் வழக்கவரப்பிரசாதமில்லாமலுந் தன் சொந்தப்பெலனாலும் சுபாவமுறையிலே யாதாவது நன்மையைச் செய்யக்கூடியவனே. ஆதலால், பாவியானவனுடைய கிரியைகளெல்லாம் பாவம் என்று சாதிப்பது கூடாது. கூடாதென்பதை, ஆதாமுடைய பாவத்தின் பின் மனிதனுடைய தன்னிஷ்டமானது அழிந்து நிர்மூலமாய்ப் போய்விட்டதென்று எவனாவது சாதிக்கத் துணிந்தால் அவனுக்குச் சாபமென்று திரேந்துசங்கம் 6-ம் கூட்டத்தில் 5-ம் விதியாகத் தீர்மானித்த வார்த்தைகளாற் திருஷ்டாந்தமாய்க் கண்டுகொள்க. ஆதாமுடைய பாவத்தால் மனிதனுடைய சுயாதீனம் நிர்மூலமாகவில்லையென்பது நிச்சயமாகையால், அவன் பரிசுத்தமான அந்தஸ்திலிருந்தபோது எவைகளைச் செய்யக்கூடியவனாய் இருந்தானோ, அவைகளிற் சிலவற்றையாயினும் தான் கெட்டுப்போனபின்னும் தன் சொந்தப்பெலனாற் செய்யக்கூடியவனாயிருக்கிறான். தன் பரிசுத்தமான அந்தஸ்திலே அவன் சுபாவமுறைக்கடுத்த சகலநன்மையையுந் தன் சுயாதீனத்தின் சுய பலத்தால் செய்யக்கூடியவனாக இருந்தபடியால், அவ்வந்தஸ்தை இழந்துபோனபின்னும் சுபாவமுறையான சில நன்மைகளைச் செய்யக்கூடியவனாகவே இருக்கிறான். உதாரணமாக: இயல்வேதத்துக்கடுத்த எல்லாப் பிரமாணங்களையும் அனுசரித்து நடக்க அவனாற் கூடாதாயினும் சிலவற்றையாவது அனுசரிக்க அவனாற் கூடும். எல்லாப் பிரமாணங்களையும் அனுசரிக்க அவனாற் கூடாதென்பது, சருவேசுரனுடைய அருளாலன்றி விரத்தத்துவத்தைக் காத்தல் கூடாதென்று ஞானியானவர் மொழிந்த வசனத்தாற் திருஷ்டாந்தமாகின்றது. வரப்பிரசாத உதவியின்றிச் சிருஷ்டிகர்த்தாவாகிய சருவேசுரனைத் தொகுப்பாயாவது சிநேகிக்க அவனாற் கூடும். சருவத்திற்கும் மேலாகவும் உற்ற முறையாகவும் அவரைச் சிநேகிக்க அவனாற் கூடாதோவெனிற் கூடாது. கூடுமெனிற் சுபாவப் பிரமாணங்கள் எல்லாவற்றையும் அனுசரிக்க அவனாற் கூடுமென்றும் முடியும். மீளவும், வரப்பிரசாதத்தின் உதவியின்றிச் சில தந்திர சோதனைகளை மேற்கொள்ள அவனாற் கூடும். எல்லாவற்றையும் மேற்கொள்ளவோ அவனாற் கூடாது. முழுதுஞ் சுபாவமான கிரியைகள் ஒழுக்கமுறைப்படி நல்லவைகளும் இம்மைப் பலனுக்குத் தக்கவைகளுமாயிருந்தாலும், ஆத்தும ஈடேற்றத்திற்கு எவ்வளவேனும் பேறில்லாதவைகளேயாம்.

234. III. **ஞானமுறையில் வரப்பிரசாதம் அவசியம்.** சுபாவத்திற்குமேலான அல்லது ஞான கிருத்தியங்கள் எவையெனில்: மனிதனை ஆத்தும ஈடேற்றத்துக்குப் பாத்திரவானாயிருக்கச் செய்கின்ற அல்லது தூரமான விதமாயேனும் அவனை அதற்கு ஆயத்தப்படுத்துகின்ற கிருத்தியங்களாம்.

1-வது, என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் (அதாவது: என்பிதாவால் ஒருவனுக்கு வரப்பிரசாதங் கொடுக்கப்படாவிட்டால்) அவன் என்னிடத்தில்வா (என்னை விசுவசிக்க) மாட்டானென்று யேசுநாதர் (அர்ச். அருள. 3-ம் அதி.) திருவுளம்பற்றியிருக்கிறதுபோல, மனிதனானவன் தேவ வரப்பிரசாதத்தின் உதவியின்றி விசுவாசத்தையாவது விசுவாசத்தின் ஆரம்பத்தையாவது கொண்டிருத்தல்கூடாது.

2-வது, என்னையில்லாமல் உங்களால் ஒன்றுஞ் செய்யக்கூடாதென்று யேசுநாதர் (அர்ச். அரு. 15-ம் அதி.) வசனித்திருக்கிறபடி, மனிதன் பாவியானாலுஞ்சரி நீதிமானானாலுஞ் சரி தேவ வரப்பிரசாதமின்றி ஈடேற்றத்திற்கு உபயோகமான எந்தக் கிரியையையாவது விரும்பவுஞ் செய்து முடிக்கவுங் கூடாதவன். இச்சத்தியத்தைத் திரேந்துநகர சங்கமானது விசுவாச சத்தியங்களுள் ஒன்றாகத் தீர்மானித்து, மனிதனானவன் இஸ்பிரீத்துசாந்துவுடைய முன்னேவுதல் இல்லாமலும், அவருடைய உதவியில்லாமற்றானும், விசுவசிக்கவும் நம்பவும் நீதிமானுக்கும் வரப்பிரசாதத்தை அடைந்துகொள்வதற்கு வேண்டியவிதமாய் மனஸ்தாபப்படவுங் கூடியவன் என்று சொல்லத் துணிகிறவன் சபிக்கப்பட்டவனாமென்று 6-ம், கூட்டத்து 3-ம் விதியிற் தீர்மானித்திருக்கின்றது. ஆதலால், வரப்பிரசாத உதவியின்றி ஈடேற்றத்துக்குப் பிரயோசனமானவிதமாக நினைக்கவாவது விரும்பவாவது செபிக்கவாவது நம்மாற் கூடாது. வரப்பிரசாத உதவியின்றி ஈடேறவாவது, அதற்கு நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ளவாவது, அதற்கு நம்மைப் பேறுள்ளவர்களாக்கிக்கொள்ளவாவது எந்தப்படியாலும் கூடாது. வரப்பிரசாதந்தானே முந்த நம்மைப் பற்றிக்கொள்ளவேண்டும். மேலும், வரப்பிரசாதமானது நம்மைப் பற்றிக்கொள்வதும் நம்மைத் தூண்டிவிடுவதும்மாத்திரம் போதாது. அது நற்கிரியையைச் செய்துமுடிப்பதற்கு நமக்கு உதவியாகவும் இருக்கவேண்டும். ஏனெனில், விருப்பத்தையுஞ் செய்கையையும் நம்மிடத்திலுண்டாக்குகிறவர் சருவேசுரனேயென்று அர்ச். சின்னப்பர். (பிலி. நிரு. 2-ம் அதி.) வசனித்திருக்கிறார்.

3-வது, நீதிமானானவன் வரப்பிரசாத உதவியைக்கொண்டு தனித்தனியே ஒவ்வொரு அற்பபாவத்தையும் விலகி நடக்கக்கூடியவனாயிருந்தாலும், சருவேசுரனுடைய விசேஷ அனுக்கிரகமில்லாமல் எல்லா அற்ப பாவங்களையும் விலகிநடக்க அவனாற் கூடாது. ஏனெனில், நமக்குப் பாவம் இல்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நம்மிடத்தில் இல்லையென்று அர்ச். அருளப்பர் தமது முதலாம் நிருபத்தில் எழுதியிருக்கிறார். மீளவும் திரேந்துநகர சங்கமானது ஒருமுறை நீதிமானாக்கப்பட்ட எவனும், அர்ச். தேவமாதாவுக்குக் கிடைத்ததாகத் திருச்சபை நமக்குத் தெரிவிக்கிற விசேஷ தேவ அருளைப் பெற்றுக்கொண்டாலன்றி, எல்லா அற்ப பாவங்களையும் விலக்கிநடக்கக்கூடியவனாயிருக்கிறானென்று சொல்லத் துணிகிறவனுக்குச் சாபமென்று 6-ம் கூட்டத்து 23-ம் விதியிற் கூறியிருக்கின்றது.



4-வது, நீதிமானானவன் அனுக்கிரகப் பிரசாத உதவியைக்கொண்டு மரணபரியந்தம் பரிசுத்தத்திற் சாக்கிரதையாய் நிலைகொள்ளுதல் கூடும். ஏனெனில், பரிசுத்தத்திற் சாக்கிரதையாய் நிலைகொள்ளுகிறதாவது: கடைசிமட்டுந் தேவகற்பனைகளை அனுசரித்து நடத்தலாம். தேவகற்பனைகளை அனுசரிப்பதற்கோ நாம் பின்னே காண்பிப்பதுபோல, எல்லா மனிதருக்கும் போதிய வரப்பிரசாதங்கள் கிடைக்கின்றன. எல்லா மனிதருக்கும் எல்லாக் காலத்திலும் கொடுக்கப்படும் வரப்பிரசாதங்களோ, சாதாரண வரப்பிரசாதங்களேயன்றி வேறல்ல. ஆதலால், நீதிமான் சாதாரண வரப்பிரசாதத்தைக்கொண்டு மரணமட்டும் நிலைகொள்ளலாம் என்பது சத்தியமாம். ஆயினும், இஷ்டப்பிரசாத அந்தஸ்தில் மரிப்பதாகிய கடைப்பிடி வரப்பிரசாதமானது சருவேசுரனாற் கொடுக்கப்படும் ஒருவிசேஷ வரமாம். அது எல்லா நீதிமான்களுக்கும் கிடைக்கிறதில்லை. நீதிமான்களாயிருந்தோரும் கடைசிமட்டும் நிலைமையுள்ளோராகாமற் போகக்கூடியவர்களேயாம்.

---

## 2-ம் பிரிவு

### பலவித வரப்பிரசாதங்களின்பேரில்

1. *தற்சமய வரப்பிரசாதம்.* 2. *வழக்கவரப்பிரசாதம்.*

### I. தற்சமயவரப்பிரசாதம்

235. தற்சமய வரப்பிரசாதத்திற்கு (Actual Grace) அனுக்கிரகப்பிரசாதம் என்றும்பெயர். தற்சமய வரப்பிரசாதமாவது என்னவெனில், ஒருவன் நித்திய சீவியத்திற்கு ஏற்றவிதமாய் நன்மையைச் செய்யவுந் தீமையை விலக்கவும் அவனுடைய புத்திக்குத் தெளிவையும் மனதுக்கு ஊக்கத்தையும் உண்டாக்கும்படியாகச் சருவேசுரன் நிகழ்காலத்திலே அவனுக்கருளும் சுபாவத்திற்கு மேலான வரமாம். அது போதுமான வரப்பிரசாதமென்றும் சித்திகர வரப்பிரசாதமென்றும் இருவகைப்படும். அவற்றுள் போதுமான வரப்பிரசாதமாவது: நன்மையைச் செய்வதற்கு வேண்டிய மெய்யான பெலனை அவனவனுக்கு அந்தந்தச் சமயங்களிற் கொடுக்கும் வரப்பிரசாதமாம். அதைப் பெற்றுக்கொண்ட எவனும் தான் செய்யவேண்டிய நன்மையை எப்போதுஞ் செய்கிறானோவெனில், இல்லை. ஏனெனில், அவன் தனக்குக் கிடைத்த வரப்பிரசாதத்தை உபயோகப்படுத்தாமற் பலமுறையும் தள்ளிப் போடுகிறான். சித்திகர வரப்பிரசாதமோவெனில், ஒரு

நன்மையைச் செய்யாமல்விட ஒருவனுக்குப் பூரண தன்னிஷ்டமிருந்தாலும் அவனைக்கொண்டு அந்த நன்மையைத் தவறுதவிதமாய்ச் செய்விக்கும் வரப்பிரசாதமாம்.

236. (I) போதுமான வரப்பிரசாதம். (Sufficient Grace) 1-வது, பாவத்தின் பின்னும் இரட்சணியத்தின்பின்னும் உள்ள அந்தஸ்திலே, நன்மையைச் செய்யப் போதுமான வரப்பிரசாதங்கள் கிடைக்கிறதென்பதும் அநேகர் அதை உபயோகப்படுத்தாமல் விரோதித்துத் தள்ளிப்போடுகிறார்களென்பதும் விசுவாச சத்தியமாம். சருவேசுரன் எல்லாமனிதரும் ஈடேறவேண்டுமென்று விரும்புகிறாரென்றும், ஆதலால் ஈடேற்றத்துக்கு வேண்டிய போதுமான வரப்பிரசாதத்தை எல்லாருக்குந் தந்தருளுகிறாரென்றும் திருச்சபையும் வேதபாரகர்களும் வேதவாக்கியத்தோடு ஒத்துக் கூறியிருக்கிறார்கள். விரகறிவுபெற்ற எவனும் தன்குற்றத்தாலன்றி, அதாவது: ஆத்தும ஈடேற்றத்துக்குக் கொடுக்கப்பட்ட போதுமான வரப்பிரசாதத்தை உபயோகப்படுத்தாமல் விடுவதினாலன்றி நரகத்திலே விழுகிறதில்லையென்பதும் நிச்சயமாம். அப்படியிருக்க, மனிதருக்குள் எத்தனையோபேர் நித்திய நரகத்திலே விழுகிறதைக் காண்கின்றோமே. ஆதலால், ஈடேற்றத்திற்கு அவசியமான கிரியைகளைச் செய்து முடிப்பதற்குப் போதிய வரப்பிரசாதங்கள் ஒருவனுக்குக் கிடைத்தாலும் அவன் ஈடேற்றத்தை அடைந்துகொள்ளாதிருக்கக்கூடுமென்றும், வேறுவிதமாய்ச் சொல்லவேண்டுமாகில், ஒருவன் உபயோகப்படுத்தாமல் எதிர்த்துத் தள்ளிப்போடுகிற வரப்பிரசாதங்கள் உண்டென்றும் நாம் தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

2-வது, மனிதர் எல்லாரும் தங்கள் இரக்ஷணிய அலுவலைச் செய்து முடிக்கும் பொருட்டு சருவேசுரன் அவர்களுக்குப் போதுமான வரப்பிரசாதங்களைத் தந்தருளுகிறார். வேதவாக்கியமும் வேதபாரகர்களும் நிச்சயிக்கிறபடி சருவேசுரன் சகல மனிதரும் ஈடேறவேண்டுமென்று திருவுளமாயிருக்கிறாரென்பது நிச்சயமாதலால், இரக்ஷணியத்தை அடைந்துகொள்ளாமல் விடுகிற எவனும் அவருடைய திருச்சித்தத்தோடும் வரப்பிரசாதத்தோடும் எதிர்த்து நிற்கிறவனும் என்பதற்குச் சந்தேகமேயில்லை. சருவேசுரன் மோக்ஷத்திற்கு நியமிக்கப்பட்டவர்களுடைய ஈடேற்றத்தைமாத்திரமன்றி மற்றவர்களுடைய ஈடேற்றத்தையுமே விரும்புகிறாரென்பதும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்காக மாத்திரம் யேசுநாதர் மரணமடையவில்லை என்பதும் விசுவாச சத்தியங்களாம். இவைகள், எல்லா மனிதருக்காகவும் யேசுநாதர் மரித்தாரென்பது



அரைப் பெலேஜியர்களுடைய தவறான போதகமாமென்று சாதித்த ஜான்சேனியுஸ் என்பவனைத் திருச்சபை கண்டித்துச்செய்த தீர்மானத்திலிருந்து குறிப்பாய்ப் பெறப்படுகின்றன.

3-வது, சருவேசுரன் நமது ஆத்தும ஈடேற்றத்தை மெய்யாகவே விரும்புகிறாராயினும் அதைச் சங்கேதமுறையாகவே விரும்புகிறார். எவ்வாறெனில், நமது இரக்ஷணியத்தை நாமே விரும்பினால் அவர் தாமும் விரும்புகிறார். அவர் நம்மை இரக்ஷிக்க விருப்பமுள்ளவராயிருக்கிறார். அந்த விருப்பத்தினிமித்தமே தமது வரப்பிரசாதத்தை முந்திக்கொடுத்து நம்மைத்தூண்டுகிறார். தமது ஏவுதலுக்கு இணங்கிநடக்கிறவனுக்குச் சம்பாவனை அளிப்போமென்று வாக்குப்பண்ணுகிறார். இணங்காமல் நடக்கிறவனுக்கோ, ஆக்கினையிடுவோமென்று மிரட்டுகிறார். நாம் எப்படி நடந்தாலும் தேவ திருவுளம் நிறைவேறியே தீரும். ஏனெனில், அது சங்கேதமற்றதல்ல. அதின் நிறைவேற்றமானது மனிதனுடைய தன்னிஷ்டமான தீர்மானத்துக்குக் கீழ்ப்பட்டதாகவே இருக்கின்றது.

போதுமான அல்லது சாதாரணமான வரப்பிரசாதங்களேயன்றி விசேஷமும் அருமையுமான வேறு வரப்பிரசாதங்களுமுண்டு. இவைகளைச் சருவேசுரன் சிலசில தருணத்திற் தமக்கு இஷ்டமானவர்களுக்கே அருளுகிறார். எவருக்காவது இவைகளைக் கொடுக்க அவர் கடமைபூண்டவரல்ல. இவைகள் மனித இரட்சணியத்தோடு அகத்தியமாய்ச் சேர்ந்துள்ள பயன்களுமல்ல. இவைகளை விசேஷமாய் இன்னாரின்னாருக்குக் கொடுப்போமென்று சருவேசுரன் வாக்குப்பண்ணியிருக்கிறதுமில்லை.

237. 4-வது, இனி ஆத்தும ஈடேற்றத்திற்குப் போதுமான வரப்பிரசாதங்களைச் சருவேசுரன் 1-வது, நீதிமான்களுக்கும், 2-வது, பாவிகளுக்கும் பாவத்திலே மூர்க்கமாய் நிலைத்திருக்கிறவர்களுக்கும் 3-வது, அவிசுவாசிகளுக்கும், 4-வது, ஞானஸ்நானமில்லாமற் சாகிற குழந்தைகளுக்கும் கொடுத்தருளுகிறாரென்று காண்பிப்போம்.

1-வது, நீதிமான்களுக்குப் போதுமான வரப்பிரசாதங்கள் கிடைக்கின்றன. இதற்கு அத்தாட்சி என்னவெனில்: உங்கள் திராணிக்குமேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்குச் சருவேசுரன் இடங்கொடார். சோதனையைத் தாங்கத்தக்கதாகச் சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் அவர் உண்டாக்குவார் என்று அர்ச். சின்னப்பர் 1-ம் கொரிந்தியர் 10-ம் அதிகாரத்தில் எழுதின வாக்கியமாம். ஆதலால், எல்லா

மனிதரும், விசேஷமாய் நீதிமான்களும், சோதனையைச் செயிக்கவும் தேவகற்பனைகளை அநுசரிக்கவும் போதுமான வரங்களைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். அன்றியும், திருச்சபையானது ஜான் சேனியுஸ் என்பவனுடைய முதலாம்வாக்கியத்தைச் சபித்துத்தள்ளினவிடத்து, நீதிமானால் அனுசரிக்கக்கூடாத கற்பனையொன்றும் இல்லையென்று தீர்மானித்ததினாற் சருவேசுரன் நீதிமானுக்குப் போதுமான வரப்பிரசாதத்தைக் கொடுத்தருளுகிறார் என்பதைக் குறிப்பாய்க் காண்பித்திருக்கின்றது. 2-வது, **எல்லாப்பாவிகளுக்கும்** அன்றி, **மூர்க்கமான** பாவிகளுக்குமே போதுமான வரப்பிரசாதங் கிடைக்கின்றது. இதற்கு அத்தாட்சியாகச் சருவேசுரன் எசேக்கியேல் தீர்க்கதரிசனத்து 33-ம் அதிகாரத்திற் பாவியுடைய மரணத்தை நாம் விரும்பாமல் அவன் மனந்திரும்பவேண்டுமென்றே விரும்புகின்றோம் என்று திருவுளம்பற்றியிருக்கிறார். இங்கே சருவேசுரன் வித்தியாசமின்றி எல்லாப்பாவிகளையும் மனந்திரும்பவும் தம்முடைய கற்பனைகளை அனுசரிக்கவும் வேண்டுமென்று ஏவுகிறார்; ஆதலால் பாவிகளெல்லாரும் மனந்திரும்பித் தமது கற்பனையை அனுசரிக்கிறதற்கு அவசியமான வரப்பிரசாதங்களை அவர்களுக்குக் கொடுத்தருளுகிறாரென்பது தானாய் விளங்குகின்றது. சடுதியாய் மனந்திரும்புகிறதற்கும் சடுதியாய் நன்மைசெய்கிறதற்கும் வேண்டிய பெலனாகிய கிட்டின வரப்பிரசாதத்தை அவர் எப்போதும் எல்லாருக்கும் கொடுக்கிறதில்லை. ஆயினும், தூலத்த வரப்பிரசாதமென்னப்படும் செபமாகிய வரப்பிரசாதத்தையாவது கொடுத்தருளுகிறார். இந்த வரப்பிரசாதத்தைக் கொண்டு பாவிகள் எல்லாரும்; கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படுமென்று யேசுநாதர் சுவிசேஷத்திலே திருவுளம்பற்றியிருக்கிறபடி, தங்கள் கடமைகளை நிறைவேற்றக்கூடியவர்களாவார்கள். இந்த வரப்பிரசாதத்தை உடனே அவர்களுக்குக் கொடாவிட்டாலும் அவர்கள் மனந்திரும்புவதற்கான வேறு உபாயங்களை, உதாரணமாக: அவர்களைத் தீமையினின்று விலக்கக்கூடிய மனச்சாட்சிக் கண்டனம், துக்கம், வெறுப்பு வியாதி முதலியவைகளைக் கொடுத்தருளுவார். 3-வது, **அவிசுவாசிகளுக்குச்** சருவேசுரன் தமது வரப்பிரசாதத்தைக் கொடுத்தருளுகிறார். அவர் எல்லா அவிசுவாசிகளுக்குமேயன்றி மீட்பரைப்பற்றி இன்னுந் தெரிவிக்கப்பெறாத அவிசுவாசிகளுக்கும் போதுமான வரப்பிரசாதங்களைக் கொடுத்து அவர்களை சத்தியவேதத்திற்கு அழைக்கிறார். இதற்குத் திருஷ்டாந்தங்கள் எவையெனில்: 1-வது, எல்லா மனிதரும் ஈடேறவேண்டுமென்று சருவேசுரன் திருவுளமாய் இருக்கிறார் என்று அர்ச். சின்னப்பர் எழுதிய வேதவாக்கியமும்,



2-வது யேசுநாதர் சகல மனிதருக்காகவும் மரணம் அடைந்தாரென்று திருச்சபை போதிக்கும் தவறாத போதகமும், 3-வது தன்னிஷ்டமாய் விரும்பிக் கெட்டவனேயன்றி வேறெவனாவது நித்தியமாய்க் கெட்டுப்போகிறதில்லை என்னுஞ் சத்தியமுமாகிய இவைகளாம். ஆதலால், சத்தியவேதம் போதிக்கப்பெறாதவர்கள் முதல் மற்றெல்லாருக்கும் ஆத்தும ஈடேற்றத்தை அடைந்துகொள்ளுவதற்கு வேண்டிய போதுமான உபாயங்களுண்டென்பது நிச்சயம். இந்த உபாயங்கள் எவையென்பதையோ நாம் அறியோம். சருவேசுரனுக்கு மாத்திரந் தெரியும். அவர் எல்லா மனிதருடைய இருதயங்களிலும் தாம் பதித்தருளிய இயல்வேதப் பிரமாணத்தைச் செவ்வே யனுசரிக்கும்படி அவர்களிடத்தில் முன்பு கருத்தையும் ஆசையையும் எழுப்புகிறாரென்றும், இவர்கள் அந்தந்தத் தேவ ஏவுதலுக்கேற்க நடந்தாற் பின்பு வேறோர் புதிதான வரப்பிரசாதத்தால் இவர்களுக்குச் சத்திய வேதத்தைத் தெரிவிப்பாரென்றும் நாம் உத்தேசித்துக்கொள்ளக்கூடும். இதைக் குறித்து அர்ச். தோமாஸ் என்னும் வேதபண்டிதர்: ஒருவன் காட்டுமிருகங்களுக்குள்ளே வளர்க்கப்பட்டவனாயிருந்தாலும் அவன் தனக்குத் தெரிந்த சுபாவப்பிரமாணத்தை அனுசரித்துக்கொண்டுவந்தால், விசுவசிக்கவேண்டியவைகளைச் சருவேசுரன் தமது அந்தரங்க ஏவுதலாலாவது, தாம் கொர்நேலியென்பவனுக்கு இராயப்பரை அனுப்பினதுபோல ஒரு வேதபோதகனை அனுப்பியாவது, வேண்டுமாகில் ஒரு தேவதூதன்மூலமாய் ஆவது அவனுக்குத் தெரிவித்தருளுவாரென்பது நிச்சயமாம் என்று எழுதிவைத்தார். 4-வது, **ஞானஸ்நானமில்லாமல் இறக்கிற குழந்தைகளுக்கும்** சருவேசுரனாற் போதுமான வரப்பிரசாதத்துக்கு வழி திறக்கப்படாமலில்லை. அவர் சென்மபாவத்திற்கு ஓர் மருந்தாக ஞானஸ்நானத்தை ஏற்படுத்தினபோதே எல்லாக் குழந்தைகளும் இரட்சிக்கப்படவேண்டுமென்று திருவுளங்கொண்டார் என்றது வெளிப்படை. ஆயினும், அநேக குழந்தைகள் ஞானஸ்நானமில்லாமற் செத்துப்போகிறது மெய்தான். இது எல்லாக் குழந்தைகளும் ஈடேறவேண்டுமென்று சருவேசுரன் கொண்டிருக்கும் ஆசைக்கு யாதோர் பழுதும் ஆகாமல், சில சில சம்பவங்களின் சேர்க்கையால் மாத்திரம் நேரிடுகின்றது. அவர் தற்செயலாயாவது மனிதருடைய அசட்டைத்தனத்தாலாவது துஷ்டத்தனத்தாலாவது விளையுங் கேடுகளைத் தடுக்கும்பொருட்டு இடைவிடாமல் அற்புதங்களைச்செய்து உலக இயற்கைப் பிரமாணத்தை மாற்றக் கடமை பூண்டவரல்லவென்பது பிரத்தியக்ஷமாம்.

238. II. சித்திகரவரப்பிரசாதம் (Efficient Grace)
1-வது, மனிதனுடைய தற்கால அந்தஸ்திலே சித்திகரவரப்பிரசாதங்கள், அதாவது: நன்மையைச் செய்யாமல்விட ஒருவனுக்குள்ள தன்னிஷ்டத்திற்கு யாதோர் குறைவும் வருவியாமல் அவனைக் கொண்டு தவறாமல் அதைச் செய்விக்கும் வரப்பிரசாதங்கள் உண்டென்பது சத்தியம். இதனிமித்தமே அர்ச். சின்னப்பர் பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தில்: விருப்பத்தையுஞ் செய்கையையும் உண்டாக்குகிறவர் தேவனேயென்று வசனித்தார். சருவேசுரனே தாம் ஒருவனுக்குச் சித்திகரவரப்பிரசாதத்தை, அதாவது, நன்மையைச்செய்வதற்கு அவனுடைய சித்தத்தைத் தவறாமற் துணியப்பண்ணும் வரப்பிரசாதத்தைக் கொடுத்தல்லாமல் அவனிடத்தில் விருப்பத்தையும் செய்கையையும் உண்டாக்குகிறதில்லை.

2-வது, சித்திகரவரப்பிரசாதமானது நாம் அதை விரும்பவுந் தேடவும் முன்னமே நம்மைப் பற்றிக்கொள்ளுகின்றது. நம்மிடத்திலிருந்து ஒரு நற்கிரியையைச் செய்கிறது அதேயானாலும் நாம் இல்லாமல் அது அந்த நற்கிரியையைச் செய்கிறதில்லை. அது நம்மோடும், தன்னாற் தூண்டவும் பற்றிக்கொள்ளவுந் துணைச் செய்யவும்பட்டதாகிய நமது சுயாதீன சித்தத்தின் சேர்க்கையோடுமே நின்று நற்கிரியையை நடத்தும். இந்தச் சத்தியமானது அர்ச். சின்னப்பர் 1-ம் கொரிந்தியர் 15-ம் அதிகாரத்திலே: அவர் எனக்கருளிய வரப்பிரசாதம் விருதாவாயிருக்கவில்லை. அவர்கள் எல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன். ஆகிலும் நானல்ல என்னோடிருந்த தேவவரப்பிரசாதமே அப்படிச்செய்ததென்று எழுதிய வசனத்தால் மிகத்தெளிவாகின்றது. இந்த வசனத்திற்கு அர்ச். அகுஸ்தீனார் வியாக்கியானம்பண்ணி: நான் மாத்திரம் பிரயாசப்படவில்லை, சருவேசுரனுடைய கிருபையும் என்னோடுகூடப் பிரயாசப்பட்டதென்பதினால் சின்னப்பருடைய பிரயாசமானது தேவகிருபையின் பிரயாசமாய்மாத்திரம் இருந்ததுமல்ல. அவருடைய பிரயாசமாய் மாத்திரம் இருந்ததுமல்ல. தேவகிருபையும் அவருங் கூடிச் செய்த பிரயாசமாகவேயிருந்ததென்றார். நாம் வரப்பிரசாதத்தோடு உடன் முயற்சி செய்தாலும் அது வரப்பிரசாதத்தால் விளையும் பயனேயாம். ஏனெனில்: நாம் வரப்பிரசாதத்தின் ஏவுதல்களைக் கைக்கொள்வதினாலும், விரும்பவும் செய்யவும் வேண்டுமென்று வரப்பிரசாதம் நம்மைத் தூண்டுகிற ஒரு நற்கிருத்தியத்தில் நாம் இஷ்டமாய்ப் பிரியங்கொள்வதினாலும் மாத்திரமே அதனோடு உடன்முயற்சிசெய்கிறவர்களாகிறோம்.



3-வது, ஒருவன் சித்திகரவரப்பிரசாதத்தின் ஏவுதலுக்கு இணங்கி ஒருகாரியத்தைச் செய்தாலும் அவன் அந்த ஏவுதலை மறுத்துத் தள்ளிப்போடக்கூடிய தன்னிஷ்டமுள்ளவனாகவே இருக்கிறானென்பது விசுவாசசத்தியமாம். இதைக் குறித்துத் திரேந்து சங்கம்: சருவேசுரனுடைய வரப்பிரசாதத்தால் ஏவவுந் தூண்டவும்பட்ட மனிதனுடைய தன்னிஷ்டமானது தேவ ஏவுதலோடு எவ்வளவேனும் உடன்முயற்சி செய்கிறதில்லை என்றும், அது எவ்வளவு விரும்பினாலும் தேவ ஏவுதலை மறுத்துத் தள்ள அதாற் கூடாதென்றும் எவனாவது சாதித்தால் அவனுக்குச் சாபமென்று 6-ம் கூட்டத்து 4-ம் விதியிற் கூறியிருக்கின்றது. ஆதலால் மானிடசுயாதீனமானது வரப்பிரசாதத்தின் வசப்பட்டு யாதொன்றைச் செய்தாலும், அது அவ்வரப்பிரசாதத்தின் ஏவுதலை மறுத்துத் தள்ளிப்போடவும் கூடியதாய் இருக்கின்றதென்று அறிந்துகொள்ளக் கடவோம்.

## II. வழக்கவரப்பிரசாதம்

239. வழக்கவரப்பிரசாதத்திற்கு (Habitual Grace) இஷ்டப்பிரசாதம் என்றும் பெயர். வழக்கவரப்பிரசாதமாவது: சருவேசுரன் ஒருவனைப் பரிசுத்தப்படுத்தி அவனைத் தமக்கு உகந்தவனாக்கிக் கொள்ளும்படியாவது அவனிடத்திலுள்ள பரிசுத்தத்தை அதிகரிக்கச் செய்யும்படியாவது அவனுக்குக் கொடுத்துக் காப்பாற்றும் ஞானவரமாம். இது அனுக்கிரகப் பிரசாதத்தைப்போல அந்தந்தச் சமயத்தில் மாத்திரங் கிடைப்பதாயிராமல் ஆத்துமத்திலே நீடித்திருக்கும் வரப்பிரசாதமாகையால், வழக்கவரப்பிரசாதமென்று அழைக்கப்படுகின்றது. வழக்கவரப்பிரசாதம் ஆத்துமத்தின் ஒரு மெய்யான குணமாகும். எவ்வாறெனில், அது ஆத்துமத்தை அலங்கரித்து பரிசுத்தப்படுத்தி, அதைக்கொண்டிருக்கிறவனை சருவேசுரனுடைய சுவீகாரப்பிள்ளையும் சுதந்தரவாளியும் யேசுநாதருடைய உடன்சுதந்தரவாளியுஞ் சருவேசுரனுடைய ஆலயமும் ஒருவாறு தேவசுபாவத்திற்குப் பங்காளியும் ஆக்குகின்றது. ஆதலால், அதைப் பாவமன்னிப்பாகிய ஒரு எதிர்மறைத்தன்மை என்றுமாத்திரஞ் சொல்லுதல் கூடாது. மேலும், அது யேசுநாதருடைய நீதியை ஆத்துமத்திற்குச் சாட்டுவதாக மாத்திரம் இருக்கின்றதென்று சொன்னாலும் பொருந்தாது. ஏனெனில்: வேத நூலும் பரம்பரையும் ஒத்துக் கூறுகிறபடி, வழக்க வரப்பிரசாதமானது ஆத்துமத்தைப் பற்றிக்கொள்ளுகிற ஒரு உண்மையான குணமாம். இதைக் குறித்துத் திரேந்துநகர சங்கமானது: மனிதர் இஸ்பிரீத்துசாந்துவினால் தங்கள் இருதயங்களிலே பொழியப்பட்டு

அவ்விருதயங்களோடு சேர்ந்திருக்கிற இஷ்டப்பிரசாதமுந் தேவசிநேகமும் இல்லாமல் யேசுநாதருடைய பரிசுத்தத்தின் சாட்டுதலால்மாத்திரம் அல்லது பாவ நிவாரணத்தால்மாத்திரம் நீதிமான்களாகிறார்கள் என்று எவனாவது சாதித்தால் அவனுக்குச் சாபமென்று 6-ம் கூட்டத்து 11-ம் விதியிற் தீர்மானித்திருக்கின்றது.

---

# 3-ம் பிரிவு

## வரப்பிரசாதத்தால் விளையும் பயன்கள்

*1. நீதிமானாக்கப்படுதல். 2. புண்ணியபேறு.*

### I. நீதிமானாக்கப்படுதலின்பேரில்

**240. (I) நீதிமானாக்கப்படுதலாவது (Justification)** என்னவெனில்: ஒருவனைப் பாவ அந்தஸ்திலிருந்து இஷ்டப்பிரசாத அந்தஸ்துக்குச் செலுத்தி அவன் பரிசுத்தனும் சருவேசுரனுக்குப் பிரியமுள்ளவனுமாயிருக்கச் செய்யும் ஞானவரமாம். ஆதலால் நீதிமானாக்கப்படுதலாவது: யேசுநாதருடைய நீதியாகிய போர்வையாற் பாவங்கள் மறைக்கப்படுவதாம் என்று புரோட்டெஸ்தாந்தர்கள் சொல்லுவது பொருந்தாது. ஏனெனில், ஒருவனை நீதிமானாக்கும் வரப்பிரசாதத்தால் பாவங்கள் உள்ளபடியே மன்னிக்கப்படுகின்றன. மன்னிக்கப்படவே ஆத்துமமானது முழுதும் புதிதாய்ப்போகின்றது. இவ்வாறே திரேந்துநகரச்சங்கம் 6-ம் கூட்டத்து 7-ம் அதிகாரத்திற் திட்டமாய்ப் படிப்பிக்கின்றது.

**241. (II) நீதிமானாக்கப்படுதலுக்கு ஆயத்தங்கள்.** இன்னும் விரகறிவுபெறாத சிறுவரெல்லாம் ஞானஸ்நானத்தின் மூலமாகவே பரிசுத்தத்தை அடைந்துகொள்ளுகிறார்கள். அவர்களுக்கு யாதொரு முயற்சியாவது ஆயத்தமாவது அவசியமில்லை. ஏனெனில், இவைகளைச்செய்ய அவர்களாற் கூடாது. வளர்ந்தவர்களோ சில முயற்சிகளையும் ஆயத்தங்களையுஞ்செய்தே நீதிமான்களாக வேண்டியவர்கள். வளர்ந்தவர்களாற் செய்யப்படவேண்டிய ஆயத்தங்களுக்குள் முதலாவதாய் உள்ளது விசுவாசமாம். ஏனெனில், விசுவாசமின்றிச் சருவேசுரனுக்கு உவப்பாயிருத்தல் கூடாது. ஆயினும், விசுவாசம்மாத்திரம்போதாது. தேவவெளிப்படுத்தலாயுள்ள சகலத்தையும் விசுவசித்து மெய்யென்று அங்கீகரித்துக் கொள்ளப்பண்ணுவதாகிய விசுவாசமேயன்றி, தேவ இரக்கத்திலே நம்பிக்கையும் எல்லாப் பரிசுத்தத்திற்கும் ஊற்றாகிய சருவேசுரனிலே சற்றாவது நேசமும், பாவத்தின்மேலே வெறுப்பும்



பகையும், தாங்கள் பெற்றுக்கொள்ளவேண்டிய ஞானஸ்நானத்திலாவது பச்சாத்தாபத்திலாவது மெய்யான ஆசையும், இனிமேல் புண்ணியவழியிலே நடந்து தேவகற்பனைகளையெல்லாம் சுமுத்திரையாய் அனுசரித்துக்கொண்டுவரக் கெட்டியான பிரதிக்கினையும் அவர்களிடத்தில் இருக்கவேண்டுமென்று திரேந்துநகரச் சங்கந்தானே தீர்மானம்பண்ணியிருக்கின்றது. ஆதலால், நீதிமானாக்கப்படுவதற்கு அவசியமான விசுவாசமானது புரோட்டெஸ்தாந்தர் சொல்லுவதுபோல, பாவியானவன் தன் பாவமெல்லாம் மன்னிக்கப்பட்டுவிட்டனவென்று உறுதியாக நம்பிக்கொள்ளும் விசுவாசமாயிராமற் சருவேசுரனால் வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களையெல்லாம் அவருடைய திருவாக்கினிமித்தமாக நாம் உறுதியாய் விசுவசித்துக்கொள்ளும்படி செய்யுங் கத்தோலிக்கு விசுவாசமாக வேண்டியது. அப்படியல்லவென்று சாதிப்பது, திரேந்துநகரச் சங்கத்தின் தீர்மானத்தின்படி, மெய்யான பதிதமேயாம்.

**242. (III) நீதிமானாக்கப்படுதலின் குணங்கள்.** சருவேசுரனுடைய விசேஷ வெளிப்படுத்தலாலன்றி, எவனாயினும் தான் நீதிமானாக்கப்பட்டிருக்கிறான் என்றாவது மோக்ஷத்திற்கு நியமிக்கப்பட்டவர்களுள்ளே தானும் ஒருவனாயிருக்கிறானென்றாவது தவறாத நிச்சயத்தோடு நம்பியிருத்தல் கூடாது. இந்த உண்மையைத் திருச்சபையானது வேதாகமத்தையும் பாரம்பரையையும் ஆதாரமாய்க்கொண்டு போதிக்கின்றது. ஆதலால், ஒவ்வொருவனும் சருவேசுரனுடைய அளவில்லாத இரக்கத்திலே சற்றேனும் அவநம்பிக்கைகொள்ளாமல், அர்ச். சின்னப்பர் சொல்லுவதுபோல, பயத்தோடும் நடுக்கத்தோடும் இரக்ஷணிய அலுவலைச் செய்துகொண்டுவரக்கடவான். ஏனெனில், மனிதன் தான் சிநேகத்துக்குப் பாத்திரவானோ பகைக்குப் பாத்திரவானோ என்பதை அறியானென்று எக்கிளேசியாஸ்து ஆகமத்து 9-ம் அதிகாரத்திலும், என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையுங் காணேன், ஆயினும், இதினாலே நான் நீதிமானாயிருக்கிறதில்லையென்று கொரிந்தியர் 1-ம் நிருபத்து 4-ம் அதிகாரத்திலும் எழுதப்பட்டபடி, தான் இஷ்டப்பிரசாத அந்தஸ்திலிருக்கிறானோ இல்லையோவென்று நிச்சயமாய் அறிந்துகொள்ள எவனாலும் கூடாது. நீதிமானாக்கப்படுதல் இழந்துபோகக்கூடாத ஒரு காரியமும் அல்ல. ஏனெனில், நீதிமானாக்கப்பட்ட எவனும் சாவான பாவத்தைக் கட்டிக்கொண்டவுடனே தன் நீதியை இழந்துபோகிறானென்பது விசுவாச சத்தியமாம். மேலும், பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும் என்னும் வேதவாக்கியத்தின்படி நீதியானது வரவர அதிகரிக்கக்

கூடியதென்பதும், அது சகல நீதிமான்களிடத்திலும் ஒரேயளவாயிராமல் சிலரிடத்தில் மிகுதியாகவும் சிலரிடத்திற் குறைவாகவுமிருக்கின்றதென்பதும் விசுவாச சத்தியங்களாமென்று அறிந்துகொள்ளக்கடவோம்.

## II. புண்ணியபேறு

**243. புண்ணிய பேறு (Merit) உண்டு** என்பது நிச்சயம். யாதொரு சம்பாவனைக்குரிய கிருத்தியமெல்லாம் பேறுள்ள கிருத்தியமேயாம். நீதிமானாயுள்ள எவனும் புண்ணியபேறுகளைச் சம்பாதித்துக் கொள்ளுதல் கூடுமென்பதற்கு வேதவாக்கியமே திருஷ்டாந்தம். எவ்வாறெனில், யேசுநாதர் தம்முடைய சீஷர்களைப் பார்த்து: சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள், பரலோகத்திலே உங்கள் பேறு மிகுதியாயிருக்கின்றதென்று மத்தேயு சுவிசேஷம் 5-ம் அதிகாரத்திலே திருவுளம்பற்றியருளினார். அர்ச். சின்னப்பரும், தாம் தீமோத்தேயுவுக்கெழுதின 2-ம் நிருபத்து 4-ம் அதிகாரத்திலே: நான் நல்ல போராட்டத்தை ஆடினேன், இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கின்றது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளில் அதை எனக்குத் தந்தருளுவாரென்று எழுதிவைத்தார். இந்தத் தேவ வாக்கியங்களில் நீதிபரனாகிய கர்த்தரால் கொடுக்கப்படுமென்று சொல்லப்பட்ட சம்பாவனையானதும் நீதியின் கிரீடமானதும் அவைகளைப் பெற்றுக்கொள்ளுகிறவர்களிடத்திலே புண்ணிய பேறு உண்டென்பதைத் திருஷ்டாந்தமாய்க் காண்பிக்கின்றன. ஆதலால், நீதிமானானவன் நித்திய சீவியத்துக்குரிய புண்ணிய பேறுகளைச் சம்பாதித்துக் கொள்ளுகிறானென்பதற்குச் சந்தேகமில்லை. இதனாற் தான் திரேந்துநகரச் சங்கமானது: நீதிமானுடைய புண்ணிய கிரியைகள் சருவேசுரனுடைய கொடைகளாய்மாத்திரம் இருக்கின்றனவன்றி அவைகள் அவனுக்குப் பெறுபேறுகளாய் வைக்கப்படுவதில்லையென்று சாதிக்கிறவனுக்குச் சாபமென்று 6-ம் கூட்டத்து 32-ம் விதியில் தீர்மானித்திருக்கின்றது. இந்தத் தீர்மானத்தின்படி நித்திய சீவியமானது ஒரு தேவ வரமும் ஒரு சம்பாவனையுமாம் என்பது தெளிவாகின்றது. நித்திய சீவியமானது ஒரு தேவ வரம். ஏனெனில், சருவேசுரன் இலவசமாகவே நம்மை அதற்கு நியமித்து அதை அடைந்துகொள்ளுவதற்கு வேண்டிய வழிவகைகளையும் தந்தருளுகிறார். நித்திய சீவியமானது ஓர் சம்பாவனையுமாம். ஏனெனில், சருவேசுரன் தமது பிரமாணங்களைச் சுமுத்திரையாக அனுசரிப்பவர்களுக்கு அதைக் கொடுப்போம் என்று வாக்குப்பண்ணியிருக்கிறார்.



**244. (II) புண்ணியபேறுகளை அடைந்துகொள்ளுவதற்கு அனுசரிக்கவேண்டியவைகளாவன.** புண்ணியபேறுகள் இருவகையாகும். அவற்றுள் ஒன்று நீதிமுறையான பேறு என்றும், மற்றது தகுதிமுறையான பேறு என்றுஞ் சொல்லப்படும். யாதொரு சம்பாவனையைப் பெற்றுக்கொள்ளுதற்குக் கண்டிப்பான உரிமையை நமக்குத்தரும் பெறுபேறு நீதிமுறையானதாம். யாதொரு அகத்தியமான உரிமையையும் நமக்குத் தாராமல் சருவேசுரனை நம்மேல் இரங்கும்படி மாத்திரஞ் செய்வது தகுதி முறையான பெறுபேறாம். இது முழுதும் இலவசமான பேறேயன்றி வேறல்ல. இங்கேசொன்ன இருவகையான பேறுகளையும் அடைந்துகொள்வதற்கு ஒருவன் கைக்கொள்ளவேண்டிய அனேகம் பொதுவான சங்கேதங்களுமுண்டு; நீதிமுறையான பலனை அடைந்துகொள்வதற்கு அனுசரிக்கவேண்டிய சில விசேஷ சங்கேதங்களுமுண்டு. நீதிமுறையான பேற்றையாவது தகுதிமுறையான பேற்றையாவது அடைந்துகொள்ளுவதற்கு 1-வது சீவனோடு இருக்கவேண்டும். ஏனெனில், ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகின்றதென்று அருளப்பர் சுவிசேஷத்து 9-ம் அதிகாரத்தில் யேசுநாதர் திருவுளம்பற்றியிருக்கிறபடி, மரித்தபின் புண்ணிய பேறுகளைச் சம்பாதித்துக்கொள்ள எவனாலுங் கூடாது. 2-வது, பேறுள்ள கிரியையானது கட்டாயம் ஒன்றுமின்றி மனோற்சாயமாகவுந் தேர்ந்தெடுக்கும் இஷ்டமென்னுந் தன்னிஷ்டத்தோடும் செய்யப்படவேண்டும். 3-வது, பேறுள்ள கிரியையானது எல்லா விஷயங்களிலும் நல்லதாயும் இருக்கவேண்டும். யாதொரு கிரியை தன்னிலே நல்லதாய் இருப்பினும், சுபாவமுகாந்திரத்தோடு செய்யப்பட்டால் அது நித்திய சீவியத்திற்குப் பயன்படாததாம்.

நீதிமுறையான பெறுபேற்றுக்கு முன்சொன்னவைகளைவிட பின்வரும் சங்கேதங்களும் அவசியமென்று உணர்க. அவையாவன: 1-வது, கொடியானது திராட்சச்செடியிலே நிலைத்திராவிட்டால் அது தானாகக் கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னிலே நிலைத்திராவிட்டால் கனிகொடுக்கமாட்டீர்கள் என்று யேசுநாதர் அர்ச். அருளப்பர் சுவிசேஷத்து 15-ம் அதிகாரத்திலே வசனித்திருப்பதுபோலத் தேவசிநேகத்தால் யேசுநாதரோடு ஐக்கியப்பட்டு இஷ்டப்பிரசாத அந்தஸ்திலே இருப்பது அவசியம். சாவானபாவத்தால் மரித்தவனாயிருக்கும் பாவி ஒருவன் நித்தியசீவியத்திற்குரிய கிரியைகளை நடத்துதல் கூடாது. 2-வது, அந்த நற்கிரியைகளுக்குச் சம்பாவனையளிப்போமென்று

சருவேசுரன் வாக்குத்தத்தம்பண்ணியிருத்தல்வேண்டும். இந்த வாக்குத்தத்தத்தால் மாத்திரமே சம்பாவனையை அடைகிறதற்கு வேண்டிய கட்டாயமான உரிமையுண்டாகின்றது. இந்த அவசியமான சங்கேதங்கள் இல்லாதவிடத்து, சருவேசுரன் மட்டில்லாத இரக்கமுள்ளவராகையால் அவர் ஆத்தும ஈடேற்றத்திற்கு அவசியமான வரப்பிரசாதங்களை நமக்குத் தந்தருளுவாரென்று நாம் நம்பிக்கையோடு காத்திருக்கலாம்; காத்திருக்கவும் வேண்டும். ஆயினும், அவர் அவ்வரப்பிரசாதங்களை நமக்குக் கொடுக்கக் கடமைபூண்டவரல்ல. அவைகளைப் பெற்றுக்கொள்ள நாம் செய்யும் முயற்சியாலோவெனில் தேவ கிருபாகடாட்சத்திலிருந்து மாத்திரம் பிறக்கக்கூடியதாகிய தகுதிமுறையான பெறுபேற்றுக்குத்தான் நாம் உரிமையுள்ளவர்களாவோம்.

இன்னும் அறியவேண்டியதாவது:—ஒருவன் சாவானபாவத்தைக் கட்டிக்கொண்டவுடனே தேவ இஷ்டப்பிரசாதத்தை மாத்திரமன்றித் தான் முன் தேடிவைத்த சகல புண்ணியபேறுகளையுமே இழந்துபோகிறான். ஆயினும், அவன் பச்சாத்தாபத்தின் மூலமாக இஷ்டப்பிரசாதத்தை மீளவும் அடைந்துகொள்ளும்போது, சாவானபாவத்தால் இழந்துபோயிருந்த எல்லாப் புண்ணிய பேறுகளும் அவனுக்குத் திரும்பவுங்கிடைக்கின்றன. ஆகாமியன் தன் ஆகாமியத்தைவிட்டு மனந்திரும்பினால் அவன் தன் ஆகாமியத்தாற் சேதமுறான் என்று எசேக்கியேல் ஆகமத்து 33-ம் அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறபடி, ஒருவனுடைய பச்சாத்தாபம் எவ்வளவோ அவன் பாவத்தால் முன் இழந்துபோன நற்கிரியைப் பேறுகளெல்லாம் அவ்வளவாகவே அவனுக்குப் பிரயோசனமாயிருக்கவேண்டும் என்று சருவேசுரன் திருவுளமாயிருக்கிறார்.

245. (III) **புண்ணியபேறுகளின் விஷயம்.** 1-வது, மனிதனானவன் முந்திக்கிடைப்பதாகிய தற்சமய வரப்பிரசாதத்திற்குப் பேறுபெற்றுக்கொள்ளுதல் எந்தவிதத்தாலுங் கூடாதென்பது விசுவாச சத்தியமாம். ஏனெனில், இது தவிர்ப்பின்றி முழுதும் இலவசமான ஓர் வரப்பிரசாதமாம். 2-வது, நீதிமானாக்கப்படுதலாகிய வரப்பிரசாதத்திற்குப் பாவியானவன் நீதிமுறையாகத் தன்னைப் பேறுபெற்றவனாக்கிக்கொள்ளுதல் கூடாதென்பது நிச்சயம். ஏனெனில், நீதிமுறையான பேற்றை அடைந்துகொள்ளுவதற்கு முந்த இஷ்டப்பிரசாத அந்தஸ்திலிருப்பது அவசியம். ஆயினும், பாவியானவன் தேவவரப்பிரசாதத்தின் உதவியால் மெய்யாகவே மனஸ்தாபப்பட்டுச் சருவேசுரனோடு



உறவாடிக்கொள்ளுகிறதற்குத் தன்னாற் செய்யக்கூடியதெல்லாஞ் செய்வானாகில் நீதிமானாக்கப்படுதலாகிய வரப்பிரசாதத்திற்கு அவன் தகுதிமுறையாகப் பேறுபெற்றவனாகக்கூடும். கிருபையுள்ளவராகிய சருவேசுரனிடத்திலிருந்து தவறாதவிதமாய் அதைப் பெற்றுக்கொள்ளவுங்கூடும். 3-வது நீதிமானுக்கு அவனுடைய புண்ணியக் கிரியைகளினிமித்தம் மோக்ஷங்கொடுப்போமென்று சருவேசுரன் வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆதலால், திரேந்து நகரச் சங்கம் தீர்மானித்திருக்கிறபடி, நீதிமானானவன் இஷ்டப்பிரசாதத்தின் அதிகரிப்புக்கும் நித்திய சீவியத்திற்கும் மோக்ஷ பேரின்பத்தின் அதிகரிப்புக்கும் நீதிமுறையாகப் பேறுபெற்றுக்கொள்ளுதல் கூடுமென்பது விசுவாச சத்தியமாம். 4-வது நீதிமான் சித்திகர வரப்பிரசாதத்திற்காவது கடைப்பிடி வரப்பிரசாதத்திற்காவது நீதிமுறையாகப் பேறுபெற்றுக் கொள்ளுதல் கூடாது. ஏனெனில், சருவேசுரன் இவை இரண்டில் ஒன்றையும் வாக்குப்பண்ணியிருக்கவில்லை. இங்கே வாக்குப்பண்ணுதலென்னும் சொல்லை அதன் சுய அர்த்தத்திலும் கண்டிப்பான அர்த்தத்திலும் கொள்ளவேண்டும். அன்றியும், நீதிமானானவன் கடைப்பிடி வரப்பிரசாதத்துக்குப் பேறுபெற்றுக்கொள்ளக் கூடியவனாயிருந்தால், அவன் தன் ஈடேற்றத்தைக்குறித்து எவ்வித பயமுமில்லாதவனாயும் இருப்பான். அப்படியிருத்தலோ கூடாது. ஏனெனில், பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரக்ஷணிய அலுவலைச் செய்துகொண்டுவாருங்களென்று அர்ச். சின்னப்பர் பிலிப்பியர் நிருபத்து இரண்டாம் அதிகாரத்தில் வசனித்திருக்கிறார். ஆதலால், நீதிமானானவன், கடைப்பிடி வரப்பிரசாதத்திற்கும் இதை அடைந்துகொள்ளுவதற்கு அவசியமான சித்திகர வரப்பிரசாதத்திற்கும் பேறுபெற்றவனாயிருப்பது தகுதிமுறையாக மாத்திரமேயாம். இதுபற்றியே, நாம் கடவுளைப்பார்த்துச் சித்திகர வரப்பிரசாதத்தையும் கடைப்பிடி வரப்பிரசாதத்தையும் எங்களுக்குத் தந்தருளுமென்று பிரார்த்தித்துக்கொண்டுவர வேண்டியவர்களாகிறோம்.

# 15-ம் அதிகாரம்

## மனிதனுடைய கடைசிமுடிவுகளின் பேரில்

246. மனிதன் சுபாவத்திற்கு மேலான அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டதினால், அவன், ஒரு சிருட்டிக்குத்தக்கபடி சருவேசுரனைச் சுதந்தரித்துக்கொள்ளவும் அவருடைய பேரின்பத்தை அனுபவிக்கவும் விதிக்கப்பட்டவனானான். இதுவே மனிதனுடைய கதியென்னப்படும். ஆதலால், இந்தப் பாக்கியமான கதியைநோக்கி மனிதன் எப்போதுஞ் சீவித்துக்கொண்டுவரவேண்டும். இந்தப் பாக்கியமான கதியை அடைந்துகொள்ளுவதற்காகவே வரப்பிரசாதங்களையுஞ் சகாயங்களையும் அவன் எப்போதும் உபயோகித்துக் கொண்டுவர வேண்டும். அவனுடைய புண்ணியங்களுக்கும் தர்மக் கிருத்தியங்களுக்குஞ் சம்பாவனை கிடைக்குமிடம் மோக்ஷமேயாம். அது அவனுக்குச் சித்திக்கவேண்டுமாகில், அவன் இஷ்டப்பிரசாதத்தோடு மரித்துச் சருவேசுரனுடைய நீதியாசனத்தின்முன்பாக நீதிமானாகத்தோன்றவேண்டும். கடைப்பிடி வரப்பிரசாதமில்லாமல் மரிக்கிற எவனும் ஒருபோதும் மோக்ஷத்திலே சேர்த்துக் கொள்ளப்படான்; நித்திய நரகாக்கினைக்கே நியமிக்கப்படுவான். மனிதன் அடையவேண்டிய கடைசியான அந்தஸ்துக்கள்தாம் அவனுடைய கடைசி முடிவுகளெனப்படும். அவைகள்: சாவும் நடுத்தீர்வையும் மோக்ஷமும் நரகமுமாகிய இந்த நான்குமாம். ஆயினும், தேவ இஷ்டப்பிரசாதத்தோடு சாகிறவர்கள் எல்லாரும் உடனே மோக்ஷஞ்சேருவதற்கான போதிய பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கிறதில்லையென்பது நிச்சயமாகையால், தேவநீதிக்கு உத்தரிக்க வேண்டியதை உத்தரித்துத் தீர்க்காமல் சாகிற புண்ணிய ஆத்துமாக்கள் தங்கள் பாவக்கடனைத் தீர்த்துமுடிப்பதற்கான ஓர் இடம் இருத்தல் அவசியமாம். இந்த இடத்திற்கு உத்தரிப்பு ஸ்தலமென்று பெயர். உத்தரிப்பு ஸ்தலமானது மனிதனுடைய நாலு முடிவுகளுள் ஒன்று அல்ல. ஆயினும், அது மோக்ஷத்தோடு சம்பந்தம்பூண்டதாய் இருக்கின்றது. ஆதலால், அதை இங்கே மோக்ஷத்தின்பின் வைத்து விளக்குவோம்.

### I. மரணத்தின் பேரில்

247. **(I) மரணம் ஆவது என்ன?** ஆத்துமம் சரீரத்தைவிட்டுப் பிரிந்துபோவதே மரணமென்று சொல்லப்படும். ஆத்துமமானது சரீரத்தோடுசேர்ந்து அதற்கு உயிரையும் இயக்கத்தையும் முயற்சியையுங் கொடுக்கிறதினாலே மனிதனுடைய சீவியம் உண்டாகின்றது. ஆதலால், சரீரத்தோடு சேர்ந்திருந்த ஆத்துமம்



அதைவிட்டுப் பிரிந்தவுடனே அவனுடைய சீவியம் அற்றுப்போக அவன் செத்தவனாகிறான். அப்போது அவனுடைய சரீரம் இயக்கமும் முயற்சியும் இல்லாமற்போகின்றது. விரைவில் அழிந்து தூசியாகின்றது. அது சருவேசுரனுடைய வல்லமையுள்ள வாக்கால் மீளவும் உயிர்பெற்றுக்கொள்ளுந்தனையும் அப்படியே இருக்கும். மனிதனுடைய அழியாத ஆத்துமமோ தான் இவ்வுலகத்திலே சரீரத்தோடுகூடி வாழ்ந்தகாலமட்டுஞ்செய்த நன்மையையுந் தீமையையும்பற்றித் தீர்வையிடப்படுவதற்காக உடனே சருவேசுரனுடைய நீதியாசனத்தின்முன்னே போய் நிற்கும். இத்தன்மையானதே மரணமாம். ஆதலால், மரணத்தால் மனிதன் முழுதும் நிர்மூலமாய்ப் போகிறதில்லை. முன்னே ஒன்றாய்க் கூடி வாழ்ந்த அவனுடைய ஆத்துமமும் சரீரமும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்து மாத்திரம்போகின்றன. மரணமானது, பூலோக வாழ்வை மட்டும் நாடித் தேடித் திரிந்த பாவியான மனிதனுக்கு ஆறாத் துயரத்தையும் பரலோக வாழ்வை நாடித் தேடித் திரிந்த பத்திமானுக்குச் சொல்லிலடங்காத இன்பத்தையும் விளைவிக்கும். எவ்வாறெனில் சாவு வந்தவுடனே பாவியானவன் தன்னுடைய லௌகீக எண்ணங்கள் எல்லாஞ் சிதறுண்டுபோகிறதையும் தன்னுடைய ஆலோசனைகளும் உபாயங்களுஞ் சிதைந்து அழிந்துபோகிறதையும் தன்னுடைய செல்வ பாக்கியங்களெல்லாம் நிர்மூலமாய்ப் போகிறதையும் தன்னுடைய கீர்த்தி வெகுமானங்களெல்லாம் மங்கி மறைந்து போகிறதையுங் கண்டு துக்கசாகரத்தில் அமிழ்ந்துவான். பத்திமானானவனோ, தன்னுடைய ஞானப்போராட்டங்கள் கஸ்தி துன்ப ஒறுத்தல்கள் எல்லாம் முடிந்துபோகிறதையும் மோக்ஷ பேரின்பபாக்கிய மகிமைகள் கிடைக்கப்போகிறதையும் பார்த்துச் சந்தோஷவெள்ளத்தில் அமிழ்ந்துவான்.

248. **(II) மரணத்தின் நிச்சயம்.** ஆதாம் பாவத்தைக் கட்டிக் கொள்ளாவிடில் மனிதர் ஒருபோதுஞ் சாகமாட்டார்கள். ஏனெனில், மானுட தேகமானது இயல்பாக அழிவுக்கு ஏதுவாயிருப்பினும் சருவேசுரன் அதற்கு அக்ஷயமென்னும் ஞான சுதந்தரத்தைக் கொடுத்திருப்பார். ஆதலால், மனிதர் எல்லாரும் சில காலமாக உலகத்திலே சருவேசுரனுக்கு ஊழியம்பண்ணினபின்பு ஆத்தும சரீரத்தோடு மோக்ஷத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். ஆதாம், சருவேசுரனுக்குக் கீழ்ப்படியாமற் போனதினால், அவர்: நீ தூசியாய் இருக்கிறாய், மீளவும் தூசியாய்ப் போவாய் என்பதை நினைவுகூர் என்னுந் தேவசாபத்துக்குள்ளாகி அழியாமையாகிய சுதந்தரத்தைத் தானும் இழந்தார், தம் சந்ததியாராகிய

சகல மனிதரையும் இழக்கச் செய்தார். அவருடைய பாவத்திற்குச் சுதந்தரவாளிகளாகிய நாமெல்லாரும் அந்தப் பாவத்தால் உலகத்திலே வருவிக்கப்பட்ட சாவுமுதலான எல்லா ஆக்கினைகளையும் அனுபவிக்கிறோம். யேசுநாதர் நம்முடைய ஆத்துமாக்களைப் பாவத்திலிருந்து மீட்டுவிட்டாலும் நம்முடைய சரீரத்தை அழிவிலிருந்து மீட்கவில்லை. ஆதலால், உலகாரம்பத்திற் சருவேசுரனாலிடப்பட்ட மரணத்தீர்வையானது அன்றுதொட்டு இன்றுமட்டும் மாற்றமடையாமல் எல்லாரிடத்திலும் நிகழ்ந்துகொண்டே வருகின்றது.

249. (III) **மரணத்தின் காலமும் இடமும் விதமும் நமக்குத் தெரியாதவைகளாம்.** மரணம் வருமென்பதை நாம் நிச்சயமாய் அறிந்துகொண்டாலும், அது எப்போதுவரும் எவ்விடத்தில்வரும் எவ்விதமாய்வரும் என்பவைகளை அறிந்துகொள்ள நம்மாற் கூடாது. சருவேசுரன் மாத்திரம் அறிந்திருக்கிறார். ஏனெனில், அவைகளை விதித்தவர் அவரே. மனிதன் எல்லாப் பிராயத்திலும் எல்லாக்காலத்திலுஞ் சடிதியாய்ச் செத்துப்போகக் கூடும். திவ்விய இரக்ஷகர் 'எச்சரித்திருக்கிறபடி, மரணமானது ஒரு கள்ளனைப்போலச் சடிதியாக நம்மேல் வரும். வேட்டுவனுடைய கண்ணியில் அகப்பட்ட குருவியைப்போல நாமும் மரணத்தில் அகப்பட்டுக்கொள்ளுவோம். நாம் எப்படிச் சாவோமோ அறியோம். சடிதியாய்ச் சாவோமோ, அந்தச் சாவு கடூரமானதாயிருக்குமோ இயல்பானதாயிருக்குமோ யாதொரு இடையூற்றாற் சாவோமோ, வேறுவிதமாய் மரிப்போமோ என்னும் இவையெல்லாம் நம்முடைய புத்திக்கு மறைந்த இரகசியங்களாம். சாவு வரும்போது நம்முடைய ஆத்துமம் பாவ அந்தஸ்திலிருக்குமோ இஷ்டப்பிரசாத அந்தஸ்திலிருக்குமோ இதுவும் நமக்குத் தெரியாது. சருவேசுரனுக்கு மாத்திரமே தெரியும். ஆயினும், ஒருவனுடைய சீவியம் எப்படியோ, அவனுடைய மரணமும் அப்படியேயாம் என்பதைத் தேர்ந்துகொண்டு, நல்ல மரணமடையச் சருவேசுரனிலே நம்பிக்கைவைத்துச் சன்மார்க்கராய் நடந்துகொண்டுவரக்கடவோம்.

250. (IV) **மரணத்திற்கு ஆயத்தஞ்செய்துகொள்ள வேண்டும்.** சருவேசுரன் நம்மேல் கொண்ட இரக்கத்தினாலேயே மரணம்வரவேண்டிய நேரத்தையும் விதத்தையும் நமக்கு மறைத்திருக்கிறார். நாம் இடைவிடாத விழிப்போடு தினந்தோறும் அதற்கு ஆயத்தம்பண்ணிக்கொண்டு வரவேண்டுமென்றே அவர் அப்படிச் செய்திருக்கிறார். விழிப்பாயிருந்து செபம் பண்ணுங்



கள், எப்போதும் ஆயத்தமாயிருங்கள், ஏனெனில், நீங்கள் காத்திராத நேரத்திலே மனுமகன்வருவாரென்று யேசுநாதரும் திருவுளம்பற்றி, நாம் எப்போதும் மரணத்திற்கு ஆயத்தமாய் இருக்கவேண்டுமென்று நம்மை நெருக்கித் தூண்டியிருக்கிறார்.

மரணத்திற்கு நாம் செய்யவேண்டிய முக்கியமான ஆயத்தங்கள் எவையெனில், 1-வது, நல்ல கிறீஸ்தவர்களாய்ச் சீவித்தலும், மரணத்தையும் அதின்பின் சம்பவிக்கவேண்டியவைகளையும் அடிக்கடி தியானித்து லௌகீக நன்மைகளில் மிதமிஞ்சின பற்றுதல் வையாதிருத்தலும், பாவசங்கீர்த்தனத்தின் மூலமாக அடிக்கடி பரிசுத்தமாகிக்கொள்ளுதலுமாம். 2-வது, சருவேசுரனுடைய நீதியாசனத்தின்முன்பாக நிற்கும்போது அவர், நீதிக்கும் பிறர்சிநேகத்திற்கும் விரோதமான குற்றங்களைப் பற்றிக் கடின தீர்வையிடாதபடி உலக காரியங்களையெல்லாம் ஏலவே, நீதிக்கும் பிறர்சிநேகத்திற்கும் ஏற்றபடி ஒழுங்கு பண்ணிக்கொள்ளுதலாம். 3-வது மரணத் தருவாயானவுடனே சருவேசுரனுக்கு முன்பாகத் தோன்ற முஸ்திப்புப் பண்ணிக்கொள்ளுதலாம். எப்படி முஸ்திப்புப் பண்ணவேண்டுமெனில்: 1-வது வியாதி அகோரப்பட்டு ஐம்புலன்களும் அடங்கிப்போகிற சமயத்திலே பாவசங்கீர்த்தனம் நற்கருணை அவஸ்தைபூசுதல் ஆகியவைகளை பலனுள்ளவிதமாய்ப் பெற்றுக்கொள்ளுதல் கூடாதாகையால், அவைகளை ஏற்ற காலத்திற்றானே தக்க ஆயத்தத்தோடு பெற்றிருக்கவேண்டும். 2-வது சருவேசுரனிடத்திலே மனதைச் செலுத்தியும், விசுவாசம் நம்பிக்கை தேவசிநேகம் தேவசித்தத்திற்கு அமைவு பாவங்களின்மேல் மனஸ்தாபம் யேசுநாதருடைய பேறுபலன்களின் மேல் நம்பிக்கை ஆகிய இவைகளின் முயற்சிகளை அடிக்கடி ஓதியும், அர்ச். தேவமாதாமுதலான மோக்ஷவாசிகளுடைய அடைக்கலத்தை இரந்து மன்றாடியும், யேசு மரியை சூசை என்னுந் திருநாமங்களை வாக்கால் உச்சரிக்கக் கூடாவிட்டால் மனதாலாவது அடிக்கடி உச்சரித்தும் இவ்விதமான உணர்ச்சிகளோடு சருவேசுரன் ஆத்துமத்தைத் தம்மிடத்தில் அழைத்துக்கொள்ளுங் கடைசியானநேரம் வருந்தனையுங் காத்துக்கொண்டிருக்கவேண்டும்.

## II. நடுத்தீர்வையின்பேரில்

251. (I) **நடுத்தீர்வையின் நிச்சயம்.** ஒருவன் மாணித்தவுடனே, அவனுடைய ஆத்துமமானது நியாயந்தீர்க்கப்படும்பொருட்டு சருவேசுரனுடைய சமுகத்திலேபோய் நிற்கும். அப்போது அவர் அந்த ஆத்துமத்திலே ஒரு ஞானவெளிச்சத்தைப் பிரகாசிக்கப்பண்ணுவார். அந்த ஆத்துமமோ தன்னுடைய நல்வினை

தீவினைகளைப்பற்றிக் கணக்குச்சொல்லவும், நரகத்திற்காவது மோக்ஷத்திற்காவது தன்னை நிரூபிக்கும் தேவதீர்ப்பைக் கேட்கவும் சருவேசுரனுடைய சமுகத்திலே தன்னந்தனியே நிற்கும். மரணம் உண்டென்பது எவ்வளவு நிச்சயமோ, தீர்வை உண்டென்பதும் அவ்வளவு நிச்சயமேயாம். இதற்குத் திருஷ்டாந்தமாக அர்ச். சின்னப்பர்: சகல மனிதரும் ஒருதரஞ் சாகவேண்டுமென்றும் சாவுக்குப்பின் நியாயத்தீர்ப்பு நடக்கவேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருப்பதை தேவவாக்கியமாக எழுதிவைத்தார். ஒருவன் செத்தவுடனே அவனுக்குச் செய்யப்படுந் தீர்வை தனித்தீர்வையென்று சொல்லப்படும். ஏனெனில், இந்தத் தீர்வையானது உலகமுடிவிலே சகல சனங்களினும் முன்பாக நடக்கும் பிரசித்தமான பொதுத்தீர்வையைப் போலிராமல் சருவேசுரனுக்கும் அவர் முன்பாகத் தனியே நிற்கும் ஆத்துமத்துக்குமிடையே மாத்திரம் அந்தரங்கமாய் நடப்பதாகும்.

252. (II) **நடுவரின் இலக்ஷணங்கள்.** நடுத்தீர்க்கிறவர் எப்படிப்பட்டவரென்று சற்றுவது யோசித்தால் நியாயத்தீர்ப்பைப்பற்றிப் பயந்து நடுநடுங்கவேண்டிவரும். நியாயந்தீர்க்கிற நடுவர் மனுஷனாய் அவதரித்த சருவேசுரனேயாம். அவரோ, 1-வது, ஞானமுள்ளவர். நாம் விரும்பினவைகளிலுஞ் செய்து முடித்தவைகளிலும் ஒன்றுவது அவருக்கு மறைந்திராது. நம்முடைய அந்தரங்கமான எண்ணங்களையும் பற்றுதல்களையும் கருத்துக்களையும் அவர் துலாம்பரமாய்க் காண்கிறார். அவர் எல்லாவற்றையுங் குறையாத நடுவுநிலைமையோடு சீர்தூக்கிப் பார்க்கிறார். 2-வது, அளவில்லாத நீதியுள்ளவர். ஒவ்வொருவனிடத்திலும் இருக்கக்கூடிய நன்மையென்ன தீமையென்ன என்பதைச் சீர்தூக்கிப் பார்த்து அவனவனுக்குத் தக்கபடி பாரபக்ஷமின்றித் தீர்வையிடுவார். சுவிசேஷப் பிரமாணங்களும் போதகங்களும், ஞானஸ்நான வாக்குத்தத்தங்களும், தம்முடைய முன்மாதிரிகைகளும் படிப்பினைகளும், அப்போஸ்தலர்களும் அர்ச்சியசிஷ்டர்களுங் காண்பித்த நன்மாதிரிகளும் கற்பித்த படிப்பினைகளுமாகிய இவைகளைக் கொண்டே அவர் எல்லாமனிதருக்கும் நடுத்தீர்ப்பார். 3-வது, கோணாத நீதியுள்ளவர். ஒருவன் என்ன சாக்குப்போக்குச் சொன்னாலும், எவ்விதமாய் இரந்துநின்றாலும், நீதிக்கும் சத்தியத்திற்கும் விரோதமாக அவர் தீர்வையிடார். அவர் ஒன்றுக்குமிரங்கார். அவரிடுந்தீர்ப்பும் மீளாததீர்ப்பேயாம். அவனவன் எப்படிப்பட்டவனோ, அவனவனுடைய கிரியைகள் எப்படிப்பட்டவைகளோ, அவருடைய நியாயத்தீர்ப்பும் அப்படிப்பட்டதாகவே இருக்கும்.



253. (III) **தீர்ப்புக்குரிய விஷயம்.** ஆத்துமமானது இவ்வுலகத்திலே நினைத்த நினைவுகளும் செய்த கிரியைகளும் கொண்ட ஆசைகளுமாகிய இவைகளைக்குறித்தே நியாயந்தீர்க்கப்படும். 1-வது, அதுசெய்த தீமையைப்பற்றியும், 2-வது, அது செய்யவேண்டியிருந்துஞ் செய்யாமல் விட்ட நன்மையைப்பற்றியும், 3-வது, அது தீயவிதமாய்ச் செய்துமுடித்த நற்கிரியைகளைப்பற்றியும், 4-வது, அது சருவேசுரனாற் தனக்குக் கொடுக்கப்பட்ட சுபாவ நன்மைகளையும் ஞான நன்மைகளையும் துர்ப்பிரயோகஞ் செய்ததைப்பற்றியும், 5-வது, அது தடுக்கவேண்டியிருந்தும் தடுக்காமல் விட்ட தீமைகளைப்பற்றியும், 6-வது, அது பிறர் செய்யாதபடி தடுத்த நன்மையைப்பற்றியும் தேவநடுவர் பத்தும்பத்தாய் விசாரிப்பார். ஆ! இந்த நடுத்தீர்வை எவ்வளவு பயங்கரமானது! இந்த அகோரமான நீதி விசாரணையைநினைத்து நடுநடுங்காதவனார்!

254. (IV) **தீர்ப்புச் சொல்லுதல்.** தெய்வீக கர்த்தரானவர் தமது நீதியாசனத்தின்முன்பாக நிறுத்தப்பட்ட ஆத்துமத்துக்கு ஒரு நொடிப்பொழுதிலே அதின் சீவிய சங்கதியெல்லாம் நுணுநுணுக்கமாய் எடுத்துக்காண்பித்துத் தமது நீதித்தீர்வையைப் பிரசித்தப்படுத்துவார். அவர் அந்த விசாரணையிலே நீதிமானாகக் காணப்பட்ட ஆத்துமத்தைநோக்கி: நல்லது, உத்தமமான, உண்மையுள்ள ஊழியக்காரனே, உன் எசமானுடைய சந்தோஷத்திற் பிரவேசிப்பாயாகவென்று அன்போடும் ஆதரவோடுந் திருவுளம்பற்றுவார். பாவ ஆத்துமத்தைப்பார்த்தோ, சபிக்கப்பட்டவனே என்னைவிட்டு அகன்று நித்திய அக்கினியிற் போய் விழு என்று இடியிடித்தாற்போல வசனிப்பார். அக்ஷணமே தேவதீர்வையும் நிறைவேறிமுடியும். ஒவ்வொரு ஆத்துமமும் தனக்குத் தனக்கு உரிய ஸ்தலத்துக்குப் போய்ச் சேர்ந்துவிடும். எவ்வித பாவதோஷமில்லாததாயும் பொறுக்கப்பட்ட பாவத்திற்குரிய அநித்திய ஆக்கினைக்குப் பூரணமாய் உத்தரித்து முடித்ததாயுமுள்ள ஆத்துமம் மோக்ஷத்திற்குப்போய்ச் சேரும். அற்ப பாவமுள்ளதாயும் தேவநீதிக்கு முழுதும் உத்தரியாததாயுமிருக்கும் ஆத்துமம் உத்தரிப்புஸ்தலத்திற்குப் போய்ச் சேரும். சாவான பாவத்தோடு மரித்த ஆத்துமமோவெனில், நேரே நரகத்தில் விழும்.

## III. மோக்ஷத்தின் பேரில்

255. (I) **மோக்ஷம் உண்டேன்பது.** சருவேசுரன் பரிசுத்த ஆத்துமாக்களுக்கு நித்தியமான சம்பாவனை அளிக்கு

மிடமே மோக்ஷமென்று சொல்லப்படும். இம்மையிலே தமக்குப் பிரமாணிக்கமாய் ஊழியஞ்செய்தவர்களுக்காகச் சருவேசுரன் மறுமையிலே ஒரு பெருஞ் சம்பாவனையை வைத்திருக்கிறாரென்பது விசுவாச சத்தியமாம். யேசுநாதரும் அர்ச். மத்தேயு சுவிசேஷத்து 5-ம் அதிகாரத்திலே : சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்; பரலோகத்திலே உங்கள் பலன் மிகுதியாய் இருக்குமென்று தம் நிமித்தம் துன்பப்படுஞ் சீஷர்களைக் குறித்துத் திருவுளம்பற்றியிருக்கிறார். மோக்ஷத்திற்குப் பரலோகம் என்றும், பரலோக இராச்சியமென்றும், சருவேசுரனுடைய இராச்சியமென்றும் இவ்வாறு பல பெயர்கள் வழங்குகின்றன. மோக்ஷத்துட் பிரவேசிக்கிறதற்குச் சாவானபாவமுதல் எல்லாப் பாவங்களும் நீங்கியும் பொறுக்கப்பட்ட பாவங்களின்பேரால் தேவநீதிக்குப் பூரணமாய் உத்தரித்துமிருத்தல் அவசியமேயாம்.

**256. (II) மோக்ஷபேரின்பம் எத்தன்மையானதென்பது.** சருவேசுரனை முகமுகமாய்த் தரிசிப்பதும், அவரைப் பூரணமாய்ச் சிநேகிப்பதும், மனோவாக்குக்கெட்டாத பாக்கியத்தை அனுபவிப்பதும், எவ்வித துன்பமும் நீங்கியிருப்பதுமாகிய இவைகளே மோக்ஷபேரின்பமென்று சொல்லப்படும். நாம் இவ்வுலகத்திலே சருவேசுரனை ஒரு பிரதிமையிலும் திரைக்கூடாகவுங் கண்டாற்போல அவருடைய சிருட்டிகளிலேமாத்திரங் கண்டுகொள்ளுகிறோம். மோக்ஷத்திலோ அவரை முகமுகமாய்க் காண்போம். அவர் தம்மில் எப்படியிருக்கிறாரோ அப்படியே அறிந்துகொள்ளுவோம். அவருடைய மகிமைப்பிரதாபத்தோடும் அனந்த தெய்வீக இலக்ஷணங்களோடும் அவரைத் தரிசித்துக்கொள்ளுவோம். மோக்ஷவாசிகள் சருவேசுரனை துலாம்பரமாய்க் காண்பதினால் அவரை மேன்மேலுஞ் சிநேகித்தும், அச்சிநேகத்தால் அவரோடு ஐக்கியப்பட்டும், அவருடைய வாக்குக்கெட்டாத பாக்கியத்தை அனுபவித்துங்கொண்டிருப்பார்கள். அவர்கள் சருவேசுரனைச் சுதந்தரித்துக்கொள்வதினால் மாறாத சமாதானத்தையும் நிறைந்த சந்தோஷத்தையும் அறிவுக்கெட்டாத பாக்கியத்தையும் நுகருவார்கள். அவர்கள் ஆசிக்கக்கூடிய சகல நன்மைகளும் அவர்களுக்கு ஏராளமாய்க் கிடைக்கும். வேதவாக்கியமானது மோக்ஷவாசிகளுடைய பாக்கியத்தை ஒரு இன்பமான விருந்தோடு ஒப்பிட்டும், அவர்கள் கர்த்தருடைய ஆனந்தக்கடலிலே நீந்துவார்களென்றும், பேரின்பவெள்ளத்திலே முக்குளிப்பார்களென்றும் கூறியிருக்கின்றது. மோக்ஷத்திலே வெறுப்புமில்லைப் பயமுமில்லை. துக்கமுமில்லை நோயுமில்லை, கண்ணீருமில்லை, துயரமுமில்லை. சுருங்கச்சொல்லுகில் மோக்ஷபாக்கியமானது நமது



மனதுக்கும் வாக்குக்கும் எட்டாத பாக்கியமாம். சாவுக்குப்பின் முழுதும் பரிசுத்த ஆத்துமாக்கள் உடனே மோக்ஷத்தை அடைந்துகொள்ளுவார்கள். தங்கள் பாவத்துக்கு முழுதும் உத்தரியாத புண்ணிய ஆத்துமாக்கள் உத்தரிப்பு ஸ்தலத்திலே வேதனைப்பட்டு, முழுதும் உத்தரித்தவுடனே மோக்ஷத்தை அடைந்துகொள்ளுவார்கள். மோக்ஷவாசிகளுடைய சரீரங்களோ, அவர்கள் பேரின்பத்தை அடைந்து கொள்வதற்காகப்பட்ட பிரயாசம் கஸ்தி வேதனை முதலியவைகளுக்குத் தாங்களும் பங்காளிகளாயிருந்தபடியால், மாமிச உத்தான நாளிலே எழுப்பப்பட்டு அவர்களோடுகூடி மோக்ஷ பாக்கியத்தை அனுபவிக்கும்.

**257. (III) மோக்ஷவாசிகளின் பாக்கியம் நித்தியமானது.** சருவேசுரன் நித்தியராயிருப்பதுபோல, மோக்ஷவாசிகளுடைய பாக்கியமும் நித்தியமானதேயாம். அது ஒருபோதும் மாறாது. மோக்ஷவாசிகள் சருவேசுரனோடுகூட இராச்சியபாரம் பண்ணுவார்கள். அவர்களுடைய இராச்சியபாரம் ஒருபோதும் முடியாது. நீதிமான்கள் நித்திய சீவியத்துக்குப் போவார்களென்று யேசுநாதரும் அர்ச். மத்தேயு 25-ம் அதிகாரத்திலே வசனித்திருக்கிறார். அர்ச்சியசிஷ்டர்களின் பேரின்பமானது, வேதவாக்கியங் காண்பிக்கிறபடி, அணையும் வரம்புமில்லாததாயிருக்கும். அவர்கள் சந்தோஷவெள்ளத்தாற் பூரித்திருப்பார்கள். பேரின்ப நுகர்ச்சியானது அவர்களிடத்தில் ஒருபோதுந் தணியாமல் எப்போதும் புதிதாகவேயிருக்கும். ஆ! நாம் பரலோகத்தை உற்று நோக்கும்போது இகலோகம் எவ்வளவு அருவருப்பாய்ப் போகின்றது!

**258. (IV) மோக்ஷவாசிகளின் பாக்கியம் தாரதம்மியமுள்ளது.** மோக்ஷவாசிகள் எல்லாரும் பரலோகத்திலே ஒரு அளவான பாக்கியத்தை அனுபவிக்கிறதில்லை. இதற்கு அத்தாட்சியாக யேசுநாதர்: நமது பிதாவின் வீட்டில் அனேக வாசஸ்தலங்கள் உண்டென்று வசனித்திருக்கிறார். ஆதலால், மோக்ஷவாசிகளுடைய பாக்கியமும் மகிமையும் அவரவருடைய பெறுபேறுகளுக்கு ஏற்றதாயிருக்கும். இவ்வுலகத்திலே சருவேசுரனை அதிகமாய் நேசித்தவர்களும் அவருக்காக அதிகமாய்த் தெண்டித்து உழைத்தவர்களும் அவ்வுலகத்திலே அதிகம் பெரிதான சம்பாவனையையும் அதிகந் துலக்கமான கிரீடத்தையும் பெற்றுக்கொள்ளுகிறது நியாயமேயாம். ஆயினும், மோக்ஷத்திலே தாழ்ந்தபடியிலே உள்ளவர்களுங் குறைவில்லாமற் தங்களுக்குப் போதிய பாக்கியத்தைப் பூரணமாய் அனுபவிக்கிறார்கள். ஒவ்வொரு மோக்ஷ

வாசியும் தான்தான் கொள்ளக்கூடிய அளவாகவும் தான்தான் நுகரக்கூடிய அளவாகவும் மோக்ஷ பாக்கியத்தை அனுபவித்துக் கொண்டிருப்பார். ஒவ்வொருவருடைய ஆசைகளும் முழுதுந் திருப்தியாம். ஆதலால், ஒவ்வொருவருடைய பாக்கியமும் பூரணமானதேயாம். பெரும்பசியுஞ் சிறுபசியுமுள்ள இருவர் போசனம் பண்ணப் பந்தியமர்ந்த இடத்துப் பெரும்பசியுள்ளவன் அதிகமாகவுஞ் சிறுபசியுள்ளவன் குறைவாகவுஞ் சாப்பிட்டாலும் இருவரும் பூரண திருப்தியுள்ளவர்களாகவே இருப்பார்கள். அவ்வண்ணமே மோக்ஷவாசிகள் ஏற்றத்தாழ்ச்சியான பாக்கியத்தை அனுபவித்தாலும் அவரவர் அனுபவிக்கும் பாக்கியமானது அவரவருக்குப் பூரணமாகவே இருக்கும்.

மோக்ஷபாக்கியத்தை அடைந்துகொள்ள நம்மிடத்திலே மெய்யான ஆசையிருந்தால், 1-வது, பூலோக பாக்கியங்களை வெறுத்து நடக்கவேண்டும். சருவேசுரனுடைய பாக்கியமாகிய பேரின்பத்தை நித்தியகாலமாய்ச் சுகிக்கும்படி நிருபிக்கப்பட்டவர்களாகிய நாம், அழிந்துபோகிற இப்பிரபஞ்ச நலங்களை மிதமிஞ்சி மதிக்கத் தகாது. 2-வது, நித்திய சம்பாவனைகளை நமக்குக் கொடுக்கக்கூடிய சுகிர்த புண்ணியங்களைத் தளராத முயற்சியோடு அல்லும் பகலும் அனுசரித்துக்கொண்டு வரவேண்டும். 3-வது, நமக்குக் கஸ்தி உபத்திரவங்கள் நேரிடும்போது, அதி சீக்கிரத்திலே நீங்கிப்போவதாகிய நம்முடைய லேசான உபத்திரவமானது மிகவும் அதிகமான நித்திய கன மகிமையையுண்டாக்கும் என்று 2-ம், கொரிந்தியர் 4-ம் அதிகாரத்திலே எழுதப்பட்ட வசனத்தை நினைவு கூர்ந்து நாம் ஆறுதலுற்றிருக்கவேண்டும்.

## IV. உத்தரிப்பு ஸ்தலம்

**259. (I) உத்தரிப்பு ஸ்தலத்தின் உண்மையுஞ் சுபாவமும்.** உத்தரிப்பு ஸ்தலமாவது, தேவ இஷ்டப்பிரசாதத்தோடு மரிக்கிறவர்கள், இவ்வுலகத்திலே தங்கள் பாவங்களுக்காக முழுதும் உத்தரித்துத் தீராவிட்டால், அவைகளுக்காக அவ்வுலகத்திலே கஸ்தி வேதனைப்பட்டு உத்தரிக்கும் ஒரு இடம் அல்லது ஒரு அந்தஸ்தாம். நீதிமான்களாயுள்ளவர்கள் மாத்திரம் அங்கேபோய் உத்தரிப்பார்கள். சாவான பாவத்தோடு சாகிறவர்களுக்கோ அங்கே இடமில்லை. ஏனெனில், சாவானபாவத்தோடு சாகிறவர்களுக்கு மரணத்தின்பின் பாவ நிவாரணத்துக்கு வழியில்லை. நீதிமான்கள் சாகும்வேளையிலே தங்களிடத்திலுள்ள அற்பபாவங்களின் பொருட்டாவது, முன்னே மன்னிக்கப்பட்ட பாவங்களுக்குரிய அநித்திய ஆக்கினைக்குப் பூரணமாய் உத்தரித்துத் தீர்க்கும்



பொருட்டாவது உத்தரிப்புஸ்தலத்திலே கஸ்திப்படுவார்கள். ஞானஸ்நானத்தால் அன்றி வேறு எவ்விதமாயாவது சாவானபாவங்கள் அழிக்கப்பட்டால், அவைகளுக்குரிய நித்திய ஆக்கினையானது, சாதாரணமாய், அநித்திய ஆக்கினையாகவே மாறிப்போகின்றது. இந்த அநித்திய ஆக்கினையைப் பாவியானவன் தபசின்மூலமாய் இவ்வுலகத்திலாயினும் உத்தரிப்புஸ்தலத்து வேதனைமூலமாய் அவ்வுலகத்திலாயினும் அநுபவித்தே தீரவேண்டும்.

உத்தரிப்பு ஸ்தலத்தின் உண்மையானது, ஒருவிசுவாசசத்தியமென்பதற்கு 1-வது, வேதவாக்கியம் அத்தாட்சியாயிருக்கின்றது. எவ்வாறெனில், மரணமடைந்தவர்கள் தங்கள் பாவங்களினின்று விடுதலையாகும்பொருட்டு அவர்களுக்காகச் செபம்பண்ணுகிறது சுத்தமும் நன்மையுமான எண்ணமேயாமென்று 2-ம் மக்கபேயர் 12-ம் அதிகாரத்திலும், இஸ்பிரீத்துசாந்துவுக்கு விரோதமான பாவமானது இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலும் மன்னிக்கப்படாதென்று அர்ச். மத்தேயு 12-ம் அதிகாரத்திலும் எழுதப்பட்டிருக்கின்றது. இந்தச் சுவிசேஷ வசனத்தின்படி, அவ்வுலகத்திலும் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்பது திருஷ்டாந்தம். இந்த மன்னிப்போ நரகத்திலும் நடவாது. ஏனெனில், அங்கே எவ்வித தேவ இஷ்டப்பிரசாதத்திற்கும் இடமில்லை. மோக்ஷத்திலும் நடவாது. ஏனெனில், அங்கே எவ்வித பாவமும் இராது. ஆதலால், அந்த மன்னிப்புக்கு இடம் உத்தரிப்புஸ்தலமேயன்றி வேறொன்றல்ல. 2-வது, திருச்சபையின் தீர்மானம் அத்தாட்சியாயிருக்கின்றது. எவ்வாறெனில், இது திரேந்துநகர சங்கத்தால் மிகத் துலாம்பரமாய்த் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. 3-வது, பாரம்பரியம் அத்தாட்சிப்படுத்துகின்றது. எவ்வாறெனில், வேதசாஸ்திரிகளும் சபைப் பிதாக்களும் இதைத் திட்டமாய்ப் படிப்பித்திருக்கிறார்கள். அர்ச். அகுஸ்தீன் என்பவர் தம்முடைய தாயாரின் ஆத்தும இளைப்பாற்றிக்காகத் திவ்விய பூசையை ஒப்புக்கொடுத்ததுமன்றி, எல்லாரும் அந்த ஆத்துமத்திற்காகவுந் தாம் மரித்தபின் தமது ஆத்துமத்திற்காகவும் கடவுளைப் பிரார்த்தித்துக்கொள்ளவேண்டுமென்று விண்ணப்பமுஞ் செய்திருக்கிறார்.

**260. (II) உத்தரிப்புஸ்தலத்தின் ஆக்கினை.** உத்தரிப்பு ஸ்தலத்தின் வேதனை எத்தன்மையென்றாவது எவ்வளவு அகோரமானதென்றாவது திருச்சபை நமக்குத் தெரிவித்திருக்கவில்லை. ஆயினும், அது ஒருவன் உத்தரிக்கவேண்டிய பாவங்களின் தொகைக்குங் கனத்துக்குந் தக்கதாயிருக்கவேண்டுமென்றே நாம் தெளிந்துகொள்ளவேண்டும். உத்தரிப்புஸ்தலத்திலுள்ள

வேதனையானது நாம் இவ்வுலகத்திலே அனுபவிக்கக்கூடிய எல்லா வேதனைகளையுங் கடந்தது என்று அநேக வேதபாரகர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். இவர்களுடைய தீர்மானமானது அங்கேயுள்ள மிகப் பெரிதான ஆக்கினையைப்பற்றி மாத்திரம் சரியாயிருக்கின்றதென்று அர்ச். பொனவந்தூரும் அர்ச். பெலார்மினுங் கூறுகிறார்கள். இது எவ்வாறிருப்பினும், உத்தரிப்புஸ்தலத்து ஆத்துமாக்கள் சருவேசுரனை முகமுகமாய்த் தரிசிக்கக்கூடாதவர்களாயிருக்கிறார்கள் என்பதும், அதனால் அகோரமான கஸ்தி அனுபவிக்கிறார்கள் என்பதும் நிச்சயமேயாம். வேதசாஸ்திரிகளுடைய சாதாரணமான படிப்பினையின்படி, அந்த ஆத்துமாக்கள் ஒரு மெய்யான அக்கினியால் அல்லது அக்கினிக்கொத்தவேதனையாற் பீடிக்கப்படுகின்றார்கள். உத்தரிப்புஸ்தலத்திற்குப்போகிற ஆத்துமாக்கள் தங்கள் சொந்தப் பிராயச்சித்தத்தாலாவது விசுவாசிகளுடைய செப தபங்களாலாவது திருச்சபையின் மன்றாட்டுக்களாலாவது தங்கள் பாவங்களுக்காக முழுதும் உத்தரிக்குந்தனையும் அங்கேயிருப்பார்கள் எனும் இது ஒன்று நமக்குத் தெரிவதன்றி, ஒவ்வொருவருடைய வேதனையும் நீடிக்குங்காலம் எவ்வளவென்பது தெரியாது. ஆயினும், அவர்கள் அங்கே எவ்வளவு காலமிருந்தாலும் தாங்கள் மோக்ஷத்திலே பிரவேசிக்கும் நாள் ஒன்று வருமென்று நினைக்குந்தோறும் ஆறுதலடைந்துகொண்டே இருப்பார்களென்பது நிச்சயமாம். உத்தரிப்புஸ்தலமானது ஒரு இடமோ அல்லது ஒரு அந்தஸ்தோ என்பதைப்பற்றித் திருச்சபை யாதொரு தீர்மானமும் பண்ணவில்லை. உத்தரிப்புஸ்தலத்திற்குப் போகவேண்டிய சில ஆத்துமாக்கள் அங்கே போகாமல் தேவ உத்தாரப்படி அதற்குப் புறம்பேயிருந்து உத்தரிக்கிறார்களென்றும், சிலகாலம் பூமியிலே ஆங்காங்கு திரிகிறார்களென்றும் அர்ச். தோமாஸ் என்னும் வித்தியாபாரகர் எண்ணுகிறார்.

261. (III) **உத்தரிப்புஸ்தலத்து ஆத்துமாக்களுக்கு உண்டாகும் ஆறுதல்.** உத்தரிப்புஸ்தலத்திலேயிருந்து கஸ்திப்படுகிற ஆத்துமாக்கள் திருச்சபையாரின் மன்றாட்டங்களினாலும், தவம் முதலான தர்மக் கிரியைகளினாலும் ஆறுதலடைந்து கொள்ளுகிறார்களென்பது நிச்சயம். இது ஒரு விசுவாசசத்தியமுமாம். ஏனெனில், திரெந்துநகரச் சங்கமானது உத்தரிப்புஸ்தலம் உண்டென்றும், அங்கேசிறைப்பட்ட ஆத்துமாக்கள் விசுவாசிகளுடைய பிரார்த்தனைகளாலும் விசேஷமாய்ச் சருவேசுரனுக்கு எப்போதும் உவப்பாயிருக்கின்றதாகிய பூசைப்பலியாலும் ஆறுதலடைந்து கொள்ளுகிறார்களென்றும் திட்டமாய்த் தீர்மானித்திருக்கின்றது.



நம்மால் இயன்றமட்டும் உத்தரிப்புஸ்தலத்து ஆத்துமாக்களுக்கு ஆறுதலுண்டாக்கவேண்டுவது நம் ஒவ்வொருவருக்குங் கடமையாம். இதற்கு அநேக பலத்த முகாந்திரங்களுண்டு. அவை: நீதியும் பிறர் சிநேகமும் நன்றியறிதலும் நமது சொந்த லாபமுமென்று சொல்லப்படும். நம்மாற் கெட்டுப்போனவர்கள் அங்கேயிருக்கக்கூடும். ஆதலால், நீதியினிமித்தமாக நாம் அவர்களுக்கு ஆறுதலுண்டாக்க வேண்டும். நம்முடைய ஞானச் சகோதரர் அங்கேயிருக்கிறார்கள். ஆதலால், பிறர்சிநேகத்தினிமித்தம் நாம் அவர்களுக்கு உதவிசெய்யவேண்டும். நம்முடைய பெற்றோர், சுற்றத்தார், சிநேகிதர், உபகாரிகள் முதலானவர்கள் அங்கேயிருக்கலாம். ஆதலால்; நன்றியறிதலினிமித்தம் நாம் அவர்களுக்கு ஆறுதல் புரிய வேண்டும். நம்மால் மீட்கப்படும் ஆத்துமாக்களெல்லாம் மோக்ஷத்திலேயிருந்து நமக்காகப் பிரார்த்தித்துக்கொள்ளுவார்கள். ஆதலால், நமது சொந்த லாபத்தினிமித்தமாக நாம் அவர்களுக்கு உதவிசெய்யவேண்டும். ஆத்துமாக்கள் உத்தரிப்புஸ்தலத்திலே இருக்குந்தனையும் தங்களுக்காகப் பேறுபெற்றுக்கொள்ளக்கூடாதவர்களாய் இருந்தாலும், அவர்கள் தங்களுக்கு ஆறுதல்புரிகிறவர்களுக்காக மன்றாடிக்கொள்ளக்கூடியவர்களென்று அநேக வேதசாஸ்திரிகள் நிச்சயிக்கிறார்கள். ஆதலால், நாம் அவர்களுக்கு ஆறுதல் வருவித்தால் அவர்களும் எங்களுக்காக மன்றாடுவார்கள். அன்றியும் நாம் மரித்தவர்களுக்காகச் செபம்பண்ணாமல் அசட்டையாயிருந்தால், நாம் இறந்தபின்பு ஒருவரும் நமக்காகப் பிரார்த்திக்காமல் இருக்கும்படி சருவேசுரன் விடக்கூடுமென்பதை ஒருபோதும் மறந்துபோகாமல் இருக்கக்கடவோம்.

262. உத்தரிப்புஸ்தலத்து ஆத்துமாக்களுக்கு ஆறுதலையும் மீட்சியையும் வருவிக்கக்கூடிய வழிவகைகள் எவையெனில், 1-வது, பூசைப்பலியாம். இது இரத்தஞ்சிந்தாத சிலுவைப்பலியே ஆனபடியால் உத்தம பிராயச்சித்தப்பலியாயும் சருவேசுரனுடைய நீதிக்கோபத்தைத் தணிக்கிறதற்கு மிகவும் ஏற்றதாயுமிருக்கின்றது. 2-வது, திருச்சபையின் செபங்களும் அது மரித்தவர்களுக்காகச்செய்யுந் திருச்சடங்குகளுமாம். 3-வது, நன்மை வாங்குதல், செபம், தபம், தானம், ஒறுத்தல் முதலான சுகிர்த நற்கிருத்தியங்களாம். 4-வது, திருச்சபையில் வழங்கும் ஞானப் பலன்களாம். திவ்விய பூசையானது தன்னை ஒப்புக்கொடுக்கிறவருடைய ஆத்துமப் பக்குவங்கள் இல்லாமலும் தன் சுய சக்தியால் மாத்திரம் உத்தரிப்புஸ்தலத்து ஆத்துமாக்களுக்குப் பிரயோச

ணங் கொடுக்கக்கூடியது. கவனத்தோடும் பத்தியோடும் திருச்சபையின் நாமத்தால் பண்ணப்படுஞ் செபங்களைப்பற்றியும் இவ்வாறே சொல்லத்தகும். ஆனால், விசுவாசிகளுடைய செபங்களுந் தர்மக் கிருத்தியங்களும் நீதிமுறையான பெறுபேறுள்ளவைகளாகவும் உத்தரிப்பு ஸ்தலத்து ஆத்துமாக்களுக்குப் பிரயோசனமுள்ளவைகளாகவும் வரவேண்டுமாகில், 1-வது, அவைகளைச் செய்கிறவன் இஷ்டப்பிரசாத அந்தஸ்திலே இருத்தல் வேண்டும். 2-வது, அவைகளை மரித்தவர்களுக்குச் செலுத்துகிற கருத்தோடு செய்து முடித்தல்வேண்டும். 3-வது, அவைகளின் பெறுபேறுகளை மரித்தவர்களுக்கு மன்றாட்டமுறையாக விட்டுவிடல்வேண்டும். சீவியர்களுடைய நற்கிரியைப் பேறுகளாலும் திவ்விய பூசைப் பலியாலும் உத்தரிப்புஸ்தலத்து ஆத்துமாக்கள் எவ்வளவு ஆறுதலை அடைந்துகொள்ளுகிறார்கள், இந்த நற்கிரியைப் பேறுகளைச் சருவேசுரன் எப்படி அவர்களுக்கு உபயோகிக்கிறார் என்னுமிவைகளைப் பற்றித் தீர்மானிக்கவோ, நம்மாற் கூடாது. ஏனெனில், இவைகளெல்லாம் அந்த ஆத்துமாக்கள் உத்தரிக்கவேண்டிய பாவங்களின் கனத்திற்கும், அவர்கள் தங்கள் சீவியகாலத்திலே தவஞ்செய்துமுடிக்கவேண்டுமென்று கொண்டிருந்த ஆசைக்கும், மரித்தவர்களுக்கு ஆறுதல்புரிவதிலே அவர்கள் கொண்டிருந்த பத்திவேகத்திற்கும், அவர்களுக்காக மன்றாடுகிறவர்களுடைய பக்குவங்களுக்குந் தக்கபடியாகவேயிருக்கலாம்.

உத்தரிப்புஸ்தலத்து ஆத்துமாக்கள் புதிதான பெறுபேறுகளை அடைந்துகொள்ளவும் தங்களுக்காக உத்தரித்துக்கொள்ளவும் கூடாதவர்களாயிருந்தாலும், விசுவாசம் நம்பிக்கை தேவசிநேகம் பொறுமையாகிய இவைகளின் முயற்சிகளைச் செய்யவும், தங்கள் செபங்களால் சில தேவ வரப்பிரசாதங்களைப்பெற்று வேதனையைக் குறைத்துக்கொள்ளவும் எல்லாச் சீவியர்களுக்கும் விசேஷமாய்த் தங்களுக்காகப் பிரார்த்திக்கிறவர்களுக்கும் வேண்டிய சகாயஞ் செய்யவுங் கூடியவர்கள். ஆதலால், உத்தரிப்புஸ்தலத்து ஆத்துமாக்களெல்லாம் விசுவாசிகளைப்போல அர்ச்சியசிஷ்டர்களுடைய ஐக்கியப்பிரயோசனத்திற்குச் சேர்ந்தவர்களாயிருக்கின்றதை முன்னிட்டு நாம் அவர்களைநோக்கி மன்றாடுவதற்கு யாதொரு தடையுமில்லையென்று அறிந்துகொள்ளக்கடவோம்.

## V. நரகம்

263. **(I) நரகத்தின் நிச்சயம்.** சாவான பாவமுள்ளவர்களாய்ச் சாகிறவர்கள் பிசாசுகளோடு வாதிக்கப்படுந்தலமே நரகமென்று சொல்லப்படும். பாவிகள் தங்கள் மரணத்தின்பின் நித்தியகாலமாக வேதனைப்படுகிற ஒரு இடமுண்டென்பது விசுவாச சத்தியமாம். வேதவாக்கியமும் பாரம்பரியமும் இதற்கு அத்தாட்சி. எவ்வாறெனில், நம்முடைய திவ்விய இரக்ஷகர் அர்ச். லூக்கா 16-ம் அதிகாரத்தில் கெட்ட ஐசுவரியவான் செத்து நரகத்திலே புதைக்கப்பட்டானென்றும், அர்ச். மத்தேயு 25-ம் அதிகாரத்தில்: பொதுத்தீர்வைநாளிலே குற்றவாளிகளாய்க் காணப்பட்ட பாவிகள், நித்திய ஆக்கினைக்குப் போவார்களென்றும் வசனித்திருக்கிறார். நரகத்தைப்பற்றிய போதகமானது கிறீஸ்தவ போதகத்தின் ஓர் அகத்தியமான பங்காம். திருச்சபையின் போதனை எல்லாம் நரகமுண்டென்பதை அடிப்படையாகக் கொள்ளுகின்றது. நல்லவர்களுக்குச் சம்பாவனையும் தீயவர்களுக்கு ஆக்கினையுங் கிடைக்குந்தலம் ஒன்று உண்டென்னும் விசுவாசமானது உலகாரம்பந்தொடுத்து உண்டாயிருந்ததென்பதற்குச் சந்தேகமில்லை. இம்மையிலே பலகாலும் நீதிமான்கள் விபத்தையும் பாவிகள் சம்பத்தையும் அனுபவித்துக்கொண்டுவர நேரிடுவதினால் மறுமையிலே நீதிபராகிய சருவேசுரனுடைய ஆளுகையிலே பாவிகளுக்கு ஆக்கினையும் புண்ணியவான்களுக்குச் சம்பாவனையும் கிடைக்குந் தலங்களிருக்கவேண்டுமென்றே சகல சாதியாரும் விசுவசித்துக்கொண்டுவந்தார்கள். மறுமையிலே தீயோருக்கு ஆக்கினை கிடைக்குமிடமோ வேதநூலின்படி நரகமேயன்றி வேறொன்றல்ல.

சாவானபாவ அந்தஸ்திலே மரிக்கிறவர்களெல்லாரும், ஒரு சாவான பாவத்தோடு மாத்திரம் மரித்தாலும், உடனே நரகத்திற்றானே தள்ளுண்டுபோகிறார்கள் என்றும் விசுவாசம் போதிக்கின்றது. ஏனெனில், ஆத்துமத்துக்கு ஞான மரணத்தை வருவிக்கவும், அதைச் சருவேசுரனுக்குப் பகையாளியாக்கவும், நரகத்துக்கு ஆளாக்கவும் ஒரு சாவானபாவம்மாத்திரம் போதும்.

264. **(II) நரகாக்கினைகள்.** நரகத்திலுள்ள ஆக்கினைகள் இழந்தமையின் ஆக்கினையென்றும், இந்திரியத்தின் ஆக்கினையென்றும் இருவகைப்படும். இழந்தமையினாக்கினையாவது, சருவேசுரனை முகமுகமாய்த் தரிசிக்கவும் அவரை அனுபவிக்கவுங் கூடாதிருப்பதினால் விளைவதாம். இதுவே சபிக்கப்பட்டவனுக்குக் கிடைக்கும் முதலாமாக்கினையெனப்படும். எவ்வாறெனில், அர்ச். மத்தேயு 22-ம் அதிகாரத்திலே எழுதப்பட்டிருக்கிறபடி சருவ நீதிபராகிய யேசுநாதர் பாவியானவனை நோக்கிச் சபிக்கப்பட்டவனே போ, என்னைவிட்டகன்றுபோவென்று வசனிப்பார். இந்தச் சாபம் எவ்வளவோ பயங்கரமானது. சருவே

சுரனை ஒருபோதுங் காணாமலிருக்கிறது எத்தனை பெரிய கேடென்பது, சரீரசம்பந்தத்தைவிட்டு நீங்கின ஆத்துமத்திற்கே பூரணமாய்த் தெரியும். சருவேசுரனே தனக்கு ஆதியும் நடுவும் அந்தமுமாயிருக்கிறாரென்றும், அவரே தனக்கு மகா பெரிய ஏக நன்மையாயிருக்கிறாரென்றும், அவரே சகல சாங்கோபாங்கசாகரமுமாய் எல்லாச் சுகபாக்கிய ஊற்றுமாயிருக்கிறாரென்றும் ஆத்துமமானது நன்றாய்த் தெளிந்து கொள்ளும். இந்த மேலான நன்மையை அடைந்துகொள்ளத் தன்னாற்கூடியதாயிருந்தவிடத்துத் தன் சொந்தக் குற்றத்தாலேயே தான் அதையிழந்துவிட்டதென்றும், இனி ஒருகாலும் அது தனக்குக் கிடைக்கப்போகிறதில்லையென்றும் கண்டு மனோவாக்குக்கெட்டாத அவநம்பிக்கைக்கிரையாகி அமர்கொண்டு வருந்தும்.

இந்திரியத்தின் ஆக்கினையாவது: பாவிகளை உக்கிரவேகத்தோடு சுடும் அக்கினியாம். திருச்சபையானது நரகநெருப்பு உண்டென்பதையும் அது எத்தன்மையானதென்பதையுங் குறித்து விசுவாச சத்தியமாக யாதொன்றுந் தீர்மானிக்கவில்லை. ஆயினும் பாவிகளை அழித்துவிடாமல் அவர்களை அகோரமாய் வாதிக்கிற ஒரு மெய்யான நெருப்பு நரகத்திலே உண்டென்பது நிச்சயமாம். நரகமானது, அக்கினியுங் கந்தகமும் நிறைந்த ஒரு தடாகம்போலவும் தேவகோபத்தால் மூண்டெரியும் ஒரு சூளை போலவும் இருக்கிறதாக வேதவாக்கியத்திலே காண்பித்திருக்கின்றது. சபிக்கப்பட்டவர்களே, நித்திய நரக அக்கினியிற் போய்விழுங்களென்று யேசுநாதர் பாவிகளுக்குத் திருவுளம்பற்றுவார் என்றும், நரகத்திலே விழுந்த கெட்ட ஐசுவரியவான் நானிந்தநெருப்பினாற் குரூரமாய் வாதிக்கப்படுகிறேனென்று கூக்குரலிட்டானென்றும் சுவிசேஷத்திற் கூறியிருக்கக்காண்கிறோம். இந்த வசனங்களைக் கொண்டு நரகத்திலேயுள்ள மிகக்கொடிய வாதைகளுக்குள்ளே மெய்யான அக்கினியும் ஒன்று என்று தீர்மானித்துக்கொள்ள வேண்டும். இந்த நெருப்புக்கு முன்னே உலகநெருப்பானது நெருப்பின் நிழலும் அதின் தோற்றமும்போலிருக்கின்றதென்று அர்ச். அகுஸ்தீனார் எழுதிவைத்தார்.

இந்த வேதனைகளோடுகூடக் கொடிய மனச்சாட்சிக் கண்டனங்களும் அவநம்பிக்கையும் நரகவாசியை அதிகமாய் வாதிக்கும். அவன் தனக்கு இனியொருபோதுங் கொஞ்சமாவது ஆறுதல் கிடையாதென்று பார்த்து இடைவிடாமற் கஸ்திப்பட்டுக் கொண்டிருப்பான். துன்பக்கடலில் தானே தன்னை மனோச்சாயமாய் விழுத்திக்கொண்டபின், தனக்கு நேரிட்ட கேட்டுக்கு இனி மருந்



துமில்லை ஆறுதலுமில்லை என்று அவன் நினைந்து நினைந்து வாடுவான். இசையாஸ் தீர்க்கதரிசியானவரும் அவருக்குப்பின் நம்முடைய இரட்சகராகிய யேசுநாதரும் சொன்ன சாகாத புழுவும் அவியாத அக்கினியும் நரகத்திலே பாவியானவன்படும் பற்பல்வகையான ஆக்கினைகளையே குறித்துக் காண்பிக்கின்றன.

நரகவேதனைகள் எல்லாப்பாவிகளுக்கும் ஒரேயளவாயிராது. அவைகள் கோணாத நீதிபரனாற் செய்யப்படும் ஆக்கினை ஆகையால் ஒவ்வொரு பாவிக்கும் அவனவன் கட்டிக்கொண்ட பாவங்களின் தொகைக்குந் தோஷத்திற்கும், அவனவன் பெற்றுக்கொண்ட புத்தித் தெளிவுக்கும் வரப்பிரசாதத்திற்கும், அவனவன் சருவேசுரனுக்கு அமையாமல் விட்ட துஷ்டத்தனத்திற்குந் தக்கபடியாகவேயிருக்கும்.

**265. (III) நரகாக்கினைகளின் நித்தியம்.** நரகாக்கினைகளுக்கு ஒருபோதும் முடிவில்லை. இது சருவேசுரனால் வெளிப்படுத்தவும் திருச்சபையாற் படிப்பிக்கவும் சாதாரண விசுவாசத்தாற் கைக்கொள்ளவும்பட்டதான ஒரு கத்தோலிக்கு விசுவாச சத்தியமாம். இதற்கு அத்தாட்சியாகப் பாவிகளை அரிக்கிற புழு ஒருகாலுஞ் சாகாது, அவர்களைச்சுடுகிற நெருப்பு ஒருகாலும் நூராது என்று சருவேசுரன் இசையாஸ் தீர்க்கதரிசனம் 6–ம் அதிகாரத்திலும், சபிக்கப்பட்டவர்களே நித்திய நரக அக்கினியில் விழுங்கள் என்றும், அப்போது பாவிகள் நித்திய ஆக்கினைக்குப் போவார்களென்றும் யேசுநாதர் அர்ச். மத்தேயு சுவிசேஷம் 25-ம் அதிகாரத்திலும் வசனித்திருக்கிறார்கள். ஆதலால் நரகம் நித்தியமானதேயாம். இதைச் சருவேசுரனுடைய சத்திய வாக்கே நமக்குப் படிப்பிக்கின்றது. வானமும் பூமியுங் கடந்து போகும், சருவேசுரனுடைய வாக்கோ அழியாது; ஒருபோதும் பொய்யாது. இந்த வாக்கின் உண்மையானது நித்தியகாலமாய் நிலைத்திருக்கும்.

நரகம் நித்தியமானது. திருச்சபை இதையொரு விசுவாச சத்தியமாகப் போதித்து சபைப்பிதாக்களாலும் வித்தியாபாரகர்களாலும் தன் சொந்தத் தீர்மானங்களாலும் எப்போதும் படிப்பித்துக்கொண்டேவந்தது. திருச்சபையின் விசுவாசமும் போதகமும் மற்றக்கத்தோலிக்கு விசுவாச உண்மைகள்மட்டில் மாறுபடாதவைகளாயிருப்பதுபோலவே இதிலேயும் ஒருகாலும் மாறுபடாதவைகளாம்.

நரகம் நித்தியமானது. இது சகல கிறீஸ்தவர்களிடத்திலும் இப்போதும் எப்போதுமுள்ள விசுவாசமாம். இது திருச்சபையை

விட்டுப்பிரிந்த நானு பேதமான சகல மதஸ்தரிடத்திலும் முன்னிருந்ததும இப்போதிருக்கிறதுமான விசுவாசமாம். நரகம் நித்தியமானதென்னும் விசுவாசமானது யூதரிடத்திலுந் தீர்க்கதரிசிகளிடத்திலும் பிதாப்பிதாக்களிடத்திலும் மோசேசிடத்திலும் யாக்கோபுவிடத்திலும் யாக்கோபுவின் பிள்ளைகளிடத்திலும் ஆபிரகாமிடத்திலும் நோவாவிடத்திலும் இதை முதன்முதல் அறிவிக்கப்பெற்றவராகிய ஆதாமிடத்திலும் எப்போதுமிருந்தது. இது எல்லாச் சாதியாரிடத்திலும் ஒரு சிறிது சிறிது மாற்றங்களோடு உண்டு. சாவுக்குப்பின் நல்லவர்களுக்கு அழியாத சம்பாவனையும் தீயவர்களுக்கு அழியாத ஆக்கினையும் கிடைக்குமென்னும் விசுவாசத்திற்கு வேண்டிய அத்தாட்சிகளை எங்கே பார்த்தாலுங் கண்டுகொள்ளலாம். கிரேக்கர், உரோமர், எகிப்தியர், கல்தேயர், பேர்சியர், இந்தியர், ஆபிரிக்கர் அமெரிக்கராகிய எல்லாப் பழைய சாதியாரும் நரகம் நித்தியமானதென்றே விசுவசித்துக்கொண்டு வந்தார்கள். ஆகவே நரகம் நித்தியமானதென்னும் விசுவாசமானது உலகாரம்பந் தொடுத்துள்ள ஆதி பாரம்பரியங்களிலடங்கியதேயாம்.

266. ஆதலால், 1-வது கத்தோலிக்கு விசுவாசிகளுள் எவனுவது நரகம் நித்தியமானதென்பதை மறுக்கக்கூடாதென்றும், மறுத்தால் விசுவாசத்திற்கு விரோதமான பெரும் பாவத்தைக் கட்டிக்கொண்டு பயங்கரமான நரகாக்கினைக்கு ஏதுவாயிருப்பானென்றும், 2-வது, தற்போது சாவானபாவ அந்தஸ்திலிருக்கிற எவனும் நரக பாதாளத்தின் விளிம்பிலிருக்கிறவனுமென்றும், மரணமானது அவனை ஒரு கணப்பொழுதில் மீளாதவிதமாய் உள்ளேதள்ளிவிடக் கூடுமென்றும், 3-வது நாம் உண்மையுங் கடைப்பிடியுமான தவத்தை அனுசரித்துக் கிறீஸ்தவர்களுக்குரிய விதமாய்ச் சீவித்துக்கொண்டுவந்தால் நரகத்திற்குத் தப்பிக் கொள்ளக்கூடுமென்றும், 4-வது, சாவானபாவத்தோடு சாகிற எவனும் தப்பாமல் நரகத்திற்றுனே விழுவானென்றுந் தீர்மானித்துக் கொண்டு, நம்முடைய ஆத்துமத்தின் சீரென்ன, நாம் எப்படிச் சீவித்துக்கொண்டு வருகிறோம், எப்படி மரிப்போமென்று ஆராய்ந்து பார்க்கக்கடவோம்.

# 16-ம் அதிகாரம்

## பொது உத்தானமும், பொதுத்தீர்வையும்

267. உலகத்திற்கு ஒரு தொடக்கம் இருந்ததுபோல அதற்கு ஒரு முடிவும் இருக்கும். உலகம் எப்போது முடியுமோ நமக்குத் தெரியாது; சருவேசுரனுக்கு மாத்திரமே தெரியும். யேசுநாதர் உலகாந்தத்தைக்குறித்துப் பேசின சமயத்தில் அது தேவதூதர்களுக்கு முதலாய்த் தெரியாதென்று திருவுளம்பற்றினார். ஆயினும், வேதபாரகர்களும் வேதநூல் வியாக்கியானிகளும் தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்ட அல்லது வேதவாக்கியத்தில் அடங்கிய அநேக அயற்சார்புகளைச் சீர்தூக்கிப்பார்த்து, அவைகளே உலகமுடிவு சமீபமாயிற்றென்பதைக் காட்டும் அடையாளங்களாமென்று தீர்மானித்திருக்கிறார்கள். அந்த அயற்சார்புகள் வருமாறு: 1-வது அந்தக்காலத்திலே அகோர யுத்தங்களும் கொள்ளைநோய்களும் பஞ்சங்களும் பூமியதிர்ச்சிகளும் உண்டாகும். உலகாரம்பமுதல் முன்னொருபோதுமில்லாத பெரும் உபத்திரியங்கள் உண்டாயிருக்கும். கள்ளத் தீர்க்கதரிசிகளுங் கள்ளக் கிறீஸ்துக்களும் எழுந்து பெரும் ஆச்சரியங்களைச் செய்து, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை முதலாய்க் கெடுக்கத் தேடுவார்கள். மனிதரோ சொல்லக்கூடாத கிலேசத்திற்குள்ளாயிருப்பார்கள். பத்தியோ மிகுதியுங் குறைந்துபோகும். விசுவாசமானது, அது பூமியிலே இன்னும் உண்டோ இல்லையோவென்று சொல்லக்கூடியவிதமாய்த் தணிந்துபோகும். 2-வது, அந்தக் காலத்திலே சுவிசேஷமானது பூமியிலேயுள்ள சகலசாதியாருக்கும் பிரசங்கிக்கப்பட்டிருக்கும். 3-வது, அக்காலத்திலே கொடும்பாவியான அந்திக்கிறீஸ்தென்பவன் பிறந்திருப்பான். அவன் மூர்க்காவேசங்கொண்டு யேசுநாதருக்கும் அவருடைய திருச்சபைக்கும் விரோதமாயெழும்பிச் சருவேசுரனுக்கே உரிய சங்கை வெகுமானங்களைத் தனக்கு அபகரித்துக் கொள்ளுவான். பொய் அற்புதங்களாற் சனங்களை மயக்குவான். தன்னை ஆராதியாமலுந் தனக்குச் செவிகொடாமலும் இருக்கிறவர்களுக்கு விரோதமாய் அகோர கலகங்களை எழுப்புவான். அவனுடைய பலம் பொருந்திய செங்கோலுக்கு அஞ்சி, சிலரைத் தவிர மற்றெல்லாரும் தங்கள் விசுவாசத்தை மறுதலித்துவிடுவார்கள். 4-வது, அக்காலத்திலே முன் சீவனோடு ஆகாயத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தவர்களாகிய ஏனோக்கு என்னும் அதிபிதாவும் எலி

யாஸ் என்னுந் தீர்க்கதரிசியும் பூமியிலேதோன்றி, அந்திக்கிறீஸ்துவின் வஞ்சனைகளைக் கெடுக்கவும் விசுவாசிகளைத் திடப்படுத்தவும் வேதகலாபனையில் இவர்களைத் தேற்றவும் பிரயாசப்படுவார்கள். அவர்களுடைய பிரசங்கங்களைக்கேட்டு யூதர்களெல்லாரும் மனந்திரும்பிச் சத்தியவேதத்திலுட்படுவார்கள். இங்கே காண்பித்த அயற்சார்புகளெல்லாம் நம்முடைய திவ்விய இரக்ஷகராலும் அவருடைய அப்போஸ்தலர்களாலுந் தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்டு வேத ஆகமங்களிலே தெளிவாய் எழுதப்பட்ட சம்பவங்களாம். ஆனால் இவைகள் எப்போது நிகழுமோ என்றது நமக்குத் தெரியாது. இவை ஒருபுறம் இருக்க உலகமுடிவிலே 1-வது, மரித்தவர்கள் எல்லாரும் எழுந்திருப்பார்களென்பதும், 2-வது. யேசுநாதர் சகல மனிதருக்கும் நடுத்தீர்க்க மகிமைப் பிரதாபத்தோடு எழுந்தருளி வருவாரென்பதும் விசுவாசமந்திரத்திற்குச் சேர்ந்த விஷயங்களாதலால் அவைகளை இவ்வதிகாரத்திலே விளக்கிக் காண்பிப்போம்.

## I. சாதாரண மாமிச உத்தானம்

268. (1) **மரித்தவர்கள் உயிர்த்தெழும்புவார்களென்பது நிச்சயமாம்.** உலகமுடிவானது சமீபித்தவுடனே சிருட்டிகளெல்லாம் தங்கள் சங்காரகாலம் கிட்டிவிட்டதை மட்டிட்டுக்கொண்டாற்போலத் தம்முட் பேதப்பட்டு மயங்கிநிற்க, சகல சாதியாரும் அச்சமும் நடுக்கமுங்கொண்டு வாடிப்போவார்கள். சமுத்திரங்கள் பிரசண்டமாருதங்களாற் கொந்தளித்து முழங்கி அதிரும். சூரியன் மங்கிப்போகும். சந்திரன் ஒளிகொடாது. நட்சத்திரங்களெல்லாம் ஆகாயத்தினின்று உதிர்ந்து பூமியிலே விழும். வானத்தின் வல்லபங்களெல்லாம் அசைக்கப்படும். அப்போது அனைத்தையுஞ் சங்கரிக்கும் உகாந்த அக்கினியானது, பூமிபடங்களும் பரந்து மனிதரையும் மிருகங்களையும் பூமியையும் அதிலடங்கிய யாவற்றையும் நொடிப்பொழுதில் விழுங்கிவிடும். இந்தச் சருவசங்காரத்தின்பின் சருவேசுரனுடைய தூதன் எக்காளமூதி மரித்தவர்களே எழுந்து தீர்வைக்கு வாருங்களென்று பயங்கர சத்தத்தோடு கூப்பிடுவார். அக்ஷணமே மரித்தவர்களெல்லாரும் உயிர்த்து தேவ நீதிபதிமுன்பாக வந்துநிற்பார்கள். விசுவாசமானது நமக்குப் போதிக்கிறபடி, மானிடதேகத்தின் உறுப்புகள் உலகத்தின் எத்திசையிலே சிதறுண்டு அழிந்துபோயிருந்தாலும் அவைகளெல்லாம் மாமிச உத்தானநாளிலே தேவ வல்லமையால் அந்தந்தச் சரீரங்களாகக்கூடி விளங்கும். அப்போது மரணத்தால் அவைகளை விட்டுப் பிரிந்துபோயிருந்த ஆத்துமாக்கள் எல்லாம் முன்போலவே தங்கள் சரீரங்களோடு மீளவும் சேர்ந்துகொள்ளும்.



269. சாதாரண மாமிச உத்தானம் உண்டென்பதற்கு, 1-வது, வேதவாக்கியம் அத்தாட்சியாம். எவ்வாறெனில்: திவ்விய இரக்ஷகராகிய யேசுநாதர் மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும், பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக்கேட்கும் நாள் வரும், அப்போது நன்மைசெய்தவர்கள் சீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்களென்று அர்ச். அருளப்பர் சுவிசேஷத்து 5-ம் அதிகாரத்தில் வசனித்திருக்கிறார். 2-வது, விசுவாசமந்திரம் அத்தாட்சியாம். எவ்வாறெனில்: மாமிச உத்தானத்தை விசுவசிக்கிறேனென்று அப்போஸ்தலர்களுடைய விசுவாசமந்திரத்திலும், மரித்தோருடைய உத்தானத்தை விசுவசிக்கிறேனென்று கொன்ஸ்தாந்திநோப்பொலிச்சங்க நிசேயா விசுவாசப் பிரகரணத்திலுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. விசுவாசமந்திரத்திலே கூறப்பட்டிருக்கும் விஷயங்களெல்லாம் விசுவாச சத்தியங்களாம். அவைகளை விசுவசிக்க எல்லாக்கிறீஸ்தவர்களுக்குங் கடமையுண்டு. விசுவசியாதவனோ நரகத்துக்கு ஆளாயிருப்பான். 3-வது, சாதாரண அங்கீகாரம் அத்தாட்சியாம். எவ்வாறெனில் 1-வது, விக்கிரகாராதனைக்காரர் மத்தியிலே வாசம்பண்ணிக்கொண்டிருந்தவராகிய யோபென்னும் மகாத்துமாவானவர் தமக்கு நேரிட்ட துன்பதுரிதங்களில் மாமிச உத்தானத்தை நினைத்து ஆறுதல் அடைந்துகொண்டிருந்தார். (யோபு ஆகமத்தைக் காண்க.) 2-வது, அதிபிதாக்களெல்லாரும் மாமிச உத்தானம் உண்டென்று விசுவசித்தார்கள். ஆதலால், மாமிச உத்தானத்தைப்பற்றிய விசுவாசமானது ஆதிவெளிப்பாட்டின் காலமுதல் உண்டாயிருந்ததென்று தெளிந்துகொள்ளவேண்டும். 3-வது, யூதரெல்லாரும் மாமிச உத்தானம் உண்டென்று விசுவசித்தார்கள். 4-வது, மாமிச உத்தானத்தைப்பற்றிய விசுவாசமானது, மிகாமலுங் குறையாமலுஞ் சத்திய திருச்சபையில் எப்போதும் வழங்கிக்கொண்டுவந்தது. எல்லாக் காலங்களிலும் வேதசாஸ்திரிகளும் வித்தியாபாரகர்களும் மாமிச உத்தானத்தை மறுதலித்த பதிதர்களைப் பாரம்பரியத்தையும் வேதவாக்கியத்தையும் ஆதாரமாய்க்கொண்டு கண்டித்து வந்தார்கள்.

மாமிச உத்தானமானது சருவேசுரனுடைய வரம்பில்லா வல்லமையினால் நடக்கும். சரீரங்களைச் சிருட்டித்த தேவ வல்லமையே மீளவும் அவைகளை உயிர்ப்பிக்கும். தேவவல்லமையால் ஆகாதது ஒன்றுமில்லை. ஒன்றுமில்லாதிருந்தகாலத்திலே தம்முடைய ஓரேவாக்கால் சருவலோகத்தையும் சிருட்டித்தவ

ரும் கொஞ்சமண்ணால் ஆதிமனிதனின் சரீரத்தை உருவாக்கினவருமாகிய கடவுளானவருக்கு மரணத்தால் உருவங்குலைந்து உறுப்புகளுமழிந்து தூசியாய்க்கிடக்குந் தேகங்களை உயிர்த்தெழும்பப் பண்ணுவதுஅரிதோ ?

சரீரங்களெல்லாம் இம்மையிலே தங்கள் தங்கள் ஆத்துமங்களின் பாவ புண்ணியங்களுக்குப் பங்காளிகளாயிருந்ததுபோல மறுமையிலேயும் அவ்வாத்துமங்களுக்குக் கிடைக்குஞ் சம்பாவனை ஆக்கினைகளுக்கும் பங்காளிகளாயிருக்கும்படியாகச் சருவேசுரன் அவைகளை எழுந்திருக்கச்செய்வார்.

270. **(II) உத்தானமான சரீரங்களின் குணங்கள்.** மரித்தோர் எல்லாம் உலகமுடிவிலே உயிர்த்தெழுந்திருப்பார்கள். ஆயினும் வெவ்வேறான இலக்ஷணங்களோடும் வெவ்வேறான கதிக்குரியவர்களாகவும் உத்தானமாவார்கள். ஒருபாலார் மோக்ஷ சம்பாவனைக்குரியவர்களாய் மகிமைப் பிரதாபமான தேகங்களோடு எழுந்திருப்பார்கள். மறுபாலாரோ நரகாக்கினைக்குரியவர்களாய் அவலக்ஷணமான தேகங்களோடு எழுந்திருப்பார்கள். அர்ச். சின்னப்பர் எழுதியிருக்கிறபடி மோக்ஷவாசிகளுடைய தேகங்களுக்கு மகிமைப்பிரதாபமுள்ள நாலு ஞான இலக்ஷணங்கள் உண்டாயிருக்கும். அவை எவையெனில், 1-வது, சாவும் எவ்வித பிணிகளும் நீங்கியிருத்தல் ஆகிய அக்ஷயமும், 2-வது, சூரியனைப்போல விளங்குதலாகிய பிரகாசமும், 3-வது, மனோவேகத்தைப்போல எல்லாத் தூரத்தையுந் தாண்டிச்செல்லுதலாகிய இலகுவும், 4-வது, எவ்வித கண்டிப்பான பொருட்களையும் ஊடுருவிச் செல்லுதலாகிய சூழ்ச்சமுமாம். இந்தச் சூழ்ச்சமென்கிற குணத்தைக்கொண்டே நம்முடைய திவ்விய இரக்ஷகர் கதவுகள் பூட்டியிருக்க அவைகளுக்கூடாகத் தம்முடைய சீஷர்களிடத்திலே பிரவேசித்தார்.

நரகவாசிகளுடைய சரீரங்களும் அழியாமையுள்ளவைகளாய் இருக்குமென்பது மெய். ஆயினும், அவைகள் துன்பம் நீங்கியிருக்கமாட்டா. இடைவிடாத நரகவேதனைகளையெல்லாம் அனுபவித்துக் கொண்டிருக்கும்படியாகவே அவைகள் எழுந்திருக்கும், அவைகளுடைய தோற்றம் இருளும் அருவருப்புமாயிருக்கும். அவைகளுடைய கை கால்கள் பாரமான சங்கிலிகளாற் கட்டப்பட்டாற்போலிருக்கும். இருண்ட சிறைச்சாலையே பாவிகளுக்கு நித்திய காலமும் வீடாம்.



## II. பொதுத்தீர்வை

271. **(II) பொதுத்தீர்வையின் நிச்சயம்.** மரித்தோர் எல்லாரும் உயிர்த்து எழுந்த உடனே யேசுநாதசுவாமி சகல மனிதருக்கும் அவரவர்செய்த பாவபுண்ணியங்களுக்கு ஏற்றவிதமாய் நடுத்தீர்க்கும்படி மோக்ஷத்திலேயிருந்து மிகுந்த மகிமைப் பிரதாபத்தோடும் வல்லமையோடும் பிரத்தியக்ஷமாய் எழுந்தருளி வருவார். இந்தத் தீர்வை பொதுத்தீர்வையென்று சொல்லப்படும். ஏனெனில், இது ஒவ்வொருவருஞ் செத்தவுடனே அவரவர்க்குத் தனித்தனியே அந்தரங்கமாய்ச் செய்யப்படுந் தீர்வையைப்போலிராமல் சகல மனிதருக்கும் முன்பாகப் பிரசித்தமாய்ச் செய்யப்படுவதாகும். இந்தத் தீர்வைக்குக் கடைசித்தீர்வையென்றும் பெயர். ஏனெனில், இதன்பின் வேறு தீர்வை இராது. வேத நூலானது பொதுத்தீர்வையை 1-வது, **கடைசிநாள்** என்று கூறும். ஏனெனில், பொதுத்தீர்வைநாள் உலகத்தின் முடிவான நாளாயிருக்கும். 2-வது, **கர்த்தருடைய நாள்** என்று கூறும். ஏனெனில், பொதுத்தீர்வைநாளிலே கர்த்தராகிய சருவேசுரன் தமது அளவில்லாத வல்லமை மகிமைகளை எல்லாமனிதருக்கும் விளங்கச்செய்வார். தம்முடைய சத்துருக்களுடைய ஆணவத்தைக் கெடுத்துவிடுவார். மிகக் கொடிய துஷ்டரும் அவிசுவாசிகள்முதலாக எல்லா நரசென்மங்களும் தமது வல்லபத்தையும் சருவ அதிகாரத்தையுங் கவிழ்ந்தமுகத்தோடு ஒத்துக்கொள்ளும்படி செய்வார்.

272. அர்ச். மத்தேயு தமது சுவிசேஷத்திலே கூறியிருக்கிறபடி : பொதுத்தீர்வைநாளிலே மனுஷகுமாரனுடைய அடையாளமாகிய திருச் சிலுவை வானத்திலே காணப்படும். அப்பொழுது தேவசுதன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாருங் கண்டு புலம்புவார்கள். அவர் வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே தமது தூதர்களை அனுப்புவார். அவர்கள் அவராலே தெரிந்துகொள்ளப்பட்டவர்களை பூமியின் ஒரு முனைமுதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலுதிசைகளிலுமிருந்து கூட்டிச்சேர்ப்பார்கள். மனிதகுமாரன் தமது மகிமைப்பிரதாபம் பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட எழுந்தருளி வந்து தமது தேசோமயமான சிங்காசனத்தின்மேல வீற்றிருப்பார். அப்போது சகல சனங்களும் அவருக்குமுன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர்

பிரித்து (நீதிமான்களாகிய) செம்மறியாடுகளைத் தமது வலதுபக்கத்திலும் (பாவிகளாகிய) வெள்ளாடுகளைத் தமது இடதுபக்கத்திலும் நிறுத்துவார். (அர்ச். மத்தேயு 24-ம் 25-ம் அதிகாரங்கள்) அப்போது அவரவருடைய மனச்சாட்சிகள் சகலருக்கும் வெளியரங்கமாக்கப்படும். உடனே தேவநீதிபதியாகிய யேசுநாதர் ஒவ்வொருவருடைய பாவபுண்ணியங்களையும் ஒவ்வொருவருடைய அதி அந்தரங்கமான சிந்தனை ஆசை கருத்துகளையும் தமது சந்நிதானத்திலே கூடிநிற்குஞ் சகல மனிதரும் காணச்செய்வார். எல்லாவற்றையுங் கண்டுங் கேட்டுமிருந்தவராகிய சருவேசுரன் எல்லாவற்றையும் ஒரே நேரத்திற்றானே வெளியாய்க் காண்பித்தருளுவார். அவர் தமது தெய்வீக ஒளியைச் சூரியனுடைய பிரகாசம்போல மனச்சாட்சிகளாகிய அந்தரங்கங்களிலே பிரகாசிக்கச் செய்வார். உடனே அந்த ஞான ஒளியாகிய பிரமாண்டமான கண்ணாடியிலே அவனவன் தன் தன் சீவியத்தோடு மற்றெல்லாருடைய சீவியங்களையுந் தெளிவாய்க் கண்டுகொள்ளுவான். இந்த நடுத்தீர்ப்பைக்குறித்தே அவ்விடத்தினின்று (மோக்ஷத்தினின்று) சீவியர்களுக்கும் மரித்தவர்களுக்கும் நடுத்தீர்க்கவருவாரென்று விசுவாசமந்திரத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது.

273. (II) **பொதுத்தீர்வையின் முடிவு.** தேவ நீதிபதியாகிய யேசுநாதர் அவனவன்செய்த பாவபுண்ணியங்களையெல்லாம் சகலருக்கு முன்பாக அறியப்பண்ணினவுடனே கடைசியானதும் மீளாததுமான தீர்வையைக் கூறுவார். எவ்வாறெனில்: அவர் தமது வலதுபக்கத்திலே நிற்பவர்களைநோக்கி: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகமுண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணியிருக்கிற இராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்களென்றும், தமது இடதுபக்கத்திலே நிற்பவர்களைப்பார்த்து: சபிக்கப்பட்டவர்களே என்னைவிட்டுப் பிசாசுக்காகவும் அதின் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணியிருக்கிற நித்திய அக்கினியிலே விழுங்களென்றுஞ் சொல்லுவார். அப்போது இவர்கள் நித்திய ஆக்கினைக்கும் நீதிமான்கள் நித்திய சம்பாவனைக்கும் போவார்கள். (அர்ச். மத். 25-ம் அதி.) அதுமுதல் மோக்ஷமும் நரகமும் மாத்திரம் இருக்கும். புண்ணியவான்கள் ஆத்தும சரீரத்தோடு மோக்ஷத்திலேயும், பாவிகள் ஆத்தும சரீரத்தோடு நரகத்திலேயும் இருப்பார்கள். உத்தரிப்பு ஸ்தலமோ இராது. ஏனெனில், உலகமுடிவிலே அங்கே இருக்கக்கூடிய ஆத்துமங்களெல்லாம் சடுதியாய்ப் பரிசுத்தமாக்கப்பட்டு மோக்ஷவாசிகளோடு சேர்ந்திருப்பார்கள்.



எல்லாம் இவ்வாறே முடியும். பிரசண்டமாருதங்களாற் கலங்கித் திரையெறிந்து முழங்கி அதிரும் பெருஞ் சமுத்திரம் போல, தான் உண்டான காலமுதல் இடைவிடாத கொந்தளிப்போடு சீவித்துக்கொண்டுவந்த உலகத்தின் முடிவு இதுவேயாம்.

இப்பிரபஞ்சத்திற்கு நேரிடும் பயங்கரமான சருவசங்காரமும் அதையடுத்துவரும் நடுத்தீர்ப்பும் குன்றாத விசுவாச சத்தியங்களேயாம். இவைகள் தேவகோபத்திற்கு ஆளாகி நரக நெருப்பிலே தள்ளுண்டுபோகவிருக்கும் பாவியானவனுக்கு எவ்வளவோ பெரிய அச்ச நடுக்கத்தையும், நம்பிக்கையுள்ள நல்ல ஊழியனே உன் எசமானின் சந்தோஷத்திலே பிரவேசிப்பாயாக (அர்ச். மத். 25-ம் அதி.) என்னும் அமிர்த வசனத்தைக் கேட்கவிருக்கும் நீதிமானுக்கு எவ்வளவோ பெரிய ஆறுதலையும் உண்டாக்கும் சத்தியங்களாம். ஆதலால், நீதிமானுக்குக் கிடைக்கும் பாக்கியத்தை நாம் நிச்சயமாய்ப் பெற்றுக்கொள்ள விரும்பினால், கடைசிநாளை நினைத்து நினைத்து அச்ச நடுக்கத்தோடு சீவித்துக்கொண்டுவரக் கடவோம்.

# 17-ம் அதிகாரம்

## கிறீஸ்தவனின் அடையாளங்களின் பேரில்

கிறீஸ்தவர்களை அவிசுவாசிகளினின்றும் பிரித்துக் காண்பிக்கும் அடையாளங்கள் இரண்டு. அவை 1-வது, அப்போஸ்தலர்களுடைய விசுவாசமந்திரமும் 2-வது, சிலுவையடையாளமும் என்று சொல்லப்படும் (சிலுவையடையாளத்தைக் குறித்து 4-ம் பாகத்திலே பேசுவோம்.)

### அப்போஸ்தலர்களின் விசுவாசமந்திரம்

274. விசுவாசமந்திரமாவது: நாம் விசுவசிக்கவேண்டிய பிரதான சத்தியங்களின் சங்க்ஷேபமாம். திருச்சபையிலே வழங்கிக்கொண்டுவரும் விசுவாசமந்திரங்கள் மூன்று. அவை வருமாறு: 1-வது, அப்போஸ்தலரின் விசுவாசமந்திரம். அப்போஸ்தலர்கள் தாங்கள் உலகமடங்கலும் சுவிசேஷத்தைப் போதிக்க ஒருவரைவிட்டொருவர் பிரிந்துபோகுமுன் இந்த விசுவாச மந்திரத்தை உண்டாக்கிவைத்தார்கள். எல்லா வேதபோதகரிடத்திலும் எல்லாச் சபையாரிடத்திலும் ஒரே தன்மையான விசுவாச

சத்தியங்கள் எப்போதும் வழங்கிக்கொண்டு வரவேண்டுமென்று ஆலோசித்தே அவர்கள் இதை உண்டாக்கினார்கள். ஆதலால், அப்போஸ்தலரின் விசுவாச மந்திரமானது மாறாததும் நிச்சயமானதுமான ஓர் விசுவாசப் பிரமாணமாம். பன்னிரண்டு பிரிவுகளாக வகுக்கப்பட்டிருக்கின்றதாகிய இந்தமந்திரம், கத்தோலிக்கு திருச்சபையிலே சுத்தமாய்க் காப்பாற்றவும் பதிதருடைய நூதன கோட்பாடுகளுக்கு ஓர் மறுப்பாக எப்போதும் படிப்பிக்கவும் பட்டுக்கொண்டு வருகிறது. 2-வது, நிசேயா விசுவாசப்பிரகரணம். இது அந்தப் பட்டினத்திலே நடத்தப்பட்ட முதலாம் பொதுச் சங்கத்தவர்களால் யேசுநாதருடைய தெய்வீகத்தையும் அவருக்கும் பிதாவுக்குமுள்ள ஒரே தேவசுபாவத்துவத்தையும் தெளிவாய்க் காண்பிக்கும்படியாகவும், இவைகளுக்கு விரோதமாய்ப் போதித்த ஆரியுசுடைய பதிதமதத்தை மறுத்துத் தள்ளிவிடும்படியாகவும் உண்டாக்கப்பட்டது. கொன்ஸ்தாந்திநோப்பொலி பட்டினத்திலே கூடின இரண்டாம் பொதுச்சங்கமானது, இஸ்பிரீத்துசாந்துவானவரின் தெய்வீகத்தையும் இவர் பிதாவுஞ் சுதனுமாகிய இருவரிடத்திலும் நின்று புறப்படுவதையும் மிகத் தெளிவாய்க் காண்பிக்கும் பொருட்டு இந்தப் பிரகரணத்திலே சில வசனங்களைக் கூட்டி வைத்திருக்கின்றது. திவ்விய பூசையிலே சுவிசேஷத்தின்பின் சொல்லப்படுவது இந்தப் பிரகரணமேயாம். 3-வது, அர்ச். அத்தனாசியாரால் செய்யப்பட்டதாகச் சாதாரணமாய்க் கொள்ளப்பட்டுவரும்விசுவாசமந்திரம். இது அர்ச். அத்தனாசியாரால் இயற்றப்படாவிட்டாலும் அவர் பதிதருக்கு எதிராக எழுதிய நூல்களின் சங்க்ஷேபம் என்றதிற் தடையில்லை. இந்த மூவித விசுவாசமந்திரங்களையும் நமது விசுவாசத்தின் தவறாத பிரமாணங்களென்று திருச்சபை அங்கீகரித்துக்கொண்டது. இவைகள் நாம் விசுவசிக்க வேண்டிய பிரதான விஷயங்கள் எவையென்று திட்டமாகவுஞ் சுருக்கமாகவுந் தெளிவிக்கின்றன. ஆயினும் ஒருவன் விசுவசிக்க வேண்டிய முக்கிய சத்தியங்களெல்லாம் இவைகளில் அடங்கியிருக்கின்றனவோவெனில், இல்லை. இவைகளிலே சொல்லப்படாத முக்கிய விசுவாச சத்தியங்களும் திருச்சபையிலே உண்டென்பது நிச்சயம்.

275. கிறீஸ்தவனாயுள்ள எவனும் அப்போஸ்தலரின் விசுவாச மந்திரத்தைப் பொருளளவிலாவது அறிந்திருக்கவும் அதிலடங்கிய சத்தியங்களையெல்லாம் வெளிப்படையாய் விசுவசிக்கவும் கடமை பூண்டவன். இளைஞரும் வயோதிகரும், அறிவுள்ளவர்களும் அறிவில்லாதவர்களுமாகிய சகல விசுவாசிகளும் தாங்கள் விசுவசிக்கவேண்டியவைகளைச் சுளுவாய்ப்படித்து ஞாபகம்



பண்ணிக்கொள்ள வேண்டுமென்றே அப்போஸ்தலர்கள் இந்தச் சுருக்கமுந் திட்டமுமான விசுவாசப் பிரமாணத்தை உண்டாக்கி வைத்தார்கள். ஆதலால் இதைப்படித்து அறிந்திருப்பது சகல விசுவாசிகளுக்குங் கடமை என்பதற்குச் சற்றேனுஞ் சந்தேகமில்லை. திருச்சபையானது இந்தக்கடமையைத் தன் பிள்ளைகள் எல்லாருக்கும் ஞாபகப்படுத்தியும், இதைத் தவறாமல் அனுசரிக்க வேண்டுமென்று ஓயாமல் நெருக்கியுங்கொண்டுவருகின்றது. இந்த மந்திரத்தை விசுவாசிகளுக்கு நன்றாய் வெளிப்படுத்திப் படிப்பிக்க வேண்டுமென்று குருமாருக்குங் கற்பித்துக்கொண்டுவருகின்றது. தங்கள் பிள்ளைகளுக்கு விசுவாசமந்திரத்தைப் படிப்பிப்பது பிதா மாதாக்களுக்குங் குன்றாத கடமையாம். நமது விசுவாசத்தை மறந்துபோகாதபடிக்கும், அதைப் பயிற்சிபண்ணிக்கொண்டுவரும்படிக்கும், வேதத்தின் பிரதான சத்தியங்கள் நம்முடைய மனதைவிட்டு மறைந்துபோகாதபடிக்கும், நாம் விசுவாசத்திற்கு விரோதமான தந்திரசோதனைகளால் தளர்ச்சிகொள்ளாதபடிக்கும் அடிக்கடி விசுவாசமந்திரத்தை ஓதிக்கொண்டுவரவேண்டும். அன்றியும், இந்த மந்திரத்தை ஓதும்போது நாம் இதிலே அடங்கிய சத்தியங்களை உள்ளே விசுவசித்தும், கடமையான சமயங்களில் வெளியே அறிக்கைசெய்தும், விசுவாசத்திற்கு விரோதமான பேச்சுக்களையுங் கிரியைகளையும் மிக்க அவதானத்தோடு விலக்கி அதற்கேற்றவிதமாக எப்போதும் சம்பாஷித்தும் நடந்துங்கொண்டுவர வேண்டும்.

276. இந்த நூலின் முதலாம் பாகத்திலே வெளிப்படுத்திய போதகத்திற்குரிய சத்தியங்களிற் சில நீங்க, மற்றவைகளெல்லாம் விசுவாசமந்திரத்திலே அடங்கிய சத்தியங்களேயாம். ஆதலால், அந்த மந்திரத்திலேயுள்ள பன்னிரண்டு பிரிவுகளிற் பாவமன்னிப்பைக் குறித்த பிரிவையன்றி மற்றெல்லாப் பிரிவுகளும் விளக்கிக் காண்பிக்கப்பட்டன. ஆயினும், இவ்விடத்திலேயும் அதின் பிரிவுகளையெல்லாஞ் சுருக்கமாகவும் சொல்லொடுபொருளாகவுந் தனித்தனியே விளக்கிக்காண்பிப்பது நல்லதென்றெண்ணுகிறோம்.

**1-ம் பிரிவ.— பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சருவத்துக்கும் வல்ல பிதாவாகிய சருவேசுரனை விசுவசிக்கிறேன்.** இதிலுள்ள **விசுவசிக்கிறேன்** என்னுஞ் சொல் ஒவ்வொரு பிரிவினீற்றிலும் இருக்கிறதாக உத்தேசித்துக் கொள்ளவேண்டும். இந்தச் சொல்லானது விசுவாசமுயற்சியை அதாவது: சருவேசுரன் வெளிப்படுத்தியருளியதும் அவருடைய வழுவாத திருச்சபையின் போதகத்திலே ஊன்றி நிற்பதுமா

கிய ஒரு சத்தியத்திற்கு நாம் கொடுக்கும் உறுதியான திரும்பாத சம்மதியைக் காண்பிக்கின்றது. **சருவேசுரனை விசுவசிக்கிறேன்.** அதாவது சருவேசுரன் ஒருவர் இருக்கிறாரென்று உறுதியாய் ஏற்றுக்கொள்ளுகிறேன். அன்றியும் அவர் வெளிப்படுத்திய எல்லாவற்றையும் விசுவசிக்கிறேன். அவரை நம்பியிருக்கிறேன்; அவரை சிநேகிக்கிறேன் ; என் நம்பிக்கையெல்லாம் அவரிலே வைத்திருக்கிறேன். **பிதாவாகிய சருவேசுரனை விசுவசிக்கிறேன்.** அதாவது : ஏகமானதும் பகுக்கப்படாததுமான தேவசுபாவமானது மூன்றாட்களாய் நிலைத்திருக்கின்றதென்றும், அவர்களில் முதலாம் ஆளானவர் தமக்கு ஒப்பானவரும் தம்மோடு ஏககடவுளுமாகிய சுதனை அநாதிநித்தியகாலமாகத் தம்மிடத்திலிருந்து பிறப்பிக்கிறதினால் **பிதா** என்னும் நாமதேயம் பூண்டிருக்கிறார் என்றும் விசுவசிக்கிறேன். **சருவத்துக்கும் வல்ல** சருவேசுரனால் எல்லாங் கூடும். அவராற்செய்யக்கூடாதது ஒன்றுமில்லை. அவருடைய வல்லமையோடு எதிர்க்கக்கூடியதும் ஒன்றுமில்லை. வேதவாக்கியத்திலே சருவேசுரன் தம்மை எல்லாம் வல்லவர் எனும் இலக்ஷணத்தைக்கொண்டு மிகவும் அடிக்கடி தெரிவித்திருக்கிறார். ஏனெனில், இந்த இலக்ஷணமானது அவர் தேவமகத்துவமுள்ள கர்த்தரென்பதையும், எல்லாம் அவரிலே சார்புகொண்டிருக்கின்றன என்பதையும், அவரை மனிதர் அனைவருஞ் சாஷ்டாங்கமாய் விழுந்து அடிவணங்கி அவருக்குப் பத்திவிநயத்தோடு கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்பதையும் மிகவும் நன்றாய்த் தெளிவிப்பதாம். **பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த** அதாவது: ஒன்றுமில்லாதிருந்தகாலத்திலே சருவேசுரன் தமது சித்தத்தின் ஓரேயொரு முயற்சியால் வானத்தையும் பூமியையும் காணப்பட்டவைகளுங் காணப்படாதவைகளுமாகிய சகல பொருட்களையும் கிரமமாய் உண்டாக்கியதினால் தமது வரம்பில்லா வல்லமையை வெளிப்படுத்தியருளினார்.

2-ம் பிரிவு.—**அவருடைய ஏகசுதனாகிய நம்முடையநாயன் யேசுக்கிறீஸ்துவை** விசுவசிக்கிறேன். யேசுக்கிறீஸ்து மெய்யான தேவ சுதனும் தம்முடைய பிதாவைப்போல மெய்யான சருவசம்பூரண தேவனுமாயிருக்கிறாரென்றும், அதனால் நாம் அவருக்கு ஆராதனை நமஸ்காரங்களைச் செலுத்த வேண்டுமென்றும் ஒத்துக்கொள்ளுகிறோம்.

3-ம் பிரிவு.—**இவர் இஸ்பிரீத்துசாந்துவினாலே கர்ப்பமாய் உற்பவித்து அர்ச். கன்னிமரியம்மாளிடத்திலே நின்று பிறந்தார்.** இந்தப்பிரிவிலே மனிதனாய்ப் பிறந்த தேவசுதனின் அற்புதமான உற்பவமும் பிறப்புங் காண்பிக்கப்படுகின்றன. எவ்வாறெனில்: ஒரு தேவதூதன் அர்ச். கன்னிமரியம்மாளிடத்திலே வந்து உம்மைச் சருவேசுரன் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவராகிய மீட்பருக்கு மாதாவாகத் தெரிந்துகொண்டார் என்றார். அப்போது அர்ச். கன்னிமரியம்மாள், சருவேசுரனுடைய சித்தத்தின்படியே ஆகக்கடவதென்று சம்மதித்துக்கொண்டாள். உடனே இஸ்பிரீத்துசாந்துவாகிய சருவேசுரன் மரியம்மாளுடைய திரு உதரத்திலே அவளுடைய சொந்த மாமிசத்தைக்கொண்டு ஒரு மானிடதேகத்தை உண்டாக்கி இதற்கென விசேஷவிதமாய்ச் சிருட்டிக்கப்பட்ட ஒரு ஆத்துமத்தை அந்தத் தேகத்தோடு சேர்த்த அக்ஷணத்திற்றானே இவை இரண்டையுஞ் சுதனாகிய சருவேசுரன் தமது தெய்வீகத்தோடு ஐக்கியப்படுத்திக் கொண்டார். பின்பு பத்து மாதங்கள் நிறைவேறினபோது கன்னிமரியம்மாள் தமது கன்னிமைக்கு அற்ப பழுதும் வராமல் மெய்யான தேவனும் மெய்யான மனிதனுமாகிய யேசுநாதரைப் பெற்றாள்.



4-ம் பிரிவு.—**போஞ்சியு பிலாத்துவின்கீழ்ப் பாடுபட்டுச் சிலுவையிலே அறையுண்டு மரித்து அடக்கப்பட்டார்.** பரிசேயரும் யூதசாதியாருக்குள்ளே பிரதானிகளாயிருந்தவர்களும் யேசுநாதர்பேரில் தணியாப்பகைகொண்டு அவரைப் பிடித்து ஆக்கினை பண்ணி யூதேயாதேசத்து அதிபதியாகிய போஞ்சியுபிலாத்துவிடத்திலே ஒப்பித்தார்கள். துணிகரமும் மனச்சாட்சியுமில்லாத அந்த நடுவன், யேசுநாதரிடத்திலே கொஞ்சமேனுங் குற்றமில்லையென்று கண்டுபிடித்துக்கொண்டாலும், அவருக்கு அநீதியாக மரணத் தீர்வையையிட்டான். அவர் வாரத்தின் ஆறாந் தினமாகிய வெள்ளிக்கிழமை ஒரு சிலுவையிலே அறையப்பட்டு மூன்று மணி நேரமாகச் சொல்லுதற்கரிய வாதை அனுபவித்தபின், உயிர்விட்டார். அன்றுதானே சாயங்காலமானபோது அவருடைய சீஷர்கள் சிலர் அத்திருத்தேகத்தைச் சிலுவையினின்று இறக்கி வாசனைத் திரவியம்பூசி கற்பாறையிலே குடையப்பட்டிருந்த ஒரு புதுக்கல்லறையிலே அடக்கினார்கள்.

5-ம் பிரிவு.—**பாதாளங்களிலேயிறங்கி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தருளினார்.** யேசுநாதருடைய திருத்தேகம் கல்லறையிலிருந்த சமயத்திலே, அவருடைய திரு ஆத்துமமானது அதிபிதாக்களின் பாதாளம் என்றழைக்கப்படும் ஒரு கீழ்ஸ்தலத்திற்குப்போயிற்று. உலகாரம்பமுதல் மரித்த நீதிமான்களுடைய ஆத்துமாக்கள் எல்லாந் திவ்விய இரக்ஷகர் தங்களை அந்த

இடத்திலிருந்து சிறைமீட்டு மோக்ஷத்திற்குக் கூட்டிக்கொண்டு போக எழுந்தருளிவருந்தனையும் அங்கே காத்துக்கொண்டிருந்தன. யேசுநாதர் தாம் மரித்த மூன்றாம் நாள் தமது ஆத்துமத்தைச் சரீரத்தோடுகூடச் சேர்த்துத் தம் சுய வல்லமையால் எழும்பி இனி ஒருபோதும் மரியாதவராய் மகிமைப் பிரதாபத்தோடு கல்லறையிலிருந்து புறப்பட்டருளினார்.

**6-ம் பிரிவு:—பரமண்டலங்களுக்கு எழுந்தருளிச் சருவத்துக்கும் வல்ல பிதாவாகிய சருவேசுரனுடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறார்.** யேசுநாதர் உயிர்த்தெழுந்தருளின பின் இன்னும் நாற்பதுநாள் உலகத்திலே தங்கித் தம்முடைய சீஷர்களை விசுவாசத்திலே திடப்படுத்தியும், தமது திருச்சபையைக் குறித்து அநேக காரியங்களை அவர்களுக்கு அறிவுறுத்தியும்கொண்டுவந்தார். நாற்பதாம் நாள் ஆனபோது தம்முடைய அப்போஸ்தலர்கள் முன்பாகவே பரலோகத்துக்கு எழுந்தருளிப் போனார். பிதாவாகிய சருவேசுரனுடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறார் என்பதற்கு அர்த்தமென்னவெனில்: அவர் தம்முடைய பரம பிதாவின் மகிமைப் பிரதாபத்தையும் வல்லமையையும் அணிந்துகொண்டவராய் மோக்ஷ பேரின்ப ஆனந்தத்திலே சீவித்துக்கொண்டிருக்கிறாரென்பதாம்.

**7-ம் பிரிவு.—அவ்விடத்தினின்று சீவியர்களுக்கும் மரித்தவர்களுக்கும் நடுத்தீர்க்கவருவார்.** அதாவது யேசுநாதர் உலகமுடிவிலே சகல மனிதருக்கும் நியாயத்தீர்ப்புச்சொல்லப் பிரத்தியக்ஷமாய் உலகத்துக்கு எழுந்தருளுவார். அப்போதே பொதுத்தீர்வை நடக்கும். சீவியர்கள் என்று சொல்லப்பட்டவர்கள் யாரெனில், உலகமுடிவு வரும்போது பூமியிலே வாழ்ந்துகொண்டிருப்பவர்களாம். உலகமெல்லாம் நெருப்பினாலே வேகும்போது, அர்ச். சின்னப்பர் எழுதியிருக்கிறபடி, இவர்களெல்லாரு மாறுதலடைந்து, உலகமுடிவுவருமுன் இறந்திருந்தவர்களோடுகூடத் தாங்களும் பொதுத்தீர்வைகேட்க யேசுநாதருக்கு முன்பாகப்போய் நிற்பார்கள்.

**8-ம் பிரிவு.—இஸ்பிரீத்துசாந்துவையும் விசுவசிக்கிறேன்.** இந்த வசனமானது சருவேசுரனிலே மூன்று வெவ்வேறான ஆட்களுண்டென்றும், அவர்களுக்குள்ளே மூன்றாம் ஆளான இஸ்பிரீத்துசாந்து பிதாவையும் சுதனையும்போல மெய்யான தேவனென்றும், அவர் அவ்விருவரிலும் நின்று புறப்படுகிறவராய்



எல்லாத்திலும் அவர்களுக்குச் சரியொத்தவராயிருக்கிறாரென்றும் நாம் பிதாவுக்கும் சுதனுக்குஞ் செய்கிற ஆராதனையை அவருக்கும் செய்யவேண்டுமென்றும் காண்பிக்கின்றது.

**9-ம் பிரிவு.—பொதுவாயிருக்கிற அர்ச். சபையையும் அர்ச்சியசிஷ்டர்களுடைய ஐக்கியப்பிரயோசனத்தையும்.** இந்தப் பிரிவு இரண்டுபங்காய் வகுக்கப்படும். அவற்றுள் முதலாம் பங்கு யேசுநாதரை விசுவசிக்கிறவர்களாகிய விசுவாசிகளெல்லாரும் அர்ச். பாப்புவின் ஞான அதிகாரத்தினோடும் அவரால் நியமிக்கப்பட்டவர்களுடைய ஞான அதிகாரத்தினோடும் ஒரு சபையாய்க்கூடி வாழுகிறார்களென்றும், இந்தச் சபையானது தன் ஸ்தாபகரும் தலைவருமாகிய யேசுநாதரிலும், தன் போதகத்திலும், தேவதிரவிய அநுமானங்களிலும், தேவ வழிபாட்டிலும் தன் பல அங்கத்தவர்களிலும் பரிசுத்தமானதாயிருக்கின்றதென்றும், இதன்றிப் பொதுவானதாய் அதாவது உலகமடங்கலும் பரந்ததாயிருக்கின்றதென்றுங் காண்பிக்கின்றது. இரண்டாம் பங்கு திருச்சபையிலே ஞான நன்மைகளின் பொக்ஷமொன்று உண்டென்றும், அச்சபைக்கு அங்கமாயுள்ளவர்கள் எல்லாரும் அப்பொக்ஷத்திற்குப் பங்காளிகளென்றும் தெரிவிக்கின்றது.

**10-ம் பிரிவு.—பாவப்பொறுத்தலையும்.** இந்த வசனத்தைக் கொண்டு யேசுநாதர் பாவங்களை மன்னிக்கிறதற்கு மெய்யான அதிகாரத்தைத் தமது திருச்சபைக்குக் கொடுத்திருக்கிறாரென்பதை அறிக்கையிடுகிறோம். இந்த அதிகாரத்தைத் திருச்சபையானது ஞானஸ்நானமும் பச்சாத்தாபமுமாகிய தேவதிரவிய அநுமானங்களை வழங்கும்போதெல்லாம் செலுத்திக்கொண்டுவருகின்றது.

**11-ம் பிரிவு.—மாமிச உத்தானத்தையும்.** இந்தப் பிரிவானது நல்லவர்களுந்தீயவர்களுமாகிய சகல மனிதரும் இவ்வுலகத்திலே தங்களுக்கிருந்த சொந்தச்சரீரங்களோடு உயிர்த்தெழும்புவார்களென்றும், அந்தந்தச் சரீரம் தன்தன் ஆத்துமத்துக்குக் கிடைக்கும் மோக்ஷ சம்பாவனையையாவது நரக அக்கினியையாவது சுதந்தரித்துக்கொள்ளுமென்றும் காண்பிக்கின்றது.

**12-ம் பிரிவு.—நித்திய சீவியத்தையும் (விசுவசிக்கிறேன்).** இதற்கு அர்த்தமென்னவெனில், 1-வது, இவ்வுலகத்திலாவது

உத்தரிப்பு ஸ்தலத்திலாவது தங்கள் பாவங்களுக்காக முழுதும் உத்தரித்துத் தீர்த்தவர்களாகிய நீதிமான்களெல்லாம் மோக்ஷத்திலே பேரின்பபாக்கியத்தைப்பெற்று நீடூழிகாலம் வாழ்வார்களென்பதும், 2-வது, மாமிச உத்தானத்தின்பின் சகல நீதிமான்களும் தங்கள் ஆத்தும சரீரங்களோடு மோக்ஷபாக்கியத்தை அனுபவிப்பார்களென்பதும், 3-வது, சாவானபாவத்தோடு மரிக்கிற சகல பாவிகளும் நரகத்திலே நீடூழிகாலமாக ஆக்கினை அனுபவிக்கும்படி தீர்வையிடப்படுவார்களென்பதுமாம்.

போதககாண்டம் முற்றிற்று.

---

005746

St. Joseph's Catholic Press Jaffna 8-F-42